எங்கே?

எங்கே?

இ. தியாகலிங்கம்

மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்
20/2, ஜக்கரியா காலனி, முதல் தெரு,
சூளைமேடு, சென்னை - 94
தமிழ்நாடு இந்தியா

Enghe?

(A Novel)

By

R. Thiyagalingam

First Edition
July 2011

Mithra : 206
ISBN : 978 - 81 - 89748 - 93 - 7

Publication Editor

Espo

Pages : 344
Price :

Printed & Published by

Mithra Arts & Creations Pvt. Ltd.,
20 / 2, Zackria Colony, 1st Street,
Choolaimedu, Chennai - 600 094.
Ph : +91 44 2372 3182 / 2473 5314
Email : mithrabooks@gmail.com
Web : www.mithra.co.in

என்னுரை

'பழசை இனிக் கதைச்சுக் கொண்டு இருக்காதேங்கோ.' எல்லாவற்றையும் மூடிமறைக்கும் நோக்கோடு சில மேதாவிகளால் சொல்லப்படும் சமாதானம் இது. இந்த நாவல் எழுதப்படுவதற்கான நோக்கம், உண்மைகள் எல்லாம் புரிந்தும் மௌனிகளாய் இருப்பவர்களை இனியும் தூங்கவிடக்கூடாது என்பதே.

நடந்த குரூரங்களின் வெடுக்கு மாறமுதலே அதையெல்லாம் முடிமறைத்துவிட்டுப் பணம் தேடும் அரசியலில் இறங்கியவர்களின் பசப்பு வார்த்தைகளாய் வரும் இந்தச் சமாதானம் அருவருக்கத் தக்கது. நிறைவேற முடியாத ஒரு இலட்சியத்திற்காய் அரசியல் சதுரங்கத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக ஆயிரம் ஆயிரம் அப்பாவி ஈழத்தமிழர்கள் பலி எடுக்கப்பட்டார்கள். சொந்தச் சகோதரங்களின் பிணம் நடுவீதியில் வாகனத்தில் கட்டி இழுக்கப்பட்டது. அங்கேயே ரயர் போட்டுக் கொளுத்தப்பட்டது. 'பழசை இனிக் கதைச்சுக் கொண்டு இருக்காதேங்கோ' என இந்த அத்தியாயத்தை மூடிவைத்துவிட்டு அடுத்த அத்தியாயத்திற்குப் போவதில் அவர்களுக்கு அவசரம்.

ஈழத் தமிழர் ஒவ்வொருவருக்கும் மனிதம், மனச்சாட்சி, சமூகநீதி பற்றிய அலசல் இருக்க வேண்டும். ஈழப் போராட்டத்தில் கண்ணை மூடிக் கொண்டு ஒரு பக்கம்தான் அநீதி இழைக்கப் பட்டது என்று ஒருபோதும் சொல்ல முடியாது. அது பிடியற்ற கத்தியாக பார்க்குமிடமெல்லாம் பாய்ந்த வரலாறு உண்டு. அந்தச் சோகங்களில் எனக்குத் தெரிந்த சிலவேனும் ஆதாரப் படுத்தப்பட வேண்டும். எனக்கேன் தொல்லையென மௌனித்து இருப்பதால் பல உண்மைகளை எம் வருங்கால சமுதாயத்திற்குச் சொல்லாது மறுதலித்துச் செல்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எங்கள் போராட்டத்திலும் Holocaust பல தோன்றி மறைந்தன என்பதை இனபேதமற்று வருங்காலச் சந்ததிக்காய் ஆதாரப்படுத்துதல் வேண்டும். அதில் இருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளுதல் சாத்தியம்.

வன்முறை எங்களோடு கூடப்பிறந்த ஒன்றாகிவிட்டது. அது குடும்பம், பாடசாலை, சமுதாயம் என எங்கும் புரையோடிப் போய் இருக்கிறது. போராட்டம் என்கின்ற பெயரில் அத்தனை

அநியாயங்களும் நியாயப்படுத்தப்பட்டு வந்தமை, அதைக் கேட்டுக் கேட்டு சுயத்தை இழந்துவிட்ட மக்கள் மௌனித்து இருந்தமை, மௌனிக்காதவர்களும் ஆயுதத்தால் அச்சுறுத்தப் பட்டமை எங்கள் சமுதாயத்திற்கு ஏற்பட்ட மாபெரும் சாபம். அந்த அச்சுறுத்தல்கள் ஐரோப்பா வரை நீண்டது என்பது அதைவிடச் சோகம். இனியாவது அந்தத் தடைகளை உடைத்து, உள்ளதை உள்ளபடி எங்கள் வருங்காலச் சந்ததி ஆதாரப்படுத்த வேண்டும் என்பது என் எண்ணம். இந்த எண்ணத்திற்கு நான் கொடுத்துள்ள படைப்பு உருவமே இந்த நாவலாகும்.

வருங்காலச் சந்ததியின் விரல்கள் எங்களை நோக்கி நீளும். அவர்களின் பரந்த சமுதாயப் பார்வையில் நாங்கள் உண்மை சொல்லத் தவறிய குற்றவாளிகளாக அவமானத்தை அணைத் துக்கொள்ள நேரிடும். உயிருக்குப் பயந்து மௌனித்து இருந்த சந்தர்ப்பவாதிகள் என்கின்ற அவமானம் எங்கள் மீது சுமத்தப்படும். வரலாற்றில் நாங்கள் செய்திருக்க வேண்டிய பணியில் இருந்து ஒளிந்து கொண்டமை அல்லது சூடுகாய்ந்தமை, சொந்த இனத் தின் அழிவுக்கே துணைபோனமை என்பன குற்றங்களாக நிரூபிக்கப்படும்.

மாக்ஸிய தத்துவங்களை புத்திஜீவிதமான வார்த்தைகளில் முக்கியெடுத்து ஏட்டுச் சுரைக்காய் காவித் திரிவதல்ல என் நோக்கம். மாறுபட்ட மூளை கொண்ட மனிதவினத்தின் கடைநிலை வாச கனுக்கும் விளங்கும் எளிமையை வரித்துக் கொள்ளும் என் முயற்சியே இதுவும்.

எனது படைப்புகளை என்றும் அழகுற அச்சிட்டுத்தரும் மித்ர வெளியீட்டினருக்கும், என் இலக்கியப் படைப்பு முயற்சிகள் அனைத்துக்கும் என்றும் இனிமையுடன் நல்லாலோசனைகளும், திருத்தங்களும் அருளும் ஈழத்து இலக்கியமேதை எஸ்.பொ. அவர்களுக்கும் என் நன்றிகள். என் இலக்கியப் பயணத்திற்கு என்றும் ஆதரவு தரும் வாசகர்களாகிய உங்களுக்கும் என் வணக்கங்கள்.

இ. தியாகலிங்கம்

Tyristubb veien 77
0687 Oslo
+4747235303
thiagu@tiscali.co.uk

முன்னீடு

'**மி**த்ர'வின் வரலாற்றிலே 1994ஆம் ஆண்டு மிகவும் முக்கிய மானது. ஏழு நூல்களை ஒன்றாக வெளியிட்டோம். பல்வகைத்தான நூல்களிலே நோர்வேயில் வாழும் இ. தியாகலிங்கத்தின் 'அழிவின் அழைப்பிதழ்' என்கிற நாவலும் இடம் பெற்றது. புலம்பெயர்ந்தோரின் நாவல்களிலே அது முன்னோடியானது. அதனைத் தொடர்ந்து நாளை, பரதேசி, திரிபு ஆகிய நாவல்களையும் தமிழ்ச் சுவைப்புக்கு அவர் தந்துள்ளார்.

இன்று, கால ஓட்டத்திலே அவர் புலம்பெயர்ந்த இலக்கியப் படைப்பாளிகள் மத்தியிலே முன்னணி நாவலாசிரியராய் வளர்ந்து நிமிர்ந்து, திமிர்த்துள்ளார். நினைக்க உண்மையில் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. தியாகலிங்கத்தின் பெரும் பண்பு மௌனம்; அதிகம் பேச மாட்டார். மிக மென்மையான குரலிலே, சில வார்த்தைகள் மட்டுமே. ஆனால், தன்னைச் சுற்றி நிகழும் சம்பவங்களை மிக நுணுக்கமாக மட்டுமல்லாமல், சமூகநலக் கண்ணோட்டத்திலும் மிகவும் உள் வாங்கிக் கொள்ளுகின்றார். இதனால் அவர் நாவல் எழுதுவதற்குத் தேர்ந்தெடுக்கும் பாடுபொருள்கள் ஒவ்வொரு நாவலிலும் புதிது புதிதாக அசத்துகின்றன. இத்தகைய பரந்துபட்ட சமூகவியல் பார்வையை நான் ஏனைய நாவலாசிரியர்களிடம் அண்மையில் அவதானிக்கவில்லை. அத்துடன், அவர் நோர்வே நாட்டினைக் களமாகக் கொண்டு, அங்கு வாழும் தமிழர்களுடைய பாடுகளை யும் உணர்வுகளையும் பாடுபொருளாக்குகின்றார். இதன்மூலம் தமிழ் நாவல் இலக்கியத்தின் அக்கறைகளையும், பரப்பினையும் அவர் அகலிக்கச் செய்துள்ளார்.

எங்கே? — நாவல் முற்றிலும் வேறுபட்டதாக அமைகின்றது. இரண்டு தலைமுறைகளின் கதை. ஒருவனே மகனாவும், அப்பனாக வும் வாழும் கதை. கதையின் ஒரு பகுதி சுபனின் தந்தையாக வாழும் நோர்வே நாட்டில் நிகழ்கின்றது; அடுத்தது மகன் தேவனாய் வாழ்ந்த காரைநகரிலே நிகழ்வது. பொன்னாலைப்பாலம் தொடுப்ப தினாலே, நகரான ஒரு தீவின் செழுமைகளும் பெருமிதங்களும்! அதன் ஆன்மாவைச் சுவாசிக்கும் மக்கள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள், உணவுப் பழக்கங்கள், கடைப்பிடிக்கும் சம்பிரதாயங் கள், மரபு சார்ந்த நம்பிக்கைகள், கோயில்கள், வயல்கள், நீருக்கு ஏங்கும் கிணறுகள் மட்டுமல்ல... வலந்தலை, களபூமி, மாவெட்டை என்று அம்மண்ணின் குறிச்சிகளின் பெயர்களும் விசிறியெறியப்

படுகின்றன. இவற்றுடன் மண்ணின் மைந்தரின் அரசியல் சார்பு, அவர்களைப் பாதித்த தமிழினப் பிரச்சினைகள் ஆகியன பிரசாரத் தொனியின்றி, அதே சமயம் மண்மீது கொண்ட பாசம் சற்றேனும் பழுதுபடாத நுட்பத்திலே சித்திரிக்கப்படுகின்றன. தான் பிறந்த மண்ணை, அதன் அற்புத புழுதி வாசனைகளுடனும், தாயைப் போன்று அஞ்சலி செய்யும் பவ்வியத்துடனும் எழுதப்பட்ட பிறிதொரு நாவலை நான் தமிழில் இதுவரை வாசிக்கவில்லை.

இவற்றிற்கு அப்பாற்பட, இந்த நாவல் வரலாற்றினை நேர் செய்யும் அற்புத ஆவணமாகவும் திகழ்கின்றது. எண்பதுகளின் விடியலிலே தோன்றிய போராட்டக்குழுக்களிலே ஒரு கட்டத்தில் 'புளட்' (PLOT) என்கிற குழு, முகுந்தன் (உமா மகேஸ்வரன்) தலைமையில் நம்பிக்கை தந்த ஒரு போராட்ட இயக்கமாக வளர்ந்தது. விடுதலைப் புலிகளுக்கும் புளட்டுக்கும் இடையில் நடைபெற்ற சகோதரப் போராட்டம் பரபரப்பாகச் சென்னையிலும் பேசப்பட்டது. பின்னர் அந்த இயக்கம் எவ்வாறு செயலற்றுப்போனது? இந்த வரலாற்றிற்கு 'எங்கே' என்ற இந்த நாவலைப் போன்று வேறு எந்த வலுவான இலக்கிய ஆதாரமும் இல்லை. அந்த இயக்கத்தில் இணைந்து, இந்திய மண்ணுக்கு வந்து பயிற்சி பெற்ற இயக்க வீரர்களுள் ஒருவரான தியாகலிங்கம், தன்னை முதன்மைப்படுத்தாது, ஓர் இயக்கத்தின் மறைவினை மிக நுட்பமாகச் சொல்லுகிறார். ஒரத்த நாட்டில் அமைந்த அதன் முகாம் மிக யதார்த்தமாகச் சித்திரிக்கப் படுகின்றது. பிரசாரஞ் செய்தல், உணர்ச்சி வசப்படுதல் ஆகிய எந்தக் குறைபாடுகளும் இன்றி, ஒரு நாவலின் போக்கிலேயே, உண்மைகளை ஆவணப்படுத்துவதில் மிகவும் வெற்றி பெறுகின்றார். தமிழ் ஈழம் பெறுவதற்கான போரைப் பற்றிய வரலாறு எழுத விழைபவர்களும் இந்த நாவலைத் தேடி வாசிக்க வேண்டிய அவசியமும் ஏற்படும். முகுந்தனை விமர்சனம் செய்யாது மனித நாகரிகம் பேணுகிறார்.

மானிட நேசிப்பும், மானிடத்தை அஞ்சலி செய்வதும் இ. தியாகலிங்கத்தின் இலக்கியத்திலே மூர்க்கம் பெற்றிருக்கும். அந்த மூர்க்கம் தமிழ் இலக்கியத்துக்குப் புதிது என்பதாலும் அவர் இலக்கியகாரனாய் அதிகமாகவே சாதித்து வருகின்றார்.

எஸ்.பொ

2A Hakea Place
Epping 2121
Australia
☎: 612 - 98685090

1

'இக்க ப்லா' (அனுமதி இல்லை) என்கின்ற அதிகாரமான அந்த வார்த்தையில் தடுமாறிப் போனான் தேவன். என்னுரிமையை நீ மறுக்க முடியாது என்கின்ற அவனுடைய வைராக்கியம் விறைப்பாக மூக்கில் குத்தியது. உரிமையை உறிஞ்சிய அந்தக் குரல் அப்பா என்கின்ற மதிப்பையும் காலில் போட்டு மிதிப்பதான உணர்வில் தேவன் தவியாய்த் தவித்தான். வயது கௌரவத்தைத் தரும் என்கின்ற வரட்டுத் தத்துவங்கள் இந்த நாட்டில் செல்லாது. அந்த வரட்டுக் கௌரவத்தின் முரட்டுப்பிடியின் இறுக்கம் குறையாத அவஸ்தையில் அவன் மீண்டும் நெளிந்தான். இந்த நாட்டின் யதார்த்தத்தை அறிந்திருந்தாலும், பிஞ்சிலே ஊட்டப் பட்ட வரையறைகள் பிடரியைப் பிடித்து இடையிடையே தள்ளு வதான அவதி அவனுக்கு. பிஞ்சில் கற்றதை எண்ணியபோது தேவனின் மனது அனலாய்ப் பற்றி எரிந்தது.

தன்னைப் பார்த்து 'இக்க லோ' எனச் சுபன் துணிவாகச் சொல்ல முடியும் என்பது தேவனுக்குப் புரியும். சுபன் அது தனது உரிமை என்பதில் இப்போதே தெளிவாய் இருந்தான். அது உண்மை இல்லையெனத் தேவனால் மறுத்துக் கூற முடியாது. தேவன் தான் அப்பாவோடு இரண்டு வயதில் எப்படி இருந் திருப்பான் என்பதை இப்போது ஞாபகப்படுத்த முடிய வில்லை. இப்படிப்பட்ட துணிவிருந்திருந்தால் அதை முளை யிலேயே கிள்ளி எறிந்து இருப்பார்கள் என்பது அவனுக்குப் புரிந்தது. அந்தத் துணிவு அரும்பிலேயே கருகிப் போயிருக் கும். வறிய பொருளாதாரத்திலும், குறுகிய நிலப்பரப்பிலும்,

வாழ்க்கையே போராட்டமாகி விட்டவர்களுக்கு, மனது பற்றிச் சிந்திப்பதற்கு அவகாசம் கிடைக்கவில்லை.

சுபனுக்கு குரோத் (குழந்தைப் பிள்ளைகளின் உணவான கூழ்) ஊட்டுவது சிலவேளைகளில் போராட்டமாகி விடும். கைகள் கட்டுப்பட்டிருக்க வாய் மட்டும்தான் இங்கு பேச முடியும். கைகளினாலே மட்டும் பேசிப் பழக்கப்பட்ட எங்களின் கலாசாரத்தைக் கட்டுப்படுத்தி, சொற்களால் மாத்திரமே அலுவல் பார்ப்பது மகா கஷ்டமாகிவிடும். ஆராய்ச்சிகள்கூட வெளி நாட்டினர் பிள்ளைகளைக் கூடுதலாகத் தண்டிக்கிறார்கள் எனக் கூறுகின்றன. தேவனைப் போல் எல்லோராலும் கையை அடக்கத் தெரியவில்லை என்பதற்கு இது ஒரு சாட்சியாகும். ஒரு கலாசாரத்தில் அநியாயம் எனப்படுபவை இன்னொரு கலாசாரத்தில் நியாயமாகப் படலாம். வாழும் நாட்டின் கலா சாரத்தையும் சட்டத்தையும் மதிப்பதுதான் வந்தேறுகுடிகளுக்கு உள்ள ஒரே வழி.

சுபன் வாயைத் திறக்காது அடம் பிடித்தான். கெஞ்சிக் கெஞ்சிக் களைத்துப் போன தேவன் சாதுவாக கரண்டியால் வாயில் அழுத்த வெடித்து விழுந்த சொல்தான் 'இக்க லோ.' அவன் பார்வையில் எனக்கு என்னுரிமை பற்றித் தெரியும் என்கிற உக்கிரம் அனலாகத் தெறித்தது. ஊட்டவும் வேண்டும், உறுக்கவும் கூடாது என்பது சற்றுச் சலிப்பைத் தந்தது, வினோ வீட்டில் இருந்தால் கையில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சனையில் இருந்து தப்பித்துக் கொள்வான். மனச் சாட்சி பெண் விடுதலை பற்றி நிறுத்துப் பார்க்கும். பஞ்சி, அலுப்பு அதைப் பின்னே தள்ளி விடும். இன்று வினோ மாலை வேலைக்குச் சென்று விட்டாள். இப்போது சுபன் ராஜாவான தன்னைக் கூஜாவாக்கியுள்ள அவதியில் புழுங்கினான். காரியம் ஆகவேண்டும் என எண்ணியவன் மகனிடம் கெஞ்சத் தொடங்கினான்.

'சுபன் என்ர செல்லமல்லே, இன்னும் கொஞ்சம் சாப்பிடு குஞ்சு டா.'

'வெந்த லித் (அப்படியென்றால் கொஞ்சம் பொறு).'

அவன் அதிகாரத்தோடு கூறினான். தேவனுக்கு இதைக் கேட்டதும் பழைய நினைவுகள் சட்டென்று மூளையில் ஏறி நின்று கூத்தாடின.

அப்போது தேவனுக்கு ஐந்து வயது இருக்கும். தேவனின் அப்பா பாடசாலை முடித்து வந்திருக்க வேண்டும். தேவனின் அம்மா சமைத்து வைத்துவிட்டு எங்கோ வெளியே சென்று விட்டா. வீட்டிற்கு வந்த தேவனின் அப்பாவுக்கு அம்மாவைக் காணவில்லை என்கின்ற வெப்பியாரம். அந்த வெப்பியாரத்தைத் தணிப்பதற்கான வடிகால் தேவன். அவர் தேவனை நோக்கி, 'டே இஞ்சவாடா' என்றார்.

தேவன் அப்பாவின் குரலில் இருந்த வன்முறையோடு கூடிய ஆணவத்தில் அரண்டு போய்விட்டான். அச்சம் மேலிட அவன் தயக்கத்தோடு நகர மறுத்த கால்களை இழுத்து இழுத்து அப்பாவை நோக்கி அரக்கினான்.

'எங்கயடா அம்மா?'

'........'

அதிகாரமும் கோபமும் மீண்டும் தேவனைக் கதிகலங்க வைத்தது.

'என்னடா நீ ஊமையே? எங்கயடா அம்மா?'

'தெரியாது.'

தயங்கித் தயங்கிக் கூறினான் தேவன். அடுத்த கணம் அப்பாவின் இரும்புக் கைகள் அவன் கன்னத்தில் இறங்கின. அவன் வேதனையால் துடிக்க கண்ணீர் கரைபுரண்டது. தெரியாது என்று கூறியது அப்பாவுக்குத் தப்பாகப் பட்டிருக்க வேண்டும் என்பது தேவனுக்குத் தெரிந்தது. தெரியாது என்கின்ற சொல்லில் இவ்வளவு தப்பிருக்கும் என்பதும் முதன் முதலாய் அன்று தெரிய வந்தது.

'எங்கடா அம்மா?'

'தெரியாது... தெரியாது...' என அழுதவண்ணம் தேவன் ஓடத் தொடங்கினான். அவன் ஓடியோடி ஒவ்வொரு வீடாக அம்மாவைத் தேடி அலைந்தான்.

இப்போதும் அந்த நிகழ்வின் ஓட்டம் வேதனை பீறிடும் ஊற்றுக் கண்ணாக அடி மனதில் ஒளிந்து கிடப்பதை அவனால் உணர முடிந்தது. அதன் சீற்றம் அழியாது இருந்தது.

தேவனின் அப்பா சண்முகம் வாத்தியார். அவருக்கு துவரம் கம்பு செங்கோலாக, அரசாங்கச் சம்பளத்தோடு பாட சாலையில் ஆட்சி செய்ய வைத்திருந்தது. அந்தச் செங்கோல் அடிக்கடி மாறிக்கொள்ளும். செங்கோல் மாறி இருந்தால் நேற்றைய பொழுதில் நிறைய சித்திரங்கள் மலர்ந்திருக்கும். இதுபற்றி மூச்சு விடுவதற்குக்கூட முன்னுக்கு எவரும் வரமாட்டார்கள். பாடசாலையை வதைமுகாமாக்கி அதிலே இராணுவ ஆட்சி நடத்துவதில் சண்முகம் வாத்தியாருக்குப் பரம திருப்தி. பக்க பலத்திற்கு ஏகப்பட்ட தோழர்கள். வற்றிப்போன அறிவை வகை வகையாகக் கம்புகளில் காட்டும் வித்துவ பிரம்மாக்கள். இங்கே மாணவர்களின் நியாயங்கள், ஆசைகள் அனைத்தும் அவர்களுக்கு அநியாயங்கள். அநியாயம் என்று நினைத்தாலே அங்கே செங்கோல்தான் ஆட்சி செய்யும். அவர்களின் வித்துவ வரட்சியையும் வேண்டப்படாத கேள்விகளையும் செங்கோல் எப்போதும் காத்து நிற்கும். வீட்டிலே தவழுகின்ற வன் முறைக்கு, துள்ளிப்பாயக் கற்றுக் கொடுக்க பாடசாலை கைநீட்டி வரவேற்கும். இங்கே அன்பிற்கும் பண்பிற்கும் விடை கொடுத்து, 'அடியாத மாடு படியாது' என்கின்ற அரைவேக்காட்டு இலக்கணம் நடைமுறைப்படுத்தப்படும். இவர்களிடம் பயின்று தெருவில் இறங்குகின்ற மாணவர்கள் மகாத்மாக்களாக மாறுவார் களா ?

சண்முகம் வாத்தியார் வருகிறார் என்றால் குண்டூசி விழுந்தாலும் கேட்கும் பக்குவத்தை மாணவர்கள் உருவாக்கி விடுவார்கள். சிறு வட்டங்கள் எல்லாம் பம்பரமாய் சுழன்று மறைய, நிசப்தம்கூட நடுக்கத்தோடு வழிசமைத்து நிற்கும். சண்முகம் வாத்தியாரின் சைக்கிளும் அவரது வெள்ளை உடுப்பும் மறையும் வரை வடலிகளுக்குப் பின்னால் மாத்திரமே உயிரற்ற குசுகுசுப்பு கேட்கும். அருகில் நிற்பவனுக்கே கேட்க முடியாத நலிந்த ஓசைகளாய், வெடவெடக்கும் சிறிய உதடு களில் இருந்து தந்தியடிக்கும் மென் ஒலிகளாக....

சண்முகம் வாத்தியார் மறைந்ததும் 'டேய் மோட்டுச் சண்முகம் போட்டான்ரா' என்கின்ற குரல்கள் அண்டத்தைப் பிளக்க, கலகலப்பும் சந்தோசமும் களைகட்டிக் கொலுவேறும்.

ஐரோப்பாவில் வந்து குடியேறியவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு, தொலைக்காட்சி நவீன நிலவாக காட்டப்படு கிறது. நவீன நிலாச்சோறு ஊட்டும் தந்திரத்தைக் கற்றுக்கொண்ட தேவன் சுபனுக்கு மேலும் இரண்டு வாய் குரோத்தை, மெதுவாக அதன் துணையுடன் ஊட்டினான். மூன்றாவது வாய்க்கு முயற்சிக்கும் போது —.

'தே அர் நொக் (இது காணும்)' முற்றுப் பெற்ற கட்டளையாக சுபனிடம் இருந்து அந்த வார்த்தைகள் வந்தன. தேவனுக்கும் அது போதும் என்பதாகவே இருந்தது. மீதியைக் கொட்டிப் பாத்திரத்தைக் கழுவி வைத்துவிட்டு சுபனை இறக்கிக் கீழே விட் டான். தேவனுக்கு இன்று மீண்டும் மீண்டும் அப்பாவின் ஞாபகம் வந்தது.

அடியாத மாடு படியாது என்பது அவரின் பாண்டித்தியக் கண்டுபிடிப்பு. அந்த வரட்டுத் தத்துவத்தில் கெட்டியாக தொங்கிக் கொண்டவர்களில் அவர் முதன்மையானவர். அன்று அம்மாவைத் தேடித் தேடி கால் கடுக்க அலைந்தான் தேவன். கடைசியாகப் பிள்ளையார் கோயில் வீதியில் அம்மா வயலுக்குப் போய்விட்டு வருவதைக் கண்டு கொண்டான். ஓடோடிச் சென்று அம்மாவின் கால்களைக் கட்டிப்பிடித்து அழுதான்.

தேவனின் அம்மாவுக்கு விளக்கம் தேவையில்லை. அப்பாவின் கைவரிசை அம்மாவுக்கு நன்கு புரியும். 'நீ அழாத ராசா'என்று கூறி அணைத்தபோது பிள்ளையார் கோயிலின் மாலைப் பூசைக்கான இரண்டாவது மணி அடித்தது. 'அப்பு பிள்ளையாரே ' எனக்கூறி தேவனின் அம்மா 'வா ராசா போய்க் கேணியில கால் கழுவிப்போட்டு நாங்கள் பிள்ளையாரைக் கும்பிட்டுக்கொண்டு வீட்ட போவம்' எனக் கூறித் தேவனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு கேணிக்குச் சென்றா.

கோயில் வீதியெங்கும் மாரிப்பச்சை மலர்ந்த முகத் துடன் முறுவலித்துக்கொண்டு இருந்தது. அங்குமிங்குமாக

கயிற்றில் கட்டப்பட்ட ஆடு மாடுகள் கொழுத்த புல்லைப் பதம் பார்த்தன. மாவெட்டை, கல்லந்தாழ்வு என வயல்கள் எல்லாம் நெல்லு விதைக்கப்பட்டிருக்கும் நேரமிது. இந்த நேரத்தில் ஊரில் ஆடுமாட்டிற்கு ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருக்கும். அதில் இருந்து சுதந்திரம் கொடுக்கும் துணிவு யாருக்கும் வருவதில்லை. விதானை பிடித்துக்கொண்டு போனால் தண்டம் கட்ட வேண்டும். அதைவிட கயிறும் ஊசியும் வாங்குவது இலாபம் என்பது எல்லோருக்கும் புரியும். அலரியைத் தின்று ஆடுமாடு சாகாமல் புல்லை மாத்திரம் மேய்வதற்கான கிராமத்தாரின் ஏற்பாடு.

தேவனுக்குக் கோயில் வீதியால் செல்வது மிகவும் பிடிக்கும். வண்ண வண்ணப் பூக்கள் உள்வீதி வெளிவீதியெனப் பூத்துக் குலுங்கி அவனைப் பார்த்துக் கண்சிமிட்டுவதாய் இருக்கும். பலவித வாசங்களின் கலவை தேவலோக சுவாசத்தைத் தருவதான பிரமை தட்டும். பருத்த ஆலும் வேலும் வீதியிலே பென்னம் பெரும் குடைகளாய் நிழல் பரப்பிச் சேவை செய்யத் தயாராக நிற்கும். தெற்கு வீதியில் கிணற்றைத் தாண்டி அப்பால் போனால் தண்ணீர் குளம் போல் மாரியில் தேங்கி நிற்கும். அங்கே நடந்து போனால் வெடி அடித்து வேடிக்கை காணலாம். வால்பேத்தையான தவளைகளின் குஞ்சைப் பிடிக்கலாம். வெள்ளத்தில் விளையாடுவதை தேவனின் அப்பா கண்டால் அல்லது உற்றார்கள் காட்டிக் கொடுத்தால் தோல் உரிந்துபோய்விடும் என்பதும் அவனுக்குத் தெரியும். விளையாட்டு மோகம் முதுகில் தழும்புகளை அவனுக்கு வேண்டித் தருவதுண்டு. அப்போதெல்லாம் 'அப்பற்ற குணம் தெரியாதோடா? ஏனடா இப்பிடி அடிவேண்டுறா அவரிட்ட?' எனக் கவலை தோய்ந்த கரிசனையோடு இரவில் காயங்களுக்குத் தேவனின் அம்மா நல்லெண்ணை பூசிவிடுவதும் உண்டு. அம்மா அப்படிக் கேட்கும்போது தேவனுக்குக் கவலையாக இருக்கும். அப்போதெல்லாம் சிலகாலங்களில் முதுகுத் தோல் மரத்துப் போய்விடும் எனத் தேவன் எண்ணிக் கொள்வான்.

வேணியக்கா கோயிலின் வெளிவீதிக் கிணற்றில் தண்ணி யள்ளிக்கொண்டு இருந்தாள். தேவனின் அம்மா கோயில்

கேணிக்குப் போற எண்ணத்தை விட்டுவிட்டு கிணற்ற டிக்குச் சென்றா. கேணிப் படிகளில் பாசி அதிகம். எண்ணையில் கால்வைப்பதான நடுக்கம் அவவுக்கு. மேற் படியில் நின்று பட்டும் படாமலும் கழுவிவிட்டு வருவது அவவின் வழக்கம். நீச்சல் தெரியாத பயத்தில் அவ மாரிக் காலங்களில் அங்கு தேவையில்லாது போக விரும்புவதில்லை.

தேவனின் அம்மா கிணற்றடிக்குச் சென்றா. 'இஞ்ச தாடி பிள்ள ஒரு வாளி தண்ணி' என அவ உரிமையோடு கேட்க, வேணி அக்காள் 'சரியண கொஞ்சம் பொறண' என்று கூறியவண்ணமே அரைகுறையாய் இருந்த வாளி நீரை ஊற்றிவிட்டு வாளி நிறைய நீர் அள்ளிக் கொடுத்தாள். தேவனின் அம்மா முகம், கைகால் எனக் கழுவி மீதி நீர் முழுவதையும் காலில் ஊற்றிவிட்டு, வேணி அக்காள் கயிற்றைப் பிடித்திருக்க, வாளியைத் தூக்கி மீண்டும் கிணற்றுக்குள் எறிந்தா. பின்பு முந்தானையில் தனது முகத்தைத் துடைத்துவிட்டு, அடுத்த வாளித் தண்ணீரில் தேவனுக்கு முகம், கை கால் கழுவிய பின்பு முந்தானையை எடுத்து முகம் துடைத்தும் விட்டா.

சூரியன் கடலில் மூழ்க, கள்ளத்தனமாய் எட்டிப் பார்த்த வானத்தின் கன்னம் வெட்கத்தில் சிவக்க, மேற்குத் திசையில் வர்ண மாயாஜாலங்கள் நடந்துகொண்டிருந்தன. தேவனும் அம்மாவும் கோயிலுக்குள் வரும்போது ஐயர் நந்திக்குப் பூசை செய்து கொண்டிருந்தார். தங்கம்மாக் கிழவி தேவனை ஒருமுறை பார்த்தார். தங்கம்மாக் கிழவி எப்போதும் வெள்ளைச் சீலைதான் கட்டியிருப்பார். அவரைப் பார்த்தாலே தேவனுக்கு கதைப்பதற்குப் பயமாக இருக்கும். இன்று அவர் ஏதோ நினைத்திருக்க வேண்டும்.

'எங்கயடா கொப்பன்? இன்னும் மாடு மேய்ச்சு முடியேல் லயே? சட்டம்பியென்டா கோயில் பக்கம் வரக்கூடாதே?' என்று சத்தமாய்க் கேட்டார். தேவன் அம்மாவின் பின்னால் ஒளிந்து கொண்டான். மூச்சுவிடும் சத்தம் மட்டுமே அவனிடமிருந்து வந்து கொண்டு இருந்தது. தேவனின் அம்மா மெதுவாக ஒரு புன்னகை புரிந்தாரே ஒழிய தங்கம்மாக் கிழவிக்குப் பதில் சொல்லவில்லை. அம்மாவுக்கும் பயமாக இருக்க வேண்டும் எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

'அப்பா வாரிவளவானே, எல்லோரும் நல்லா இருக் கோணும்.' தங்கம்மாக்கிழவி சத்தமாகக் கும்பிட்டார். தேவனின் அம்மா முன்மண்டபத்திலேயே நின்றுகொண்டார். தேவன் உள்ளே ஓடினான். வைரவர் வடைமாலையோடு நிற்க அவருக்கு பூசை நடந்து கொண்டிருந்தது. தேவன் வைரவரை மிகவும் பணிவோடு வேண்டிக் கொண்டான். இல்லாவிட்டால் செக்கல் மக்கலில் வெருட்டுவார் என்கின்ற பயம் அவனிடத்தில் இருந்தது.

சிவனேசன் அண்ணா, முத்தன், ரூபன் அண்ணா ஆகியோர் சங்கு, சேமக்கலம், மணி என்பவற்றைப் பங்கு போட்டுப் பணி யாற்றினார்கள். சத்தம் அடங்கிய பின்பு அநேகமாக நந்திப் புக்கைக்கு இவர்கள்தான் உபயகாரர்கள். திருவிழாக்காலம் என்றால் வழுக்கல் தோண்டுவதிலும் இவர்கள் விண்ணர்கள்.

ஐயர் பூசையை முடித்துவிட்டு விபூதியை முதலில் கொடுத்தார். அவர் கண்களும் கவனமும் தட்டில் விழும் சில்ல றையில் ஊன்றி இருந்தன. இதைத் தங்கம்மாக்கிழவி கவனித்தார். அதை உணர்ந்துகொண்ட ஐயர் நெளிந்தார். தங்கம்மாக் கிழவிக்கு நிறையவே விபூதி அள்ளிக் கொடுத்தார். தங்கம்மாக் கிழவியின் பார்வையில் நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்கின்ற கூர்மை தணியவில்லை. ஐயர் அவசர அவசர மாகப் பணியைச் செய்யலானார். தேவன் விபூதியை வேண்டி பிள்ளையாரை நினைத்துப் பூசிக் கொண்டான். பிள்ளையாரில் பக்தியாய் இருந்தால்தான் படிப்பு வரும் என்று தேவனின் அம்மா சொல்வதுண்டு. விபூதியில் இருந்து நல்ல வாசனை வந்தது. தேவனுக்கு அது மிகவும் பிடித்தது. ஐயர் தீர்த்தம், சந்தனம் எனத் தொடர்ந்தார். திருவிழாக்காலம் என்றால் அவல், கடலை, பஞ்சா மிர்தம் எனத் தொடரும். இன்று அப்படி இல்லாதது தேவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது. வைரவருக்கு விசேட பூசை செய்தவர்கள் வடைமாலையைப் பிரிக்காது கொண்டு சென்றார்கள்.

பூசை முடிந்து வெளியே வரும்போது வாசகசாலை மின் விளக்குகள் மின்னிக்கொண்டு இருந்தன. அங்கே பத்திரிகை வாசிப்பதற்கும், கரம் விளையாடுவதற்கும் எனப் பெரிய இளைஞர்கள் வருவார்கள். தேவன் அப்பாவிற்குப் பயந்து

அந்தப் பக்கமெல்லாம் எட்டிப் பார்ப்பதில்லை. வாசகசாலை அருகில் பேருந்து ஒன்று வந்து உறுமிவிட்டு நின்றது. அது எண் பத்தி ரெண்டாம் இலக்கப் பேருந்து. 'உது உலகமெல்லாம் சுற்றித் தானாம் யாழ்ப்பாணம் போய்ச் சேரும். எண்பத்திநாலு எண்டால் கல்லுண்டாய் வழியாக சுறுக்க யாழ்ப்பாணம் போய்விடுமாம்.' தேவன் கேள்விப்பட்டதை தனக்குள் அசை போட்டான். கோயிலுக்கு முன்னே, தெருவைத் தாண்டி மற்றப்பக்கம் இருந்த கடைகளிலும் மின்விளக்குகள் எரிந்தன. கடைக்குப் பக்கத்தில் இருந்த மருதமரத்தின் கீழ் நீர்த்தொட்டி ஒன்று நீருக்காக எப்போதும் தவமிருக்கும். தேர்முட்டியில் இருந்து யாரோ சத்தம் போட்டார்கள். தேர்முட்டியில் பெரியவர்கள் மாத்திரம்தான் இருப்பார்கள். தேவன் ஒருநாளும் அதில் ஏறியது இல்லை. அதில் ஏறவேண்டும் என்று அவனுக்கு நிறைய ஆசை உண்டு. அது உயரமாக இருக்கும். அதில் ஏறி நின்று பார்த்தால் சுற்றி உள்ள எல்லாப் பக்கமும் அழகாகத் தெரியும். ஒரு நாளைக்கு ஏறிப் பார்த்து விடவேண்டும் என தேவன் எண்ணிக் கொண்டான்.

தேருக்கு உள்ளேயும் ஏறலாம் என்கின்ற சங்கதியை ராணி ஒருநாள் தேவனுக்கு காட்டித் தந்தாள். தேரில் நிறைய கெட்ட கெட்ட சித்திரம், சிற்பம் எல்லாம் இருப்பதால் குழந்தைப் பிள்ளைகள் அங்கே போவதை யாரும் பெரியவர்கள் கண்டால் அடிவிழும் என்கின்ற பயம் அவனுக்கு இருந்தது. அந்த நடுக்கத்தில் தேவன் அங்கே போக விரும்புவதில்லை. சில சிறுவர்கள் அங்கு ஒளிந்து இருந்து பீடி பற்றுவார்கள் என்று தேவன் கேள்விப்பட்டிருந்தான்.

தேர்முட்டியில் இருந்து யாரோ குடித்துவிட்டு கத்துவது போல இருந்தது. இங்கு குடிப்பதற்கு பிரச்சனை இல்லை. கோயிலின் வடக்கு மூலைக்கடை அதற்கு பிரசித்தமானது. தேவை என்றால் கடனுக்கும் தெங்குச்சரக்கு அங்கு கிடைக்கும். தெங்குச் சாராயத்திற்கு தேம்பும் குழந்தைகளின் சரணாலயமாக அது விளங்கியது. சிலவேளைகளில் அது யுத்தகளமாகும். பிரச்சனை ஏதும் நடந்தால் ஊர்காவற்றுறையில் இருந்து போலிஸ் வந்துவிட்டுப் போகும். சாராயநெடி தாங்க முடியாத கூட்டம் கோயிலின் தெற்குப்பக்கமாகச் செல்லும். அந்தப்பக்கம் நாலு

எட்டு நடந்து வயலைத்தாண்டினால், புளிச்ச கள்ளும், புதுக் கள்ளும் கலந்து விற்கும் தவறணை வரும். அங்கே பிளாவில் கள்ளுக் குடிப்பதற்காய் பல மைல்கள் நடந்து வருபவர்களும் உண்டு. தனிப்பனைக்கள்ளு ஆரோக்கியமானது என்பது அவர் களின் ஆராய்ச்சியின் முடிவாக இருக்க வேண்டும். வீட்டிற்கு கிழக்குப் பக்கமாகச் சத்தம் கேட்டால் அது சாராயக் கடைச்சத்தம் என்பான் தேவன். அதே சத்தம் தெற்குப்புறமாகக் கேட்டல் அது கள்ளுக் கடைச்சத்தம் என்பான்.

அம்மா தேவனின் கையைக் கெட்டியாகப் பிடித்த வண்ணம் தெற்குவீதியில் இறங்கினா. தெற்குவீதியில் பெரிய ஆலமரம் இராட்சதனைப் போல வளர்ந்து அந்த இடமெல்லாம் தனது ஆட்சி என்பதாய் விழுதுபரப்பி ஆக்கிரமித்து இருந்தது. அந்த ஆலமரத்திற்கும் வாசகசாலைக்கும் இடையில் பெரிய குழி ஒன்று உண்டு. அதில் குளம் போல இப்பொழுது நீர் நிறைந்து நிற்கிறது. அதற்குள் கோடை காலத்தில் இறங்கிப் பார்த்தால் பீங்கான்கள், பழைய சதுரம் சதுரமான பற்றரிகள் என நிறைய சாமான்கள் இருக்கும். மாரிக்காலத்தில் யாரும் கிட்டப் போகமாட்டார்கள். அதற்குள் தாண்டு யாரோ செத்ததாக தேவனுக்கு அம்மா அடிக்கடி சொல்லுவா. தேவனும் அந்தப் பக்கமே போவதில்லை. தெற்கு வீதியில் இறங்கி சில வளவுகள் தாண்டி ஒரு குச்சு ஒழுங்கைக்குள் சென்றால் தேவனின் வீடு வந்துவிடும். தெற்குவீதி தாண்டிச் செல்லும்போதும் ஒருசில மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. மாட்டைக் கட்டியவர்கள் அதை அவிழ்ப்பதற்கு மறந்து போய்விட்டார்கள் போல இருந்தது.

தேவனின் அப்பா வேலைக்குப் போகும்போது செருப்பு போடுவார். சைக்கிளில் சவாரி போவார். அம்மா ஊருக்குள் போகும் போது செருப்பு போடுவதில்லை. எப்போதும் நடந்தே திரிவா. தேவனும் செருப்பு போடுவதில்லை. சிலவேளை கால்களில் நெருஞ்சி முள்ளு ஏறினால்தான் வேதனையாக இருக்கும். முள்ளுக் குத்தி பழுத்தால் அம்மா சட்டைப் பின்னால் குத்திச் சீழை ஓடவைப்பா. அது வேதனையாக இருக்கும். கெந்திக் கெந்தி சில நாள்களுக்கு நடக்க வேண்டும். மக்கி றோட்டால் போகும்போது அதில் கல்லு குத்திவிட்டால் உயிர் போய் வரும்.

சிலவேளை தேவனின் அம்மா அவனுக்கு வறுத்த விசுக்கோத்து நனைத்து அதில் வைத்துக் கட்டி விடுவா.

கோயிலுக்குத் தெற்குப் பக்கமாக இருந்த வளவைப் பண்டாரம் வளவு என்பார்கள். அதுக்கு கிழக்கே இருக்கும் வளவுக்கு இலகர்வாடு என்று பெயர். இந்தப் பெயருக்கெல்லாம் என்ன அர்த்தம் என்று தேவனுக்குப் புரிவதில்லை. பண்டாரம் வளவு யாரோ சிங்கப்பூர்காரரின் வளவாம். சிங்கம் என்பவர் பராமரித்து வந்தார். அவர் கறுப்பாய் பெரிய உயரமாய் இருப்பார். வெள்ளைக்காரன் காலத்தில் ஆமியில் இருந்தவர் எண்டு தேவனுக்கு அம்மா சொல்லியது உண்டு. உண்மையா பொய்யா என்பது அவனுக்குத் தெரியாது. அவர் ஊன்று தடி யொன்று வைத்திருப்பார். எப்போதாவது அந்தப் பக்கம் வருவார். அவர் அனுமதியாது யாரும் மாட்டைக் கட்டி இருந்தால் அதைக் கொண்டு போய் விதானையிடம் கொடுத்துவிடுவார்.

வீடு நெருங்கியது. ஓடியோடி வந்த தேவன் மெதுவாக அம்மா பின்னால் பூனை நடை போடத் தொடங்கினான். பயம் அவனைப் பின்னுக்குப் பிடித்து இழுத்தது.

2

தேவன் கடந்து வந்த வாழ்வின் அழியாச் சுவடுகளை மீண்டும் மீண்டும் ஒரு தவிப்போடு தடவிப் பார்க்கும் மயக்கத் தில் இருக்க, சுபன் அங்கும் இங்கும் ஆராய்ச்சியோடு அலைந் தான். சுபனின் துடியாட்டத்தில் ஒரு சிறிய பொம்மை விழுந்த போதுதான் தேவனின் கடந்தகாலக் கனவு கலைந்தது. அந்தப் பொம்மையின் கை உடைந்திருந்தது. தேவனுக்கு முதலில் கோபம் வந்தது. அடுத்த கணமே இந்தக் கோபம் என்ன செய்யும் என்கிற கேள்வி முன்னே வந்து நின்று நகைப்பதாகத் தோன்றியது.

சுபன் பேசாது அப்பாவைப் பார்த்தான். தேவனுக்கு பேச வேண்டும் போல் இருந்தாலும் பேசாது உடைந்த பொம்மையை

எடுத்துப் பார்த்துவிட்டு குப்பையில் போட்டான். சுபனை மெதுவாகத் தொட்டிலில் விடத் தூக்கிச் சென்றான். சுபனிற்கு அது விளங்கவும் அழத் தொடங்கினான். அவனுக்குத் தொட்டில் என்பது சிறைச்சாலை. தேவனுக்கு சுபனை வெளியில் வைத் திருப்பது தீ மிதிப்பு. நியாயங்களை அநியாயங்கள் தற்காலிக மாகப் பலத்தால் வெல்ல முடியும். பலம் இங்கே வென்றது. சுபனின் அழுகையைப் பொருட்படுத்தாது தேவன் அவனைத் தொட்டிலிலே விட்டான். பின்பு கணனியில் ராகா டொட் கொம்மிற்குச் சென்று தமிழ்ப்பாட்டு கேட்கும்படி செய்தான். சுபன் இலகுவில் ஓய்வதாக இல்லை. தேவனுக்கு அவனது ஆர்ப்பாட்டம் பழகிப்போன ஒன்று. அவன் காதுகளை மூடிக் கொண்டான். மனம் மீண்டும் தனிமையெனும் இறக்கை கட்டி ஊரைநோக்கிப் பறக்கத் தொடங்கியது.

தேவனின் அம்மா கிணற்றடிக்கு அவனைக் கூட்டிச் சென்றா. மாரியில் ஒழுங்கா கால் கழுவவேண்டும். அப்பிடிக் கழுவினால்கூட நீர்ச்சிரங்கு பலவேளைகளில் வந்துவிடும். தேவன் கால் கழுவினான். அது தேவனின் அம்மாவிற்குத் திருப்தி அளிக்கவில்லை. தேவனின் அம்மா லைப்போய் போட்டு உள்ளங்கால் கூசக் கூசக் கழுவி விட்டா. பின்பு தானும் கால் கழுவிக்கொண்டா. அதன் பிற்பாடு தேவனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தா.

தேவனின் அப்பா லாந்தர் விளக்கு கொளுத்தி வைத்து விட்டு ஈசிசெயாரில் படுத்திருந்தார். கோயிலில் மின்சாரம் இருந்தது. அங்கு நல்ல பிரகாசமான வெளிச்சமாய் இருக்கும். தேவனின் வீட்டில் மின்சாரம் இல்லை. எப்போதும் இரவில் இருட்டாய் இருக்கும். இருட்டாய் இருந்தால் கள்ளன் வருவான் என தேவனுக்குப் பயமாய் இருக்கும்.

அந்த இருட்டிலும் அப்பாவின் கண்களில் கோபம் தெறிப் பதாகத் தேவனுக்குப் பட்டது, இதயத் துடிப்பு இடம் பெயர்ந்து வந்து காதிற்குள் முழங்கிக்கொண்டு இருந்தது. முதுகு சில்லிட்டுக் கூசுவதாய் ஒரு உணர்வு முள்ளந்தண்டின் ஊடாக ஓடியது.

'என்ன ஊர் சுத்திப்போட்டு வாறியளே?' தேவனின் அப்பாவின் கேள்வியில் அதீத கோபமும் இளக்காரமும் மண்டிக் கிடந்தது.

'நாங்கள் ஒண்டும் ஊர்சுத்தேல்ல, வயலுக்குப் போட்டு, பிறகு கோயிலுக்கும் போட்டு வாறம். இந்தாங்க விபூதியப் பூசுங்கோ. சும்மா வீட்டிலையும் சட்டம்பி வேலை பாக்கா தேங்கோ.'

தேவனின் அப்பா விபூதியைப் பெற்று, 'சிவ சிவா அப்பனே அச்சுதா பிள்ளையாரே' என அப்பனையும் மகனையும் ஒன்றாக வேண்டித் திருநீறைப் பூசினார். தேவன் சந்தர்ப்பம் பார்த்து மெதுவாக நழுவப் பார்த்தான்.

தேவனின் அப்பா இலகுவில் அவனை விடுவதாய் இல்லை. அவனைப் பார்த்து, 'டே எங்கடா போற. இஞ்ச வா' என அதிகாரத்துடன் அழைத்தார். தேவன் மெதுவாகச் சிணுங்கிய வண்ணம் அம்மாவிடம் ஓடினான்.

அம்மா அவனை அணைத்தவண்ணம், 'ஏன் பிள்ளையப் போட்டு இப்பிடி வெருட்டிறியள்? உங்கட சட்டம்பி வேலைய பள்ளிக்கூடத்தோட மட்டும் வைச்சிருங்கோ எண்டெல்லே சொல்லி இருக்கிறன். இப்பிடி இந்தப் பிஞ்சைப் போட்டு வெருட்டினா அவன் ஏம்பலிச்சுப் போவான். அன்பா பிள்ளை யளுக்குச் சொல்லிக்குடுக்கத் தெரியாமல் என்னத்த நீங்க ளெல்லாம் படிப்பிச்சு கிழிக்கிறியள்? ஆடுமாட்ட அடிக்கிறமாதிரி அடிச்சாப்போல படிப்பு வந்திடுமே அதுகளுக்கு? பெடி பெட்டை களுக்கு ஆர்வம் வாற மாதிரியெல்லே சொல்லிக் குடுக்கோணும்,' என்று 'பாடி'னா.

'தேவி, நீ வாயப் பொத்திக் கொண்டு போய் முதல்ல ரீயை வைச்சா. இல்லாட்டி இந்தத் துவரம் கம்பு உன்ர முதுகில கிழிஞ்சு போகும். தெரியும்தானே என்ர குணம் உனக்கு? விட்டா நீயே போய்ப் படிப்பிப்பாய் போல இருக்குது.'

'ம் ... உந்த வெருட்டலுக்கு மாத்திரம் குறையில்ல. நானும் நல்ல களபூமிதான். எங்களுக்கும் சண்டித்தனம் பற்றி நல்லாத் தெரியும்.'

'அப்ப என்னடி சொல்லுறா?'

'ஏலுமெண்டா அன்பாச் சொல்லிக் குடுங்க. இல்லாட்டி அவன ஆக்கினைப்படுத்தாமல் விடுங்க. ஓ சொல்லியாச்சு.'

'சரி உன்ன மாதிரி அதுவும் எட்டாம் வகுப்போட அலை யட்டும். நீ ரீயை வைச்சா இப்ப. எனக்கெண்டு காட்டில பிடிச்சந்து தந்திருக்குதுகள்.'

'என்ன... ம்... இவர் பெரிய பட்டினத்துக்காரர்... நீ வா அப்பன். நான் பிள்ளைக்குச் சொல்லித்தாறன்.' அன்று தேவனின் அம்மா அவனைக் காப்பாற்றி விட்டா.

தேவனுக்கு சட்டென நினைவு அறுந்தது. சுபன் தூங்கிக் கொண்டிருந்தான். அழுத களைப்பாய் இருக்கவேண்டும் என அவன் எண்ணிக் கொண்டான். மீண்டும் தேவன் ஏதோ இனம் புரியாத உணர்வில் தத்தளித்தான். பாலைவனத்தில் தனித்து விடப்பட்ட பரிதாப உணர்வொன்று எழுந்து அவனை விழுங்கு வதாய்த் தோன்றியது. கண்ணாடியூடே அரவம் அற்றுப் போய் இருந்த தெருவைத் தேவன் வெறித்தான். இந்த வாழ்க்கை ஒரு சிறையாக அவனைப் பயமுறுத்தியது. இயந்திரமயமான ஐரோப்பிய சமுதாயத்தின் பொருளாதார இரும்புப் பிடிக்குள் இறக்கை இன்றிய புழுக்களாக நெளிவதான உணர்வு ஏற் பட்டது. அங்கு உயிருக்கு நிச்சயம் இருக்கவில்லை. இங்கு உறவுகளுக்கு இடம் இருக்கவில்லை. எங்கு சென்றாலும் அந்நியத்தன்மை அடம்பிடித்துக்கொண்டே பின்னுக்கு வருகிறது. மீண்டும் மனது தலைதெறிக்க அந்தத் தீவை நோக்கிப் பாய்ந்து ஓடியது.

தேவனுக்கு ஐந்து வயது இருக்கும். அந்த வருடம் அடை மழை பெய்தது. அன்று தேவனின் அம்மா காலை சாப்பாடு செய்யவில்லை. தேவனின் அப்பாவுக்கு காலையில் ஏதாவது சாப்பிட வேண்டும். சாப்பிடாவிட்டால் பள்ளிக்கூடத்தில் ஒன்றுக்கு பதிலாக இரண்டு துவரங்கம்புகள் முறிந்து போய்விடும். தேவனின் அம்மா அதை விரும்புவதில்லை. மழையும் காற்றும் அடித்துக்கொண்டு இருந்தது. அந்தக் காற்றில் குடை பிடிக்க முடியாது என தேவனின் அம்மா முடிவு செய்திருக்க வேண்டும்.

தேவனின் அம்மா யூரியா உரப்பை ஒன்றை மடித்து முதலில் தலையில் போட்டுக் கொண்டா. பின்பு சாக்கு ஒன்றை அதற்கு மேல் இரண்டாக மடித்துப் போட்டுக் கொண்டு வெளியில் புறப்பட்டா. தேவன் தானும் வருவதாக அடம்பிடித்தான்.

'என்ர செல்லம் எல்லேடா, அம்மா இப்ப போட்டு ஓடியந் திடுவன். பிள்ள மழையில நனைஞ்சா காய்ச்சல் எல்லே வந்திடும் பிள்ளைக்கு. பிறகு அம்மா எல்லே கவலைப்படுவா. குட்டி யாட்டம் போய் பிள்ளேன்ர புத்தகத்தை எடுத்துப் படிப்பியாம். சரியே?' என்றா.

'ம்...' தேவன் மனமில்லாது முனகினான். அம்மா போவதை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டு நின்றவன் மெதுவாக ஓடிப் போய் மேசையில் இருந்த புத்தகத்தை எடுத்து வாசிப்பதாய் பாவனை செய்யத் தொடங்கினான். வேறு ஏதாவது செய்வதை அப்பா பார்த்துவிட்டால், அவரின் குணத்தைக் காட்டத் தொடங்கி விடுவார். அப்படிக் காட்டினால் இந்தக் கொட்டும் மழையில் ஒரு இடமும் ஓட முடியாது எனத் தேவன் எண்ணிக் கொண்டான். அப்பா வேலைக்குப் போவதில் அவசரம் காட்டுவதாய் தேவனுக்கு இன்று தெரியவில்லை. அப்பாவைக் கேட்பதற்கும் அவனுக்குப் பயமாய் இருந்தது. தேவன் புத்தகத்தில் இருந்த படங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த்தான். அப்பா ஈசிசெயாரில் படுத்தபடி புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தார். அம்மா இல்லாவிட்டால் நேரம்கூட மாரிச் சேற்றில் புதைந்த தேராக, இறுகிப்போன செக்காக, அசையாது அடம் பிடிப்பதாய் அவனுக்குத் தோன்றியது.

அன்று தேவனின் அம்மா அப்பத்தோடு தாமதமாய் வந்தா. நிறைய ஆள்கள் அப்பத்திற்கு சென்றிருக்க வேண்டும். அடை மழை என்றால் யார் வீட்டில்தான் அடுப்பேறி இருக்கும் எனத் தேவன் எண்ணிக்கொண்டான். அம்மாவின் தலை தவிர உடல் முழுவதும் தெப்பமாக நனைந்திருந்தது. அப்பம் மாத்திரம் மூடு பெட்டியில் பத்திரமாக இருந்தது. தேவனின் அம்மா அப்பத்தை மேசையில் வைத்துவிட்டு, சாக்கையும் உரப்பையையும் தாவாரத் தில் போட்டுவிட்டு கிணற்றிற்குச் சென்று முழுகினா. தேவன் வரப்போவதாக அடம்பிடிக்க சற்றுக் கோபமாகவே 'வீட்டை

விட்டு இறங்கப்பிடாது, ஓ சொல்லிப்போட்டன்' என்று கூறி விட்டுச் சென்றிருந்தா. குளித்துவிட்டு வந்த தேவனின் அம்மா பெரிய அறைக்குள் சென்று உடுப்பு மாற்றிக் கொண்டு மீண்டும் வந்தா.

தேவனின் அப்பா அம்மாவைப் பார்த்து இளக்காரமான குரலில், 'என்ன முழுகவே இப்ப வெளியால போனனீ?' எனக் கேட்டார். 'ம்... நீங்க வீட்டுக்க இருந்துகொண்டு சொல்லு வியள்தானே? வெளிய போனாத்தான் தெரியும். பாக்கிற இட மெல்லாம் வெள்ளக்காடா இருக்குது. கல்லந்தாழ்விற்க வரம்பும் தெரியேல்ல, வரப்பும் தெரியேல்ல. நெல்லெல்லாம் தாண்டு போச்சு. எல்லாம் குருத்துக் கக்கி நாசமாப் போகப்போகுது. வான்முட்டி மேலாலையும் சையிற்றாலயும் கடலுக்கு தண்ணி போகத் தொடங்கீட்டுதாம். நான் முருகேசற்ற கல்லு வரம்பால போனதால தங்கம்மா ஆச்சிவீட்ட ஒருமாதிரி தாண்டித் தாண்டிப் போயிட்டன். வயலுக்க அலைமோதின வெள்ளத்தைப் பாத்து பயந்தும் போனன். வரேக்க சுத்தி றோட்டாலதான் வந்தன். அங்கையும் ஒரே வெள்ளம். நீங்கள் இண்டைக்கு பள்ளிக்கூடம் போறியளே?'

' போறமாதிரியே இருக்கு.... ?'

'அதென்னவோ சரிதான்.'

'தாமோதரத்தார் தேர்முட்டியில இருந்தவர். என்னக் கூப்பிட்டு உங்கள அங்க வரட்டாம் எண்டு சொன்னார். வான் போய்த் திறக்கோணுமாம். அது திறக்கிறதெண்டா ஐஞ்சாறு வேரப்பிட்டியாரையும் பிடிச்சுக் கொண்டுதானே போகோணும். இல்லாட்டி தண்ணீ இழுக்கிற இழுவைக்கு நீங்கள் ஒருத்தரும் உங்க நெருங்கேலாது.'

'சரி உந்த அப்பத்தப் போடு. சாப்பிட்டிட்டு போய் பாத்திட்டு வாறன். ரீ வைப்பியே? அதுக்கு விறகேதும் இருக்கே?'

'ஓ அதுக்கு சுள்ளி இருக்குது. சற்றுப் பொறுங்கோ, ரீ வைச்சுக் கொண்டு வாறன்.'

தேவனுக்கும் அம்மா அப்பம் தந்தா. அத்துடன் சுடச்சுட பால்தேத்தண்ணியும் தந்தா. அம்மாவின் கெட்டித்தனம் யாருக்கு

இருக்குமெனத் தேவன் எண்ணிக் கொண்டான். எந்த மழை யென்றாலும் அதிகாலை எழுந்துகொள்வா. பின்பு மாட்டு இலை யான் கடிக்கக் கடிக்க பால்கறந்து எடுத்து வருவா. அதைக் காய்ச்சி வைத்த பின்புதான் இன்றும் அப்பம் வேண்டப் போயிருந்தா. சிலவேளை இப்பிடிக் காய்ச்சி வைக்கிற பாலின் ஆடையைத் தேவன் வழித்துச் சாப்பிடுவான். தேவனின் அம்மா அதைக் கண்டால் கள்ளன் எண்டு செல்லம் பொழிவா. அவவுக்குத்தான் தன்மேல் எத்தனை ஆசையெனத் தேவன் அப்போது எண்ணிக் கொள்வான்.

தங்கம்மா ஆச்சியின் அப்பம் அமிர்தமாய் இருந்தது. அப்பத்தில் இருக்கும் தேங்காய்ப்பாலும் சீனியும் சேர்ந்த புளித்த நடுப்பகுதியை அலுக்காமல் சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாம் எனத் தேவனுக்குத் தோன்றியது. தேவனின் அப்பாவும் அப்பத்தைச் சுவைத்துச் சாப்பிட்டார். பின்பு வழக்கத்துக்கு மாறாக செருப்பு, சைக்கிள் இல்லாமல் வேறு ஒரு உரப்பையைத் தேடி எடுத்து தலையில் போட்டுக் கொண்டு புறப்பட்டார்.

தேவன் அப்பாவோடு தானும் வான் பார்க்கப் போக வேண்டும் என்று கேட்டான். ஆனால் அப்பாவோ கோபமாகவே 'அங்க வந்து என்ன வருத்தமே தேடப்போறா?' எனக் கேட்டு விட்டுத் தன்பாட்டிற்கு இறங்கிச் சென்றுவிட்டார். அந்த வெள் ளத்தையெல்லாம் பார்க்க முடியவில்லையே என்கின்ற கவலை தேவனை அன்று வாட்டியது.

செல்லம்மா மாமி பத்து மணிபோல் வீட்டிற்கு வந்தா. செல்லம்மா மாமியை ஒரு நடமாடும் பத்திரிகை என்றுதான் சொல்ல வேண்டும். ஊர் விடுப்பு எல்லாம் அவவின் காதில் விழாது தப்பாது. ஏதும் ஊர் புதினம் கேட்பதென்றால் தேவனின் அம்மா செல்லம்மா மாமியிடம்தான் போவா. பொழுதுபட்ட பின்பு படலைக்குப் பின்னால், வெண் புழுதியில் இருந்து அப்படிப்பட்ட சந்திப்புகள் சிலவேளை நடைபெறும். சில வேளை தேவன் அம்மாவின் மடியில் இருந்துகொண்டு செல்லம்மா மாமி சொல்லும் கதையை ஆசையாகக் கேட்டுக் கொண்டிருப்பான். நிலவுக் காலங்களில் படலையடியில் இருக்கும் மணலில் உட்கார்ந்து அம்மாவும் செல்லம்மா

மாமியும் கதைப்பதைக் கேட்டுக் கேட்டு அந்தத் தாலாட்டில் அம்மாவின் மடியில் அவன் நித்திரை கொள்வதும் உண்டு. இன்று செல்லம்மா மாமி என்ன புதினம் கொண்டு வந்திருக்கிறா என்பதை அறிவதில் தேவனுக்கு பனங்கட்டி சாப்பிடும் புளுகு.

மணல் எல்லாம் ஈரமேறி நொதித்துப் போய் இருப்பதால், படலைச் சந்திப்பு இன்று இயலாது போக, செல்லம்மா மாமி விறாந்தையில் இருந்த கட்டிலில் வந்து அமர்ந்து கொண்டா.

'டீ பிள்ள தேவி என்னடி செய்யிறா? '

'கட்டில்ல இரண. இந்தச் சட்டிய வைச்சிட்டு வாறன்' எனத் தேவனின் அம்மா பதில் அளித்தா.

'எடி இதென்னடி மழை பெய்யுது? இந்த ஊர் உலகமெல் லாம் அழியப் போகுது போல இருக்குது. பிள்ளையாற்ற வீதிலேயே நீந்தலாம் போல வெள்ளம் நிக்குது. அவ்வளவு வெள்ளமடி ஊரெல்லாம்.'

'என்ன செய்யிறதணை? ஏதோ கேடுகாலம் போல இப்பிடிப் பெய்யுது. கொஞ்சம் பொறண. அடுப்புப் புகையுது, ரீ வைச்சாறன்.'

'அதுக்கென்னடி, இந்தக் குளிருக்கு அதுதான் நல்லா இருக்கும்.'

'கொப்பர் என்ன வான் திறக்கவே போட்டார்?' செல்லம்மா மாமி தேவனைப் பார்த்துக் கேட்டார்.

' ம் ... என்ன விட்டிட்டுப் போட்டார்.'

'நீ என்னடா செய்யப் போற உந்த வெள்ளத்துக்க போய். தண்ணி கரை புரண்டு ஓடுது. ஆம்பிளையே வெளியால நடக்க முடியாமல் இருக்குது. உனக்கு உலாத்து வேண்டிக் கிடக் கோடா. வடுவா, உந்த வெள்ளத்துக்க இறங்கப்பிடாது.' செல்லம்மா மாமி கண்டிப்போடு சொன்னார். 'தேவி உனக்குச் சங்கதி தெரியுமே?'

'என்ன அது?'

'உனக்கு சேதுவின்ர நாம்பன்கள் தெரியும் எல்லே?'

'ஓ நாலு பெடியள் அவைக்கு. இல்லையே?'

'அதில அந்த இரண்டாவதைத் தண்ணியள்ள இந்த மழைக்க அனுப்பினவளாம். அது கிணறும் தெரியாமல் கட்டும் தெரியாமல் கிணத்துக்க இறங்கிப்போட்டுது.'

'அடப் பாவமே இப்பிடியும் நடக்குமே? '

'வாத்தியார் சிலவேளை செத்த வீட்டுக்குப் போட்டுத்தான் வருவாராக்கும்?'

'கேள்விப்பட்டா போட்டுத்தான் வருவார்.'

'அங்க திருவிழாக்கூட்டம் போல வான்திறக்கச் சனம் நிக்குதாம். கேள்விப்படாமலே இருக்கப் போறார்?'

'அதுவும் சரிதான்.'

'இந்தாண ரீ. சுடுகுதெணை, கவனம்.'

'உன்னிட்ட வந்தால்தான்ரி இப்பிடிப் பால் ரீ குடிக்கலாம் .' செல்லம்மா மாமி கவனமாக ரீயைப் பெற்றுக்கொண்டா.

'ஊருக்கு ஏதோ கேடுகாலம் வந்தமாதிரி மழை இப்பிடியே அடைச்சுக் கொண்டு நிற்குது. நெல்லெல்லாம் குருத்துக் காக்குது. என்ன அநியாயம் இது?' என்றா தேவனின் அம்மா.

'ம். நீ என்ன காலம நீச்சல் அடிச்சுக் கொண்டு திரிஞ்சனியே? கணேசன் பேசிக் கொண்டு போறான்.'

'இல்ல. நானும் விசயம் தெரியாமல் அப்பம் வேண்டப் போய் காலம மாட்டுப் பட்டுப் போனன்.'

'நல்ல காலம் கிணறுகளுக்க போகாமல் வந்து சேர்ந்த.'

'அதுவும் பிறகு சுத்தி செம்பாட்டுக்குள்ளால வந்து, பிள்ளையார் கோவில் தாண்டி வந்தது. பாக்கிற இடமெல்லாம் வெள்ளமெணை. பாக்கப் பாக்க பயமா இருந்திச்சு...' என்ற வண்ணம் தேவனின் அம்மா தும்மினா.

'ஆரோ களமியார் உன்னை நினக்கினமடி' என்றா செல்லம்மா மாமி

'தண்ணியெல்லாம் அங்கதானே அரிச்சுக்கொண்டு போகும். அங்கேயும் அல்லோல கல்லோலமாய் தான் இருக்கும் '

'தண்ணிக்கெதடி ஊரு? அது அடிச்சள்ளிக்கொண்டு கடல் காண ஓடுது. வேரக்குளம் இருண்டு மழையில நிறைஞ்சுபோம். வேற ஆழமான குளமேதும் ஊருக்க இருக்குதே? வெள்ளம் என்ன செய்யும்? கடல்காண ஓடுது. ஈபோசா வஸ்சும் இல்ல. காரும் இல்ல. சக்கலாவோடையத் தாண்டிப் போக்குவரத்துக் கிடை யாதடி...' என்றா செல்லம்மா மாமி.

'அப்ப கிழக்கு ரோட்டால வஸ் ஓடுதோ என்னவோ?'

'ம்க்கும்... நல்லாத்தான் ஓடும்! அங்கையும் ஒண்டும் ஓடேல்லையாம் எண்டு சண்முகம் சொல்லிக்கொண்டு போறான். சரியடி பிள்ள. நான் உந்தத் தூறலோட வீட்ட போய்ச் சேரோணும். நீ உந்த கடுவன கீழ இறங்க விட்டிடாதையடி. '

'அவன் நல்ல பிள்ளையெண. இண்டைக்கு அம்மாவோட வீட்டுக்கதான் இருக்கப் போறான். '

பின்பு செல்லம்மா மாமி புறப்பட்டுச் சென்று விட்டா.

'ஏதோ முதுகெல்லாம் உளையுதெடா... கொப்பரையும் காணேல்ல...' எனத் தேவனின் அம்மா அலுத்துக் கொள்ளும் போதே தேவனின் அப்பா உள்ளே வந்தார். பின்பு அவர் கிணற்றுக்குச் சென்று தலையில் அள்ளி ஊத்தும் சத்தம் கேட்டது.

'கொப்பர் செத்த வீட்ட போட்டு வந்திருக்கிறார் போல இருக்குது...' எனக் கூறிய வண்ணம் தேவனின் அம்மா ரீ போடுவதற்கு மீண்டும் அடுப்பை ஊதினா.

உள்ளே வந்த தேவனின் அப்பா 'உந்த நாசமாப் போன மழை ஊரையே அழிச்சுப் போட்டுது. நீ உந்த வெள்ளத்துக்க காலம என்ன துணிவில போட்டு வந்தனி? விசயம் தெரியாமல் போய் வயலுக்க இறங்கினாப்போலதான் எனக்குப் பயம் பிடிச்சுது. சேதுவின்ர இரண்டாவது பெடி நாசமாப் போச்சுது.'

'செல்லம்மா மாமி சொன்னவா.'

'அவ வந்தவாவே இஞ்ச?'

'ஓ.... இந்தாங்க ரீ. நீங்க உதக் குடிச்சுப் போட்டு அந்த மாட்டுமால் பரணில கொஞ்சக் கட்டை அடுக்கி வைச்சிருக் கிறான், ஒண்டை எடுத்தந்து உந்த மண்ணறைக்க போட்டுக் கொத்தித் தாறியளே? விறகுக்கு எங்க போகேலும் இப்ப? எதாவது சமைச்சாத்தானே சாப்பிடலாம். எனக்கும் ஏதோ நாரிய உளையிறமாதிரி இருக்குது.'

'நீ காலமை தேவையில்லாமல் ஓடிப்போய் ஏதோ கோதாரிய வேண்டிக் கொண்டு வந்திட்டாய் போல இருக்குது.'

'நீங்க பள்ளிக்கூடம் போகோணும் எண்ட நினைப்பில ஓடினன். இல்லாட்டி உந்த மழைக்க யார் போவினம்?'

'கட்டை இருக்கெண்டா உப்புக் கஞ்சிய இல்லாட்டி பால் கஞ்சிய காச்சி இருக்கலாமெல்ல. நீச்சல் அடிச்சிருக்கத் தேவையில்ல.'

'சரி அதை விட்டுட்டு விறகை கொத்தியாங்க .'

அன்று புழுங்கல் அரிசிச் சோறும் சமைத்து நல்ல உறைப் பான சம்பலும் அரைத்தா தேவனின் அம்மா. அந்தக் குளிருக்கு அதன் சுவையே தனியாக இருந்தது. பின்பு தேவனின் அம்மா தனக்கு அலுப்பு எனக் கூறிப் படுக்கப் போனா. அம்மாவோடு போய்த் தேவனும் மெதுவாகப் படுத்துக் கொண்டான்.

இரவு ஏழு மணி இருக்கும். தேவன் திடுக்குற்று விழித்த போது அப்பா பாய்க்குப் பக்கத்தில் இருந்தார். அம்மா அனுங்கிக் கொண்டிருந்தா. உடம்பில் இருந்து அனல் பறந்தது. காலையில் அடித்த நீச்சல் பின்னேரம் காய்ச்சலில் வந்து நின்றது. அம்மா வருத்தத்தில் படுத்திருப்பது தேவனுக்கு அதிக வேதனையைத் தந்தது.

தேவனைப் பார்த்த அப்பா, 'எழும்படா. அவவுக்கு சுக மில்ல. அவவோட படுக்காமல் போய் உன்ர கட்டில்ல படு.'

'பயம் அப்பா.'

தேவன் மனமில்லாது தயங்கியவாறு கண்கள் பிதுங்க அந்தச் சொற்களை மென்று விழுங்கினான். தேவனின் அப்பா

டொக்கென்று மண்டையில் ஒரு குட்டு வைத்தார். தேவனுக்கு மண்டை இரண்டாய்ப் பிளந்தது போல் இருந்தது. இதற்குத்தான் அப்பாவை மொக்குச் சண்முகம் வாத்தியார் என்று சொல்கிறார் களோ எனத் தேவன் மனதிற்குள் எண்ணிக் கொண்டான். வேதனையில் கண்ணீர் இறங்கி முகத்தில் வழிந்தது. தேவனை அப்பா மீண்டும் உறுக்கினார்.

'ஓடடா... ஓடிப்போய் அங்க படு... இல்லாட்டி துவரம் கம்பு முறிஞ்சு போகும்.'

தேவன் அழுதுகொண்டு ஓடினான். இந்த அப்பாவோடு எப்படிக் காலம் தள்ளுவது எனத் தேவனுக்குக் கோபமாக இருந்தது. அப்பாவிடம் இப்படி அடிவாங்குவதிலும் வீட்டை விட்டே ஓடிவிடலாமென ஒரு கணம் அவனுக்கு எண்ணத் தோன்றியது. பாவம் அம்மா. அவதான் எத்தனை பாசத்தை என் மீது வைத்திருக்கிறா. அவவை விட்டுவிட்டு எங்கும் போக முடியாது என எதிர்ப் பதில் சொல்லிய மனதுடன் தேவன் நிறைய நேரம் தேம்பிக் கொண்டிருந்தான். பின்பு அப்படியே தூங்கிப் போனான்.

அம்புலன்ஸ் ஒன்று எங்கோ போகும் சத்தம் கேட்டது. தேவன் நினைவறுந்து சுபனைப் பார்த்தான். அவன் அமைதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தான்.

௨

கடிவாளம் அற்ற காலம் என்னும் குதிரை மனிதரின் வயப்படாது மின்னல் வேகத்தில் மறைந்து கொண்டிருக்கிறது. அந்த வேகம் பெரும் பதைபதைப்பைத் தந்தாலும், என்ன செய்ய முடியும் என்கின்ற இயலாமையில் முற்றுப் பெறும். நரைகள் நாட்காட்டியாகி வாழ்வின் மிகுதி நாளை எண்ணிக்காட்ட, இந்தநாள் போகுதே என்னும் இன்பத்திலும் துன்பத்திலும்

வாழும் மனிதனில் ஆயிரம் ஏக்கங்கள். காலம் போகிறதே என்று ஏங்கும் மனிதனுக்கு அது உறைந்துவிட்டால் என்பதை கற்பனை செய்துகூடப் பார்க்கும் திராணி கிடையாது. தேவனும் சாதாரண மனிதனாக, காலம் போகிறதே என்கின்ற தவிப்பில் கண்ணாடி முன் நின்று காலச் சுவடுகளை நித்தம் மறைக்கும் முயற்சியில் தோற்றுப்போகும்போது, அலுத்துக் கொள்வான். எனினும் காலம் கடிவாளம் அற்ற அசுவமாக, மனிதனின் அற்ப ஆசைகளைத் துவம்சம் செய்து, அண்டவெளி ஏவுகணையாக விரைந்து கொண்டு இருக்கிறது.

சுபன் இப்போது முதலாம் வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தான். இவ்வளவு காலமும் ஏழுவயதில் தொடங்கிய முதலாம் வகுப்பு இந்த வருடம் புதிய கல்வித் திட்டத்திற்கு அமைய ஆறு வயதில் தொடங்கி இருந்தது. சுபன் மிகவும் சந்தோசமாய்ப் பாடசாலைக்குப் போய் வருவான். மென்மை யான மனசுகளைப் புரிந்துகொண்டவர்களிடம் கல்வி கற்பது இனிமையானது. விளையாட்டாக பாடம் போதிக்கப்படும் வாழ்வநுபவம் அவன் குழந்தைப் பிராயத்தை அழகாக எழுதிக் கொண்டு இருந்தது. ஆசிரியர் அடிப்பார் என்கின்ற பயமற்ற உற்சாகம், துள்ளித் திரியும் மான்குட்டியாகப் பள்ளி சென்று வரும் பூரிப்பை ஏற்படுத்தி இருந்தது. ஆசிரியருக்கும் மாணவனுக்கு மான உறவு நட்பு அடிப்படையில் இருக்கவேண்டும் என்கின்ற அஸ்திவாரம் இங்கு பலமாகப் போடப்பட்டிருந்தது.

மாணவர்களுக்கு ஒரு தனிக்குணம் உண்டு. அது எந்த நாடாக,. எந்த இனமாக இருந்தாலும் மாற்றம் மறுதலிக்கப் பட்டிருப்பதே வழமை. அன்று சுபனைக் கூட்டிவர தேவன் பாட சாலைக்குச் சென்றிருந்தான். அவனுக்கு ஜக்கெற் அணிவிக்கும் போது முகத்தில் யாரோ கீறி வைத்திருந்ததைக் கண்டு திடுக் கிட்டுப் போய்விட்டான். தேவனால் அதைப் பொறுக்க முடியவில்லை.

'என்ன சுபன் இது?' எனக் கேட்டான்.

'அகமட் கீறிப் போட்டான் அப்பா. நீங்க வேண்டித் தந்த 'மைக்' பேனாவைக் கேட்டான். நான் அவனுக்கு குடுக்கேல்ல.

அவன் கோபத்தில எனக்கு கீறிப்போட்டான். அவன் நல்லவன் இல்ல. எனக்கு அவனப் பிடிக்காது.'

'நான் எல்லே அந்தப் பேனைய பள்ளிக்கூடம் கொண்டு வரக்கூடாது எண்டு சொன்னனான்.'

'ம்...' சுபன் சோகமாக தலையை ஆட்டினான். அவன் தான் செய்த பிழையை உணர்ந்து கொள்வதை அது பிரதிபலித்தது. ஒருவகையில் தேவனுக்கு அது ஆறுதல் தந்தது.

வீட்டிற்கு வந்தபோது, வினோவின் பருந்துக்கண் சுபனின் முகத்தில் இருந்த கீறலில் நிலை குத்தி நின்றது. தேவனுக்கு இப்போது வினோவுக்கு சமாதானம் சொல்வது அலுப்பாய் இருந்தாலும், அதை வெளிக்காட்டர்து அவளைப் பார்த்தான்.

'என்னப்பா இந்தப் பெடிக்கு இப்பிடிக் கீறி இருக்கு? என்ன நடந்திச்செண்டு அங்க கேட்டீங்களே?'

'அகமட் எண்ட சோமாலிப் பெடியன் கீறிப்போட்டானாம்.'

'எனக்குத் தெரியும் அந்தக் காப்பிலியள் இப்பிடித்தான் செய்யும்.'

'அப்படியில்ல வினோ, நீயும் அதைத்தான் செய்யிறா. முதல்ல காப்பிலியள் எண்டு சொல்லுறத நாங்கள் விடோணும். ஒருவகையில நாங்களும் நொஸ்க்களைப் பொறுத்தவரையில காப்பிலியள்தானே ?'

'என்ன சொல்லுறியள்? '

'உனக்கு விளங்கேல்லயே. நாங்கள் எப்பிடி றியக்ட் பண்ணுறம், எப்பிடிக் கதைக்கிறம் எண்டதப் பாத்துத்தானே பிள்ளையள் தாங்கள் எப்பிடி றியக்ட் பண்ணலாம், எப்பிடி கதைக்கலாம் எண்டு டிசைட் பண்ணுறாங்கள். நீ ஏப்பகாம்பால சிலவேளை பயம் காட்டினா, பிள்ள தடியால வெருட்டலாம் எண்டத உன்னிட்ட இருந்து படிச்சுக் கொள்ளும் எண்டத புரிஞ்சு கொள்ள வேணும். அதைமாரித்தான் வீட்டில அடிவேண்டுற பிள்ளை, வெளியில அடிக்கலாம் எண்டத படிச்சுக் கொள்ளுதுகள். உது தனிய சோமாலிக்காரனின் பிரச்சன மட்டுமில்ல. எங்கட தமிழாக்கள், பாகிஸ்தான்காரர் எல்லாரும் செய்யிற வேலைதான்.'

'அதுவும் சரிதான். எங்கட பெடியளின்ர காங்குகளப் பார்க்கத் தெரியேல்லயே? ஆனா நாங்களெல்லாம் அடிவேண்டித் தானே வளர்ந்தம். இப்ப ஒழுங்கா இருக்கேல்லயே?'

'அந்த வள்ளல பாக்கிறம் எல்லே. பேசித் தீக்கிற பிரச்ச னைக்கெல்லாம் கத்தியும் வாளும். முடியிதே பிரச்சனை? அடி வேண்டி எவ்வளவு குழப்படியளச் செய்திருப்பம். அவை எங்களுக்கு அடிபோட்டது இன்னும் குழப்படியக் கூட்டின மாதிரி இருந்திச்சே தவிர, குறைச்ச மாதிரி எனக்கு ஒருநாளும் தெரியேல்ல.'

'அது என்னவோ உண்மைதான் அப்பா. சுரணை கெட்டுப் போறதெண்டுவினம். அதுதான் உங்களுக்கு நடந்திருக்கு.' கூறி விட்டு பகிடி விட்டதாய் எண்ணிச் சிரித்தாள் வினோ. தேவன் அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்தான்.

'இவங்களிட்ட நல்ல ஒரு பழக்கம் இருக்குது. என்ன தெரியுமே. எதுக்கும் கை நீட்டுறேல்ல. எந்தப் பிரச்சனை யையும் பேசித் தீர்க்கலாம் எண்ட ஒரு தைரியமும் பொறுமை யும் இவங்களிட்ட இருக்குது. எந்தப் பிரச்சனையும் பேச்சு வார்த்தையளவில இருக்கோணும் எண்டதில தெளிவு இருக்குது. கையளவுக்கு யாரும் தாழ்ந்து போகக்கூடாது. அதுதான் மிருகத் திற்கும் மனிதனுக்கும் வித்தியாசமாய் இடையில இருக்கிற கோடு. கையளவுக்குத் தாழ்ந்து போன பிரச்சனையில வன்மம் தான் பிறக்கும். நல்ல வழி பிறக்காது. அடிவேண்டுற பிள்ளை, பிரச்சனையப் பேசித் தீர்க்கலாம் எண்டத அறவே மறந்து போயிடும். அந்தப் பிள்ளைக்கு மொழியப் பாவிக்கலாம் எண்ட உண்மை தெரியாமல் போயிடும். எல்லாமே அடிதடியால சாதிக்கலாம் எண்ட நம்பிக்கைல வாழத் தொடங்கீடுவினம்.

'நீங்க சொல்லுறது எல்லாம் சரியா இருந்தாலும் நடை முறைக்கு உது தோதுப்பட்டு வருமே?'

'எது தோதுப்பட்டு வராது எண்டுறா?'

'ஏன் இவங்களும் வெட்டுக் குத்துப் படேல்லையே? அடி படேல்லையே? சுட்டுச் சாகடிக்கேல்லையே?'

'ஆர் இல்லையெண்டது? இவங்களிலேயும் பிள்ளையள அடிக்கிற ஆட்களும் இருக்கத்தான் செய்கினம். அடி வேண்டி வளராத பிள்ளைகூட ரவுடியாத் திரியலாம். மனித மூளை எண்டுறது புரிஞ்சு கொள்ள முடியாத ஒரு விசித்திரமான படைப்பு. அது எப்பிடி எப்பிடியெல்லாம் றியக்ட் பண்ணும் எண்டத யாரும் நூறுவீதம் கண்டுபிடிச்சிட முடியாது. அப்பிடிப் புறநடையா நடக்கிற காரியங்களை விட்டிட்டு பொதுப்படையானதைப் பார்க்கோணும்.'

'இவங்கள மாதிரிப் பொறுமையாக கதை சொல்ல எங்களுக்குச் சரிப்பட்டு வாறேல்லத்தான். கோபம் வந்தா முதல்ல போட்டுத் தள்ளோணும் போலத்தான் இருக்குது.'

'அப்பிடியா? நாங்கள் வளர்ந்திட்டம். எதுக்கெடுத்தாலும் அவை எங்கள போட்டுப் பிடிச்சுத்தானே வளர்த்தவை. எங்களுக்குப் பிரச்சனைய எப்பிடிப் பேசித் தீர்க்கலாம் எண்ட அநுபவம் இல்லை. நடைமுறையில நாங்கள் அதைப் புரியேல்ல. அதுதான் கை நமநமக்குது. நாங்களும் அதையே செய்தமெண்டா, இது இப்பிடியே தொடர்ந்து கொண்டுதான் போகும்.'

'இங்கே சட்டத்திற்குப் பயந்து அடிக்கிறது குறைவு. ஊரில இதுக்கும் பழமொழி சொல்லுவினம். அவைக்கெல்லாம் அது திருவாக்கு மாதிரி. அதில இருக்கிற சரி பிழைபற்றி எதிர்க் கேள்வி கேட்கிறது கிடையாது' என்றாள் வினோ.

'நீ எதைச் சொல்ல வாறாய் எண்டு எனக்கு விளங்குது. அங்க மனிசன மாடா நினைச்சினமாக்கும். இஞ்ச அந்த மாட்டைக்கூட அடிக்கக்கூடாது எண்டுறாங்கள். உடல்ரீதியா வருத்துறது எல்லாருக்கும் துன்பத்தைத்தானே தரும். அது மாடா இருந்தால் என்ன மனுசனா இருந்தால் என்ன?'

'சரியப்பா, உந்தப் பிரச்சனைய நாங்கள் ஒருக்கா ரீச்சரோட கதைக்கோணும். இனிமேலைக்கு இப்பிடி அவன் கீறக்கூடாது.'

'ஓ... நான் நாளைக்குக் கொண்டே விடேக்க கதைக்கிறன்.'

'அப்ப சரியப்பா. நான் போய்க் குளிச்சிட்டு வாறன்.'

வினோ குளிக்கப் போய்விட்டாள். சுபன் ஏற்கனவே விளையாட வெளியே சென்றுவிட்டான். தேவன் தனியே இருந்தான்.

4

தேவன் கண்ணை மூடியிருந்தான். ஒருவித சோகம் அவன் நெஞ்சத்தை அழுத்தியது. பூப்போன்ற மனதில் அது பாறாங் கல்லாகக் குந்தியது. பின்பு அங்கே பிசாசு வெறிகொண்டு ஆடியது. மெதுவாக அவனை விழுங்கும் விஸ்வரூபம் எடுத்தது. உங்களை விழுங்கி என்னுடல் வளர்ப்பேன் என அது உரத்துக் கூறிய வண்ணம் முன்னேறி வந்தது.

எத்தனை இன்பத்தையும் உரிமையையும் இழந்து விட்டோம்?

பிசாசு மீண்டும் முன்னேறி வந்தது. நவீன சிறைகளில் அடைக்கப்படும்போதுதான், இளமையில் இறக்கை அடித்த அந்த இன்பத் தீவின் ஞாபகம் மீண்டும் மீண்டும் வருகிறது. வீடு, வேலையெனச் செக்கு மாடாகிவிட்ட வாழ்க்கை இது. இன்னும் சிலகாலங்களில் ஒருவித நாடாவை ஒட்டி ஒவ்வொரு மனிதனும் எங்கே எல்லாம் அசைகிறான் என்பதை அவதானிக்கப் போகிறார்கள். அவர்கள் தரும் பணத்திற்கு ஆசைப்பட்டு, விட்டில் பூச்சிகளாய் நவீன சிறைக்குள் அடைந்து கொண்டது பரிதாபம். அந்தப் பரிதாபம் அவனை எட்டி எட்டி உதைத்தது. வேதனை கொண்ட மனசு வீறு கொண்டு ஓடியது. அந்தோ புன்னாலைப் பாலத்தில் நின்று அது அந்தக் கடல் சுவாசத்தில் தனது சோகத்தைக் கரைக்க முயன்றது. சுவாசம் நிறைய இதமான உப்புக்காற்றை அது இழுத்து நிம்மதியாக விட்டது. இன்னும் இதயம் அறுந்து விழுவதான உணர்வு அடங்காத தவனம் தொடர்ந்தது. நாம் இழந்துவிட்ட பூமியா இது? துறந்துவிட்ட வாழ்க்கையா இது? குரங்கின் கையில்

அகப்பட்ட குருவிக்கூடாய், பிய்த்து எறியப்பட்ட பதைபதைப் பில், திசைமாறிச் சென்று விட்ட ஏக்கமா இது? எம்மையே நாம் இழந்த தடுமாற்றமா இது? அவன் மனம் நிலை கொள்ளாது தவித்தது.

அன்று சனிக்கிழமை. தேவனின் அப்பா மாடு, நாய் குளிப்பாட்டுவதற்கு மேற்குக் கடலுக்குச் சென்றுவிட்டார். அவர் மாலைப் பொழுதிலேயே மாடு குளிப்பாட்டுவது வழக்கம். செல்லம்மா மாமியின் அமுதன் சைக்கிளில் வந்தான். அவன் பொன்னாலைக்கு மணலைமீன் வாங்குவதற்குப் புறப்பட்டி ருந்தான்.

பொன்னாலைக்குப் போவதென்றால் தேவனின் அம்மா விடமும் வந்துவிட்டுத்தான் அவன் புறப்படுவான்.

‘ணோய்... தேவியக்கா.... நான் மணலை வேண்டப் புன்னா லைக்குப் போறன். உங்களுக்கும் எதும் வேண்டியாறதே?’

படலையில் நின்றபடி சாச் சொல்லுவது போல் கத்தினான் அமுதன். தேவனின் அம்மாவுக்கும் குறைந்த ஸ்தாயி கிடை யாது. அவவும் கத்தியவண்ணம் படலைக்குப் போனா.

‘டே, எங்களுக்கும் ஒரு ஐஞ்சாறு ரூபாய்க்கு மணலையும், மிச்சத்துக்கு நண்டும் பாத்து வேண்டிக் கொண்டு வாவேன்ரா.’

‘அதுக்கென்னணை.’

‘இந்தா, பத்துரூபா இருக்குது. ’

தேவனின் அம்மா காசைக் குடுக்கத் தேவன் போய் அமுதனின் சைக்கிளில் ஏறி அமர்ந்து கொண்டான்.

‘அப்ப தேவனும் வாறியே?’ என்றான் அமுதன் தேவனைப் பார்த்து.

‘ஓ, என்ன நீ கூட்டிக்கொண்டுதான் போகோணும். இல்லாட்டி நான் சைக்கிள விட்டு இறங்க மாட்டன்.’ தேவன் அடம் பிடிக்கத் தொடங்கினான்.

‘டே கொப்பர் அறிஞ்சா தோலை உரிச்சுப் போடுவாரெடா’ என்றா தேவனின் அம்மா.

'அவர் நெடுகச் செய்யிறதுதானே,' தேவன் எதிர்த்துப் பதில் சொன்னான்.

'அமுதா, இவனக் கவனமாகக் கூட்டிக்கொண்டு போட்டு வா. என்ன? சரியேடா?'

'சரியக்கா,' என்றான் அமுதன். தேவனின் அம்மாவிற்கு சாதுவான கலக்கம். சண்முகம் வாத்தியாருக்கு இதெல்லாம் பிடிக்காது என்பது நன்கு தெரியும். ஆனாலும் 'பெடியனைப் பெட்டை போல் பொத்திப் பொத்தி வளர்க்கேலுமே' என மனதிற்குள் எண்ணிக் கொண்டா.

தலைமயிர் காற்றில் பின்புறம் பறக்க, எதிர்க்காற்றை ஊடறுத்து சைக்கிளில் செல்வது தேவனுக்கு தேனாய் இனிக்கும். தெருவில் பஸ், சைக்கிள், ஓரிரு கார், மனிதர்கள் எனப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் புதினமாய் இருந்தது. அமுதன் சைக்கிளை சின்னாலடி, வேம்படி, அதன்பின்பு மணற்காட்டு அம்மன் கோயில் ஒழுங்கை என ஓட்டினான். தேவன் இதற்கு முன்பு போயிராத குச்சு ஒழுங்கை வழியாகத் தபாற்கந்தோருக்கு அருகாமையில் அமுதன் சைக்கிளோடு மிதந்தான். தேவனுக்கு அமுதன் ஆலடியால் வராததில் ஒருவித கவலை. இன்னும் நிறைய மனிதர்களைப் பார்க்க முடியவில்லையே என்கின்ற தணியாத ஏக்கம் அவனைக் குடைந்தது. அமுதன் சைக்கிளை உழக்கிக் கொண்டு சக்கலாவோடை, புதுரோட்டு, வலந்தலை என்கின்ற இடங்களைக் கடந்து பொன்னாலைப் பாலம் நோக்கி அருக அருக, உப்புக் கடலின் வாசமும், கடலைத் தழுவி வந்த குளிர்காற்றும் இதம் தந்து தாலாட்டியது. அது தேவனுக்கு சற்று கண்ணை மயக்குவது போல இருந்தது.

தேவனுக்கு எல்லாமே பரவசம் அளித்தது. வற்றுக் கடலைப் பார்த்தே தேவன் பிரமித்துப் போனான். அப்பா ஒவ்வொரு கிழமையும் கடலுக்கு நாய், மாடு என்பவற்றைக் குளிப்பாட்டக் கொண்டு செல்வார். தன்னை மாத்திரம் அழைத்துச் செல்வதில்லை. அது அவனுக்குப் பெரும் குறையாக இருந்தது. சைக்கிள் பொன்னாலைப் பாலத்தில் ஏறியது. உப்புக் காற்று மேலும் மேலும் தாலாட்டி ஒருவித கிளுகிளுப்பை

தேவனுக்குத் தந்தது. தேவன் பாலத்தின் மைல்கற்களின் எண்களை எண்ணத் தொடங்கினான். எதிரே லைன் பஸ் வந்துகொண்டு இருந்தது. அமுதன் சைக்கிளை கரையோர மாகச் செலுத்தினான். ஒரு பஸ் போகுமளவுக்குத்தான் பாலத்தில் இடம் இருந்தது. வெள்ளைக்காரன் கட்டிய பாலமாம் இது. காலம் மாறினாலும் கட்டிய கோலம் நிரந்தரமாக ஆக்கப் பட்ட பாக்கியம் அதற்குக் கிடைத்திருந்தது. இந்தப் பாலத்தில் பஸ் மோதி பலர் இறந்த கதைகள் ஊருக்குள் உலாவும் பயம் எல்லோரிடமும் இருந்தது. தேவனுக்கும் மனதிற்குள் சிறு பயமாக இருந்தது. சைக்கிளின் வேகம் அமுதனின் மனதை அப்பட்ட மாகக் காட்டியது. இருந்தாலும் அமுதன் சைக்கிளை உழக்கினான். பஸ் சுருக்கென விலத்தி எதிர்த்திசையில் விரைவாகச் சென்றது. அமுதனின் ஓட்டத்தில் மீண்டும் நிதானம் புகுந்து கொண்டது. அமுதன் விரைவாக உழக்கினான். கல்லுண்டாய் வெளியில் வேறு ஒரு பஸ் வந்து கொண்டு இருந்தது. அமுதன் இன்னும் விரைவாக உழக்கினான். அந்த பஸ் பாலத்தில் ஏறுவதற்கு முன் பொன்னாலைச் சந்திக்குச் சென்றுவிடவேண்டும் என்கின்ற அவசரம் அவன் ஓட்டத்தில் இருந்தது. அவன் முயற்சி திருவினை யாகியது. பஸ் பாலத்தை அண்டும்முன் பொன்னாலைச் சந்தியை அடைந்த சந்தோசத்தில் அவன் விசில் அடித்தான்.

சந்தியில் மீன் வியாபாரம் சூடு பிடித்திருந்தது. மணலை மீனும் சிறு நண்டும் இந்தத் தப்புக் கடலின் விசேடமான அறுவடை. அமுதன் இறங்கி ஒரு மீன்காரிக்குப் பக்கத்தில் போய்க் குந்தி இருந்துகொண்டான். மீன்காரி அவனை விநோத மாகப் பார்த்தாள். குந்தியிருந்து பேரம் பேசுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. 'உந்த முறைப்பை விட்டிட்டு மீனைக்காட்டு' எனக் கூறிய அமுதன் தொடர்ந்து மீனையும் நண்டுகளையும் புரட்டிப் பார்க்கலானான். சில நாய்கள் கழிவு மீன் தின்பதற்காய் ஆவலாய் காத்திருந்தன. தேவனுக்கு எல்லாம் வேடிக்கையாய் இருந்தது. மேல் சில்லிட கடல்காற்று மீண்டும் மீண்டும் தாலாட்டியது அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. தேவன் கழிவு மீனுக்குக் காத்திருக்கும் நாய்களை வேடிக்கை பார்த்தான். அமுதன் தொடர்ந்தும் மீன்காரியோடு பேரம் பேசிக்கொண்டிருந் தான். அமுதன் மும்முரமாக மீன்காரியோடு பேசிக்கொண்டு

இருந்ததில், தேவன் என்ன செய்கிறான் என்பதைக் கவனிக்க வில்லை. ஒரு மீன்காரி கழிவு மீன் ஒன்றைத் தூக்கி எறிந்தாள். ஒரு நாய் கவ்வியவண்ணம் ஓட மற்ற நாய்கள் அந்த நாயை விட்டுக் கலைத்துக் கொண்டு ஓடின. தேவன் இன்னும் அருகே சென்று அதை வேடிக்கைப் பார்த்தான். மீண்டும் ஒரு கழிவு மீனை ஒரு மீன்காரி தூக்கி எறிந்தாள். மீன் தேவனின் காலடியில் வந்து விழுந்தது. தேவன் திடுக்கிட்டுப் போனான். நாய்கள் பாய்ந்தன. என்ன நடந்தது என்பதை அறியமுன் காலில் இருந்து இரத்தம் வருவதைத் தேவன் அவதானித்தான். அதைப் பார்த்த தேவன் குழந்தையாகத் தேம்பத் துவங்கினான்.

அமுதனுக்கு அவளைத் தொடுவானேன் கவலைப்படுவா னேன் என்றாகி விட்டது. தன்னிடம் இருந்த கைக்குட்டையால் தேவனின் காலில் கட்டிவிட்டு வேகமாக சைக்கிளை உழக்கத் தொடங்கினான். தேவனிடம் இருந்து தேம்பல் மாத்திரமே வந்துகொண்டு இருந்தது. உப்புக் காற்றின் சிலிர்ப்பில்கூட இருவருக்கும் இப்போது வியர்த்தது. தேவனுக்கு அப்பாவை எண்ணும்போது குலை நடுக்கம் பிடித்துக் கொண்டது.

அமுதனும் தேவனும் சைக்கிளில் பாலத்தைப் பின்தள்ளி ஊருக்குள் பிரவேசித்தனர். வலந்தலை ஆஸ்பத்திரியில் நின்று மினக்கெட அமுதனுக்கு மனது ஒப்புக்கொள்ளவில்லை. அவன் சைக்கிளை டிஸ்பென்சரி ஒழுங்கைக்குள் திருப்பினான்.

தேவனின் அம்மா படலையில் காவல் இருந்தா. அமுதனையும் தேவனையும் கண்டவுடன் எதுவும் புரியாதவராகச் சிரித்தா. தேவனின் காலில் கட்டியிருப்பதைப் பார்த்ததும் அவவின் முகம் பேயறைந்து போல் மாறிற்று. அமுதன் மெதுவாக விசயத்தைக் கூறினான்.

'எணேய்... அவன் நாய் வேடிக்கை பாத்துக்கொண்டு நிண்டவன். அந்த மீன்காரி கழிவு மீனத்தூக்கி இவன்ர காலுக்க எறிஞ்சு போட்டாள். அதில ஒரு நாய் பாஞ்சு இவனக் கடிச்சுப் போட்டுதணே.'

'ஏடக் கடவுளே, இதை அவரறிஞ்சா? '

'நான் டிஸ்பென்சரிக்கு கூட்டிக்கொண்டே மருந்தும் கட்டி ஊசியும் போட்டனான். நீங்க அப்போவிட்ட போய் மிச்சத்த நாளைக்கு கேளுங்கோ.'

தேவனின் அம்மா மிகவும் யோசிக்கலானார். அமுதனிடம் மீனை வேண்டிய வண்ணம் தேவனையும் அணைத்துக்கொண்டு உள்ளே சென்றா. பின்பு தேவனுக்கு சாறம் ஒன்றை மடித்துக் கட்டிவிட்டா. அம்மாவின் தந்திரம் அவனுக்குப் புரிந்தது. ஆனால் எவ்வளவு நேரத்திற்கு? மனதுக்குள் திக்கு திக்கு என அடித்துக் கொண்டு இருந்தது.

சிறிது நேரத்தில் படலை கிறீச்சிட்டது. அப்பா வருகிறார் என்பதைப் புரிந்து கொண்ட தேவன் கடுமையாகப் படிப்பதாகப் பாசாங்கு காட்டிய வண்ணம் இருந்தான். தேவனின் அம்மா வேண்டி வந்த மீன், நண்டு, மரக்கறி எல்லாற்றையும் போட்டுக் கூழ் ஆக்கிக்கொண்டு இருந்தா. கூழ்வாசம் மெதுவாக அடுப்படியை விட்டு நகர்ந்து வர, தேவனுக்கு சமையல் அறைக்குச் செல்ல வேண்டும்போல் இருந்தது. அப்படி அங்கே சென்றால், 'சமையல் அறையில் உனக்கு என்னடா வேலை' என அப்பா கேட்கலாம். அந்தக் காரணத்திற்காய் அடிவிழுந்தாலும் விழலாம் என்கின்ற பயத்தில் தேவன் அசையாது இருந்தான். அவன் தொடர்ந்தும் கடுமையாகப் படிப்பதுபோல பாசாங்கு காட்டினான். தேவனின் அப்பா . மாட்டைக் கட்டிவிட்டு, கிணற்றிற்குச் சென்று, மேலில் இருந்த உப்பைக் கழுவிவிட்டு உள்ளே வந்தார். அப்பாவுக்கு பசியாய் இருக்க வேண்டும். அவர் உடுப்பு மாற்றிக்கொண்டு சமையல் அறைக்குச் சென்றார். அதைப் பார்த்த தேவன் மெதுவாக எழுந்து தானும் செல்ல முயன்றான். கால் சாதுவாக வலித்தது. மெதுவாகக் கெந்தியவன், அப்பா பார்த்தால் கண்டுபிடித்துவிடுவார் என்னும் பயத்தில் நோக நோக காலை ஊன்றி நடந்தான். இருட்டி விட்டதால் அன்று ஓலை வெட்டிவந்து அதில் பிளாக்கோலி கூழ் குடிப்பதற்கு முடியவில்லை. மத்தியானம் காய்ச்சி இருந்தால் அப்படித்தான் தேவன் குடித்திருப்பான்.

இன்று தேவனின் அம்மா பிளேற்றில் கூழை வார்த்து அப்பாவிடம் கொடுத்தா. தேவன் மெதுவாக அம்மாவின்

பக்கத்தில் போய் இருக்க, தேவனுக்கும் ஒரு பிளேற்றில் கூழ் விட்டுக் கொடுத்தா.

அம்மாவும் கூழ் குடிக்கத் தொடங்க, ஊர் விசயம் எல்லாம் நண்டோடும் மீனோடும் மெல்லப்படலாயிற்று.

'கட்டுமரம் வெச்சியிருந்தவனெல்லாம் இப்ப சீநோர் படகுகள் வாங்கி கடற்கரையின்ர கோலமே மாறிப் போச்சுது' என்றார் தேவனின் அப்பா.

'சீநோர் இங்க வந்தாப்பிறகு ஓரளவு முன்னேற்றந்தான். ஆனா பெண்டுகள்தான் திமிர் பிடிச்சுப்போய் மீனைச் சங்கானைக்குக் கொண்டு ஓடுறாளவ. '

'நீங்கள் பிரட்டிப் பிரட்டிப் பாப்பியள்! நல்ல விலை குடுக்க மனம் வராது. அதுதான் அவளவை அங்க ஓடுறாளவ. அதோட முன்னையவிட நிறைய மீன் பிடிபடுகுது. அவ்வளவத்தையும் ஊருக்க விக்க முடியுமே? ஒவ்வொரு கோயிலா இங்க கொடியேறும். அதுதான் சாட்டு எண்டு பெண்டுகள் எல்லாம் பிரால் சட்டிய கழுவிக் கவுட்டுப் போடுவியள். அப்ப அவளவை கருவாடு போட்டுவைச்சு காத்துக்கொண்டே இருப்பாளவ. '

'அதுவும் உண்மைதான்.'

'இது எங்க ... அமுதன் போனவனே?'

'ஓ ...'

'அவன் பெண்டுகளாட்டம் மீன்காரியளோட பேரம் பேசுறதில கெட்டிக்காரன். அந்த வாலாயம் எங்களுக்கு சரிப்பட்டு வராது.'

' ம் ....அவன் கெட்டிக்காரன்தான் .... ஆனா ....'

'என்ன ஆனா?'

'இல்ல ... ஒண்டும் இல்ல.'

தேவனின் அம்மா அவசரமாக சமாளித்தா.

'ஏன் இவனும் அவனோட போனவனே?'

அப்பா திடீரெனக் குண்டைத் தூக்கிப்போட, தேவன் அதிர்ந்து போனான். தேவனுக்கு என்ன செய்வது எனப் புரியாது அப்பாவைப் பார்த்து பரக்கப் பரக்க விழித்தான்.

'என்னடா முழிக்கிறா? நீயும் அவனோட போனனீயே?'

'ம் ...'

'ஏன் ஊமாண்டியாட்டம் இருக்கிறாய்? உனக்கு பாடம் படிப்பு ஒண்டும் இல்லையே?'

'சும்மா விடுங்கோ அவனை இப்ப. மீன் வேண்டப் போன இடத்தில பிள்ளைக்கு நாய் கடிச்சுப் போட்டுது.'

'என்ன?'

தேவனின் அப்பா இருக்கையில் இருந்து துள்ளி எழுந்தார்.

'பொறுமையா இருங்கப்பா. அவன் அமுதன் மீன்காரி யோட பேரம் பேசிக்கொண்டிருக்க, ஆரோ மீன்காரி கழிவு மீனைத் தூக்கி எறிஞ்சவளாம். அது பிள்ளையின்ர காலடியில விழுந்து போச்சுது. அவன் என்ன செய்வான்? நாய் பாஞ்சு கடிச்சு போட்டுது. அமுதன் கூட்டிக் கொண்டுபோய் மருந்து கட்டிக் கொண்டு வந்திருக்கிறான். அவனை இண்டைக்கு சும்மா இருக்க விடுங்கோ உங்களுக்கு புண்ணியமாப் போகும்.'

'இவருக்கு என்ன உலாத்து வேண்டிக்கிடக்குது? தெரியா மல்தான் கேட்கிறன்? உலாத்தால வந்த வினைதான உது. என்னடா?'

தேவனின் அப்பா பல்லை நறுமியவண்ணம் திடீரெனப் பாய்ந்து தேவனின் தலையில் குட்டினார். தேவனுக்கு மண்டையே பிளந்ததான வேதனை. கண்களில் மடை திறந்தது. தேவன் தேம்பத் துவங்கினான்.

மீண்டும் குட்டு விழாமல் தேவனின் அம்மா அவனைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டா. தேவனின் அம்மா வுக்கு கோபம் வந்திருக்கவேண்டும்.

'உங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் பாஞ்சு பாஞ்சு அடிக் கிறதுதான். பிள்ளை இதை வேணும் எண்டே செய்தவன். இப்பிடி பிள்ளைய அடிச்சா அவன் ஏம்பலிச்சல்லே போவான்.'

' ம்.... நீ குடங்கேக்க வைச்சு பாலக் குடு.'

'நான் அவனப் பாக்கிறன்... நீங்க போய் படுங்கோ.'

'சரி, என்னவோ செய்யுங்கோ.'

தேவனின் அப்பா கோபமாக வெளியே சென்றார்.

தேவனுக்கு மண்டை பிளந்ததான வேதனை. அவன் அம்மாவின் மடியில் முகம் புதைத்து தேம்பிக் கொண்டிருந்தான்.

5

மத்தியானச் சாப்பாட்டை சோபாவில் இருந்தவண்ணமே தேவன் முடித்துக் கொண்டான். மனசும் அதன் சுழற்சியும் எந்த வித கட்டுப்பாட்டையும் ஏற்கமாட்டேன் எனத் திமிறியது.

தேவனுக்கு அப்பா அடிக்கின்றபோதெல்லாம் அவர் தான் செய்வதை நியாயப்படுத்தியே எண்ணிக் கொள்வார். தேவன் நன்கு அநுபவப்பட்டிருந்தான். அவர் ஒரு நாள்கூட அதற்காக வருத்தப்பட்டுத் தேவனிடம் கதைத்ததாக அவனுக்கு நினைவு இல்லை.

அப்பா அன்று முதல் முதலாக பாடசாலைக்குச் செல்லும் நேரத்தில் பிந்திப் போனார். அந்தத் தவிப்பு அவரது அலைவில் நன்கு புரிந்தது. அன்று தேவனை முதல் முதல் அரிவரியில் சேர்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த நேரம் பிந்துதலை ஏற்றுக் கொண்டார்.

தேவன் முதலில் இராமேஸ்வரி ரீச்சரிடம் அரிவரி தொடங்க இருந்தான். அன்று அப்பாவோடு சென்று பாட சாலையின் படலையைத் திறக்கவே இராமேஸ்வரி ரீச்சர் ஓடி வந்து தேவனின் அப்பாவை வரவேற்றார். தேவனைச் சைக்கிளில்

இருந்து இறக்கிய இராமேஸ்வரி ரீச்சர் தன்னோடு அவனை இறுக அணைத்துக் கொண்டார். இராமேஸ்வரி ரீச்சரும் அப்பாவும் மிகவும் சந்தோசமாகக் கலகலப்பாக உரையாடியதைத் தேவன் அவதானித்தான். அப்பா இப்படி அம்மாவோடு கதைப் பதைத் தேவன் கண்டதில்லை. ஆனாலும் அம்மாவோடு நிற்பது போன்று நெருக்கமாக அப்பா யாருடனும் நிற்பதில்லை. அப்பா அதை இங்கும் கடைப்பிடிப்பதாகவே தேவன் எண்ணிக் கொண்டான். அப்பா சிறிது நேரத்தில் இராமேஸ்வரி ரீச்சரிடம் இருந்து விடை பெற்றுச் சென்றார். தேவனின் அப்பா போவதையே இராமேஸ்வரி ரீச்சர் சிறிதுநேரம் ஏக்கத்தோடு பார்த்த வண்ணம் நின்று கொண்டிருப்பதாய் அவனுக்குத் தோன்றியது.

அப்படி அப்பாவில் எதை இந்த இராமேஸ்வரி ரீச்சர் கண்டு விட்டா? ஏன் இராமேஸ்வரி ரீச்சருக்கு ஒருவித ஏக்கம் கலந்த ஈர்ப்பு அப்பாமீது ஏற்பட்டது? தேவனுக்கு எதுவும் புரியவில்லை.

முதல் நாள் பாடசாலை அநுபவம் ஆயிரம் வண்ணாத்திப் பூச்சிகளை அவனில் ஊரவிட்டது போன்ற ஒருவித கிளர்ச்சியை அவனுக்குத் தந்தது. இராமேஸ்வரி ரீச்சர் எல்லோருக்கும் சீமேந்துக் கட்டில் மண் போட்டு, அதில் கைவிரலை அழுத்தி அனா ஆவன்னா எழுதிக் காட்டினார்.

தேவனுக்குத் தன்னை இராமேஸ்வரி ரீச்சர் இடைக் கிடையே ஓரக்கண்ணால் பார்ப்பதாகத் தோன்றியது. தேவனின் முறை வந்தபோது, 'வா ராசா' என இழுத்துத் தனது மடியில் இருத்திக் கொண்டார். இராமேஸ்வரி ரீச்சர் தேவனின் தலையை முதலில் தடவி விட்டார். பின்பு கையைப் பிடித்து சீமேந்துத் தரையில் அனா ஆவன்னா எழுதிக் காட்டினார்.

விரல் அனல் பற்றி எரிவதான அந்தரமாய் இருந்தது. அவனுக்கு இராமேஸ்வரி ரீச்சரின் அணைப்பு மூச்சை இறுக்கிய தாகத் தோன்றியது. அவன் இடறிவிட்டு ஓடமுடியாத அவஸ்தை யில் நெளிந்தான்.

'எழுது வடிவா' என்று கூறிய இராமேஸ்வரி ரீச்சர் மேலும் மேலும் வலுவாக விரலைத் தரையில் அழுத்தித் தேய்த்து எழுதினார். தேவனுக்கு இப்போது அதிகமாகவே விரல் எரிந்தது. பொறுக்க முடியாதவனாய், 'ரீச்சர் எரியுது' என்றான்.

'ஒழுங்காகப் படிக்காட்டா கொப்பர் எலும்ப முறிப்பார் தெரியுமே? ஒழுங்கா எழுது இப்ப. அதுதான் உனக்கு நல்லது' என்றார் இராமேஸ்வரி ரீச்சர். அவர் தொனியில் அதிகாரம் இருந்தது.

'ம்...' தேவன் முனங்கினான். அவனுக்கு எப்போது இதிலிருந்து விடுபட்டு ஓடமுடியும் என்பது புரியவில்லை. நல்லவேளையாக இராமேஸ்வரி ரீச்சருக்கு தான் மாத்திரம் மாணவன் இல்லை என்பது அவனுக்கு ஒருவித தற்காலிக ஆறுதலைத் தந்தது.

இடைவேளை விடப்பட்டது. அந்த பாலர் பாடசாலை யில் குறுகிய இடம் ஒன்றே விளையாடுவதற்கு இருந்தது. தேவன் வெளியே சென்றான். சில சிறுவர்களோடு விரைவாகச் சிநேகிதமாகிக் கொண்டான்.

திடீரென சிவராசன் எங்கோ பர்ர்த்தவண்ணம் வந்து தேவன் மீது மோதினான். தேவன் மெதுவாகக் கையைக் கொடுத்து அவனைத் தள்ளிவிட்டு, 'பார்த்து வரவேண்டியதுதானே?' என்றான்.

'ஏ, நீ பெரிய ராசாவே? ஏலும் எண்டா தொடடா பாப்பம்' என்றான் அவன்.

பின்பு நெஞ்சை நிமிர்த்தியவண்ணம் தேவனை நெருங்கி வந்தான். தேவன் சற்றுப் பின்வாங்கினான்.

'இஞ்ச அடிபடக்கூடாது. நான் அப்பிடி அடிபடவும் மாட்டன்,' என்றான் தேவன்.

'நீ பெட்டையன்ரா!' சிவராசன் கேலி செய்தான். அவனோடு இன்னும் சிலரும் சேர்ந்துகொண்டார்கள். அவர்களும், 'டே, இவன் பெட்டையன்தான்ரா...' எனக் கேலி செய்தனர்.

'அடியடா தேவன். இவன் சும்மா வாய் காட்டுறான். நீ தொட்டா பீச்சிப் போடுவான். அடியடா அவனுக்கு ... '

தேவனுக்கு இதில் இருந்து பின்வாங்குவது அவமானம் போல் இருந்தது. தேவன் துணிவை வரவழைத்துக் கொண்டு

சிவராசனை நெருங்கினான். இரு பகுதியும் ஒரு பகுதிக்கு எதிராக மறுபகுதி என்கின்ற அடிப்படையில் கூச்சலிட்டார்கள். தேவனுக்கு மேலும் உசார் உண்டாகியது. அவன் மேலும் நெருங்கினான்.

திடீரென மணியடித்தது.

'அங்க என்ன கூட்டம்?'

இராமேஸ்வரி ரீச்சர் சத்தமாகக் கேட்டார். அவர் கேட்ட விதத்தில் இருந்து சண்டையைப் பார்த்து விட்டார் என்கின்ற பயம் தேவனைக் கவ்விக் கொண்டது. தேவன் வகுப்பிற்குள் சென்றான். இராமேஸ்வரி ரீச்சரின் பார்வையில் நெருப்பு பறப்பதான உணர்வு. 'நான் என்ன செய்தேன் ? சிவராசன்தானே வலியச் சண்டைக்குக் கூப்பிட்டான்' எனத் தேவன் எண்ணிக் கொண்டான். பின்பு தேவன் தலையைக் குனிந்தவண்ணம் இருந்தான். இராமேஸ்வரி ரீச்சரைப் பார்க்கும் துணிவு அவனுக்கு அப்போது இருக்கவில்லை.

சிறிது நேரத்தில் சிவராசனைத் திரும்பிப் பார்த்தபோது அவன் கோபமாக இருந்தான். பென்சில் கூரால் குத்துவேன் என்பதுபோல சைகை காட்டினான். தேவன் அவனைப் பார்ப்பதை விட்டுவிட்டு இராமேஸ்வரி ரீச்சர் சொல்லுவதை கவனிக்கத் தொடங்கினான்.

அன்று நேசரி முடிந்து தேவன் வீட்டுக்கு வந்துகொண்டு இருந்தான். அவன் மற்றைய சிறுவர்களோடு சேர்ந்து விரைவாக நடந்தான். தேவையில்லாத சச்சரவு வேண்டாம் என்கின்ற எண்ணமே அவன் நினைவு பூராவும் நிறைந்திருந்தது. பிரச்சினைப்படுவது பெரிய விடயம் இல்லை என்றாலும், அப்பாவுக்கு பதில் சொல்வது பெரிய விடயம் என்பதில் அவனுக்கு அநுபவம் உண்டு.

தேவன் விரைவாக நடந்து கொண்டிருந்தான்.

'டே பெட்டை, எங்க ஓடுறா?'

அது சிவராசனின் குரல்தான். தேவனுக்கு தேகம் எல்லாம் அனலாகக் கொதித்தது.

பக்கத்தில் வந்த ராசன், 'அவன் உன்னத்தான் கூப்பிடுறான்' என்றான்.

'தெரியும்.'

'அப்ப அவன்ர மூஞ்சைய பேத்து விடு... '

'அது பெரிய காரியம் இல்ல.... அப்பாவுப் பற்றி உனக்குத் தெரியும்தானே? என்னில பிழை இல்லாட்டியும் எனக்கு அடிப்பாரெடா அவர்,' என்றான் தேவன்.

'எங்கட வீட்டிலயும் அப்பிடித்தான். அப்பா இல்லாத குறைக்கு மாமா போட்டு அடிப்பானடா. ஆனா இதுக்கெல்லாம் பயந்தா இவங்கள் எங்கள குனிய வைச்சுக் குட்டுப் போடுவாங்கள்.'

' டே, பெட்ட நில்லடா. '

சிவராசனின் குரல் மிகவும் அருகில் கேட்டது.

தேவனுக்கு உச்சந்தலை வெடிப்பதான உணர்வு. கோபத்தில் தலை வியர்த்தது. என்றாலும் தொடர்ந்தும் நடந்தான்.

'டே நில்லடா. '

சிவராசன் மிகவும் அருகில் வந்திருந்தான். என்றாலும் தேவன் தொடர்ந்து நடந்தான்.

'நில்லடா நாயே,' கூறியவண்ணம் தேவனின் சட்டையைப் பிடித்தான்.

தேவன் நின்றான். சிவராசனைப் பார்த்து, 'கையை எடு...' என்றான்.

'எடுக்காட்டி?'

'தேவையில்லாமல் நாங்கள் சண்டை பிடிக்கிறத கண்டா வீட்டிலேயும் அடி விழும். சும்மா தேவையில்லாமல் அடி வேண்டுவானேன்? எனக்கும் உனக்கும் என்ன பிரச்சினை? சட்டைய விடு கதைப்பம்.'

அவன் சட்டையை விடவில்லை.

'நீயொரு பயந்தாங்கொள்ளி இல்லையேடா?'

'முதல்ல சட்டைய விடு.'

சிவராசன் விடவில்லை. எட்டி தேவனின் தலையில் குட்டினான்.

தேவனுக்கு அதன்பின்பு என்ன செய்வது என்பது புரிய வில்லை. அழுகை பீறிட்டது.

'நான் என்னடா கேட்டனான் உன்னை? நான் என்னடா கேட்டனான் உன்னை?'

அழுது அழுது கேட்டவண்ணம் சிவராசனின் மூஞ்சைமீது சரமாரியாகக் குத்தினான். சிவராசன் கீழே குந்தினான். தேவனுக்குக் கோபம் அடங்கவில்லை. என்ன செய்கிறான் என்பது புரியவில்லை. சிவராசனின் புத்தகப் பையை உருவினான். அதைத் திறந்து எல்லாவற்றையும் கொட்டினான். உள்ளே கிடந்த சிலேற் விழுந்து பொட்டென உடைந்து தூளாக மரப் பிரேம் அனாதையாகக் கிடந்தது.

சிவராசனுக்கு பொய் மூக்கு உடைந்து இரத்தம் ஓடியது. தேவனுக்கு இன்னும் கோபம் அடங்கவில்லை. மீண்டும் காலால் உதைத்தான். சிவராசன் மூக்கைப் பொத்தியவண்ணம் நிலத்தில் படுத்திருந்தான்.

தேவனின் கையைப்பிடித்து ராசன் இழுத்தான்.

'டே மணியம் மாமா வாறார் ...' என்றான்.

தேவனுக்கு வியர்த்துக் கொட்டியது. புத்தகப் பையை எடுத்துக்கொண்டு விறுவிறுவென சிறிது தூரம் ஓட்டமும் நடையுமாகச் சென்றிருப்பார்கள்...

'டே நில்லுங்கோடா' என மணியம் மாமாவின் குரல் கேட்க, இருவரும் ஓடத் தொடங்கினார்கள். அந்த ஓட்டம் வீடு வீடு வரும் வரை நிற்கவில்லை.

அடுத்தநாள் சிவராசன் அவனது அம்மாவோடு நேசரிக்கு வந்திருந்தான். தேவனுக்கு சிவராசன் அம்மாவுடன் வந்திருப்பதைப் பார்த்தவுடனேயே வியர்த்துக் கொட்டியது.

இராமேஸ்வரி ரீச்சர் தேவனையும் ராசனையும் அலுவலகத்திற்கு வருமாறு அழைத்திருந்தார். இருவருக்கும் மயக்கம் வரும் போல் இருந்தது. கைகால் எல்லாம் உதறல் கண்டிருந்தது.

தேவன் முன்னே சென்றான். ராசன் அவன் பின்னாற் சென்றான்.

உள்ளே சிவராசனின் தாய் கதிரையில் அமர்ந்து இருக்க அருகில் நல்ல பிள்ளையாக சிவராசன் நின்றிருந்தான். மூக்கு வீங்கி இருந்தது. அவனது பார்வையில் இப்போதும் வன்மமும் பயமும் இருப்பதாகத் தோன்றியது. தானே சண்டைக்கு இழுத்து விட்டு, இப்போது தங்களையே மாட்டிவிட்டான் என்பது தேவனுக்குப் புரிந்தது. தேவன் இனி இதற்கு விமோசனம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

இராமேஸ்வரி ரீச்சர் இவர்களைப் . பார்த்த பார்வை கோபத்தில் பாயத் தயாராகும் அரிமாவைத் தேவனுக்குக் கற்பனையில் கொண்டு வந்து நிறுத்தியது. இந்தச் சிங்கம் இனி குதறித் தள்ளப் போகின்றது என்கின்ற பயத்தில் அவனுக்கு நடுக்கமெடுத்திருந்தது.

இராமேஸ்வரி ரீச்சர் இவர்களைக் கண்டவுடன், 'ம் வாங்கோ... இப்பவே அப்பா அம்மாவின்ர பெயரக் கெடுக்கத் தொடங்கீட்டியள். ஏன் சும்மா போன சிவராசன இப்பிடி அடிச்சனீங்கள்? அவன்ர மூக்கு இப்பிடி உடைச்சு வைக்கிற அளவுக்கு பெரியாக்களாகிட்டியள்! என்ன?'

'நாங்க சும்மா அடிக்கேல்ல...'

'ஓ அப்ப காரணத்தோட அடிச்சியளாக்கும்?'

இராமேஸ்வரி ரீச்சரின் குரல் இளக்காரம் கலந்து சூடாக வந்தது.

'நாங்கள் பேசாம முன்னுக்கு போய்க்கொண்டு இருந்த நாங்கள். சிவராசன்தான் ஓடிவந்து என்ர சட்டையைப் பிடிச்சு அடிக்க வந்தவன். நான் சண்டை வேண்டாம் எண்டு மன்றா டினனான். அவன் கேக்கேல்ல. என்ர சட்டைய பிடிச்ச வண்ணமே 'பெட்ட பயலே, பெட்ட பயலே, துணிவிருந்தா தொடடா பாப்பம்' எண்டவன்.'

'ராசா... என்னடா தேவன் சொல்லுறது உண்மையே?'

'ஓம் ரீச்சர். சிவராசன்தான் வீண் சண்டைக்கு வந்தவன். நாங்கள் முன்னுக்கே போயிட்டம். இவன் பின்னால ஓடிவந்து 'பெட்ட பயலே, பெட்ட பயலே' எண்டு கத்தி தேவனைச் சண்டைக்கு இழுத்தவன்.'

'இல்ல, இதுகள் பொய் சொல்லுதுகள். என்ர பிள்ளை அப்பிடி எல்லாம் செய்ய மாட்டான்,' என சிவராசனின் அம்மா இடையில் புகுந்தார்.

' நீங்க கொஞ்சம் பேசாம இருங்க. நான் விசாரிக்கிறன்.'

' சரி.'

'என்ன சொல்லுறாய் சிவராசன். நீதானே வகுப்பில இருந்து கடைசியா போனனீ?'

'இல்ல. நான் முன்னுக்கே போயிட்டன்.'

'பொய் சொல்லாத. நான் படலையில நிண்டு பார்த்தனான். எனக்கு நல்ல ஞாபகம் இருக்குது. நீ பிந்திதான் போனனீ. அதுக்கு முதலே தேவனும் ராசனும் போயிட்டினம். சொல்லு எது உண்மை?'

அவன் பேசாது நின்றான். இராமேஸ்வரி ரீச்சருக்குக் கோபம் வந்திருக்க வேண்டும்.

'என்ன நான் கேக்கிறன், நீ பேசாமல் நிக்கிறா?' கேள்வி சூடாக வந்தது.

'இல்ல, நான் சண்டைக்கு போகேல்ல.'

அவன் ஏதோ கேள்விக்கு ஏதோ பதில் கூறினான்.

இராமேஸ்வரி ரீச்சர் தேவனையும் ராசனையும் பார்த்து, 'நீங்க போய் வகுப்பில இருங்க' என்றார்.

'என்ன உவங்களுக்கு ஒரு அடிகூட குடுக்காமல் கலைச்சு விடுறீங்கள்?' என சிவராசனின் அம்மா கேட்டார்.

'ஏனம்மா நான் அவங்களுக்கு அடிக்கோணும்? அவங் களில எந்தப் பிழையும் இல்லை. அவங்கள நான் சும்மா வெல்லாம் அடிக்கேலாது.'

'என்ர பிள்ளையப் பற்றி எனக்குத் தெரியும். அவன் இப்பிடி எல்லாம் செய்ய மாட்டான்.'

'நீங்கள் ஒழுங்கா விளங்கிக் கொள்ளாமல் உங்கட மகனையே குட்டிச் சுவராக்கப் போறியள்.'

'என்ன நீ சொல்லுறாய்? என்ர மோன வளர்க்க எனக்குத் தெரியாதே? ம் நல்ல நியாயம் கதைக்கிறாய்? நீயெல்லாம் சட்டம்பியா இருந்து என்னத்தை கிழிக்கப் போறியள்?' எனக் கூறியவண்ணம் கையை மடக்கி நெட்டி முறித்தார்.

'நீங்க இஞ்ச நிண்டு இப்பிடிச் சத்தம் போடக்கூடாது' இராமேஸ்வரி ரீச்சரின் குரலில் அதிகாரமும் கோபமும் ஏறியிருந்தது.

'வாடா இவளும் இவளின்ர படிப்பும்' எனச் சத்தமாகக் கத்திய வண்ணம் சிவராசனையும் இழுத்துக் கொண்டு அவனுடைய அம்மா சென்றார்.

சிவராசனின் தாய் அத்தோடு சமாதானம் அடையவில்லை. அவர் தேவனின் அப்பா பாடம் கற்பிக்கும் பாடசாலையை நோக்கிச் சென்றார்.

தேவனின் அப்பா வீட்டிற்கு வரும்போது அவரது முகம் கோபத்தில் வீங்கி வெடிப்பதான தோற்றத்தில் இருப்பதை அவன் கண்டுகொண்டான். இன்று தேவனுக்கு அடிவேண்டு வதாய் எந்தவித உத்தேசமும் இருக்கவில்லை. தேவன் பாட சாலை உடுப்பொன்றைப் புத்தகப் பையில் எடுத்து அடைத்துக் கொண்டு 'எங்க அவன் தேவன்' என்ற சத்தம் அதிரும்போது பின்பாதையால் வெளியே ஓடிக்கொண்டு இருந்தான்.

தேவன் ஓட்டமும் நடையுமாக பெரியம்மா வீட்டை நோக்கிச் சென்றான். அப்பா பெரியம்மாவுடன் மாத்திரம்தான் எதிர்த்துக் கதைக்க மாட்டார். அது அவனுக்கு நன்கு தெரியும். அவவிடம் சென்று அடைக்கலம் புகுந்தால்தான் அப்பாவிடம் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் எனத் தேவன் முடிவு செய்து கொண்டான்.

பெரியம்மா வீட்டிற்குச் சென்றவுடன் தேவன் அழுது அழுது பெரியம்மாவிடம் எல்லாவற்றையும் கூறினான். பெரியம்மா தன்னோடு அவனை அணைத்துக் கொண்டா. பின்பு கண்ணீரைத் துடைத்துவிட்டா.

'நீ அழாத தேவா. நான் பிள்ளைய வேற பள்ளிக்கூடத் தில் சேர்த்து விடுறன். ம்.... அழாத...' எனக் கூறிய தேவனின் பெரியம்மா பின்பு, 'டே சூட்டி இஞ்சவாடா' எனத் தேவனின் அண்ணாவைக் கூப்பிட்டா.

'என்னம்மா?' என்றவண்ணம் சூட்டி அண்ணன் வந்து நின்றான்.

'சித்தி வீட்ட சைக்கிள்ள போய், தேவன் இஞ்ச நிக்கிறான் எண்டதச் சொல்லிப் போட்டு, ஒரு சோடி கால்சட்டை சேட்டும் வேண்டிக் கொண்டு சுறுக்கா வா.'

'பெரியம்மா, என்னிட்ட கால்சட்டை இருக்குது.'

'ஓ நீ பெரிய சூரன்தான்ரா. எல்லாம் திட்டத்தோடதான் வந்திருக்கிறா... '

'சரி சூட்டி.... தேவன் இஞ்ச நிக்கிறான் எண்டு சொல்லிப் போட்டு ஓடியா.'

'ஓ, அப்பா அடிக்க மாட்டன் எண்டு சத்தியம் செய்தாத்தான் நான் இனி அங்க வருவன் எண்டு அப்பாட்டச் சொல்லு,' என்றான் தேவன் சூட்டியைப் பார்த்து.

'அப்பிடி எல்லாம் சொல்லக்கூடாது தேவன்' என்றா தேவன் பெரியம்மா.

'இல்ல பெரியம்மா... அப்பா ஒவ்வொரு நாளும் அடிக் கிறார். சின்னச் சின்ன விசயத்துக்கெல்லாம் என்னப் போட்டு அடிக்கிறார். இப்பிடி அப்பா அடிச்சா நான் என்ன செய்யிறது?'

'நான் அப்பாவோடு கதைச்சு இனிமேலைக்கு பிள்ளைக்கு அடிக்கக்கூடாது எண்டு சொல்லுறன்... சரியே?'

' சரி பெரியம்மா, நீங்கள் சொன்னா அப்பா கேட்பார்.'

'சரி, சூட்டி நீ போய்ச் சொல்லிப் போட்டு ஓடியா.'

இரண்டு நாள்கள் கழித்து தேவனின் அம்மா பெரியம்மா வீட்டிற்கு வந்தா. தேவனைக் கண்டவுடன் அவ அழத் தொடங்கிவிட்டா. தேவனும் அம்மா அழுவதைப் பார்த்து அழுதான்.

பெரியம்மா தேவனின் அம்மாவைப் பார்த்து பேசத் தொடங்கினா.

'என்ன நீயும் குழந்த மாதிரி அழுகிறாய்? புருசனுக்கு குழந்தப் பிள்ளைய இப்பிடிப் போட்டு அடிக்கக் கூடாது எண்டு சொல்லத் தெரியாதே?'

'அவர் அதைக் கேட்டாத்தானே? மாட்டப் போட்டு அடிக்கிறது போல பிள்ளைய அடிக்கிறார். அடிச்சா மட்டும் பிள்ள படிக்கும் எண்டு யார் கண்டுபிடித்துக் கொடுத்தினமோ? உப்பு பெறாத விசயத்திற்கு எல்லாம் பிள்ளையப் போட்டு அடிச்சால், அவன் பேதலிச்சுப் போவான் எண்டு எனக்கு விளங்குது. ஆனா படிப்பிக்கிற சட்டம்பி அவருக்கு விளங்குதில்லை.'

'நான் அவரோட கதைக்கிறன்' என அதற்கு முற்றுப்புள்ளி வைத்தா தேவனின் பெரியம்மா.

தேவன் இரண்டு நாள்கள் கழித்து வீடு திரும்பி இருந்தான். விறாந்தையில் நின்றிருந்த அப்பாவின் கண்களில் கோபம் தனலாக மின்னுவதாகத் தேவனுக்குத் தோன்றியது. அன்று அப்பா தேவனை அடிக்க வரவில்லை. தேவனுக்கு அது மிகவும் ஆறுதலாக இருந்தது. ஒரு மாற்றம் வீட்டில் நடந்திருப்பதாய் அவனுக்குப் புலனாயிற்று. என்றாலும் அப்பாவை நம்ப முடியாது. எப்போது கை நீட்டுவார் என்பது புரியாது என அவன் உள்மனம் எச்சரித்தது.

சில நாள்களின் பின்பு தேவன் வேறு நேசரி செல்லத் தொடங்கினான். அவனுக்கு அது மிகவும் சந்தோசமாக இருந்தது. அப்பாவோடு பாடசாலைக்குப் போக வேண்டியதில்லை என்பது ஒரு துள்ளலை அவனுள் மிகையாக ஏற்றி இருந்தது.

6

இப்போது சுபனுக்கு ஏதாவது சொன்னால் நிறைய எதிர் வாதம் செய்வான். இங்கு உள்ள பிள்ளைகள் அதிகமாக அப்படித்தான் இருக்கிறார்கள். ஏன் எதற்கு என்கின்ற கேள்வி அவர்கள் வாழ்வோடு ஒன்றிவிட்டது. உண்மையான ஜனநாய கத்தை அநுபவிக்கும் ஒருவித மனோ வளர்ச்சி. அது நன்மையான முன்னேற்றந்தான். அப்பா பிள்ளை என்கின்ற பரிமாணம் நட்பின் அடிப்படையில் அமைவது பிள்ளைகளின் வளர்ச்சிக்கு மிகவும் நன்மை பயக்கும் என்பதை இப்பொழுது தேவன் உணரத் தொடங்கி இருந்தான். அன்று சுபனோடு விளையாடப் போகும் நேரத்தின் அளவு பற்றி அவன் கதைத்துக் கொண்டு இருந்தான். அவர்கள் இருவரும் நேரத்தை நிர்ணயித்த பின்பு சுபன் விளை யாடச் சென்று விட்டான்.

தனிமையில் தேவனுக்கு மீண்டும் அப்பாவின் ஞாபகம் வந்தது. அப்பாவின் கடுகடுப்பு தேவனுக்கு பயத்தையும் கோபத் தையும் ஏககாலத்தில் உண்டு பண்ணியது. பின்பு அது சிறிது சிறிதாகக் கரைந்து சுரணை குறைந்து மரத்துப்போன உணர்வு வளர்ந்தது. எதிர்த்துக் கதைத்து அடிவேண்டுவது தினப்பூசையாகி விட்டதைப் பற்றி இப்போது அவன் கவலைப்படுவதில்லை. அரிதாக அடிவிழுந்திருந்தால் அதைப் பற்றிய பிரமிப்பு மனதில் மண்டிக் கிடந்திருக்கும். நித்தமும் அதை வேண்டும்போது, 'ஓ இதுதான' என்கின்ற தைரியம் மெதுவாக கொம்பு சீவிக் கொண்டு நிமிர்ந்து நிற்கும்.

இன்று நல்ல வாடைக்காற்று வீசிக்கொண்டு இருந்தது. காவோலைகள் எங்கும் கரகரத்துத் தொண்டையைச் சரிசெய்ய முயன்றன. சருகுகள் அள்ளுண்டு பறந்து பறந்து மீண்டும் மீண்டும் மண்ணை நோக்கித் தோல்வியோடு விழுந்தன. மரங்கள் எல்லாம் உருவெறித் தலைவிரித்தாடின. வீட்டு வாசலில் புழுதி புதிதாக வந்து குடியேறியது. முற்றத்தில் கிடந்த வெண்புழுதி அவ்வப்போது காற்றிலே கிளம்பி மீண்டும் வெட்கத்தோடும் தோல்வியோடும் தரை இறங்கியது.

இந்தக் காற்றில் பட்டம் விடவேண்டும் எனத் தேவனுக்கு ஆசையாக இருந்தது. அப்பா என்ன செய்வார் என்கின்ற கேள்வி வந்தது. மிஞ்சிப் போனால் ஒரு கம்பைப் பாழாக்குவார் என்னும் பதிலும் உடனே வந்தது. 'இதற்கெல்லாம் பயந்தால் பட்டம் விடமுடியுமோ?' என எண்ணிய தேவன் தான் இரகசியமாய் கட்டி வைத்திருந்த சாணன் பட்டத்தை எடுத்துக் கொண்டு, மெதுவாக படலை நோக்கிச் சென்றான். நடை பூனை நடையான பக்குவம். அம்மாவைக்கூட அருட்டக்கூடாது என்கின்ற பவ்வியம் அதில் இருந்தது. அன்று ஒருநாள் அப்பா மேசையில் பேர்சை வைத்துவிட்டு, சாப்பாட்டிற்குப் பின்னான கும்பகர்ணத் தூக்கம் போட்டார். அந்தக் கணங்களைப் பயன் படுத்தி திருடிய ஐந்து ரூபாயில், நல்லதொரு நைலோன் நூல் கட்டை வாங்கி வைத்திருந்தான். அதைத் தடவிப்பார்க்க அவனுக்கு கை கூசியது. அதன் வெண் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் எனத் தேவனுக்குத் தோன்றியது.

தெருவில் இறங்கியதும் தேவன் ஓட்டமும் நடையுமாக வயலை நோக்கி பட்டம் விடப் போகும் சந்தோசத்தில் விசில் அடித்த வண்ணம் சென்றான். பாதை போடக் கல்லுக் கொட்டிய வர்கள் தாரை வேறு இடத்தில் விற்று இருக்க வேண்டும். பாதை வெள்ளை வெளேரெனக் கல்லும் பள்ளமுமாகக் கிடந்தது. தேவன் அவசரத்தில் இருந்தான். எடுத்துவைக்கும் அடிகளில் இருந்த அவதானத்தை மறந்து போனான். திடீரென கால்விரல்கள் கல்லுடன் மோதியபோது ஆ... என முழுகினான். இது நல்ல சகுனம் இல்லையே என அவன் முதலில் எண்ணினான். பின்பு அந்த எண்ணத்தைப் புறம் தள்ளினான். பட்டம் விடவேண்டுமே என்கின்ற ஆசை மூர்க்கம் அடையவே கெந்திக் கெந்தி வயலை நோக்கி ஓடினான். ஒழுங்கைகள் இன்று மிகவும் நீண்டு செல்வதான ஒருவித சலிப்பு அவனுக்கு உண்டாகியது. தேவன் பிள்ளையார் கோவில் தாண்டி, பிரதான சாலையைக் கடந்து மாவெட்டைக்குள் இறங்கினான். வயலில் பலர் ஏற்கனவே பட்டம் ஏற்றிவிட்டார்கள். தேவனுக்கு தான் பிந்திவிட்டதான ஓர் உணர்வு. தேவன் பரபரப்போடு சுற்றி வைத்திருந்த வாலை எடுத்து சாணன் பட்டத்தில் கட்டினான். நூலின் தலைப்பைக் கண்டுபிடிக்க முடியாத அவசரத்தில் கை வியர்த்தது. பின்பு

ஒருவாறு கண்டுபிடித்து முச்சையில் அதைக் கட்டி, கட்டு வலுவாக இருக்கிறதா என உறுதிப் படுத்திக்கொண்டான்.

கூலிவேலை செய்யும் நாகம்மாவின் மகன் வந்துகொண்டு இருந்தான். அவனுக்கும் சண்முகன் என்பதுதான் பெயர். அவன் ஆட்டுக் குட்டி ஒன்றை இழுத்துக் கொண்டு வந்தான். தேவன் அவனைக் கூப்பிட்டான். அவன் ஆட்டுக் குட்டியை தான் கொண்டு வந்த ஊசியை ஊன்றி அதில் கட்டிவிட்டு தேவனை நோக்கி ஓடிவந்தான். வாத்தியார் மகனுக்கு மரியாதை செலுத்து வதில் அவன் தாராளம் காட்டிக் கொண்டான்.

'என்னண்ண செய்யோணும்?' சேவகனாய் நடித்தான்.

'என்ன தெரியாத மாதிரிக் கேக்கிறா? பக்குவமாகக் கொண்டே நான் ஓடேக்க ஏத்தோணும், சரியே?'

'ம்... சரி. நேற்று ராமன் அண்ணா பெரிய எட்டுமூலைப் பட்டத்திற்கு விண்பூட்ட பச்ச மட்டை வெட்டிக் கொண்டு போனவர். அதோட கள்ளும் வேண்டிக் கொண்டு போனவர். இண்டைக்கு கலர் லைற்று பூட்டி அதை ஏத்தப் போகினமாம். இன்னும் கொஞ்ச நேரத்தில இங்க வருவினம் எண்டு நினைக்கிறன்.'

'சரி நீ போய் இதை முதல்ல ஏத்து பாப்பம்.'

'ம் ... சாணன் பட்டம் ஒரு கோணன் பட்டம்.'

'என்னடா ?'

'இல்லையண்ண, உங்கட பட்டத்தப்பற்றி நான் பாடேல்ல. பிறகு என்ர தோலை உப்பு போட்டு காயவைச்சிடுவார் உங்கட அப்பா.'

அப்பாவைப் பற்றி இவனுக்குத் தெரிந்தது இவ்வளவுதான் என எண்ணிய தேவன், அதைப்பற்றி அவனோடு கதையாது, அவனைக் கொண்டு வேலையைச் செய்விக்க முயன்றான்.

'ம்....பயம் இருந்தாச் சரி, போய் ஏத்து.'

'சரியண்ண....' எனக் கூறிவிட்டுச் சென்றவன், நல்ல ஒரு எதிர்க்காற்று வர, 'ஓடண்ண ஓடு...' எனக் கத்தியவண்ணம் ஓடி

வந்து துள்ளிப் பட்டம் ஏற்றினான். தேவன் பின்பக்கமாக ஓடினான். பட்டம் எந்தக் குத்துக் கரணமும் போடாமல் நேராக ஏறியதில் அவனுக்கு புளுகு தலைக்கேறியது. அவன் துள்ளிக் குதித்தான். நைலோன் நூலை சடுதியாக விட்டுக்கொடுக்க அது கையை அள்ளியது. பின்பு மெதுவாக நூலை விட்டுக் கொடுத்தான். பட்டம் மேலே மேலே சென்று கொண்டு இருந்தது. மற்றவர்களின் பட்டம் வந்து சிக்கிவிடுமோ எனத் தேவனுக்குப் பயமாக இருந்தது. அவன் மெதுவாகப் பட்டங்கள் குறைந்த இடத்தை நோக்கி நகர்ந்தான். சண்முகம் ஆட்டை அவிழ்த்துக் கொண்டுபோய் தனிப் பனை ஒன்றில் `கட்டிவிட்டு தேவனை நோக்கி ஓடிவந்தான்.

'அண்ண அந்தமாதிரிப் பறக்குதண்ண உங்கட சாணன் பட்டம்.'

'தேவனா கொக்கா?' என்றான் தேவன்.

'அது சரி இப்பிடி வெய்யிலில் நிண்டு பட்டம் விட்டு உடம்பு கறுத்தா, உங்கட அப்பா ஒண்டும் சொல்லமாட்டாரே?'

அவன் நக்கலடிக்கிறானா அல்லது வெறுப்பேத்துகிறானா என்பது தேவனுக்குத் தெளிவாகப் புரியவில்லை.

'டேய் அதையெல்லாம் ஏன்ரா இப்ப ஞாபகப்படுத்துறாய்?' என்றான்.

'சரி, சரி நான் அதைப்பற்றி கதைக்கேல்ல. பிள்ளை யெண்டாப் போல பேசாமல் இருப்பாரே வாத்தியார்?' சண்முகன் எல்லாப் பக்கத்தாலும் தாக்குவான் என்பது தேவனுக்குப் புரிந்தது. தேவன் அதைவிட வேறு ஒரு அவதியில் நெளிந்தான். பின்பு வழி கண்டவனாய்....

'எனக்கு இப்ப ஒண்டுக்கு வாறமாதிரி இருக்குது. இந்தப் பட்டத்தைக் கவனமா பிடிப்பியே? நான் ஒருக்கா போய் இருந் திட்டு வாறன்.'

'சரியண்ண. நீங்க தைரியமாத் தாங்க அதை.'

சண்முகன் பட்டத்தை வேண்டினான். தேவன் பொறுக்க முடியாதவனாய் ஒற்றைப் பனையை நோக்கி ஓடினான். சண்முகனுக்கு சிரிப்பு வந்தாலும் தேவன் கோவிப்பான் என்பதால் அதை பலவந்தமாக மறைத்துக் கொண்டான். தேவன் ஒற்றைப் பனைக்குப் பின்னால் மறைந்தான். சண்முகன் மடத்தடியில் ராமன் அண்ணாவும் அவனது பட்டாளமும் வருவதைக் கண்டு கொண்டான். தேவன் வந்தவுடன் இதைக் கொடுத்துவிட்டு தானும் அங்கே ஓடவேண்டும் என சண்முகன் எண்ணிக் கொண்டான்.

ஒற்றைப் பனைக்குப் பின்பு போன தேவனை அதிக நேர மாகியும் காணவில்லை. சண்முகன் நெருப்பை மிதிப்பவன் போல் அந்தரத்தில் நின்றான். திரும்பித் திரும்பி ஏக்கத்தோடு மடத்தடியைப் பார்த்தான். ராமன் அண்ணா குழுவினர் வந்து கொண்டு இருந்தார்கள். 'சீ இந்த தேவன் எங்க போய் விட்டான்' எனச் சலித்த வண்ணம் ஒற்றைப் பனையைப் பார்த்துத் தவங்கிடந்தான். சில கணங்கள் சென்றிருக்கும். சண்முகன் திடுக்கிட்டுப் போனான்.

மாவையின் சிவத்த நாம்பன் விட்டுக் கலைத்துக் கொண்டு வர தேவன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, சண்முகனை நோக்கி ஓடிவந்தான். ஓடிவந்த தேவன் திடீரென வரம் பொன்றிற்குப் பின்னால் படுத்துக்கொள்ள நாம்பன் மேலால் பாய்ந்து தொடர்ந்து ஓடியது.

தேவன் வேதனையில் கத்துவது கேட்டது. சண்முகன் மெதுவாகப் பட்டத்தோடு அங்கு சென்றான். தேவன் வேதனை யில் முனகினான்.

'என்ன நடந்தது தேவன்?'

'நான் நடந்தனான். மாடு ஓடினது. நல்ல கேள்வி... பனையால விழுந்தவனை மாடு ஏறி மிதிச்சுப் போட்டுதடா. நான் விழுந்த விழுவையில வலது கைய கொடுத்திட்டன். உயிரே போற மாதிரி இருக்குது. கைக்க சுளுக்கிப் போட்டுது போல இருக்குது.'

'ஐயோ வாத்தியார் அறிஞ்சா?'

'சும்மா இரடா...'

'சரி சரி, நான் கதைக்கேல்ல.'

தேவன் மெதுவாக எழுந்தான். இடது கையால் வலது கையை அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

'நான் என்ன செய்யிறது தேவன் அண்ண?'

'பட்டத்த இறக்கோணும்.'

'அங்க மடத்தடி தாண்டி ராமன் அண்ணா ஆக்கள் வருகினம்...' அழுவாரைப் போல் சொன்னான் சண்முகன்.

'அவை வாறத்துக்கிடையில இறக்கிடலாம். நீ நூலைச் சுத்து.' சமாதானம் சொன்னான் தேவன்.

சண்முகன் அவசர அவசரமாய் நூலைச் சுற்றினான். அடிக்கடி பரபரப்போடு பின்னே திரும்பிப் பார்த்துக் கொண்டான். பட்டம் ஒருவாறு தரை கண்டது. வாலைக்கூட சுற்றிக் கொடுக் காமல் சண்முகன் ஓடிவிட, தேவன் வேதனையோடு ஒரு கையால் வாலைச் சுற்றினான். பின்பு மெதுவாக நடந்து சென்று ஒற்றைப்பனை நிழலில் நின்றுகொண்டு, ராமன் அண்ணாவும் அவரோடு வந்தவர்களும் பட்டம் ஏற்றுவதை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். ராமன் அண்ணாவைச் சுற்றி ஓரளவு கூட்டம் கூடியிருந்தது. சின்னச் சின்ன எட்டு மூலைகளும் சாணன் பட்டங்களும் பருந்தைக் கண்ட சிட்டுக் குருவிகளாக போட்டிக்கு தரைதட்டிக் கொண்டு இருந்தன. எல்லோருக்கும் ராமன் அண்ணாவின் அருகே சென்று விடுப்புப் பார்க்கும் அவசரம். தேவனுக்கும் அங்கு போகவேண்டும் போல் இருந்தது. கை தொடர்ந்தும் வலித்தது. அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல், அவன் மெதுவாக ராமன் அண்ணாவை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

ராமன் அண்ணாவும் செல்வன் அண்ணாவும் சேர்ந்து பட்டத்தைப் பிடித்திருந்தனர். ராமன் அண்ணாவின் எட்டு மூலைப்பட்டம் அவரின் உயரத்தை விட இரண்டு அடி உயர்ந்து நின்றது. அதன் அகலம் ஒரு யாரைவிட அதிகமாக இருக்கும் எனத் தேவன் எண்ணிக் கொண்டான். வயிற்றுப் பகுதியில்

சிவப்பு லைற் பொருத்தி அதற்கு பற்றரி இணைக்கப் பட்டிருந்தது. நாம்பன் மாட்டிற்கு சீவிவிடப்பட்ட கொம்புகள் போல விண் பூட்டப்பட்டிருந்தது. அது இடைக்கிடையே காற்று பலமாக வீசியபோதெல்லாம் கூவியது. சின்னி விரல் அளவில் நூலும், வாலாக குஞ்சம் கட்டிய பல பட்டுப் போடப்பட்ட தேடா வளையக் கயிறும் கட்டி இருந்தனர். ராமன் அண்ணாவையும் செல்வன் அண்ணாவையும் சேர்த்தே பட்டம் தூக்கிக் கொண்டு போய்விடுமோ எனத் தேவனுக்குப் பயமாக இருந்தது.

தம்பிராசா மாமாவும் செல்லத்துரை மாமாவும் சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தனர். பின்பு நூல்கட்டையைத் தூக்கிக் கொண்டு நூலை விட்டுக்கொடுத்தவண்ணம் அவர்கள் முன்னே நடந்து சென்றனர். அவர்கள் அப்படியே ஓரளவு தூரம் சென்ற பின்பு, ராமன் அண்ணாவுக்கு கையைக் காட்டினார்கள். ராமன் அண்ணாவும் செல்வன் அண்ணாவும் தயாராகிக் கொண்டு, பதிலாகக் கையசைத்தனர். நூல் மெதுவாக இழுக்கத் தொடங்க, தம்பிராசா மாமாவும் செல்லத்துரை மாமாவும் ஓடிக் கொண்டிருந்தனர்.

ராமன் அண்ணாவும் செல்வன் அண்ணாவும் காற்றை எதிர்த்து ஓடமுடியாது ஓடினர். ஒரு ஐம்பது யார் ஓடியபின்பு துள்ளி காற்றில் பட்டத்தை மேலே வீசினர். ஓடிக்கொண்டு இருக்கும்போதே விண் கூவியது. பின்பு பட்டம் இராட்சத னாய் மேலெழும்பியது. தம்பிராசா மாமாவும் செல்லத்துரை மாமாவும் ஓடுவதை நிறுத்தி இருந்தாலும் காற்று இருக்கும் போது நூலை விட்டுக் கொடுப்பதும், காற்று குறையும் போது சுண்டிச் சுண்டி இழுப்பதாயும் இருந்தனர். விண் ரீங்கார மிட்டுக் கொண்டு இருந்தது. இந்த ரீங்காரம் பொன்னாலைச் சந்தி வரையும் கேட்கும் என்று ராமன் அண்ணா கூறினார்.

தேவனுக்கு இது உண்மை என்பதாகவே தோன்றியது. எட்டுமூலைப் பட்டத்தை இப்பொழுது பார்க்கும்பொழுது, அது முழத்தைத் தாண்டாத அளவில் வானில் தெரிந்தது. அப்பாடா, எவ்வளவு உயரம் சென்றுவிட்டது எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

தேவனுக்கு அதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லை. கையில் ஏற்பட்டிருந்த வேதனையை மறந்தவனாக ராமன் அண்ணா பின்னே கெந்திக் கெந்தி ஓடத் தொடங்கினான்.

அவர்களிடம் இன்னும் இரண்டு பெரிய வாழைப் பொத்தியளவில் நூல் மீதமாக இருந்தது. செல்லத்துரை மாமாவும் தம்பிராசா மாமாவும் ஆனையைக் கட்டி இழுப்பது போல பட்டத்தை இழுத்துக் கொண்டிருந்தனர். இருவரும் கைக்கு துணி சுற்றி இருப்பதை தேவன் கவனித்தான். தம்பி ராசா மாமா நூலைப் பிடித்துக்கொண்டு செல்ல செல்லத் துரை மாமா அதை விட்டுக் கொடுத்தார். ராமன் அண்ணா வும் போய்ச் செல்லத்துரை மாமாவோடு சேர்ந்துகொண்டு நூல்கட்டை பிடிக்கலானார். தேவன் மெதுவாகச் சென்று ராமன் அண்ணாவோடு நின்று கொண்டான்.

'நான் தொட்டுப் பார்க்கட்டே?' என பட்டத்தின் நூலைப் பார்த்த வண்ணம் கேட்டான் தேவன்.

'ம் தொட்டுப்பார்...' என ராமன் அண்ணா அதை ஊக்கு வித்தார். தேவன் நூலைத் தொட்டு இழுத்துப் பார்த்தான். அது இரும்பு மாதிரி இழுபட மறுத்தது, தேவனுக்கு அதிசயமாக இருந்தது. இப்படியும் பட்டம் இழுக்குமா என வியப்பாக இருந்தது. ராமன் அண்ணாவைச் சுற்றி இப்போது அதிக கூட்டம் கூடிவிட்டது. எல்லோரும் பட்டத்தின் நூலை ஒருமுறை தொட்டுப் பார்த்துவிட வேண்டும் எனத் துடித்தனர்... காற்றின் தாலாட்டிற்கு வெப்பம் வழிவிட்டு விலகி இதமான கதகதப்பைத் தந்து கொண்டு இருந்தது.

குமரேசன் மாமாவின் வீடு வயற்கரையில் இருந்தது. அது வயலைப் பார்த்த வண்ணம் பிட்டி ஒன்றில் வெளிச்ச வீடு மாதிரி அமைந்திருந்தது. வெளிச்ச வீட்டில் இருந்து கடலில் போகும் கப்பல்களை அவதானிப்பதுபோல குமரேசன் மாமாவின் வீட்டில் இருந்து மாவெட்டை முழுவதையும் அவதானிக்கலாம். அங்கு பட்டத்தைக் கட்டிவிட்டால் காற்று தாராளமாய்ப் பட்டத்திற்குக் கிடைக்கும். திடீரென காற்று குறைந்துவிட்டால் பட்டம் எந்தப் பக்கம் விழுகிறது என்பதை

இலகுவாகக் கண்காணிக்க முடியும். காற்றுக் குறைந்து பட்டம் சாதுவாக இறங்கினாலும் நூல் எந்தப் பனையிலும் முட்டாமல் இருக்கும். இதற்கெல்லாம் அந்த இடம் நல்ல இடமெனச் செல்லத்துரை மாமாவும் ராமன் அண்ணாவும் பேசி முடிவு செய்து கொண்டனர்.

சூரியன் பிரமாண்டமான பொன் கோளமாய் மேற்குக் கடலில் மூழ்கிக் கொண்டு இருந்தது. மேல் வானம் வண்ணங்கள் பூசி ஆதவனின் குளியலை ரசனையோடு பார்த்தது. முகில்கள் காதலோடு ஆதவனை நோக்கினும் காற்றின் இழுவையில் கவலையுற்று கருமேகமாகி இழுபட்டுச் சென்றது. பறவைகள் வயலை விட்டு, குடியிருக்கும் மரங்களை நோக்கி, இரவின் மடியில் அயர்ந்து தூங்க குதூகலமாகச் சென்றுகொண்டு இருந்தன. இல்லத்தாளை இருளில் இறுக்கி அவளின் மடியில் இன்பம் காணும் மானிடரும் அதே அவசரத்தில் இருந்தனர்.

வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற எல்லோரிடமும் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்கின்ற நினைவு மெதுவாகத் தொற்றிக் கொண்டது. தேவனுக்கும் அப்பாவின் சினங்கொண்ட சொரூபம் அடிக்கடி ஞாபகம் வரலாயிற்று. எட்டுமூலைப் பட்டத்தைக் கொண்டு சென்று கட்டும் வரையில் நிற்க வேண்டும் என்பது அவன் ஆசையாக இருந்தது. பின்பு அதைப் பார்த்துவிட்டுத்தான் போகவேண்டும் என்பதாய் முடிவு எடுத்துக் கொண்டான். அடுத்து வந்த கணங்களில் அப்பா என்னும் சிம்ம அவதாரத்தை அசண்டை செய்தான்.

வயல் வரப்புகளில் தேர் இழுப்பதான கோலம் களை கட்டி இருந்தது. எல்லோரும் கவனமாக பட்டத்தை இழுத்துக் கொண்டு சென்றனர். இருட்டு சாதுவாய் கவ்வ எட்டு மூலைப் பட்டத்தில் இருந்த சிவப்பு மின்குமிழ் நன்கு தெரியலாயிற்று. விண்ணில் இருந்து புறப்பட்ட ரீங்காரம் இரவின் அமைதியில் மிகத் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. சிவப்பு மின்குமிழ் அங்குமிங்கும் ஆடியசைவது அழகாக இருந்தது.

சிவப்பு விளக்கு தெரிவதால் பிளைற் வந்தாலும் விலத்திக் கொண்டு போகுமாக்கும் எனத் தேவன் அப்பாவியாக எண்ணிக் கொண்டான்.

குமரேசன் மாமாவின் வீட்டிற்கு அருகில் வந்தவுடன் தம்பிராசா மாமா அங்கு ஓடிப்போனார். குமரேசன் மாமாவின் வீட்டிற்குச் சென்ற அவர், அங்கு நின்று சிறிது நேரம் கதைத்துக் கொண்டு நின்றார். பின்பு மூன்று சாக்குகள் எடுத்துக் கொண்டு வந்தார். அவரோடு குமரேசன் மாமாவும் சேர்ந்து வந்தார். பட்டத்தைப் பார்க்கும் பரவசம் அவருக்கும் தொற்றி இருந்தது. தனிப் பனையொன்றில் மொத்தமாகச் சாக்குச் சுற்றப்பட்டது. அந்த மூன்று சாக்கும் சுற்றிய பின்பு இராமன் அண்ணாவும் செல்லத்துரை மாமாவும் பட்டத்தின் நூலை அதில் சுற்றிக் கட்டினர். தம்பிராசா மாமா கட்டு ஒழுங்காக இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த இழுத்துப் பார்த்தார்.

தேவன் வீடு வரும்போது ஏழுமணி இருக்கும்.

தேவன் மெதுவாகப் படலையைத் திறந்து உள்பக்கமாக வந்ததும் சத்தம் எழாதவாறு அதை மூடினான். பின்பு பூனை நடையில் கிணற்றடிக்குச் சென்றான். பெரிய வாளியில் இருந்த நீரில் கைகால் முகத்தைக் கழுவிவிட்டு, கொடியில் கிடந்த துவாயில் முகத்தைத் துடைத்தான். பின்பு அதே பூனை நடையில் சமையல் அறைக்குச் செல்லும் முயற்சியில் இறங்கினான்.

தேவனின் அப்பா விறாந்தையில் நின்றிருந்தார். பின்னுக்கு கையைக் கட்டிக் கொண்டு நிமிர்ந்து நின்றார். அதைப் பார்த்த வுடனேயே அந்தக் கைகளுக்குள் என்ன இருக்கும் என்பது தேவனுக்குப் புரிந்தது. பயம் மின்னலாக அவன் மூளையைக் கிழிக்க, உடல் விறைப்பான உணர்வில் அவதிப்பட்டான். இருட்டைத் துழாவிய அப்பாவின் கண்கள் இவனைக் கண்டு கொண்டன.

'இஞ்ச வடா.'

தேவனுக்கு சிறுநீர் வந்துவிடும் போல் இருந்தது. கால்கள் நடுங்கின. அப்பா ஏன் இப்படி இருக்கிறார் எனக் குமைந்தவண்ணம் அப்பாவின் அருகில் வேள்விக்குச் செல்லும் ஆடாகச் சென்றான்.

இரவு அம்மா முதுகில் ஏதோ பூசுவது உணர்ந்து தேவன் விழித்துக் கொண்டான். அம்மா அழுதிருக்க வேண்டும். கண்கள் சிவந்திருந்தன. முகம் அழுது வீங்கினாற்போல இருந்தது.

'இந்த அநியாயத்த நான் எங்கயடா சொல்லுறது? முதுகுத் தோல் வெடிச்சு இரத்தம் வருகுது. மாட்ட ஆட்ட அடிக்கிற மாதிரி அடிச்சு வைச்சிருக்கிறார். உனக்கு அப்பாவின்ர குணம் தெரிஞ்சும் ஏனப்பன் நீ இப்பிடிச் செய்யிறா? அவர் மொக்குத் தனமா போட்டடிப்பார் எண்டு தெரியாதே பிள்ளைக்கு?'

'தெரியும்.'

'அப்ப ஏன்டா அவ்வளவு நேரம் செல்ல வந்தனீ?'

'ராமன் அண்ணா ஆட்கள் பெரிய எட்டுமூலைப் பட்டம் விட்டிச்சினம். அதுதான் பாத்துக் கொண்டு நிண்டனான்.'

'அது சரி. பிந்தி வீட்ட வந்தால் அப்பா என்ன செய்வார் எண்டு உனக்குத் தெரியும்தானே?'

'ம்... இப்பிடி அப்பாவுக்கு பயந்தா நான் ஒண்டும் பாக்கேலாது... ஒரு இடமும் போகேலாது.'

'அதில்லையப்பன். அப்பிடி போறதெண்டா அப்பா பள்ளிக் கூடத்தில் இருந்து வாறத்துக்கு முதல் போட்டு வரலாம் தானே ராசா.'

'அந்த நேரத்தில எல்லாம் பட்டம் விடமாட்டாங்கள்.'

'கெப்பருக்கு பிள்ளை வளர்க்கிறது எப்பிடியெண்டு தெரியாது. உனக்கும் கொப்பற்ற குணம் புரியேல்ல. நான் ரெண்டு பேருக்கும் இடையில நிண்டு நித்தம் அல்லாடுறன். என்னையேன் இப்பிடி இரண்டுபேரும் போட்டு வதைக் கிறியள்?'

தேவனின் அம்மா சோகமாகக் கூறிய அந்த வார்த்தைகள் அவனின் நெஞ்சை அறுப்பதான வேதனையைத் தந்தது. அம்மா வாடுவதை அவனால் தாங்க முடியாது இருந்தது. அம்மாவைச் சமாதானம் செய்ய முயன்றான்.

'நீயேன் அம்மா கவலைப்படுறா. நான்தானே அடி வேண்டினது.'

'அது சரியடா. நீ வேண்டுற ஒவ்வொரு அடியும் என்ர குலைய அறுக்குதடா. உனக்கு உடம்பிலதான் தம்பி வலிக்குதப்பன். எனக்கு நெஞ்செல்லாம் ரணமா வேகுது.'

அம்மா அழத் தொடங்கி இருந்தது தேவனுக்கு மேலும் சங்கடத்தையும் கவலையையும் தந்தது.

'அழாத அம்மா.'

'நீ இனிமேலைக்கு இப்பிடிச் செய்யக்கூடாது என்ன?'

'சரி.'

அம்மா நெடுநேரமாக தேவனின் முதுகைத் தொடர்ந்து தடவிக் கொண்டு இருந்தா... தேவன் அப்படியே தூங்கிப் போய் விட்டான்.

7

மனசு ஒப்பாத செயல்கள் ஒவ்வொன்றுக்கும் வெறுப்பு வளமாக வேர்விட இடம் கொடுக்கிறது. வெறுப்பு என்பது சிறு பொறியாகப் பிறந்து காட்டுத் தீயாய் வளர்கிறது. மனிதன் என்கிற விட்டில்பூச்சி அதில் இருந்து விடுபடமுடியாமல் நித்தமும் துடிக்கிறது. தேவனும் ஒரு விட்டில் பூச்சியாக, மனசு ஒப்பாத இயந்திர வாழ்வில் கலந்து, கட்டாயத்திற்கு மாரடிக்க வேண்டி இருந்தது.

இன்று தேவன் வேலைக்குப் போய் வருவதற்குள் அவனுக்கு அது அலுத்துப் போய்விட்டது. குளிர் தனது ஊசிக்கரத்தை தயவுதாட்சண்யம் இன்றி எங்கும் பதியவைத்தது. அது தாங்க முடியாத உத்தரிப்பாய் இருந்தது அவனுக்கு. குளிரில் வரண்ட காற்று நாசி வழி ஏறி சுவாசப்பையைத் துளைப்பதான அவதி. தேவன் இந்தக் கணங்களை முற்றிலும் வெறுத்தான். மனிதனின் நவீனத்துவம் என்கின்ற அழிப்பில், பூமியை

அக்கினிப் பிளம்பிற்குள் தள்ளிக் கொண்டிருக்கும் சோகத்திலும் ஒருவித சுகத்தை அநுபவிக்கப் போகும் நாடாக நோர்வே இருந்தது. இருந்தாலும் இடைக்கிடையே கடுங்குளிர் கலைகொண்டு ஆடும் காளியாக வந்து நிற்கிறது. இன்று வெளியே இயற்கையின் பேயாட்டம் எல்லோரையும் பயமுறுத்தியது. குளிருக்கஞ்சி ஒருவித ஊரடங்கு அமுலாகி இருந்தது. வினோ குளிரைச் சபித்துக்கொண்டு இன்று வேலைக்குச் சென்றுவிட்டாள். சுபனை எடுத்துக் கொண்டு வரும் பொறுப்பு தேவனிடம் வந்து விழுந்து விட்டது. தேவன் வீடு செல்லும் அவசரத்தில் சூவை சுபனுக்கு அவசரமாக மாட்ட முயன்றான்.

சுபன் உடனே, 'தா மே றுளி...' (அவசரப்படாதே) என்றான். தேவன் இதைத் தான் அப்பாவிற்குக் கூறி இருந்தால் எப்படி இருந்திருக்கும் என எண்ணிப் பார்த்தான். தேவனுக்குப் பொறாமையாக இருந்தது. இவன் ஒருவகையில் கொடுத்து வைத்தவன்தான் என அப்போது எண்ணிக் கொண்டான்.

வீட்டுக்குத் திரும்பி வந்த பின்பு சுபன் வெளியே செல்லவில்லை. அவன் குளிருக்கு அஞ்சி உள்ளே ஒளிந்து கொண்டான். அந்தச் சோகம் வழியும் முகத்தோடு சிறிது நேரம் சோபாவில் இருந்தான். அவனால் அதிகநேரம் அப்படி இருக்க முடியவில்லை. நித்தண்டோவீயை எடுத்து விளையாடத் தொடங்கினான். அப்பா என்பவன் தனது சேவகன் என்கின்ற தோரணை அவனிடம் இருப்பதாக தேவனுக்கு ஒருவித கோணல் பார்வை தோன்றியது. தேவன் தன்னை நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்டான். 'ஏய் மூடனே' என மனசு திட்டுவதாய் அவனுக்குத் தோன்றியது. சுபன்மீது ஒருவித பரிவு ஏற்பட்டது. அப்பா சேவகனாய் இருந்தாலும் எத்தனை சந்தோசத்தை இவன் இழந்துவிட்டான் என்கின்ற ஆதங்கம் பிறந்தது. அத்தனை அடக்குமுறைகள் இருந்தும் எத்தனை சுகங்களை நாம் அநுபவித்தோம் என்கின்ற திருப்தி அவன் மனதில் வந்தது. எல்லாவற்றையும் சடுதியில் இழந்தோமே என எண்ணியபோது மெல்லிய வலியொன்று எழுந்தது.

'நாங்கள் இழப்பதற்கே உருவாக்கப்பட்ட இனமா?' என்கின்ற கேள்வி அவன் மனசில் முளைவிட்டது. வினோ

வருவதற்கு நேரமாகும் என்பதனால் தேவன் சமையலுக்கான ஆயத்தங்களைச் செய்யலானான்.

வினோ வந்ததும் சமையல் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். தேவன் ஹோலுக்கு வந்து சோபாவில் இருந்த வண்ணம் தொலைக்காட்சியைப் பார்க்கத் தொடங்கினான். மனது இருப்புக் கொள்ளாது எங்கோ அலையத் தொடங்கியது. அது எப்போதும் எதைத் தேடி ஓடுகிறது? தனது இழப்பை நினைத்தா? அந்த இன்பத்தின் செழிப்பை நினைத்தா? கால ஓட்டத்தில் கரைந்து போன சுவர்க்கத்தை எண்ணியா? பாடு பட்டுக் கட்டிய கல்வீடுகளில் கறையான் குடியிருக்கும் பதை பதைப்பிலா? அம்மணமான வேலிகளோடு பரிதாபமாய் அழிந்து போய் நிற்கும் ஊரை எண்ணியா ?

எதற்காக இந்தத் தவிப்பு, ஏக்கம் எல்லாம்? இழந்த பின்பு தான் அதன் பெறுமதியும் வலியும் புரிகிறதா? ஏன் எங்களுக்கு இந்தச் சாபம்? தேவனை ஏக்கமும் சோகமும் இடைவிடாது ஏறி நின்று மிதித்தன. அது அவனைப் பார்த்து கையாலாகாதவன் என எள்ளி நகையாடியது.

அன்று சனிக்கிழமை. நல்லியக்கச்சபையில் கரப்பந்தாட்டத் திற்கான ஆரம்பவேலைகள் நடந்துகொண்டு இருந்தன. இன்று நேவி விளையாட வருவதாகக் கூறினார்கள். நேவிக்காரர் பல காட்டில் உள்ள நேவிச்சந்தியைத் தாண்டிய பகுதியில் தேவன் பிறப்பதற்கு முதலே முகாமிட்டு இருப்பதான ஞாபகம். ஊரிலே ஜீப் போய் வந்தால் அது அநேகமாக அவர்களுடையதாகத் தான் இருக்கும். சிலவேளைகளில் ஊரில் ஏதாவது சண்டை நடந்தால் ஊர்காவற்றுறையில் இருந்து பொலிஸ் ஜீப்பும் வருவதுண்டு. இல்லையென்றால் சில அரச உத்தியோககாரர் ஜீப்பில் வருவதுண்டு. ஊருக்குள்ளே ஒரு வியாபாரியும் ஜீப் வைத்திருந்தார். இவையெல்லாம் எப்போதாவதுதான் போகும். நேவியின் ஜீப் எப்போதும் சுதந்திரமாகப் போகும். பின்பு திரும்பி வரும். அது பாண் வேண்டி வரும். மரக்கறி வேண்டி வரும். ஊரின் சுதந்திரத்தைத் தனதாக்கிக்கொண்டு அடிக்கடி அது போய்வரும். யாரும் அதைப்பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

நேவிச்சந்தி தாண்டியும் குடிமனைகள் இருந்தன. அப்போது நேவியின் கேற் வரைக்கும் யாரும் போகலாம். அதற்கும் உள்ளே போவதென்றால் அனுமதி பெறவேண்டும். பள்ளிக்கூடத்தோடு சுற்றுலா போகும்போது மாணவர்கள் உள்ளே போவதை அவர்கள் தடுப்பதில்லை. சிங்களம் தெரிந்தவர்களையும் அவர்கள் உள்ளே அனுமதிப்பார்கள். இலங்கைத்தீவில் சிங்களம் ஒரு நுழைவுச் சீட்டு என்பதை தேவன் அங்கு கற்றுக் கொண்டான். தேவனுக்கு நேவிக்காம்பிற்குள் சென்று பார்க்க வேண்டும் என நிறைய ஆசை. ஐந்தாம் வகுப்பு படிக்கும் போது அந்தச் சந்தர்ப்பம் வரும் எனக் காத்திருந்தான்.

நேவிக்காரர் வேம்படியில் இருக்கும் பாரில் சாராயம் வாங்க வருவார்கள். அநேகமாக நீலநிற உடுப்பு போட்டிருப்பார்கள். அவர்கள் கைகளில் இயந்திரத் துப்பாக்கி எப்போதும் இருக்கும். அப்போதெல்லாம் அது ஒரு காட்சிப் பொருளாக மட்டுந்தான் இருந்தது. வேம்படியில் பேக்கரியும் இருந்தது. நேவிக்காரருக்கு மதுபானமும் பாணும் இங்கிருந்துதான் போக வேண்டும். குடிநீர் மாத்திரம் சுன்னாகத்தில் இருந்து வரவேண்டும். நேவிக்காரர் படித்தவர்கள். அத்தோடு அவர்கள் பண்பானவர்கள் எனவும் ஊருக்குள் பேசிக்கொள்வார்கள். அவர்களும் அப்பிடித்தான் நடந்து கொள்ளுவார்கள்.

அன்று ஒருநாள் குஞ்சுமணியக்கா உச்சி வெய்யிலில் தண்ணியள்ளப் பிள்ளை வயித்தையும் தள்ளிக்கொண்டு போயிருந்தா. பவுசில போன நேவிக்காரர் அதைப் பார்த்து விட்டார்கள். நடுத்தெருவில் பவுசரை நிறுத்தி குடம் நிறையத் தண்ணீர் கொடுத்துவிட்டுப் போனார்கள். அத்தாயில் இருந்து பீப்பாவில் நீர் கொண்டு வரும் சுப்பனிடம் ஒரு குடம் நீர் கேட்டால் அவன் துவரங் கம்பைக் காட்டிவிட்டுச் செல்வான். பண்பு என்பது மனதில் இருக்க வேண்டும். அவன் தமிழனாய் இருந்தால் என்ன சிங்களவனாய் இருந்தால் என்ன என்று தேவன் எண்ணிக் கொள்வான். நேவிக்காரன் நிண்டு நீர் கொடுத்து விட்டுப் போகுமளவிற்கு அன்று மனிதனாய் இருந் தான். சுப்பன் கம்பு காட்டுமளவிற்கு தமிழனாய் இருந்தும் மனிதத்தை அப்போதே இழந்து போயிருந்தான்.

பேக்கரி நடத்துகின்ற சிங்கள முதலாளியின் மனைவியும் மனிதம் நிறைந்தவளாகவே இருந்தாள். தேவன் அம்மாவோடு மாதப்பிறப்பிற்கு அம்மன் கோவிலுக்குச் செல்வான். அதற்கு முன்பாக அவள் நீர் சொட்டும் தலைமுடியோடும், கப்பல் வாழைப்பழம் நிறைந்த அர்ச்சனைத் தட்டுடனும் அங்கு நிற்பாள். அவள் வதனத்தில் எப்போதும் புன்னகைதான் குடியிருக்கும். தேவனுக்கு உள்ளே இருக்கும் சிலையான அம்மனைவிட இந்த உயிருள்ள அம்மன் அழகாய் இருப்ப தாய்த் தோன்றும். வருஷப்பிறப்பிற்கு பேக்கரிக்குப் போனால் எல்லோருக்கும் இலவசமாகக் கேக் கிடைக்கும். அவளுக்கு அதில் மட்டில்லா மகிழ்ச்சி. என்ன பாகுபாடு? ஏன் இந்தப் பாகுபாடு? மனிதனுக்கு மனிதன் அறியாமையால் கண்டு கொள்ளும் ஆயிரம் பாகுபாட்டில் அர்த்தம் ஏதாவது உண்டா? தேவனுக்கு அப்போது ஒன்றும் விளங்குவதில்லை.

இன்று அவர்கள் விளையாட வருகிறார்கள். காலத்தின் மாற்றம். 'எங்கட பெடியள்தான் வெல்லுவார்கள்' எனத் தேவனை எண்ண வைத்தது. 'நேவிக்காரரை விட எங்கட பெடியள் அடிப்பதில்தான் விறுவிறுப்பே இருக்கிறது' என்பதாக தேவனுக்குத் தோன்றியது. இன்று அப்படியே நடக்க வேண்டும் என்பதுதான் அவனது வேண்டுதலாக இருந்தது. எதற்காக தான் 'எங்கள் பெடியள்தான் வெல்லவேண்டும்' என நினைத்தேன் என எண்ணியவனுக்கு விடை தெரியவில்லை. 'ஏன் நான் அப்படி நினைத்தேன்?' தன்னை மீண்டும் தேவன் கேட்டுக் கொண்டான். 'எங்கிருந்து வந்த பக்கச் சார்பு இது?' அவன் அதை அப்பொழுது ஆராயவில்லை. இயல்பான உணர்வு என்று தோன்றியது.

நாலுமணிபோல் விளையாட்டு ஆரம்பமாகியது. வாசக சாலையில் மெதுவாகக் கூட்டம் கூடத் தொடங்கி இருந்தது. பெரியவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் எனக் கூட்டம் விரைவாகப் பெருகியது. பெரியவர்கள் ஒரு கண்ணை விளை யாட்டிலும் மறுகண்ணைப் பத்திரிகையிலும் உலாவ விட்டனர். சிறுவர்கள் கரம் விளையாடுவதில் மிகவும் அக்கறையாக இருந்தனர். அவர்கள் இடைக்கிடையே வெளியே என்ன நடக்கிறது என்பதையும் நோட்டம் விட்டனர். பஸ்சிற்குப்

போகின்றவர்களும் பஸ்சால் இறங்கி வருபவர்களும்கூட நின்று வேடிக்கை பார்த்தனர். சங்கானைக்கு மீன் விற்கப்போன வள்ளியும் மீன்கூடையோடு வந்து வேடிக்கை பார்த்தாள். கள்ளுக்கடைக்கு புளிச்சல் கள்ளின் வலாயத்திற்குச் சென்ற வர்களும் ஒருகணம் அந்த வலாயத்தையே வென்றவர்களாக அங்கு தங்கினர். ரியூசனுக்குச் சென்ற குமர்ப்பிள்ளைகளும் சைக்கிளில் நின்ற வண்ணம் விடுப்புப் பார்க்கலானார்கள்.

தேவன் வெளியே நின்று கரப்பந்தாட்டம் பார்த்தான். அவனுக்கு அது மிகவும் பிடித்திருந்தது. கோயிலில் முதலாவது மணி அடித்தது. சிலர் 'அப்பு பிள்ளையாரே' என்றவண்ணம் நெற்றியில் ஒருமுறை குட்டிக் கொண்டனர்.

பெரியவர்கள், கையில் காசுள்ள சில சிறியவர்கள், முன்னே உள்ள கனகரின் தேநீர்க் கடையில் வடை, தேநீர், வாய்ப்பன் எனத் தங்களுக்குத் தேவையானவற்றை வேண்டி வந்து சாப்பிட்டனர். வள்ளி இன்று நல்ல லாபத்துக்கு மீன் விற்றிருக்க வேண்டும். அவளும் தேநீர்க் கடைக்குப் போய் வந்திருந்தாள். அவளுக்கு மாத்திரம் ஒருவித கிளாசில் தேநீர் கொடுக்கப்பட்டி ருந்தது. அவள் ஒரு வாய்ப்பனும் சாப்பிட்டாள். தேவனுக்கும் ஏதாவது வேண்டிச் சாப்பிடவேண்டும் போல் இருந்தது. கையில் காசில்லாத சங்கடத்தைப் புரிந்து கொண்டு நெளிந்தான்.

தேர்முட்டியில் காட்ஸ் விளையாட்டும் நடந்து கொண்டி ருந்தது. அவர்களும் இடைக்கிடையே இங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டனர். அந்த உயரத்தில் இருந்து பார்க்க அவர்களுக்கு எல்லாம் நன்கு தெரியும். அதைச் சிறிது கெடுப்பதாய் இராட்சத மரம் ஒன்று இடையில் சற்று மறித்துக் கொண்டு நின்றது.

நேரம் பறப்பதாகத் தேவனுக்குத் தோன்றியது. கொஞ்சம் மெதுவாகப் போகக்கூடாதா என்கின்ற ஏக்கம் அவனிடம். இல்லை என்பது போலப் பிள்ளையார் கோயில் இரண்டாவது மணி அடித்தது. சங்கு, சேமக்கலம் எனச் சத்தம் வந்துகொண்டு இருந்தது. ஒருகணம் கோயிலுக்குப் போவோமா என எண்ணி யவன் விளையாட்டில் இருந்த விறுவிறுப்பில் அதைப் புறந் தள்ளினான்.

பக்கத்தில் நின்ற வள்ளி, முன்னுக்கு இருந்த பலசரக்குக் கடையில் அரிசி சரக்கு சாமான் வேண்டிக்கொண்டு வேரப்பிட்டி பக்கம் போய்க்கொண்டிருந்தாள். மேற்கு வானம் சிவப்பாய் எரிய அதைச்சுற்றி வர்ணஜாலம் நடக்கத் தொடங்கி இருந்தது. நீலக் கடல் சூரியனை சங்கமத்திற்காக நெடுநேரம் காமத்தோடு காத்திருந்த கோலம். உயிரினங்கள் இரவுக்கான படுக்கையைத் தேடும் அவசரம். இருட்டோடு சண்டையிட அங்கும் இங்கும் மின்விளக்குகள் ஒவ்வொன்றாக உயிர் பெற்றுக் கொண்டன.

விளையாட்டு தொடர்ந்தது. நெருப்பில் நிற்பதான அந்தரம் தேவனுக்கு. போவதா விடுவதா என்கின்ற போராட்டத்தில் அவன் நெளிந்தான். கால்கள் மாத்திரம் ஊன்றப்பட்டவையாக அசைய மறுத்தன. விளையாட்டு தேவனின் ஆசைப்படி அமையாது தோல்வியை நோக்கிச் சென்றது.

நேவிக்காரரிடம் தோற்பது தேவனுக்குப் பிடிக்கவில்லை. தேவனுக்கு மேற்கொண்டு அங்கு நிற்கவும் பிடிக்கவில்லை. 'சோம்பேறிகள், செத்த மாடுகள்' எனத் திட்டியவண்ணம் வீட்டைநோக்கி நடக்கலானான்.

பிள்ளையார் கோயில் பூட்டியாயிற்று. வீதியில் சாதுவாக இருட்டு கட்டிக்கொண்டு நின்றது. திருவிழாக் காலங்களில் மாத்திரம் தூபி மின்விளக்கு எரியும். சாதாரண நாள்களில் எல்லாம் அப்படியான மின்விளக்குகளைப் போடமாட்டார்கள்.

வீதியில் நடக்கும் போது அந்தியின் மலர்வாசம் இதமாக நாசியை நிறைத்தது. தேவன் ஒருமுறை மூச்சை நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டான். பின்பு ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிச் சென்றான்.

படுக்கையில் புரண்டபோது அவனுக்கு முதுகு எரிந்தது. சீ இந்த அப்பாவே இல்லாது இருந்திருக்க வேண்டும் எனச் சபித்துக் கொண்டான்.

8

தேவனின் சிந்தனையை சிதறவைப்பதாய், தொண்டை விரிந்த அழைப்புமணி மூர்க்கமாக ஒலித்தது. தேவனுக்கு அசை போடுவதில் இருந்து விடுபட்டது தற்காலிக நிம்மதி ஒன்றைத் தந்திருந்தது. வாழ்வின் முழுப்பகுதியும் இன்பமாய் இருந்து விடுதல் அரிது. நெஞ்சைப் பிழியும் சில பகுதிகள் ஒவ்வொரு வரது வாழ்க்கையிலும் ஒளிந்துகொண்டுதான் இருக்கச் செய்கிறது எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

வாசலில் ரூபன் நின்றான். முகத்தில் இருந்த சிரிப்பை யாரிடமோ கடன் கொடுத்து விட்டு வந்ததாய் இருந்தது.

ரூபன் நான்கு வருடங்களாகப் பாடுபட்டுப் படித்துப் பட்ட தாரியாக வெளிவந்தபின்பும், கழுவும் வேலை செய்து கொண்டி ருந்தான். தேவனுக்கு இது அநியாயமாகவே இருந்தது. 'புரை யோடிப்போன துவேசத்தின் விளைவில் இதுவும் ஒன்று. சாதி, மதம், சிங்களவன், தமிழன், வெள்ளை, கறுப்பு என எங்கெங்கு வித்தியாசம் காணமுடியுமோ அங்கெல்லாம் வித்தியாசம் கண்டு அதற்கேற்ப துவேசம் நச்சுவிதையாய் ஊன்றப்படுகிறது. அதன் பின்பு ஆயிரம் சுயநலங்கள் ஒளிந்து கொண்டு நிற்கிறது' எனத் தேவன் எண்ணினான்.

'என்ன தேவன் அண்ண உள்ள வரலாமே? எனக்குத்தான் யோசனை எண்டா நீங்களும் எல்லோ கப்பலக் கவுழவிட்டவன் போல நிக்கிறியள்.'

'இல்ல உன்ன நினைச்சன். பிறகு என்னையே மறந்து போயிட்டன். வா வா. வந்து சோபாவில இரு. வினோ, ரூபன் வந்திருக்கிறார். ரீ ஒண்டு போட்டா.'

சமையலறையைப் பார்த்து தேவன் கத்தினான். ரூபனின் சாட்டில் தனக்கும் ஒரு ரீ வரும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை.

'சந்தோசம் அண்ண. என்னைப்பற்றியும் கவலப்பட சில சீவன்கள் இருக்கிறது பெருமையாக இருக்குது' எனக் கூறிய வண்ணமே ரூபன் சோபாவில் இருந்தான்.

'இல்ல ரூபன்... ஏன் உன்ர முகம் இப்படி வாடிப்போய் கிடக்குது. அதைப் பாத்திட்டுத்தான் என்னத்துக்கு இப்பிடி கவலைப்படுகிறீர் எண்டு யோசிச்சன். '

'பிறகென்னண்ண? எத்தினை சோக்நாட் (விண்ணப்பம்)... எத்தின இன்ரவியூ... எல்லாம் அலுத்துப் போச்சுது. ஒரு பகுதி சோக்நாட்டை பெயரைப் பாத்தோடன்னயே தூக்கி எறிஞ்சு போடுவான்கள். ஒண்டு ரெண்டு இன்ரவியூக்கு கூப்பிடுறவங் களும் கூப்பிடோணும் எண்ட கட்டாயத்துக்கு மாத்திரம்தான் கூப்பிடுறான். அதுக்கு முதலே வேலை யாருக்கு எண்டு முடிவு பண்ணிப்போடுவினம். இது ஒரு கண்துடைப்புதான். அதுவும் பிறைவேற்ற விட இந்த அரசாங்க நிறுவனங்கள் படுமோசம் அண்ண. எல்லாம் அலுத்துப் போச்சண்ண. இந்தக் கழுவல்தான் இனி நிரந்தரம் போல இருக்குது.'

'என்ன செய்யிறது ரூபன். செய்த பாவம் விட்டுப் போகுமே?'

'அதுவும் உண்மைதான். எங்களுக்கு எண்டு வரேக்கதான் அதுகின்ற வேதனை புரியுது. எண்டாலும் அநியாயமா இருக்குது. அண்டைக்கு பிறைவேற் கொம்பனியில வேலை இருக்கெண்டு போட்டிருந்தாங்கள். நான் அப்ப கழுவல் வேலை செய்து கொண்டு இருந்தன். சரியெண்டு அங்க றிங் பண்ணிப் பார்த்தன். என்ர பெயரையும் குரலையும் கேட்டோன்ன அதுக்கு ஆளப் போட்டிட்டம் எண்டுட்டான். எனக்கு அதில சந்தேகம். அந்த ஓபிசில வேலை செய்யிற நோர்வே மனிஷி ஒருத்தியைப் பிடிச்சு வேலை இருக்கோ எண்டு அந்த விளம்பரத்தைக் காட்டி விளக்கமாகக் கேக்கச் சொன்னனான். அந்த மனிஷி ஒரு நல்ல மனிஷி. அவவும் நான் சொன்ன மாதிரியே கேட்டா. அவங்கள் என்ன சொன்னாங்கள் தெரியுமே?'

'சொல்லும்.'

'வேலை இருக்காம். எப்ப இன்ரவியூக்கு வருவாய் எண்டு கேட்கிறாங்களாம். எப்படி இருக்கு பாத்தியளே?'

'இது தெரிந்த விடயம்தானே. நீர் நேற்று நேரிலே பிடிச்சிட்டீர். அவ்வளவுதான்.'

'எனக்கு அதுக்குப் பிறகு தலையிடி. நான் அரைவாசியில வேலையை விட்டுட்டு வந்திட்டன்' என்றான் ரூபன். பின்பு சிறிது நேரம் அமைதியாக ஏதோ சிந்தனையில் இருந்தான். தேவன் சிலகணங்கள் சொற்கள் அகப்படாத அவதியில் நெளிந்தான். வினோ தேநீருடன் வந்தாள். இவர்களை அவள் அந்தச் சங்கடத்தில் இருந்து காப்பாற்றினாள்.

'ரூபன் அண்ணா உதுக்காக எல்லாம் அலுத்துப் போகாமல் தொடர்ந்து றை பண்ணுங்க.'

'ம்... நான் விடப்போறேல்ல. எண்டாலும் ஒரு அலுப்புத் தான்.'

வினோ ரீயைக் கொடுக்க ரூபன் எடுத்துக் கொண்டான். வினோ பிஸ்கட்டும் கொண்டு வந்து வைத்தாள். தேவனின் கணிப்பு சரியாக இருந்தது. அவனுக்கும் ரீ வந்தது.

பின்பு வினோவும் சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

'எங்கட தமிழ்ச் சனமும் இப்ப நல்ல வேலையும் செய்யினம் தானே. எதுக்கும் முயற்சியும் அதிர்ஷ்டமும் இருக்க வேணும்' என்றாள் வினோ.

'ம் அது சரி. சுவீப் விழுகிற மாதிரித்தான் இப்ப வேலை கிடைக்கிறதும். திறமையைப் பார்த்து வேலை குடுக்கோணும். அதைவிட்டிட்டு அதிர்ஷ்டத்தைப் பார்த்து காத்திருக்கிறது எண்டா எப்பிடி? இல்லாட்டி தோலைப் பார்த்துத்தான் வேலை கொடுப்பான் எண்டா என்ன செய்யிறது?'

'என்ன செய்யிறது அண்ணா? இஞ்ச வந்திட்டம், ஊரோட ஒத்தோட வேண்டியதுதானே. முரண்டு பிடிச்சுக்கொண்டு நிண்டா எங்களுக்குத்தானே நட்டம்?'

'வினோ சொல்லுறதும் சரிதான். இல்லையே ரூபன்?' என்றான் தேவன்.

'உண்மைதான். ஆனா எனக்கு இதை நினைக்க நினைக்க விசரா இருக்கண்ண.'

'நியாயமாகக் கிடைக்க வேண்டியது கிடைக்காட்டி மனிச னுக்கு விசராத்தான் இருக்கும்' என்றான் தேவன்.

'எங்கட இனமே ஒரு சபிக்கப்பட்ட இனம் அண்ண. பிறந்த இடத்திலும் மதிப்பில்ல. வந்து அடைக்கலம் புகுந்த இடத்திலும் அது இல்ல' என ரூபன் சொந்த இனத்தின்மீது பாய்ந்தான்.

'அப்பிடி இல்லை அண்ணா. எங்களுக்கு மாத்திரம் இந்த அநியாயம் நடக்கிறேல்ல. சிலவேளை ஜேர்மன் பெயர் வைச்சிருக்கிற நோர்வேகாரரின்ர அப்ளிகேஷனையும் தூக்கி குப்பையிலதானாம் போடுறாங்கள். பெயரத்தானே முதல்ல பாக்கிறாங்கள். ஆளை இல்லையே. அவங்களுக்கே அப்பிடி யெண்டா எங்களுக்கு நடக்கிறது ஒண்டும் அதிசயம் இல்லைத் தானே அண்ணா' என்றாள் வினோ.

'உண்மைதான். எங்களவிட முஸ்லீம் பெயர் எண்டா இன்னும் அலங்கோலம். கிழக்கு ஐரோப்பியருக்கும் கிட்டத் தட்ட அப்பிடிப்பட்ட நிலைமைதான்...' எனத் தேவன் அதை உறுதிப் படுத்தினான்.

'அப்ப என்ன சொல்லுறியள் தேவன் அண்ணா? பெயரை மாத்துவமே?' என்றான் ரூபன்.

'சொந்தப் பெயரை வித்துத்தான் வேலை வேண்டோ ணும் எண்டா தொடர்ந்து நீ கழுவுற வேலையே செய்யலாம். அதை விட்டிட்டு றை பண்ணும். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் எண்டுவினம். முயற்சிய எப்பவும் கைவிடக்கூடாது.'

'ரூபன் அண்ணா இருந்து சாப்பிட்டிட்டுதான் போகோணும்.' வினோ கூறினாள்.

'அதுக்கென்ன நீங்கள் சமைச்சு நான் சாப்பிடாமல் போகேலுமே? உண்மையாவே வினோ குழல் புட்டு அவிச்சா ஊரில பார்வதி மாமி அவிக்கிற குழல்புட்டு மாதிரியே இருக்கும்.'

'அதுக்கென்ன ரூபன் அண்ணா, குழல் புட்டு அவிச்சாப் போச்சுது.'

'என்ன செய்யிறது. ஊரில எண்டா குழல் புட்டு, எண்ணைப் புட்டு, ஒடியல் புட்டு, குரக்கன் புட்டு, ம்... இப்படி எத்தினைய அவிப்பினம். அதுக்கேற்ற ஆளடுக்கா மீன் கீரையும் தோதா இருக்கும். இஞ்சை குழல் புட்டுத்தான் அவிக்கலாம். வேற ஒண்டும் செய்யேலாது' என்றான் தேவன்.

'இதே பெரிய விஷயம். இங்க இதுவும் இல்லாமல் நிறையப்பேர் இருக்கினம். உங்க தமிழ்க் கடையில கண்டதையும் வேண்டிச் சாப்பிடலாம். ஆனா நெஞ்சுக்க எப்ப குத்தும் எண்டு தான் தெரியாது' என்றான் ரூபன்.

'உண்மைதான் ரூபன். ஊரில நாங்கள் வீட்டிற்குள்ளேயே இருப்பம்? அதுவும் ஒரு பெட்டியை முன்னால வைச்சுக் கொண்டு, குந்தி இருந்து தவம் செய்வமே?' வாழ்வு முறை வருத்தங்களாகப் பெருகுது. ஊரில ஓடின ஓட்டத்தில் அடங்கிப் போய் இருந்த வருத்தங்கள் எல்லாம் இப்ப எங்களுக்கு இருக்கிற சொகுசில புற்றீசலாய்க் கிளம்பி நிக்குது' எனத் தேவன் விளக்கினான்.

'இஞ்சை மட்டுமில்ல, இலங்கையிலையும் உதே கதை தானாம். இப்ப வெளிநாட்டுக் காசும் போய், அதனால கொழும்பு வாழ்க்கையும் வந்தபிறகு, அங்கையும் ஒருபகுதி சனத்துக்கு உதுதான் நிலை' என வினோ இடையில் புகுந்து கூறினாள்.

'அது சரிதான். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை எண்டா என்னமாதிரி? ஒண்டு வரேக்க இன்னொன்று போகத்தானே செய்யும்.'

'உண்மைதான் தேவன் அண்ணா. பாதுகாப்பும் காசும் வேணும் எண்டா, ஊர் சுகத்தை மறக்கோணும். ஊர்சுகம் வேணும் எண்டா காசையும் பாதுகாப்பையும் பற்றி நினைக்கக்கூடாது. ஏதாவது ஒண்டுதான் கிடைக்கும். இரண்டும் எங்களுக்கு வாழ்க்கையில கிடைக்கும் எண்டு நினைக்கேலாது.'

'உந்தப் பிரச்சனை வந்திருக்காட்டி இந்த வெளிநாட்டைப் பற்றின கவலையில்லாமலே சந்தோஷமாய் இருந்திருப்பம்.

அளவுக்கு அதிகமாக பணம் வந்திருக்காது எண்டது உண்மை. அதேநேரம் நாங்கள் நிம்மதியைத் துலைச்சுப்போட்டு அலைஞ் சிருக்கவும் தேவையில்லை. எல்லாம் இந்தப் பிரச்சனை தொடங்கிச்சுது. பிறகு ஜே. ஆர். தன்ர நரிக்குணம் காட்ட, அதை எங்கட சுய நலத்திற்கு ஏதுவா எடுத்துக் கொண்டோம். இப்ப கடைசியாப் பரதேசத்தில இருந்து பகற்கனவு காணுற கூட்டமாகீட்டம்' என்றான் தேவன்.

'சரியாச் சொன்னீங்கள் அண்ண. நாங்களே எங்களை அழிச்சுக் கொண்ட இனம் அண்ணை. போற போக்கைப் பார்த்தால் கனவு காணக்கூட எங்களுக்கு எண்டு ஒரு தேசம் இருக்காதண்ண. நாங்கள் ஒரு சபிக்கப்பட்ட இனம் அண்ண. எங்கட இனத்தில ஏழுகோடி சனம் இருக்கண்ண. ஆனா எந்த நாடும் எங்களுக்குச் சொந்தமில்லையண்ண. எங்கை எண்டாலும் யாருக்கோ அடிமையாகத்தான் இருக்கிறம். அதில வேற சந்தோஷப் படுகிறம்.' ரூபன் குமுறினான்.

'அப்படிச் சொல்லேலாது ரூபன். அந்தந்த நாட்டுக்கு ஏற்ற மாதிரி உரிமைகள் இருக்கோணும். இப்ப இந்தியாவில மாநில சுயாட்சி நல்லாத்தான் இயங்குது. அதை நாங்கள் மறுக்கவே முடியாது. ஆனா அதே மாநில சுயாட்சி இலங்கையில சரிவராது. ஒரு காலமும் நிண்டு பிடிக்காது. அதுக்கு ஏதாவது ஒரு வித்தியாச மான தீர்வு வரவேணும். வந்த கொஞ்சத்தையும் கைதவற விட்டிட்டாங்கள்.'

'நீங்கள் சொல்லுறதும் நியாயந்தான். ஆனா இனி அந்த சந்தர்ப்பம் திரும்பி வருமே அண்ண? ஏமாற்றுபவனும் ஏமாறுபவனும் மாறாத நாடண்ண அது' என்றான் ரூபன்.

'வரும் என்ற நம்பிக்கையிலேயே எங்கட வாழ்க்கை முடிஞ் சிடும் ரூபன்.'

'சரியாச் சொன்னீங்க அண்ண.'

அன்று சனிக்கிழமை. தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்குப் போய் வந்தபின்பு வினோ சமையல் வேலையில் மும்முரமாய்

இருந்தாள். தேவன் வெளிப்படிக்குப் பெயின்ற் அடிப்பதில் ஒன்றிப்போய் இருந்தான். சுபனுக்கு எதை எடுத்தாலும் விளையாட்டு.

சுபன் பெயின்ற் ரின்னை சரித்துப் பார்த்தான். பின்பு தான் பெயின்ற் அடிக்கப் போவதாக தேவனிடம் அடம் பிடித்தான். தேவன் சிறிது நேரம் பெயின்ற் அடிக்கக் கொடுத்தான். பின்னர் அவன் தன் பணியைத் தொடர்ந்தான்.

மீண்டும் சுபனுக்கு பெயின்ற் அடிக்க வேண்டும் என்கின்ற ஆசை வந்தது. அவன் திடீர் எனப் பாய்ந்து தேவனை நோக்கி வந்த வேகத்தில், பெயின்ற் ரின்னில் அவன் கால்பட்டு அது சரிந்து விட்டது.

தேவனுக்கு கோபம் உச்சிவரை ஏறியது. மண்டை கிழியக் குட்டுப் போட வேண்டும் என்கின்ற வெறி தலைக்கேறியது. மிகவும் சிரமத்தோடு அவன் பொங்கிய மூர்க்கத்தை மனிதனாக அடக்கினான். அந்தக் காலத்து அப்பா இல்லை நான் என்கின்ற வைராக்கியச் சங்கிலி போட்டு கோபத்தைக் கட்டினான்.

என்றாலும் தனது ஆற்றாமையைச் சமாளிக்கத் தெரியாதவனாய், 'சும்மா இருக்க மாட்டியே...' எனக் கத்தியவண்ணம் சுபனைப் பார்த்து பல்லை நறுமினான்.

'நான் தெரியாமல்தானே செய்தன்.' சுபன் பதிலளித்தான்.

'சும்மா இரு, சும்மா இரு எண்டு எத்தின தரம் சொல்லுறது?'

'நான் தெரியாமல் செய்திட்டன். சொறி.'

தேவனுக்கு அப்படியும் கோபம் அடங்கவில்லை. 'போடா' என வெறுப்பாகக் கத்தினான்.

சுபன் சிறிது நேரம் முறைத்துக் கொண்டு நின்றான்.

பின்பு திடீரென, 'நான் சொறி சொன்னபிறகும் பேசிறியள். நான் தெரிஞ்சே செய்தனான்? அப்பா கூடாது. அப்பா கூடாது...'

அழுது கொண்டு உள்ளே ஓடினான்.

தேவனுக்கு சங்கடமாய்ப் போய்விட்டது. பெயின்ற் அடிப் பதை விட்டுவிட்டு உள்ளே போனான். சுபன் வினோவிடம் நடந்ததைப் பற்றி சொல்லிச் சொல்லி அழுதான்.

தேவனைக் கண்டவுடன், 'அப்பா நீங்க கூடாது. என்னோட இனிக் கதைக்க வேண்டாம்' என்று கூறினான். பின்பு அவன் தொடர்ந்து அழுதான். அது தேவனின் நெஞ்சை நீண்ட நேரம் பிழிந்தது.

பிழை, சரி என்பது பார்க்கப்படும் கோணத்தில் வித்தியாசப் படத்தானே செய்கிறது. மாற்று மனிதனின் மனதிற்குள் புகாத வரை வேற்று மனிதனின் சிந்தை வியப்பாகத்தானே இருக்கிறது? சொந்த இரத்தம் என்றாலும் வயதும் இடமும் சிந்திப்பதில் எவ்வளவு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது? தேவன் ஞானம் பெற்றான்.

୨

வேலையால் வரும்போது மழை பெய்துகொண்டு இருந்தது. தேவன் வீட்டிற்குள் அவசரமாக வந்தான். சப்பாத்தை யும் ஜக்கற்றையும் கழற்றி வைத்துவிட்டு, யன்னலண்டை போய் நின்று மழையைப் பார்த்தான்.

பருவத்தின் சுழற்சியால் மழைக்காலம் தொடங்கியது. அது தொடங்கி சில நாள்களில், அவசரமாக வயல்கள் பச்சைப் பட்டு உடுத்தி இளம் தென்றலுடன் கொஞ்சி விளையாடின. இவ்வித அற்புதக் காட்சி கண்டு மயங்காத மானிடன் இல்லை. அழகிய பச்சைப்பட்டுத் தரித்த அவ்விளங் கன்னி மிகுந்த பொலிவோடு மாவெட்டை எங்கும் விரிந்து கிடந்தாள். இந்நாளில் வெட்கம் அற்று, யாரையும் பார்ப்பேன் என்கின்ற மமதை அவளிடம் இருந்தது. இன்னும் சிறிது காலம் சென்றால் மஞ்சள் பட்டு உடுத்தி, தலைகுனியும் காட்சியும் கண்கொள்ளாது.

கறுப்பன் நெல்லின் சுகந்த மணம் நாசித் துவாரத்தை அடைக்கும். அதுதான் அவள் வாசம் என அது இனம் காட்டி நிற்கும். அந்தக் கிறக்கத்தில் நித்தம் அவளிடம் வருபவர் பலர்.

இன்று தேவன் மாவெட்டைக்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது பிள்ளையார் கோயில் வீதியால் வந்துகொண்டு இருந்தான். மாரி நீரால் கேணி நிறைந்து வழிந்தது. பலர் அங்கே நீச்சலடித்து மகிழ்ந்தனர். சிலர் ஓடிச் சென்று குத்துக் கரணம் அடித்தனர். அதைப் பார்ப்பதற்கு அவனுக்கு மிகவும் ஆசையாக இருந்தது. அந்த ஆசை சிறிது சிறிதாக் ஊதிப் பெருத்து, தானும் நீந்த வேண்டும் என்கின்ற எண்ணத்தை அவனுள் வளர்த்தது. தேவன் உடனே அதை மெதுவாக அம்மாவிடம் கேட்டான்.

'அம்மா ?'

'ம்?'

'நானும் கேணியில குளிக்கோணும்.'

'உனக்கு நீந்தத் தெரியாது அப்பன்.'

'அங்க அவைமாதிரி சண்டிக் கட்டில பொம்மை கட்டிக் கொண்டு நீந்தலாம்.'

'அது எல்லாம் ஆபத்து. அப்பாவோட இல்லாட்டி அமுத னோட வரவேணும்.'

'அப்பாவோட வேண்டாம்.'

'சரி நான் அமுதன் அண்ணாவைக் கேட்டுப் பாக்கிறன்.'

'ம்....' தேவன் கவலையாக வந்தான்.

'என்ன ? '

'எப்ப அமுதன் அண்ணாவை கேட்பா ?'

'இப்பிடி அவசரப்பட்டா எப்பிடி...? அமுதன் அண்ணாவைக் கண்ட உடன கேட்கிறன்.'

தேவன் அரைமனதாக 'ம்...' என்றான்.

தேவனின் அம்மா அவன் நீந்தக் கேட்டதை மறந்துபோய் இருக்க வேண்டும். அமுதன் அண்ணா வரவும் இல்லை.

அவனைக் கூட்டிச் செல்லவும் இல்லை. அடுத்த சனிக்கிழமை. தேவன் பத்துமணி போல் மெதுவாக கோயிலை நோக்கிச் சென்றான். மனது நிம்மதி இன்றி அலைந்தது. ஆசை போதை யேறி போவென்று தள்ளியது.

அம்மாவை எப்போதும் சமாளிக்கலாம் என்பது தேவனுக்கு நன்கு தெரியும். அப்பாதான் கர்ச்சிக்கும் அரிமா போன்று நிற்பார்.

தேவன் ஆசையோடு ஓட்டமும் நடையுமாகச் சென்றான். இன்று தேவன் புதிய சாறம் கட்டி இருந்தான். 'பொம்மை கட்டுவதற்கு நல்ல சாறமாக இருக்க வேண்டும். கட்டாடி யிடம் சலவைக்குப் போன சாறத்தை எல்லாம் நம்பி பொம்மை கட்ட முடியாது. இடையிலே பொம்மை கிழிந்தால் அவ்வளவு தான்' என நினைத்துக் கொண்டான்.

ஒல்லிக் கோளை கட்டி எடுக்க வேண்டும் என்பது அவன் ஆசை. ஆனால் அதற்கு அமுதன் அண்ணாவின் உதவி வேண்டும். அம்மாவிடம் கூறினால் ஆம் என்றுவிட்டு பின்பு மறந்து போய் விடுவாள் எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

கோயிலின் வடக்கு வீதியில் வழமைபோல நீர் தேங்கி நின்றது. நல்ல வெயில் என்றால் அந்த நீர்கூட சூடாகி விடுகிறது. இன்னும் சிறிது சூடேறினால் வால்பேத்தையெல்லாம் துடித்துத் துடித்து செத்துப்போய்விடும். அந்தளவு வெப்பத்தை தேவனால் வெள்ளத்தில் உணர முடிந்தது. கேணிநீர் அப்படியல்ல. அது குளிராகத்தான் இருக்கும் என எண்ணிக்கொண்டு கேணியை நோக்கித் தேவன் ஓட்டமும் நடையுமாகச் சென்றான்.

கேணியடியில் ஒரே சத்தமாய் இருந்தது. ஓடிக் குத்துக் கரணம் அடிப்பவர்கள், நீந்துபவர்கள், பொம்மை கட்டி நீந்துபவர்கள், ஒல்லிக் கோளையோடு நீந்துபவர்கள், புறநீச்சல் அடிப்பவர்கள், செத்த பிணம் போல் மிதப்பவர்கள் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசாய் நீந்தினர். தேவனுக்கு இவற்றையெல்லாம் பார்க்க வியப்பாய் இருந்தது. அதற்குமேல் வெளியே நின்று வேடிக்கை பார்க்கும் பொறுமை அவனிடம் இருக்கவில்லை. மெதுவாக நீரில் இறங்கினான்.

சிவசம்பு மாமா கேணியில் குளித்துக் கொண்டு நின்றார். அவர் திடீரென தேவனை அவதானித்துக் கொண்டார். 'டே தேவன்' என்றார். தேவன் திரு திருவென முழித்தான்.

'உனக்கு நீந்தத் தெரியுமேடா?'

'இல்ல.'

'அப்ப எப்பிடியடா உன்ன நீந்த விட்டவ?'

தேவன் பேசவில்லை.

'சொல்லாமல் வந்திருக்கிறா... ம்... திருட்டுக்குளிப்பு என்ன? அப்பிடித்தானே வடுவா ?'

'இல்ல மாமா. அப்பா கேட்டாலும் வரமாட்டார். அதுதான்.'

'அது சரியடா... ஆனா நீந்தத் தெரியாமல் மாரிக் கேணியில இறங்கிறதும் உசிதம் இல்லையெல்லே?'

'தெரியும் மாமா. அதுதான் பொம்மை கட்டிக்கொண்டு குளிக்கப் போறன்.'

'ஒல்லிக் கோளை இல்லையேடா. பொம்மை கட்டுறதை நம்பேலாது. இடையில அவுண்டு போயிடும். சரி... நடுக் கேணிக்குப் போகாமல் மேல் படியில் நிண்டு குளி. நான் பாக்கிறன்...' என்றார்.

'சரி மாமா.'

தேவன் சிவசம்பு மாமாவின் துணிவோடு கையைக் காலை அடித்து நீச்சல் அடித்தான். அவனுக்கு அது மிகவும் குசியாக இருந்தது. நடுக்கேணியில் ஒருநாள் தானும் குத்துக் கரணம் அடிக்க வேண்டும். மிக விரைவாக தானும் அப்படிக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை நெஞ்சமெல்லாம் படர்ந்து வளர்ந்தது.

சிவசம்பு மாமா தனது குளிப்பை முடித்துக்கொண்டு மேலே ஏறத் தயாராகினார். தேவனுக்கு தொடர்ந்து நீந்துவதா அல்லது அவரோடு கரையேறுவதா என்பது புரியவில்லை. கரையேறுவதற்கு அவனுக்கு மனதேகவில்லை. தேவன் நெளிந்தான்.

'எழும்பு தண்ணிக்கால....' என்றார் சிவசம்பு மாமா.

'இல்ல கொஞ்சம் குளிக்கப் போறன்.'

'அது சரியடா அப்பா. நாளைக்கு ஒல்லிக்கோளைய கொண்டந்து போட்டிட்டு நல்லாக்கிட. உந்தப் பொம்மையை நம்பி தனிய நிக்காத... எழும்பி என்னோட வா.'.

'இல்ல மாமா. இன்னும் கொஞ்ச நேரம்...'

'சரி அப்ப நீ குளி ராசா, நான் இப்பிடியே போய்க் கொப்பனிட்ட சொல்லிட்டுப் போறன். சரியோடா?'

'இல்ல மாமா நான் வாறன்.'

'கொப்பன்ர பெயரச் சொன்னா எல்லாருக்கும் நடுங்குதடா.'

'அடிச்சுப் போடுவார் மாமா.'

'அடியாத மாடு படியாதெல்லேடா.'

'அது மாட்டுக்குத்தான் சரி மாமா.'

'டேய் நீ நல்லாக் கதைக்கிறா.'

'உண்மைதானே மாமா?'

'எது ?'

தேவனுக்கு சோகமாய் இருந்தது. சிவசம்பு மாமா எது என்று கேட்டது ஒருவித கவலையைத் தந்தது. அடியாத மாடு படியாது என்பது அவனுக்கு மீண்டும் துக்கத்தைத் தந்தது.

'என்னடா பேச்சக் காணோம்?'

'மாட்டுக்கு அடிக்கிறது மாதிரி மனிசருக்கு அடிக்கிறது தப்புத்தானே? மாட்டுக்கே அடிக்கிறது இப்ப தப்புத்தானே மாமா?'

சிவசம்பு மாமா பேசாது நடந்தார். தேவனுக்கு தான் கதைத்தது சரியா என்கின்ற பயம் எழுந்தது.

'என்ன மாமா நான் ஏதும் பிழையாகக் கதைச்சுப் போட்டனே?'

'இல்லையடா.'

'அப்ப நீங்க பேசாமல் வாறியள்?'

'நீ உன்ர அம்மா மாதிரி. இளகிய மனசு அதைத்தான் நினைச்சன். கொப்பன்ர குணம் நேர் எதிர் எல்லே.'

அவர் முரட்டு அப்பா.

'சரி வீடு வந்திட்டுது. போய் உன்ர அலுவலைப் பார். ஒல்லிக் கோளை இல்லாமல் கேணிப் பக்கம் போகக்கூடாது. சரியே?'

'சரி மாமா.'

தேவனுக்குச் சிவசம்பு மாமாவைப் பிடிக்கும். அவர் சிறிய பிள்ளைகளோடும் நண்பர் போலப் பழகுவார். சிவசம்பு மாமா அப்பாவைவிட நிறைய வித்தியாசமானவர் எனத் தேவன் எண்ணிக் கொண்டான். நினைவுகளுடனே படலையைத் திறந்து உள்ளே காலடி எடுத்து வைத்தவனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது.

மீண்டும் முதுகுப் புண் காயாமல் இம்சை செய்துகொண்டு இருப்பதான உணர்வு. ஓட்டின் வெப்பம் உள்ளே கசிந்து சுண்ணாம்பு அறைபோல வீட்டிற்குள் புழுக்கம் ஏறியது. தேவன் இன்று வெளியே போகாமல் நல்ல பிள்ளையாக இருக்கவேண்டும் என எண்ணினான். புத்தகம் ஒன்றை எடுத்து வந்து முற்றத்தில் நின்ற வேம்பின் நிழலின் கீழ் இருந்து வாசிக்கத் தொடங்கினான். அண்டங் காக்கா ஒன்று அடம் பிடித்துக் கத்திக் கொண்டு இருந்தது. சில கிளிகள் கிழக்கு நோக்கிப் பறந்தன. அவை மாவெட்டையை நோக்கிச் செல்லுகின்றன எனத் தேவன் எண்ணிக் கொண்டான். அங்கே பரந்து கிடக்கும் வயல்களில் நெல்மணிகளைத் திருடப் போகின்றன என்பதை அவன் புரிந்து கொண்டான்.

காற்று சாதுவாக வீசத் தொடங்க வேப்பமர நிழல் சுவர்க்கபுரியாக மாறியது. தேவன் அந்த சுகத்தை மிகவும் அநுபவித்தான். காவோலைகள் சில அடித்தொண்டையால் ராகம் சரி செய்து கொண்டு இருந்தன.

விசாலாச்சி மாமி வீட்டு நாய் தனது சொந்த வீடுமாதிரி முன்படலையால் வந்து உள்ளே நுழைந்து, பின்பக்கமாகக் கோயிலை நோக்கிச் சென்றது. வீட்டுநாய் இதைப் பார்த்து விட்டுப் பாய்ந்து பாய்ந்து குரைத்தது. வெள்ளைக் கோழி குஞ்சு களோடு கிணற்றடியில் நின்றது. இந்தமுறை தாரா முட்டையும் வைத்து நான்கு தாராக் குஞ்சுகளும் பொரித்திருந்தது. அதையும் சேர்த்து வெள்ளைக் கோழி கூட்டிக் கொண்டு திரிந்தது.

அதற்கு மேல் புத்தகத்தை வைத்துக்கொண்டு அங்கே இருக்க அவனுக்கு மனம் வரவில்லை. எழுந்து கிணற்றடிக்குச் சென்றான். சேற்றுக்குள் காலை வைக்காமல் மெதுவாக ஒரு குஞ்சைப் பிடித்து ஆசையோடு கொஞ்சினான். அது மிகவும் மென்மையாக இருந்தது. தடவத் தடவ பூரிப்பாய் இருந்தது. தேவன் குஞ்சை மோந்து பார்த்தான். அவன் அதைத் தடவிய வண்ணம் இருக்கும்போது 'டே பெரியதம்பிய வெட்டிப் போட்டாங்களாம்' எனக் கத்தியவண்ணம் பலர் ஓடிப்போகும் சத்தம் கேட்டது.

தேவனுக்கு என்ன செய்வது என்பது புரியவில்லை. அவன் குஞ்சை மெதுவாகக் கீழே விட்டான். படலையடியில் போய் நின்று விடுப்புப் பார்க்கலாம் என எண்ணியவன் படலையை நோக்கி ஓடினான்.

ஐந்தாறு பேர் விடுப்புப் பார்க்க அவசரமாகச் சென்று கொண்டு இருந்தனர். தேவனுக்கு தானும் போனால் நல்லாய் இருக்கும் எனத் தோன்றியது. இன்று நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும் என்கின்ற எண்ணம் இன்னும் நலிந்து போகாது அடம் பிடித்தது.

பெரியதம்பியை வெட்டுவது என்றால் அது பெரிய பிரச்சனையாகத்தான் இருக்கும் என்பது தேவனுக்குப் புரிந்தது. தேவன் பொறுமை இழந்தான். அங்கு போக வேண்டும் என்கின்ற ஆசை முழுமூச்சுடன் எழுந்து நின்றது.

இன்னும் சிலர் தெருவால் வேரப்பிட்டியை நோக்கிச் சென்று கொண்டு இருந்தனர். அவர்களின் நடையிலேயே ஒரு விறுவிறுப்பு. புதினம் பார்க்கும் அடங்காத ஆசை. தேவன் இரட்டைப் படலையில் ஏறி நின்று விடுப்புப் பார்த்தான்.

ஒழுங்கைக்குள் வெள்ளை ஏபோட்டி கார் ஒன்று வந்தது. அது கார்க்கார சிவபாலனுடையது என்பதை தேவன் கண்டுகொண்டான். எங்காவது அவசரம் என்றால் அது வரும். எதற்கும் துணிந்து வரக்கூடியவன் அவன் ஒருவன்தான். வேரப்பிட்டி ஆட்களை ஏற்றுவதற்கு எல்லோரும் சம்மதிக்க மாட்டார்கள். உழைக்கலாம் என்றாலும் பயத்தில் வரமாட்டார் கள். எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் சிவபாலன் மட்டும் வருவான். அவனும் இல்லை என்றால் வேரப்பிட்டி மனிதர்கள் இரத்தம் ஒழுக ஒழுக மாட்டுவண்டிலில் ஏற்றிக்கொண்டு போவார்கள்.

சிவபாலனின் கார் வருவதென்றால் மிகவும் ஆபத்தான பிரச்சனையாக இருக்கவேண்டும். அங்கே போய் அதை என்ன வென்று பார்க்க வேண்டும். இவ்வாறு எண்ணினான் தேவன். தேவனின் அவா பெருக, பொறுமை, கட்டுப்பாடு என்பன மதியத்துச் சூரியனைக் கண்ட பனித்துளி போலாயிற்று.

தேவன் இரட்டைப் படலையில் இருந்து குதித்து ஓடினான். மெதுவாக சின்னப் படலையைத் திறந்து ஒழுங்கையில் நழுவினான். தேவனுக்குத் தலை வெடிக்கும் அவசரம். வேகமாக இளைக்க இளைக்க கார் போன திசையில் ஓடினான்.

சிவபாலனின் கார் ஒழுங்கை முடியுமிடத்தில் நின்றி ருந்தது. அதற்கப்பால் கார் போக முடியாது. நெற்காணிகள் நிறைந்த பகுதி அதை வழிமறித்து நின்றது. அது வெள்ளாளரின் குடியிருப்பையும் பள்ளரின் குடியிருப்பையும் ஊடறுத்து பிரித்து வைத்திருந்தது. மனிதரை மனிதர் புரிந்துகொள்ளாத பகுதிக்கு அது அழியாச் சாட்சியாய் அங்கே ஊடறுத்து நின்றது.

எல்லோரது பார்வையும் ஒருவித தவிப்போடு வேரப் பிட்டியையும் அங்கிருக்கும் குடியிருப்புகளையும் நோக்கிய வண்ணம் இருந்தது.

சிவசம்பு மாமாவும் அங்கு வந்திருந்தார். தேவன் அவருடன் போய்ச் சேர்ந்து கொண்டான். அவர் சிவபாலனிடம் சென்று கதைக்கத் தொடங்கினார்.

'என்னடா அப்பா நடந்ததாம்?'

'சரியாத் தெரியேல்ல சிவசம்பண்ணை. ஆனா ராமக் குட்டியின்ர பெடி பெரியதம்பிக்கு நல்ல வெட்டாம். கொண்டு போறத்துக்குள்ள உயிர் போயிடுமோ தெரியாது எண்டு என்ன கூப்பிட வந்த செல்லற்ற பெடி சொல்லிச்சுது.'

'ஆர், ராமக்குட்டியின்ர மூத்த பெடியே? '

'அவன் போன மாசமெல்லே திருவன்ர பெடிய வெட்டி னவன். இவன்ர கூடாத காலம் அவன் பிழைச்சிட்டான் போல.'

'பிழைச்சா விடுவங்களே? அவங்கள்தான் இப்ப திரும்பத் தீட்டி இருக்கிறாங்கள் போல இருக்குது.'

'உனக்கேன் உந்த சவம் காவி வேலையெல்லாம்?'

'என்ன செய்யிறது அண்ண ? உழைப்பு வேண்டாமே? உங்க மோட்டார் கந்தசாமி என்ன வேலை செய்யிறார்?'

'ஓ, அவனும் மேசன் வேலைக்குப் போறவனாக்கும்?'

'வெள்ளாளர் எண்டு நினைச்சுக் கொண்டு வயித்துக்க மண்ணை அள்ளிப் போடவே முடியும்?'

'இது ஒரு கதையேடா அப்பா? எங்கட சனத்திட்ட இல்லாத கடையளே? எங்கயாவது அங்கின போய் கவுரவமாக உழைக்கிறதுதானே?'

'அது எல்லாருக்கும் சரிவராது அண்ணை. அங்க என்ன இருக்குது எண்டும் எனக்கு விளங்கேல்ல. சிங்களவனிட்ட அப்பப்ப அடிவேண்டிக் கொண்டெல்லே அவையும் வருகினம். எல்லாரும் ஊரவிட்டிட்டு போய் பரதேசத்தில இருந்து உழைக்கோணும் எண்டு என்ன விதியே? கடையில நிண்டாலும் என்னத்தப் பெரிசாத் தரப்போகினம்?'

'அது சரி, உன்ர பாடு என்ன மாதிரிப் போகுதடா?'

'ஊருக்க நாலு கார் வைச்சிருந்தா எப்பிடியண்ண ஒழுங் கான வருமானம் வரும்? அதுதான் பிணங்காவுற வேலை யெண்டாலும் பிச்சை எடுக்காமல் இருந்தால் சரி எண்டு முடிவு பண்ணியாச்சு. ஒண்டில இறங்கினா பிறகு அதைவிட்டு நான் மாறமாட்டன். அது என்ர போலிசி.'

'ஓ, உன்ர போலிசி ஊருக்கே தெரிஞ்ச விசயம்தானே? அதுதானே உன்னத்தேடி வாறாங்கள். உவங்களை எல்லாம் ஏத்துறத்துக்கு ஒரு துணிவு இருக்கோணும். அது உன்னிட்ட தான் இருக்குது பார்.'

தேவன் இருவரும் பேசுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருந்தாலும் அவனது பார்வை மாத்திரம் வேரப்பிட்டி பக்கமாக ஆள் நடமாட்டம் தெரிகிறதா என்பதை அடிக்கடி துழாவிய வண்ணம் இருந்தது.

அங்கே இருந்து ஆட்கள் அவசரமாக வரத் தொடங்கி இருந்தனர். சாக்கு மூட்டையாக எதையோ காவிக்கொண்டு வந்தனர். சாக்கில் போட்டுத் தூக்குமளவிற்கா? எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. உயிருடன் இருக்கிறானா இல்லையா என்பதில் பெரிய குழப்பம் ஏற்பட்டது.

பாரத்தைத் தூக்கிக்கொண்டு வரம்பால் நடப்பது கத்தி மேல் நடப்பதான காரியம். அவர்கள் தள்ளாடித் தள்ளாடி நடந்து வருவதில் நேரம் விரயமாகிக் கொண்டிருப்பதாக தேவனுக்குத் தோன்றியது. கவனமாகத்தான் வரவேண்டும். கீழே தவற விட்டால் ஏற்பு வைத்துச் சாவதில் இருந்து அவனைக் காப்பாற்ற முடியாது. அவர்கள் மிகவும் கவனமாகத்தான் வரட்டும். தேவன் புரிந்து கொண்டவனாய் அவர்களையே பார்த்தவண்ணம் நின்றான்.

அவர்கள் ஒருவாறு நெருங்கிவிட்டனர். அவனைச் சாக்கில் சுற்றித்தான் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிறைய இரத்தம் வீணாகப் போய் இருக்கிறது. சாக்கால் இரத்தம் இன்னும் கசிந்து கொண்டு இருந்தது.

வந்தவர்கள் அவனைத் தூக்கிக் கொண்டு வந்ததில் களைத்துப் போய் இருந்தனர். உயிர் போகும் அவசரத்தில் ஒருசிலர் துடித்தனர். செல்லனின் மகனும் அவர்களோடு வந்திருந்தான்.

அவன் அவசரமாக சிவபாலனிடம் ஓடி வந்து, 'அண்ண கதவைத் திறங்கண்ண,' என்றான்.

'உதென்ன உப்பிடி ஓடுது? நான் எப்படி உத ஏத்துறது?'

இரத்தத்தைக் கண்டபின்புதான் வில்லங்கம் புரிந்தவனாக சிவபாலன் கேட்டான்.

'ஐயோ அண்ண, வேணும் எண்டா பெடியளக் கொண்டு கார் கழுவித்தாறன். இப்ப கதவத் திறவுங்கோ அண்ண.'

'சரி, சொன்ன சொல்லு மாறாமல் என்னோட வந்து கார் கழுவித் தந்திடோணும்.'

'சரியண்ண நாங்கள் செய்து தாறம்.'

'அப்ப பின்னுக்கு ஏத்துங்க.'

தேவனுக்கு இப்போது இரத்தத்தைப் பார்க்க அவதியாக இருந்தது. சற்று தலை சுற்றுவது போலவும் இருந்தது. அவன் சிறிது தூரம் சென்று நின்று கொண்டான். இரத்தவாடை அங்கும் அவனைத் தேடி வருவதான பிரமையில் அந்தரித்தான்.

சிவசம்பு மாமா காருக்கு கிட்டச் சென்றார். அவருக்கு இது பழக்கப்பட்ட ஒன்றாய் இருக்க வேண்டும். இப்படி நிறையக் குத்து வெட்டுகளைக் கண்டிருப்பார். கள்ளுக்கடை, சாராயக் கடை அல்லது காணிச் சண்டை என்பவற்றில் இடைக்கிடை நடக்கும் சமாச்சாரம்தான் இதுவெனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

சிவசம்பு மாமா செல்லனின் மகனைப் பார்த்து, 'என்னடா தோள்மூட்டிலயே காயம்?' என்று கேட்டார்.

'ஓ...'

'என்ன பாளைக்கத்தியேடா?'

'பாளைக் கத்திக்கு இவன் சுருண்டு போற ஆளோ ஐயா?'

'அப்ப ?'

சிவசம்பு மாமாவின் முகத்தில் நம்பமுடியாத அதிர்ச்சி சுவடு பதித்ததை தேவனால் உணர முடிந்தது.

'வெட்டுக் கத்தி ஐயா. ஓல வெட்டுற வெட்டுக் கத்தி!'

'அட நாசமா போனவங்களே! ஆஸ்பத்திரி வரைக்கும் தாங்குவானோடா ?'

'என்ன செய்யிறது ஐயா! எல்லாம் பிள்ளையார் விட்ட வழி.'

'ம் பிழைச்சா பிள்ளையார் கோயில்ல இருந்து ஒரு தூக்கு காவடிய எடுக்க வையுங்கோடா' என்றார் சிவசம்பு மாமா. அதற்கு பதில் சொல்லாது காருக்குள் அதை ஏற்றுவதில் கவனம் செலுத்தினான்.

பின் இருக்கையில் படுக்க வைத்த சாக்கு மூட்டையை இருவர் கவனமாகப் பிடித்துக் கொண்டு இருந்தனர். சிவபாலன் காரை ஸ்ராட் செய்தான்.

சிவபாலனின் கார் மறைய அப்பா கோபமாக அங்கு வந்து கொண்டு இருப்பதை தேவன் கண்டுகொண்டான். தேவன் தாமதிக்கவில்லை. பக்கத்து வீட்டிற்குள் நுழைந்து அவர்கள் வளவின் ஊடாக வீட்டை நோக்கி ஓடினான்.

10

வினோ அன்று மோதகம் அவித்து இருந்தாள். வினோ வுக்கு ஏதாவது நினைப்பு வந்துவிட்டால் அந்த விருப்பத்தைச் சமையல் செய்து தீர்த்துக் கொள்ளுவாள். இப்போது என்ன நினைவு வந்திருக்கும் என்பதை தேவனால் அனுமானிக்க முடிந்தது. இது கார்த்திகையின் கடைசி நாள்கள். ஊரில் பிள்ளையார் கோயிலில் இருபத்தொரு நாள்கள் பிள்ளையார் கதை நடக்கும். பெருங்கதையன்று விசேடமாய் இருக்கும். மனிதனின் சின்னச் சின்ன குதூகலங்களைவிட பணத்திற்கும் பொருளுக்கும் அடிமையாகும் மனிதர்களோடு வாழுவதால் நாங்களும் அந்த சின்னச் சின்ன குதூகலங்களை இழந்து விட்டோம் என்பது தேவனுக்குப் புரிந்தது. மோதகத்தைச்

சாப்பிடத் தொடங்கியபோது நா இனிப்பில் திளைத்தாலும், மனசு கசந்தது. தேவன் தன்னை மறந்து நினைவுகளில் மூழ்கினான்.

தேவனுக்கு அன்று கட்டுக்கடங்காத குதூகலம். பிள்ளையார் கதை முடிந்து சூரன் பேர் ஒருவாறு வந்தது பெரும் புளுகைத் தந்திருந்தது.

தேவன் அன்று காலையில் இருபத்தியோராவது நாள் கடைசி பிள்ளையார் கதைக்குப் போய் வந்திருந்தான். மோதகமும் எள்ளுருண்டையும் கொடுத்தார்கள். மோதகம் அடிக்கடி சுவைக்கக் கிடைப்பது உண்டு. எள்ளுருண்டையின் சுவை மாத்திரம் இன்னும் நாக்கில் ஒட்டிக்கொண்டு இருப்ப தான பிரமையில் இருந்தான். எள்ளுருண்டைக்கு இப்படி ஒரு சுவையா? அவனால் அதன் சுவையை மறக்க முடியவில்லை. தேவனின் அம்மா காவல்காரனுக்கு படையல் வைக்கும்போது எள்ளுருண்டை செய்வா. அதுவும் இப்படியே அமிர்தமாய் இருக்கும் என்பதை பலமுறை அநுபவித்து இருக்கிறான். அம்மா தேவனை அதிகமாக எள்ளுருண்டை சாப்பிட விடுவ தில்லை. 'வயித்தால அடிக்கும் மோன. அதிகம் சாப்பிடக் கூடாது' எனத் தடுத்து விடுவா. இன்றும் அதிகம் கிடைக்க வில்லை. கிடைத்தது அமிர்தமாய் இன்னும் நாவில் ஒட்டி இருந்தது.

தேவன் இன்று சூரனோடு வாசகசாலைக்குப் போவது என்று முடிவு செய்து கொண்டான். அப்பா அறிந்தால் என்ன செய்வார் என ஒருகணம் எண்ணித் தவித்தான். அவனுள் என்ன செய்வார் என்கின்ற கேள்வி பிறந்து திமிறியது. இதுக் கெல்லாம் பயந்து அருமையான சந்தர்ப்பத்தை தான் இழக்க முடியாது என அவன் முடிவு செய்து கொண்டான்.

தேவன் மூன்று மணிபோல் வேட்டி ஒன்றை மடித்துக் கட்டிக்கொண்டு மெதுவாக வெளியே வந்தான். அப்பா இன்று பள்ளிக்கூடம் செல்லவில்லை. பிள்ளையார் கதைக்குப் போய் விட்டு வந்து மதியச் சாப்பாடு சாப்பிட்டார். மரக்கறிச் சாப்பாட்டின் மயக்கத்தில் பின்பு குறட்டை விட்டுத் தூங்கினார்.

இன்னும் நித்திரை கலையவில்லை. இந்த நித்திரையில் இருந்து அப்பா எழும்ப மாட்டார் என்கின்ற துணிவில் தேவன் ஆறுதலாக வெளியே சென்றான்.

படலைக்கு வெளியே சென்றபின்பு, மெதுவாக வேட்டியை மடித்துச் சண்டிக்கட்டு கட்டிவிட்டு, ஓட்டமும் நடையுமாக கோயிலை நோக்கிச் சென்றான். பண்டாரம் வளவிற்குள் மாடு, ஆடுகள் மேய்ந்து கொண்டு இருந்தன. இலவங்காட்டைச் சுற்றி இப்போது முள்ளுக் கம்பி அடிக்கப்பட்டிருந்தது. பண்டாரம் வள்வு ஊடாகச் சென்றால் காலில் சேறு படியும். என்றாலும் வேறு வழி இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அவன் சேற்றை மிதித்தான். வேட்டி பத்திரமாய் சண்டிக்கட்டாய் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான். அவுண்டு இங்கே விழுந்தால் வேட்டிக் கரையில் சேறு பட்டுவிடும் என்பது அவனுக்குத் தெரியும்.

இன்று அதிகம் ஓடித் திரிய வேண்டும் என அவன் முடிவு செய்தவனாய் வேட்டிமீது சணல் கயிற்றால் கட்டி இருந்தான். பின்பு அதன் மேலே சால்வையை மடித்துக் கட்டி இருந்தான். என்ன நடந்தாலும் வேட்டி அவுண்டு விடக்கூடாது என்பதில் அவன் அதிகம் கவனம் செலுத்திக் கொண்டான்.

தேவன் ஓட்டமும் நடையுமாகக் கோயிலை நோக்கிச் சென்றான். காலில் இன்னும் சேறு விடாப்பிடியாக ஒட்டிக் கொண்டு இருந்தது. சேற்றோடு கோயிலுக்குப் போவது குற்ற மெனத் தேவன் எண்ணினான். அதைக் கழுவுவதற்கு கேணியை நோக்கி ஓடினான்.

கோயிலில் சூரனை ரக்டரில் வைத்துக் கட்டிக்கொண்டு இருந்தார்கள். மணற்காட்டு அம்மன் கோயிலுக்கு முன்னால் இருக்கும் வாசகசாலைக்கு இன்று சூரனோடு போக வேண்டும். அங்குதான் சூரனை அலங்கரிப்பார்கள். பின்புதான் அவர் பிள்ளையாரைத் தேடி போருக்கு வருவார். வந்து தன்னுடைய உயிரை இம்முறையும் விடுவார். அதற்கான ஆயுத்தங்கள் நடப்பது அவனுக்குப் புரிந்தது.

கால் கழுவிவிட்டு ஓடோடி வந்த தேவன் காரியத்தோடு ரக்டரில் சூரனை வைத்துக் கட்டுபவர்களுக்கு ஒத்தாசையாகக்

கயிற்றை எடுத்துக் கொடுத்தான். அப்படி ஒத்தாசை செய்தால் ரக்டரில் வாசகசாலை செல்லலாம் என்கின்ற ஒரு சிறிய கணக்கை அவன் மனதில் போட்டு வைத்திருந்தான்.

மணியகாரர் அங்கே வந்தார். அவர் உயரமும் உடம்பு மான உருவம் கொண்டவர். தேவனுக்கு அவரைப் பார்த்தால் சற்றுப் பயம் ஏற்படுவதுண்டு. அதையெல்லாம் அவன் காட்டிக் கொள்வதில்லை. அவரைப் பார்த்தால் அநேகருக்கு நடுக்கம் எடுக்கும். மெதுவாக நழுவிச் சென்று விடுவார்கள்.

கோயில் ஐயர் பிழை விட்டால் இங்கு பாவமன்னிப்பு கள் எல்லாம் கிடைப்பதில்லை. நிச்சயமாக அவர்களின் பூசாரிப் பதவி பறிக்கப்படும். கோயிலுக்கு வடக்குப் பக்கமாக ஐயரின் வீடு இருந்தது. அங்கே அடிக்கடி குடியிருப்பவர்கள் மாறுவார்கள். நித்தியபடிகள் இங்கு நிரந்தரமற்றவை. நைனாதீவில் இருந்து தான் குருக்கள் வருவார். அவரிடம் ஏதோ ஒருவித தெய்வக்களை உண்டு என்பதாய்த் தேவன் நினைத்துக் கொள்வான். அவரைப் பார்த்தால் மனசில் சந்தோஷம் ஏற்படுவதாய் தேவன் உணர்ந்து இருக்கிறான்.

ஊரில் பல கோயில்கள் உண்டு. பல குருக்கள்மார் வேலை செய்கிறார்கள். பிராமணனாய்ப் பிறந்துவிட்டால் மட்டும் அந்தத் தெய்வீகத் தோற்றம் வந்துவிடுவதில்லை. சில குருக் களைப் பார்த்தால் கள்ளரைப்போல இருக்கும். சிலரைப் பார்த்தால் வெறிகாரர் போல இருக்கும். இவரைப் பார்த்தால் மாத்திரம் பிள்ளையாரின் சாந்தத்தை தான் வாங்கிய பக்குவத் தில் தோற்றமளிக்கிறாரே எனத் தேவனுக்கு எண்ணத் தோன்றும்.

அவருக்கு ஒரு மகனும் உண்டு. அவரும் குருக்கள் பட்டம் பெறுவதற்குப் படித்துக் கொண்டு இருந்தார். அவர் திருவிழாக் காலத்தில் பெரிய குருக்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்.

மணியகாரர் தேவனைப் பார்த்து ஒருவிதமாகச் சிரித்தார். எதற்காகச் சிரிக்கிறார் என்பது தேவனுக்குப் புரியவில்லை. அவர் கிண்டலாகச் சிரிக்கிறாரா அல்லது நட்பாகச் சிரிக்கிறாரா என்பதை தேவனால் நிச்சயிக்க முடியவில்லை. தேவன் நெளிந்த வண்ணம் அவரைப் பார்த்ததான். பின்பு அவர் கிண்டலாகத்

தான் சிரிப்பார் என அவன் எண்ணிக்கொண்டான். மணியகாரர் தேவனைப் பார்த்து, 'என்ன கொப்பருக்கு சொல்லிப்போட்டே வந்தனீ?' என்றார்.

'ஓ ...'

'உன்ர இழுவையப் பார்த்தா பேசாம ஓடிவந்திருப்பாய் போல இருக்குது.'

'இல்ல.'

'சரி. வாசகசாலைக்கு இவங்களோட போய்ச் சின்ன அனுமார் உடுப்பு ஒண்டு இருக்குது. அதைப் போட்டு ஆடுவியே?'

'ஓ, ஆடுறன்.'

'சரி, அப்ப தேவனையும் கவனமாக ரக்டரில ஏத்திக் கொண்டு போங்க' கூறிய மணியகாரர் கோயிலுக்குள்ளே சென்றார்.

தேவனுக்கு புளுகம் தாங்க முடியவில்லை. செந்தில் அண்ணா ரக்டரில் ஏறுவதற்கு உதவி செய்தார். ரக்டர் மெதுவாக ஊர்ந்து சென்றது. சூரன் பள்ளமும் மேடுமான பாதையில் ஆடா மல் இருக்க வேண்டும் என்கின்ற கவனத்தோடு ரக்டர்காரன் அதைச் செலுத்தினான்.

வாசகசாலைக்கு வந்தபோது மேளகாரர் இன்று விசேட மாக வரவழைக்கப்பட்டிருப்பது தேவனுக்குப் புரிந்தது. அவர்கள் காரில் வந்து இறங்கி இருந்தனர். சூரன் வெளிக்கிட நேரமெடுக் கும் என்பதால் வெற்றிலை போட்டுக்கொண்டு ஆறுதலாக இருந்து கதைத்தனர்.

நிறைய சிறுவர்களும் இளந்தாரிகளும் வந்துவிட்டார்கள். பலரும் அனுமார் வேடம் போட்டு ஆடும் ஆசையோடு வந்திருந்தனர். தேவனுக்குத் தனது சின்ன உடுப்பு கிடைத்து விடவேண்டும் என்பதே பிரார்த்தனையாக இருந்தது.

எல்லோரும் வாசகசாலைக்குள் புகுந்துகொண்டனர். தேவனுக்குப் பெரிய இளந்தாரிகளுக்கு நடுவே போவதற்கு சற்று பயமாக இருந்தது. தேவன் வாசலில் தயக்கத்தோடு நின்றான். எங்கு இருந்து செந்தில் அண்ணா வந்தவனோ தெரியாது.

'டே இஞ்ச ஏன்ரா நிக்கிறாய்? உன்னையெல்லே மணியகாரர் சின்ன உடுப்பு போட்டு ஆடவேணும் எண்டு சொன்னவர்.'

'ஓ ... ஆனா ... '

'என்ன ஆனாவும் ஆவன்னாவும்... வாடா... '

'இல்ல அவங்களுக்குள்ள் போகப் பயமாக இருக்குது ...'

'அவங்கள் ஒன்றும் உன்னைச் சாப்பிட மாட்டாங்கள். உள்ள வா...'

'சரி...'

'நல்லா ஆடோணும் என்ன?'

'ம் ...'

செந்தில் அண்ணா கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே போனான். பின்பு தேவனுக்கு அளவான அந்த உடுப்பை எடுத்துக் காட்டினான். வேட்டியை மடித்து இறுக்கமாகக் கோவணம் கட்ட உதவினான். உடம்பை சால்வையால் போர்த்தி அனுமார் உடுப்பைப் போட உதவி செய்தான். சால்வையை அப்படிப் போட்டால் மேலில் பெரிதாக அரிப்பு இருக்காது எனச் செந்தில் அண்ணா விளக்கம் கூறினான்.

'எப்பிடி ஆடுவாய் ? ஆடிக்காட்டு பாப்பம்.'

தேவன் முழித்துக்கொண்டு நிற்க... செந்தில் அண்ணா அவனுக்கு ஆடிக் காட்டினான். அவன் சுழன்று சுழன்று ஆடினான். அவன் ஆட்டத்தைப் பார்க்க தேவனுக்கு ஆழம் தெரியாமல் காலை விடுவதாகச் சிறிது தயக்கம் ஏற்பட்டது.

'பாத்தியே?'

'ம் ...'

எல்லோரும் வெளியே வந்தனர். கட்டாடிமாரும் மற்றையவர்களும் சூரனை அலங்கரித்து முடித்து இருந்தனர்.

நாதஸ்வரம் வாசிப்பவர்கள் சுதி பிடிக்கத் தொடங்கி இருந்தனர். ரக்டர் ஸ்ராட் செய்யும் ஓசை கேட்க மேளக்காரர்

வாசிக்கத் தொடங்கி இருந்தனர். எல்லோரும் ஆடினர். தேவனும் ஆடினான்.

கையில் ஒரு கம்பு தரப்பட்டிருந்தது. அதை ஆட்டி ஆட்டி ஆட சிறுவர் கூட்டம் எல்லாம் பயந்து கத்தியவண்ணம் ஓடுவதும் திரும்பி வந்து சேட்டை காட்டுவதுமாக இருந்தனர்.

வாசகசாலை தாண்டியவுடனே அம்மன் கோயில் சந்தி வந்தது. அங்கு மேளக்காரர் துள்ளித் துள்ளி அடித்தார்கள். எல்லோரும் அதற்கு ஏற்ப ஆட வேண்டி இருந்தது. தேவனைச் சுற்றிச் சிறுவர்கூட்டம் அலைந்தது. தேவனுக்கு அது ஒருவித குஷியைத் தந்தது. சிறுமிகளைக் காண அவர்களைப் பயமுறுத்துவது போல ஆடிக்காட்டினான். கம்பை விசுக்கினாலும் சிலர் பயந்து ஓடவில்லை. சிலர் பயந்து ஓடினார்கள். சிலர் அதை ரசித்தார்கள். சிலருக்கு அது ஒருவித சந்தோஷத்தைக் கொடுக்க, அவர்கள் தேவனுக்கு கிச்சு கிச்சு ஊட்ட முயன்றனர். அந்த வேளைகளில் பெரிய அனுமார்கள் அடிப்பது போல் ஓடிவருவார்கள். அப்போது எல்லோரும் குளறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

தேவனுக்குத் தேகமெல்லாம் வியர்த்தது. கண் ஓட்டையால் எல்லோரையும் நன்கு பார்க்க முடிந்தது. அம்மன் கோயிலுக்கு முன்னால் இருந்த தண்ணீர்க் குழாயில் சிலர் நீர் எடுத்துக் கொண்டு இருந்தனர். அம்மன் கோயில்வரையும் பக்திப்பாடலை வாசித்த மேளக்காரர்கள் பின்பு சினிமாப் பாட்டுக்கு மாறினார்கள். ‘அந்தமானைப் பாருங்கள் அழகு’ என்னும் சினிமாப்பாடலை அவர்கள் வாசித்தனர்.

‘எந்த மானைப் பாத்திட்டு வாசிக்கிறாங்கள்?’

ஒரு நரைத்தலைக் கிழவர் சத்தமாகக் கேட்டார். மேளகாரர் சிரித்தவண்ணம் இன்னும் உசாராக முழங்கித்தள்ளினர்.

சிவகாமி அம்மன் கோயிலடியில் சமா நடந்தது. அனுமார்களும் ஆட்டத்தின் உச்சிக்குப் போயிருந்தனர். தேவன் அமுதன் அண்ணா அங்கு நிற்பதைக் கண்டு கொண்டான். தேவனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவன் ஆடி ஆடி அமுதனிடம்

சென்றான். பின்பு அமுதன் முன்பு நின்று நெளித்து நெளித்து ஆடிக் காட்டினான்.

அமுதன் சிறிதுநேரம் கண்ணைக் கூசிக்கொண்டு பார்த் தான். பின்பு திடீரென ஒளிவீசும் கண்களோடு முறைத்தான். அதைத் தொடர்ந்து மெதுவாக வந்து, 'அட நீ தேவனெல்லே' எனக் கூறியவண்ணம் அவனைக் கொத்தாகத் தூக்கிக் கொண்டான். பெரிய அனுமார்கள் ஒருவரும் அமுதனிடம் வரவில்லை. அமுதன் அண்ணா கிச்சுகிச்சு ஊட்டி தேவன் சிரித்த சத்தத்தில் அவனுக்கு இருந்த சந்தேகம் போக, 'ஓடடா' என இறக்கி விட்டான்.

சிவகாமி அம்மன் கோயில் சந்தியில் நின்று ஆட்டம் நடந்தது. அங்கே பலர் கூடி இருந்தனர்.

சிவகாமி அம்மன் கோயில் பக்கம் .மேசன் தொழில் செய்பவர்களும், மேசன் சாதியைச் சார்ந்த மீன்பிடித் தொழில் செய்பவர்களும் செறிந்து வாழ்ந்தனர். சிவகாமியம்மன் கோயிலில் அவர்கள் செய்யும் திருவிழா விசேடமாக இருக்கும். அதற்காக அநேகமான மக்கள் வருவார்கள். தேவனும் வருவதுண்டு. பலர் சிவகாமி அம்மன் கோயிலுக்கு இரவில் செல்வார்கள். இரவுத் திருவிழா விடிய விடிய நடைபெறும். அங்கேதான் தமிழையும் கலையையும் வளர்க்கும் கூத்துகள் தாராளமாய் அரங்கேறும்.

எவருக்கும் அந்தச் சந்தர்ப்பங்களைத் தவறவிட மனம் ஒப்பாது. ஊரறியா வண்ணம் இரவில் பலர் அங்கு சென்று விடுவார்கள். அப்போது எந்த வேற்றுமையும் இருக்காது. அந்தப் பகுதியில் தொலைக்காட்சிப் படங்கள் அதிகமாகக் காட்டு வார்கள். அப்படிக் காட்டும் போது, இரகசியமாகச் சென்று பார்த்து விட்டு, ஊர் விழித்துக் கொள்ள முதல் பெரிய மனிதராய் வீடு வந்து சேர்ந்து விடுவார்கள்.

தேவனுக்கு அநியாயமான அடக்குமுறையாகவே இது தோன்றும். தேவன் படித்து வரும் பாடசாலையில் நிறைய மேசன் சாதியைச் சேர்ந்தவர்களும் படித்து வந்தார்கள். அவர்கள் மிகவும் நெருங்கிய நண்பர்களாயும் இருந்து வந்தார்கள். அவர் களுக்கும் தனக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பது அவனுக்கு ஒருபோதும் புரிந்ததில்லை. ஊருக்குள் அது ஊமையான

வெறியாக இருந்தது. யார் உயர்ந்தவர்கள், யார் தாழ்ந்தவர் கள் என்பது அப்பட்டமாய் வகுக்கப்பட்டு கோடு கீறப்பட்டி ருந்தது.

ஒருநாள் தேவனைத்தேடி நண்பன் ஒருவன் வந்தான். தேவனும் யதார்த்தமாகவே வீட்டிற்குள் வருமாறு அழைத்தான். அவன் உள்ளே வரவில்லை. தேவனுக்குப் புரிந்தும் புரியாதது மான குழப்பம். தலைமையாசிரியர்தான் அவனை தேவன் வீட்டிற்கு அனுப்பி வைத்திருந்தார். அவன் பாடசாலைக்குக் காட்டுத்தடி கொண்டு போகவே வந்திருந்தான். வீடு கட்டித் தருபவர்கள் அவர்கள். அப்படி வீடு கட்டும் போதே அவர்கள் வீட்டிற்குள் இருந்துதான் சாப்பிடுவார்கள். அவர்கள் வீட்டிற்குள் போகாத இடங்கள் கிடையாது. அதற்கு எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. அப்படி இருக்கும்போது ஏன் அவன் வீட்டிற்குள் வர மறுத்தான்? தேவனுக்கு நெடுநாளாகவே அது குழப்பமாக இருந்தது.

தேவன் ஒருநாள் அவன் வீட்டிற்குச் சென்றிருந்தான். அவர்களுக்கு தேவன் சென்றது இராஜ வருகையாகியது. அவர்கள் வதனங்களில் அவ்வளவு பிரகாசம் ஜொலித்தது. தேவன் ஒரு கதிரையில் இருந்து கதைத்துக் கொண்டு இருந்தான்.

இடையில் அந்த நண்பனோடு அவரது சகோதரி சிறிது நேரம் ஏதோ இரகசியமாகத் தர்க்கம் நடத்தினார். ஒரு கடுமையான தர்க்கத்திற்குப் பின்பு, நண்பன் வெளியே சென்றான். பின்பு திரும்பி ஓடி வந்தான். அவன் கையில் சோடா இருந்தது. நிச்சயமாக தேநீரோ கோப்பியோ தாங்கள் தருவது முறையல்ல என அவர்கள் முடிவு செய்துகொண்டு விட்டார் கள் என்பதை தேவன் ஊகித்துக் கொண்டான். தேவன் அன்று எதைக் கொடுத்தாலும் அருந்தி இருப்பான். அவர்களின் முடிவு எதிர்மாறாக இருந்தது. தான் குடிக்கமாட்டேன் என அவர்கள் முடிவெடுத்தது அவனுக்கு வேதனையைத் தந்தது.

தேவன் ஆடினான். செல்லப்பா கடையில் இருந்து இன்று சோடா வந்தது. முதலில் பெரிய அனுமார்களுக்கு சோடா வழங்கப்பட்டது. அவர்கள் முகமூடியை உயர்த்திவிட்டு சோடா குடித்தனர். பின்பு தேவனுக்குக் கிடைத்தது. தேவனும் குடித்தான்.

முழுவதையும் விட்டுக் கட்ட முடியாது இருந்தது. அது சிறிது சோகம் தந்தது. புழுங்கியவண்ணம் அதை அங்கு நின்ற ஒரு சிறுவனிடம் கொடுத்து விட்டுத் தொடர்ந்தும் தேவன் ஆடினான்.

சூரன் மெதுவாக நகர்ந்தது. செல்லப்பா கடை தாண்டி, ஆலடியை நோக்கிச் சென்றது. ஆலடியில் நிறைய கூட்டம் கூடியிருந்தது. தேவன் சுற்றிச் சுற்றி ஆடிவந்தான். ஆலடி மாணிக் கத்தார் ஒரு குலை வாழைப்பழத்தை சூரனோடு வந்தவர் களுக்கு இனாமாகக் கொடுத்தார். எல்லோரும் போட்டி பேட்டு வாழைப்பழத்தைப் பிய்த்து எடுத்துக் கொண்டனர். வாழைத்தார் மாத்திரம் சிறிது நேரத்தில் அநாதையாகத் தொங்கிக் கொண்டு இருந்தது.

தேவனுக்கும் வாழைப்பழம் கிடைத்தது. இது அவனது வேஷத்திற்குக் கிடைத்த மரியாதை என்பதைப் புரிந்து கொண்டான். சாப்பிடுவதற்கு முகமூடியைக் கழற்ற எண்ணிய போது தேவன் அப்பாவைக் கவனித்து விட்டான். எப்போது வந்தார் என்பது தெரியவில்லை. சைக்கிளில் வந்திருந்தார். நிச்சயம் இன்று கோயிலடிக்கு வருவார் என்பது தேவனுக்குத் தெரியும். ஆலடிக்கே வந்தது அவனுக்கு சற்று வியப்பை உண்டு பண்ணியது. தன்னைத் தேடித்தான் வந்திருப்பாரா? இருக்கலாம். தேவனுக்கு சற்றுச் சோர்வாக இருந்தது. வாழைப்பழத்தைச் சாப்பிட முடியாத ஏமாற்றம் ஒரு பக்கம் ஏறிமிதித்தது. அப்பா பார்த்துக்கொண்டு நிற்பது அவனுக்கு உறுத்தலாக இருந்தது.

தேவன் வாழைப்பழத்தை வைத்துக்கொண்டு சிந்தித்த வண்ணம் நின்றபோது, யாரோ ஒருவன் அதைத் தட்டிப் பறித்துக் கொண்டு ஓடினான். தேவன் விட்டுக் கலைத்துச் சென்று கையில் இருந்த கம்பால் அடித்தான். அவன் அடியை வேண்டிக் கொண்டும் வாழைப்பழத்தைக் கைவிடாது ஓடினான்.

நாதஸ்வரம் வாசிப்பவர்கள் 'என்னடி ராக்கம்மா'வுக்கு மாறி இருந்தனர். பெரிய அனுமார் வேடம் போட்டவனில் ஒருவன் விசுவர் கடையில் ஒரு போத்தலைத் திறந்து நிறைய இனிப்பு அள்ளிக் கொண்டு வந்தான். பின்பு அதை எல்லோருக்கும்

பகிர்ந்து கொடுத்தான். விசுவர் ஒரு தடியுடன் கடைக்கு முன்னால் வந்து நின்று கொண்டார். அதைப் பார்த்த மற்றவர்கள் மேற்கொண்டு அங்கே செல்லவில்லை.

சூரன் ஆலடி தாண்டி வேம்படியை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது. தேவன் அப்பாவைப் பார்த்தான். அவர் சைக்கிளில் வேம்படியை நோக்கிச் சென்று கொண்டு இருந்தார். சைக்கிளில் வந்தவர்கள் எல்லோரும் தற்போது வேம்படிக்கு சைக்கிளில் சென்றுவிட, மற்றவர்கள் சூரனுடன் நடந்து வந்தார்கள்.

வேம்படிக்கு வந்ததும் நிறைய சோடாக்கள் வழங்கப் பட்டன. பேக்கரிக்குள் சில அனுமார்கள் சென்று வந்தார்கள். அவர்கள் கைகளில் கேக் இருந்தது. கைக்கெட்டியது வாய்க்கு எட்டாத அந்தரத்தில் தேவன் இருந்தான்.

அப்பா பார்த்து விடுவாரோ என்கின்ற பயத்தில் அவன் முகமூடியைக் கழற்றவில்லை. பின்பு தேவனுக்குச் சற்று துணிவு வந்தது. அப்பாவுக்கு தான் போட்ட வேடம் தெரியுமா? தெரிந் திருக்க நியாயம் இல்லை என எண்ணினான். அப்பா மணிய காரருடன் கதைத்திருந்தால் தெரிந்திருக்கும். கதைத்திருப்பாரா? தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டுமென அவனுக்கு ஒரு அசட்டுத் துணிவு தோன்றியது. தேவன் துணிவை வரவழைத்துக் கொண்டு ஆடியபடி அப்பாவிற்கு அருகிற் சென்றான். தேவனின் அப்பா அவனைக் கண்டுபிடித்ததாய்த் தெரியவில்லை. அது அவனுக்கு சற்றுத் துணிவைத் தந்தது. அவன் துள்ளித் துள்ளி ஆடினான். தேவனின் அப்பா முதலில் சிரித்துக் கொண்டு நின்றார். தேவன் தொடர்ந்தும் அங்கு நின்று ஆடினான். சிறுவர் கள் கூட்டம் அவனைச் சூழ்ந்து கொண்டது. பெரிய அனுமார் ஒருவன் தடியால் வெருட்ட எல்லோரும் வெருண்டு ஓடினார்கள்.

தேவன் பின்பு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். நாதஸ் வரம் 'பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா ' எனக் கேட்டுக் கொண்டு இருந்தது.

கோயிலடிக்கு வந்து சேர்ந்தபோது கூட்டம் நிரம்பி வழிந்தது. அனுமார்களின் ஆட்டம் உச்சத்திற்குப் போயிருந்தது.

நாதஸ்வரம், தவில் வசிப்பவர்கள் எல்லாம் கூட்டத்திற்கேற்ப குதித்துக் குதித்து வாசித்தார்கள்.

சூரனை ரக்டரில் இருந்து இறக்கும் வேலை நடந்தது. இனித்தான் முறையான ஆட்டம் நடைபெறும் என்பது எல்லோருக்கும் புரியும். தங்கள் தங்கள் சிறுபிள்ளைகளை மெதுவாக இடுப்பில் ஏற்றிக் கொண்டனர். சூரனை ஆட்டுபவர்களின் கால்களுக்குள் அகப்பட்டால் சக்கையாகி விடுவார்கள் என்கின்ற பயம் எல்லோரிடமும் இருந்தது.

பல இளந்தாரிகள் சூரனைத் தூக்குவதற்குத் தயாராகக் கொடுக்கு கட்டிக் கொண்டனர். சூரனை ஆட்டுவது இலகுவான காரியம் அல்ல. தேரில் சாமியை ஆட்டுவதை விட பலமடங்கு பாரமானதும் கடினமானதுமாய் இருக்கும். சூரனைத் தூக்குபவர் கள் சூரனின் தலையை ஆட்டுபவனையும் சேர்த்து தூக்கிக் கொண்டு ஓட வேண்டும்.

தேவனைச் சாதுவாக ஒருவித நடுக்கம் பற்றிக்கொண்டது. சிவராசன் தொடர்ந்தும் இருவரோடு அங்குமிங்கும் அலைந்து திரிந்தான். தன்னைத்தான் தேடுகிறார்களோ என்கின்ற ஒருவித கலக்கம் அவனது கவனத்தை ஆட்டத்தில் பதியவிடவில்லை.

சூரன் இளைஞர்களின் கைக்கு மாறச் சத்தமும் கலகலப் பும் அதிகரித்தது. பிள்ளையாரைச் சகடையில் வைத்துத் தள்ளத் தொடங்கினார்கள்.

தேவனுக்கு ஆடி ஆடி அலுத்துப்போனது. குணன் அந்த உடுப்பைத் தருமாறு நச்சரித்தான். தேவன் அவனையும் கூட்டிக் கொண்டு வாகனங்கள் இருக்குமிடத்திற்குச் சென்றான். பின்பு அதைக் கழற்றிக் கொடுத்துவிட்டு வேட்டியைச் சரி செய்தான். அப்போது அவன் வியர்வையில் குளித்து இருந்தான். அதை அகற்றுவதற்கு தன் சால்வையால் தலை மேல் எல்லாம் துடைத்துக் கொண்டான். இதமான குளிர்காற்றுக்காக ஆர்வத் தோடு வெளியே வந்தான்.

வந்தவன் ஒருகணம் திடுக்கிட்டுப் போனான். அவனுக்கு என்ன செய்வது என்பது புரியவில்லை. பின்பு அவனையறியாத உணர்வு ஒன்று அவனை ஓடு எனக் கட்டளை இட்டது போல

இருந்தது. தேவன் தன்னை அறியாமலே ஓடத் தொடங்கினான். அவன் ஓடும்போது அமுதன் அண்ணா நிற்கமாட்டானா என்கின்ற ஒரு நப்பாசை. ஆனால் அமுதன் அண்ணாவைக் காண முடியவில்லை. தேவனுக்கு முதலில் எங்கு ஓடுவது என்பது புரியவில்லை. பின்பு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினான். சிவராசனும் அவனது கூட்டமும் தொடர்ந்தும் விட்டுக் கலைத்துக் கொண்டு வந்தார்கள்.

தேவன் ஓடினான். பூனையிடம் இருந்து தப்பிய எலி போன்று ஓடினான். அவர்களுக்கு விளையாட்டாக, தேவனுக்கு வினையாக, அவமானம் பிடுங்கித்தின்ன அவன் ஓடினான்.

தேவன் ஒருவாறு வேலியில் இருந்த பொட்டால் நுழைந்து தனது வீட்டு வளவிற்குள் வந்தான். உள்ளே ஓடியவன் கட்டி வைக்கப் பட்டிருந்த நாயை அவிழ்த்து விட்டான்.

நாய் குரைக்கும் சத்தம் நெடு நேரம் கேட்டது.

11

சுபன் அன்று கோபமாக வீட்டிற்கு வந்திருந்தான். வந்தவுடனேயே தொலைக் காட்சியைப் பார்க்கத் தொடங்கினான். தேவனுக்கு அது பிடிக்கவில்லை. ரிமோட் கொன்ரோலை எடுத்தான். தொலைக்காட்சிப்பெட்டி ஒளியைச் சுருக்கி உயிரை விட்டது. அப்படிச் செய்தால் சுபனுக்குக் கோபம் வரும் என்பது தேவனுக்குத் தெரியும். அதற்காக அவன் விரும்பிய நேரம் எல்லாம் தொலைக்காட்சியைப் பார்க்க விடமுடியாது என்பது தேவனின் எண்ணம்.

'ஒரு இடமும் நிம்மதியில்ல... பள்ளிக்கூடத்திலயும் துரத் துறாங்க. அது பத்தாது எண்டு நீங்களும் இங்க துரத்துறீங்க. இப்ப எதுக்கு ரீவிய நிப்பாட்டுறியள்?' அரைகுறையான தமிழில் கோபமாகக் கேட்டான் சுபன்.

'உன்ர வீட்டு வேலை முடிஞ்சுதே?'

'ஓ அதை நான் பள்ளிக்கூடத்திலேயே முடிச்சிட்டன்.' நொஸ்க்கில் பதிலளித்தான்.

'என்ன?'

'ஒரு மணிக்குப் பாடங்கள் முடிஞ்சிட்டுது. அதுக்குப்பிறகு இருந்து வீட்டுப் பாடங்கள் செய்து முடிச்சுப் போட்டுத்தான் வாறன்.'

'நீ என்ன செய்தாய் எப்பிடிச் செய்தாய் எண்டு நாங்கள் பாக்கிறேல்லேயே?'

'அதுக்காக அந்தப் புத்தகங்களையெல்லாம் நான் கட்டி இழுத்துக் கொண்டு வர முடியுமே?'

'அப்ப என்ன செய்யிறதாய் உத்தேசம்? அப்பா பள்ளிக் கூடம் வந்து உன்ர வீட்டு வேலைய பாக்கட்டே?'

'புத்தகம் எல்லாம் கொண்டரேலாது அப்பா.'

'என்னது?'

'அது பாரம்.'

'சரி அப்ப இனி கையெழுத்துக்கு மாத்திரம் என்னிட்ட வராதை.'

சுபன் கோபமாகத் தேவனைப் பார்த்துக்கொண்டு இருந்தான். இப்படி ஒருமுறை தேவன் அப்பாவை அந்தக்காலத்தில் பார்த்திருந்தால் மண்டை கிழிந்திருக்கும். பல கம்புகள் அடுக்கடுக்காக முறிந்திருக்கும். சுபனுக்கு அந்த பயமோ அவதியோ இல்லை. நிதானமாக பதில் சொல்லலாம். அதற்கு விரும்பிய நேரம் எடுத்துக் கொள்ளலாம். அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இருந்த மலைக்கும் மடுவுக்குமான மரியாதை நிமித்தங்கள் அழிந்த ஒருவித சமநிலை உறவு நிச்சயமாகிவிட்டது என்பதை அவன் அறியாமலும் இருக்கலாம்.

சுபனுக்கு அப்பாவின் மீது ஆத்திரமாய் இருந்தாலும் அவரது கையெழுத்து வேண்டும் என்கின்ற யதார்த்தம்

உறைத்தது. எப்படியோ சமாளிக்க வேண்டும் என்கின்ற கட்டாயத்தில் நெளியத் தொடங்கினான்.

'அப்பா. '

தேவன் கேட்காதவன் போல் இருந்தான். அவன் அப்படி இருப்பதைப் பார்த்துவிட்டு, 'அப்பா' எனப் பலத்துக் கத்தினான். தேவனுக்கு ஓங்கி அறைய வேண்டும் போல் இருந்தது.

என்ன செய்வது? முடியாது என்பதை தோல்வியுடன் உணர்ந்தவனாய், 'என்னடா?' என்கின்ற உறுக்கலில் தனது கோபத்தைக் காட்டினான்.

'ஏனப்பா கோவப்படுறியள்?' அவன் பதிலுக்கு உறுக்கினான்.

'இப்பிடி ஒரு பதிலை நான் சின்னனில என் அப்பாட்ட சொல்லி இருந்தா முதுகு புண்ணாகி இருக்கும்.'

'அது காட்டுமிராண்டித்தனம் அப்பா. கதைக்கிறதுக்கு, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுறதுக்குத்தான் வாயையும் மொழியையும் கடவுள் கொடுத்திருக்கிறார். அதை ஒழுங்காப் பயன் படுத்தாத மனிசர் மிருகத்தைவிட மோசமப்பா.'

தேவனுக்குச் சுபன் சொல்லுவது சரியெனப்பட்டது. இதையேன் வாத்தியாராக இருந்த என் அப்பாவால் புரிந்து கொள்ள முடியாது போயிற்று? அப்பாவிற்கு மட்டுமல்ல, எந்த வாத்தியாருக்கும் ஏன் இந்த உண்மை அங்கு புரியாமல் போயிற்று? ஒருவர் இருவர் எங்காவது புறநடையாக இருந்ததுண்டு. மேற்குத்தேய மக்கள் மொழிக்குக் கொடுக்கும் முதல் இடத்தை ஏன் தமிழினம் மறுத்தது? தொடர்ந்தும் மறுக்கின்றது? மற்றைய இனங்களும் அதைத்தானே செய்தன? பிரச்சினை என்பது பேசித் தீர்க்கப்பட வேண்டியது அல்லவா. வன்முறையைப் பாவிப்பதால் இமாலய இழப்புக்கள் மட்டும்தான் ஏற்படும். இதனால் ஒரு இனமே சிதைந்த சோகத்தை, வரலாற்றின் முதுகில் ஆழமாக எழுதிக் கொண்டவர்கள் நாங்கள் என்பதை மறுக்க முடியுமா? இவ்வாறு எண்ணியபோது தேவனுக்கு இதயம் வெடிப்பதான துக்கம் மேலிட்டது.

'அப்பா...' சுபன் தேவனை அழைத்தான்.

தேவனுக்கு தனது நினைவுகள் கலைந்தது சலிப்பைத் தந்தது.

'என்ன?' கோபத்தை மறைத்த வண்ணம் கேட்டான்.

'நான் ஒவ்வொரு நாளும் செய்யிற வீட்டு வேலையையும், அதுக்கான புத்தகத்தையும் மாத்திரம் கொண்டு வாறன். அதைப் பாத்திட்டு உங்கட கையெழுத்த வைச்சுத் தாங்கோ... சரியா?'

தேவனுக்கு அது நியாயமாகவேபட்டது. எதையும் திணிப்பதால் மலர்ச்சி ஏற்படுவதில்லை. அவனுக்கு என சில சுதந்திரங்கள் இருக்கின்றன. சில முடிவுகளை அவர்கள் தாங்களாக எடுத்துக் கொள்ளவும் இடமளிக்க வேண்டும். நம்பிக்கையும் ஒத்துழைப்பும் இல்லாத இடத்தில் வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

'சரியே அப்பா? '

'ம்... நாளை தொடக்கம் பிளான்ல இருக்கிற மாதிரி, வீட்டு வேலையையும், அதுக்குத் தேவையான புத்தகத்தையும் கொண்டு வரோணும்.'

'ம்...'

தேவனுக்குச் சுபனோடு சிறிது நட்பாய் இப்போது கதைத்தாக வேண்டும் எனத் தோன்றியது.

'என்ன அது அங்கையும் கலைக்கிறாங்கள் இங்கையும் கலைக்கிறாங்கள் எண்டு சொன்னாய்?'

'வேற என்னப்பா? எவ்வளவு வீட்டு வேலை?'

'ம்.... அதைத்தானே இரண்டு மணித்தியாலத்தில முடிச்சுப் போடுவா! அது பெரிய வேலையே உனக்கு? பிறகு வீட்டில இருந்து என்ன செய்யிறாய்?'

'ஏனப்பா ஃபுட்போலை மறந்திட்டியளே?'

'அது என்ன நெடுகவுமே நடக்குது?'

'அது நெடுக நடக்கேல்ல எண்டாலும், எனக்கு கேம் விளையாடவும் ரைம் வேணும்தானே?'

'அப்பிடிச் சொல்லு. கேம் விளையாடுறதிலதான் உன்ர முக்காவாசி ரைம் போகுது எண்ட உண்மையை நீ மறைக்க நினைச்சாலும் நான் பாத்துக்கொண்டுதானே இருக்கிறன்.' குற்றம் சாட்டுவதுபோலத் தேவன் கூறினான்.

'இல்லாட்டி சரியான போரிங் அப்பா. உங்களுக்கு அது தெரியாது.'

'உண்மைதான். நான் இல்லை எண்டு சொல்லேல்ல. ஆனா எல்லாத்துக்கும் ஒரு அளவு இருந்தா உனக்கு தாராளமாக நேரம் இருக்கும். அதை விட்டிட்டு விளையாட்டுக்குத் தொண்ணூறு வீதமான நேரத்தைச் செலவழிச்சுக் கொண்டு, சும்மா கொம்பி ளேன் பண்ணிக் கொண்டு இருக்கக் கூடாது.'

'அப்ப நான் என்ன செய்யோணும் எண்டுறியள்?'

'ரீவிக்கும் பீசிக்கும் முன்னால குந்தி இருந்து நேரத்தை வீணடிக்கிறத குறைக்கோணும். ஒரு நாளைக்கு ஒரு மணித்தி யாலத்துக்கு மேல உதுக்கு செலவழிக்கக் கூடாது. இந்த ஒரு விஷயத்தைச் செய்தால் உனக்கு ஏகப்பட்ட நேரம் மிச்ச மாகிவிடும்.'

'அப்பிடிச் சொல்லாதீங்க அப்பா. கேம் இல்லாட்டி சரியான போரிங்காப் போயிடும்.'

'அதிலேயே குந்திக் கொண்டு இருந்தா, உன்ர வருங் காலமே பாழாப் போயிடும். நீ இனிமேல் ஒரு மணித்தியாலத்துக்கு மேல இருக்கக் கூடாது. சரியே?'

'சரியப்பா.'

ஒத்துக்கொள்ள முடியாத ஒரு விடயத்தை ஒத்துக்கொண்ட சங்கடத்தை சுபனில் காண முடிந்தது.

தேவன் தொடர்ந்தான்.

'உங்களுக்கு இங்க ஒரு வேலையும் இல்ல. நாங்கள் சின்னனா இருக்கேக்கயே எவ்வளவு வேலையச் செய்திருப்பம்!'

'அப்பிடி என்னப்பா வேலை செய்தனீங்கள்?'

'அங்க ஊரில எங்களிட்ட மாடு, ஆடு, கோழி எல்லாம் இருந்தது. அம்மாவோட சேர்ந்து அதுகளை நானும்தான் பராமரிக் கோணும். காலையில எழும்பி மாட்டு சாணம் அள்ளோணும்? அதைக் கொண்டே வயலில கொட்டோணும். பிறகு இடைக்கிடை அத்தாய் என்கிற இடத்துக்கு நடந்து போய் தண்ணீர் குடத்தில சுமந்தரோணும். வயலுக்குப் போய் வேலைக்காரரோட சேர்ந்து வேலை செய்யோணும். பனந்தோட்டத்துக்குப் போய் விறகு கொண்டு வரோணும். விடியப்புறத்தில எழும்பிப் போய் பனங்காய் பொறுக்கி வரோணும். மாவிடிக்க இப்படி சிலவேலைகளில் அம்மாவுக்கு உதவி செய்யோணும்.'

'ஓ இப்பிடி எல்லாம் வேலை செய்தியளா? அது சரியப்பா, சாணம் அள்ளோணும் எண்டா என்ன?'

'மாடுகளின்ர சாணத்தை கையால எடுத்துக் கடகத்தில் போடோணும்.'

'சாணம் எண்டா மாட்டின்ர பஸ்சா (மலம்) தானே? உண்மையச் சொல்லுங்க... கைக்குக் கிளவுஸ் போட்டுக் கொண்டு தானே அள்ளுவியள்?'

'கிளவுஸ் எண்டா என்ன பொருள் எண்டது எல்லாம் எங்களுக்கு அப்ப தெரியாது. மூளாய் ஆஸ்பத்திரிக்கு போன பொழுது சில நேஸ்மார் போட்டிருக்கிறத பார்த்திருக்கிறேன். அது தான் எனக்கு அப்ப தெரியும்.'

'அப்ப எப்பிடி கையாலயா அள்ளி எடுத்தியள்?'

'வெறும் கையாலதான்.'

'ஐயோ பஸ்சாவை கையால அள்ளுவியளே?'

'மாட்டுச்சாணம் மற்ற மலம் மாதிரியல்ல. அது மணக் காது. கையை அரிக்காது. அதில கடவுள் பிடிச்சு பூசைக்கு வைப்பினம்.'

'ஆனா அதிலையும் நிறையப் பக்றீரியாதானே?'

'ம்... உண்மைதான்.'

'உங்களுக்கு வருத்தம் ஒண்டும் வரேல்லையா?'

'அப்பிடி ஒண்டும் எனக்கு வரேல்ல. சாணத்தை அந்தக் காலத்தில கிருமிநாசினிமாரித்தான் பாவிச்சாங்கள் எண்டு சொல்ல வேணும். பிள்ளையாரை இப்ப மஞ்சள்ள பிடிக்கினம். நாங்கள் பிள்ளையாரை சாணத்திலதான் பிடிச்சிருக்கிறம். அது தான் விசேடம். இதைவிட இன்னொரு விசயம் இருக்குது.'

'என்னது?'

'சாமி அறையில விபூதி இருக்குதெல்லே...'

'ம் வெள்ளையா நெத்தியில பூசிறது.'

'அது என்னத்தில செய்யிறது தெரியுமா?'

'மாட்டுச் சாணத்திலயா?'

'ம்....'

'ஐயோ நான் அதை இனி பூசமாட்டன்.'

'அப்பிடி இல்ல சுபன். அது எப்பிடி செய்யிறது எண்டு கேள்.'

'எப்பிடிச் செய்யிறது ?'

'உடன் சாணத்தை எடுத்து, அதில பெரிய வடைமாதிரி செய்து, பிறகு அதை நல்ல வெய்யிலில காயவைப்பினம். மாட்டின்ர சாணம் என்ன தெரியுமோ?'

'ஆ. . . பஸ்சா...'

'இல்ல. அது உண்மையாகச் சமிபடாத தாவர எச்சங்கள். சமிபடாத புல்லு, வைக்கல் தவிடு... இப்பிடி...'

'ஆங்... எப்பிடி எண்டாலும் அதில நிறைய பக்றீரியாவும் இருக்கும்.'

'பக்றீரியாவும் தாவர எச்சத்தில வேறு வகை, மிருக எச்சத்தில வேறுவகையா இருக்கும். இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்குது.'

'ம், பிறகு எப்பிடி இந்த வெள்ளைப் பவுடர் வந்தது?'

சுபனுக்கு அதை அறிந்து கொள்வதில் ஒருவித அவசரம்.

'பிறகு உமி கொண்டு வந்து மலைமாதிரிக் குவிப்பம். அதுக்குள்ள நல்லா காய்ஞ்ச வரட்டிய புதைச்சு நெருப்புக் கொள்ளியை செருகி விட்டால், இரவு இரவா கொள்ளிவாய் பேய் மாதிரி எரிஞ்சு எல்லாம் சாம்பலாகிவிடும்.'

'பொறுங்கப்பா பொறுங்க. அதென்ன வரட்டி, உமி, கொள்ளி வாய் பேய்... ? அடுக்கிக் கொண்டு போறியள்.'

'ஓ, அதா? வரட்டி எண்டா... சாணத்தில பெரிசா வடை மாதிரி தட்டி வைச்சு, அது காய்ஞ்ச பிறகு அதை வரட்டி எண்டுதான் சொல்லுவினம்.'

'ஓகே, உமி எண்டா என்ன?'

'ஒவ்வொரு நாளும் சாப்பிடுறமெல்லே சோறு?'

'ம்... நான் இல்ல... நீங்கள்...' சுபன் சாப்பாட்டு முறை பற்றிய உண்மையைத் திருத்தினான்.

'சொல்லுறத கேள்.'

'சொல்லுங்க...'

'அது கோதுமை மாதிரி கோதோடுதான் இருக்கும். அதை மெசினில போட்டுக் கோது வேறு அரிசி வேறு ஆக்குவினம். அப்பிடி ஆக்கினபின்பு வாற கோதை மாத்திரம் உமி எண்டுவினம். நாங்கள் மில்லுக்குப் போய் அதை அள்ளிக் கொண்டு வருவோம்.'

'நாங்கள் எண்டா?'

'நானும் அம்மாவும்.'

'அப்பாச்சி அதுக்கெல்லாம் வருவா?'

'ம் ...'

'பிறகு?'

'பிறகு கும்பியா மேடையில கொட்டி, அதுக்குள்ள வரட்டிகளைப் புதைச்சு, நெருப்பு வைச்சு விடுவினம். அது இரவு

இரவா எரியும். பிறகு நல்லா ஆறினபிறகு பாத்தா வைச்ச வரட்டி எல்லாம் திருநீறா மாறி இருக்கும். அப்பிடியே பெரிய பெரிய வெள்ளை வடைமாதிரி நீறு பூத்துப் போய் இருக்கும். பார்க்க ஆசையா அழகா இருக்கும். அதுதான் நீ சொல்லுற சாமி அறையில இருக்கிற வெள்ளைப் பவுடர். அதில எந்தப் பக்றீரியாவும் இருக்காது.'

'விபூதி செய்யிறதுக்கு இவ்வளவு வேலை செய்யோணுமா?'

'ம்... எரிய வைக்கிற உமிய என்ன செய்வினம் எண்டு தெரியுமோ? '

'என்ன செய்வினம்?'

'நாங்க சின்னனா இருக்கேக்க பற்பசை எல்லாம் வரேல்ல. அப்ப உமி எரிச்சு வாற சாம்பலைப் பத்திரப்படுத்தித்தான் கையால பல்லுத் துலக்குவம்.'

'கையால தீட்டிப் பல்லு இடுக்கில இருக்கிற ஊத்த போகுமே?'

'பற்பசையும் பிரஷ்ஷும் செய்யும் நவீன வேலையை அதால செய்யேலாட்டியும் படுகிற இடத்தில இருக்கிற பக்றீரியாக்களை அகற்றும். அதோடு சேர்த்து வேப்பம் குச்சியால பல்லிடுக்கைத் துப்பரவு செய்தா அதுக்கு நிகர் இல்லை எண்டு தான் சொல்லோணும்.'

வினோ அங்கே வந்தாள்.

'என்னப்பா? அவனைப் படிக்கவிடாமல் ஏன் உந்த தேவையில்லாத விளல் கதையளச் சொல்லிக்கொண்டு இருக்கியள்?'

'அப்பிடி இல்ல வினோ. நாங்கள் எப்பிடி இருந்தம் எண்டதை அவன் அறியோணும். தாமரைப் பூவில இருக்கிற அன்ரி யார் என்று கேட்கிற அளவில நாங்கள் அவனை வளர்க்கக் கூடாது. அதுதான் நான் இதைப் பற்றி எல்லாம் விபரமாகச் சொல்லுறன். '

'அதுவும் உண்மைதான். ஆனா படிப்பு வீணாப் போயிடும்.'

'அதைத்தானே பள்ளிக்கூடத்திலேயே முடிச்சுட்டு வந்திட்டன் எண்டு சொல்லுறான்.'

'மோன்.'

'ம்... நல்ல பழக்கம் இங்க.'

'எல்லாரும் அப்பிடித்தான் செய்யினம்.' சுபன் தான் செய்ததை நியாயப்படுத்த முயன்றான்.

'மற்றவை செய்யினம் எண்டு நானும் அதைச் செய்தன் எண்டு இங்க வந்து சொல்லாத. உப்பிடிச் சொல்லுறது உருப் படுறதுக்கு ஏத்த வழியில்லை.'

வினோ சற்றுக் கோபமாகப் பதிலளித்தாள்.

'சரி வினோ அவனை விடு. அவன் இனிமேலைக்கு வீட்டுப் பாடம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை கொண்டு வாறதாப் புரமிஸ் பண்ணி இருக்கிறான். சுபன் புரமிஸ் பண்ணினா அதை ஒழுங்காச் செய்வான்.'

தேவனுக்கு அப்பாவோடு இப்படிச் சுமுகமாக இருந்து கதைத்ததாக ஞாபகம் இல்லை. அப்பாவுக்கு அதில் நம்பிக்கை இருந்ததும் இல்லை. அப்பாவின் அதிகார அடக்கல் தலை மேல் ஏறி நிற்கும். அவருக்கு அவன் எந்தவித வாக்கையும் கொடுத்ததும் இல்லை. அவன் எப்போதும் தான் நினைத்தது போலவே நடந்து கொள்வான். அப்பாவிடம் அடிவேண்டும்போது உடலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்பது போல இருப்பான். இது சில வேளைகளில் அம்மாவிற்குப் பயத்தை உண்டுபண்ணுவதை, அவ சொல்லி அவன் அறிந்து கொண்டான். தேவனின் அப்பா விற்கு இந்த அசண்டையீனம் இன்னும் கோபத்தை உண்டு பண்ணும். கோபம் தலைக்கேறினாலும் கை ஓய்ந்துபோன கடுப்பில் அடிப்பதை நிறுத்திவிட்டுப் போவார்.

தேவனுக்குச் சற்று ஆச்சரியமாய் இருந்தது. பல கேள்விகள் மனதில் திடீரென முளைத்தன. எங்கள் சமுதாயத்தின் வளர்ச்சி எந்தத் திசையில் விருத்தி அடைந்து சென்றது? ஆன்மீகத்திலா? கலையிலா? அல்லது காதல் வசனம் பேசுவதிலா? ஏன் எங்கள் சமுதாயம் வளர்ச்சி குன்றியதாக, தரவுகளை விட்டுத் தற்பெருமை

பேசுபவர்களாக, இறுதியில் நாடற்ற பரதேசிக் கூட்டமாக மாறியது?

'என்னப்பா யோசிக்கிறியள்?'

'ம் … அப்பாவை நினைச்சன்.'

'பாவமப்பா… அவை உங்கள ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வரோணும் எண்டுதானே பாடுபட்டவை.'

தேவனின் உள்ளத்து வேதனையை அறிந்தது போல் வினோ கதைத்தது தேவனுக்கு வியப்பைத் தந்தது. தேவன் நிலைமையைச் சமாளித்தவண்ணம்….

'இருக்கலாம். ஆனா எனக்குச் சின்னனில அப்பிடித் தெரியேல்ல. சில வேளை எங்கட பிள்ளையும் அப்பிடித்தான் நினைப்பானோ என்னவோ?'

'எப்பிடி?'

'அப்பா அம்மாவுக்கு தன்ர சுதந்திரத்தை மதிக்கத் தெரி யேல்ல எண்டு…?'

'இதைவிடவும் நாங்கள் சுதந்திரம் கொடுக்கலாமே? பிள்ளைக்கு சரி பிழை தெரியாமல் எல்லே கெட்டுப் போவான்?'

'இதைத்தான் என்ர அப்பாவும் நினைச்சிருப்பாரோ என்னவோ?'

'என்ன சொல்லுறியள்?'

'ஒரு அப்பா பிள்ளையைப் பார்க்கிறதில, அந்தப் பிள்ளைக்குக் கொடுக்க நினைக்கிற சுதந்திரத்தின்ர அளவில, அவர் தன்னுடைய அநுபவத்தையும், சமுதாயப் பாதிப்பையும் வைச்சு முடிவெடுப்பார். அப்பிடித்தான் என்ர அப்பாவும் அவர் இருந்த சமுதாயத்திற்கு ஏற்ப, தன்ர அநுபவத்திற்கு ஏற்ப, மகனை இப்பிடித்தான் நல்லவனாக்கலாம் என எண்ணி இருக்கலாம். ஆனா அது எனக்கு அநியாயமாய் இருந்திருக்கும்.'

'உண்மையப்பா, அவங்கட ஜெனரேஷன் பார்த்த விதம், அவையின்ர எதிர்பார்ப்புகள் நிச்சயமாக வித்தியாசமாகத்தான்

இருந்திருக்கும். அப்பிடித்தான் அப்பா, நாங்கள் சுபனுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கிறதா நினைக்கலாம். ஆனால் அவன் பார்வை யில் இது மிகவும் இறுக்கமான கட்டுப்பாடாய் இருக்கலாம். அதுக்காக நாங்கள் அவனைக் கட்டாக்காலியா விட முடியுமோ?'

'கட்டாக்காலியா விடாட்டியும், அவனை நச்சரிக்கிறதைக் குறைக்கோணும்.'

'றை பண்ணினாலும் பழக்கதோசம் விடுகுதில்லையப்பா...'

'ம்.... பழக்கம் வழக்கமாகி, வழக்கம் ஒழுக்கமாகிவிடுது. இல்லையே? சரியெது பிழையெது எண்டுறதை மற்றவையின்ர நிலையில இருந்து சிந்திக்கோணும். அதை 'எம்பத்தி' எண்டுவாங்கள். மற்றவராகவே மாறி அவரின்ர நிலையில இருந்து சிந்திக்கேக்க அவர் படுகின்ற துன்பத்தை நாங்கள் அநுபவிச்சு அறிஞ்சு கொள்ளலாம் எண்டுவினம்.'

வினோ அதற்குமேல் பேசாது ஏதோ சிந்தனையில் மூழ்கினாள்.

12

தேவன் அதிக காலமாக ஒரு பொருளைத் தேடி அலைந் தான். அன்று அமுதன் களபூமிக்குப் போகிறான் என்றவுடன் அவனுடன் தொற்றிக் கொண்டான். அந்தப் பொருள் அமுதன் போகுமிடத்தில் கிடைக்கும் என்பதில் அவனுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

அமுதன் பால்குத்தி மடத்தடியால் சென்று, சாத்தாவல் கண்டு, களபூமி பிள்ளையார் கோயிலடி தாண்டி, கொல்லன் பட்டறைக்குச் செல்வதற்குத் திட்டம் போட்டிருந்தான்.

மாவெட்டை எங்கும் சிறுபோகம் குமரிப் பெண்ணாகப் பசுமை காட்டி நின்றாள். பயறு, எள்ளு, குரக்கன் எனப் பல

தானியங்கள் விளைந்து போய்க் கிடந்தன. வெள்ளரி, கொம்மடி போன்ற பயிர்களும் வரட்சியோடு போட்டியிட்டு விளைந்து போய்க்கிடந்தன. அமுதனுக்குப் பாசிப்பயிறு கண்ணை உறுத்தியது. சில வயல்களில் வெள்ளரிக் கொடி, கொம்மடிக் கொடி படர்ந்து செழித்து இருந்தன. குரக்கன் குலை போட்டுத் தலை சாய்ந்தாலும் கொறிப்பதற்கு உதவாது என்பது அவனுக்குத் தெரியும். சோளன் பொத்திகள் கைகூப்பி நிற்பதான பவ்வியம். அவித்துச் சாப்பிடலாம் அல்லது சுட்டுச் சாப்பிடலாம் என எண்ணிக் கொண்டான்.

இன்னும் பொழுது சாயும் கலகலப்பில் மாவெட்டை இருந்தது. துணிந்து கைவைக்க கூச்சமாக இருந்ததால் மேற் கொண்டு சைக்கிளை களபூமி நோக்கி உழக்கினான். திரும்பி வருவேன், வந்து இங்கு ஒரு சமர் நடத்துவேன் என மனதில் சபதம் எடுத்துக் கொண்டான். தேவனும் சேர்ந்து சைக்கிள் பெடலை உழக்க, சைக்கிள் வேகமெடுத்தது.

தேவனுக்குச் சிந்தனை எல்லாம் பயற்றங்காயைவிட தான் தேடிப் போகும் பொருளைப் பற்றியதாகவே இருந்தது. அவனால் அதைத் தொடர்ந்தும் மனதுக்குள் வைத்திருக்க முடியவில்லை. மெதுவாக 'அமுதன் அண்ணா' என்றான்.

'ம்...'

'நிச்சயமா கிடைக்கும் எல்லே?'

'ஓமடா.'

'கோபமா அண்ணா?'

'ச் அதில்ல பிரச்சனை.'

'அப்ப என்ன?'

'உந்தப் பயத்தங்காயில கைவைக்க முடியாமல் இருக்குது.'

'ஓ, அதே விசயம்?'

'பிறகென்ன? கைக்கெட்டற தூரத்தில இருக்குது. ஆனா காவலுக்கு ஆயிரம் கண்கள் சுற்றி அலையுது.'

தேவன் களுக்கென சிரித்தான்.

அமுதன் நச்செனு ஒரு குட்டு வைத்தான்.

'என்ன நீங்களும் குட்டுறியள்?'

'பிறகென்ன... நான் எரிச்சல்ல இருக்கிறன். நீ சிரிச்சு மகிழுகிறாய்... என்ன?'

'சொறி...'

'சொறி தேவன்... நான் குட்டினதுக்கு சொறி... என்ன நொந்து போச்சே?'

'நான் வேண்டுறதுக்கு இது ஒரு எறும்புக் கடியேல்லே...'

'ம்... வேண்டி வேண்டி எருமைமாட்டுத் தோலாப் போச்சு உனக்கு.'

'ம்...' எனத் தேவன் மறுத்துத் தலையை ஆட்டினான்.

'அப்ப?'

'யானைத் தோலாப் போச்சுது.'

'டே உந்த வளையத்தைக் கொண்டு போய் ஓட்டிக்கொண்டு திரிஞ்சயெண்டாலும், கொப்பர் மொத்தவெல்லே போறார்?'

'தெரியும்.... ஆனா உதுக்கெல்லாம் பயந்தா உண்டே?'

' நீ வேண்டி வேண்டி இப்ப நல்லாத் துணிஞ்சிட்டா?'

'பிறகென்ன அண்ண? அவர் பள்ளிக்கூடத்தில காட்டிற வித்தைய வீட்டிலையும் காட்டினா... எத்தின நாளைக்குத்தான் பொறுக்க முடியும்?'

'அதுவும் சரிதான்.'

சைக்கிள் வயல்களைப் பின்தள்ளி களபூமிப் பிள்ளையார் கோயிலை நோக்கி விரைந்தது. இந்தப் பிள்ளையார் கோயில் வாரிவளைவுப் பிள்ளையார் கோயில் போன்றது அல்ல. இது மிகவும் சிறிய கோயில். ஒரு நிமிடத்தில் சுற்றிவரும் சிறிய வீதி. தேவன் ஒருபோதும் இங்கு திருவிழா என வந்தது கிடையாது. இந்தக் கோயிலின் வீதியைச் சுற்றியதும் கிடையாது.

அம்மாவோடு வந்தால் மாத்திரம் இந்தக் கோயிலுக்கு வந்து, வாசலில் நின்று, பிள்ளையாரைக் குட்டிக் கும்பிட்டுவிட்டுச் செல்வது உண்டு.

இன்று அமுதனோ தேவனோ அந்தப் பிள்ளையார் கோயிலில் நின்று மினக்கெடவில்லை. 'அப்பு பிள்ளையாரே, அரோகரா சிவம்' என எண்ணிக்கொண்டு அவர்கள் அதைத்தாண்டி வேகமாகக் கொல்லன் பட்டறையை நோக்கிச் சென்றனர்.

பிரதான வீதியில் இருந்து விலகி சற்று உள்ளே அந்த பட்டறை இருந்தது. அது விசாலமான பட்டறையாக இருந்தது. ஒரு சூளையில் உலோகத்துண்டுகள் தட்டி வளைப்பதற்காய் வெந்து கொண்டு இருந்தன. செல்லத்துரைதான் அதன் உரிமையாளர். மேலும் இருவர் எடுபிடியாக வேலை செய்தனர்.

அமுதன் தான் சொல்லி வைத்திருந்த வெட்டுக் கத்தி பற்றிச் செல்லத்துரையிடம் கேட்டான். அவர்கள் அதை ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்ததால் எடுத்துக் கொடுத்தனர். அதற்கான பணத்தைக் கொடுத்துவிட்டு அமுதன் திரும்பத் தொடங்கி இருந்தான். அதைப் பார்த்த தேவன் பதைபதைத்துப் போனான். பின்பு தன்னைச் சுதாரித்த வண்ணம், 'அண்ணா என்ர சாமான்...' என்றான்.

'ஓ நான் மறந்து போட்டனடா,' கூறிய அமுதன் செல்லத்துரையிடம் சென்று, 'இவனுக்கு ஒரு வளையம் உருட்டிக் கொண்டு திரிய வேணுமாம். உங்களிட்ட ஏதும் இருக்குதே?' என்று கேட்டான்.

செல்லத்துரைக்கு தேவனை முதலிலேயே தெரிந்து இருந்தது. தேவன் அம்மாவோடு கலப்பை செய்ய வந்தபோது அவனைச் செல்லத்துரை பல முறை பார்த்து இருக்கிறான்.

'அதுக்கென்ன வாத்தியாற்ற பிள்ளைக்கு இல்லாததே?' என்றவண்ணம் செல்லத்துரை சிறிது நேரம் தேடி ஒரு வளையத்தை எடுத்து வந்து கொடுத்தான். அமுதன் அதை வேண்டித் தேவனிடம் கொடுத்தான். தேவனுக்கு சந்தோசம் மட்டுக் கொள்ளவில்லை.

'வளையம், வளையம்' எனக் கத்தினான்.

அமுதன் செல்லத்துரையிடம் 'வளையத்துக்கு காசு' என இழுத்தான்.

'ஐயோ தம்பி... அது வாத்தியாற்ற பிள்ளை. இதுக்கெல்லாம் காசு அவையிட்ட வேண்ட மாட்டன்' என்றான்.

'சரி, நாங்கள் அப்ப போட்டு வாறம்.'

'சரி.'

சைக்கிளில் ஏறியபின்பு தேவன் அமுதனிடம் பேச்சுக் கொடுத்தான்.

'அமுதன் அண்ணா?'

'ம்...'

'செக்கல் மக்கலாப் போச்சுது.'

'அதுதான் நல்லது.'

'ஐயோ! அப்பா அறிஞ்சா துள்ளுவார்.'

'அப்பா அறிஞ்சா என்னிட்ட கேட்கச் சொல்லு.'

'பிள்ளையார் அப்பா என்னக் காப்பாத்து.'

'கிழவியள் மாதிரி தொணதொணக்காமல் இருக்கிறியே?'

தேவன் அமுதனை மேலும் கடுப்பாக்க விரும்பவில்லை. சைக்கிள் வேகமெடுத்தது. அது களபூமிப் பிள்ளையார் கோயிலைப் பின்தள்ளி, சுந்தரமூர்த்தி பாடசாலை தாண்டி, வயலை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது.

'அமுதன் அண்ணா...'

'ம்...'

'கவனம்... சில சனம் போகாமலும் நிக்கும்.'

'தெரியும் எனக்கு.'

பின்பு அமுதன் மெதுவாக சைக்கிளை நிறுத்தி ஒரு குரக்கன் வயலுக்குள் சாய்த்துக் கிடத்தினான். தேவனிடம் இருந்து

வளையத்தை வேண்டி சைக்கிளில் கொழுவியவன் வெட்டுக் கத்தியை எடுத்துக் கொண்டான். இதைப் பார்த்த தேவன், 'என்ன குருத்தே வெட்டப் போறியள்?' என்று கேட்டான்.

'டேய் வாயப் பொத்தடா. ஆரும் கண்டா சந்தேகப் படப்போகினம்.'

தேவனும் அமுதனும் மெதுவாக நடக்கத் தொடங்கினார்கள். முதலில் ஒரு சிறுபயறு முற்றி விளைந்த காணிக்குள் இறங்கினர். தேவன் நின்ற வண்ணமே ஆயத் தொடங்கினான். இதைப் பார்த்த அமுதன், 'டேய் இருந்து ஆயடா' என்றான்.

தேவன் இருந்து ஆயத் தொடங்கினான். அமுதன் ஏற்கனவே இருந்து ஆய்ந்துகொண்டு இருந்தான். தேவன் கை கொள்ளா அளவிற்கு ஆய்ந்தபின்பு அமுதனைப் பாத்து, 'எங்க இதைப் போடுறது?' எனக் கேட்டான்.

அமுதன் எழுந்து சாறத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டான். பின்பு சண்டிக்கட்டுக் கட்டியவன் அதற்குள் போடுமாறு பணித்தான். தேவனும் இயலுமானவற்றைத் தனது பொக்கற்றுக்குள் திணித்துக் கொண்டான்.

அமுதன் பயற்றங்காயை ஆய்ந்து ஆய்ந்து சண்டிக்கட்டை நிறைத்துக் கொண்டான். தேவனும் அதற்குத் துணைபுரிந்தான். அமுதனுக்குப் போதும் என்றாகிய பின்பு அந்த வயலை விட்டு வெளியேறினான்.

தேவனும் அவன் பின்னால் நடந்து சென்றான். அமுதனுக்கு அந்த வெள்ளரிக்காய் விளைகின்ற நடுவயல் நன்கு தெரியும். அவன் அதை நோக்கி விரைவாக நடந்தான். தேவனுக்கு அமுதனைப் பார்க்க காவல்காரப் பொம்மையாட்டம் இருந்தது. சாறத்திற்குள் உள்ள சிறுபயற்றங்காய் அந்த உருவத்தை அவனுக்கு வழங்கி இருந்தது.

நடு வயலில் வெள்ளரியும் கொம்மடியும் அடர்ந்து படர்ந்து கிடந்தன. அமுதன் வெள்ளரிப் பழம் ஒன்றை ஒடித்து எடுத்துக் கொண்டான். பின்பு சைக்கிளை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

தேவன் அவன் பின்னால் நடந்துசென்றான். சைக்கிளில் அந்த வெள்ளரிக்காயை வைத்து அமுதன் கட்டினான். பின்பு தேவனும் ஏற சைக்கிளை வீடு நோக்கி தொடர்ந்து ஓட்டிச் சென்றான்.

தேவனுக்கு மனது திக் திக்கென அடித்துக் கொண்டது. யாரும் பார்த்துவிடக் கூடாது. பார்த்தாலும் அப்பாவிடம் அதைச் சொல்லிவிடக்கூடாது. சொன்னால் வில்லங்கத்தை விலைக்கு வேண்டியதாகிவிடும். தேவனால் அதைப்பற்றி அதிக நேரம் சிந்திக்க முடியவில்லை.

'என்னடா பேசாமல் இருக்கிறா?'

'ச்.... சாதுவா கலக்கமா இருக்குது.'

'ஏன்?'

'ஆரும் கண்டு அப்பாட்டச் சொன்னா?'

'சொன்னா உனக்கு அது என்ன புதிசே? யானைத் தோல்தானே? நீதானே அதைச் சொன்னனீ?'

'எண்டாலும் இண்டைக்கு ஏதோ பயமாக இருக்குது.'

'சும்மா அலட்டாத. உந்த இருட்டுக்க ஒருத்தரும் எங்களைப் பாத்திருக்க மாட்டினம். பாத்தாலும் யார் எண்டு அடையாளம் கண்டுபிடிக்கேலாது.'

'அதுவும் உண்மைதான் அமுதன் அண்ணா' என்றான் தேவன்.

'எனக்கு ஒரு மட்டை வெட்டிச் சீவித் தருவியளே?'

'உனக்கு இல்லாத மட்டையோடா? வீட்டவா, வெட்டித் தாறன்.'

'தேவனின் வீட்டைத்தாண்டி அமுதன் தங்கள் வீட்டை நோக்கி சைக்கிளை உழக்கினான். அப்படி தேவனின் வீடு தாண்டும் போது, 'தேவன் என்னோட இருக்கிறான் தேவியக்கா. அவனைத் தேடாதேங்கோ' எனச் சாச்சொல்லுவது போல கத்தி விட்டு சைக்கிளை உழக்கிச் சென்றான்.

அமுதனின் வீட்டிற்குப் போனவுடன் இருவரும் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டிற்கு உள்ளே சென்றனர்.

செல்லம்மா மாமி அமுதனை நோக்கி வந்தா. அவவுக்கு சண்டிக்கட்டைப் பற்றி சட்டெனப் புரிந்து விட்டது.

'அட அறுவாரே... எங்கயடா உத அறுத்து அள்ளியாறியள்? ஆரும் கண்டாவெல்லே காறித் துப்பப் போகினம்.'

செல்லம்மா மாமி பேசிக்கொண்டு இருக்கும்போதே, அமுதனின் தங்கைமார் பயற்றங்காயைப் பங்கு போட்டுச் சாப்பிடத் தொடங்கினார்கள். தேவனையும் இழுத்து இருத்தி, அவனையும் சாப்பிடச் சொன்னார்கள்.

தேவனும் அவர்களோடு இருந்து பயற்றங்காய் சாப்பிடத் தொடங்கினான். வெள்ளரிக்காயைப் தட்டிப் பார்த்த செல்லம் மாமி முகத்தைச் சுளித்தவண்ணம் அதை வைத்துவிட்டு, ஒரு கடகத்தில் வைக்கோல் எடுத்து வந்தா. பின்பு அதை அந்தக் கடகத்திற்குள் மெதுவாக வைத்தா. அது பழுக்கவில்லை என்பதை தேவன் புரிந்து கொண்டான். பின்பு சில பயற்றங்காயை எடுத்து பேசிப் பேசி சுவைத்தா.

தேவனுக்கு விரைவாக வீட்டே போவது உசிதமாய்த் தோன்றியது. பனம்மட்டை இல்லாது போவதற்கு மனம் வரவில்லை. தேவன் மெதுவாக அமுதன் அண்ணாவைப் பார்த்து, 'மட்டை வெட்டோணும்' என்று நினைவு படுத்தினான்.

'ம்... ஆரியக்கூத்து ஆடினாலும் நீ காரியத்தில கண்ணாத் தான் இருக்கிறாய்.'

'என்னண்ண நீங்கள் தானே சொன்னனீங்க?'

'ஓமடா, பொறு நான் வெட்டித்தாறன்.'

அமுதன் லாந்தரையும் புதிய வெட்டுக்கத்தியையும் எடுத்துக் கொண்டான். பின்பு, 'வெட்டப் போவமே?' எனத் தேவனைப் பார்த்துக் கேட்டான்.

இதைப் பார்த்த செல்லம்மா மாமி, 'டே அவனை எங்கயடா இப்ப கூட்டிக் கொண்டு போறாய்? செக்கல் மக்கலுக்க

பூச்சி பூரான் நிக்கப் போகுது. பிறகு வாத்தியாருக்கும் தேவிக்கும் யார் பதில் சொல்லுறது?' என்றாள்.

'சரி நீ இரு தேவா. நான் ஐஞ்சு நிமிடத்தில மட்டை வெட்டிக் கருக்குச் செருக்கிக் கொண்டு வாறன்.'

அமுதன் லாந்தரோடு எழுந்து சென்றான். தேவனுக்கு கணங்கள் யுகங்களாகக் கழியும் அவஸ்தையாக இருந்தது. எப்போது மட்டை வரும் என்கின்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கலானான்.

மட்டை வந்தவுடன் வளையத்தை ஒருமுறை ஓட்டிப் பார்த்துவிட்டுச் செல்ல வேண்டும் போல் அவனுக்கு இருந்தது.

அப்பா என்ன சொல்லுவார்? மட்டையையும் வளையத் தையும் பிடுங்கி எறிந்தாலும் வியப்பு இல்லை. நடப்பது நடக் கட்டும். நான் வளையம் ஓட்ட வேண்டும். தேவன் எண்ணிக் கொண்டான்.

செல்லம்மா மாமி தேவனைப் பார்த்தா. பின்பு 'டேய் என்னடா யோசினை? பயத்தங்காயைச் சாப்பிடு ' என்றா.

'ஓ சாப்பிடுறன்.'

'என்ரா உந்த விழுவானோடு சேர்ந்து திரியிறா? கொப்பர் அறிஞ்சா தோலை உரிச்செல்லே போடுவார். கொப்பரிட்டப் போய் பயத்தங்காய் பிடுங்கிக்கொண்டு வந்தநாங்கள் எண்டு அலட்டாத.'

'அப்பாவைப் பற்றி எனக்குத் தெரியும்தானே!'

'ம் அது சீமாட்டி தேவிக்குத்தான் தெரியும். எப்பிடிக் காலம் தள்ளுறாளோ தெரியேல்ல?'

'அம்மா பாவம்.'

'சரி அமுதன் வாறான் போல இருக்குது. மட்டைய வேண்டிக் கொண்டு வீட்டையோடு.'

தேவன் வீட்டே வரும்போது இன்று நல்ல வேளையாக அப்பாவைக் காணவில்லை.

தேவன் அம்மாவிடம் சென்று வளையத்தையும் மட்டை யையும் காட்டினான். அம்மா ஏதோ கவலையாக இருந்தா.

'என்னம்மா கவலையா இருக்கிறாய்?' எனக் கேட்டான் தேவன்.

'கொப்பருக்கு காச்சல் அப்பன்.'

'அப்பாவைக் காணேல்ல?'

'ம்... படுத்திருக்கிறார்.'

13

தேவனுக்கு இன்று ஒரே குதூகலம். எங்கும் வெடியோசை கேட்கத் தொடங்கி இருந்தது. மத்தாப்புகள் வெடிப்பது போல தேவனின் மனதும் சந்தோஷத்தில் வெடித்துக்கொண்டு இருந்தது. தேவனின் அப்பா தைப்பொங்கல் என்றால் மாத்திரம் வெடி பூந்திரி எல்லாம் தாராளமாக வேண்டுவார். அவர் இம்முறையும் அனுமார் வெடி பைகேற், பூந்திரி, ஈக்கில் வாணம் எல்லாம் வேண்டி வந்திருந்தார். அவருக்கு வெடி சுடுவதில் ஒருவித வேடிக்கை. அமுதன் அண்ணாவும் இம்முறை போட்டிக்கு நிறையவே வேண்டி வைத்திருந்தது தேவனுக்குத் தெரியும்.

பொழுது சாய்ந்த பின்பு அவனிடம் சென்று பார்க்க வேண்டும் எனத் தேவன் எண்ணிக் கொண்டான். அதன் பின்பு திரும்பி வந்து அப்பா வெடி சுடுவதைப் பார்க்கலாம். அதே வேளை பூந்திரி கொளுத்தலாம் என நிகழ்ச்சி நிரல் தயாரித்துக் கொண்டான்.

தேவனின் அம்மா இன்று மிகவும் வேலைகளுடன் இருந்தா. கடைசி வேலையாக பயறு வறுத்த வாசம் எங்கும் பரவி இருந்தது. அதை மாட்டு மாலுக்குள் வைத்தே அவ செய்துகொண்டு இருந்தா. பயிறு அள்ளிச் சாப்பிடுவதற்கு அவ இன்று சம்மதிக்க

மாட்டா. சாமிக்குப் படைப்பது எச்சில் படக்கூடாது என்பதில் அவ மிகவும் கவனமாக இருப்பா என்பது தேவனுக்குத் தெரியும். பயறு அள்ளித் தின்னும் யோசனையைக் கைவிட்டுவிட்டு அவன் அடுப்படிக்குச் சென்றான்.

அங்கே அடுப்பு எல்லாம் மெழுகி, சீமேந்து நிலம் கழுவப்பட்டிருந்தது. வீடு முழுவதுமே ஒட்டடை தட்டிச் சுத்தமாய் கழுவப்பட்டிருந்தது. நடுமுற்றத்தில் தேவனின் அம்மா ஏற்கனவே செய்து வைத்திருந்த மண் அடுப்புகள் வைக்கப்பட்டிருந்தன. அதைச் சுற்றி அவ அதிகாலைதான் கோலம் போடுவா என்பதும் தேவனுக்குத் தெரியும்.

தேவனுக்குச் சுத்தமாக இருந்த நிலத்தில் விழுந்து படுக்க வேண்டும் போல் இருந்தது. பின்பு நேரத்தைப் பார்த்த அவன் அமுதன் அண்ணா வீட்டை நோக்கி ஓடினான்.

அமுதன் வெடிகளை எல்லாம் பரப்பிவைத்துப் பார்த்துக் கொண்டு இருந்தான். இதைப் பார்த்த தேவன், 'ஓ இவ்வளவு வெடியும் சுடவே போறியள்?' என்றான்.

'ம் இரவிரவாச் சுடலாம்.'

'அப்பாவும் வேண்டி வைச்சிருக்கிறார்.'

'நிறையவே?'

'ம்...'

'உனக்கு பூந்திரி இருக்கேடா?'

'ஓ, இருக்குது.'

'சரி வா கொஞ்சம் கொளுத்திப் பாப்பம்.'

அமுதன் வெடிகள் சிலவற்றையும் ஈக்கில் வாணம் சில வற்றையும் எடுத்துக் கொண்டு முற்றத்திற்கு வந்தான். வெளியே குளிரத் தொடங்கியது. பனி சாதுவாகத் தன் குணத்தைக் காட்டியது.

அமுதன் கைவிளக்கு ஒன்றை எடுத்து வந்து வெடியைக் கொளுத்திப் போட்டான். மின்னலும் அதிர்வும் வீட்டைத் தேடி

வந்த உணர்வு. வெடிமருந்தின் கந்தக மணம் நாசியை அடைத்தது.

அமுதன் தொடர்ந்தும் கொளுத்திப் போட்டான். பின்பு தேவனைப் பார்த்துவிட்டு, 'இந்தா கொளுத்திப் போடு...' என்றான்.

அதைத் தொடர்ந்து ஒரு வெடியை அவனுக்குக் கொடுத்தான்.

தேவனுக்குப் பயமாக இருந்தது. கை நடுங்குவதாக உணர்ந்தான். என்றாலும் துணிவை வரவழைத்துக் கொண்டு, கைவிளக்கில் கொளுத்தி தூர எறிந்தான். படார் என அது வெடித்தது. அமுதன் தொடர்ந்தும் கொளுத்தினான். பின்பு ஈக்கில் வாணத்தை எடுத்துக்கொண்டு சென்றான். கையில் ஒரு போத்தல் வைத்திருந்தான். அவன் போத்தலுக்குள் ஈக்கில் வாணத்தை வைத்து அதன் திரியைக் கொளுத்தினான். அது மெலெழுந்து பனையைத் தாண்டித் தொடர்ந்தும் சென்று ஆகாயத்தில் வெடித்து. அழகிய வெள்ளி நட்சத்திரங்களைக் கொட்டியது.

தேவன் சிறிது நேரத்தில் வீட்டுக்குத் திரும்பி வந்தான். தேவனின் அப்பா சாப்பிட்ட பின்பு ரேடியோ கேட்டுக் கொண்டு இருந்தார். தேவனைக் கண்டவுடன், 'எங்கயடா போட்டு வாறா?' என்று கேட்டார்.

'அமுதன் அண்ணா வீட்ட.'

'வெடிகொளுத்தத் தொடங்கீட்டானே?'

'ஓமப்பா...'

தேவன் குசினிக்குச் சென்றான். அம்மா சாப்பிட்டுக் கொண்டு இருந்தா. 'வாடா சாப்பிட' என்றழைத்தா.

'இல்லையம்மா நீ குழைச்சுத் தா' என்ற வண்ணம் அம்மா வின் பக்கத்திலே அமர்ந்து கொண்டான். அம்மா மெழுக முதலே புட்டு அவித்துச் சம்பலும் அரைத்து வைத்திருக்க வேண்டும். தேவனுக்காக தயிரும் விட்டுப் பிசைந்து ஊட்டினா. அம்மா சிறு சிறு உருண்டையாக ஊட்டிவிட்டா. பின்பு தேவனுக்காக

சுண்டக் காய்ச்சிய பாலில் சிறிது சீனி போட்டு மூக்குப் பேணியில் கொடுத்தா. தேவன் ருசித்துக் குடித்தான். அவனுக்கு அம்மா வின் சாப்பாடு என்றால் அமிர்தம் என்பதில் எல்லாம் மாற்றுக் கருத்து எழுவதில்லை.

தேவன் சாப்பாடு முடித்துவிட்டு வரும்போது அப்பா ரேடியோவை நிறுத்திவிட்டு முற்றத்தில் நின்று ஈக்கில் வாணம் எங்கே இருந்து கிளம்பி எங்கே சென்று வெடிக்கிறது என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தார். இன்று தேவனின் அப்பா நல்ல சந்தோசமாய் இருக்கிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. தேவன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர் அருகே சென்றான்.

தேவனைப் பார்த்த அப்பா 'என்னடா சாப்பிட்டியே?' என்றார்.

'ஓ...'

'பூந்திரி கொளுத்தப் போறியே?'

'ஓ...'

தேவனுக்கு அப்பா பூந்திரி எடுத்துக் கொடுத்தார். தேவனுக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது. அப்பா எப்போதும் இப்படி கனிவாக நடப்பதில்லை. நாளை தைப்பொங்கல் என்கின்ற சலுகைதான் இதற்குக் காரணம் என்பது அவனுக்குப் புரிந்தது.

தேவனின் அப்பா வெடி கொளுத்தினார். தேவனின் அம்மா அப்பா வெடி கொளுத்துவதையும் தேவன் பூந்திரி கொளுத்து வதையும் பார்த்துப் பார்த்து பச்சை அரிசியைத் துப்புரவு செய்தா.

பனி தொடர்ந்து கொட்டிக்கொண்டு இருந்தது. தேவனின் அப்பா கொளுத்திப் போட்ட சில வெடிகள் பனி காரணமாக வெடிக்க மறுத்தன. அவர் அதை அசண்டை செய்யவில்லை. தொடர்ந்தும் வெடி கொளுத்திப் போட்டார். பின்பு ஈக்கில் வாணம் விடத் தொடங்கினார்.

தேவனுக்கு ஒரே வேடிக்கையாக இருந்தது. அவன் நாலு பக்கமும் சுழன்று சுழன்று பார்த்துக்கொண்டு இருந்தான்.

பின்பு களைத்தவனாய்ப் போய் அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டான்.

அம்மா தேவனை அதிகாலையே எழுப்பினா. அம்மா ஏற்கனவே முழுகி தலைமுடிக்குப் பழைய துணி ஒன்றை வைத்து முறுக்கி ஒருவித பின்னல் செய்திருந்தா. தேவனின் அப்பாவும் முழுகி விபூதி பூசிச் சந்தனம் வைத்திருந்தார். இன்று அப்பாவே மணற்காட்டு அம்மன் கோயிலுக்கு அதிகாலையே சென்று அர்ச்சனை செய்து வந்திருப்பார் என்பது தேவனுக்குப் புரிந்தது. அப்பா பொங்கலுக்குத் தயாராக நின்றார்.

தேவன் விரைவாக பல்துலக்க அம்மா உதவி செய்தா. கிணற்றடியில் அண்டாவில் தண்ணீர் சூடாகிக்கொண்டு இருந்தது. அம்மா மேலும் சில வாளி நீர் அதற்குள் ஊற்றி சூடுபார்த்த பின்பு வெந்நீர்க் கலவையை அள்ளி தேவனின் தலைமேல் ஊற்றினா.

அந்தக் குளிரில் வெந்நீர் இதமாக இருந்தது. சிறிது ஊற்றிய பின்பு அம்மா ஊத்தையை உருட்டிவிட்டு, 'இந்தாடா அள்ளிக்குளிச்சுட்டு வா...' எனக் கிண்ணத்தைத் தேவனிடம் தந்துவிட்டு, பொங்கல் அலுவல் பார்க்கப் போய்விட்டா. தேவன் முழுகிய பின்பு துவாயால் துடைத்துக் கொண்டு உள்ளே போனான். பின்பு அம்மா என்ன உடுப்பு எடுத்து வைத்திருப்பா என்பதைப் பார்க்கும் ஆர்வத்தோடு கூடத்திற்குச் சென்றான். அங்கே அம்மா வேட்டியும் சால்வையும் எடுத்து வைத்திருந்தா. தேவன் ஒருவாறு வேட்டியைக் கட்டிக்கொண்டு வெளியே வந்தான். ஒழுங்கையால் ஒரு கார் போய்க் கொண்டு இருப்பதான சத்தம். எதற்காக இருக்கும் என்பது புரியவில்லை.

இன்று மாதப்பிறப்பு. அப்பா லேசில் கைவைக்க மாட்டார் என்பது அவன் அநுபவம். என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும் என்கின்ற ஆவல் அடங்காத நாகமாய் அடிமனதில் படமெடுத்து ஆடியது.

செல்லம்மா மாமி வீட்டிற்கு முழிவியளத்திற்குப் போவது வந்தது. ஒவ்வொரு மாதப்பிறப்பிற்கும் தேவன்தான் செல்லம்மா மாமி வீட்டிற்கு முழிவியளத்துக்கு போய்வரவேண்டும். தேவன் வராவிட்டால் அதைக் கெட்ட சகுனமாகவே செல்லம்மா

மாமி நினைத்துக்கொண்டு, நிம்மதி இல்லாமல் அலைவா. தேவனின் அப்பாகூட ஒருநாள் பயணம் போய்விட்டு, ஒண்டிப் பிராமணன் போறான் என்று கூறிய வண்ணம் திரும்பி வந்து, பின்பு அந்தப் பயணத்தையே கைவிட்டது தேவனுக்கு ஞாபகம் இருக்கிறது. இவை எல்லாம் உண்மையா என்பது தேவனுக்குப் புரியவில்லை. என்றாலும் செல்லம்மா மாமி வீட்டிற்கு முதலாளாய் ஒவ்வொரு மாதமும் போய் வருவான்.

மனதின் பாய்ச்சலை தேவன் ஒருபுறம் தள்ளி வைத்தான். அம்மாவிடம் சொல்லிவிட்டு, அங்கே போய்விட்டு வர வேண்டும் என முடிவு செய்து கொண்டவனாய் அம்மாவை நோக்கிச் சென்றான்.

'அம்மா?'

'என்னப்பன்?'

'செல்லம்மா மாமி வீட்ட முழிவியளத்துக்கு போகோணும்.'

'சரி போயிட்டு வா.'

தேவனுக்குக் கார் எங்கே சென்றது என்பதை அறியும் ஆர்வம் அடங்கவில்லை. அதற்கு முடிவு காண வேண்டி ஓட்டமெடுத்தான்.

கார் தம்பையா மாமா வீட்டிற்கு முன்பு நின்றிருந்தது. செல்வன் குளறிக்கொண்டு இருந்தான். அவன் கையில் கட்டுப் போட்டிருந்தது. தேவனுக்கு என்ன நடந்தது என்பதைப் போய்க் கேட்க வேண்டும் போல் இருந்தது. இன்று மாதப் பிறப்பு. அவர்கள் வீட்டிற்குள் செல்ல முடியாது. முதல் முதல் போவதற்கு இராசி பார்ப்பார்கள்தானே. தம்பையா மாமா வீடு ஒரு நாளும் தேவனை முழிவியளத்துக்கு அழைத்தது கிடையாது. தேவன் படலைக்கு வெளியே தூரத்தே நின்று கொண்டான்.

செல்வனைத் தூக்கி வந்து தம்பையா மாமா காரில் ஏற்றினார். அவன் தொடர்ந்தும் அனுங்கிக்கொண்டு இருந்தான். தேவன் மெதுவாக அவனிடத்திலே சென்று ஆவலை அடக்க முடியாதவனாய், 'என்ன நடந்தது கையில?' எனக் கேட்டான்.

'வெடி கையில வெடிச்சிட்டது... ஐயோ அம்மா...'

'எப்பிடி...'

'வெடிக்காமல் கிடந்த வெடி ஒண்டை எடுத்தன். அது நாசமாப் போனது என்ர கையில வெடிச்சிட்டுது. வேதனை தாங்க முடியேல்ல தேவா. உயிர் போய் வருகுது.'

'ச்... என்ன செய்ய முடியும்?'

'நிலத்தில கிடந்ததை எடுக்காமல் விட்டிருக்கலாம். தைப் பொங்கலும் அதுவுமாய் பார் கையைச் சிதறடிச்சுப் போட்டான். நீயும் கண்டதையும் கையில எடுத்திடாத. என்ன விளங்கிச்சே' எனத் தம்பையா மாமா உறுக்கினார்.

'ம்...'

தம்பையா மாமா ஏறிக் காருக்குள் இருந்து கதவைச் சாத்தினார். கார் மெதுவாக நகர்ந்து வேகம் பிடித்தது.

தேவன் பின்பு மெதுவாக அமுதன் வீட்டிற்குச் சென்றான். முற்றத்தில் பொங்கலுக்கான அலுவல்கள் நடந்துகொண்டு இருந்தன. கோலம் போட்டு முடித்துவிட்டார்கள்.

செல்லம்மா மாமி தேவனைக் கண்டவுடனே மலர்ந்த முகத்துடன், ' வாடா... வா தேவா' என்றா.

பின்பு, 'சத்து நேரம் இருந்திட்டு போடா. உடன ஓடாத என்ன?' பின்பு உள்ளே நோக்கி 'ஏடி பிள்ளை தேவனுக்குக் கோப்பி போட்டுக் குடடி' எனக் கத்தினா.

அமுதன் எழுந்து வந்து தாவாரத்தில் அலுப்போடு இருந்தான். தேவன் மெதுவாகச் சென்று, 'எத்தின மணிக்குப் படுத்தியள்?' எனக் கேட்டான்.

'ஒரு மணியாச்சு.'

'ஓ அவ்வளவு நேரம் வெடி சுட்டியளே?'

'ம்... ஒரே கொந்தாய் தான்.'

'அப்ப முழு வெடியும் சுட்டுப் போட்டியளே?'

'ஓ, ஒரு நாலஞ்சு வெடி பொங்கல் சரியேக்க சுட இருக்குது. அவ்வளவு தான்.'

'பிள்ளையார் கோயில்ல சுட.'

கோப்பியை விமலா அக்கா கொண்டு வந்து கொடுத்தாள்.

அவள் சிரித்தவண்ணமே, 'டேய் சுடும் கவனம், என்ன?' என்றாள்.

'ம்...' முனகியவண்ணம் தேவன் அதை வேண்டி அருந்தத் தொடங்கினான்.

'அப்ப வெடி முடிஞ்சுதோ?' என்றான் தேவன் மீண்டும்.

'ம்... அதெல்லாம் முடிஞ்சுது. அதுக்கு தேவையும் இல்லை. என்னடா பிள்ளையாருக்கு தேவியக்கா சக்கரைப் பொங்கலே பொங்கப்போறா?'

'அப்பிடித்தான் நினைக்கிறன். வீட்டில வெண்பொங்கலும் பிள்ளையாருக்கு சக்கரைப் பொங்கலும் பொங்குறதுதானே வழக்கம்.'

'பின்னேரம் நாச்சிமாருக்கும் பொங்கப் போறாவே?'

'தெரியாது அமுதன் அண்ண. அநேகமாக அம்மா பொங்காமல் விடமாட்டா. நாச்சிமார் கோவிச்சிடுவார் எண்டு அம்மாவுக்கு பயந்தானே?'

'இண்டைக்கு நீங்கள் எத்தின பொங்கல் பொங்கினாலும் எங்களுக்கு பிரயோசனம் இல்லையடா. உங்கட வீட்டில நாளைக்கு பின்னேரம் நடக்கிற மாட்டுப் பொங்கல்தான் எனக்கு உதவுமடா.'

'அம்மா கட்டாயம் உன்னக் கூப்பிடாமல் விடமாட்டா தானே?'

'அவ கூப்பிடாட்டியும் நான் அங்க வருவனடா.'

'நீங்க வாங்க அமுதன் அண்ணா. அப்பதான் முஸ்பாத்தியா இருக்கும்.'

'கொப்பர் என்ன கனக்க வெடி சுட்டவரே?'

'ஓ நிறைய. எனக்கு அலுத்துப் போச்சுது, பிறகு நித்திரையாப் போயிட்டன்.'

தேவன் கோப்பி அருந்தி முடித்த பின்பு வீட்டுக்குத் திரும்பிச் செல்லத் தயாரானான். பின்பு அமுதனைப் பார்த்து, 'அமுதன் அண்ணா, அப்ப நான் போட்டு வரட்டே?' என்றான்.

'உள்ள போய் அம்மாட்ட சொல்லிப் போட்டு போ' என்றான் அமுதன்.

'சரி' எனக் கூறிய தேவன் உள்ளே சென்றான். அங்கே விறாந்தையில் ஏறி நின்றவாறு, 'நான் போட்டு வரட்டே மாமி?' என்றான்.

'கோப்பி குடிச்சிட்டியே?'

'ஓ குடிச்சிட்டன்.'

'சரி அப்ப போட்டுவா.'

தேவனுக்கு வீட்டில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் என்கின்ற அவசரம். அவன் மேற்கொண்டு தாமதிக்க விரும்பாதவனாய் ஓட்டம் பிடித்தான்.

அதைப் பார்த்த அமுதன், 'பார்த்து ஓடு, பனிக்கு நனைஞ்சு போய் வெடிக்காமல் கிடக்கிற வெடியை உழக்காமல் பாத்துப் போ. விளங்கிச்சே?'

'சரியண்ண.'

தேவனுக்கு அடுத்தநாள் மாடுகள் குளிப்பாட்டிப் பொங்கல் நடத்தியது இன்றும் பசுமையாக நினைவு இருக்கிறது.

அடுத்த நாள் அப்பா தனியே மாடுகள் குளிப்பாட்டச் செல்லும் வழக்கத்தை மாற்றியது தேவனுக்கு வியப்பைத் தந்தது. அன்று என்ன நினைத்தாரோ தெரியாது, அமுதனைப் போய் கூட்டி வருமாறு கூறியதோடு மட்டும் இருந்து விடாமல் தேவனையும் அன்று மாடு குளிப்பாட்ட வருமாறு அழைத்தார். தேவனுக்கு அது கண்டறியாததைக் கண்டேன் என்கின்ற பேரின்பத்தைத் தந்தது.

அன்று நாய்க்கும் மாட்டிற்கும் உப்பும் எண்ணையும் கலந்த கலவை உடல் பூராவும் பூசப்பட்டது. அதனால் ஓரளவிற்கு உண்ணிகள் சாகும் என்பது அப்பாவின் நம்பிக்கையாக இருந்தது.

மாடு குளிப்பாட்டி வீட்டை திரும்பி வரும்போது தேவனின் அம்மா பொங்கல் வேலை ஆரம்பித்து இருந்தா. மாட்டுப் பொங்கல் விசேடமானது. பொங்கலோடு வடை, கடலை போன்ற பலகாரங்களும் செய்யப்படும். செல்லம்மா மாமியும் தேவனின் அம்மாவுக்கு உதவிக்கு வந்திருப்பது தெரிந்தது. அவர்கள் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவதில்லை. அதுதான் அமுதன் அண்ணாவுக்கு தங்களது மாட்டுப் பொங்கலில் ஒரே கண் என்பது தேவனுக்குத் தெரியும். அமுதனிடம் இரண்டு ஆடுகள் இருந்தன. ஆனால் அவற்றிற்கு எல்லாம் அவர்கள் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவது இல்லை.

பொங்கல் முடிந்ததும் வெடி சுட வேண்டும் என அமுதன் ஓடித்திரிந்தான். ஆனால் தேவனின் அப்பா மாடுகள் வெருண்டு போய்விடுமென அதைத் தடுத்து விட்டார். மாட்டுப் பொங்கல் முடிந்து படையல் வைத்த பின்பு, அவற்றில் ஒரு பகுதியை வாளியில் போட்டுக் கரைத்து மாட்டுக்கு வைக்க, அவை தயிர் மணத்தை அடையாளம் கண்டு உண்ண மறுத்தன. அந்த நினைவு தேவனுக்கு இன்றும் நகைப்பை உண்டு பண்ண அவன் தன்னை மறந்து சிரித்தான். இதைப் பார்த்த வினோ, 'என்னப்பா விசரன் மாதிரி திடீர் எண்டு சிரிக்கிறியள்?' எனக் கேட்டாள்.

'இல்ல மாட்டுப் பொங்கலை நினைச்சன். அப்ப அப்பா வின்ர நினைவு வர சிரிப்பு என்னையும் மீறி வந்திட்டுது.'

'அந்த வாழ்க்கையெல்லாம் இனி எங்களுக்குத் திரும்பி வருமே?'

'நாங்கள் இருந்தோம் என்கின்ற சுவடுகள்கூட அழிக்கப் பட்டுப் போகலாம். வரலாறுகள் திரித்து வசதிக்கேற்ப எழுதப் படலாம். ஆண்டவர்கள் ஆண்டவர்கள் என்று கூறிய வண்ணமே சொந்த இனத்தையே அழித்த சந்தர்ப்பவாதிகளாக நாம் இனம் காணப்படலாம். நாங்களே எங்கள் இனத்திற்கு எதிரியாகி, அதை அழித்த அவலம் இலங்கைத் தமிழனுக்கு மட்டுமே வரலாறு ஆகலாம்.'

'சும்மா விடுங்க... உந்தப் புராணத்தை. அந்த அருமையான வாழ்க்கையெல்லாம் யார் யாராலேயோ அநியாயமாய்ப் போச்சுது.'

'யார் யாராலயோ இல்ல. ஒருசிலற்ற தீர்க்கதரிசனமற்ற போக்காலேதான் ஒரு இனமே பலிகொடுக்கப் பட்டது. இதுகளை எல்லாம் சொல்லப்போனால், எனக்குத் துரோகி என்று பட்டம் தந்து, துரத்திக் கொண்டு திரிவான்கள். உண்மையைப் பேச யார் விடுகினம்?'

'அதை விடுங்க அப்பா.'

'நீயும் அதைத் தான் சொல்லுறாய். அது சரி... இங்க தைப் பொங்கல் கொண்டாடுறம். வெடி இல்லை. லீவு இல்லை. பனையில்லை. முலைச்சூடு மாறாத பசும் பாலில்லை. வேலை யால வந்து ஐந்து மணிக்கும் ஆறுமணிக்கும் பொங்குறது பொங்கலே? அதில ஏதாவது சந்தோஷம் இருக்குதே?'

'லீவு கிடைச்சா மாத்திரம் என்னத்தப் பெரிசாச் செய் யேலுமே? அதே பழைய சட்டிக்க பச்சையரிசியை அவிச்சு சாப்பிடுறது பொங்கலாகுமே? கோயிலுக்குப் போகோணும் எண்டு நினைச்சாலும், வியாபாரமாக மாற்றப்பட்டுள்ள இந்தக் கோயில்களுக்கு மனநீதியைத் துலைச்சுப் போட்டுப் போக வாந்தி வருகுது.'

'உண்மைதான். இந்தப் பொங்கல்ல ஒரு சந்தோஷமும் இல்லை எண்டாலும் இப்பிடித் தான் இருக்கும் எண்டு பிள்ளைக்குக் காட்ட அதைச் செய்ய வேண்டி இருக்குது.'

'அதுவும் சரிதான்.'

14

அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் செல்வராசா பிள்ளைகளுடன் தேவன் வீட்டிற்கு வந்திருந்தான். அத்தி

பூத்ததுபோலவே இங்கு யாராவது உலாத்திறதுக்கு வருவது உண்டு. கிழமை நாள்களில் வேலை வீடு என்கின்ற வட்டம் நாள்களை முழுமூச்சோடு விழுங்கிவிடும். சனி என்றால் தமிழ்ப் பள்ளி காலை எழுந்தவுடன் முன்னுக்கு நிற்கும். ஞாயிறை ஏதாவது ஒரு உடற் பயிற்சி அல்லது விளையாட்டு பங்கு போட்டு விடும். இல்லை யென்றால் தொலைக்காட்சிக்கு முன்னால் குந்தி இருந்து பயனற்ற தொடர்களைப் பார்த்துக் கொட்டாவி விடுவதிலே கழியும். இதைவிடுத்து மற்றவர் வீட்டிற்குச் சென்று அளவளாவுதல் என்பதற்கு நேரமே கிடைப்பதில்லை. தேவனுக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. முன்பு இருந்த தொடர்மடியில் ஒரு வீட்டைத் தவிர மற்றைய பக்கத்து வீட்டில் யார் இருந்தார்கள் என்பதே அவனுக்குத் தெரியாது. அவர்களாக அறிமுகம் செய்து கொள்ளவில்லை. அவர்கள் நிறவெறி பிடித்தவர்களாய் இருப்பார்களோ என்கின்ற சந்தே கத்தில் இவனாயும் போய் அறிமுகம் செய்து கொள்ளவில்லை. இங்கு பரவாயில்லை. யார் இருக்கிறார்கள் என்றாவது அவனுக்குத் தெரியும். இடையிடையே அவர்களோடு தேவன் கதைப்பதும் உண்டு. அத்தோடு அயலார் உறவு இங்கு முடிந்து விடுகிறது. கூடிக் குலாவி கொஞ்சித் திரிந்த எங்கள் கலாசாரத்திற்கும் அந்நியத் தன்மையே எப்போதும் புரையோடிக் கிடக்கும் இவர்கள் கலாச ாரத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் எனத் தேவன் வியப்பது உண்டு.

எங்கள் கலாசாரத்தின் எச்சங்கள் முதல் ஜெனரேஷன் தமிழரை இன்னும் தொடர்வதில் பலருக்கு பரம திருப்தி. காலப் போக்கில் அது தனது வீரியத்தை இழந்து போய்விடும். இரு கலா சாரத்தில் வாழ்வது எப்போதும் ஒரு போராட்டமான தொடர்கதை. முதல் ஜெனரேஷன் தத்தளிக்க இரண்டாவது ஜெனரேஷன் அதில் முழுமையாகத் தாண்டு போகப் போகிறார்கள். மாற்றங்கள் இல்லாத வாழ்க்கை இல்லை. உலகில் மறைந்து அல்லது கரைந்து போகும் சில கலாசாரங்களும் உண்டு. புலம்பெயர்ந்த தமிழ்க்கலா சாரம் அதற்குப் புறநடையல்ல. இரண்டாவது ஜெனரேஷன் ஆயிரம் பிரச்சனைகள் இருந்தாலும் இந்த நாட்டின் நீரோட்டத் தில் கலந்து விடுவார்கள். முதல் ஜெனரேஷன் கலாசாரத்தை

வயோதிபர் இல்லம் அனுப்பி வைப்பார்கள். இந்த ஏக்கத்தில் இருந்து தற்காலிக விடுதலை பெறுவது போல சில சம்பவங் களும் நடப்பது உண்டு. அப்படித்தான் இன்று செல்வராசா பிள்ளைகளோடு வீட்டிற்கு வந்திருப்பதாக தேவன் எண்ணிக் கொண்டான். செல்வராசனின் பிள்ளைகள் வருங்காலத்தில் எங்களைத் தேடி வரமாட்டார்கள். அவர்களுக்கு அது அவசி யமாகவும் தெரியப் போவதில்லை. அவர்களின் குடியேற் றங்கள் ஆயிரம் ஆயிரம் மைல்கள் தாண்டி அமையலாம். விரும்பியோ விரும்பாமலோ தொடர்பறுந்து போகலாம்.

கூட்டில் இருந்த மிருகத்திற்கு சுதந்திரம் கொடுத்த குதூகலத்தில் பிள்ளைகள் ஓடி விளையாடத் தொடங்கி இருந்தனர். இதைப் பார்த்த செல்வராசன்....

'பாத்தீங்களே தேவண்ண... எப்படிச் சந்தோஷமா இவங்கள் விளையாடுறாங்கள் பாருங்க.'

'பிறகென்ன? கிழமைக்கணக்கில அடைஞ்சுகிடந்தா எப்பிடி இருக்கும்? ஊரில நாங்கள் ஒருநாள் வீட்ட விட்டு வெளியால போகாமல் இருந்திருப்பமே? சுதந்திரப் பறவை களா அலைஞ்சு திரிஞ்ச அந்த சந்தோஷம், இவங்களுக்கு எப்ப கிடைக்கப் போகுது?'

'எப்பவுமே கிடையாது அண்ண. எல்லாமே கனவாய்ப் போன ஒரு அந்தரம் எங்கட வாழ்க்கையில எப்பவுமே துரத்திக் கொண்டு இருக்குது அண்ண. நாங்கள் பாவப்பட்ட இனமாப் போயிட்டம். காரியம் செய்யமுதல் விளைவு பற்றி ஆயிரம் முறை சிந்திக்க வேணும். எங்களுக்குக் கிடைச்ச எந்த அரசியல்வாதிகளும் அதை ஒழுங்காச் செய்யாததின்ர விளைவு தான் இது. ஒரு இனத்திற்கு ஏக்கத்தையே பரிசளிச்சிருக்கினம். வட்டுக்கோட்டைத் தீர்மானமும் வாய்ச்சவுடால்களும்... எங்க கொண்டுவந்து விட்டிருக்குது பாத்தியே?'

'உண்மைதான். இல்லாட்டி இந்தக் குழந்தைகள் எல்லாம் எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருப்பாங்கள்?'

'மனிச மனத்திற்கு நிம்மதி இலேசில கிட்டாது. ஊரில இருந்திருந்தா இந்த வசதி, சொகுசு இல்லாமல் இருந்திருக்கும்.

அதை நினைச்சு சிலவேளை புழுங்கி இருக்கலாம். இங்க அந்தப் புழுக்கம் கொஞ்சம் குறைவு என்றாலும் உறவு, சுற்றம், திருவிழா எண்ட சந்தோஷங்கள் எல்லாம் துலைஞ்ச இயந்திர வாழ்க்கையில சிறைப்பட்ட பரிதாபம்.'

'இப்ப ஊரிலயும் அதுதானே நடக்குது? உயிருக்கு உத்தரவாதம் இல்லாதது ஒண்டு. அதை நினைச்சு வீட்டுக்கையே அடைஞ்சு கிடக்கிற வாழ்க்கை. மற்றது, யார் எங்க நிம்மதியா இருக்கினம்? நாங்கள் எங்கட கண்ணை எங்கட கையால குத்திக்கொண்டதின் வலி மிகவும் அதிகம். தாண்ட முடியாத வரம்புகள் தழைச்சு நிற்கிறதைக் காணுறபோது வேதனையா இருக்காதா?' என்றான் தேவன் எதையோ எண்ணியவனாய்.

வெகுநேரமாக இருந்து செல்வராசா கதைத்துக்கொண்டு இருந்தான். பின்பு வினோவின் கைவரிசையை சுவைத்துப் புசித்தனர். நேரம் பத்துமணியாக செல்வராசாவும் பிள்ளைகளும் பிரிய மனம் இல்லாமல் பிரிந்து போனார்கள். அதன் பின்பும் தேவடைய மனசு ஊரை நோக்கி ஞானம் பெற ஓடியது. தேவனுனின் கூடுமாத்திரமே இங்கு இருக்கிறது; ஆவி எப்போதும் அங்கேயே அலைவதாகவே வினோ எண்ணிக் கொண்டாள்.

அடுத்த முறை தைப்பொங்கல் நடப்பதற்கு நாலைந்து நாள்களுக்கு முன்பு செல்லம்மா மாமி பதறி அடித்துக் கொண்டு வந்தது தேவனுக்கு இன்றும் ஞாபகம் இருக்கிறது.

'எடி தேவி உனக்கு விசயம் தெரியுமோடி?'

'என்னண அது? இண்டைக்கு என்னவோ புதினமா அவர் பேப்பரையும் தூக்கிக் கொண்டு போய்விட்டார். இந்த ஓட்டை ரேடியோ ஒருநாளைக்கு பாடும் ஒரு நாளைக்குப் பாடாது. அதில நான் எதையும் கேட்கேல்ல. என்னண அப்பிடி நடந்தது ஊரில?

'உலகம் கெட்டுப் போச்சடி பிள்ள, 'செல்லம்மா மாமி பொடி வைத்துப் பேசினா.

'அப்பிடி என்னண நடந்தது?' பொறுமை இழந்த தேவனின் அம்மா கேட்டா.

'ராத்திரி ரவுனில ஒரே அல்லோலகல்லோலமாம். தமிழாராய்ச்சி மாநாட்டு கொண்டாட்டத்தில சிங்களப் போலிஸ் காரங்கள் புகுந்து சுட்டுத் தள்ளிப்போட்டாங்களாம்.'

'நீ என்னண சொல்லறா?'

'பிறகென்னடி? தமிழனுக்குக் கேடுகாலம் பிடிச்சிட்டுது. தமிழன் அழியப் போறானடி....' என்றா செல்லம்மா மாமி.

'இது என்ன கோதாரியெண? போலிஸுும் அப்பிடிச் சுடு வாங்களே? நிறையப் பேர் செத்துப் போச்சினமே?' எனக் கேட்டா தேவனின் அம்மா.

'ஓமாமடி... வெறிபிடிச்சுத் திரியிற சிங்களப் போலிஸ் காரன்கள் செய்யமாட்டாங்களே? ஒன்பதுபேர் செத்துப்போச் சினம் எண்டு சொல்லுகினம். சிங்களவர் கொஞ்சம் கொஞ்சமா ஒதுக்கத் தொடங்கீட்டாங்கள். எங்கட யாழ்ப்பாணத்துக்கையே கைவைக்கத் தொடங்கீட்டாங்கள் எண்டா இனி ஏதோ பெரிய அழிவுதான்ரி வரப்போகுது.'

'பதுளை, பசறை எண்டு வியாபாரம் செய்யிற சனத்துக்கும் சிங்கள ஊரில கவர்மென்ற் வேலை பார்க்கிறவைக்குந்தான் பிரச்சினை எண்டு பார்த்தா, இனி ஊருக்கையும் நிம்மதியா இருக்கேலாது போல இருக்குது' என்றா தேவனின் அம்மா.

'இஞ்ச வேற நேவிக் காம்பு கொண்டந்து வைச்சிருக் கிறாங்களடி. இப்ப தண்ணி தாறவங்கள் ஒருநாளைக்கு துவக்க துக்கிப் பிடிப்பாங்கள். சனம் எல்லாம் கதிகலங்கிப் போச்சுது.'

'சிங்கள ஊரிலதானே இவ்வளவு காலமும் அடிச்ச வங்கள்?'

'ம்.... இண்டைக்கு யாழ்ப்பாணத்திலயும் நாய்மாதிரி சுட்டுக் கொண்டு போட்டாங்கள். இது கவர்மென்ட்தான் செய்து போட்டுதாமடி' என்றா செல்லம்மா மாமி.

'நீ என்னண சொல்லுறா?' என்றா தேவனின் அம்மா.

'பிறகென்னடி? குமாரசூரியர் கொழும்பில உந்த மாநாட்டை வைக்கச் சொன்னவனாம். உந்த அறுவான்கள் யாழ்ப்பாணத்திலதான் வைப்பம் எண்டு செட்டுப் பிடிச்சுப்

போட்டாங்களாம். கவன்மென்ற் உதவிகூட வேண்டாம் எண்டிட்டாங்களாம். அதுதான் கவர்மென்ற் கோபத்தில செய்விச்சிருக்குது எண்டு கதைக்கினம்.'

'என்னெண்டாலும் யாழ்ப்பாணத்தில வைச்சதுக்கு இப்பிடியே செய்யிறது?'

'பவர் இருக்குது, என்னவும் செய்வானடி அவன்' என்றா செல்லம்மா மாமி.

'ம்...'

'இரண கோப்பி போட அடுப்பு மூட்டிப் போட்டு வாறன்.'

'ம்...'

அடுப்பை மூட்டிவிட்டு வந்த தேவனின் அம்மா தொடர்ந்து கதை கேட்டா.

'பிறகு சொல்லண.'

'அவன் சண்டரசேகரவும் ஒரு கும்பல் போலிஸூம் சேர்ந்துதான் உந்த அநியாயத்தைச் செய்தவங்களாம். கண்ணீர்ப் புகைக் குண்டை எறிஞ்சு போட்டு சுட்டுத் தள்ளி இருக்கிறாங்கள். அதுக்குள்ள கரண்ட் வயரும் அறுந்து விழுந்து, கரண்ட் அடிச்சும் சனம் செத்துப் போச்சுதாம். எல்லாம் ஒரே குழப்பமான செய்தியா இருக்குது. உண்மையையும் இனி வெளிவரவிடாமல் எப்பிடியோ முடி மறைச்சுப் போடுவாங்கள்.'

'உண்மைதான். அப்ப துரையப்பா என்னவாம் செய்தவர்? அவரத் தாண்டி உதெல்லாம் நடக்குமே?'

'அவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிதானே? நக்கின வனுக்கு நாக்கெழுமே? அவரும் தன்ர நன்றி விசுவாசத்தைக் காட்ட வேண்டியதுதான்.'

'எண்டாலும் அவர் நல்ல மனிசன் எண்டுதானே கதைக்கினம்' என்றா தேவனின் அம்மா.

'அப்பிடித்தான் எல்லாரும் சொல்லுகினம். உவன் அமுதலிங்கத்துக்கும் அவன்ர கூட்டுக்குந்தான் அவனைப்

பிடிக்கிறேல்லையாம். மற்றும்படி அவன் சனத்துக்கு நிறையத் தானே செய்திருக்கிறான்.'

'அதெண்டா உண்மையெணை. அவங்களோட சேர்ந்து நிண்டாத்தானே நாங்களும் வாழலாம். அது ஒரு சிலருக்குத்தான் ஒழுங்கா விளங்குதெணை'. என்றா தேவனின் அம்மா.

'பிறகென்ன? இல்லாட்டி தியாகருக்கு ஒண்டும் தெரியா மலே அங்கையும் இங்கையுமாத் தாவுறார். எங்க இருக்கிறது எண்டது முக்கியமில்லை. எதைச் செய்து முடிக்கிறம் எண்டது தான் முக்கியம். இதுதான் அவரின்ர நிலைப்பாடு.'

'சரியடி பிள்ளை வெய்யில் ஏறுது. நான் போய் கறி எதும் கிடைக்குதோ எண்டு மடத்தடியில பாத்தரோணும். இவளவை எல்லாம் இப்ப சங்கானைக்கு கொண்டு ஓடுறாளவ. வீட்ட கொண்டு வந்து தாறாளவையே இல்ல. மடத்தடிக்குப் போனாலும் உள்ளங் கையளவு மீன்குஞ்ச வைச்சுக் கொண்டு இரண்டு ரூபா மூன்று ரூபா எண்டெல்லே சொல்லுறாளவ. எல்லாம் உந்தச் சீனோர் வேட்டு வந்தபிறகு அள்ளு கொள்ளையா மீன் வாறதால வந்த வில்லங்கம்.'

'அது சரியணை. நாங்கள் என்ன செய்யேலும் அதுக்கு? அவங்கட மீன் அவங்கள் எங்கயும் விப்பாங்கள். உலகம் மாறத்தானே செய்யும். எணேய் எனக்கும் ஏதாவது திரளி, முரல், இல்லாட்டி சின்ன விளைக்குஞ்சு வேண்டியாறியோணை. இறால் இருந்தா ஒரு இரண்டு ரூபாய்க்கு அதையும் வேண்டியாணை. அவன் தேவனுக்கு இறாள் பொரியல் எண்டா உயிரெணை.'

'சரி, நான் பாத்து வேண்டியாறன்.'

அன்று இறால் பொரியலோடும் மீன்குழம்போடும் குத்தரிசிச் சோற்றை ஒரு பிடி பிடித்துவிட்டு அப்பா எங்கோ போய்விட, ஏற்கனவே போன துணிவில் தேவன் வாசக சாலைக்குப் புறப்பட்டான். அவனுக்கும் ரவுணில் என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும் என்கின்ற பதைபதைப்பு.

வாசகசாலையில் இன்று அளவுக்கு அதிக இளைஞர்களின் கூட்டமாய் இருந்தது. எல்லோர் முகத்திலும் ஒருவித கவலையும்

ஒளிந்து விளையாடும் கோபமும் இழையோடி இருந்தது. எது எதற்காக நடந்தது என்பதை எல்லாம் மீறி சிங்களவன் தமிழனைச் சுட்டான் என்கின்ற கோபமே வலுப் பெற்று நின்றது.

சிவகுருநாதன் அண்ணை மிகவும் கோபமாக இருந்தார். அவர் க.பொ.த உயர்தரப் பரீட்சை எடுத்துவிட்டு புள்ளிகள் பற்றாமையால் இரண்டாம் தரம் பரீட்சை எடுப்பதற்குப் படித்துக் கொண்டு இருக்கிறார். இரவில் சருவச் சட்டிக்குள் நீர் ஊற்றி, அதற்குள் கால்வைத்து, முழித்திருந்து படிப்பார் என்று தேவன் கேள்விப்பட்டிருக்கிறான். தமிழர் நல்லாகப் பெறுபேறு பெற்றாலும் சிங்கள அரசு வேண்டும் என்றே ஓரங்கட்டுவதாய் அவர் புலம்புவார். தேவனுக்கு அது சரியா பிழையா என்பது புரியவில்லை. என்றாலும் சிங்களப் போலிஸ் யாழ்ப்பாணத்திலேயே தமிழரை நாய்போலச் சுட்டதாகக் கேள்விப்பட்டதில் இருந்து அவன் உள்ளம் கொதித்தது.

திடீரென சிவகுருநாதன் அண்ணை தேவனுடன் கதைக்கத் தொடங்கினார். தேவனுக்கு சிவகுருநாதன் அண்ணையை முழுமையாக நம்ப முடியாத ஒருவித ஐமிச்சம்.

'என்ன கொப்பர் இண்டைக்கு வேலைக்குப் போனவரே?'

'ஓ...'

'அவருக்கென்ன? உத்தியோகத்தில் ஏற்கனவே குந்தினவைக்கு இனிப் பிரச்சனை இல்லத்தானே?'

'அது அப்பாவுக்குத்தான் தெரியும்.' தேவனுக்கு அந்தக் கேள்வி பிடிக்கவில்லை.

'நேற்று யாழ்ப்பாணத்தில நடந்த அநீதியப் பாத்தியே?'

'ஓ, பள்ளிக்கூடத்திலேயும் உதுதான் இண்டைக்குக் கதை.'

'கதைச்சு என்ன பிரயோசனம்?'

'அப்ப?'

'மயிலே மயிலே இறகுபோடு எண்டா அது இறகு போடுமே?'

'ம்.. உது நல்லா இல்லையண்ண.'

'அப்ப நாங்கள் குனியக் குனிய அவங்கள் குட்டிக் கொண்டு இருப்பாங்கள், நீ வேண்டிக்கொண்டு இருக்கலாம் எண்டுறியே?'

'அது என்னவோ தெரியாது. எங்களுக்கு உந்தப் பிரச்ச னையால லேசில பெரிய பாதிப்பு ஒண்டும் வந்திடாது. ஆனா இந்த ஊரை யோசிச்சுப் பாருங்கோ. ஒவ்வொருவரும் சிங்கள ஊரில செய்யிற பிழைப்பிலதானே இந்த ஊர் இப்பிடிச் செழித்து இருக்குது? அவங்கள் எல்லாம் தொடர்ந்தும் தொழில் செய்ய வேண்டாமே? சும்மா குழப்பப் போனால் எல்லாரோட வயித்திலயும் மண்தான்.

'அதுதான் ஏற்கனவே அவங்கள் நிறைப் பேரின்ர வயித்தில மண்ணள்ளிப் போட்டிட்டாங்கள்.'

'என்னவோ அண்ண எனக்கு இதைப்பற்றி அதிகம் ஒண்டுந் தெரியாது. ஆனா பிரச்சனையெண்டு துவங்கப்போனா எல்லாருக்கும் தொல்லையாத்தான் இருக்கும் எண்டு நினைக்கிறன்.'

'அமுதலிங்கம் மாதிரி ஆட்கள் இருக்கினம். அவைக்கு நாங்கள் ஒழுங்கா ஒத்துழைப்பு கொடுத்தா எங்களுக்கு ஒரு விடிவு வரும்.'

'இவையால உந்தப் பிரச்சனைய தீர்க்கேலுமே அண்ணை? ஒரு அடி விழமுதல் எங்க ஓடலாம் எண்டு பாக்கினம். மெட்றாசில போய் நிண்டு அறிக்கை விடுவினம். அதைவிட தியாகர் மாதிரிச் சேர்ந்து நிண்டு ஊர முன்னேற்றும்படியான வேலைய ஒழுங்காச் செய்யிறது மேல். அமிர்தலிங்கத்தாரின்ர வேலை கடைசியில அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதையாகி, நிர்க்கதியா நடுத்தெருவில் நிற்கவேண்டி வைக்குமோ என்னவோ?'

'சீ, அப்பிடியெல்லாம் நடக்காது. எங்கட பக்கம்தானே இந்தியா, இந்திரா காந்தி எல்லாரும் இருக்கினம். நிச்சயமாக அவை எங்களுக்கு கை கொடுப்பினம்.'

'என்னென்னவோ எல்லாம் சொல்லுறியள். ஏதோ எங்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை கிடைச்சாச் சரிதான்.'

'நீ நல்லா, தாத்தா மாதிரிக் கதைக்கிறாய்.'

'என்ன விடுங்கண்ணை, நான் வீட்ட போகோணும்.'

'ஏனடா?'

'என்னண்ண தெரியாத மாதிரிக் கேட்கிறாய்?'

'ஓமடா நானும் அவரிட்ட முறையாப் பள்ளிக்கூடத்தில வேண்டிக் கட்டி இருக்கிறன். அது பள்ளிக்கூடத்தில. வீட்டி லையும் கொப்பர் அப்பிடியோடா?'

'பிறகென்ன அண்ண செங்கோலைத் தூக்கின அவருக்கு வைக்க மனம் வாறேல்ல. எப்பவெல்லாம் என்ர முதுகில பாயும் எண்டு எனக்கே தெரியாது.'

அப்பொழுது யூன் மாதமாக இருக்க வேண்டும். தேவன் நேரம் கிடைக்கும்போதெல்லாம் வாசகசாலைக்கும் பிள்ளையார் கோயிலுக்கும் செல்வது வழக்கம். தேர்முட்டியில் ஏறியிருந்து அரட்டை அடிக்க வேண்டும் என்கின்ற ஆசை அடிமனதில் அரித்துக்கொண்டு இருந்தது. அப்பாவிற்குப் பயந்து அதைச் செய்வதில்லை. தேர்முட்டியில் இருப்பவர்கள் ஒருவகையில் தமது வீட்டுக் கட்டுப்பாட்டில் இருந்து சுதந்திரம் பெற்றவர் களாக தேவனுக்குத் தோன்றுவது உண்டு. தேவனுக்கும் அந்தச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற ஓயாத துடிப்பு அடிமனதில் திமிறியது.

அன்று பிள்ளையார் கோயில் பூசை முடிந்திருந்தது. வைர வருக்கு ஒரு சிறிய கோயில்தான் உண்டு. அதுவும் ஆலயமணிக் கோபுரத்திற்கும் யாகசாலைக்கும் இடையில் உள்ள ஒரு குறுகிய இடந்தான் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. வைரவரின் பரணுக்குள்ளே நின்று நிமிர்ந்து திரும்ப முடியாது. ஐயர் அதற்குள் நிற்பதாயின் உடலின் பின்பாகத்தை வாயிலின் வெளியே வைத்துக்கொண்டு, உள்ளே நின்று பூசை செய்வார். அன்று ஐயர் வைரவருக்குச் சாத்திய வடைமாலையைத் தட்டில் கழற்றி வைத்தார். பின்பு அதை உள்ளே வைக்க முடியாமையால் வாயிலின் வெளியே வைத்தார். அதைத் தொடர்ந்து வைரவரின் மாலைகளைச் சரிசெய்துவிட்டு கற்பூர ஆராதனை செய்தார். பின்பு வெளியே வந்து தட்டத்தைப் பார்த்தார். அவருக்கு அடி வயிறு பகீர் என்றது.

வடைமாலை வாசகசாலைக்கு வந்திருந்தது. இது சிவகுரு நாதனின் திட்டம் என்பதை அவர் கதையில் இருந்து தேவன் புரிந்து கொண்டான். அமுதனும் அங்கு வந்து சேர்ந் திருந்தான். அவன் தேவனைக் கண்டவுடன்...

'டே நீயும் வடைமாலை களவெடுக்கிறியே?'

'ஐயோ நான் அப்பிடிச் செய்வனே?'

'அப்ப நீ என்ன செய்யிறா இஞ்ச?'

'நான் பேப்பர் வாசிக்கிறன்.'

சிவகுருநாதன் இடையில் புகுந்து, 'அமுதன்... அவனை வெருட்டுறதை விட்டுட்டு போய் கனகர் கடையில தேத்தண்ணி வேண்டியாவன். வடைக்குப் பிளேன் ரீ இல்லாட்டி சரிவராது எண்டு நினைக்கிறாங்கள்.'

'சரி எத்தின ரீ?'

'பத்து வேண்டியா.'

'ஆருடைய கணக்கில?' அமுதன் திருப்பிக் கேட்டான்.

'டே போடா உன்னிட்ட இல்லாமலே?'

'எனக்குத் துண்டு வைக்கிறது எண்டு முடிவு பண்ணீட்டியள்.'

சிவகுருநாதன் இப்படி ஓசி ரீ குடிப்பதில் கெட்டிக்காரன் என்பது அமுதனுக்குத் தெரியும்.

'போடா அமுதா, எல்லாரும் வடையப் பாத்து வாணி ஊத்திக் கொண்டு இருக்கிறாங்கள்.'

'வா தேவா... ரீ கொண்டுவர ஆள் வேணும்.' அமுதன் தேவனைக் கூப்பிட்டான்.

'அப்பா பாத்தா?'

'டே வாடா.'

தேவன் அமுதன் பின்னால் எதுவும் பேச முடியாதவனாய்ச் சென்றான்.

கனகர் கடையில் சிலர் தேநீரும் சிற்றுண்டியும் அருந்திக் கொண்டு இருந்தனர். பலவித பலகாரம் கண்ணாடிப் பெட்டியில் கைபட்டு வாய்சேரக் காத்திருந்தது. வீட்டில் செய்யப்படும் போது இல்லாத வாசமும் ஆசையும் ஏன் கடையில் ஏறிய வுடன் தோன்றுகிறது? அவனுக்குப் புரியவில்லை. கனகர் கடையில் சம்பலும் தோசையும் சாப்பிட்டால் எப்படி இருக்கும் என அவனுக்கு எண்ணத் தோன்றியது.

கனகர் அமுதனைக் கண்டவுடன், 'என்ன அமுதன், நீ இந்தப் பக்கம் வாறதைக் குறைச்சுப் போட்டா?' எனத் தனது வியாபாரத்தை விருத்தி செய்யும் முயற்சியில் இறங்கி இருந்தார்.

'அப்பிடி இல்லை. வேலைக்குப் போறதால நேரம் குறைவு அண்ண' என்றான் அமுதன்.

'ரீ போடுறன் குடி.... என்ன வாத்தியார் மகனும் உன்னோட வந்திருக்கிறார்? 'அவருக்கும் ஒரு ரீ போடவே?'

'அதொண்டும் இப்ப வேண்டாம் அண்ண. எங்களுக்கு பத்து ரீ தாங்கோ, வாசகசாலைக்குக் கொண்டு போகோணும்.'

'பலகாரம் ஏதும்?'

'வேண்டாம்.'

'ரீயத் தனியவே குடிக்கப் போறாங்கள்?'

'பலகாரம் அவங்கள் வைச்சிருக்கிறாங்கள்.'

'ஆரவன் எனக்கு எதிரா அங்க கடை துவங்கினவன்?'

'அப்பிடி ஒருத்தரும் தொடங்க மாட்டினம் அண்ண. ஐயரிட்ட தட்டிப்பறிச்சுக் கொண்டு வந்திருக்கிறாங்கள்.'

கனகர் ரீ போட்டவண்ணமே தேவனின் பக்கம் திரும்பி, 'என்ன தம்பி கொப்பர் சுகமா இருக்கிறாரே?'

'ஓ...'

அமுதன் காசைக் கொடுத்தான். பின்பு ரீயை எடுத்துக் கொண்டு இருவரும் வாசகசாலையை நோக்கிச் சென்றனர்.

•

எல்லோரும் ரீக்காகக் காத்துக் கொண்டு இருந்தனர்.

'வா அமுதா வா. என்ன கனகர் இவ்வளவு மினக்கெடுத்திப் போட்டார். நாங்கள் எல்லாரும் உங்களைப் பாத்துக்கொண்டு எச்சில ஊத்திக்கொண்டு இருக்கிறம். நீங்கள் ஆடிப்பாடி வாறியள்' என்றார் சிவகுருநாதன்.

'ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கேலாதே?' என அமுதன் பதிலளித்தான்.

'டே, நாங்கள் எங்க ஆக்கினம். பாவம் அந்த ஐயர் ஆக்கினார். இப்ப கைக்கெட்டினது வாய்க்கு எட்டேல்லே எண்ட அவதியில திரிவார்.'

'ஐயர் வடையத் தேடி வந்தாலும் வரப்போறார்.'

'அவர் அங்க எடுத்து வைச்ச மிச்சத்தக் கொடுத்து சமாளிச்சிருப்பார். நீங்கள் மாலையை அவுழுங்கோ.'

மாலை அவிழ்க்கப்பட்டு வடைகள் பங்கீடு செய்யப் பட்டன. வடை இருந்த தாராளத்திற்கு ரீ பற்றாது போக ஒரு ரீயை இருவர்கூட மாறி மாறிக் குடித்தனர்.

திடீரென சிவகுருநாதன் பேசத் தொடங்கினான்.

'டே நாங்கள் இந்தத் தீவுக்க பேசாமல் இருக்கிறம். உங்க யாழ்ப்பாணத்திலேயே ஆயிரம் ஆயிரம் போராட்டங்கள் நடக்குது. நாங்கள் பொன்னையங்கள் மாதிரி நெடுகவும் இருக்கக் கூடாது.'

'நீங்கள் அவன் சிவகுமாரன் எண்ட உரும்பிராய் பொடியனைப் பற்றி கதைக்கிறியளாக்கும். உங்கையும் சிலர் கறுத்தக் கொடி கட்டி இருக்கினம்.'

'ம்... அவன் ஒரு தியாகி.'

'அப்ப அவருக்கு வங்கியில என்னண்ண வேலை?'

'போராட்டம் எண்டு வெளிக்கிட்டா சாப்பாடு, ஆயுதம், பயணச் செலவு மனிசனுக்குத் தேவையில்லையே? பிச்சை எடுத்தே இதுக்கெல்லாம் காசு சேர்க்க முடியும்? அதுக்கு ஏதாவது வருமானம் வேண்டாமே? வங்கியில இருக்கிறது யாருடைய காசு?

யாரும் கொழுத்த பெருச்சாளிகள் வீட்டில வைச்சிருக்கேலாமல் கொண்டே வைக்கிறதுதானே? மக்களின்ர காசு மக்களின்ர போராட்டத்திற்குப் போகுது' என்றான் சிவகுருநாதன் அதை நியாயப்படுத்தும் விதத்தில்.

'இதை நாங்கள் மாத்தியும் சொல்லலாம்' என்றான் அமுதன்.

'என்ன சொல்லுறா அமுதன்?'

'மக்களுக்காக போராட வெளிக்கிட்டவை மக்களையே கொள்ளை அடிக்கலாமோ? மாவோ சொன்ன வார்த்தைக்கு அது அடங்குமோ? இதையெல்லாம் முதல்ல போராட்டம் எண்டு சொல்லலாமோ? என்ன தத்துவம், என்ன அரசியல் கொள்கை, என்ன அடிப்படையில இந்தப் போராட்டம் தொடங்கி இருக்குது? கொள்ளை அடிக்கப் போனவருக்கு அது தெரியுமோ? இல்லாட்டி இந்தப் போராட்டம் எங்க போய் எப்பிடி முடியும் எண்டு உருவேத்திற அரசியல்வாதியளுக்குத் தெரியுமோ? சுட்டா, கொலை செய்தா மட்டும் சுதந்திரம் கிடைச்சிடுமோ?'

'நீ என்ன எல்லாம் தெரிஞ்சவன் மாதிரிக் கதைக்கிறா. சிவகுமார் ஒண்டும் சாதாரண ஆள் இல்லை. ஏற்கனவே போலிஸ் சந்திசேகராவைப் போட றை பண்ணினவன். அது பிழைச்சிட்டுதாம். இரண்டாவதா புன்னாலைப் பாலத்தில வைச்சு துரையப்பாவுக்கு றை பண்ணினதும் பிழைச்சுப் போச் சாம். அவனைப் பிடிக்கோணும், உந்த அரசியல் போராட்டத்தை வேரோடு கிள்ளி எறியோணும் எண்டு போலீஸ் கங்கணம் கட்டிக் கொண்டு திரியுதாம். அதில இருந்து விடுபட்டு சிவகுமாரன் தமிழ்நாட்டுக்குப் போக காசு தேவைப்பட்டிருக்குது. அதை அரசியல் தலைவர்களிடம் கேட்டிருக்கிறான். அவை அதைக் குடுக்கிறதில காட்டின அக்கறையின்மைதான் இந்த விளைவாம்.'

'கொலை செய்தும் பிரச்சனையைத் தீர்க்க முடியுமோ? யார் இந்தக் கண்டுபிடிப்பை அறிமுகமாக்கினது? எத்தின பேரப் போட்டு உந்தப் பிரச்சனையைத் தீர்ப்பினம் எண்டு இருந்து பாப்பம்,' என்று அமுதன் மீண்டும் கூறினான்.

'அப்பிடிச் சொல்லாத அமுதன். செல்வநாயகம் ஐயா, அமிர்தலிங்கத்தையெல்லாம் அப்படிச் சொல்லலாமே?'

'அப்ப கோல்பேசில அடிய வேண்டி வேண்டி போராட்டத்தை நடத்த வேண்டியதுதானே? அதவிட்டிட்டு ஓட்டமெடுக்கினம். பிறகு இங்க வந்து சும்மா இருக்கிறவனையெல்லாம் கொப்பில ஏத்தி விடுகினம். எல்லாரையும் காந்தியா நினைக்கிறது ஒண்டும் ஆரோக்கியமான விசயம் இல்ல. இவை ஒண்டும் அந்தமாதிரியான ஆட்கள் இல்லை.'

'உன்ர கோபத்தில் சிலவேளை நியாயம் இருக்கலாம். எனக்கு அது வேற மாதிரித் தெரியுது.'

'அது சரியண்ண, கொள்ளை அடிக்கப் போய் என்ன நடந்தது அண்ண?'-தேவன் கதையை மாற்றினான்.

'அதோடா அப்பா. ஏதோ போலிஸ் சுட றைபண்ணினவனாம். ஆனா நாட்டுத் துவக்கு ஒண்டு வெடிக்கேல்ல எண்டு கேள்வி. போலிஸ்காரன் பிடிக்க இவன் சைனெட் அடிச்சிட்டான் எண்டு சொல்லுறாங்கள்.'

'அதென்ன , சைனெட் எண்டா?'

'அது ஒரு விஷமடா அப்பா. சாப்பிட்டா உடன உயிர் போயிடுமாம். உந்த மரவள்ளிக் கிழங்கும் இஞ்சியும் சேர்த்துச் சாப்பிட்டா வாற நஞ்சாமடா.'

'அவர் அப்ப விஷத்தையும் கொண்டே திரியிறவர்?'

'ஓமாம்.'

'ஏன் அண்ண?'

'ஏற்கனவே போலிசில இருந்து அங்க அனுபவிச்ச சித்திர வதைக்குப் பிறகு, இனி போலிசில மாட்டக் கூடாது; அப்படி மாட்டுற சந்தர்ப்பம் வந்தா தற்கொலை செய்யிறது மேல் எண்டு முடிவு எடுத்தவனாம்.'

'ஏன் அண்ண அப்பிடி நினைச்சவர்?'

'அப்பிடியெண்டா இரகசியங்களையும் சொல்லத் தேவை யில்லை. அதே நேரம் சித்திரவதையையும் அநுபவிக்கத் தேவை யில்லை எல்லே?'

'எண்டாலும் உயிர் போனாப் போனதுதானே?'

'நாட்டுக்காக உயிர் விடுகிறது எண்டு அவை முடிவு செய்து தானே புறப்பட்டவை? இந்தப் போராட்டத்தில கௌரவமும் இரகசியமும் உயிரவிட மேலானது.'

'இண்டைக்கு அவனுக்காக யாழ்ப்பாணமே ஸ்தம்பிச்சுப் போச்சுது. பதினையாயிரம் சனத்துக்கு அதிகமாக இருக்குமாம். எங்க பாத்தாலும் ஒரே சோகமயம்தானாம். செத்தாலும் ஒரு தியாகச்சுடராய், முன்மாதிரியாய் செத்து இருக்கிறான். எத்த னையோ பெடியள் சிவகுமாரனைப் பின்பற்றுவோம் எண்டு இரத்தப் பொட்டு வைச்சிருக்கிறாங்கள். அவ்வளவுக்கு உணர்ச்சி, கவலை, சிங்களவன்மேல கோபம். அமிர்தலிங்கத்தாரே சிவகுமார் மாபெரும் தியாகி எண்டும் அவனது தியாகத்தை மதிக்கிறன் எண்டும் பேசி இருக்கிறார்.'

'நாட்டுக்காக உயிரைக் கொடுக்கிறது பெரிய விசயம்தான். எல்லோருக்கும் அந்தத் துணிவு வராதுதான். ஆனா அமுத லிங்கத்தார் தன்ர பதவிக்காக முருங்கையில ஏத்துவார். கவனமாக இருக்கோணும் ' என்றான் அமுதன் மீண்டும்.

''சிவகுமாரின்ர அந்தத் துணிவுதான் எனக்குப் பிடிச்சது.
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.''

எல்லாரும் உணர்ச்சிவசப்பட்டு கைதட்டினார்கள்.

'அண்ண நீங்கள் இந்தத் தீவின்ர பாரதியண்ண' என்றான் தேவன்.

'பாரதியின் வரிகளை உச்சரிப்பவன் எல்லாம் பாரதி ஆகிவிட முடியுமா? எனக்கு இதைவிட ஒன்றும் இப்போது மனதில் வரவில்லை' என்றான் சிவகுருநாதன்.

'நாங்கள் இருக்கிற இலங்கை நிறைய மாறப்போகுது எண்டுறியள்' என வினவினான் அமுதன்.

'ம்... இந்தப் போராட்டம் எவ்வளவு காலம் தொடரும்? அதன் முடிவு எப்பிடி அமையும் என்பது ஒருவருக்கும் தெரியாது. இது ஒருவித திகிலை உருவாக்கி இருக்கிறது' என்றான் சிவகுருநாதன்.

'சரியண்ண நேரமாகுது. உதுகளைக் கதைச்சுக்கொண்டு இருந்தா இப்பிடியே கதைச்சுக் கொண்டு இருக்கலாம்' என அந்தச் சம்பாஷணைக்கு முடிவுகட்டிய அமுதன், பின்பு தேவனைப் பார்த்து, 'தேவன் வாறியே?' என்றான்.

'ஓ... ஓ... வாறன்' எனத் தேவனும் எழுந்து கொண்டான்.

தேவனுக்குச் சிவகுருநாதன் கூறியவற்றையெல்லாம் கேட்டதில் ஒருவித குழப்பமாக இருந்தது. சிவகுருநாதனிடம் அதை நேரடியாகக் கேட்கவும் கூச்சமாக இருந்தது. தேவனுக்கு அதை அமுதனோடாவது கதைப்பது உசிதமாகத் தோன்றியது.

'என்னண்ண சிவகுருநாதன் அண்ண ஏதோ எல்லாம் கதைக்கிறார்? ம்... உதெல்லாம் சும்மா ஊரக் குழப்பிற மாதிரி இல்லையே? எங்களுக்கு என்ன குறையண்ண இந்த ஊரில? அதவிட எங்கட சனங்கள்தான் இவங்கட வேலையால முதல்ல பாதிக்கப்படப்போற சனங்களா இருக்கும். எங்கட ஊர் சனங்கள் சிங்களவனை நம்பித்தானே வாழோணும்? அடி வேண்டினால் கூட அங்க இருந்துதானே உழைச்சு அள்ளி வரவேணும்? தமிழனுக்கும் பிஸ்னஸ் செய்யேலுமே? இப்பிடி இவங்கள் குழப்பினா எங்கட ஊரின்ர வயித்தில மண்ணள்ளிப் போட்ட மாதிரி எல்லே இருக்கும்?'

'நீ சொல்லுறதும் உண்மைதான். ஆனா தமிழன வேணும் எண்டே எல்லாச் சிங்கள அரசும் ஓரங்கட்டுதுகள். ஐம்பத்தி யாறாம் ஆண்டு கலவரத்திலேயே எத்தினபேர் அடிவேண்டிக்

கொண்டு இங்க வந்தவை. அது அத்தோட முடியேல்ல. தொடர் கதையாச்சு. அவங்கட ஊரிலதான் அடிக்கிறாங்கள் எண்டா இப்ப எங்கட யாழ்ப்பாணத்திலேயும் தங்கட சேட்டையைக் காட்டத் தொடங்கீட்டினம். ஒரு வகையில குனியக் குனியக் குட்டிக் கொண்டு இருந்தா எவ்வளவு காலத்துக்குத் தாங்கிறது?'

'அதுவும் நியாயம்தான். எண்டாலும் இதைச் சிங்கள அரசியல்வாதிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் பார்லிமெண்டில வைச்சு கதைச்செல்லோ அண்ணை தீர்க்கோணும். இப்பிடிப் பெடியளை ஏத்திவிட்டா அது என்ன மாதிரி உருவெடுக்கும் எண்டு யாருக்கும் தெரியுமே?'

'கதைக்காமலே? எத்தின தரம் கதைச்சாச்சு? எத்தின தரம் அக்கிறிமென்ற் போட்டது? ஆனா சிங்கள அரசியலில் ஏமாற்று வித்தை தொடர்கதையாப் போச்சுது. வாக்கு பெறவேணும் எண்டா தமிழனை பலிக்கிடாவாக்க வேணும் எண்டதை எல்லாச் சிங்கள அரசியல்வாதிகளும் தெரிஞ்சு வைச்சிருக்கினம். அதையே செய்து செய்து அரசியல் சூது நடத்துகினம். இது எதில போய் நிக்கும் எண்டது யாருக்கும் தெரியாது. சுயநலம் இல்லாத அரசியல்வாதிகள் இருந்திருந்தா நீ சொன்னது எப்பவோ நடந்திருக்கும்.'

'எங்களுக்குள்ள ஒரு நெல்சன் மண்டேலாவோ மகாத்மா காந்தியோ இல்லை எண்டுறியள்.'

'ம்... அது வருத்தமான உண்மை தேவா.'

15

சுபனை அன்று பாடசாலையில் இருந்து அழைத்து வருவதற்கு காரை எடுத்துக்கொண்டு தேவன் புறப்பட்டான். மனதில் ஒரு நெருடல்... 'இந்த சொகுசு... அதீத அக்கறை... சுபனை வாழ்வின் கரடுமுரடான பக்கங்களை அறியாது தடுத்து

விடுமா?' என்கின்ற இனம் புரியாத கவலை அவன் மனதில் திடீரென எழுந்துநின்றது. காரைச் செலுத்திக் கொண்டு இருக்கும் போதே தேவனின் நினைவு வழுவி ஊரில் போய் நின்றது

அன்று பள்ளி விட்டு வரும்போது நல்ல வெயில். தேவனுக்குப் புழுக்கம் தாங்க முடியவில்லை. சிலவேளைகளில் இந்தத் தீவு தீப்பற்றி எரிவதான உஷ்ணம். நாலுபக்கமும் கடல் வளைத்து வைத்திருக்கும் போதே இந்த வெப்பம் என்றால் கடல் இல்லாது இருந்திருந்தால்? அவனுக்கு ஒன்று புரிந்தது. இந்த வெக்கை வாட்டும் வாட்டில் தோல் கறுத்து வரண்ட கோலத்தில் அலைபவர்கள், பதுளை, பண்டாரவளை எனச் சென்று பின்பு திரும்பி வரும்போது, தோல் மினுமினுக்க வருவார்கள். வெப்பம் எப்படி மனிதரை வாட்டி எடுக்கிறது என்பதை வெடித்து கறுத்த தோலின் சுருக்கங்கள் இடையே படரும் வெள்ளைப் பொருக்கு இனம் காட்டி நிற்கும். சற்றுக் குளிர் மினுமினுப்பை ஏற்றி பளபளக்க வைக்கும்.

தார் பல இடங்களில் பொட்டுப் பொட்டாக உருகி இருந்தது. கால் வைத்தால் காலில் அப்பிக் கொள்ளும் பதத்தில் அது உருகி இருந்தது. அப்பா செருப்பைப் போட்டுக் கொண்டு போகுமாறு தேவனை நச்சரிப்பார். தேவன் அதைப் போடுவதற்கு மறந்து விட்டான். அதிகமான நண்பர்கள் பாடசாலைக்கு செருப்பு போட்டுக் கொண்டு வருவதில்லை. மாணவிகள்தான் அதிகமாகச் செருப்போடு வருவார்கள். தேவனுக்கு செருப்பு போட்டுக்கொண்டு போகும்போது மற்றைய மணவர்களிடம் இருந்து தான் தனித்து விடப்பட்டதாகத் தோன்றும். என்றாலும் அப்பாவுக்காக அவன் அதை அணிந்து செல்வதுண்டு.

இன்று வெப்பம் காலைச் சுட்டது. தேவன் தார் உருகாத இடம் பார்த்தும் புல்லுப் பார்த்தும் நடந்து வந்தான்.

பிள்ளையார் கோயிலடிக்கு வந்தவுடன் எதேச்சையாக கேணியை எட்டிப் பார்த்தான். மோசமாய் அடிவயிறு காய்ந்த கோலத்தில் பச்சைப் பாசி படிந்து கிடந்தது. சிறிதளவு நீர் மட்டுமே சூரியனின் முரட்டுப் பார்வையில் இருந்து தப்பி இருந்தது.

சங்கக் கடையில் நின்று சிலர் கூப்பன் சாமான்கள் வேண்டிக் கொண்டு இருந்தார்கள். தேர்முட்டியிலும் வாசக

சாலையிலும் இன்று வழக்கத்துக்கு மீறிய கூட்டம் நின்றிருந்தது. இப்படி அதிக கூட்டம் இந்த நேரத்தில் கூடுவது வழக்கம் இல்லை என்பது தேவனுக்குத் தெரியும்.

தேவனால் ஆவலை அடக்க முடியவில்லை. தேர் முட்டிக்குப் போக முதலில் எண்ணியவன், பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என முணுமுணுத்த வண்ணம் வாசகசாலையை நோக்கிச் சென்றான். கனகர் கடையைக் கண்டவுடன் வாயூறியது. தேவனுக்கு தன்னிடம் இருந்த இரண்டு ரூபாய்த்தாள் ஞாபகம் வந்தது.

சிறிது நேரத்தில் ஒரு வாய்ப்பனைச் சுவைத்த வண்ணம் தேவன் வாசகசாலையை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றான். அங்கே சிவகுருநாதன் அண்ணாவையோ அல்லது அமுதன் அண்ணாவையோ காணவில்லை.. அவர்கள் இன்னும் வரவில்லை. அதற்குப் பதிலாக தம்பிராசா மாமா, இராமன் அண்ணா, சுப்பு அண்ணா, சிவசம்பு மாமா எனப் பலர் அங்கு வந்து இருந்தனர். அவர்களின் முகங்களில் எல்லாம் சோகம் அதீதமாகச் சொட்டும் கோலமாய் இருந்தது. இது எதற்காக என்பதை அறிய வேண்டும் என்கின்ற ஆவலைத் தேவனால் அடக்க முடியவில்லை.

தேவன் விறுவிறுவென சிவசம்பு மாமாவிற்குப் பக்கத்தில் போய் நின்றான். சிவசம்பு மாமா மிகவும் கவலையாக தம்பிராசா மாமாவோடு கதைத்துக் கொண்டு இருந்தார். அவர் முதலில் தேவனைக் கவனிக்கவில்லை. பின்பு திடீரெனத் திரும்பியவர் அவனைக் கண்டவுடன், 'டே தேவன் நீ என்ன செய்யிறா இஞ்ச?' என அதட்டினார்.

'இல்ல மாமா, பள்ளிக்கூடத்தால வரேக்க இஞ்ச கூட்டமாய் இருந்திச்சுது... அதுதான் என்னெண்டு பாப்பம் எண்டு இங்க வந்தன். என்ன மாமா நடந்தது? ஏன் எல்லாரும் கவலையா இருக்கிறீங்கள்?'

'ஓ, அதே தேவன். யாழ்ப்பாணத்து மேயர் அல்பிரேட் துரையப்பாவை காலமை சுட்டுப் போட்டாங்களாம். எல்லா

இடமும் ஒரே பதட்டமா இருக்குது. இப்பிடியெல்லாம் நடக்கும் எண்டு ஒருத்தரும் கனவு கண்டிருக்க மாட்டினம்.'

'எங்க மாமா நடந்திச்சுது?'

'அ!—, உந்தப் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு முன்னால வைச்செல்லே ஆரோ அறுவான்கள் இதைச் செய்திருக்கிறாங்கள்.'

'ஏன் மாமா அவருடைய பெயர் வித்தியாசமாய் இருக்குது?'

'ஓ அதுவா. அவர் வேதக்காரர். அதுதான் பெயர் அப்பிடி இருக்குது.'

'வேதக்காரர் ஏன் மாமா பெருமாள் கோயிலுக்குப் போனவர்?'

'அதுதான் அல்பிரேட் துரையப்பா. அவர் கிறிஸ்த வராய் இருந்தும்கூட இந்துக் கோயில்ல சாந்தி கண்டிருக்கிறார்.'

'கோயில்லையும் வைச்சு கொலை செய்யிறதே? இவங்கள் எல்லாம் என்ன மனிசரடா?' – தம்பிராசா மாமா இடையில் புகுந்தார்.

'அப்பிடிச் சொல்லும் தம்பிராசா. ஒரு புனிததலத்தில இரத்தக்கறை படுகிற மாதிரிச் செய்கிறதே? நாடு அழியப் போகுது பார்... கோயில்லேயே கொலை நடக்குது. ஏதோ தமிழனுக்கு கேடுகாலம் தொடங்கீட்டுது எண்டுதான் அர்த்தம். அவன் ஏதோ யாழ்ப்பாணத்தை ஓரளவுக்கு முன்னேற்றி னவன்தானே? சிங்களவனோட சேர்ந்து இயங்கினாத்தானே நாட்ட முன்னேற்றலாம்? எங்கட தியாகர் என்னத்தை செய் யிறார்? இதைத்தானே எல்லா முஸ்லீம் கட்சிகளும் செய்யுது. பிழைக்கத் தெரிஞ்சவங்கள் சிங்களவனோட முண்டிக் கொண்டு நிப்பாங்களே?'

'மாமா...'

'ம்...'

'பிழை செய்தா கொலை செய்யிறதே? அப்பிடிச் செய்யி றதுக்கு இவையளெல்லாம் என்ன நீதிபதிகளே மாமா ?'

'அப்பிடிச் சொல்லு தேவா. துரையப்பா பிழை செய்தவரே?'

'அப்ப ஏன் கொண்டு போட்டினம் மாமா?'

'ஏதோ காரணம். என்னவோ கோபம். அநியாயமாக ஒரு நல்ல மனிசன கோயிலுக்கு முன்னால பலி எடுத்திருக்கிறாங்கள்.'

'இவங்கள் ஆரோ உந்தத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில நடந்த கொலைக்கு பழிவாங்கச் செய்திருக்கிறாங்கள் எண்டு பரவலாகக் கதைக்கினம்,' தம்பிராசா மாமா இடைமறித்துக் கூறினார்.

'அது மகா அநியாயம்தான். யாழ்ப்பாணத்திலேயே வைச்சு தமிழனைக் கொல்ல நினைச்ச துணிவு, அளவுக்கு மீறின அகங்காரம்தான். எங்களை அடக்கி ஆளோணும் எண்டுதான் சிங்கள அரசு கனவு காணுது. துட்டகைமுனு காலத்திலிருந்து இதுதான் கதை. உலகம் நிறைய மாறிப் போச்சுது. இந்தச் சிங்களவங்கள்தான் மாறமாட்டன் எண்டு அடம் பிடிக்கிறாங்கள் ' என்றார் சிவசம்பு மாமா.

'துரையப்பாவைச் சுட்டதால பெரிய பிரச்சனை எதுவும் வருமே?' தம்பிராசா மாமா கேட்டார்.

'விசாரணை வைப்பாங்களாக்கும். துரையப்பாவும் தமிழன் தானே... அப்பிடியே விட்டிடுவாங்கள்,' என்றார் சிவசம்பு மாமா.

'சிங்களவன்தான் தமிழனை அழிக்கிறான் எண்டா எங்கட தமிழரும் சொந்தச் சகோதரங்களைக் கொல்லுறது வடிவா இல்லை. இது எங்கட இருப்புக்கு நல்லது இல்லை. உள் வீட்டுக்க கொலை செய்யிறது அழகே?'

'அமிர்தரும் கொஞ்சம் அடக்கிப் பேசோணும். சும்மா இருக்கிறவங்களை உசுப்பி விடுகிற வேலை செய்யக் கூடாது. பதவிக்காக இனத்தை அழிக்கக் கூடாது,' என்றார் சிவசம்பு மாமா.

'தங்கட தங்கட பதவிக்காக யாரும் எதுவும் செய்வாங்கள். இண்டைக்கு அமிர்தரும் கூட்டணியும் செய்யுது எண்டா வருங்காலத்தில ஆரோ ஒரு சுப்பன் வந்து இந்த வேலையைச் செய்யப் போறான். இதாலதான் எங்கட தமிழ்ச்சாதி அழிஞ்சு

போகும். இருந்து பாருங்கோ' என்று சிவசம்பு மாமா அலுத்துக் கொண்டார்.

'சரியாச் சொன்னியள். ஒரு கிழுவங்கதியாலுக்கே கோடேறி இறங்கிறது எங்கட இனம். பதவி எண்டு வந்தா இவங்கள் ஆளமாட்டாங்கள். அடிபட்டு அழிஞ்சு போவாங்கள்' என்றார் தம்பிராசா மாமா.

'காகம் திட்டி மாடு சாகுமே? நாங்கள் இதில நிண்டு கதைச்சு என்னதான் ஆகப்போகுது?'

பின்பு சிவசம்பு மாமா தேவனைப் பார்த்து, 'தேவன் உனக்கு வீட்டில வேலை இல்லப்போல?' என்று கவனத்தை வேறு பக்கமாகத் திருப்பினார்.

'இல்லை, நிறைய இருக்குது மாமா,' என்று பதறியவாறு தேவன் சொன்னான்.

'அப்ப நடையக்கட்டன்.'

தேவன் சிவசம்பு மாமாவைப் பின் தொடர்ந்து நடந்து சென்றான். அது யார் துட்டகைமுனு? அவன் என்ன செய்தான் என்பதை அறிய வேண்டும் என்கின்ற ஆசையை அவனால் அடக்க முடியவில்லை.

' மாமா.'

'ம்...'

'அது யார் துட்டகைமுனு?'

'ஓ அது உனக்குத் தெரியாதே?'

'இல்லை.'

'அவன் ஒரு சிங்கள அரசன். தமிழரில அவனுக்கு இருந்த ஆத்திரத்திற்கு உதாரணமா இந்தக் கதையச் சொல்லுகினம். இதுகளின்ர உண்மை பொய் எனக்குச் சரியாத் தெரியாது. இந்தக் கதையைச் சொல்லிச் சொல்லியே தமிழரையும் சிங்களவரையும் ஒட்டவிடாமல் தடுத்துப் போட்டாங்கள். நீயும் அந்தக் கதையைக் கேள்.'

சிவசம்பு மாமா கதை சொல்லத் தொடங்கினார்.

'துட்டகைமுனுவின் தாய் விகாரமாதேவி ஒருநாள் காலையில துட்டகைமுனுவின் அறைக்குச் சென்று பார்த்து இருக்கிறார். துட்டகைமுனு குறண்டியபடி தூங்கிக்கொண்டு இருந்திருக்கிறான். குறண்டியபடி எண்டா எப்பிடி எண்டு விளங்குதே?'

'ஓ, காலை மடிச்சு அட்டைமாதிரி தூங்குறதுதானே மாமா?'

'ம்... அதுதான். அதைப் பார்த்த விகாரமாதேவி, "மகனே நிமிர்ந்து வசதியாகப் படு மகனே. எதற்காக இப்படி குறண்டிக் கொண்டு படுக்கிறாய்?" எனக் கூறி இருக்கிறா. அதற்கு அவன், "ஒருபக்கம் கடல், மறுபக்கம் தமிழர். நான் எப்படியம்மா நிமிர்ந்து படுப்பது?" என்று கேட்டானாம்.'

'என்ன மாமா அதன் அர்த்தம்?'

'தெற்குப் பக்கமாகப் பெரும் சமுத்திரம். வடக்குப் பக்கமாகத் தமிழர்கள். இப்படி இருக்கும்போது சிங்களவர்கள் எப்படி நிம்மதியாக வாழமுடியும் என்கின்ற இனங்களின் மேலான சந்தேகத்தை, பயத்தை, வெறுப்பை, காழ்ப்புணர்ச்சியை இது எடுத்துக்காட்டப் பயன்படுத்தப் படுகிறது.'

'அப்ப இந்தப் பிரச்சன நிறையக் காலமாக இருக்குது எண்டுறியளே மாமா?'

'ம்... இப்ப கடுமையாப் புகையத் தொடங்கீட்டுது. கொழுந்து விட்டு எரியாமல் அணைச்சா அது கெட்டித்தனந்தான். அதை யார் செய்யப் போறாங்கள்? எல்லோரும் சுயநலம் பிடிச்ச அரசியல்வாதிகள்தானே? சூட்டில குளிர்காயத்தானே சந்தர்ப்பம் பாத்திருக்கிறாங்கள்.'

'அப்ப இனி நிறையப் பிரச்சனை வரும் எண்டுறியளோ?'

'ம்... நீ வளர்ந்து வாற காலத்தில ஒண்டில் இந்தப் பிரச்சனை இல்லாமல் போயிருக்கும். இல்லாட்டிப் பூதாகாரமா வளர்ந்து நாங்கள் இங்க இல்லாமல் போயிடுவம்.'

'நீங்கள் என்ன நினைக்கிறியள் மாமா?'

'நல்லது நடக்கச் சந்தர்ப்பம் குறைவு தம்பி. இலங்கை ஒரு வறிய நாடு. இங்க இருக்கிற சொற்ப வளத்திற்கு எத்தனையோ இனங்கள் போட்டி. ஜனநாயகம் கோணலாய் போகும்போது பெரும்பான்மை சிறுபான்மையைச் சுரண்டும், அடக்கும், உரிமையைப் பிடுங்கும். மனிதாபிமானம் இல்லாமல் மிருகத்தனமாய் நடப்பது இலங்கை வரலாற்றில் புதுமையான ஒன்றல்ல. சிங்கள அரசியல்வாதிகளுக்கு நாட்டைவிடப் பதவியிலதான் அடங்கா மோகம் உண்டு. நாங்கள் ஏதாவது தவறு விட்டால் எங்கட இனத்தின்ர இருப்புக் கேள்வியாகும் தம்பி.'

அவர் குரல் கவலையில் தோய்ந்து கனப்பதாக அடித் தொண்டையில் இருந்து வந்தது. தேவன் சொல்லிழந்து அவர் பின்னால் நடந்தான்.

சிவசம்பு மாமா இடையில் அந்த மௌனத்தைக் கலைத்தவண்ணம், ' நீ உந்த கவலையை எல்லாம் விட்டிட்டு பேசாமல் ஒழுங்காப் படி. கொப்பரை மாதிரி ஒரு வாத்தி வேலையை எடுத்துக் கொண்டு சிவனே எண்டு இருந்திடலாம். விளங்குதே.'

'ஓம் மாமா.'

'சரி அப்பாவை நான் விசாரிச்சதாச் சொல்லு.'

'சரி.'

வீட்டுப் படலையைத் திறக்கும்போது மீன் பொரியல் வாசம் தேவனின் நாசியை நிறைத்தது. அந்த வாசமே அவன் பசியைக் கிண்டியது. தேவன் தன்னிச்சையாகக் கிணற்றடிக்கு ஓடினான். கைகால் கழுவிவிட்டு சமையல் அறைநோக்கி ஓடினான்.

16

அன்று தேவன் வாசகசாலையில் வீரகேசரியை வாசித்துக் கொண்டு இருந்தான். வெப்பம் தார் மேல் பட்டு, அவித்து இறக்கிய பிட்டிலிருந்து மேல் எழும் ஆவி போல் அனலைக் கக்கியது. மடத்தடிப் பக்கத்தில் இருந்து விஷர்முத்தன் வேக மாக வந்து கொண்டு இருந்தான்.

விஷர்முத்தன் பெரிய படிப்பெல்லாம் படித்தவனாம். கணக்கில் மிகவும் கெட்டிக்காரனாம். படிப்பாலேதான் அவனது மூளை தட்டிப் போய்விட்டதாய் பலர் கதைத்ததைத் தேவன் கேட்டிருக்கிறான். முத்தன் தேவையில்லாமல் யாரோடும் சண்டைக்குப் போகமாட்டான். சில வேளைகளில் விஷர் முற்றினால் நிர்வாணமாய்த் திரிவது உண்டு.

அப்போது யாராவது சமாளித்து அவனை அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவார்கள். இன்று வெய்யில் தாங்க முடியவில்லை என்பதால் விஷர்முத்தன் மிக வேகமாக வந்து கொண்டு இருந்ததை தேவன் கவனித்தான்.

இவனைப்போல விஷர் ஐயம்பிள்ளை என ஒருத்தன் திரிவது தேவனுக்குத் தெரியும். அவனை இப்போது சில காலம் காணமுடியவில்லை. எங்கோ சென்றுவிட்டான். அவன் உருவத்தைப் பார்த்து சிறுவர்கள் எல்லோரும் பயந்து ஓடிவிடுவார்கள். ஆனால் அவனோ சாதுவாகவே நடந்து கொள்வான். அவன் வன்முறையாக எதையும் செய்ததைத் தேவன் கண்டதில்லை.

தேர்முட்டியில் பல இளைஞர்கள் இருந்தார்கள். இவர் களின் முக்கிய பொழுதுபோக்கு காட்ஸ் விளையாடுதல், சிகரட் பிடித்தல், சைக்கிளில் போகும் பெண்களையும், பெரியவர்களை யும் பார்த்து கிண்டல் செய்தல் போன்றவை ஆகும். சில வேளைகளில் முதியவர்களின் பட்டப் பெயர்களை கேலியாக உரத்துக் கூப்பிட்டு, அவர்களின் கோபத்தைக் கிளறிவிடுவார்கள்.

பின்பு அவர்கள் தூற்றும் கெட்ட வார்த்தைகளைக் கேட்டு வக்கிர ஆனந்தத்தில் திளைத்து மகிழ்வார்கள்.

தேர்முட்டியில் ஏறி இருந்தால் இதமான குளிர் காற்று வீசுவதோடு சல்லாப சம்பாஷணையில் நேரம் சிட்டாய் பறக்கும். இதற்காக மிகவும் தூரத்தில் இருந்தும் சிலர் வேலை மினக்கெட்டு இங்கு வருவார்கள். இவர்களுக்கும் பல பட்டப் பெயர்கள் இருக்கும். அவை சாப்பாட்டுப் பெயர்களில் இருந்து பலதரப்பட்ட ஊர் பெயர்கள், குணப் பெயர்கள் என நீண்டு கொண்டு போகும்.

சில பெரியவர்களும் இவர்களோடு சேர்ந்துகொள்வது உண்டு. காட்ஸ் விளையாடுவது அல்லது சிகரெட் கடன் வேண்டுவது அவர்கள் நோக்கமாக இருக்கும்.

விஷர்முத்தன் வேகமாக நடந்து வந்தான். அவன் செம்பாடு நோக்கிச் சென்று கொண்டு இருந்தான். மனித இயந்திரத்தின் ஒருபகுதியில் கோளாறு வரும்போது மற்றைய பகுதி எவ்வளவு நன்றாக இருந்தாலும் அது உதவப் போவதில்லை என்பதை முத்தனைப் பார்ப்பவர்கள் புரிந்து கொள்வார்கள். இதைப் போலவே ஒரு சமுதாயமும் அமையும் எனத் தேவன் நினைத்துக் கொண்டான்.

முத்தன் நல்ல நிறமும் உயரமும் கொண்டவன். மெல்லிய மீசை முகத்தில் ஒட்டியது போன்று இருக்கும். சிலகாலம் தாடியோடும் சிலகாலம் தாடியற்றும் வருவான். அவன் அழகாக இருந்தும், ஏதோ ஒரு பிழை அவனது மூளையைப் பாதித்துவிட்டது. ஓர் அழகான வாழ்க்கை அலங்கோலமாகிவிட்டது. அந்த வேதனையைச் சிலர் புரிந்து கொள்வதில்லை. அதிலும் தேர்முட்டியில் இருக்கும் இளைஞர்களின் கண்களுக்கு அவை ஏனோ புரிவதில்லை. வயது போகப் போக இவை புரியும் எனத் தேவன் கிழட்டுத்தனமாக எண்ணினான். அவனுக்கு இது நியாயமற்ற தண்டனையாகவே தோன்றியது. இந்த வக்கிரம் வயது கிழண்டும்போது பாவமன்னிப்பு கேட்க வைக்குமென அவன் மீண்டும் நினைத்துக் கொண்டான்.

விஷர்முத்தன் வேகமாக வந்து கனகர் கடையைப் பின்தள்ளி தேர்முட்டியைத் தாண்டிக்கொண்டு இருந்தான்.

அவன் தேர்முட்டியில் பலமுறை சூடுகண்டிருக்கிறான். இது வில்லங்கமான இடம் என்பதும் அவனுக்குப் புரியும். அதற்காக வயற்கரையால் ஒளித்து ஓடுவதற்கு அவன் தயாராக இல்லை. அது அவனுக்குப் புரிவதும் இல்லை.

'டே விஷர் முத்தா!' திடீரென அந்த அமைதி கலைந்தது. அந்த வன்சொற்கள் தேர்முட்டியில் இருந்து வேலாய்ப் பாய்ந்து முத்தனைத் தாக்கிற்று. யார் கூப்பிட்டது என்பது தெரியவில்லை. கனகர் கடையில் இருந்தவர்கள் வெளியே வந்திருந்தார்கள். யாழ்ப்பாணம் போக பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு நின்றவர்களின் பார்வையும் தேர்முட்டியை நோக்கித் திரும்பியது. சங்கக் கடையில் நிற்பவர்கள் இடைக் கிடையே இங்கே பார்ப்பதும் மீண்டும் தராசைப் பார்ப்பதுமாய் இருந்தனர்.

விஷர்முத்தன் நின்றான். அவனுக்கு சாதுவாய் கோபம் வந்து இருக்க வேண்டும். வழமைபோல் முதலில் தூக்கிக் காட்டினான்.

தேர்முட்டியில் இருந்து கூப்பாடு போடும் சத்தம் கேட்டது. சிலர் விசிலும் அடித்தனர்.

சங்கக்கடையில் நின்ற விசாலாட்சி மாமி, 'இந்தச் சீலம் பாயளுக்கு வேற பொழுதுபோக்கு இல்லையே? அவன் வருத்தக்காரனை சும்மா இருக்க விடுறாங்களே விழுவான்கள்? தங்கடக் குடும்பத்தை கூட்டியந்து அவனைக் கிளப்பிக் காட்டச் சொல்லுறது. சீலம்பாயள்... அப்பா அம்மாவின்ர காசில நல்ல ஊரரிசியையும் விளைமீனையும் சாப்பிட்டுப்போட்டு பெண்பிரசுகள் போற இடத்தில செய்யிற வேலையப் பாருங்கோ. நல்ல ஆமான ஆம்பிளை இல்லை இங்க. உந்த ரவுடியளை எல்லாம் தேர்முட்டியால அடிச்சுக் கலைக்கத் தெம்பில்ல ஒருத்தருக்கும்.'

விசாலாட்சி மாமி சொல்வதில் உள்ள நியாயம் சங்கக் கடையில் நின்றவர்களுக்குப் புரிந்தது. என்றாலும் வாய் திறந்து வீண் சிக்கலில் ஏன் மாட்டவேண்டும் என்கின்ற சுய நலத்தில் மழுப்பல் சிரிப்போடு நின்றனர்.

விஷர்முத்தனுக்கு கை உழைந்திருக்க வேண்டும். சாறத்தை விட்டான். வேடிக்கை பார்த்தவர்களுக்கு வேடிக்கை முடிந்து போன வெறுமை. பெண்களுக்கு தலை நிமிர்ந்து பார்க்கும் துணிவு திரும்பி வந்த நிம்மதி.

சாறத்தைவிட்ட விஷர் முத்தனுக்கு இன்று ஏனோ அதிக ஆத்திரம் பொங்கியது. அவன் கத்தத் தொடங்கினான்.

'நீங்கள் அழியப் போறியளடா. இந்தத் தீவு அழியப் போகுது. இதில அரைவாசிப்பேர் அற்ப ஆயுள்ள சாகப் போறியள். மீதிப்பேர் கண்காணாத தேசத்தில் நிரந்தரமா அலையப் போறியள். நீங்கள் எல்லாம் நிறையக் கவலைப் படுவியள். ஆயுள் முழுவதும் கவலைப்படுவியள். உந்தப் பிள்ளையார் மாத்திரம் நல்லா இருப்பார். அவர் பேசாமல் கல்லாவே இண்டைய மாதிரி எண்டைக்கும் இருப்பார். அவரென்ன கடவுளே, வெறும் கல்லெல்லே?'

பின்பு அவன் சிறிது அமைதியாகினான். மீண்டும் வெறி கொண்டான். 'கண் கெட்ட பிள்ளையாரே நீ நல்லா இரு' எனத் திட்டிவிட்டு விஷர்முத்தன் வேகமெடுத்து ஓடினான். கேணிக் கட்டில் ஏறி ஓடினான். தேர்முட்டியில் உள்ளவர்கள் இப்போது எழுந்து இவன் என்ன செய்கிறான் என்று விடுப்புப் பார்த்தனர்.

ஓடிய விஷர்முத்தன் அப்படியே போய் கேணிக்குள் குதித்தான். நல்ல கோடைகாலம் அது. எல்லோரும் அதிர்ந்து போய் இருந்தனர். அப்படி ஒருநாளும் அவன் செய்தது இல்லை. இன்று ஏன் அப்படிச் செய்தான் என்பது ஒருவருக்கும் புரியவில்லை.

தேர்முட்டியில் நின்றவர்களுக்கு நிலைமை கட்டுக் கடங்காது போனது புரிந்தது. பதற்றத்துடன் பலர் இறங்கிக் கேணியை நோக்கி ஓடினார்கள். விஷர்முத்தன் தப்புத்தண்ணியில் குப்புறக் கிடந்து முனகினான். மண்டையில் இருந்து இரத்தம் கசிந்தது.

விசாலாட்சி மாமி சங்கக் கடையில் இருந்து வேகமாக கேணியை நோக்கி வந்தா.

'எட நாயளே... விஷரன் பைத்தியக்காரன் மோடன் மொக்குகளைக்கூட நிம்மதியா இருக்க விடமாட்டியளேடோ? கோத்த கொப்பன் அவிச்சுப்போட, சப்பிப்போட்டு வந்து இப்பிடியே கண்கெட்டதனமான வேலை செய்யிறது? சீலம் பாயளே... மரம் மாதிரி நிண்டு பாத்துக்கொண்டு நிக்கிறீயளே! அவன் சாகவெல்லே போறான். இறங்கித் போய்த் தூக்குங் கோவன்ரா.'

'இந்தக் கிழவி எங்கயடா வந்தது?' எனப் புறுபுறுத்த வண்ணம் மூவர் இறங்கினர். பக்கத்தில் நிண்ட அமுதனைப் பார்த்த விசாலட்சி மாமி, 'டே நீயேன்ரா மரம்மாதிரி நிக்கிறா? போய் சிவராசன்ர காரைப் பிடிச்சுக் கொண்டு ஓடியா' என்றா.

'நான் ஒண்டுமே தெரியாமல் இப்பதான் வாறன்... என்னை ஏனணை பேசுறா?' அமுதன் துணிவாகக் கேட்டான்.

'சரியடா, சரியடா. போய் அவனைக் கூட்டிக்கொண்டு ஓடியாடா. நீ நல்ல பிள்ளை எண்டு எனக்குத் தெரியும்.'

அமுதன் அதற்குமேல் விசாலாட்சி மாமியோடு தர்க்கிக்க விரும்பாதவனாய் சைக்கிளை உழக்கிக்கொண்டு சிவபாலன் வீட்டிற்குச் சென்றான். அவன் மனதிலும் முத்தனை நிம்மதியாய் இருக்க விட்டிருக்கலாம்தானே எனத் தோன்றியது.

அமுதன் வாசகசாலையடியில் தேவனைக் கண்டவுடன் சைக்கிளை மெதுவாக்கி, தேவனைப் பார்த்து, 'டே தேவன் என்னோட வாறியே?' என்றான்.

'எங்க அண்ணை போறியள்?'

'கார்கார சிவபாலனை கூட்டிக் கொண்டுவர.'

பஸ்ஸுக்காய் காவல் நின்றவர்கள் அமுதனைப் பார்த்து, 'என்னடா தம்பி அவனுக்கு பலத்த காயமே?' என விசாரித்தார்கள்.

'தெரியேல்ல. குப்புறக் கிடக்கிறான். தலையால இரத்தம் வருகுது...'

'இந்த விழுவான்கள் ஏன் அந்தக் கருமத்தைப் போட்டு வதைக்கிறாங்கள்? பாவம் அவனைச் சும்மா போக விட்டிருக்

கலாம்தானே?' என பஸ்ஸுக்கு நின்ற ஒருவர் அலுத்துக் கொண்டார்.

இதைக் கேட்ட அமுதன் சற்று கோபத்தோடு 'இதை நீங்கள் தேர்முட்டியில இருக்கிறவங்களுக்குச் சொல்லலாம் தானே?' என்றான்.

அவரும் விடுவதாக இல்லை. 'ஓமடா ஓமடா. அவங்கள் நாளைக்கு என்னை இங்க பஸ்ஸுக்கு நிக்கவிடாமல் செய்யிற பிளான் உனக்கு,' என்றார்.

'இந்த சனநாயக நாட்டில இருந்துகொண்டு இப்பிடியே பயப்பிடுறது?' என்றான் அமுதன்.

'ஓமடா... இலங்கையில சனநாயகம் எண்டா அதுக்கு உண்மையா அர்த்தம் என்ன எண்டு உனக்கு விளங்கேல்ல.'

'இளங்கண்டு பயமறியாதண்ண,' பக்கத்தில் நின்றவர் கூறினார். அவர்களுக்கு பதில்கூறும் அவகாசம் அற்றவனாய் அமுதன் சைக்கிளை உழக்கினான்.

17

தேவன் அன்று வேலையால் வந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தான். வெளிநாட்டவர் பற்றிய விவாதம் நடந்து கொண்டு இருந்தது. பயத்தை அரசியலாக்கும் கட்சிகள் எப்பொழுதும் வெளிநாட்டுக்காரரை அடக்க முடியாத ஒரு மனித இனமாய்ச் சித்தரிக்க முயலும். அது முழுமையாக முடியாவிட்டாலும் எவ்வளவிற்கு தங்களால் இழிவுபடுத்தி இந்த நாட்டிற்கு ஒவ்வாதவர்கள் என வாதிக்க முடியுமோ அவ்வளவிற்கு வாதித்துக் கொண்டு இருந்தனர். நேர்மையான பாதையில் கதிரைகளைப் பற்றிக் கொள்வதில் பொறுமை இல்லாதவர்கள் இவர்கள். உலகம் பூராவும் மனிதனின் மிருக குணத்தின் எச்சமான பயத்தைப் பாவித்து நவீன அரியணை

களை இலகுவாகத் தட்டிப் பறித்துக்கொண்டு இருக்கிறார்கள். இங்கும் சிறிய கட்சியாக இருந்து, பின்பு விஷத்தை விதைத்து, அதன் அறுவடையில் கொழுத்தும் வருகிறார்கள். கடந்தகாலப் பாடங்கள் தொலைந்து போன நினைவோடும், அத்தனையும் தமக்கு மாத்திரமே வேண்டும் என்கின்ற சுயநலத்தோடும், அவர்கள் பின்னால் ஒரு பெரும் கூட்டம் சேருவது நெஞ்சைப் பிறாண்டும் வேதனை.

இந்த விதமான அரசியலைத்தானே இலங்கையிலும் பாவித்தார்கள்? இனங்களுக்கிடையிலான வெறுப்பும் அறியாமையும்தானே அவர்களது மூலதனமானது. விளைவு? குருதியாறுகள். மறுக்கப்பட்ட உரிமைகள். இழந்துவிட்ட சுதந்திரம். நட்பு மரித்த சகோதரத்துவம். இறுதியில் பகைவர்களான இரு இனங்களின் உணர்வுகள். அல்லாடும் ஒரு இனம், அவர்களை அணைத்துக்கொள்ள முடியாது இறுமாப்போடு இருக்கும் மறு இனம். தேவனின் பார்வை எங்கோ இருக்க மனம் எங்கோ எதற்காகவோ தாவியது.

அன்று தேவனுக்கு சிவாஜிகணேசன் நடித்த தங்கப் பதக்கம் படம் பார்க்கப் போக வேண்டும் என்கின்ற ஆசையில் மனது துடித்துக் கொண்டு இருந்தது. செம்பாட்டில் காட்டப் படுவதாய் தெருத் தெருவாய் நோட்டீஸ் ஒட்டி இருந்தார்கள். லவுட்ஸ் பீக்கரிலும் அறிவித்துச் சென்றார்கள். லவுட் ஸ்பீக்கர் பூட்டிய அந்தக் கார் ஒவ்வொரு ஒழுங்கையாகச் சென்றது. படம் பார்க்கப் போவது என்றால் அப்பாவைச் சமாளிப்பது மயிராலே கட்டி மலையை இழுப்பதாகும். எப்படியோ அவருக்குத் தெரியாது போய் தெரிந்தபோது செம்மையாகப் பேச்சு வேண்டிக்கொள்ள வேண்டும்.

அப்பாவிடம் எந்தப் பயறும் அவியாது என்பது அவனுக்கு நன்கு தெரியும். அம்மாவை சற்று மசிய வைத்து, இரக்கப்பட வைத்து, அனுமதி பெற்று விட்டால் அது மாபெரும் வெற்றிதான். தேவனுக்கு அம்மாவும் சம்மதிப்பாவா என்பது நிச்சயமாகப் புரியவில்லை. அம்மா சம்மதித்தால் மட்டுமே இன்று படம் என்பது முடிவாயிற்று. எப்போதோ யாழ்ப்பாணத்தில் உள்ள தியேட்டரில் சிவாஜிகணேசன் படம் ஒன்று பார்த்தது

கனவுமாதிரி இன்று இன்னும் ஞாபகம் இருந்தது. அந்தத் தியேட்டரில் யாரோ ஒருவன் குடித்துவிட்டு வந்து கெட்ட வார்த்தைகள் பேசிக்கொண்டு இருந்தான். அப்பாவின் முகம் கோபத்தால் உருமாறி இருந்தது. அதை தேவன் இன்றும் அப் படியே ஞாபகம் வைத்திருந்தான். அதற்குப்பின்பு தேவனின் அப்பா படம் பார்க்க யாழ்ப்பாணம் போவதில்லை. கேட்டாலும் அது கழுசறையள் போற இடம் எனப் பேசுவார்.

தேவன் ஏற்கனவே பள்ளிக்கூடத்திலே காட்டிய சரஸ்வதி சபதத்தை தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறான். அது நல்ல சோக்காய் இருந்ததாகவே அவனுக்குப் பட்டது. அதன் பின்பு எங்கு படம் காட்டினாலும் போக வேண்டும் என மனது அடித்துக் கொள்ளும். அப்பாவுக்கு முன்னால் வார்த்தைகள் மாத்திரம் ஒளிந்து விளையாடும். துணிவு தூரத்தே விலகி நின்று வேடிக்கை பார்க்கும். இவனது ஒலி இழந்த சொற்கள் எல்லாம் காதில் விழாதவராய் அவர் தன்பாட்டிற்குச் சென்று விடுவார்.

இன்று அப்பாவிற்கு முன்பு நின்று வாயை வெறுமென அசைப்பதை விட்டுவிட்டு அம்மாவிடம் சொற்களை உச்சரித்து எப்படியாவது அனுமதி பெற்று விட வேண்டும் எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

தேவன் ஏற்கனவே அழுது மன்றாடித்தான் அமுதனைச் சம்மதிக்க வைத்திருந்தான். அமுதன் ஏற்கனவே தியேட்டரில் பார்த்த படம் என்பதால் வர மறுத்து விட்டான். பின்பு வீட்டில் அறிந்தால் தங்கச்சிமாரும் வருவதற்கு நிற்பார்கள் என மறுத்தான். தேவன் விடாது நச்சரிக்கவே அவனுக்கு இரக்கம் வந்து இருக்க வேண்டும். ஒருவாறு ஒப்புக்கொண்டு இருந்தான். அப்படி ஒத்துக் கொள்ளும் போது. 'இரண்டு கொண்டிசன்' என்றான்.

'என்ன?' என்றான் தேவன்.

'ஒண்டு, நீ உங்கட அம்மாட்டச் சொல்லிப்போட்டு வரோணும். அவ சம்மதிச்சத்தான் நான் கூட்டிக்கொண்டு போவன். அதை நான் தேவியக்காவிட்ட வந்து நேரில் கேட்பன். இரண்டாவது, எங்கட வீட்டுக்கு படம் பாக்கப் போறதைப் பற்றி நீ மூச்சு விடக்கூடாது.'

தேவன் அதற்குச் சம்மதித்தான். ஏழு மணிக்குப் படம் தொடங்குவதாய் இருந்தது ஒருவித வசதியாக இருந்தது. அம்மாவிடம் எப்படி கேட்பது என்பது அவனுக்கு ஒருவித குழப்பத்தை உண்டுபண்ணியது. இவனது குழப்பத்திற்கு விடை கிடைப்பதுபோல தேவனின் அப்பா ஐந்தரை மணி போல வெளியே புறப்பட்டுச் சென்றார். இதைப் பார்த்த தேவனுக்கு இன்று வெற்றிதான் எனத் தோன்றியது.

தேவனின் அப்பாவுக்கு யாரோ கச்சான் கொடுத்து இருந் தார்கள். தேவனின் அப்பாவுக்கு இப்படிப் பல பொருட்கள் குருதட்சணையாகக் கிடைப்பது உண்டு. தோலுரிப்பவருக்கும் தட்சணை கிடைப்பதைப் பார்க்கும்போது தேவனுக்கு வியப்பாக இருக்கும். தோலுரிப்பதே சிறந்த கல்வியென எண்ணும் பெற்றோரை எண்ணும்போது பரிதாபமாய் இருக்கும்.

தேவனின் அம்மா கச்சான் வறுக்க ஆயத்தம் செய்து கொண்டு இருந்தா. மணலை தாச்சிக்குள் அள்ளிப் போட்டு அது சூடேறிய பின்பு அதற்குள் கச்சானைப் போட்டு மர அகப்பையால் துழாவத் தொடங்கினா.

தேவன் அம்மாவிடம் சென்று கழுத்தைக் கட்டிப்பிடித்து அதிகமாக முத்தம் வைத்தான். தேவனின் திடீர் முத்த மழையால் அம்மா திக்குமுக்காடிப் போனாலும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, 'என்னடா... ஏன் உந்தச் சாலம்?' என்றா.

'அம்மா நல்ல அம்மா எல்லே.'

'போதுமடா, உன்ர சாலத்தை முதல்ல நிப்பாட்டு....'

அம்மா தேவனைப் பார்க்காது கச்சான் வறுப்பதில் மும்முரமாய் இருந்தா. அவவுக்கு தான் எதையோ கேட்கப் போகிறேன் என்பது புரிந்து விட்டது எனத் தேவன் எண்ணினான். எப்பிடி என்றாலும் அம்மாவைக் கரைத்துவிட வேண்டும் என்பதில் தேவன் குறியாக இருந்தான்.

'அம்மா?'

'என்னடா?'

'நான் உன்னோட இனிக் கதைக்கமாட்டன். நீ கூடாத அம்மா.'

தேவனுக்கு குரல் உடைந்து கரைந்தது....

இதைத் தேவனின் அம்மாவால் தாங்க முடியாது என்பது அவனுக்குத் தெரியும். அதை அறிந்துதான் அவன் அந்த ஆயுதத்தைப் பாவித்தான். அது வேலை செய்தது.

'என்னடா அழுகிறா? என்ன வேணும் இப்ப உனக்கு? கச்சான் வறுக்கிறன் சாப்பிடலாம். கொஞ்சம் பொறுமையாய் இருக்கிறயே?'

'அதில்லை அம்மா.'

'அப்ப என்னடா?'

'இரவைக்கு தங்கப்பதக்கம் படம் செம்பாட்டுக்க காட்டு றாங்கள். நாளைக்கு சனிக்கிழமைதானே. பள்ளிக்கூடமும் இல்லைத்தானே?'

'அதுக்கு இப்ப என்ன?'

'நான் போகோணும்.'

'ஏன் அப்பாவிட்ட அதைக் கேட்கிறதுதானே?'

'சும்மா இரு அம்மா. அப்பா படத்துக்கு எல்லாம் விடமாட்டார்.'

'பிறகென்ன நான் மட்டும் விட முடியுமே?'

'நீ நல்ல அம்மா. என்னை போக விடுவாய். இண்டைக்கு ஒரு நாளைக்கு மட்டும்தான்.'

'அதெல்லாம் போகேலாது.'

தேவனுக்கு சலிப்பும் கோபமுமாய் இருந்தது.

'இப்பிடியே என்னை ஒண்டுக்கும் விடாதேங்கோ. நான் ஒருநாளைக்கு எங்கையாவது கிணத்துக்க விழுந்து சாகிறன்.'

'வாயில போட்டிடுவன்.'

தேவனின் அம்மா அகப்பைக் காம்பை வேகமாக ஓங்கினா. கோபத்தில் முகம் சிவந்திருந்தது.

'மூண்டு இலை முளைக்க முதல் அவனுடைய கதையப் பார்.' கோபத்தில் அகப்பை அல்லல்பட்டது. தேவனுக்குத் தன் தந்திரம் சற்றுப் பிழைத்ததாகத் தோன்றியது.

பின்பும் முயற்சியைக் கைவிடாது. 'அம்மா போகட்டே?' என்று கெஞ்சினான்.

'சரி போடா. இனிமேலைக்கு இப்பிடிக் கதைக்கக் கூடாது, விளங்குதே?'

'ஓ இனி அப்பிடிக் கதைக்கமாட்டன்.'

'சரி. முதல்ல சாப்பிடோணும். பிறகு போகலாம்.'

தேவன் சாப்பிட்ட பின்பு கச்சானையும் ஒரு சரையாகக் கட்டி வைத்துக் கொண்டு அமுதனுக்காய் காத்திருந்தான்.

சிறிது நேரத்தில் அமுதன் படலையில் நின்று பெல் அடித் தான். தேவனின் அம்மாவைக் கண்டு கொண்டு, 'தேவியக்கா இவன் படம் பாக்க போகவேணும் எண்டு நச்சரிக்கிறான். கூட்டிக் கொண்டு போகட்டே?' என்று கேட்டான்.

'ஓமடா தம்பி. அவன் இஞ்ச என்னை இருக்க விடுகிறான் இல்லை. தேப்பன்ர குணம் தெரிஞ்சாலும் இவனுக்கு இப்ப வரவரக் குளிர் விட்டுப் போச்சுது.'

'நெடுக அரிவரியிலேயே வைச்சிருக்க முடியுமேண? கொஞ்சம் விட்டுக் கொடுக்கத்தானே வேணும். அவனும் எங்களமாதிரிப் பெடியன் தானே? பெட்டைப்பிள்ளை மாதிரி வீட்ட இருக்க ஓமெண்டுவானே?'

'அதுவும் உண்மைதான்ரா.'

'அப்ப நாங்கள் போட்டு வாறம்.'

அமுதன் கூறி முடிப்பதற்குள் தேவன் ஓடிப்போய் சைக்கிளில் ஏறிக் கொண்டான்.

'ஓ கவனமாகப் போட்டு வாங்கோடா.'

தேவனின் அம்மா கூற சைக்கிள் நகரத் தொடங்கியது.

பின்பு தேவனைப் பார்த்த அமுதன், 'என்னடா உது பார்சல்? என்று கேட்டான்.

'அம்மா கச்சான் வறுத்தவா. அதுதான் எங்களுக்கும் தந்து விட்டவா. படம் பார்த்துப் பார்த்துச் சாப்பிடச் சோக்கா இருக்குமெல்லே?'

'ஓமடா. அதெண்டா உண்மைதான். அது சரி அப்பா எங்க? அவருக்கு கடுக்காய் குடுத்திட்டாய் போல இருக்குது. வீட்ட வந்து பார்த்திட்டு நாளைக்கு ஒண்டும் சொல்ல மாட்டாரே?'

'ச்ச அவரவிடு அண்ண.'

அடுத்தநாள் காலை ஏழுமணி இருக்கும். தேவனின் அப்பா எழுந்திருந்தார். அவருக்கு முதன்நாள் தேவன் ஏமாற்றி விட்டுப் படம் பார்க்கப் போனது ஞாபகம் வந்தது. கோபத்தில் கண்களில் அனல் பறக்க தனித்து வாழும் சிங்கத்தின் கோபத் தோடு கர்ஜித்தார். தேவன் ஒருகணம் நடுங்கிப் போய் விட்டான். எந்தப் பக்கத்தால் தப்பியோடுவது என தடுமாறிக் கொண்டு இருந்தான். நல்ல வேளையாக தேவனின் அம்மா அந்தக் குரலின் உக்கிரத்தை உணர்ந்து அங்கே வந்து நின்றா.

'எதுக்கு இப்ப காலையில இந்தக் கத்து கத்துறீங்கள்?' அம்மாவின் உக்கிரமான இந்தக் கேள்வி தேவனுக்குச் சற்று அதிர்ச்சியைத் தந்தது. திடீரென அம்மாவுக்கு ஏனிந்தத் துணிவு என்பது அவனுக்குப் புரியவில்லை. அதைப்பற்றி அவனால் அப்போது ஆராய முடியவில்லை.

'ஓ நீயும் சேர்ந்து இவனை இராத்திரிப் படத்துக்கு அனுப்பி வைச்சனியாக்கும். கடைப்பிளியாட்டம் இப்பவே படமும் கூத்துமாத் தொடங்கியாச்சு. அதுக்கு ஆத்தை வேற ஒத்தாசையாக்கும்?'

'படம் இப்ப யார்தான் பாக்கிறேல்ல? உங்கயெல்லாம் வீட்டுக்கு வீடு ரீவீ வேண்டி வைச்சு பாத்துக் கொண்டு இருக்கினம். இவன் ஒருநாள் போய் பாத்தா ஒண்டும் கெட்டுப் போகாது.'

'ம்... நீ அவனுக்கு இன்னும் செல்லம் குடு. அவன் கெட்டுப் போகட்டும்.'

'அவன் ஒண்டும் கெட்டுப் போகமாட்டான். நீங்கள் அவனைச் சும்மா விட்டிட்டுப் போங்க.'

'இண்டைக்கு இவனுக்கு ஒரு பாடம் ஒழுங்கா படிப்பிக்கோணும்.'

தலைகால் புரியாத கோபத்தில் பல்லை நறுமிய வண்ணம் தேவனின் அப்பா முன்னேறினார். தேவனுக்கு சற்று நடுக்க மெடுத்தது. தேவனின் அம்மாவுக்கு இன்று ஏன் இவ்வளவு துணிவு வந்ததோ தெரியாது.

'அவனில தொட்டியள் எண்டா என்ன இனி உயிரோட பாக்க மாட்டியள். ஓ நான் சொல்லிப் போட்டன். இப்பிடி அடிச்சடிச்சு கொல்லறத்துக்கு பத்துப் பெடியளே எங்களுக்கு இருக்கிறாங்கள்? எல்லா ஆக்கினையும் பொறுத்தாச்சு. இனி எனக்கு இதுக்கு மேல பொறுமை இல்ல.'

தேவனின் அம்மாவின் குரல் சோகத்தில் அழுகையாக, தேவனுக்கு மிகவும் கவலையாகப் போய்விட்டது. தேவனின் அப்பா சற்று அதிர்ந்து போய் விட்டார். மனைவியிடம் இருந்து பாய்ந்த எதிர்ப்பு அவரை அன்று முதல்முறையாகத் தடுமாற வைத்தது.

18

தேவன் அன்றும் வழமைபோல் செய்தி பார்த்துக்கொண்டு இருந்தான். ஒஸ்லோவில் ஒரு புதுமுறையான குரூரம் நிறைந்த கொள்ளை அரங்கேறி இருக்கிறது. முன்பு வங்கிகளில் மாத்திரந்தான் கொள்ளை அடிப்பார்கள். வங்கிகள் அதைக் கட்டுப்படுத்த நிறையப் பணத்தைச்செலவு செய்து, கமராக்கள், அலாம்கள் எல்லாம் பூட்டித் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு

விட்டார்கள். அதன் பின்பு அவை நவீன கோட்டைகளாக மாறிவிட்டன. இந்தக் கொள்ளையர்கள் கடைகளையும் பெற்றோல் நிலையங்களையும் கொள்ளை அடிக்கத் தொடங்கி னார்கள். அவர்களும் பார்த்துக்கொண்டு இருக்கவில்லை. தங்களை வங்கிகள்போலப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

இந்த நாட்டுக் கிரிமினல்கள் சற்று இளைப்பாறுகிறார்கள் என எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டு இருந்தார்கள். இந்தக் காலத்தில் ஐரோப்பாவின் எல்லைகள் அழிந்து போயிற்று. அந்த நிம்மதி திடீரென அடியோடு குலைந்து போயிற்று. எவரோ மிகவும் குரூரமான முறையிலே எதிர்பார்க்காத இடங்களில் கொள்ளையிடத் தொடங்கி இருக்கிறார்கள்.

இக்கொள்ளையர்களில் ஒருவன் அல்லது ஒருத்தி முதலில் வீட்டிற்குள் புகுந்துவிடுவார். அவர்கள் பிட்சா கொண்டு வருபவர்கள் போல் அல்லது வேறு ஏதாவது ஒரு வேடத்தில் வருவார்கள். அவர் பின்னால் ஆறேழுபேர் பலவந்தமாக வீட்டிற்குள் புகுந்து கொள்கிறார்கள். பின்பு பிள்ளைகளை ஒரு பகுதியாகவும் தாய் தகப்பனை இன்னொரு பகுதியாகவும் பிரித்து விடுகிறார்கள். அதையடுத்து பிள்ளைகள் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, தாய் தகப்பனை கத்தி, துவக்கு போன்றவற்றைக் காட்டி, குரூரமாகத் துன்புறுத்தி, பணம், நகை, வங்கி அட்டைகள், அதன் இரகசிய எண் என்பவற்றைக் கொள்ளை அடிக்கிறார்கள்.

அவர்கள் போலிஸின் ரேடியோவையும் ஒட்டுக் கேட்ப துடன், வெளியே காவல் நிற்பவர்களோடும் வாக்கி டாக்கியில் தொடர்பு கொண்டு கதைத்த வண்ணமே இந்தக் குரூரத்தை அரங்கேற்றுகிறார்கள்.

இந்தக் கொள்ளை பற்றி விபரமாக செய்தியில் காட்டினார் கள். இது ஒன்றும் புதிதல்ல. பலமுறை இப்படி நடந்ததைத் தேவன் கேள்விப்பட்டிருந்தான்.

செய்திகள் முடிந்தபின்பு ஒரு விவாத நிகழ்ச்சி நடந்தது. அதிலே இப்படிக் கொடுமைகள் அநேகமாக வெளிநாட்டுக்காரர்

மீதே நடந்ததாகக் கூறப்பட்டது. அப்போது தமிழர்கள் பலரிடமும் இப்படி நடந்ததாகவும், அதை அவர்கள் போலிஸிடம் கூறாமல் விட்டு விட்டார்கள் என்கின்ற தகவலை ஒரு நிருபர் கூறினார்.

தேவனுக்கு அது சற்று அதிர்ச்சியாக இருந்தது. ஏன் தமிழர்கள் இப்படியான குற்றங்களை முறைப்பாடு செய்யாது விட்டுவிட்டார்கள்? தேவன் ஒரு சைக்கிள் களவு போனதிற்கே போலிஸில் முறைப்பாடு செய்தான். குற்றவாளியைக் கண்டு பிடிக்க மாட்டார்கள் என்பது உண்மை. பதினைந்து நாளில் சாட்சிகள் இல்லாததால் வழக்கை கிடப்பில் போடுகிறோம் எனத் தகவல் வரும். இதைத்தான் ஒஸ்லோ போலிஸ் நீண்ட காலமாகச் செய்கிறது. இது எல்லோரும் அறிந்த விடயம். என்றாலும் அநேகமானவர்கள் தொலைந்த பொருளுக்கு இன்சூரன்ஸ் செய்து இருப்பார்கள். அதைப் பெறுவதற்கென்றாலும் அவர்கள் போலிசுக்குப் போய் வரவேண்டியது கட்டாயமாகும். வீடு புகுந்து கொள்ளை அடித்தால் இன்சூரன்ஸ் நிச்சயம் கிடைக்கும். அப்படியிருந்தும் ஏன் இவர்கள் முறைப்பாடு செய்யாது விட்டார்கள்?

அதிலே விவாதித்துக் கொண்டு இருந்தவர்கள் சில வேளை அது கறுப்புப்பணமாய் இருக்கலாம் என அபிப்பிராயப் பட்டனர்.

தேவனுக்கு ஒருவித அருவருப்பாக இருந்தது. எல்லோருக்கும் ஆசைதான். பணத்திற்கு அளவுக்கு மீறிய ஆசைதான். வந்து குடியேறிய நாடுகளில் அநேகமானோர் சட்டத்தை மதித்து அதற்கேற்ப பாடுபட்டு வேலை செய்கிறார் கள். அவர்கள் ஒழுங்காக வரிப்பணமும் கட்டி வாழுகிறார்கள். ஒருசிலர் புறநடையாக இருக்கிறார்கள். அவர்கள் பணத்திற்காக சட்டங்களை மீறுகிறார்கள். அவர்களிடம் கறுப்புப் பணம் குவிந்து கிடக்கிறது. இதை எப்படியோ இந்தத் திருட்டுக் கூட்டம் அறிந்துவிட்டது. இதனால் ஒழுங்காக வாழும் தமிழ ருக்கும் தேவையில்லாத தொந்தரவுகள் வந்து சேருகின்றன. தொடரும் அவர்களின் விவாதத்தைக் கேட்க தேவனின் மனதை இனம் புரியாத வேதனை வாட்டியது. ஒரு சிலரின் பண

ஆசைக்காக, பலரின் பாதுகாப்பு பணயம் வைக்கப்பட்டது அவனுக்கு கசப்பைத் தந்தது

தேநீரோடு வந்த வினோவும் சோபாவில் இருந்து செய்தியைப் பார்த்தாள். தேவனின் யோசனையைப் பார்த்த வினோ, 'என்னப்பா கடுமையா யோசிக்கிறியள்?' எனக் கேட்டாள்.

'இல்ல, இங்கயாவது நிம்மதியா இருக்கலாம் எண்டா அதையும் குழப்பத் தொடங்கீட்டாங்கள்.'

'எங்கட சனங்களைச் செல்லோணும். காசைப் பார்த்துப் போட்டு, போலந்துக்காரங்களைப் பிடிச்சு வேலை செய்விக்கிறது. இந்தச் சாட்டில அவங்கள் வந்து எல்லாம் நோட்டம் விட்டிட்டு போயிடுவாங்கள். பிறகு திரும்பி வந்து தங்கட கைவேலையைக் காட்டறாங்கள். எங்கட சனங்களின்ர திருகுதாளத்தை அவங் களும் கண்டுபிடிச்சிட்டாங்கள். வீட்டில காசையும் நகை யையும் வச்சிருந்தா ஆருக்குத்தான் ஆசை வராது. கள்ள வழியில சம்பாதிக்கிறவைக்கு வங்கிலையும் போடேலாது, வீட்டிலும் வைச்சிருக்கேலாது. அதுவும் அவங்கள் ஆட்கள் இல்லாத நேரத்தில வந்து களவெடுத்தாலும் பரவாயில்லை. இது ஆட்கள் நிக்கேக்க, அதுவும் குழந்தைப் பிள்ளையளுக்கு முன்னால... நினைக்கவே குலைநடுங்குதப்பா. நாங்கள் என்ன செய்யிறது? எங்களிட்ட அள்ளு கொள்ளையா காசோ நகையோ இல்லாட்டிலும் திகிலா இருக்குதப்பா.'

'சுபன் யார் வந்து பெல் அடிச்சாலும் ஓடிப்போய் கதவைத் திறந்து போடுவான். அவனுக்கு ஒருக்கா இதைப் பற்றி விபரமாய்ச் சொல்லி வை. பிறகு நிண்டு பேந்தப் பேந்த முழிக்கேலாது.'

'மொபைலையும், கிரடிற்காட்டையும் கேட்கிறவங்களுக்கு யாருடைய வீடெண்டு இருக்குதே? எங்க போனாலும் இது இருக்கத்தானே செய்யும்? என்ன செய்யிறதோ தெரியாது. ஒரே பயமாய் இருக்குது.'

'தேவையில்லாமல் பயப்பட்டுப் பிரயோசனம் இல்லை. அவங்கள் போற இடங்கள் எல்லாம், நிறைய பணம் அல்லது நகை இருக்கிற இடங்களாத்தான் அநேகமாக இருக்குது. எங்களிட்ட

அந்த இரண்டும் வீட்டில இல்லத்தானே. அப்ப அமைதியா இருக்க வேண்டியதுதான்.'

'சொல்லலாம் அப்பா, ஆனா நடைமுறையில அப்பிடி இருக்கேலாதே?'

'அதுவும் உண்மைதான். கிரடிற்காட் எக்கவுண்டில ஒரு ஐந்தாயிரத்துக்குமேல இருக்க விடக்கூடாது. தற்சமயம் ஏதும் நடந்தாலும் இருக்கிறதைத் தானே அவை எடுக்கேலும். நிறைய விடாமல் எப்போதும் கவனமாக இருக்கோணும்.'

'ஓமப்பா அப்பிடித்தான் செய்யோணும்.'

'ம்...'

'ஏனப்பா இப்பிடிச் செய்தா என்ன?'

'என்ன?'

'அலாம் பூட்டினா என்ன?'

'அது ஆட்கள் இல்லாத நேரத்தில நடக்கிற கொள்ளைக்கு உதவும். ஆனா ஆட்கள் இருக்கேக்கயே நடக்கிற கொள்ளைக்கு அலாம் உதவுமே? அவங்கள் வந்து புகுந்த பிறகு யாரை அசைய விடுவாங்கள்?'

'இது நல்ல அநியாயமாய் இருக்குது,' என்றாள் வினோ.

'ம்... நாங்கள் வந்த துவக்கத்தில நோர்த் நோர்வேயில கதவைப் பூட்டிப் போட்டு வெளியால போறேல்ல. அது திறந்து கிடந்தாலும் ஒருவரும் உள்ள போக மாட்டினம். ருஷியாவில இருந்து கப்பல்கள் மீன் கொடுக்க வரத் தொடங்கினவுடன், அந்த நிலைமை மாறிப் போச்சுது. பூட்டிவைச்ச சாமான்களே களவு போகத் தொடங்கிச்சு. யாரையும் பிழை சொல்ல முடியாது. மனிசமனம் அப்பிடித்தான். லேசா நிறையக் கிடைக்கிறதுக்கு குறுக்கு வழியில போகச் சொல்லும்.'

'அப்பிடி ஆசைப்பட்டாலும் பரவாயில்ல. ஆனா இவங்கள் குழந்தைப் பிள்ளையளுக்கு முன்னால குரூரமாயெல்லே நடக்கிறாங்கள். இதைத் தொடர்ந்தும் போலிஸ் இப்பிடியே விடப் போகுதே?' என்றாள் வினோ.

'இல்ல அப்பிடி விடமாட்டாங்கள். ஆனா தங்களுக்கு அடிவிழுந்தா அவசரப்படுகிற மாதிரி சும்மாவெல்லாம் அவசரப்படமாட்டாங்கள்.'

'வெளிநாட்டுக்காரரை சும்மாவே திண்டு கைகழுவுற அரசியல் கட்சிகள் நிறைய இருக்குது. இப்ப சும்மா மெல்லுற வாய்க்கு அவல் கிடைச்ச மாதிரி, இல்லாதது பொல்லாததையெல்லாம் சொல்லி சனத்தைக் குழப்பப் போறாங்கள்.'

'இது உலகம் முழுவதும் நடக்கிற வியாபாரந்தானே? ஹிட்லர் தொடக்கம் யார் யார் வரைக்குமோ...? கடவுளுக்குத்தான் தெரியும். இவர்களுக்கு எல்லாம் தண்டனைகளோ தீர்ப்புகளோ இல்லையோ என்னவோ?' என்றான் தேவன்.

'நிச்சயமா வரலாறு குடுக்கும் அப்பா.'

சுபன் வந்து கதவில் இருந்த அழைப்பு மணியை அழுத்தினான். வினோ எழுந்து சென்று கதவு ஓட்டையால் வெளியே நிற்பது யாரெனப் பார்த்துக் கதவைத் திறந்தாள். தேவன் வெறுமையாகச் சிரித்தான். மனதில் வேதனை படர்ந்தது.

நச்சு விதைகள் எல்லா இடமும் ஊன்றப்படுகின்றன. தங்களது இலக்குகளை இலகுவாக அடைவதற்கு இந்த நச்சு விதைகளை முதலீடு செய்கிறார்கள். அமோக விளைச்சலுக்காய்க் காத்திருக்கிறார்கள். இந்த நச்சுப் பயிருக்கு விதை இட்டவர்களே அதுக்குப் பலியாவது பரிதாபமான கதையுமாகும். இது எங்கள் நாட்டில் நடந்ததிற்கு நாங்களே சாட்சியம். இவர்கள் அந்த விஷப் பரீட்சையை இங்கே அரங்கேற்ற முயலுகிறார்கள். அமுதம் எடுக்கலாம் என நினைத்துச் செய்கிறார்கள். அமுதம் அங்கு விளையாது. கொல்லும் நஞ்சு கொஞ்சம் கொஞ்சமாக சமுதாயத்தை அழிக்கத் தொடங்கும். தேவனின் நினைவுகள் மெதுவாகப் பின்நோக்கிச் சென்றன.

அது கடும் கோடை காலம். அன்று அத்தாய்க்கு நீர் அள்ளி வருவதற்கு அம்மாவோடு தேவனும் சென்றான். அத்தாய்க் கிணற்று நீரைவிட மற்றைய கிணற்று நீர் கடல் உப்பை உறிஞ்சியதாய் கசரும். இந்த வாழ்வை ஏற்றுக்கொண்டு,

அதில் மகிழ்ந்ததே இந்தக் கிராமத்தின் மகிமையாக அப்போது இருந்தது. தேவனின் அப்பா அநேகமாக பீப்பாவில்தான் தண்ணி ஏற்றி வருவது வழக்கம். அப்படி அப்பாவிற்கு நேரம் இல்லாத பொழுது தில்லை என்பவர் ஏற்றி வந்து தருவார்.

இன்று பீப்பா திருத்தி பெயின்ற் அடிப்பதற்காய் மாட்டு மாலுக்குள் இறக்கி வைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்து வீட்டில் ஒவ்வொரு நாளும் கடன் வேண்ட முடியாது. அது அழகும் அல்ல என்பது தேவனின் அம்மாவின் எண்ணம். குடிப்பதற்கு நீர் அள்ளி வரவேண்டும். தேவனின் அம்மா சருவத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டா. வாளியை இங்கிருந்தே கொண்டு போய் வருவதென்றால் அதிக சுமையாக இருக்கும். தேவனின் அம்மா வாளியை விட்டுவிட்டு புறப்பட்டா. பின்பு தேவன் வருவதைப் பார்த்துவிட்டு...

'நீயும் அத்தாய்க்கு வாறியேடா?' என்றா.

'ஓ...'

'அப்ப நீ வாளி கொண்டு வரோணும். சும்மா கையாட்டிக் கொண்டு வரேலாது. நல்லதண்ணிக் கிணத்துக்கு இவ்வளவு தூரம் மினக்கெட்டுப் போறதுக்கு குளிச்சிட்டு வந்தா நல்லா இருக்கும். வாளியைப் போய் எடுத்துக் கொண்டு வா' என்றா.

தேவன் இந்த ஆக்கினைக்காகத் தான் மெதுவாக வீட்டில் நின்று விடலாமா என ஒரு கணம் எண்ணினான். பின்பும் அப்பாவை நினைத்துப் பார்த்தான். தனது பின்னடிப்பை உதறித் தள்ளி விட்டு அம்மாவோடு புறப்பட்டான்.

வாளி தனியவே தேவனுக்கு கனமாக இருந்தது. தேவனின் அம்மா பற்றாக்குறைக்கு சோப்பு, ரவல் என அடைத்து மேலும் பாரமேற்றினா. இதற்கு அம்மா வைத்திருக்கும் குடம் நிச்சய மாகப் பாரம் குறைவாக இருக்கும் எனத் தேவன் எண்ணினான். அம்மா அதை இலேசில் தந்துவிடமாட்டா என்பது அவனுக்குத் தெரியும். கீழே போட்டுவிட்டால் அங்கும் இங்கும் நெளிந்துவிடும் என்கின்ற பயம் அவவுக்கு.

தேவன் அம்மாவோடு புறப்பட்டு வயல்களின் ஊடாகச் சென்று கொண்டு இருந்தான். வயல்கள் எல்லாம் காய்ந்து வறண்டு புழுதி பறந்தது. ஊர் மாடுகளுக்கு வளமான புல் அங்கே இல்லை. அடிக்கட்டையான அறுகம் புல்லின் மிச்சங் களும் கருகிப் போய்க் கிடந்தது. மாடுகள் மாற்றிடமான பற்றைகளைத் தேடிச் சென்றிருந்தன. மேற்குக் கடலில் இருந்து காற்று ஓரளவு வீசுவது ஆறுதலாய் இருந்தது. அது அனலைத் துரத்தி அடிப்பதற்குப் போராடியது.

வயல்கள் ஊடாகச் சென்று கொண்டு இருக்கும்போது காற்று வீசியது. புழுதி காற்றில் எழுந்து பறந்தது. மண் கண்ணில் பட்டு விடக் கூடாது. அப்படிப் பட்டுவிட்டால் கண்விழிக்க முடியாது. புழுதி அடங்கும் வரைக்கும் கல்வரம்பில் அப்படியே சிறிது நேரம் தேவனின் அம்மா நிற்க, தேவனும் கோழியோடு நிற்கும் குஞ்சாக அணைந்து நின்றான். சிறிது நேரத்தில் புழுதி அடங்க மீண்டும் அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள்.

தேவனும் அம்மாவும் நாச்சியார் கிணறு தாண்டிச் சென்றனர். மாரி என்றால் இந்தக் கிணற்று நீரே குடிப்பதற்கு இதமாய் இனிக்கும். கோடையில் அது கசரத் துவங்கிவிடும் சமைப்பதற்கு தொடர்ந்து பாவிக்கலாம் என்றாலும் குடிப்பதற்கு பயன்படுத்த முடியாது. கோடையில் வீட்டுக்கிணற்றில் குளித் தால் உப்புப் படர்ந்து மேல் எல்லாம் ஒட்டும். வயலுக்குள் இருக்கும் வைரமுத்தன் கிணற்றில் குளித்தால் சாதுவாய் பிசுபிசு ப்பதோடு சரி. தேவனுக்கு அந்தக் கிணற்றிற்குப் போவதென்றாலே அருவருப்பாய் இருக்கும். அந்தக் கிணற்றைச் சுற்றிவர சேறு மாதிரி நீர் தேங்கி நிற்கும். வெளி நீரும் சாதுவாய் உள்ளே போவதை அவதானிக்கலாம். அநேகமாக அப்பாவோடுதான் குளிக்கப் போக வேண்டி வரும். அப்பாவிற்குப் பயத்தில் எதுவும் பேசாது குளித்துவிட்டு வந்து விடுவான். தேவனின் அப்பா கடிசொறி வராமல் இருப்பதற்காக லைபோய் சோப்பு போட்டு நோக நோக உரஞ்சி விடுவார்.

'என்ன பேசாமல் வாறா?' தேவனை அம்மா கேட்டா.

'இனி அந்த வைரமுத்தன் கிணத்துக்கு நான் குளிக்கப் போக மாட்டன்.'

'ஏன், அந்தக் கிணத்துக்கு என்னடா?'

'வெளித்தண்ணி எல்லாம் உள்ளுக்குப் போகுது. கிணத்தைச்சுத்தி சேறு. ஆ... அரிகண்டம்.'

'அப்ப குளிக்காமலே இருக்கப்போறாயா?'

'வீட்டுக்கிணத்தில குளிப்பன்.'

'குளிப்பா குளிப்பா, உப்புத்தான் உன்ர முதுகில படரும்.'

வேரப்பிட்டி பற்றைகளில் மேய்ந்துகொண்டு இருந்த மாடுகள் இப்போது வயல்களை நோக்கி இறங்கிக் கொண்டு இருந்தன. அப்படியே கேணியில் இறங்கி மிஞ்சி இருக்கும் சேற்றுத் தண்ணீரைக் குடித்துவிட்டு, மேற்கொண்டும் வயல்களில் அடிக் கட்டைகளை காந்தத் தொடங்கும்.

முத்தப்பாவின் வயலில் நாலு வேலைக்காரர் நின்று ஓலை தாட்டுக் கொண்டு இருந்தனர். தேவன் விடுப்பு பார்த்துக் கொண்டு வந்தான்.

'அம்மா?'

'ம்?'

'ஏன் அம்மா நாங்கள் இந்த வருசம் ஓலை தாள்கிறமோ இல்லையோ?'

'அதுக்கு நிறைய ஓலை வேணும். வேலைக்காரருக்கும் காசும் வேணும். இந்த முறை யாரிட்டையும் எரு ஒண்டு இல்லாட்டி இரண்டு வண்டில் வேண்டிக் கொட்டோணும். அதோட கொஞ்சம் யூரியாவையும் அப்பா தூவிவிட்டார் என்றால் நெல்லு நல்லா விளையும்.'

முத்தப்பாவின் மகள் பெரிய சுடுதண்ணிப் போத்தலில் தேநீர் கொண்டு சென்றாள். வேலைக்காரரைக் கவனித்தால்தான் ஒழுங்காக வேலை நடக்கும் என்பது அவளுக்குத் தெரியும்.

தேவனுக்கு ஒருமுறை அப்பாவோடு வயலுக்குச் சென்றது திடீரென ஞாபகம் வந்தது. ஓலைதாழ்ப்பதற்கு சோமனும்

வேலனும் ஏற்கனவே வயலுக்குச் சென்றுவிட்டனர். வழமையாக தேவனின் அம்மாதான் தேநீர் எடுத்துச் சென்று கொடுப்பது வழக்கம். அன்று நான்கு மணியளவில் தேநீர் கொடுப்பதற்காக அப்பாவோடு தேவனும் சைக்கிளில் சென்றான். தேவனின் அப்பாவும் தேவனும் சைக்கிளில் வருவதை அவர் கள் கவனிக்கவில்லை. இவர்கள் வயலை அடைந்தபோது வேலை செய்ய வந்தவர்கள் இளைப்பாறிக்கொண்டு இருந்தனர். தேவனின் அப்பா சென்று ஓலை தாழ்க்கப்பட்ட இடத்தைப் பார்த்தார். வேலை செய்ய வந்து சோம்பேறிகளாய் இருந்தது அவரைக் கோப அக்கினியில் தள்ளி விட்டது. அவர் தனது கட்டுப்பாட்டை இழந்திருந்தார். 'என்ன செய்யிறியள்?' அவரிடம் இருந்து வந்த கேள்வி அக்கினித்துண்டங்களாய் வந்து விழுந் ததில் வேலைக்காரர்கள் திடுக்குற்றுப் போனார்கள். மிகவும் பரபரப்பாய் எழுந்து, இல்ல, தாழ்கிறம் வாத்தியார்' என்றனர்.

'என்ன தாழ்கிறியள்? இந்த மூண்டு மடிப்பு தாழ்கிறதுக்கு இரண்டு மணித்தியாலம் தேவைப்படுகுதோ? எனக்கே படிப்பிக் கிறியள் போல இருக்குது.'

'இல்லை வாத்தியார், வெக்கை தெரியாதே...'

'அது எனக்குத் தெரியும்... ஆனா வெய்யிலுக்க வேலை செய்ய ஏலும் ஏண்டா வந்திருக்கோணும். இல்லாட்டி ஏலாது எண்டிட்டு கடற்கரையில காலாட்டிக்கொண்டு இருந்திருக் கோணும். வேலைக்கு வந்துபோட்டு மற்றவைய ஏமாத்திக் காசு வேண்டலாம் எண்டு நினைக்கக் கூடாது. அதுவும் என்னிட்ட உந்தச் சேட்டை கூடாது. நீங்கள் வேலை செய்தது இண்டைக்கு காணும். மம்பட்டிய சைக்கிளடியில வைச்சுட்டு நடையக் கட்டுங்கோ.'

'வாத்தியார்?' அவர்கள் திகைத்துப் போனார்கள்.

சோமனும் வேலனும் அப்பாவோடு சண்டை பிடிப்பார் களோ எனத் தேவனுக்கு பயமாக இருந்தது. அவர்கள் ஏனோ அப்படிச் செய்யவில்லை. மண்வெட்டியை சைக்கிளடியில் எறிந்துவிட்டு வேகமாக பிள்ளையார் கோயிலை நோக்கிச் சென்றனர். அதன் பின்பு சோமனும் வேலனும் அதிக காலமாய்

வேலைக்கே வருவதில்லை. சோமனையும் வேலனையும் நினைக்கும்போது தேவனுக்கு பரிதாபமாய் இருந்தாலும், வேலைக்கு வந்துவிட்டு ஏமாற்றுவது நியாயமற்றது என்றும் தோன்றியது.

'ஏன் பேசாமல் வாறாய் கண்ணா?' எனத் தேவனின் அம்மா பொறுக்க முடியாது கேட்க, 'இல்லையம்மா, மாவெட்டேல சோமனையும் வேலனையும் அப்பா பேசிக் கலைச்சதை எண்ணிப் பாத்தன்' என்றான்.

'ஓ, கொப்பருக்கு என்ன, வந்த கோவத்தில் பேசிப் போட்டு வந்திட்டன் எண்டு சொல்லுவார். நான் எல்லே அவங்களை வேலைக்குப் பிடிச்சர அலையோணும்? அதை ஒருநாளும் கொப்பர் நினைச்சுப் பாக்கிறதே இல்லை. பள்ளிக்கூடம் மாதிரி ஊருக்கையும் வியாக்கியானம் செய்யேலுமே? பிறகு நாங்கள்தான் தனிச்சு நிண்டு கஷ்ரப்படவேணும்.'

'இதை நீ அப்பாவிட்ட சொல்லம்மா.'

'சொன்னா எங்கையடா கொப்பர் கேட்கிறார்?'

தேவனின் அம்மா வெய்யிலில் நடந்து வந்ததில் களைத்துப் போயிருந்தா. சிறிது நேரம் அண்டவேல் பிள்ளையார் கோயிலின் முன்பு நின்ற மருதமரத்தின் நிழலில் தஞ்சமடைந்து இளைப்பாறினா. அப்போது தேவனின் அம்மா' அப்பனே பிள்ளையாரே' எனச் சத்தமிட்டு அவரை அழைத்து வேண்டிக் கொண்டா. தேவனும் பிள்ளையாரைக் குட்டிக் கும்பிட்டான். இருவரும் சிறிது நேரம் அங்கு இளைப்பாறிய பின்பு நடந்து அத்தாய் கிணற்றை அடைந்தனர்.

முதலில் குளித்துவிட்டு பின்பு தண்ணி அள்ளிக் கொண்டு வீட்டிற்குப் போவதாய் தேவனின் அம்மா திட்டம் போட்டிருந்தா. அவ முதலில் தேவனை கொத்தாச்சி கிணற்றிற்குக் கூட்டிச் சென்றா. தேவனுக்கு இந்தக் கிணறுகளைப் பார்க்கும்போது சற்று அருவருப்பாகத்தான் இருக்கும். எல்லாக் கிணறுகளையும் சுற்றி சேறு இருப்பது அவனுக்குப் பிடிப்பதில்லை.

அத்தாய் கிணற்றில் பொன்னுக்குட்டி மாமி தண்ணி அள்ளிக் கொண்டு நின்றா. அவ அங்கே நின்ற பள்ளன் திருநாவுக்கு நீர் அள்ளி ஊற்றாமல் சென்றுவிட்டா. அவன் சுற்றுமுற்றம் பார்த்தான். தேவனின் அம்மா தேவனைக் குளிப்பாட்டுவதில் மும்முரமாக இருந்தா. வேறு யாரையும் காணவில்லை. அத்தாய் கிணற்றோடு நின்ற பூவரச மரத்தில் கொழுவிக்கிடந்த பட்டையை திருநா மெதுவாக எடுத்தான். பின்பும் சுற்றும் முற்றும் பயத்தோடு பார்த்துவிட்டு பட்டையை கிணற்றிற்குள் எறிந்தான். அதை மெதுவாக மேலே இழுத்தான்.

அவசர அவசரமாய் அள்ளி நிறைக்கும் அவதியில், தேவனின் அம்மா பார்த்ததையோ, அல்லது சிவத்தம்பி மாமா கொத்தாசி அடைப்புப் பக்கம் இருந்து வேகமாக வருவதையோ அவன் கவனிக்கவில்லை. சிவத்தம்பி மாமா திருநா செய்வதைக் கவனித்துவிட்டு ஓடிவந்தார்.

'டே என்னடா செய்யிறா எங்கட கிணத்தில?'

திருநா இதை எதிர்பார்க்கவில்லை. அவன் அதிர்ந்து போய்விட்டான். பயத்தால் அவனுக்கு வியர்த்தது. சிவத்தம்பி மாமா துணிந்தவர். வேறு யாரும் என்றால் பேசிவிட்டுப் போயிருப்பார்கள். பள்ளரோடு சண்டைபிடித்தால் வெட்டுக் கொத்தில் முடியும் என ஒதுங்கிப் போவார்கள். சிவத்தம்பி மாமாவுக்கு விறுக்கன் என்றுதான் ஊருக்குள் பட்டப் பெயர் இருந்தது. அவர் கராத்தேயில் பிளாக் பெல்ட் எடுத்தவர் என்று அம்மா தேவனுக்குக் கூறி இருந்தா. அவரின் உருவத்தைப் பார்த்தால் அநேகருக்கு பயம் வரும். எவரும் இலகுவில் துணிந்து அவரோடு கதைக்க மாட்டார்கள்.

சிவத்தம்பி மாமா கோபத்தோடு திருநாவின் பானையை எட்டி உதைத்தார். அது நொறுங்கி நீர் சிந்தி துண்டுகளாக உருண்டு வானத்தைப் பரிதாபமாய்ப் பார்த்தது. தேவனுக்குக் கவலையாக இருந்தது. பேசிப்போட்டு என்றாலும் விட்டிருக்கலாம் தானே? எதற்காக அவனது பானையை உடைக்க வேண்டும்? அவனுக்கு சிவத்தம்பி மாமா மீது கோபம் வந்தது.

தேவனின் அம்மா நடப்பதைப் பார்த்த வண்ணம் தேவனுக்கு ஊத்தை உரஞ்சிக் கொண்டு இருந்தா.

'உங்களுக்கெல்லாம் இப்ப பயம் விட்டுப் போச்சுது. உங்க கோயில்களுக்கு போறமாதிரி இந்த கிணத்திலயும் தண்ணி அள்ள நினைச்சியள் எண்டா நான் கொலைகாரனா மாறிடுவன். என்ன துணிவிலையடா தண்ணி அள்ளினா? சொல்லடா!'

சிவத்தம்பி மாமா கையை ஓங்க திருநா பயந்து பின்னே போனான். வேறு யாரும் என்றால் சிலவேளை கைகலப்பாகி இருக்கலாம். திருநா பயந்த சுபாவமானவன். அவன் எதிர்த்து நிற்கவில்லை. பின்பு சிறிது தூரம் சென்று நின்றான். பின்னர் சற்றே துணிவை வரவழைத்துக் கொண்டு, 'சும்மா வெருட்டாதேங்க ஐயா. நானும் கனநேரமாக இதில நிண்டுதான் பாத்தனான். பொன்னுக்குட்டி அம்மா தண்ணி அள்ளினவ, எனக்கு அள்ளி ஊத்தாமல் வெய்யில்ல நிக்க விட்டுப் போயிட்டா. நான் என்ன செய்யிறது? பாத்திட்டு தெரியாமல் செய்து போட்டன்.'

'ம்... இது கடைசியும் முதலுமாய் இருக்கட்டும். இனி இப்பிடி யாரும் செய்தால் கொலைதான் நடக்கும். தெரிஞ்சுதே? நான் கராட்டி சிவத்தம்பி சொல்லுறன் எண்டு போய்ச் சொல்லுடா உங்கட சனத்துக்கு.'

திருநா அதற்கு மேல் அங்கு நிற்காது வேகமாய் கொத்தாசி அடைப்புப் பக்கம் சென்றான். சிவத்தம்பி மாமா கிணற்றடியில் நின்று சிறிது நேரம் பேசிக் கொண்டு நின்றார். சிலர் சிவத்தம்பி மாமா கதையைக் கேளாதவர்கள் போல மெதுவாக வாளியைப் போட்டு தண்ணியை அள்ளிக் கொண்டு பவ்வியமாகச் சென்றனர்.

குளித்து முடிந்தபோது சிவத்தம்பி மாமா அங்கு இல்லை. தேவனின் அம்மா குடிப்பதற்கு அங்கு நீர் அள்ளிக் கொண்டு நடக்கத் தொடங்கினா. தேவனுக்கும் வாளி நிறைய நீர் அள்ளிக் கொடுத்திருந்தா. இதில் அரைவாசியாவது கொண்டு போக வேண்டும் என்கின்ற பிரயாசையோடு தேவன் பள்ளம் மேடு பார்த்து நடக்கத் தொடங்கினான். வயல் வரப்பும், அதன் பள்ளமும் மேடும் அவன் வாளியைத் தளும்பச் செய்தது.

இரண்டு நாள்கள் கழித்து அத்தாய் கிணற்றிற்குள் யாரோ மண்ணெண்ணை ஊற்றி இருந்தார்கள். சிவத்தம்பி மாமா திருநாவைத் தேடித்திரிய அவன் நெடுந்தீவுப்பக்கம் சென்று விட்டான் என்று அமுதன் அண்ணா தேவனுக்குக் கூறினான். பீப்பா வேலை முடிந்ததால் தேவனின் அப்பா ஆலங்கண்டடிக்குப் போய் தண்ணி ஏற்றி வந்திருந்தார். தேவனுக்கு ஏன் இவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள் என்பது புரியா விட்டாலும் அவர்கள் நடந்துகொண்டவிதத்தில் எந்த நியாயமும் இருப்பதாய்த் தோன்றவில்லை.

அப்பா படிப்பித்த பாடசாலையில் படிக்காது வேறு ஒரு பாடசாலையில் படித்து வந்தது தேவனுக்கு அதிக சுதந்திரத்தைத் தந்து தந்தது. நாடு வெகுவாக மாறிவிட்டது. காரைநகருக்கு வெளியே வரலாற்றில் பதியப்படும் மாற்றங்கள் சுவடு பதித்துக் கொண்டு இருந்தன. காரைநகருக்குள் அந்த மாற்றங்கள் நுழைய முடியாது அவஸ்தைப்படுவதான கோலம். வெளியிடங்களில் சில வங்கிகளில்கூட கொள்ளை அடித்திருந்தார்கள். அந்தப் பணத்தை இயக்கமே கொள்ளை அடித்தது எனவும் கதைத்தார் கள். தெல்லிப்பழையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திலும் கொள்ளை அடித்திருந்தார்கள். அரசாங்கப் பணம்தானே என அசண்டையாகத் தமிழர்கள் அதை எடுத்துக் கொண்டார்கள்.

தேவனுக்குள் ஆயிரமாயிரம் கற்பனைப் படங்கள் ஓடத் தொடங்கி இருந்தன. இயக்கம் என்றால் எப்படி இருக்கும்? அவர்கள் என்ன செய்வார்கள்? செலவுக்காக கொள்ளை அடிப்பார்களா? அப்படிச் செய்வது சரியா? இப்படியாக நித்தமும் நெளிந்து நெளிந்து ஓடிய கேள்விகளுக்கு முடிவு இருக்க வில்லை. இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்காது போக, அது முடிவில்லாத திரைப்படமாய் ஒவ்வொரு நாளும் மீண்டும் மீண்டும் நீண்டு கொண்டு இருந்தது.

கோவிந்தன் பள்ளிக்கூடத்தில் தேவன் படித்துக்கொண்டு இருந்தான். பாடசாலை மாறியதில் நிம்மதி அடைந்தாலும் ஆசிரியர்களின் அரசாங்கம் எங்கும் பிரம்பு என்னும் செங் கோலுடனேயே நடந்தது. இங்கும் பலருக்கு பிரம்பின் மேல் இருந்த காதல் மாணவர்கள்மேல் இருக்க வேண்டிய மனிதாபி மானத்தையும் இரக்கத்தையும் மறக்கடித்திருந்தது. பல வரட்டுக்

கோட்பாடு இங்கும் வியாபித்து இருக்க, ஆயுதமாய்ப் பிரம்புகள் ஏந்திய குட்டி இராணுவமாய் அவர்கள் வலம் வந்தார்கள்.

தேவனும் நிறைய அடிவேண்டி இருக்கிறான். வேண்டும் அடியின் ஞாபகம் ஏனோ அன்றோடேயே மறந்து போய் விடுவது மாத்திரம் நிம்மதி தந்தது. இன்றும் தேவனுக்குப் பாட சாலையில் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட இலவச பிஸ்கேற் ஞாபகம் இருக்கிறது. அவன் அதை அடுக்கி அடுக்கி எண்ணி எண்ணிச் சாப்பிடுவது உண்டு. பிஸ்கேற் கடனுக்கு வேண்டிப் பின்பு அதை வட்டியுடன் சேர்த்து கடன் அடைப்பதும் உண்டு. மத்தியானம் பிஸ்கேற் கொடுப்பவன் நல்ல நண்பன் என்றால் ஒருசில பிஸ்கேற் கூடவும் தரப்படும். முழு பிஸ்கேற்றைவிட உடைந்த பிஸ்கேற் வேண்டுவது தேவனுக்கு அதிகம் பிடிக்கும். அப்போது நிறைய பிஸ்கேற் தரப்படுவதாய் தேவனும் பூரிப்பான்.

பெண்பிள்ளைகள் வித்தியாசமானவர்கள். அவர்கள் சில வற்றைச் சாப்பிட்டு விட்டு மீதியை வீட்டிற்கும் கொண்டு செல்வார்கள். தேவன் ஒருநாளும் அப்படிக் கொண்டு வருவ தில்லை. அவனது பிஸ்கேற்றை எதிர்பார்த்து வீட்டில் எவரும் காத்திருப்பதும் இல்லை. தேவனின் அப்பா சில வேளைகளில் நிறைய பிஸ்கேற் கொண்டு வருவார். அப்படி வந்தால் பின்னே ரங்களில் அதைப் பால் ரீ குடிக்கும்போது நனைத்து சாப்பிடு வதில் ஒருவகை சுவை உண்டு.

தேவனுக்கு ஐந்தாம் வகுப்புக்கு வந்தபிறகு பாடங்களில் அக்கறை ஏற்பட்டது. அது அவனுக்கு ஆசிரியரிடத்தும் ஒரு மதிப்பை ஏற்படுத்தி இருந்தது. பின்னக் கணக்கை அவன் வெகு வேகமாய்ச் செய்யப் பழகி இருந்தான். இடையிடையே தேவனின் அப்பாவும் கூப்பிட்டு விளங்கப்படுத்துவார். அவர் விளங்கப் படுத்தும்போதெல்லாம் ஒரு நிச்சயமற்ற தன்மை படரும். ஏதாவது விளங்காது முழித்தால் பல்லை நறும்பிக்கொண்டு, 'இன்னும் விளங்கெல்லயே மரமண்டைக்கு...' என்றவாறே 'டொக்' என்று தலையில் குட்டுவார். அவர் குட்டினால் அவனுக்கு அழுகைதான் வரும். மண்டை பிளந்ததாக வலி யெடுக்கும்.

நாடு தடம் மாறிப் போய் இருந்தது. தமிழ்த்தேசியவாதம் என்பது உருவேறிப் போய் இருந்தது. வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்கின்ற ஊர்போய்ச் சேராத பாதையை மூத்த தலைவர்களே முன்மொழிந்ததையிட்டுச் சிலர் கவலை கொண்டு இருந்தனர். ஈழத்துக் காந்தியே இமாலயப் பிழை ஒன்றிற்கு துணைபோகிறார் என்பது சில தீர்க்கதரிசிகளுக்குப் புரியத் தொடங்கியது. எத்தருணத்திலும் எட்டப்பன் பட்டம் பெறும் துணிவு யாருக்கும் வரவில்லை. நாங்கள் சிறுபான்மை என்கின்ற யதார்த்தம் கரைந்து போய் இருந்தது. ஊருக்குள்ளே பெரிய விவாதங்கள் நடந்தன. சிங்களக் கட்சிகளோடு சேர்ந்து ஊருக்கு உழைத்தவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களாக, சுயநலவாதிகளாகச் சித்திரிக்கத் தொடங்கி இருந்தார்கள். அடிமைப் படுத்துபவர்களோடு கூட்டுச் சேர்ந்து அடிமைப்படுவதில் பலருக்கு சம்மதம் இருக்கவில்லை. தமிழன் ஆண்ட பூமியைத் திருப்பித்தா என்று கேட்பதில் நியாயம் இருப்பதாகவே எல்லோரும் நம்பினார்கள். அதையிட்டு அதீத பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.

சிங்களவர் கேட்பதைத் தந்துவிடமாட்டார்கள் என்பது எல்லோருக்கும் மெல்ல மெல்லப் புரியத் தொடங்கியது. அப்படித் தாராது விட்டால் நிம்மதி இருக்கப் போவதில்லை என்பதும் புலப்படத் தொடங்கியது. போராட்டம் என்றால் நீதியான தலைவன் வேண்டும். தங்கள் சுயநலத்தை சற்றும் பாராத மனிதராய் இருக்க வேண்டும். அரசியல் சதுரங்கம் கற்பூரமாக மூளையில் ஏறும் ஞானியாக இருக்க வேண்டும். பல நாடுகளின் அரசியலைப் புரிந்து கொண்டு காய் நகர்த்தும் தகைமை அவருக்கு இருக்க வேண்டும். அப்படியான தலைமை இருப்பதாய்த் தோன்றவில்லை. நாடும் எங்கள் இனமும் சோதனைக்குள் ஆழம் தெரியாது காலை வைக்கிறதா எனப் பலரும் விசனப் பட்டுக்கொண்டார்கள். வெளியில் சொன்னால் துரோகிப் பட்டம் கிடைக்கலாம் என்பதால் மனதிற்குள் ஆழமாகப் புதைத்து வைத்துக் கொண்டு ஒப்புக்கு கைதட்டினர்.

நாள்கள் செல்லச் செல்ல மக்கள் அறிவுபூர்வமாகச் சிந்திப்பது தடுக்கப்பட்டது. சிந்தித்தவர்கள் சொற்களாக அதற்கு உருவம் கொடுக்காது விட்டுவிட்டார்கள். சொற்களாகவும் அதற்கு உருவம் கொடுத்தவர்கள் தங்கள் உயிர்களைப் பலி

கொடுத்தார்கள். தமிழினம் அச்சத்தில் சுயத்தை இழந்தது. மௌனியாகிய கணிசமான கூட்டம் ஆயுதமோகத்தில் கேள்விகள் அற்று மூழ்கத் தொடங்கியது. தமிழினமே மெது மெதுவாக கண்மூடித்தனமான வன்முறையில் மூழ்கிக் கொண்டிருப்பதைப் பற்றி எவரும் மூச்சுக்காட்ட முடியவில்லை. சொந்த இனம் அழிவதை, அது பிழையான பாதையில் போவதைப் பார்த்தும் கண்மூடிக் கொண்டு இருக்க வேண்டிய அவல நிலைக்குப் பலர் ஓரங்கட்டப்பட்டனர்.

சிங்கள அரசுகள் எப்போதும் எரியும் கொள்ளிக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருந்தன. சுற்றி வளைப்புகளும் கைதுகளும் ஒவ்வொருவர் மனதிலும் அச்சம் என்னும் விதையை மெதுவாகத் தூவிவிட்டன. அடிக்கடி நேவிக்கு கெலிக்கொப்டர் சென்று வரும். அவை சில வேளைகளில் ஒளிப்பிழம்பைக் கற்றையாகப் பாய்ச்சி, தேடல் நடத்திக் கொண்டு செல்லும். யாரைத் தேடுகிறார்கள், எதைத் தேடுகிறார்கள், என்பது புதிராக... புரியாத திகிலாக தேவனைப் பயமுறுத்தும். எங்கள் உயிரும் ஒரு நாளைக்கு சிங்களத் துப்பாக்கிக்குப் பலியாகுமா என்கின்ற ஐயம் எப்போதும் எல்லோரையும் கதிகலக்கும். பயமும் பீதியும் பனிப்புகாராய்ப் படர்ந்து, அடர்ந்து, அது விலகாது மூச்சு முட்டு வதான அவதியில் பல இளைஞர்கள் பாதை தேடி அலைந்தனர்.

சிறுவர்களாய் இருந்தாலும் பயமற்று இருக்க முடியாத நிலை உருவாகிற்று. தமிழ் ஆண்கள் எவருக்கும் இனி நிம்மதி இருக்கப் போவதில்லை. அது சிறிது சிறிதாய் தொலைந்து மறைந்து போய்க்கொண்டு இருந்தது. பிரச்சனையைத் தொடக்கிய இளைஞர்களே மூர்க்கமாகக் குறிவைக்கப்பட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில குற்றவாளிகளும் போராளிகளாக மாறுவதாய்ச் சிலர் கதைத்தார்கள். அறிவற்ற பேராசைக்காரர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்ட தாக அபிப்பிராயப்பட்டனர். தேவனுக்கு இது எந்த வகையில் சரியாக இருக்கும் என்பது புரியவில்லை. அப்படி நடந்தால் இந்தச் சந்தர்ப்பத்தை யாராவது தங்கள் நன்மைக்காகப் பயன் படுத்தினால், அது எமது இனத்துக்கு எதிராக வெட்டப்படும் குழியாகும். அதையும் யாராவது செய்வார்கள் என்பதற்கு

நிறையவே சந்தர்ப்பங்கள் உள்ளன. காலம் வரலாற்றை ஆழமாக எழுதும். பல கலி யுகங்கள் எம்மினத்தின் மீது கொடுமையாகச் சவாரி செய்யும் எனத் தேவன் எண்ணிக் கொள்வான்.

அன்று தேவன் சற்று நேரம் முந்தியே பாடசாலைக்குச் சென்றிருந்தான். பனிப்புகார் இன்னும் அடங்காத கோலம். காலையில் பலர் நேரத்துக்கு முன்னரே பாடசாலைக்கு வருவதுண்டு. இன்றும் அப்படிப் பலர் வந்திருந்தார்கள். தமிழ்த் தேசியவாதமும் அரசியலும் சிறுவர்களையும் விட்டு வைக்கவில்லை. தியாகர், திருநாவுக்கரசு என்கின்ற இரு தனிமனிதர்களுக்குப் பின்னால் நிறைய வாக்குவாதங்கள் பதுங்கிக் கொண்டு இருந்தன.

மாரி மழையில் தெப்பமாக நனைந்து வெம்பிப்போன பூமி மெதுமெதுவென்றிருந்தது. குண்டும் குழியுமான இடங்களில் தங்கிப்போன நீர் கொசு முட்டையிட சொகுசான மெத்தைகளாகக் காத்திருந்தன. கொழும்பின் கருணைக் கண்கள் அவர்களுடன் சேர்ந்தால் மட்டும் கடைக்கண்ணில் சிறு கீற்றாகத் தெறிக்கும். அவர்களுடன் சேராதபோது கற்காலத்திற்கு இந்த இடங்களைத் திருப்பி அனுப்பி விடுவார்கள். மீண்டும் பிரயாசைப்பட்டு நவீன காலத்தை எட்டிப்பார்க்க வேண்டி இருக்கும்.

அரசியல் என்னும் நஞ்சு, சமுதாயத்தின் ஆணிவேர் வரை பாய்ந்த கிராமமாக காரைநகர் மாறிக் கொண்டிருந்தது. பள்ளி மாணவர்களையும் இந்தப் பிரச்சனை கிள்ளிவிட்டுக் கொண்டு இருக்கிறது. இங்கே ஒரு பிளவு. அதில் இரண்டு அதிரடி அணிகள் பிரசன்னம். தியாகரை ஆதரிப்போர், திருநாவுக்கரசை ஆதரிப்போர் என இரு உலகங்கள் ஒரே பாடசாலையில் உருப்பெற்று வலுக்கொண்டு இருந்தன.

தேவனுக்கு இது பிழையென்பது சாதுவாகப் புலப்பட்டாலும் திருநாவுக்கரசையே ஆதரிக்க வேண்டும் போல் இருந்தது. தமிழனின் அவஸ்தை அவன் மனதில் நிதானத்தைவிட வேதனையை அதிகமாகக் கிளப்பி விட்டிருந்தது.

விேனாதன், சீலன், சுப்பன், நகுலன், முகுந்தன், இன்னும் சிலர் பாடசாலையின் வடக்குப் பக்கத்தில் நின்று கதைத்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தியாகர் தியாகர்

என உயிரை விடுபவர்கள் என்பது தேவனுக்கும் அவனது கூட்டத் திற்கும் நன்கு புரியும். அங்கு போய் வீண்பிரச்சனையில் மாட்ட வேண்டாம் எனத் தேவன் எண்ணினான். தேவனின் வகுப்பறை தெற்குப் பக்கமாக இருந்த அலுவலகத்தின் பக்கத்தில் இருந்தது. வகுப்பறையில் புத்தகத்தை வைத்து விட்டு வந்து விறாந்தையில் அவன் நின்று கொண்டான்.

சிறிது நேரத்தில் ரமேஸ், திலகன், சுகுமார், குணசீலன் எனப் பலர் வந்து சேர்ந்தனர். எல்லோரும் கூடிநின்று கதைத்துக் கொண்டு நின்றனர். அப்படிக் கதைத்துக் கொண்டு இருக்கும் போதே அவர்கள் பார்வையெல்லாம் எதிர் திசையில் நின்றவர்கள் மீதே படிந்தது.

திடீரெனத் திலகன் சற்று சத்தமாகவே, 'தமிழ்த் துரோகி களைப் பாருங்கடா. இவங்கள மாதிரி ஆக்கள் இருக்கிறதால தானே தமிழனில் சிங்களவன் கூசாமல் கைவைக்கிறான். ம்.. எப்பவும் எட்டப்பன் கூட்டம் எங்கட வரலாற்றில இல்லாத காலமில்லத்தானே? இவங்கள் நவீன எட்டப்பர்களடா' எனக் கூறினான்.

தேவனுக்கு சற்று வருத்தமாக இருந்தது. தியாகி... துரோகி... எட்டப்பன்... சங்கிலியன்... என்ன இது? கருத்துக் களை அமைதியாக பூரணத்துவமாக விவாதிக்க முடியாத முடங்களாக, அரைகுறை அறிவுடன் சச்சரவுகளை மாத்திரமே வளர்த்துக் கொள்வதால் எதைச் சாதிக்கப் போகிறோம்?

திலகன் கூறியது அவர்களுக்குக் கேட்டுவிட்டது. அவர்கள் படையாக தேவன் நிற்கும் திசையை நோக்கி வந்தார்கள். இது கைகலப்பில் முடியப் போகின்றது என்பதைத் தேவன் உணர்ந்து கொண்டான். என்ன செய்வது, எப்படித் தடுப்பது என ஒன்றுமே அவனுக்கு அப்போது புரியவில்லை. திகைத்துப் போய் நின்ற தேவனுக்கு அனாதரட்சகனாய் சிவபாதம் வந்தது நிம்மதியைத் தந்தது.

சிவபாதம் பியோனாக வேலை செய்கிறான். அவன் அதிபருக்கு மிகவும் வேண்டப்பட்டவன். அவன் அதிபருக்குச் சொந்தம் என்பதும் பலருக்குத் தெரியும். அவன் சொல்வதைக் கேட்க வேண்டும். அல்லது அதிபரின் துவரம் கம்பு வேதனையான

குறியீடுகளை முதுகில் பதித்துவிடும். தேவன் சிவபாதத்தைக் கூப்பிட்டான்.

'சிவபாதம் அண்ண இஞ்ச வாங்க, இங்க ஒரு பிரச்சனை.'

'என்னடா அது?'

அவன் குரலில் அதிகாரத்தோடு ஒரு அலட்சியமும் இருந்தது. அதைப் பொருட்படுத்தாது தேவன் தொடர்ந்தான்.

'தியாகரின்ர கோஷ்டி வாறதைப் பாருங்கோ அண்ண. இஞ்ச இப்ப அடிபாடு நடக்கப் போகுது. உங்கட கண்ணுக்கு முன்னால நீங்கள் அதை நடக்க விடுவியளோ?'

சிவபாதம் தேவனின் தலையில் கைவைத்து தலையை ஆட்டிய வண்ணம். 'நீ நல்ல ஆளடா தேவன். அடிபடவிட்டா என்ன? இப்ப மாஸ்ரர் வாற நேரம்தானே? எல்லாரும் நல்லா வேண்டிக் கட்டுங்கள்' என்றான்.

சிவபாதம் தனது நரிக்குணத்தைக் காலம் பார்த்துக் காட்டிவிடுவானோ எனத் தேவன் பயந்தான். பின்பும் அவனை விட்டுவிடக் கூடாது என்பதை நன்கு உணர்ந்தவனாக, 'அண்ண, தப்புறதுக்கு வழி கேட்டா சங்கடத்தில மாட்டி விடுறன் எண்டுறியள்' என்று மனங்குழம்பிச் சொன்னான்.

இதற்கிடையில் தியாகரின் அணி மிக அருகில் வந்து விட்டதை தேவன் உணர்ந்து சிவபாதத்தை கெஞ்சுதலுடன் பார்த்தான். சிவபாதம் தியாகர் அணியைப் பார்த்து, 'டேய் என்ன பள்ளிக் கூடத்துக்கேயே அடிபடப் போறியளோடா?' என்று கேட்டான்.

'இல்லையண்ண நாங்கள் சும்மா நிண்ட நாங்கள். இவங்கள் தான் வலியச் சண்டைக்கு கூப்பிடுறாங்கள்' என்றான் விநோதன்.

'சரி, பள்ளிக்கூடம் விட்டாப்பிறகு நாகம்மா கோயிலடியில போய் நிண்டு அடிபடுங்கோ... இப்ப மரியாதையா வகுப்புக்கு ஓடுங்கோ பாப்பம். இல்லாட்டி மாஸ்ரருக்கு தெரிஞ்சா என்ன நடக்கும் தெரியும்தானே?'

மாஸ்ரர் என்றவுடன் தியாகரின் அணி பின்வாங்கியது. 'எதுக்கும் பின்னேரம் பாப்பம். நாகம்மா கோவிலுக்கு வருவாங்களோ இல்லாட்டி ஒழுங்கைக்குள்ள விழுந்தடிச்சு ஓடிவிடுவாங்களோ?' சத்தமாகக் கத்திக் கேலி செய்து கொண்டு சென்றான் சீலன்.

சுரமிழந்த வாத்தியமாக சொல்லிழந்து நின்றான் தேவன். சிவபாதம் பிரச்சனையைத் தீர்த்து வைப்பான் என்றால் வேறு பாக்கத்திற்குத் திருப்பிவிட்டுச் சென்றுகொண்டு இருந்தான். 'பிழைக்கத் தெரிந்த பிறவி இவன்' எனத் தேவன் நினைத்துக் கொண்டான்.

காலையாகப் பிறந்து, மாலையாக முதிர்ந்து, இரவுகளாக வேகத்தோடு இறந்து செல்லும் நாள்கள் மனிதரின் ஆயுளைக் கழித்து, காலக்காட்டிகளைக் கிழித்துச் செல்கின்றன. விரும்பி யும் விரும்பாமலும் சந்திப்புகள் உன்னை வலுக்கட்டாயமாக இழுத்து வைத்து கதை கேட்கும். பறந்தோட நினைத்தாலும் இறகுகள் இல்லாத ஏக்கத்தோடு வலோக்காரத்திற்கு பிரச்ச னைகளைச் சந்திக்க வேண்டிய கட்டாயங்கள் மனிதனை உந்தித் தள்ளும். சில நாள்கள் சுவாரசியமாக, சில நாள்கள் சித்திரவதை யாக பள்ளி வாழ்க்கை பறந்து செல்லும். இன்றைய இருப்பு இல்லாது போக நாளைய உண்மை நாடிவந்து முன்நிற்கும்.

அடுத்தநாள் பலர் பாடசாலைக்கு வரவில்லை. வந்தவர்கள் முகங்களில் அங்கங்கே நகங்களின் வன்முறைச் சுவடுகள் கறுப்புக் கோடுகளாகப் படர்ந்திருந்தன. தலைமை ஆசிரியரும் இதை எப்படியோ அறிந்துவிட்டார். அவர் வேறு ஓவியனாகி இவர்கள் முதுகில் சித்திரம் வரைந்தார். மானம் போவதில் தலைக்குனிவு. பெண்களின் நமட்டுச் சிரிப்பு. சில நாள்கள் சித்திரவதையாக பள்ளி வாழ்க்கை பறந்து செல்லும்

19

சுபன் தேவனின் மடியில் சடுதியாக வந்து இருந்தான். நினைவு என்னும் அழகிய கன்னி பதைபதைப்பாய் தூர எழுந்து ஓடிச் சென்றாள். அழகிய உறவொன்று அறுந்ததான ஏக்கம் தேவனின் மனதில் மிஞ்சியது.

வினோ ரீயோடு வந்தாள். சுபனும் இப்போது ரீ குடிக்கப் பழகி இருந்தான். வினோ அவனுக்கும் ஒரு சிறிய கப்பில் ரீ கொண்டு வந்து வைத்தாள். ஐரோப்பிய நாட்டின் சோபா வாழ்க்கை ஒருவித சுகத்தோடு சோம்பலையும் சலிப்பையும் கலந்து தருகிறது. கசந்து இனித்து துவர்த்து நாவின் சுவையறு முன் நாம் காலத்தோடு அள்ளுப்பட்டு எங்கோ வந்துவிட்ட உணர்வு.

இனிய வாழ்க்கை ஒன்று தொலைந்துவிட்டதான ஏக்கம் எப்போதும் ஏறிநின்று சவாரி செய்வதான அல்லாடல் ஒரு போதும் ஓய்வதாய் இல்லை. அப்படி என்றால் ஐரோப்பிய வாழ்வையும் அதன் பாதுகாப்பையும், இங்கு கிடைக்கும் சொகுசையும் விட்டுவிட்டு நாடு திரும்ப எத்தனை பேர் தயாராக இருக்கிறார்கள்? தேவனுக்குத் தன்னால் முடியுமா என்பதைக்கூட உறுதி செய்ய முடியவில்லை. அது அவனுக்குச் சோர்வாகவும் அவமானமாகவும் இருந்தது.

'என்னப்பா பேசாமல் இருக்கிறியள்?'

'ச்... இக்கரைக்கு அக்கரை பச்சை மாதிரி எங்களால இங்கையும் இருக்க முடியாது இலங்கைக்குப் போகவும் முடியாது.'

'அங்க இனிப் போறதே? நடக்கிற விசயமே அப்பா உது? இவன் வருவான் எண்டு நினைக்கிறியளே? இருந்து பாருங்கோ எங்கட கட்டையளே இஞ்சதான் வேகப் போகுது.'

வினோ சபதமிடும் பாணியில் கூறியது தேவனுக்குச் சற்று திகைப்பைத்தான் தந்தது.

'அப்பிடி எண்டா நாங்கள் இஞ்சயேதான் இருப்போம் எண்டுறியே?'

'பிறகென்னப்பா? இவனை விட்டிட்டு நாங்கள் போக முடியுமோ? இல்லாட்டி இவன்தான் எங்களோட வருவானே? சரி இவன விட்டிட்டுத்தான் போறம் எண்டு வைச்சாலும் அங்க நிம்மதியா எங்கள இருக்க விடுவாங்களோ? அங்க புதைச்சு வைச்சிருக்கிற ஆயுதம் எல்லாம் எத்தின வருசம் எண்டாலும் கறள் பிடிக்காத மாதிரித்தானே புதைச்சு வைச்சிருக்கிறாங்கள். ஒரு தொழில் இல்லாட்டி இன்னொரு தொழிலுக்கு அதைத்தானே பாவிக்கப் போறாங்கள்.'

'நீ சொல்லுறது சரிதான். ஆனா எப்பவோ ஒருகாலத்தில நாட்டுப் பிரச்சனை தீர்ந்து நல்ல நிலைமை வரும். அப்ப போய் அங்க வாழணும்.'

அழைப்புமணி அடித்தது.

வினோ கேள்விக்குறியுடன் தேவனைப் பார்த்துவிட்டு கதவு திறக்கச் சென்றாள். முதலில் கதவின் ஓட்டைவழியாக யார் வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்துவிட்டு, பின்பு கதவைத் திறந்தாள்.

சிவா உள்ளே வந்தான். அவன் முகத்தில் சாதுவாய் வாட்டம் தெரிந்தது. ஏன் என்பது தேவனுக்குப் புரியவில்லை. சிவா சோபாவில் வந்து அமர்ந்த பின்பு தேவன் மெதுவாக, 'என்ன டல்லாய் இருக்கிறீர் ?' எனக் கேட்டான்.

'ஒருக்கா ரெண்டு தரம் எண்டா குடுக்கலாம். காசு காசு எண்டு நெடுக வந்து நிண்டா நாங்கள் எங்க போறது, கடைசி யுத்த நிதியாம். எத்தின கடைசி யுத்தம் அண்ண இவங்களுக்கு வரும்? வீட்டை அடகுவைச்செண்டாலும் காசு தரட்டாம். ஏதோ மாமன் மச்சானிட்ட கைமாத்து வேண்டுறது மாதிரி. என்ன துணிவு பாருங்கண்ண இவங்களுக்கு? எனக்கு வந்த கோபத்திற்கு பெரிய பிரச்சனையாய்ப் போச்சுது. நாட்டுக்குப் போறதப் பாப்பம் எண்டிட்டுப் போகினம். இவையேதோ அழியாவரம் பெற்று வந்த மன்னர்கள் எண்ட நினைப்பு. ஒரு நாளைக்கு துண்டைக்காணம் துணியக்காணம் எண்டு விட்டுட்டு ஓடப்போறவங்கள்தானே இவங்கள். இப்ப தலைகால் புரியாத ஆட்டம் ஆடுகினம்.'

'இந்த வால்களைப் பற்றி நீங்கள் கவலைப்படாதேங்கோ அண்ண. எத்தின நாளைக்கு இப்பிடி ஆடப்போகினம் பாப்பம்' என்றாள் வினோ.

'இல்ல, அவையின்ர துணிவைப் பாருங்கோ... வீட்டை அடகு வைச்சுத் தா, வளவை அடகு வைத்துத் தாவெண்டு. ஏதோ குடுத்து வைச்சவங்கள் மாதிரி வந்து கேக்கினம். நாளைக்கு ஆமி ஒழுங்கா அடிச்சா யாழ்ப்பாணமே திரும்பி ஓடப்போகினம்? எங்கட ஊரில இருந்து ஓடேக்க முதல்ல ஓடினதே இவங்கள் தான். ஓடுறது எண்டா முதல்ல இவங்கள்தான் ஓடுவாங்களண்ண. பிறகு நான் யாரிட்டப் போய்க் காசு கேட்கிறது? இஞ்ச தண்டுறவங்களும் ஒரு காலத்தில சுருட்டிக் கட்டிக்கொண்டு எங்கையும் ஓடிடுவாங்கள்.'

திரும்பத் திரும்பச் சிவா அதையே சொல்லிக் கொண்டு இருந்தான்.

'சரி , சரி விடு.'

சிவா விடாது தொடர்ந்தான். 'நான் ஒரு ஆயிரம் தரலாம் எண்டன். அப்பிடி எண்டா உன்ர காசு வேண்டாம் எண்டிட்டுப் போட்டினம். எத்தின நாளைக்கு இவங்கள் இப்பிடிக் கொள்ளை அடிக்கப் போறாங்களோ தெரியேல்ல. அதுக்க அவையின்ர வெருட்டுகளும் சண்டித்தனங்களும் வேறை...'

வலுக்கட்டாயப்படுத்திக் காசு சேர்க்கிறதும், வலுக்கட் டாயப் படுத்தி குழந்தைகளையும் போராட்டத்துக்கு இழுத்துக் கொண்டு போறதும், இந்தப் போராட்டத்தில களத்தில நிற்கிற மக்களும் வெளியே இருந்து உதவி செய்யிற மக்களும் நம்பிக்கை இழந்து கொண்டு வருகினம் எண்டதைக் காட்டுது. களத்தில நிக்கிற மக்கள் நம்பிக்கை இழந்தா இந்தப் போராட்டம் வேரில்லாத மரம் மாதிரி அழிஞ்சு போகும். வருங்காலம் எங்களுக்கு அதிர்ச்சியான வரலாறுகளைத் தந்துவிட்டுப் போகும் பார்.'

'இது போராட்டமே அண்ண? ஒரு சர்வாதிகாரியின்ர ருத்திர தாண்டவம். பார்த்துக் கொண்டு இருங்கோ இவங்கள்

எப்பிடி அழியப் போறாங்கள் எண்டு. உந்தச் சனங்கள் திட்டுகிற திட்டெல்லாம் சும்மாவே விடப்போகுது.'

'தட்டிக் கேட்க முடியாத, மனச் சாட்சி பற்றிய அக்கறையற்ற போராட்டம் எப்பிடி முடியும் எண்டதைக் காத்திருந்துதான் பாக்கோணும்' என்றான் தேவன்.

'தட்டிக் கேட்க விட்டவங்களே? அப்பிடிக் கேட்டா தலையில போட மாத்திரந்தானே அவங்களுக்குத் தெரியும். விமர்சிக்கிறவங்களை யாரை விட்டுவைச்சவங்கள்? அதை வேற பெருமையாச் சொல்லித் திரியுறாங்கள். இல்லாட்டித் துரோகி எண்டுவாங்கள். இப்ப நாங்கள் கதைக்கிறதை அறிஞ்சா சந்தேகம் இல்லாமல் அவங்கட பாஷையில துரோகி கள்தானே?' என்றான் சிவா.

'இவங்களுக்கு இருக்கிற நட்பைவிட பகைதான் அதிகம். எத்தின நாளைக்கு இப்பிடி இருக்கமுடியும்?'

'அது உண்மையண்ண... தமிழருக்கு வந்த அருமையான சந்தர்ப்பத்தை எல்லாம் வேணும் எண்டு தட்டிக் கழிச் சாங்கள். என்னத்துக்காக அதைச் செய்தவங்கள்? எங்களுக்குக் கொஞ்சம் சிந்திக்கக்கூடிய, சுயநலம் இல்லாத ஒரு தலைவன் இருந்திருந்தா அண்ண, அடிச்சுச் சொல்லுறன்.... இண்டைக்கு தமிழீழம் கிடைச்சிருக்கும். சிங்களக் கவர்மெண்டும் இந்தியன் கவர்மெண்டும் ஜென்மப் பகைவர்களாக இருந்திருப்பாங்கள். இந்த அறுவான்கள் எல்லாத்தையும் மாத்தி எங்களையெல்லே...'

'சர்வாதிகாரிகள் இருக்கிற இடமெல்லாம் அப்பிடித்தான். கொஞ்சக்காலத்துக்கு ஒரு பீதி கலந்த மாயையில மக்களை அடிமையாய் வைச்சிருப்பாங்கள். பிறகு எப்பிடியோ பொறுக்க முடியாத போராட்டங்களால அழிஞ்சு தொலைஞ்சு போயிடு வாங்கள்.'

'அப்பிடி ஒரு போராட்டம் வாறத்துக்கிடையில இலங்கை யில எங்கட இனமே இருக்காது அண்ண.'

'அப்பிடி இல்ல... இவங்கட வாழ்க்கை மீன்களின்ர வாழ்க்கை மாதிரி... நீர் வற்றிப் போனால் துடிப்புத்தான் அவைக்கு மிஞ்சும். சிங்கள அரசாங்கம் நல்லாப் பாவிக்குது.

அதுதானே எல்லாரையும் வெளியில ஓடவிட்டிட்டு சிரிச்சுக் கொண்டு இருக்குது. கூலிகுடுக்காமல் வேலை நடக்குதெண்டா யாருக்குத்தான் அது வேண்டாம். நாங்கள் ஒரு போராட்டம் எப்பிடி நடத்தக்கூடாது என்பதுக்கு நல்ல உதாரணமாக வரப்போறம் எண்டு பயப்பிடுறன். இருந்துதான் பாக்கோணும். காலம் எப்பிடியான முடிவு தரும் எண்டத வரலாறுதான் சொல்லோணும்,' என்றான் தேவன்.

அன்று சிவா அதிகநேரம் இருந்து கதைத்துவிட்டுச் சென் றான். விருப்பம் இல்லர்து பலர் கட்டாயத்தின் பேரில் வில்லங் கத்திற்கு உதவி செய்கிறார்கள். அதில் இந்தச் சிவாவும் ஒருத்தன் எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

மனிதர்கள் ஒவ்வொரு கணமும் பல பாத்திரங்களுக்குள் தங்களைத் திணித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அகதித் தமிழனுக்கு பல நாட்டிலும் சஞ்சரிக்கும் ஒரு வாழ்க்கை கிடைத்தது. உடல் ஓரிடம் மனம் இன்னோரிடம். ஒவ்வொரு நாளும் அவன் தத்தளிப்புத் தொடர்கதை ஆகியது. தேவனுக்கு ஜடம் இங்கு மனம் அங்கு என்கின்ற தாவல் நிலை எப்போதும். அமைதி கிடைத்துவிட்டால் அவனது அசைபோடும் மனது அங்கே பாயும். இங்கே உடல் மட்டுமே வாழ்கிறது.

தேர்தல் களைகட்டி இருந்தது. ஒலி பெருக்கி ஊரெங்கும் அலறியது. உதயசூரியன் பதித்த துண்டுப் பிரசுரங்கள் எங்கும் எதிலும் வியாபித்து இருந்தது. தியாகர் வெல்லலாம் அல்லது திருநாவுக்கரசு வெல்லலாம், ரட்டாய் வெல்லக்கூடாது என்கின்ற சாதித்தடிப்பும் சிலர் கதைத்தனர்.

இனவெறியா? தேசிய எழுச்சியா? அல்லது இரண்டின் கலவையா? மக்கள் அணி திரண்டனர். எமது இருப்பை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற சரியான ஆய்வின்றி பரீட்சார்த்தம் அரங்கேறத் தொடங்கி இருந்தது.

கூட்டணியின் கடைசித் தேர்தல் பரப்புரைக் கூட்டம் பால்குத்தி மடத்தடியில் நடந்தது. அது மாவெட்டையின் எல்லையாக அமைந்த ஒரு பகுதி. எத்தனையாயிரம் பேரையும் உள்வாங்கிக் கொள்ளும் பரந்த திடல். எங்கும் மின்விளக்கு ஜொலித்தது. மேடையில் வீரவார்த்தைகளை அள்ளிவீசக்

கரகோஷம் வானைப் பிளந்தது. கூட்டத்தின் நாயகன் அமைதி யாகப் புன்முறுவல் செய்த வண்ணம் இருந்தார். அவர் பேச எழுந்த போது உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்கள் போட்டிக்கு இரத்தப் பொட்டு வைத்து ஈழப் போராட்டத்தை மேலுமொரு உயரக் கொப்பிற்கு ஏற்றினார்கள்.

தேர்தல் முடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சி 140 இடத்தைப் பிடித்து, அது 3-2 அறுதிப் பெரும்பான்மை பெற்றுக்கொண்டது. அன்றில் இருந்து இலங்கையைத் தீக்குளிக்க வைப்பதற்கு அந்தக் கட்சி தன்னைத் தயார் செய்யத் தொடங்கியது. தமிழர் விடுதலைக் கூட்டணி 18 இடங்களைப் பிடித்து சரித்திரத்தில் முதலும் கடைசியுமான தமிழ்க்கட்சி ஒன்று எதிர்க்கட்சியாக பாராளுமன்றம் ஏறியது. பாணுக்கு வரிசையில் விட்ட சிறீமாவோ முறையான வரலாற்றுப் பாடம் ஒன்றைக் கற்றுக் கொண்டார். பற்றாக்குறைக்கு ஜேஆர் குடியுரிமையைப் பறித்து வைத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க் கட்சியாய் பாராளுமன்றம் ஏறினாலும் பிரச்சனை அணைந்து விடவில்லை. மாறாக மூர்க்கமாகக் கொழுந்து விட்டு எரிந்தது.

சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள், அரசியற் சூனியங்கள், தேசியவாதத்தில் கண்ணிழந்தவர்கள் எல்லோரும் போராளிகளாய் மாறியதின் விளைவு தமிழீழப் போராட்டம் கொள்ளையும் உட்கொலையும் மலிந்த போராட்டமாகவும் மாறிற்று. எதிரிக்கு எதிரான போராட்டம் சொந்த இனத்திற்கு எதிராகவும் மிகவும் கண்மூடித்தனமாகத் திருப்பப்பட்டது. கருத்து முரண்பாடுகள் ஆயுதத்தால் மட்டுமே தீர்க்கப் பட்டன. அந்த வழியே சரியென்பதில் அடங்கா மோகம் கொண்டோர் வலுப்பெற்றனர். எட்டப்பன், துரோகி என்கின்ற பட்டங்கள் எந்த ஆதாரமும் இன்றி சூட்டப்பட்டு அவை நியாயப்படுத்தப்பட்டன. தங்கள் கருத்தை ஏற்க மறுப்ப வருக்கும் அந்தப் பட்டம் தாராளமாக வழங்கப்பட்டது. எதிராய் வாய்திறப்பவன் துரோகி ஆக்கப்பட்டான். அப்பாவிகளின் சுதந்திர வாழ்க்கை பறிக்கப்பட்டு அடக்குமுறை அவர்களுக்கு நிரந்தரமாக வழங்கப்பட்டது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் திரைமறைவில் சுயநல சர்வாதிகார அடக்குமுறை மிருகத்தனமாக

சொந்த இனத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டது. களையெடுப்பு என்கிற பெயரில் புத்திஜீவிகள் பிடுங்கி எறியப் பட்டார்கள். ஏனையோரின் மூளைகள் நிரந்தரமாகச் சலவை செய்யப்பட்டன. இருந்தவர்கள் அதைப் பாவிப்பதை நிறுத்தி வைத்தனர். வாய்களுக்கு பூட்டிட்டு மௌனிகளாக வலம் வரத் தொடங்கினர்.

இனவெறியில் மூழ்கிய எந்த இனமும் தமது தலைவர் கள் செய்யும் பிழையை ஏற்றுக் கொள்வதில்லை. பாதிக்கப் பட்டவர்களால் மட்டுமே அதன் உத்தரிப்பை உணர்ந்து கொள்ளமுடிகிறது. ஹிட்லரை வாழ்த்தும் ஜேர்மானியரை இன்றும் காணலாம். ஸ்டாலினைப் பிழை சொல்லும் ரூஷ்ய நாட்டுக்காரரை அதிகம் காணமுடியாது. பட்டியலாய் நீண்டு செல்லும் பாடங்களான வரலாறு இது. இதில் இருந்து மனித இனம் படித்த பாடம் ஏதோ சிலதுதான். இவ்வாறு தேவன் மனதில் குமைந்தான்.

தியாகராசா வாட்டசாட்டமான மனிதர். அவர் நேர்மை யாகவும் இருப்பார் என்பதே ஊரில் இருந்த அபிப்பிராயம். தேவன் பாடசாலைக்குச் செல்லும்போது சிலவேளைகளில் பஸ்ஸுக்காக ஆலடியில் காத்திருப்பார். தேவன் ஒரு நாளும் அவருடன் பேச நினைத்ததே இல்லை. பெரியவர்களுக்கே அவருடன் கதைப்பதென்றால் நடுக்கம். தியாகர் முரட்டுத் தனமாக நடந்த கதைகள் எல்லாம் ஊரில் உலாவி வந்த காலம் அது. தியாகர் எம். பி.யாக இருந்ததில் ஊருக்குப் பெருமை. தேவனுக்கும் அதில் ஒருவித மகிழ்ச்சிதான்.

தேவன் ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்தான். அது சித்திரை மாதம். காரைநகரில் நல்ல அனல் வாட்டி எடுத்தது. அப்போது மாகாணசபைத் தேர்தல் பிரச்சாரம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. தேசியவாதத்தில் மூழ்கிப்போய் இருந்த தமிழரால் சிங்களக் கட்சிகளின் சார்பாக தேர்தலில் நிற்கும் துணிவு இருக்கவில்லை. விருப்பு இருந்தாலும் விளைவை எண்ணி அதைத் தவிர்த்துக் கொண்டனர்.

எமதர்மராஜன் ஜேஆர் மூலம் தியாகருக்குத் தூது விட்டிருக்க வேண்டும். தியாகரை கொழும்புக்குக் கூப்பிட்டு ஜேஆர் தேர்தலில் நிற்பதற்கு மசியப் பண்ணிவிட்டார்.

தேவனுக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. அம்மா அன்று கோதுமைமாப் பிட்டு அவித்து பகல் வைத்த இறா குழம்போடு அதைக் குழைத்துத் தேவனின் பிளேற்றில் வைத்திருந்தா. தேவனுக்கு தயிரும் விட்டு சாப்பிட ஆசை. அம்மா மச்சத்தோடு தயிர் சேர்த்துச் சாப்பிட ஒத்துக்கொள்ளமாட்டா என்பது தெரிந்ததால் பேசாது சாப்பிடத் தொடங்கினான்.

'அடி தேவி ஊரில இடி விழுந்து போச்சடி...' சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போதே செல்லம்மா மாமி சாச்சொல்லிக் கொண்டு வந்தா. அன்று செல்லம்மா மாமி நேரடியாக அடுக்களையை நோக்கி வந்தா. அவவின் வரத்தில் இருந்த வீச்சும் முகத்தில் இருந்த கலக்கமும் ஏதோ ஏடாகூடமாய் நடந்ததைக் கோடிகாட்டி நின்றது.

'என்னண, வந்ததும் வராததுமாக முடிச்சுப் போடறா? விசயத்தைச் சொல்லண.'

'அடி உனக்குத் தெரியாதே?'

'தெரியாதணே. தெரிஞ்சா ஏனண உன்னிட்ட கேக்கிறன். வாத்தியார் யாரோடையோ அவசரமா போட்டார். எங்க போனார் எதுக்குப் போனார் எண்டும் எனக்குத் தெரியாது.'

'இவளொருத்தி... அவிக்கிறதும் படுக்கிறதுமாக இருக்கிறாள்...' என வழமையான பாட்டுப் பாடிவிட்டு, 'அடி தியாகரையேல்லே அறுவான்கள் சுட்டுப் போட்டாங்களாம்...' என்றா.

'என்னண சொல்லுறா?' எனத் தேவனின் அம்மா கேட்டா. தேவனின் அம்மாவுக்கு தலையில் அடியிறங்கிய வேதனை. கால்கள் ஒருகணம் நிற்க ஏலாதன போன்று பதறின.

'பிறகென்னடி? ஊரில இடிவிழுந்து போச்சு எண்டு சொல்லுறன்.'

'தியாகரையும் சுடுவினமேண?'

'உவங்கள் ஆரத்தாண்டி விடுறாங்கள்.'

'தியாகரை எதுக்குச் சுடோணுமெணை?'

'பிறகென்ன...? கண்டவனெல்லாம் தமிழீழம் எண்டு துவக்கோட திரிய, இவர் சிங்களக் கட்சியோட சேர்ந்து நிண்டா விடுறாங்களோடி? கூட்டணிக்காரரே ஆக்கள வைச்சு செய்திருப்பாங்களோ என்னவோ தெரியாது. வேறொரு கதையும் அடிபடுகுது.'

'என்னணை அது?'

'இல்லையடி, யாரோ சுந்தரம் எண்டவன் சகோதரி யாருக்கோ வேலை கேட்க வந்தவனாம். தியாகர் இல்லை எண்டோ, இல்லாட்டிப் பிறகொருதரம் வரச்சொல்லியோ இருக்கிறார். அவை அதுக்கும் போகாமல் நிக்க தியாகருக்கு விஷர் வந்திட்டுதாம். தியாகருக்கு பனி வந்தா என்ன நடக்கு மெண்டு உனக்குத் தெரியும்தானே? அந்தக் கோபத்தை வைச்சுத் தான் இப்ப அவர சுட்டு இருக்கிறாங்கள் எண்டு சனம் கதைக்குது. இயக்கம் எண்டுகொண்டு, கண்ட கழிசடையள் எல்லாம் ஆயுதத்தைக் கொண்டு அலையுதுகள். இனி யாரையும் எங்கையும் சுடுவினம். உயிருக்கு ஒரு உத்தரவாதமும் கிடையாது. இப்பிடிப் போனா நாடு என்னவாகிறது? இந்தச் சீலம்பாயளே தமிழருக்கு விடுதலை வேண்டித் தரப்போகிற தறுதலையள்? இவை குருவி சுட்டுக் கொண்டு திரிய சிங்களவன் சரைசரையாக் கொண்டுவந்து இறக்கிறான். தெருவில போறதை மடிக்கிப் பிடிச்சு விட்டிட்டு குத்துது குடையுது எண்டா என்ன செய்யிறது?'

'அதுக்கு இப்பிடிச் செய்யறதே?'

'தியாகற்ற கோபம் பொல்லாததுதான். எண்டாலும் அநியா யமாகக் கொண்டு போட்டாங்கள்.'

'பிறகென்னணை... காரைநகரை அவர் எவ்வளவு முன்னேற் றினவர். சந்து பொந்தெல்லாம் பஸ் ஓடுதெண்டா அது தியாகர் செய்த வேலைதானே?'

'சனம் எல்லாம் கதி கலங்கிப் போச்சுதுகள். ஆஸ்பத்திரியி லும் ஆரோ கூட்டணிக்கார டொக்ரர்தானாம் நிண்டவன்.

அவன் வேணும் எண்டே சாகவிட்டிருக்கிறான் எண்டும் சனம் கதைக்குது.'

'ம்.... ஜேஆருக்காக எலக்ஷனில நிண்டதால உங்க செத்தவீட்டுக்கு மினிஸ்ரர்மாரெல்லாம் வருவினம். ஒரே அமளிதுமளியாத்தான் இருக்கப் போகுது.'

'அது உண்மைதான். ஊருக்க இருந்த ஒரு வல்லவனையும் அநியாயமாய் அழிச்சுப் போட்டாங்கள். இவங்களும் இப்பிடியே நாசமாப் போயிடுவாங்களடி.'

'காகம் திட்டி மாடு சாகுதேணை?'

'நீ இருந்து பார் தேவி. அப்பிடித்தான் நடக்கும்.'

'எப்ப சவம் எடுப்பினமோ தெரியாது. விடிச்சாமம் சாச்சொல்லுவாங்கள் எண்டு நினைக்கிறன்.'

'பெடியன் லண்டனில இருந்து வரோணுமாக்கும்.'

'ஊரே களையிழந்து போச்சுது. ஊருக்க ஒரு நல்லவன் பெரியவனை இருக்க விடுறாங்களே? கோயில் குளம் எண்டு கூடப் பாக்காமல் சுடுவாங்களே? இவங்களுக்கு எல்லாம் நல்ல சாவே வராது,' என்றா செல்லம்மா மாமி மனதில் எதையோ நினைத்துக்கொண்டு. செல்லம்மா மாமி அன்று அதிகநேரம் இருந்து ஒப்பாரி வைத்துக் கொண்டு இருந்தா.

தியாகரின் மரணச்சடங்கிற்கு பல அரசியல் பெரும் புள்ளிகள் வந்தார்கள். அவர்கள் சக்கலவோடை வரை கெலியில் வந்து பின்பு காருக்கு மாறினார்கள். ஊர்வலமாக தியாகரின் வீட்டை நோக்கிப் பயணித்தார்கள். காரைநகர் வரலாற்றில் காணாத ஊர்வலத்தை அன்று கண்டது. தியாகரை நேசித்தார்களா? அநுதாபத்தில் திரண்டார்களா? ஊரான் என்ற ஓர்மத்தில் வந்தார்களா? வன்முறைக்கு ஒரு சவுக்கடி கொடுத்தார்களா? கூட்டத்தின் அலைமோதலில் விடை காணப்படாத கேள்விகள் உருவாகி நெளிந்தன.

தேவனுக்கு அந்த ஊர்வலத்தோடு முழுவிடமும் போக வேண்டும் என்று ஆசை. அதற்கு தேவனின் அம்மா,

'சவ ஊர்வலத்தோடையெல்லாம் நீ அலைய வேண்டாம். கோயிலடியில் நிண்டு பாத்திட்டு வா' என்று கூறித் தடை செய்து விட்டா.

தேவனுக்கு அது பெரும் ஏமாற்றமாக இருந்தது. ஊரெல்லாம் திரண்டு வெள்ளக்காடாய் ஊர்வலம் போகும் போது தான் அதனுடன் போக முடியாதது பெரும் கவலையைத் தந்தது.

தியாகரின் ஊர்வலம் அன்றைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தியில் இடம் பிடித்தது. அவரது சிதை மூண்டபோது ஆயிரம் ஆயிரம் மனங்களும் அத்துடன் சேர்ந்து எரிந்தன. கொல்லுவதாலே சுதந்திரம் அடையலாம் என்கின்ற தவறான வழிக்கு இதுவும் ஒரு முன்னுதாரணமாய் இருந்தது. தத்துவங்கள் பேசித்திரியும் போராளிகள்கூட தனிமனித விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்டவர்கள் இல்லை என்பதை தியாகரின் முடிவு வரலாறாக்கியது. போராளிகளின் நினைவும் செய்கையும் ஒருபக்கமாகவும், மக்களின் பரிதவிப்பும் அவதியும் இன்னொரு பக்கமாகவும் எதிரெதிர் திசைகளில் நடைபோடத் தொடங்கின.

20

சுபன் அன்று பாடசாலையால் வந்ததும் ஒரு கடதாசித் துண்டைக் கொண்டு வந்தான். அவர்கள் நாளைக்குப் படம் பார்க்க கொலுசியம் தியேட்டருக்குப் போவதாய் அதில் இருந்தது. அதற்காக அந்தத் துண்டில் பெற்றோரின் அனுமதி கோரப்பட்டிருந்தது. தேவன் வாசித்துவிட்டு கையெழுத்து வைத்துக் கொடுத்தான். சுபன் நன்றிகூறியவண்ணம் அவ் விடத்தை விட்டு நகர்ந்தான். தனிமையில் இருந்த தேவன் இயல்பாக காரைநகரில் போய் நின்றான்.

காரைநகர் மாறிப் போயிற்று. மக்களுக்கும் நேவிக்கும் இருந்த அந்நியோன்னியம் அற்று ஒரு விரோதம் மெதுவாகக்

குடிபுகுந்து கொண்டது. அது மேலும் மேலும் இடைவெளியைப் பெரிதாக்கியது. நண்பனாகப் பார்க்கப்பட்ட நேவிக்காரர் தற்போது விரோதிகளாக, விசித்திரப் பிறவிகளாகப் பார்க்கப் பட்டனர். எதுவுமே புரியாது இருபகுதியும் பகைமை என்னும் பாதையிலே பயணம் செய்ய ஆரம்பித்து இருந்தனர். நட்பு என்னும் கோட்டில் இனிமேல் சந்திக்க மாட்டோம் என்கின்ற துருவங்களை நோக்கி அவர்கள் பயணம் மூர்க்கமாகிக் கொண்டு இருந்தது.

தேவனுக்கு ஊரின் நிலைமை அதிர்ச்சியையும் பயத்தை யும் தந்தது. எத்தனை மாற்றம் வந்தாலும் மாணவப் பருவத்திற் கான இன்பங்களை இழப்பதற்கு அவன் மனம் ஒப்பவில்லை. அவன் இடைக்கிடையே படங்கள் பார்ப்பது வழக்கம். அப்போதுதான் இலங்கைக்கு தொலைக்காட்சி அறிமுகமாகி இருந்தது. அந்தத் தொலைக்காட்சியில் காசுக்காகப் படங்கள் காட்டப்படும். அதுதான் அன்றைய மினி சினிமா. தேவனின் வீட்டுக்கு அருகில் அப்படியான படங்களைப் பார்க்க முடியாது. யாரும் அதைக் காட்ட முற்படுவதில்லை. எப்போதாவது செம்பாட்டில் காட்டுவார்கள்.

ஊரிலே அடிக்கடி படங்காட்டப்படும் இடம் தேவனுக்கு நன்கு தெரியும். சிவகாமி அம்மன் கோவிலடி அவனது கனவுலகம். தூரம் ஒரு சிக்கலாக வந்து நிற்கும். அப்பாவுக்குத் தெரியாது போகவேண்டிய இக்கட்டு மறுபுறம் குஸ்தியடிக்கும். எத்தனை இடையூறுகள் முன்நின்றாலும் அவன் அதைப் பின் தள்ளி படம் பார்க்கச் சென்று விடுவான்.

அன்று வெள்ளிக்கிழமை இரவு படம் பார்க்கச் சென்றி ருந்தான். அங்கு நல்ல கூட்டம். அடிக்கடி படம் பார்க்கச் செல்வதால் பள்ளி நண்பர்களை விடவும் தேவனுக்குச் சிவகாமி அம்மன் கோயிலடியில் சில நட்பு வாய்த்திருந்தது.

அன்று இரு படங்கள் காட்டப்பட்டன. முதலாவதாக தங்கப்பதக்கமும் இரண்டாவதாக சிவாஜிகணேசனின் கட்ட பொம்மனும் காட்டப்பட்டது. தங்கப்பதக்கம் ஏற்கனவே பார்த்திருந்தாலும் அவனுக்கு அது அலுக்கவில்லை. இரண்டும் நீண்ட படங்கள். சிவாஜி கணேசனின் படம் என்பதில் தேவனுக்கு ஒருவித ஆத்ம திருப்தி.

சிவாஜி கணேசனின் கட்டபொம்மன் நடிப்பை வேஷம் என்று அவனால் நம்ப முடியாது இருந்தது. கட்டபொம்மன் வாழ்ந்த காலத்திற்கே அவனை அது இழுத்துச் சென்று, பின்பு அங்கேயே விட்டுவிட்டது போன்று இருந்தது. சிவாஜியே கட்டபொம்மன் கட்டபொம்மனே சிவாஜி எனத் தேவனுக்கு உருவகமாயிற்று. மனதில் அது ஆழப்பதிந்தது.

அக்கதைகள் சொன்ன கருத்து உணர்ச்சியை எரிமலையாக்கி நரம்புகளை முறுக்கேற்றியது. அந்நியரின் ஆதிக்கத்தை எதிர்க்கும் மனநிலை தேவனுக்குள் மேலோங்கி இருந்தது. அவன் உணர்ச்சிப் பிரவாகத்தில் மீண்டும் மீண்டும் தத்தளித் தான். கட்டபொம்மன்கள் வேண்டும். ஆயிரம் ஆயிரம் கட்ட பொம்மன்கள் வேண்டும். அடிமைத்தளையை உடைத்தெறிந்து தமிழன்னையை மீட்க வேண்டும். ஒரு கணம் தேவன் தடுமாறினான். உள்ளந்தனை உணர்ச்சியிடம் இழந்து அவன் தத்தளித்தான்.

மறுகணம் அவனுக்குச் சந்தேகம் வந்தது. 'நடக்கிற காரியமா இது?' என அவனது மனது திருப்பிக் கேள்வி கேட்டது. தேவன் மௌனமானான். அவன் உணர்ச்சிகள் வளர்ந்த வேகத்திலேயே தணிந்து போகலாயிற்று.

படம் முடியும்போது சாமம் கரைந்து சாச்செல்லும் நேரத்தை அண்டி இருந்தது. தேவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கினான். சிவகாமி அம்மன் கோயிலடி யில் சிறு சலசலப்பு இருந்தது. சிறிது செல்ல வேலிக்குப் பின்பு நின்று குரைக்கும் நாய்களின் ஓசை மாத்திரமே கேட்டுக் கொண்டு இருந்தது. தெருவில் சில இடங்களில் மங்கிய மின்குமிழ்கள் தொங்கிய வண்ணம் அந்திமம் பாடிக்கொண்டு இருந்தன. ஒருசில நாய்கள் சைக்கிளின் சத்தம் கேட்டவுடன் ஓடிவந்து நடு வீதியில் நின்று குரைத்தன. தேவன் நடந்து போகும்போது நாய் குரைத்தால் குடலைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட்டமெடுப்பான். சைக்கிளில் போவதென்றால் நாய்க்கு அவன் பயப்படுவதில்லை. தனது சைக்கிள் ஓட்டத் தோடு நாய் போட்டியிட மாட்டாது என்கின்ற அசட்டுத் துணிவு அவனுக்கு. அப்படி நாய் கலைத்துக் கொண்டு வந்தாலும்

காலைத்தூக்கி பாரிலே வைத்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியம்.

சிவகாமி அம்மன் கோயில் குச்சு ஒழுங்கையால் வந்து பிரதான வீதியில் ஏறும்போது மணற்காட்டு அம்மன் கோயிலடியால் போவதா அல்லது ஆலடியால் போவதா என்கின்ற விவாதம் அவன் மனதுள் அதிரடியாக எழுந்து நின்றது. மணற்காட்டு அம்மன் கோயிலடியால் போவது பாதுகாப்பு. ஆனால் பத்தர் கேணியடியால் போவதில் ஒரு சங்கடம். மணல் தெருவால் சைக்கிள் ஓட்ட வேண்டும். அந்த ரோட்டு சைக்கிள் ஓட்டத்திற்குச் சொகுசு தராது. அது தேவனுக்கு அவ்வளவு பிடிப்பதில்லை. அவன் சைக்கிளை ஆலடிப்பக்கம் திருப்பினான்.

செல்லப்பா கடை தாண்டி யாழ்ரன் கல்லூரியைத் தாண்டும்போதும் நாய்களின் குரைப்பு அட்டகாசம் தொடர்ந்து கொண்டு இருந்தது. திரும்பிப் போவோமா என ஒரு கணம் ஏனோ எண்ணினான். என்ன மடமையென அதற்கு எதிராய் எண்ணியவன் தொடர்ந்தும் ஆலடியை நோக்கி சைக்கிளை உழக்கினான். ஆலடியை நோக்கிப் போகும்போது மின்விளக்குகள் உயிரிழந்து, மரநிழலோடு சேர்ந்து இருள் தெருவை அடைத்துக் கொண்டு நின்றது. அங்கே குடியிருந்த அசாத்திய அமைதி தேவனைத் திக்குமுக்காட வைத்தது. தெருவிளக்குகள் எப்போது போகும் எப்போது வரும் என்பதை எவராலும் சொல்ல முடியாது. தெருவிளக்குகளைப்பற்றி எல்லாம் கவலைப்படாது சென்று வந்த வீதிகளில், இன்று யாரோ குந்தியிருந்து பயமுறுத்துவதான ஒரு தயக்கம் அவனிடம் இருந்தது.

தேவன் பயத்தோடு வேகமாகச் சைக்கிளை உழக்கினான்.

ஆலடி நிழலைத் தாண்டியபோது நேவிக்காரரின் வண்டி நிற்பதைத் தேவன் கவனித்தான். அவனுக்கு அந்த இரவிலும் தொண்டைக்குழி வறண்டது. உமிழ்நீர் சுரப்பது நின்று போயிற்று. இதழ்களைக்கூட நனைப்பதற்கு நாவை அசைக்க துணிவு மிஞ்சி இருக்கவில்லை. அதிக பயம் அவனைப் பற்றிக் கொண்டது.

தேவன் சைக்கிளை மெதுவாக்கினான். தேவனை மறித்து நின்ற நேவிக்காரருள் ஒருவன் அவனைப்பிடித்து வேலியை

நோக்கித் தள்ளிவிட்டான். தேவன் வேலியோடு போய் விழுந்தான். கையில் ஏதோ சிராம்பிய வலி.

தேவன் நிதானிக்க முன்பு சப்பாத்துக் காலால் நேவிக்காரன் மிதித்தான். பின்பு சட்டையைப்பிடித்துக் கொத்தாகத் தூக்கினான். தேவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. சிறுநீரே போய் விடும் போல் இருந்தது. அவமானப் பிறவி நீயேடா என மனது உடலில் இருந்து விலகித் தூரே நின்று பழிப்பதாக இருந்தது.

'எங்க போய்வாறது இந்த ராத்திரியில அங்...?' கேட்ட வண்ணம் தேவனின் கன்னத்தில் அவன் ஓங்கி அறைந்தான். தேவனுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது.

அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, 'படம் பாத்திட்டு வாறன்...' எனப் பதிலளித்தான்.

'நீ கொட்டியாதானே, கொட்டியா?'

'இல்ல, நான் படம் பார்த்துட்டு வாறன்.'

'அப்ப இந்த நோட்டீஸ் யார் ஒட்டினது?'

தேவன் பார்த்தான். புத்தர் கண்களில் இருந்து இரத்தம் வடியும் காட்சிகள். சில இயக்கங்களின் சின்னங்கள், வீர வசனங்கள். எரியப் போகும் நெருப்புக்கு எண்ணை ஊற்றும் அதீதப் பரப்புரைகள். தேவன் நோட்டீசை உற்று நோக்கிய வண்ணம் நின்றான்.

'யாரு ஒட்டினது ஆங்.... உனக்குத் தெரியும்தானே?'

'இல்ல எனக்குத் தெரியாது. நான் படம் பார்த்துட்டு வாறன்.'

இன்னுமொரு அறை கன்னத்தில் இறங்க... தேவன் வேதனையால் 'அம்மா' என்றான்.

'அம்மே கிட்ட இருக்கிறதுதானே? எங்க ரத்திரியில திரியிறது? இனி இராத்திரியில திரிஞ்சா சுட்டுக் கொன்னுடுவம். தெரியுமா?'

தேவன் பேசாது மிரண்டு போய் நின்றான். வேறு எவரோ வரும் சத்தம் கேட்க தேவனை வண்டிக்குப் பின்னால் கொண்டு

போய்விட்டார்கள். அங்கு ஏற்கனவே மூன்றுபேர் முகம் வீங்கிப் போய் நின்றிருந்தார்கள்.

கணங்கள் அசைய மறுத்து அடம்பிடிக்க, பயமுறுத்தும் நிசப்தமும் பீதியும் அடர்த்தியாக அழுத்திக் கொண்டு நின்றது. அவர்கள் ஆளையாள் பார்த்து விழித்தவண்ணம் நின்றனர். எவருக்கும் நாவசைக்கும் துணிவு இருக்கவில்லை. சிறிது நேரத்தில் அந்த அமைதியைச் சிதறடிக்கும் அவல ஒலி கேட்டது. அது தற்போது நேவிக்காரரால் நிறுத்தப்பட்டவர்களின் அவலம் தான். அந்த அவலம் பின்பு அடங்கியது. மயிர்க் கூச்செறியும் அமைதி மீண்டும் அந்த இடத்தை ஆக்கிரமித்துப் பயமுறுத்தியது.

மூக்கால் இரத்தம் வழிய அந்த அவல ஒலி போட்டவர் களும் றக்கிற்குப் பின்னால் வந்து சேர்ந்தார்கள்.

ஆறு மணி வரையும் இந்த வேட்டை நடந்தது. வெளிச்சம் மெள்ளப் பரவி, இருளைப் புறமுதுகிடப் பண்ணி, தனது ஆட்சியைத் திடமாக நிறுவியது.

நாங்களும் இவர்களை வென்று ஆட்சி செய்ய முடியுமா? தேவன் மனதிற்குள் கேட்டுக் கொண்டான். ஆட்சியின் ஆசையில் அலங்கோலமாய் அழிந்து போவோமா? ஒற்றுமையே இல்லாத எங்கள் இனம் ஒன்றாய் நின்று போராடுமா? வழி தெரியாத நீண்ட பயணத்தில் இடை வழியில் எவரும் இன்றி நின்று தவிப்போமா? தேவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

நேவிக்காரர் அத்தோடு அன்றைய வேட்டையை முடித்துக் கொண்டார்கள். எல்லோரையும் ஓட்டிச் சென்று அந்த நோட்டீஸ்களுக்கு முன்பு நிற்கவிட்டார்கள். தேவனுக்கு எதுவும் புரியவில்லை. வாழ்வின் கடைசிக் கணங்கள் இது தானா? அவனுக்குத் தலை சுற்றியது. பாவம் அம்மா... எப்படித் தவிப்பா என ஒரு கணம் எண்ணினான்.

அச்சத்தில் உறைந்து, திரும்பிப் பார்க்கத் துணிவின்றி நோட்டீசைப் பார்த்தவண்ணம் எல்லோரும் நின்றார்கள். எப்போது சன்னம் முதுகில் பாயும் என்கின்ற கலக்கத்தோடான காத்திருப்பு தொடர்ந்தது. வாழ்வின் கடைசி மூச்சை

இழுத்துவிடும் அந்தரம் இதயத்தைப் பிசைந்தது. நேவிக்காரரை எண்ணியபோது உறைந்துபோய்க் கிடந்த ஆவேசம் சீறிப் பாய்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அற்ப வாழ்விலே போவதான அடங்காத அங்கலாய்ப்பு மனதில் அலறிக்கொண்டு இருந்தது.

சன்னம் புறப்படவில்லை. சத்தம் கேட்கவில்லை. என்ன செய்யப்போகிறார்கள்? மரணத்திற்காய் காத்திருப்பது போன்ற அவஸ்தை வேறேதும் உண்டா? தேவன் இந்தக் கணங்களை வெறுத்தான். பயந்துபோய் நேவிக்காரனின் கையில் இருக்கும் துப்பாக்கியைப் பறிக்க முயன்றால் விரைவாகச் சுட்டு விடுவார்கள். விரைவாக இந்த ஆக்கினையில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என அவனுக்குத் தோன்றியது.

திரும்ப எண்ணியவனுக்கு அம்மாவின் முகம் ஞாபகம் வந்தது. தேவன் அசையாது நின்றான்.

பக்கத்தில் நின்றவனுக்கு நேவிக்காரன் பிடரியில் அடிபோட்டான். பின்பு எல்லோரது கைகளும் பின்னால் கட்டப்பட்டன.

தேவன் நேரம் வந்துவிட்டது என எண்ணிக் கொண்டான். வாழ்வு இவ்வளவு சொற்பத்தில் முடியும் என அவன் கனவுகூடக் கண்டதில்லை. அது இப்போது நிஜமாக, எதுவுமே செய்யாமல், செய்ய இயலாமல் திகைத்துப் போய் நின்றான். வாழ்வின் இந்தக் கணங்கள்தான் மெய் என்பதே இத்தோடு பொய்யாக, பாதம் பதித்து நின்ற பூமியே நழுவிப் போவதான உணர்வில் அவதிப்பட்டான். ஏதாவது செய்த பின்பு, அந்நியன் சுட்டுக் கொன்றாலும் ஒருவித திருப்தி கிடைத்திருக்கும். எதுவுமே செய்யாது அந்நியனால் சுடப்படுவது தேவனுக்கு அவமானத்தையும் அருவருப்பையும் தந்தது. திரும்புவோமா? ஆயுதத்தைப் பறிப்போமா? மீண்டும் மீண்டும் எண்ணிய வண்ணம் அசையாது நின்றான். கைகால்கள் மாத்திரம் மரத்துப் போய்க்கிடந்தன.

எல்லோருக்கும் கட்டி முடிந்ததும் நேவிக்காரன் முன்னே வந்து…

'இந்த நோட்டீஸக் கிழிங்கடா... அதிங் வாயால நக்கி நக்கி கிழிக்கிறீங்க... கிழிச்சு முடிஞ்சா நீங்க வீட்ட போறது. இல்லாட்டி நேவி காம்புக்கு போறது.'

கூறிவிட்டு அவன் சத்தமாக நகைத்தான். பின்பு தேவனுக்குப் பக்கத்தில் நின்றவனுக்கு துவக்குப் பிடியால் இடித்து, 'என்னடா பார்த்துக்கொண்டு நிக்கிறது? கிழிக்கிறது இல்லாட்டி சுட்டுப்போடுவம்... தெரியுமா?' என்றான்.

எல்லாரும் கண்கள் நீர்சொரிய வாயால் நோட்டீஸைக் கிழிக்க அரும்பாடுபட்டுக் கொண்டு இருந்தார்கள்.

இருள் கரைந்து வெய்யில் சூடேற சன நடமாட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. நேவியைக் கண்டதும் விலகிச் சென்றவர்கள். இவர்களைப் பார்த்து ஒரு பரிதாபப் பார்வையை வீசிவிட்டுச் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் தேவனின் வகுப்பில் படிக்கும் சில பெண்கள் வந்தார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு ரியூஷனுக்குப் போய்க்கொண்டு இருந்தார்கள். தேவனுக்கு தான் நின்ற கோலத்தை எண்ணி அவமானமாய் இருந்தது. அவர்கள் தேவனைப் பார்த்து ஒருவித பரிகாச நகை வீசிச் சென்றார்கள். உயிர் போன ஜடமாக, வரண்ட நாவால் மீதமுள்ள நோட்டீஸை அவன் நனைக்க முயன்றான்.

21

வினோவிற்கு இன்று பிற்பகல் வேலை. தனிமை ஒருவித அலுப்பை தன்மீது போர்த்தியதாக தேவன் அந்தரித்தான். எப்படி இருந்தாலும் அவனுக்கு ஏழுமணிச் செய்தி பார்த்தாலே நிம்மதி கிடைக்கும். அதைத் தவறவிட்டால் அன்றைய கடமைகளில் ஏதோ ஒன்றைச் செய்யாது விட்டது போன்று இருக்கும். பின்பு அன்றைய தூக்கத்தை அது கெடுத்து விடும்.

செய்தியில் கொங்கோவில் நடந்த படுகொலைபற்றி ஆவணச் செய்தி காட்டிக்கொண்டு இருந்தனர். தேவனுக்கு தலை விறைத்தது. மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம் உள்ளது என்கின்ற கேள்வி அவனைத் துளைத்து எடுத்தது. ஐரோப்பியரின் ஓரவஞ்சகம் மிகவும் அநியாயமாகத் தோன்றியது. தங்கள் பின்வளவான யூகோஸ்லேவியாவில் நடந்த இனப்படுகொலையைத் தடுப்பதற்கு தவண்டை அடித் தவர்கள், கொங்கோவில் லட்சக்கணக்கில் உயிர்கள் பலி யாகவும் பார்த்துக்கொண்டு இருந்ததின் நோக்கமென்ன என்பது அவனுக்கு விளங்கவில்லை. கறுத்த தோல் போர்த்திய மனிதனின் உயிருக்கும் வெள்ளைத்தோல் போர்த்திய மனிதனின் உயிருக்கும் அவ்வளவு வித்தியாசம் உண்டா? எதிலுமே தமது சுயநலத்தையே முதன்மைப்படுத்தும் இவர்களுக்கு பொதுநலம் கதைப்பதற்கு என்ன அருகதை உண்டு? தேவனின் மனம் மீண்டும் மீண்டும் உலையாகக் குமுறியது. இதைப்போல் தங்களுக்கு அநியாயம் நடந்த அந்த நாள்கள் தேவனின் மனதில் இன்றும் ஒருமுறை ஓடத் தொடங்கியது.

அன்று காலை ஒன்பது மணியிருக்கும். அது ஒரு யூலை மாதம். சூரியக் கதிர்கள் ஊசிகளாக இறங்கி இருந்தன. தேவனின் அம்மா இன்று வீட்டுக்கு வந்த மீன்காரியிடம் மீன் வேண்டி இருந்தா. அது அவவுக்கு சற்று அதிசயமாக இருந்தது. வழமையாக மடத்தடிக்கோ சங்கானைக்கோ மீனைக் கொண்டு ஓடிவிடுவார்கள். இன்று ஏதோ பிரச்சனையாக இருக்க வேண்டுமென தேவனின் அம்மாவுக்கு விளங்கியது. என்றாலும் அதைப் பற்றி பின்பு அவ அலட்டிக் கொள்ளவில்லை.

சிறிது நேரத்தில் செல்லம்மா மாமி என்றும் இல்லாத கலவரத்தோடு, 'அடி தேவி, அடி தேவி, நாடு அழியுதடி…' எனப் பதறி அடித்துக் கொண்டு வந்தா. அப்போது தேவனின் அம்மா வேண்டிய மீனை நோண்டிக் கொண்டு இருந்தா. தேவனின் அம்மா செல்லம்மா மாமியைப் பார்த்து, 'என்னண பொடி போடறா?' எனக் கேட்டா.

'எடி உனக்கு ஒண்டும் தெரியாதே. அவிச்சுப் போடுறதும் படுத்து எழும்புறதுமாய் இருந்தாச் சரியேடி?' என வழமையான பாட்டு ஒன்று பாடிவிட்டு, 'உங்க கலவரமாமடி,' என்றா.

'என்னண சொல்லுறா? நான் ஏனோ இண்டைக்கு செய்தியும் கேக்க மறந்து போட்டன்.'

'அதடி யாரோ பெட்டையள கொண்டே ஆமி கெடுத்துப் போட்டாங்கள் எண்டு சொல்லிக்கொண்டு பாலாலி ரோட்டில பதின்மூன்று ஆமிக்கு குண்டு வைச்சு கொலை செய்து போட்டாங் களாம். ஆமிக்காரர் அதுக்குப்பிறகு கண்விண் தெரியாமல் யாழ்ப்பாணம் எல்லாம் சுட்டுக் கொண்டு திரியிறாங்களாம். செத்த பிணத்தைக்கூட சனம் எடுக்காமல் தெருத் தெருவா கிடக்குதாம்.'

'எங்களுக்கு கேடுகாலம் தொடங்கீட்டுதண,' என்ற தேவனின் அம்மா கவலையில் இடிந்து போய் இருந்தா.

'ம்... இனி என்னென்ன நடக்குமோ? உங்க தெருப்பக்கம் வாத்தியாரை போகவிடாத. சுட்டுக்கிட்டுப் போடுவாங்கள்.'

'நேவியும் அப்பிடிச் செய்வானே?'

'இனி அவங்கள் நேவி, ஆமியெண்டே பாக்கப் போறாங்கள். சிங்களவன் இல்லாட்டி தமிழன் எண்டுதானே பாப்பான். அதுதானே நாயளச் சுட்டுத் தள்ளுறமாதிரி சுட்டுத் தள்ளுறாங் களாக்கும். பண்டத்தரிப்பு சந்தைக்கேயே கனபேர் செத்துப் போச்சினமாம்.'

'என்ன சொல்லுறாயண?'

'ஓமடி உள்ளத்தான் சொல்லுறன். இவர் குமாரசாமி சந்தைக்குப் போனவராம். சனங்கள் வியாபாரத்தில் மும்முரமாய் இருக்க அவங்கள் திடீரெண்டு கண்மண் தெரியாமல் றக்கில இருந்து சுட்டுக்கொண்டு வந்து இருக்கிறாங்கள். சூடுபட்டு சனங்கள் எல்லாம் துடிச்சு துடிச்சு விழுந்துச்சுதுகளாம். சுடுபட்டு செத்து விழுகிறத எங்கட சனம் இதுக்கு முதல் கண்டதுகளே? இல்லைத்தானே? பிறகென்ன? எல்லோரும் மரம் மாதிரி விறைச்சுப்போய் நிண்டுகொண்டே இருந்ததுகளாம். குமாரசாமி புத்தியா விழுந்து படுத்திட்டாராக்கும். பிறகு அவங்கள் போனபிறகு இரத்தத்தோட இவரும் வேறு சில சனங்களுமாய் ஒழுங்கையளுக்கு ஊடாக நடந்து புன்னா லைக்கு வந்திருக்கினம். பிறகும் பாலத்தால வரப் பயந்து

கடலுக்கால நடந்து வந்தவையாம். இப்ப கோடையெண்டதால தப்புத் தண்ணிதானே... அது அவைக்கு வசதியாப் போச்சுது. ரோட்டில அவங்கட வாகனங்களைத் தவிர வேற ஒண்டையும் கண்ணில காணக் கிடைக்கேல்லையாம்.'

'உங்க காலமையில வேலைக்கும் ரியூஷனுக்கும் நிறையச் சனம் எல்லே போயிருக்கும்?'

'ஓமடியாத்தை... போனவையில கனபேர் வரேல்லையாம். என்ன நடந்தது எண்டு தெரியாமல் உங்க சனம் ஏம்பலிச்சு திரியுதுகளடி.'

'இவன் தேவன் கூட ரியூஷனுக்குப் போகோணும் எண்டு வெளிக்கிட்டவன். தேப்பன்தான் தேவையெண்டாத் தான் சொல்லித்தாறன் எண்டு தடுத்துப் போட்டார். இல்லாட்டி நாங்களும் இண்டைக்கு உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டுதான் இருந்திருக்கோணும்.'

'உங்க ரியூஷனுக்குப் போன பெடியளை பஸ்ஸால இறக்கி நிரைக்கு விட்டுச் சுட்டவங்கள் எண்டு ஒரு கதை அடிபடுகுது. சனம் பயத்தில குடலைக் கையில பிடிச்சுக் கொண்டு திரியுதுகள். இனி இனித்தான் மெதுவா உண்மை தெரியும்.'

செல்லம்மா மாமி அன்று தேவனின் அம்மாவோடு ரேடியோ கேட்டுக் கேட்டு அதிகநேரம் கதைத்துக்கொண்டு இருந்தா. தேவன் மெதுவாக பிள்ளையார் கோயிலின் பின் வீதிக்குச் சென்றான். அங்கு பலர் ஒளிந்து நின்று எத்தனை ஜீப் போய் வருகிறது என எண்ணிக் கொண்டு இருந்தனர்.

நேரம் போகப் போக தேவனின் பாடசாலையில் இருந்து ரியூஷனுக்குச் சென்ற பலரை இராணுவம் தனது கொலை வெறிக்குப் பலியாக்கி இருந்தது தெரிய வந்தது. அதில் ஒரு மாணவனின் உடல் ஊருக்குள் எடுத்து வரப்பட்டிருந்தது. அடுத்தநாள் அவனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தேவனும் சென்றிருந்தான். தேவனால் அவனைப் பிணமாகப் பார்க்க முடியவில்லை. இரத்த வாடையும் சென்ட்டும் சேர்ந்து பிணத்தில் இருந்து வந்த ஒரு நாற்றம் தேவனுக்கு... அந்த நாற்றம்

நிரந்தரமாய் அவனின் மூக்கில் ஒட்டியதாய் இடைவிடாது பின்பு தொடரத் தொடங்கியது.

அடுத்து வந்த நாள்களில் நேவி ஜீப்புகளின் உறுமலே ஊரிலே கேட்டுக் கொண்டு இருந்தது. தமிழருக்கு மாத்திரமான ஊரடங்குச் சட்டத்தை காரைநகரிலும் அவர்கள் அமுல்படுத்தினர். ஊரெல்லாம் மரண வீடாகியது. அழுகை சத்தமே கேட்காத செத்த வீடுகள் கொண்டாடப்பட்டன. உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்கின்ற தகவலே இல்லாது ஆயிரம் ஆயிரம் வியாபாரக் குடும்பங்கள் திகிலில் உறைந்து போய் இருந்தன. சி ங்கள தேசங்களை நம்பி இருந்த சிறு தீவுக்கு, பதின்மூன்று ஆமியைக் கொலை செய்து, விதவைகளின் நீண்ட பட்டியல் முதன்முதல் பரிசாகக் கொடுக்கப்பட்டது. அந்த விதவைகளின் கதறல் அடங்காது ஊரில் நீண்ட காலமாய் ஒலித்துக் கொண்டு இருந்தது.

சில காலத்தில் தப்பி இருந்தவர்களும் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர். மனதை உருக்கும் அந்தக் காட்சி இளைஞர்களைக் கொதிக்க வைத்தது. பதுங்கித் திரிந்த இயக்கங்கள் வெளிப்படையாக இயங்கத் தொடங்கின. ஊர் பாடசலையில் மாணவர்கள் தொகை கூடியிருந்தது. சிறிது காலத்தில் அந்தத் தொகை மீண்டும் காணாமல் போய் இருந்தது. சிங்களவனிட்ட உழைக்கிறதை இங்கு உழைக்க முடியுமா எனக் கேள்வி கேட்டவர்கள் காயங்கள் ஆறமுதலே சிங்கள நாடு நோக்கி புறப்பட்டு இருந்தனர். மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் இனிச் சிங்களநாடே வேண்டாம் என ஊரோடு தொழில் பார்க்கும் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

ரகு மிகவும் நகைச்சுவையாகப் பேசுவான். அவன் பேச்சு தேவனுக்கு மிகவும் பிடிக்கும். அவன் நகைச்சுவையாகப் பேசு வதை ரசித்த தேவனால் அவனது எண்ணங்களை இலகுவில் படிக்க முடியவில்லை. பிள்ளையார் கோயிலுக்கு வரும்போது அல்லது வாசகசாலைக்கு வரும்போது அவனோடு கதைக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. எந்தப் புற்றினுள் எந்தப் பாம்பு? எவரால் இலகுவில் அறிந்திட முடிகிறது. இவ்வாறு தேவன் எண்ணிக் கொள்வான்.

ரகுவோடான நட்பு இப்போது மிகவும் விருத்தி அடைந்துள்ளதாக தேவன் எண்ணிக் கொண்டான். அதன் நன்மை தீமையைத் தேவனால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. தேவனை மெதுவாகத் தனது காரியத்துக்குப் பயன்படுத்த வேண்டுமென ரகு மிகவும் உன்னிப்பாக இருந்தான். காலத்தின் கட்டாயம் என்பதைவிட எண்பத்தி மூன்றாம் ஆண்டுக் கலவரமும் அரசாங்கத்தின் கண்மூடித்தனமான அராஜகமும் தமிழ் இளைஞர்களை வன்முறை என்னும் கடலில், இயக்கம் என்னும் துடுப்பில்லாத கட்டுமரத்தை நம்பி, திசை தெரியாது பயணிக்க வைத்தன.

எண்பத்தி மூன்றாமாண்டு கல்வி பொதுத்தராதரப் பரீட்சையில் சித்தி அடைந்தபின்பு உயர்தர வகுப்பிற்காய் இந்துக் கல்லூரியில் தேவன் சேரவேண்டியதாயிற்று. கலவரத்தின் சுவடுகள் பசுமையாக இருந்த காலத்தில் இயக்கம் என்னும் கட்டுமரமேறப் பலர் தயாராக இருந்தனர். இயக்கங்களும் இந்தச் சந்தர்ப்பத்தை கச்சிதமாகப் பயன்படுத்திக்கொண்டு, ஊதிப் பெருக்கத் தயாராகினர்.

ரகு அன்று தேவனை டிஸ்பென்சரிக்குப் பின்னால் இருக்கும் சேர்ச்சுக்கு வருமாறு கூறியிருந்தான். புளொட் (PLOT) எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கொள்கை விளக்கக் கூட்டம் அங்கு நடைபெறும் எனவும், அது மிகவும் முக்கியமானது என்றும் கூறியிருந்தான். அங்கே அமைப்பாளரையும் சந்திக்கலாம் என்றும் சொல்லி வைத்தான். அமைப்பாளர் என்றால் என்ன பதவி வகிப்பவர் என்பதை தேவனால் உறுதியாக இனம் கண்டு கொள்ள முடியவில்லை. இயக்கத்தில் ஏதோ ஒரு முக்கியமானவராய் இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டான். இவர்களுக்கெல்லாம் பின்னாளில் பிள்ளைபிடிகாரர் என்கின்ற பட்டம் மக்களால் வழங்கப்பட்டு, இவர்களைக் காணமுதல் ஓடியொளியும் காலம் எல்லாம் வரும் என அவன் அப்போது கனவிலும் எண்ணவில்லை.

தேவன் அன்று தன்னை அறியாத ஒரு பரபரப்பில் மூழ்கி இருந்தான். சில காலங்களுக்கு முன்பு மின்னல் வேகத்தில் பாடசாலையில் நோட்டீஸ் எறிந்துவிட்டுப் போனவர்களின் ஞாபகம்

வந்தது. பாடசாலையில் அன்று முழுவதும் அவர்களைப் பற்றிய கதையாகவே இருந்தது. அவர்கள் அன்று எல்லோரது மனதிலும் கதாநாயகர்கள் ஆகி இருந்தார்கள். அதுவும் பெண்கள் அவர்களை நாயகர்களாகப் புகழ்ந்தபோது மீசை முளைக்காதவர்களுக்கே மிளகாய்ப் பொடி பூசிய எரிச்சல் உண்டாகியது. அதை நிவர்த்தி செய்யத் தாங்களும் ஒருநாள் நாயகர்கள் ஆகவேண்டும் எனப் பலர் எண்ணினார்கள். அந்த ஆசைக்கு வழிதெரியாது பள்ளி இரைச்சலில் அது பலருக்கு காலப் போக்கில் மறந்து போயிற்று.

கலவரத்தின் பின்பு பலருக்கும் அந்தக் கனவுகள் விழித்துக் கொண்டன. இலங்கை அரசு அணைந்து போகும் நெருப்பை ஊதிப் பெரிதாக்கும் செயலில் இறங்கி இருந்தது. அதன் விளைவு விபரீதமான வருங்காலத்தை உருவாக்கும் என்பதை அது மறந்து போய்விட்டது. அதற்கான அபாய வாசல்களாக இயக்கங்கள் புற்றீசலாய்க் கிளம்பி இருந்தன.

நேவிக்காரன் ஆலடிச் சந்தியில் மூஞ்சையைத் தேய்த்த வடுக் காயாது, சிதல் பிடித்து வலிப்பதாக தேவனுள் ஒரு மன உளைச்சல் தொடர்ந்தது. அந்த அவஸ்தையில் இருந்து விடுபட இப்போது ஒரு வழி திறந்திருப்பதாக அவன் நம்பினான். ஒருநாள் தானும் போராளி என்னும் கனவில் அடிக்கடி அவன் மிதக்கலானான்.

பாடசாலை முடிந்தபின்பு சைக்கிளை எடுத்துக்கொண்டு தேவன் அவசர அவசரமாக சேர்ச்சை நோக்கி ஓடினான். தேவன் இதற்கு முன்பு சேர்ச்சுக்குள் போனதே இல்லை. இதுதான் அவனது முதல் தேவாலயப் பிரவேசமாக இருந்தது. ஒருவித புனிதத்தோடான அமைதி அங்கே பரவி இருந்தது. என்றாலும் தேவனுக்கு ஏதோ நெஞ்சை முட்டுவதான உணர்வு. சிறிய பயம் ஒன்று பிடித்திழுப்பது போன்ற ஒரு கலக்கம்.

அஹிம்சை பேசிய யேசுநாதரின் ஆலயத்தில், ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் கொடு எனப் போதித்த மகானின் தொழுவத்தில், அடிக்கு அடி, கண்ணுக்கு கண் என்கின்ற புதுவேதம் போதிக்கப் பட்டது.

உரிமைகள் கொடுக்கப்படுவதல்ல, எடுக்கப் படவேண்டியவை என்கின்ற கருத்து முன்னிலைப்படுத்தப்பட்டது.

முற்போக்குவாதிகளான ஜேவிபி உடன் சேர்ந்து ஒட்டுமொத்த புரட்சியை இலங்கையில் உருவாக்கி, அதன் மூலம் தமிழரின் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்கின்ற கனவு விமரிசையாக விஸ்தரிக்கப்பட்டது. சாதியொழிப்பு சமதர்மம் பற்றி விலாவரியாக விளங்கப்படுத்தப்பட்டது.

'இந்தப் போராட்டத்தில் எங்களின் பங்களிப்பு என்ன?' என ஒருவன் கேட்க அதற்கு அமைப்பாளர் சொன்னார்:

'இளைஞர்கள்தான் எங்கள் போராட்டத்தின் நாடி... சமதர்மம் எங்கள் அசையாத கொள்கை. மாக்ஸியப் பாதையில் போவதே எங்கள் போராட்ட வழி. அஹிம்சைப் போராட்டங்கள் தோற்றுப் போன இந்த நாளில், இனி ஒரு புதிய வழி சமைக்க வேண்டும். அந்த வழி, ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் பிறக்க வேண்டும். அது இளைஞர்கள் கையில்தான் தங்கி உள்ளது. உங்கள் உத்வேகத்தால்தான் எங்கள் தாய் நாடு இனி விடுதலை பெறவேண்டும்.'

'நீங்கள் ஜேவிபியோடு சேர்ந்தால் தனி நாடு என்பது உங்கள் நோக்கமல்ல... தனி நாடு இல்லாமல் எப்படி நாங்கள் நிம்மதியாய் வாழ முடியும்? விரும்பா பெண்டாட்டியோடும் குடித்தனம் நடத்தலாம் என்கிறீர்கள். நாங்களோ விவாகரத்துக் கேட்க வேண்டும் என்கிறோம்' என ஒருவன் கேட்டான்.

'தனிநாடு சிலவேளை இந்தப் பிரச்சனைக்கு நல்ல தீர்வாய் இருக்கலாம். ஆனால் எங்களைச் சுற்றி இருக்கிற ஆதிக்க சக்திகளை எண்ணி, எங்கள் மக்களின் அதிக இழப்புக்களைத் தவிர்த்து, சகோதர இனங்களுடன் கைகோர்த்து, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வுக்கு அரசைக் கொண்டு வருவதுதான் எங்கள் எண்ணம். அதை முற்போக்குவாதிகளுடன் சேர்வதால் இலகுவாகச் சாதித்துக் கொள்ளலாம். தனிநாடு என்று கூறிக்கொண்டு ஒரு இனத்தை அழிவுப்பாதையில் இட்டுச் செல்ல எங்களுக்குச் சுயபலம் போதாது இருக்கலாம். நடைமுறைச் சாத்தியம் பற்றிய எங்கள் கணிப்பு பிழையாகும் என எண்ணவில்லை. இது மக்கள் போராட்டம். இங்கே அவர்களின் ஒவ்வொரு இழப்பும் விலைமதிக்க முடியாத தியாகங்கள். இந்தத் தியாகத்தைக் காட்டி ஆள்சேர்ப்பதோ,

அல்லது அதற்காகவே தாக்குதல் செய்வதோ எங்கள் நோக்க மல்ல. அது நீண்ட காலத்திற்கு மக்களின் ஆதரவைப் பெற்றுத் தந்து விடாது. பெற்றுத் தந்தாலும் நிதானமான போராட்டமாய் அது அமையாது. எங்கள் விருப்பமும் தனி நாட்டை நோக்கியது தான். அதனால்தான் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்று பெயர் வைத்துள்ளார்கள். அதற்காக மாற்றுத் தீர்வொன்றை அடியோடு மறுப்பவர்களும் அல்ல,' என்றார் பொறுப்பாளர்.

கேள்வி மறுமொழியென நேரம் கரைந்து சென்றது. தேவனால் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. எல்லாமே குழப்பமாக இருந்தது. நாடே குழம்பிப் போயிருந்த நேரத்தில், தேவனால் நிதானமாகச் சிந்திக்க முடியவில்லை. அம்மாவை எண்ணித் தேவன் அதிகமாகக் கலங்கிப் போய் இருந்தான்.

சில நாள்கள் தேவன் ரகுவைச் சந்திக்கவில்லை. நாட்டின் நிலைமை, நேவியால் பட்ட அவமானம், வருங்காலத்தில் நாங்கள் நாட்டுக்காக என்ன செய்தோம் என்கின்ற கேள்விக்குப் பதில், என அவன் மனதில் விவாதப் பிரதிவிவாதங்கள் நடை பெற்றுக் கொண்டு இருந்தன.

ரகு அன்று வாசகசாலைக்கு வந்திருந்தான். தேவனுக்கு அவனுடன் பேசுவதா விடுவதா என முதலில் புரியவில்லை. பின்பும் முயற்சி இல்லாதவன் வெற்றி பெறமுடியுமா என்கின்ற எண்ணம் தோன்ற மெதுவாகச் சென்று அவனுக்கு அருகில் இருந்தான்.

தேவனைப் பார்த்த ரகு, வீரகேசரியை வாசிப்பது போல பிடித்தவண்ணமே, 'என்ன தேவன் சத்தத்தையே காணேல்ல?' என்றான்.

'ச்... நான் தனிப்பிள்ளை. விட்டிட்டு இயக்கம் எண்டு ஓடினா அதுகள் உயிரை விட்டிடுங்களோ எண்டு பயமா கிடக்கிறது.'

'நானும் கிட்டத் தட்ட அப்பிடித்தானே?'

'அப்ப நீங்களும் வாறியளே?'

'நானும் வரத்தான். அதுக்கு முதல் எனக்கு இங்க நிறைய வேலை இருக்கு. அதை முடிச்சுக் கொண்டு நிச்சயமா வருவன்.'

'நீங்களும் வந்தா நல்லா இருக்கும்.'

இவனெல்லாம் வருவானா என்கிற கேள்வி தேவனுக்கு முதன் முதலில் மனதில் எழுந்தது.

'நீங்க முதல்ல போங்க. நான் நிச்சயமா வருவன்.'

'நான் இன்னும் முடிவுக்கு வரேல்ல.'

'அது உன்ர இஷ்டம்... ஆனா நாட்டில இருக்கிற நிலையில எப்ப எங்க சுடுவாங்கள் எண்டு தெரியாது.'

'அதுவும் உண்மைதான்.'

'சும்மா தெருவில சூடுவேண்டிச் சாகிறத்துக்கு நானோ நீயோ தயாரோ?'

'இல்ல...'

'யாரும் அதை விரும்ப மாட்டினம். அப்பிடி நடக்கிறதுக்கு முதல்ல நாங்கள் பிரயோசனமான இடத்துக்குப் போய்ச் சேர்ந்தி டோணும்.'

'ம்... நீங்க சொல்லுறது சரிதான். எப்ப இனி அடுத்த குறுப் போகுது?'

'எனக்கும் சரியாத் தெரியாது. கேட்டுத்தான் சொல் லோணும்.'

'அவசரம் இல்லை. ஆறுதலாக கேட்டுச் சொல்லுங்க... நானும் நல்லா யோசிக்கோணும்.'

'யோசி... வருங்காலத்தை நிச்சயிக்கப்போறது நாங்கள் தானே. அதில கோட்டை விடக்கூடாது.'

'ம்...'

பிள்ளையார் கோயில் மணி அடித்தது. தேவன் மெதுவாக எழுந்து கொண்டான்.

'என்ன போப்போறியே?'

'ம்... கோயிலுக்கு போகோணும்...'

'சரி சரி.'

பிள்ளையாரின் கோபுரம் நிமிர்ந்து நின்றது. இதைக் கட்டும்போது தேவன் எத்தனையோதரம் கல்லும் மண்ணும் கப்பியில் இழுத்துக் கொடுத்திருப்பான். அந்த உழைப்பைச் சன்மானமாகப் பெற்று இன்று அது நிமிர்ந்து விறைப்பாக நின்றது. யார் போனாலும் நான் இங்கேயே இருப்பேன் என்று பிள்ளையார் தனக்குச் செய்தி சொல்வதாகத் தேவனுக்குத் தோன்றியது.

'எங்களையேன் சோதிக்கிறாய்?' என்று பிள்ளையாரைக் கேட்ட தேவன் யோசனையோடே கோயிலை நோக்கி நடந்தான்.

22

அற்ப மனிதனின் அடங்கா ஆசையால் ஏற்படும் அழிவை எண்ணி ஆதவன் தூங்கிக் கிடப்பதில்லை. அவனது மன்மத விளையாட்டில் நித்தம் மயங்கிக் கிடக்கிறாள் இந்தப் பூமித் தாய். அவன் .எழுச்சியில் குதுகலமும் அவன் வீழ்ச்சியில் துக்கமுமாய் இந்தப் பூமித்தாய் நித்தமும் துவண்டும் துளிர்த்தும் தனது வாழ்வை விருத்தி செய்கிறாள்.

நாள்கள் மாறி வெள்ளம் புகுந்த ஆறாக வேகமெடுத்து ஓடிக் கொண்டு இருந்தன. நாடு பாதை மாறிய வழிப்போக்கனாக, போகவேண்டிய பாதையை விட்டு வேறு திசை நோக்கி வெகு தூரம் பயணித்துக் கொண்டு இருந்தது. தமிழ் இளைஞர்கள் எல்லாம் பயங்கரவாதிகள் எனச் சிங்களவர்களால் பார்க்கும் படியாக அரசியல் விமர்சனம் செய்யப்பட்டு வந்தது. அதற் கேற்ப அரச இயந்திரம் வன்முறையை அவர்கள்மேல் தாராளமாகப் பாய விட்டது.

அன்று காலை மிகவும் சிந்தனையுடன் தேவன் பல்துலக்கி முடித்தான். இவ்வளவு சந்தோஷமாய் உள்ள தனது குடும்பத்தை யும், அழகிய கிராமத்தையும், நண்பர்களையும் விட்டுப்

பிரியப் போகும் கவலை அவனை அல்லற்பட வைத்தது. தனிமரமாக நிற்கப்போகும் அம்மாவை நினைக்க இதயம் வெடித்து குருதி கொட்டுவதான அவதி ஏற்பட்டது. தேவா தேவா எனப் பெருநம்பிக்கையோடு வாழும் அம்மா படப்போகும் துயரத்திற்காக, தான் பல பிறவிகள் எடுத்து சித்திரவதைப்பட வேண்டும் என அவனுக்குத் தோன்றியது. அம்மாவை விட்டுப் பிரியும் அநியாயத்தில் நாட்டுக்கு நான் ஏதாவது செய்தேன் என்ற நியாயம் பிறக்குமல்லவா? என அவன் ஆறுதல் அடைய முயற்சி செய்தான்.

ஓர் அநியாயத்தில்தான் இன்னொரு நியாயம் பிறக்க முடியுமா? இழப்பு என்பதும் மறுப்பு என்பதும் மனிதனைத் தீண்டக்கூடாத துருவங்கள். நித்தம் அது அவனைத் தீண்டும், வதை செய்யும்.

வேதனையின் ஒரு வடிகால் கண்களில் கண்ணீர்த் திவளை களாக... அறிந்தோ அறியாமலோ வெப்பமும் உணர்ச்சியும் அதனோடு சேர்ந்து வெளியேறுகிறது. அந்த வெளியேற்றத்தில் இன்று சிறிது நிம்மதியும் ஆறுதலும் அடைந்தான் தேவன்.

அன்று சனிக்கிழமை. 'எக்ஸ்றா' கிளாஸ் இருப்பதாய்க் கூறிக் கொண்டு தேவன் புறப்படத் தயாராகினான். அவனுக்கு தான் இனி உயிருடன் திரும்பி இங்கே வருவேனா என்கின்ற எண்ணம் தோன்றியது. தான் போவதைக் கடைசியாக அம்மா விடம் கூறிவிட்டுப் போவோம் என எண்ணி அம்மாவைத் தேடினான். அம்மாவைக் காணவில்லை. அம்மா அயல் வீட்டிற்குப் போயிருக்க வேண்டும் என எண்ணிக்கொண்டான். அவன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. அம்மா வந்தாலும் ஆயிரம் கேள்விகள் பிறக்கும் என்பது அவனுக்குத் தெரிந்தது.

தேவன் புத்தகப் பையில் சில உடுப்புகளைப் பதுக்கி வைத்திருந்தான். அம்மா வந்தால் அதனால் தொல்லை என்பது மேலும் புலனாயிற்று. புத்தகப் பையை அம்மா தடவிப் பார்த்தால்

குழப்பமாகிவிடும் என்பது தேவனுக்குப் புரிந்தது. தேவன் அதற்கு மேல் தாமதிக்க விரும்பவில்லை.

விறுவிறு என்று சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். பின்பு உள் ஒழுங்கைகள் வழியே ஆலடி நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இதயம் நெஞ்சுக்கூட்டைக் கிழித்துக் கொண்டு வெளியே வரும் அவஸ்தையை அவனால் உணர முடிந்தது.

பிரதான வீதியில் ஏறுவதற்கு அவனுக்குப் பயமாக இருந்தது. அப்பாவோ அல்லது நெருங்கிய நண்பர்களோ பார்க்க நேரிடலாம் என்கின்ற அபாய அறிவிப்பு அவன் மூளையில் இடைவிடாது ஒலித்துக் கொண்டு இருந்தது. அவர்களிடம் அகப்பட்டால் திக்குமுக்காடும்படி கேள்வி கேட்பார்கள் என்கின்ற பயம் அவனை வாட்டியது. அவன் ஒழுங்கைகளின் வழியே பயணம் செய்தான்.

தேவனுக்குத் திடீர் அதிர்ச்சி காத்திருந்தது. அமுதன் தண்ணீர் 'வண்டிலுடன் எதிரே வந்து கொண்டு இருந்தான். அவன் தேவன் அருகே வந்தவுடன், 'எங்க சைக்கிளைத் தூக்கிக் கொண்டு போறா?' என்றான்.

'ஒண்டும் இல்ல. அம்மன் கோயிலடியில இருக்கிற ஒரு பிரண்டிட்டப் போறன். அம்மா கேட்டா கொஞ்ச நேரத்தில் வந்திடுவன் எண்டு சொல்லு.'

இதைச் சொல்லும்போது தேவனுக்கு அழுகை வந்து விட்டது. அதை அமுதன் அறியாதவாறு முகத்தைத் திருப்பி கண்களைத் துடைத்துக் கொண்டான்.

அமுதன் அதைக் கவனித்து விட்டான்.

'என்னடா அம்மாவோட சண்டை பிடிச்சியே?' என அப்பாவியாகக் கேட்டான்.

'சீ அப்பிடி ஒண்டும் இல்லை,' தேவன் அவசரமாகப் பதிலளித்தான்.

'சரி சரி இருட்டுப்படமுதல் வீட்ட வந்து சேரு. இருட்டுப்பட்டா நேவிக்காரர் எந்த ஒழுங்கேக்க படுத்துக்

கிடக்கிறாங்கள் எண்டு தெரியாது. அவங்களிட்ட ஆப்பிட்டா எலும்பு முறிச்சுப் போடுவாங்கள்.'

'அது எனக்குத் தெரியாதே? ஏற்கனவே அனுபவப் பட்டவன்தானே.'

'கவனமாகப் போட்டுவா...'

'நீங்களும் கவனமாய் வண்டியை ஓட்டிக்கொண்டு போங்கோ அண்ண.'

வண்டி வேகமெடுத்து தேவனைப் பின்தள்ளிச் சென்றது. தேவன் அப்படியே நின்று, போகும் வண்டிலையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றான்.

வாழ்வின் ஒரு சகாப்தம் முற்றுப் பெறுவதான அங்க லாய்ப்பு கிணற்றில் இருந்து வரும் குரலாக அடிமனதில் ஒலித்துக் கொண்டு இருந்தது. ஒற்றைவழிப்பாதையில் அடுத்த சகாப்தத்திற்காக பயணத்தைத் தொடங்குவதான திணறலில் மூச்சு முட்டியது. இந்தத் திணறலை ஒரு தியாகமாய் நினைத்துக் கொள் என்கின்ற மனதின் கட்டளையை அவன் ஏற்றுக் கொண்டான். வாழ்வில் பல சகாப்தங்களா அல்லது பல சகாப்தங்களில் ஒரு வாழ்வா? தேவனுக்கு சரியாகப் புரிய வில்லை. குருவிக் கூடுகளாய் வாழ்ந்த அமைதியான வாழ்க்கை மாத்திரம் இனி தொடரப் போவதில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. தேவனுக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்கள் திரையிட்டுக் கொண்டன. அவன் தனது பயணத்தைத் தொடர தொடர்ந்தும் சைக்கிளை பலம் கொண்டு உழக்கினான்.

தேவன் தனது நண்பன் வீட்டை ஒருவாறு சென்று அடைந்தான். சைக்கிளை ஏன் இங்கு விடுகிறாய் என ஏதாவது கேட்பார்களோ என ஒருவித தயக்கம் அவனிடம் இருந்தது. துணிவை வரவழைத்துக் கொண்டு உள்ளே போனான். வளவினுள் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டின் அழைப்பு மணியை அழுத்தினான்.

ரவியின் தங்கை சந்தன நிலவாக, காந்தக் கண்களோடு வந்து நின்றாள். அவளின் மெல்லிய உதடும் துடிக்கின்ற விழிகளும்

கட்டுடல் அழகும் பச்சை மஞ்சள் நிறமும் எந்த இதயத்தையும் துளைத்தெடுக்கும். அழகுதானே காதலென்னும் சுவர்க்க வாசலுக்கான திறவுகோல். தேவன் ஒரு கணம் தடுமாறினான். பின்பு தன்னைச் சமாளித்த வண்ணம், அவளைப் பார்க்கமுடியாது பார்த்தான்.

'ரவி நிற்கிறானோ?' எனக் கேட்டான்.

'இல்லை. அண்ணன் வெளியில போட்டாரே. ஏன் என்ன விஷயம் எண்டு எனக்கு சொல்லக்கூடாதே?' எனக் குழைந்தாள்.

அவளின் குழைவும் நெளிவும் தேவனின் இதயத்தை உருக்கி ஊனோடு சேரவைப்பதான திரிசங்கு நிலையைத் தந்தது. அவன் பெரும் பாடுபட்டு சமாளித்த வண்ணம், 'ஐயோ அப்பிடி ஒண்டுமில்லை. உங்கட வீட்டுக்குள்ள சைக்கிளை விட்டுட்டு இப்ப யாழ்ப்பாணம் போறன். பின்னேரம் வந்து சைக்கிளைத் திரும்ப எடுத்துக் கொண்டு போறன். இதை ரவீட்ட சொல்லி விடும்.'

'என்ன கள்ளப் படம் பார்க்கப் போறிங்களாக்கும்? என்னையும் கூட்டிக் கொண்டு போகலாம் தானே?'

'ஐயோ நான் வேற ஷயமாப் போறன்.'

'அப்ப வெளியூர் பெட்டையளா பார்க்கிறீங்களாக்கும்?'

'ஐயோ உம்மோட கதைக்கேலாது. நான் போட்டுவாறன்.'

'ஓ தாராளமாய் போட்டு வாங்க. எனக்கு என்ன வேண்டியருவியள்?'

'பொரியுருண்டை வேண்டியாரவே?'

'ம்க்கும்... வளர்ந்ததுதான் மிச்சம்.'

'நான் வாறன்.'

'கவனமாகப் போட்டு வாங்க.'

இவளின் குழைவு பற்றித் தேவனுக்கு நன்கு தெரியும். உண்மையிலேயே கூட்டிக்கொண்டு ஓடவேண்டும் எனச் சில வேளைகளில் தேவன் நினைத்தது உண்டு. அவள் அழகு,

அவள் நளினம் இங்கு வரும்போதெல்லாம் இதயத்தை ஏதோ செய்வதான உணர்வில் அல்லாட வைத்துவிடும். அவன் கண்கள் அவள் பொங்கும் மார்பையும், பூவழகு வதனத்தையும் களவு களவாய் பார்த்து இரசிக்கும். அப்படிப் பார்க்கும்போது உடம்பின் ஒவ்வொரு ரோமமும் அவனில் உயிர்பெற்று நிமிர்ந்து நிற்கும்.

இவன் பார்ப்பதை உணர்ந்தும், நீ பாரென அவள் நிமிர்ந்து நிற்பது இவனைக் கிறங்கடிக்கும். தேகம் சூடேற செய்வ தறியாது நிற்பான் தேவன். ஆசை என்னும் ஆற்றல் மாரி வெள்ளமாய் ஓடிவிட முடியாது ஆயிரம் தடைகள் இடை மறித்து நிற்கும். அம்மா இவளை மருமகளாய் ஏற்றுக் கொள்வா என்கின்ற கற்பனைகூட செய்ய முடியாதபோது தேவனுக்கு உயிர் பிரிகிற வேதனை உண்டாகும். ரவியே இதை ஒத்துக் கொள்வானா? இந்த உலகம் அநீதியானது. அது நீதியை அழித்து அநீதியோடு உல்லாசம் போவது. அவன் எண்ணிக் கொள்வான்.

சமுதாயம் கண்ணுக்குத் தெரியாத முள்வேலியிட்டு, கவன மாய்ப் பார்த்துக்கொண்டு இருக்கிறது. மனதில் எண்ணுவதைக் கண்டுபிடிக்கும் இயந்திரம் இருந்தால் இன்றே தேவனுக்கு தீர்ப்புக் கிடைத்திருக்கும்.

தேவன் படலையைச் சாத்திவிட்டு வெளியே வந்தான். மெதுவாக தெருவில் இறங்கி நடந்தான். நண்பனின் வீட்டிற்கும் அந்த பஸ் தரிப்பிற்கும் ஐம்பது மீற்றர் தூரம்தான் இருக்கும். அந்தத் தூரத்தைக் கடந்து தரிப்பில் வந்து நின்றான் தேவன். வெய்யில் இன்று வசமாய் வாட்டிக்கொண்டு இருந்தது. சூரியன் பெருத்து ஒருநாள் பூமியை விழுங்குமா? அது இன்றே நடை பெறுமா? சூரியனின் கதிர்கள் இந்தப் பூமியில் அநியாயத்தை அழிக்குமா?

'என்ன தேவன் நான் வந்ததையும் கவனியாமல் கடுமையா யோசிக்கிறீர்? எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறீர்?' என மாலா சைக்கிளில் நின்றபடி தேவனைத் துழாவினாள். மாலா தேவனோடு இப்போது பொட்னி சூலோஜி ரியூஷன் எடுக்கிறாள். தேவன் வகுப்பிற்கு வந்தால் சிலவேளைகளில் அவளுக்கு உதவி கிடைக்கும் என்கின்ற அக்கறை.

'அது சரி எங்கயோ தூரப் பயணம் போல இருக்கே?' என மீண்டும் கேட்டாள்.

'ஓ யாழ்ப்பாணம் போறன்.'

'ஏன் இங்க வந்து பஸ் பிடிக்கிறீங்க?'

'இல்லை ரவியும் வாறன் எண்டான்... அதுதான் இங்கே வந்தனான்.'

'அப்ப இன்றைக்கு ரியூஷன் இல்லையே?'

'இல்லை நான் வரமாட்டேன்.'

'நானும் இண்டைக்கு லீவு எடுக்கலாம் எண்டுதான் இருந்தன். அப்ப மாஸ்ரரிட்ட சொல்லி இண்டைக்கு கிளாசை கட் பண்ண வேண்டியது தான்.'

'ஓ அது தான் நல்லது'

ஒப்புதல் கொடுக்கும் போதே பஸ் வந்து நின்றது.

'அப்ப நான் போயிட்டு வாறன் மாலா,' என்று கூறிக் கொண்டு பஸ்சிற்குள் தேவன் தாவி ஏறினான். உள்ளே சென்று கொண்டக்ரரிடம் ரிக்கெற்றை வேண்டிக்கொண்டு வெறுமையாய் இருந்த ஆசனத்தில் தேவன் போய் அமர்ந்தான். தேவன் பஸ்ஸில் இருப்பவர்களை ஒருமுறை நன்கு பார்த்தான். இனி எப்போதும் யாருக்கும் பயப்பட வேண்டி வரலாம். யார் இதில் சிஐடி யார் இதில் சாதாரண மனிதன் என்பதை இனங்காண வேண்டும். அதற்கு பூதக்கண்ணோ ஞானக்கண்ணோ இருந்து பிரயோசனம் இல்லை. கிரிமினல் பார்வை வேண்டும். அது தன்னிடம் இருக்கிறதா என்பதில் தேவனுக்குச் சற்று தடுமாற்றம் ஏற்பட்டது.

தேவனுடன் பஸ்ஸிலே பிரயாணம் செய்யும் இருவர் மீது அவனது கண்கள் நிலைகுத்தி நின்றன. அவர்கள் இருவரும் எங்கோ வெகுதூரம் செல்கிறார்கள். அதை அவர்கள் கொண்டு செல்லும் துணிப்பையை வைத்து தேவன் ஊகித்துக் கொண்டான். எங்கு போகிறார்கள்? என்னோடு இவர்களும் வருகிறார்களா? ஆராய்ச்சி, கேள்வியாக அங்குமிங்குமாகப் பாய்ந்தது.

கொண்டக்ரர் 'வலந்தலை' என்றார். தேவன் பரபரப்
படைந்தான். அவன் இறங்க வேண்டிய முதல் தரிப்பு அதுவாய்
இருந்தது. அவன் துடித்துப் பதைத்துக்கொண்டு பஸ்ஸில்
இருந்து இறங்கினான். சில சாரதிகள் அவசரத்தில் இறங்க முதல்
இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள். தேவனுக்கு அப்படிப்
பட்ட அநுபவம் ஏற்கனவே உண்டு.

தேவன் திரும்பிப் பார்த்தான். அவன் நினைத்தது சரியாக
இருந்தது. அந்த இருவரும் பஸ்ஸிலிருந்து தேவனோடு இறங்
கினார்கள்.

இவர்களுக்காக அமைப்பாளரும் இன்னும் ஒருவரும்
அங்கே காத்திருந்தனர். அவர்கள் ஐவரும் அந்த பஸ் தரிப்பிற்கு
முன் உள்ள தேநீர்க்கடைக்குச் சென்று ஆளுக்கு ஒரு நாற்காலி
யில் அமர்ந்து கொண்டனர். பின்பு அமைப்பாளர் சென்று
தேநீருக்கும் ஓடர் செய்தார்.

திரும்பி வந்த அமைப்பாளர் கதிரையை எல்லோருக்கும்
அருகாமையாக இழுத்துவிட்டு அதில் இருந்தார். பின்பு, மெதுவான
குரலில் பேசத் தொடங்கினார்.

'நாங்கள் எல்லாரும் முதலில ரவுனுக்குப் போறம். அங்க
ஒரு அமைப்பாளர் எங்களுக்காகக் காத்திருப்பார். அவர் உங்களை
மேற்கொண்டு கூட்டிக் கொண்டு போவார். இதில இருந்து எல்லா
நடைமுறைகளையும் விபரமாகக் கதைக்கேலாது. அது ஆபத்து
எண்டுறது உங்களுக்கே தெரியும்.'

சிறிது நேரம் அங்கு எதிர்பாராத அமைதி குடிகொண்டது.
எல்லோரும் தேநீர் அருந்துவதில் அக்கறை காட்டினர்.

பின்பு அமைப்பாளர் செருமிக்கொண்டே, 'புறப்படுவமே?'
என்றார்.

எல்லோரும் மிகுதியாக இருந்த தேநீரை மிகவிரைவாகப்
பருகிவிட்டு எழுந்து கொண்டனர். சிறிது நேரத்தில் யாழ்ப்
பாணம் போகும் மினி பஸ் வந்து நிற்க அதில் ஏறிக்
கொண்டார்கள்.

மினி பஸ் தாவடிச் சந்தியை நோக்கி வாயுவைக் கக்கிய
வண்ணம் சென்றது. இவர்கள் வார்த்தைகளைத் துறந்த

மௌனிகளாக ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டு இருந்தனர். பஸ் தனது இலக்கை நோக்கி தொடர்ந்தும் வீச்சாகப் போய்க் கொண்டு இருந்தது. அப்படி போய்க் கொண்டிருக்கும் போது எதிரே ஒரு மினி பஸ் வந்தது. இவர்கள் பஸ்ஸுக்கு அருகே அந்த மினி பஸ் வந்தவுடன், அது தனது வேகத்தைக் குறைத்தது. உள்ளே இருந்தவர்கள் செவியைத் தீட்டிக் கொண்டனர். என்ன புதினம் என்பதை அறிவதில் அவர்களுக்கும் அதீத அக்கறை. யன்னலூடே தலையை வெளியே நீட்டிய மினி பஸ் றைவர், எதிர்வாகனச் சாரதியை நோக்கி, 'என்ன விஷயம்?' எனக் கேட்டார்.

'ரவுன்னில தொகையா ஆமிகாரர் வந்து குமிஞ்சு நிற்கிறான்கள். இடைக்கிடை பயர் பண்ணுறமாதிரியும் சத்தம் கேட்குது. நீங்க இப்ப அங்க போறது உசிதம் இல்ல. பேசாமல் திரும்பிப் போறதுதான் புத்தி.'

எல்லோருக்கும் முதலில் எதிர்பாராத அதிர்ச்சியாக இருந்தது. பின்பு அது பயம் கலந்த ஏமாற்றமாக மாறியது. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது யாருக்கும் புரியவில்லை. எல்லோரும் உறைந்து போய் இருந்தனர். மினிபஸ் றைவர் தன்னை ஒருவாறு சுதாரித்துக் கொண்டு, உரத்த குரலில், 'நான் கண்ணை மூடிக்கொண்டு பஸ்ஸை ரவுனுக்கு இப்ப கொண்டு போகேலாது. அவங்கள் சுட வெளிக்கிட்டா யார் எவரெண்டு பார்க்காமல் சுடுவாங்கள். எதுக்கும் நாங்கள் புத்தியா நடக்கிறதுதான் உசிதம். இதில இறங்க விருப்பமானவை இங்கேயே இறங்கலாம். மற்றவை அப்படியே இருங்கோ. திரும்பிக் கொண்டே அவை அவையின்ர இடத்தில விடுகிறன். அதுதான் புத்தி' என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் தேவனுக்கு நெஞ்சு ஒரு கணம் திடுக்குற்றது. திரும்பிச் செல்வதா? அது எங்களை எவ்வளவு பாதிக்கும்? நிலைமை புரியாது இந்த றைவர் கதைக்கிறார் என மனதில் அவன் குமைந்தான்.

எல்லோரையும் சற்று ஊன்றிப் பார்த்துக் கொண்டே இருந்த அமைப்பாளர், திடீரென எழுந்து கொண்டார். நல்ல வேளையாக அமைப்பாளருக்கு நிறையப் பதில் திட்டங்கள் இருந்திருக்க வேண்டும். 'நாங்கள் இங்கயே இறங்குவோம்,'

என்று கூறிவிட்டு, யாரையும் எதிர்பார்க்காது அவர் இறங்கினார். அப்பா அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு திரியும் குழந்தைப் பிள்ளைகள் போல, பதறி அடித்துக்கொண்டு தேவனும் மற்றவர்களும் அவருடன் இறங்கினார்கள்.

தாவடிச்சந்தி அதன் களையிழந்து மௌனத்தில் மூழ்கி இருந்தது. அமைப்பாளர் இவர்களை மரம் ஒன்றின் கீழ் இளைப்பாற விட்டார். பின்பு அங்கு நின்ற சில இளைஞர்களை நோக்கிச் சென்றார். சிறிது நேரம் அந்த இளைஞர்களோடு கதைத்துவிட்டு மீண்டும் திரும்பி வந்தார். திரும்பி வரும்போது அவ்விளைஞர்களுள் ஒருவனும் அமைப்பாளரோடு சேர்ந்து வந்தான்.

அவர்கள் இருவருமாகத் தேவன் உள்பட எல்லோரையும் அழைத்துச் சென்று அருகில் உள்ள வாசகசாலையில் விட்டனர். பின்பு அமைப்பாளர், 'பேப்பரை எடுத்து வாசித்துக் கொண்டு இருங்கோ. நான் கொஞ்ச நேரத்தில திரும்பி வந்திடுவன்,' என்றார்.

அமைப்பாளர் மீண்டும் எந்தப் பதிலையும் எதிர்பாராது அந்த இளைஞனின் சைக்கிளில் ஏறியமர்ந்து கொண்டார். அது மெதுவாக வேகமெடுத்தது.

எதிர்பாராத திருப்பத்தால் அமைப்பாளருக்கும் ஏகப்பட்ட அதிர்ச்சி எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

தேவனுக்கு ஆமிக்காரன் வந்தால் என்ற பயம் திடீரென வந்து முன்னே நின்றது. தெரியாத ஊர் ஒன்றில் வைத்துப் பிடித்து பூசாவுக்கு அனுப்பிட்டால், யாருக்கும் எதுவும் தெரியாது போய்விடும். எந்தச் சாட்சியமும் இல்லாது, இருந்த இடம் தெரியாது எங்கோ அடைபட்டுக் கிடக்க வேண்டி வரும். பாவம் அம்மா. தேவன் வருவான் தேவன் வருவான் என்று நித்தமும் படலையில் கிடக்க, நான் பூசாவிலோ அல்லது முகவரியில்லாது மணல் மேட்டிற்குள்ளேயோ புதைந்து கிடக்கப் போகிறேன் எனத் தேவன் திசை தெரியாத கவலையில் திடீரென மூழ்கிப் போனான்.

தேவனுக்கு வாசகசாலையில் இருப்பது நெருப்பின் மேல் நர்த்தனமாடுவது போன்று இருந்தது. ஏன் இன்னும் அமைப் பாளர் திரும்பி வரவில்லை என்பதும் அவனுக்குப் புரியவில்லை.

எப்போது வந்து கூட்டிக் கொண்டு போகப் போகிறார் என்கின்ற கேள்வி அவனுள் நெளியத் தொடங்கியது. தேவன் எழுந்து அமைதி இன்றி நடைபயிலத் தொடங்கினான். தேவனின் இந்த அந்தரிப்பு மற்றைய இரு இளைஞர்களுக்கும் அவ்வள வாய்ப் பிடிக்கவில்லை என்பதை அவர்கள் பார்வையில் இனங்கண்டு கொண்டான். பொறுப்போடு மீண்டும் சென்று அமர்ந்தான். குமுதம் ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு அதை முறைத்தான்.

சிறிது நேரத்தில் இரு இளைஞர்கள் வாசகசாலைக்கு வந்தார்கள்.

'எழும்பி எங்களோட வாங்கோ...' என்றனர்.

அவர்களின் நடையில் ஏகப்பட்ட அவசரம் இருப்பதை தேவன் கண்டு கொண்டான். தேவனும் மற்றைய இருவரும் விழுந்தடித்துக்கொண்டு அவர்கள் பின்னால் நடக்கத் தொடங்கி னார்கள்.

தேவனுக்கு ஏன் தங்கள் அமைப்பாளர் வரவில்லை என்பது புரியவில்லை. அந்த வினாவுக்கு விடைகாணாது மனது அல்லாடுவது உபத்திரவமாய் இருந்தது.

அவனுக்கு அதை அவர்களிடம் வினாவுவதற்கும் துணிவு இல்லை. அங்கு வந்த இளைஞர்கள் இவர்களை பிரதான வீதியில் இருந்து உள் ஒழுங்கை வழியாக வேகமாகக் கூட்டிச் சென்றார் கள். மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்பட்ட பகுதி அது. மரவள்ளி ச டைத்து வளர்ந்து இரண்டாள் உயரத்திற்கு நிமிர்ந்து நின்றது. மறைந்து செல்வதற்கு அருமையான இடமாய் அது இருந்தது. இந்த இயற்கையின் பாதுகாப்பு தேவனுக்கு சிறிது நிம்மதியைத் தந்தது.

வாழை, மரவள்ளியென உருவான சோலையை ரசிப்பதில் தேவனது மனது இப்போது லயித்தது. அவன் கவலைகளைத் தற்காலிகமாக மறந்தவனாக நடந்தான். மற்றவர்களும் அமைதி யாக அவர்களுடன் நடந்து சென்றனர். அந்த இளைஞர்கள் இவர்களை ஒரு சிறிய கோயிலுக்கு கூட்டிச் சென்றனர். பின்பு அவ்விளைஞருள் ஒருவன், 'நீங்கள் சாப்பிட்டீங்களோ?' என்று கேட்டான்.

ஒருவரும் பேசவில்லை. பார்வைகள் மாத்திரம் என்ன கேள்வி இது என்பது போல் இருந்தது. புரிந்துகொண்ட அவ்விளைஞன்...

'சரி நீங்க இஞ்ச இருங்கோ. கொஞ்ச நேரத்தில நாங்க சாப்பாட்டோட வாறம்,' எனக் கூறிவிட்டு அவர்கள் மீண்டும் மாயமானார்கள்.

'நீர் தங்கோடையே?'

தேவனோடு வந்தவர்களில் சற்று வயது மூத்தவர் திடீரெனக் கேட்டார்.

'ஓ... நீங்கள்?'

'களபூமி.'

'நீர்...' மற்றவனைப் பார்த்து அவர் கேட்டார்.

அவன் சற்றுத் தயங்கிவிட்டு, 'வேரப்பிட்டி' என்றான்.

தேவனுக்கு அந்தரமாக இருந்தது. இவன் என்ன பாவம் செய்தான்? இடத்தைச் சொல்வதிலே அவமானம் அடையு மளவுக்கு சமுதாயத்தின் சாக்கடை முடிச்சுக்கள் அவிழ்க்கப் பட முடியாதவையாக இறுகித் திரண்டு இருக்கிறது. ஏன் இப்படியெல்லாம் எங்கள் சமுதாயம் இருக்க வேண்டும்? இதை எண்ண எண்ண தேவனுக்கு உள்ளம் பொங்கியது. மனது சோர்ந்து கவலையிற் சுருண்டது.

சிறிது நேரத்தில் போன இளைஞர்கள் சாப்பாட்டுப் பொட்டலத்துடன் திரும்பி வந்தார்கள். இருந்த பசிக்கு சாப்பாட்டின் வாசம் தேவாமிர்தத்தைக் கண்ட தவனத்தை தேவனுக்கு உண்டுபண்ணியது. தேவனுக்கு திடீரென அம்மா வின் ஞாபகம் வந்தது. அம்மா என்ன செய்திருப்பா? எப்படித் துடித்திருப்பா? கடவுள் என்னை மன்னிக்க வேண்டும். அம்மா தேவனைப் பசிக்க விட்டதில்லை. இன்று பசிக்கப் பசிக்க காத்திருந்து உணவைப் பெறும்போது அம்மாவின் ஞாபகம் அவன் தொண்டையை இறுக்கிப் பிடித்துக் கொண்டது.

எல்லோரும் சாப்பாட்டுப் பொட்டலங்களைப் பெற்றுக் கொண்டனர். பசியின் கொடுமையில் அவசர அவசரமாக

அதைச் சாப்பிடத் கொடங்கினார்கள். தேவனுக்கு சற்று அதிர்ச்சி யாக இருந்தது. அது மச்ச சாப்பாடு. மச்ச சாப்பாட்டை கோயிலில் வைத்து உண்ணுவது அவனுக்குச் சங்கடமாய் இருந்தது.

தேவன் தயங்கியவாறு அவர்களைப் பார்த்து, 'இது கோயில். நீங்கள் மச்ச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறியள்?' என்றான். 'நீங்கள் இயக்கத்துக்கு எண்டு துணிந்து வெளிக்கிட்டு வந்திருக்கிறியள். இனி கோயிலும் சுடலையும் உங்களுக்கு ஒண்டுதான். அலுவல்தான் இங்க முக்கியம். சாப்பிட்டிட்டு இளைப்பாறுங்க. நாங்க பிறகு வாறம். பிறகு வந்து நீங்கள் போக வேண்டிய இடத்துக்கு உங்களைக் கூட்டிக் கொண்டு போறம்.'

ஒரு மணித்தியாலத்திற்குப் பின்பு மீண்டும் அவர்கள் திரும்பி வந்தார்கள். வந்தவர்கள் தேவனையும் மற்றைய இரு வரையும் நடந்தே கோண்டாவிலுக்கு அழைத்துச் சென்றனர். வந்த வழிகள் பல குறுக்குப் பாதைகளின் குழப்பமாகத் தேவனுக்கு இருந்தது. பின்பு இவர்களை ஒரு சனசமூக நிலையத்தில் விட்டுவிட்டு மீண்டும் அவர்கள் சென்றார்கள்.

அப்படிச் செல்லும்போது அந்த இளைஞர்களில் ஒருவன், 'நீங்கள் வெளியே வரவேண்டாம். திடீரெண்டு ஆமிக்காரன் சுற்றிவளைக்கலாம். கவனமா இருக்கோணும். நாங்கள் இரவுச் சாப்பாடு எடுத்துக் கொண்டு திரும்பிவாறம். மெயின் றோட் டுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் போகக்கூடாது' என மீண்டும் எச்சரித்துவிட்டு பதிலுக்குக் காத்திராது அவர்கள் சென்றார்கள்.

அதற்குப் பின்புதான் எல்லோருக்கும் ஆறுதலாக இருந்து கதைப்பதற்கு நேரம் கிடைத்தது.

'என்ன பெயர் உமக்கு?' தேவனைப்பார்த்து தேவனோடு வந்தவர்களில் வயதானவராகக் காணப்பட்டவர் மீண்டும் கேட்டார்.

'தேவன்.'

'உங்களுக்கு?'

'சங்கர்.'

சங்கர் மற்றவனைப் பார்க்க, அவன் 'கோபு' என்றான்.

'நான் கொஞ்ச நாளுக்கு முன்பு யாழ்ப்பாணம் ரவுனுக்குப் போயிருந்தன். ஆமிக்காரன் என்னெண்டா ஆட்களை செக் பண்ணினான். பிறகு பெடியளை எல்லாம் தனிய பிரிச்சாங்கள். எல்லாரையும் வெய்யிலிலை முட்டுக்காலில இருக்கவிட்டு துவக்குப் பிடியால அடிச்சான்கள். என்ன செய்கிறது? எதிர்த்தும் கதைக்கேலாது. சுட்டுத் தள்ளிப் போடுவான்கள். சுட்டாலும் கேட்டுக் கேள்வி இல்லை. நாங்கள் எங்கட சொந்த பூமியிலேயே அடிமைகளாய் இருக்கவேண்டி வந்திட்டுது. அதை நினைச்சா எப்பவும் கவலையாத்தான் இருக்கும்,' என்று சங்கர் தொடர்ந்து சொன்னான்.

இதைக் கேட்டுக் கொண்டு இருந்த தேவனுக்கு ஆலடிச் சந்தியும், அதில் பட்ட அவமானமும் மீண்டும் மீண்டும் சிதல் பிடித்து வலி எடுப்பதான வேதனை மனமெங்கும் பரப்பியது.

'உண்மைதான். நான் ஒருநாள் சிவகாமி அம்மன் கோயிலில படம் பார்த்திட்டு, காலமை ஐஞ்சு மணிபோல வந்து கொண்டு இருந்தன். ஆலடியில வைச்சு நேவி பிடிச்சுப் போட் டான். கண்விண் தெரியாமல் முதல்ல அடிச்சான்கள். பிறகு வாயால நோட்டீசும் உரிப்பிச்சாங்கள். யாரோ நோட்டீஸ் ஒட்டின துக்கு நாங்களே காவல். ஒட்டினவனைப் பிடிக்கத் தெரியேல்ல அவங்களுக்கு. சும்மா தெருவில போன சனத்தைப் போட்டு சித்திரவதை செய்யிறாங்கள். உந்தப் பயத்தில பள்ளிக்கூடமும் ஒழுங்காய் போக முடியாமல் இருக்குது. எந்த நேரம் வந்து நேவி பிடிச்சுக்கொண்டு போவான் எண்டு தெரியேல்ல. இப்படி நித்தம் நித்தம் கோழையாய் சாகிறதிலும் பார்க்க றெயினிங் எடுத்துப்போட்டு வந்து வீரனாய்ச் சாகிறது எவ்வளவோ மேல்' எனத் தேவன் முடித்தான்.

'ஆமீட்ட நேவீட்ட அடி வேண்டாத சனம் இப்ப இருக்குதோ எண்டு கேட்கலாம். அந்த அளவுக்கு நிலைமை மாறிப் போச்சுது. நேவி முதலில நல்லா இருந்தான். இப்ப அவங்களும் ஆமி மாதிரித் தொடங்கீட்டாங்கள்' என சங்கர் முடித்தார்.

'கடலுக்குப் போனாலும் முதலில வலைய அறுப்பாங்கள். பிறகு போட்டு உழக்கு உழக்கு எண்டு உழக்கிறாங்கள். தொழிலுக்கும் போகாமல் வாழமுடியுமே? பயந்து பயந்து போறது. ஆப்பிட்டா வேண்டிக் கட்டிக் கொண்டு வாறது?' என்றான் கோகிலன்.

இப்படியே ஒவ்வொருவரும் தத்தமது கதையைச் சொல்ல, தேவனின் நினைவு அம்மாவையும் ஊரையும் நோக்கி ஓடியது. தேவன் ஊரைப்பற்றிய நினைவிலேயே வெகு நேரம் அப்படியே உறைந்து போய் இருந்துவிட்டான். அவனது அந்த உலக மறுப்பைச் சாப்பாட்டு வாசம் சற்று தடுமாற வைத்தது.

அந்தச் சாப்பாட்டின் பின்பு, இருந்த உடல் அலுப்புக்கு, அடித்துப் போட்டதுபோல தேவனுக்கு தூக்கம் வந்தது. அவன் அப்படியே தூங்கிப் போய்விட்டான்.

அடுத்தநாள் பொழுது அமைதியாகவே விடிந்தது. இவர்கள் அணி மேலும் இருவரை உள்வாங்கி விரிவாயிற்று. வினோத், கணேஸ் என்னும் இருவர் புதியதாய் வந்து சேர்ந்து கொண்டனர். அவர்கள் வடமராச்சியில் இருக்கும் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தேவனுக்குத் தெரிய வந்தது.

அவர்களின் வருகையோடு அங்கே சற்றுக் கலகலப்பு கூடி இருந்தது. அந்தக் கலகலப்பு நேரத்தை ஒருவாறு அரித்துத் தின்றது. இடையிடையே எப்போது இந்தியா போய்ச் சேரு வோம் என்கின்ற ஏக்கமும் எல்லோரையும் வாட்டியது.

இந்தக் கலகலப்பு ஒரு காலைப் பொழுதில் மொத்தமாக அடங்கியது. பயத்தில் எல்லோருக்கும் இரத்தம் உறைந்து போய் இருந்தது. தேவனுக்கு அதிக கலக்கமாய் இருந்தது. பக்கத்து ஊரை ஆமிக்காரன் சுற்றி வளைத்து விட்டான் என்கின்ற செய்தி அறிவிக்கப்பட்டது. எல்லோரும் காயப் போட்டிருந்த சாறங்களை எடுத்து துணிப் பைக்குள் அடைத்துக் கொண்டனர். எப்போது எந்தப் பக்கத்தில் ஓட வேண்டும் என்பது தெரியவில்லை. எதற்கும் அவர்கள் தயாராக இருந்தார்கள்.

தேவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இங்கு இப்போது பிடிபட்டால் அது மிகவும் ஆபத்தாகிவிடும். ஆமி அடிக்கிற

அடியில் இந்த ஆறுபேரில் யார் யார் உளறுவார்கள் என்பதும் தேவனுக்குப் புரியவில்லை. அப்படி ஒரு சந்தர்ப்பம் வரக்கூடாது எனத் தேவன் எண்ணிக் கொண்டான். இவர்கள் அதிர்ஷ்டம் அன்று மலைபோல் வந்த ஆபத்து பனிபோல் மறைந்து போயிற்று.

அன்று எல்லோரும் சேர்ந்து கதைத்து, அமைப்பாளரை உடனடியாகச் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டனர். அமைப்பாளரைச் சந்திப்பதற்காக குச்சு ஒழுங்கை களின் வழியே நடந்து அவரது வீட்டை அடைந்தனர். இவர் களைப் பார்த்ததும் அமைப்பாளர் சற்றுத் தடுமாறிப் போய் விட்டார். பின்பு சில கணங்கள் கடுமையான யோசனையில் இருந்தார். திடீரென தியானத்தில் இருந்து வெளியே வந்தவர் போல் இவர்களை வயல் பக்கமாகப் போகுமாறு பணித்தார். தேவனும் அவனோடு வந்தவர்களும் அப்படியே செய்தார்கள். அவர்கள் அங்குள்ள பாவல் தோட்டம் ஒன்றினுள் தஞ்சம் புகுந்து கொண்டனர். இவர்களைப் பாவல் தோட்டத்தில் சந்தித்த அமைப்பாளர் சிலகாலம் இன்னும் பொறுமையோடு இருக்குமாறு கேட்டுக் கொண்டார். அவரை எதிர்த்து எதுவும் சொல்ல முடியாதவர்களாய் அதற்கு ஒப்புக் கொண்டார்கள்.

பயமும் கவலையும் பூச்சாண்டி காட்டிக்கொண்டு இருக்க நாள்கள் நத்தை வேகத்தில் நகர்ந்துகொண்டு இருந்தன. ஊரின் அரவணைப்பு இவர்கள் உள்ளத்தை அடிக்கடி நெகிழ வைக்கும். இரவில் நேரம் வாய்க்கும்போதெல்லாம் சில இடங்களில் வீடியோ பார்ப்பார்கள். இயந்திரம் பூட்டிய கிணறு ஒன்றில் நாள் தவறாமல் குளித்தார்கள். இரவுகளில் தேடும் ஒளியுடன் கெலியைக் கண்டால் உடல் நடுங்கும். பயத்தில் அங்கும் இங்கும் மறைந்து கொள்வார்கள். வீரப் போரின் வித்துக்கள், பயத்திலேதான் முளையிடப்படுகிறதா எனத் தேவன் எண்ணிக் கொள்வான்.

ஒரு நாள் தேவன் தங்கியிருந்த இடத்திற்கு சில இளைஞர் கள் திடீரென வந்தார்கள். வந்தவர்கள் தரையில் கால் பதிக்க முடியாத அவசரத்தில் அந்தரித்தனர். மிகவிரைவில் அங்கு இருந்து போவதில் குறியாக இருந்தனர்.

'இதில யார் நல்லாக் கஷ்டப்பட்டு வேலை செய்வியள்?' என அதில் வந்த ஒருவன் கேட்டான்.

பின்பு தேவனையும் கோகுலனையும் கைகாட்டி அழைத்தான். இவர்கள் இருவரும் புறப்படத் தயாராகினர். அப்போது பின்னால் இருந்து ஒரு குரல் வந்தது. 'தேவன் கஷ்டப்பட்டு வேலை செய்யமாட்டான். அவனுக்குப் பதிலாக நான் வாறன்' என்றது அந்தக் குரல். அது சங்கரின் குரலாக இருந்தது. முதலில் தேவனுக்கு கோபம் வந்தது. பின்பு அதில் ஒருவித நியாயம் இருப்பதாக தேவன் உணர்ந்தான். தேவன் உடனடியாக விலக்கப் பட்டான். அதற்காக சங்கர் தேவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பின்பு அவர்கள் அவசரமாகச் சென்று விட்டனர்.

தேவனுக்குப் பத்து நாள்களுக்கு முன்பு இயக்கத்தில் சேர்ந்த மணி இப்போது அங்கு அமைப்பு வேலை செய்யத் தொடங்கி இருந்தான். 'இந்தியாவிற்குப் போகாமல் இங்கு நின்று அமைப்பு வேலை செய்கிறீர்களா?' என்று கேட்டதற்கு ஆம் என்று பதில் அளித்தது அவன் ஒருவன் மட்டுமே. அதனால் அவன் அந்த வேலையைப் பெற்றுக் கொண்டான். மற்றவர்கள் எல்லோரிடமும் இந்தியாவுக்கு எப்போது போவோம் என்கின்ற எதிர்பார்ப்பை விட வேறு எதுவும் எஞ்சி இருக்கவில்லை.

தேவனுக்கு அன்று ஒரே யோசனையாக இருந்தது. சற்று முன்வந்தவர்கள் ஏன் அவர்களைக் கூட்டிச் சென்றார்கள்? எதற்கு அவர்களிடத்தில் இவ்வளவு படபடப்பு? இவர்கள் எங்கு செல்கிறார்கள்? என்ன செய்யப் போகிறார்கள்? அவனுள் ஆயிரம் கேள்விகள் முளைத்திருந்தன. அதை யாரிடமும் கேட்க முடியாது தவித்தான்.

தேவன் இப்படியாக சிந்தனையில் ஆழ்ந்துபோய் இருக்க, 'வாங்கடா போய்க் குளிப்பம்,' என்ற குரல் கேட்டுத் தேவனின் நினைவுகள் அறுந்தன. அவனும் குளிப்பதற்குத் தயாராகினான்.

குளிக்கச் சென்று விட்டு வந்து இளைப்பாறிக் கொண்டிருக் கவும் சாப்பாடு வந்து சேர்ந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பார்சலை எடுத்துச் சாப்பிட்டார்கள். இரண்டு பார்சல் மிஞ்சி இருந்தது. தேவனுக்கு மீண்டும் அவர்களின் ஞாபகம் வந்தது. எந்தக் கேள்விக்கும் விடை கண்டுபிடிக்க முடியாது என்கின்ற ஆதங்கத்தோடு மீதமிருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டான். பின்பு

உண்ட களை தொண்டருக்கும் உண்டு என்பதற்கு அமைய தூங்கிப் போய் விட்டான். தேவன் திடீரென தூக்கம் கலைந்து எழுந்தபோது, சென்ற இருவரும் திரும்பி வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

தேவன் அவர்களைப் பார்த்தான். சங்கர் காலில் கட்டுப் போட்டிருந்தான். 'என்ன நடந்தது உங்களுக்கு? காலில கட்டுப் போட்டு இருக்கிறியள்?' எனத் தேவன் கேட்டான்.

அவர் தேவனைப் பார்த்துச் சிரித்து விட்டு, பதில் சொன்னார். 'நாங்கள் லொறியில ஒரு இரும்புப் பெட்டியை ஏத்திக் கொண்டு வந்த நாங்கள். அப்ப லொறி ஒரு வளைவில சடாரெண்டு திரும்பீட்டுது. எதிர்பார்க்காமல் பெட்டி நகர்ந்து வந்து லொறி பொடியோட சேர்த்து என்ர காலை நசிச்சுப் போட்டது.'

'உயிர்போற வேதனையாக இருக்குமே?'

'வேதனையாகத்தான் இருக்கு. அதுக்கு என்ன செய்யே லும்?'

'பிறகு எப்படிக் காலை வெளியே எடுத்தீங்க?'

'அடுத்த வளைவிலே லொறி திரும்பேக்க பெட்டி மற்ற பக்கம் நகர்ந்தது. அப்பதான் என்ர காலை வெளியால எடுக்க முடிஞ்சது.' சங்கர் தொடர்ந்தும் கூறினான்.

'ஏதோ ஒரு இரும்புப் பெட்டிய பீப்பிள் வங்கியைத் தாக்கிய பின்னர், தூக்கிட்டு வந்தாங்கள். பெட்டியத் திறக்க முடியேல்ல. உங்க ஒரு தோட்டத்துக்க ஏற்கனவே வெட்டி வைச்சிருந்த கிடங்குக்குள்ள போட்டிட்டு, எங்களை இஞ்ச கொண்டாந்து விட்டிட்டாங்கள்.'

'அது சரி உங்களுக்குப் பயமா இருக்கேல்லயே? ரவுனுக்க போய்க் கொள்ளை அடிக்கிறது எண்டா சாதாரண விசயம் இல்லத்தானே?'

'யாழ்ப்பாண ரவுனில போய் வங்கியைக் கொள்ளையடிக் கிறது எண்டா குடல் நடுக்கமெடுக்கத்தானே செய்யும்? எங்களுக்கு ஒரே வயித்துக் கலக்கமாய்த்தான் இருந்தது. ஆனா எங்களோட

வந்தவங்க வலு சுறுசுறுப்பாய் டியூட்டி போட்டாங்க. அதோட ஆம்ஸ்சும் ஒண்டு ரெண்டு வைச்சிருந்தாங்கள். அப்பிடி இருந்தும் செக்குருட்டி விடவில்லை. அவனுக்கு நாலு உதைபோட்டு அவனைக் கட்டிப் போட்டுட்டுத்தான் பெட்டியை எடுக்கப் போனோம். ஆனா போன எங்களால ஒரு அடிகூட பெட்டிய நகர்த்த முடியல்ல.'

'பிறகு என்ன பண்ணீங்க?'

'எங்களை முதல்ல கண்ட உடனே ஆமியோ எண்டு பயந்து கொண்டு ஓடின சனம் பிறகு பெடியள் எண்டோண்ண திரும்பி வந்திட்டினம். அப்பிடி விடுப்பு பார்க்க வந்தது எங்களுக்கு ஒருவகையில வசதியாப் போச்சுது. கேட்காமலே எல்லோரும் வந்து பெட்டிய ஏத்த உதவி செய்துவிட்டிச்சினம். ஒரு மாதிரிப் பெட்டிய ஏத்திக்கொண்டு, ஆமி வாறத்துக்கிடையில எஸ்கேப் ஆயிட்டம்.'

'நல்லகாலம் ஆமிட்ட ஆப்பிட்டிருந்தா அவ்வளவுதான்,' என்றான் தேவன்.

'அதெல்லாம் கணக்குப் பார்த்துத்தானே இதுக்குப் போறது. ஆனா இண்டைக்கு பெட்டியத்தான் அசைக்க முடியாமல் போச்சுது. சிலவேளை இப்பிடி கணக்குப் பிழைச்சா எங்கட கணக்கும் முடிஞ்சிடும்,' என்றான் சங்கர்.

'அதுவும் உண்மைதான் சங்கர் அண்ண,' என்றான் தேவன்.

அன்றைய பொழுது அந்த நிகழ்ச்சியைக் கேட்பதிலும் அதைப்பற்றி விவாதிப்பதிலுமே போய்விட்டது. அது ஒரு விறு விறுப்பான அநுபவம். தேவனுக்கு அந்த அநுபவம் கிட்டாததில் சற்று வருத்தமாய் இருந்தது. இனி இப்படிச் சந்தர்ப்பம் வந்தால் அதை விடக்கூடாது என எண்ணிக் கொண்டான்.

ஆலடிச் சந்தியில் கிடைத்த அநுபவம் தேவனைத் தலை கீழாக மாற்றி இருந்தது. அதற்கு முதல் இந்தப் போராட்டம் சரி வராத ஒன்று எனவும், இவர்கள் சும்மா நாட்டைக் குழப்புகிறார் கள் எனவும் அவன் எண்ணியிருந்தான். அந்த எண்ணம் ஒரு காலைப் பொழுதோடு தலைகரணமாக மாறிவிட்டது. ஒரு வன்முறை இன்னொரு வன்முறையை நியாயப்படுத்துகிறது.

அதுவும் தனக்கே அது நேரடியாக நேரும்போது, கல்மேல் எழுத்தாகி காலப்போக்கில் வன்மமாக விளைகிறது. எமது ஊருக்கே வந்து எம்மையே அந்நியர்கள் அடிப்பதும், ஆட்டிப் படைப்பதும் முதலில் அவமானத்தைத் தந்தது. காலப்போக்கில் அது வன்மமாக மாறியது. ஜனநாயகம் என்கின்ற மூப்பு பெறாத தத்துவத்தை பெரும்பான்மை துர்பிரயோகம் செய்கிறது. அதை மேற்கு நாடுகளும் தங்கள் சுயநலத்தை எண்ணி அங்கீகரித்து நிற்கின்றன. அதற்கு எதிராய்க் குரல் கொடுப்பதை நசுக்குவதில் எல்லோருமே இணைந்து கைகோர்த்து நிற்கிறார்கள். இது தேவனுக்கு கசப்பான உண்மையாக இருந்தது.

தேவனுக்கும் அவனது குழுவினருக்கும் இருந்த உற்சாகம் ஊசிபட்ட பலூன் ஆகியது. ஆரம்ப நாள்களில் இருந்த சந்தோஷம் இப்போது எங்கோ தொலைந்து போய்விட்டது. ஊரைவிட்டு வந்து கிட்டத்தட்ட இருபத்திரண்டு நாள்களும் வரலாற்றுப் பகுதியாக மாறிவிட்டன. இந்தியாவுக்குச் செல்வதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. ஊருக்கும் இனி திரும்பிப் போகமுடியாது. என்றாலும் ஒரு அசட்டுத் துணிச்சலில் அமைப்பாளருக்கு காலக்கெடு விதிப்பதென எல்லோரும் முடிவு செய்து கொண்டனர்.

அன்று மாலை அமைப்பாளர் வந்திருந்தார். அவரும் ஏதோ அதிக சிந்தனையில் இருப்பதாகவே தோன்றியது. அவரின் ஒவ்வொரு முடிவும் இப்போது பலரது வாழ்வுக்கும் சாவுக்கும் எழுதப்படும் முகவரிகள் ஆகும்.

சங்கர் அமைப்பாளரைப் பார்த்து மெதுவாகத் தொடங்கினான்.

'நீங்கள் கெதியா அனுப்ப வேணும். இல்லாட்டி நாங்கள் ஊருக்குத் திரும்பிப் போறதா முடிவு செய்திருக்கிறம்.'

இதைக் கேட்ட அமைப்பாளர் சிறிது நேரத்திற்கு மௌனமாய் இருந்தார். தேவனும் அவனது நண்பர்களும் அவரது முகத்தைப் பார்த்தவண்ணம் இருந்தனர். தன்னை தயார்படுத்திக் கொண்ட அமைப்பாளர், 'நான் கெதியா கதைச்சு இதுக்கு ஒரு முடிவோடு வாறன். நீங்க கொஞ்சம் அமைதியா இருங்க,' என்று கூறிவிட்டு எழுந்து தன்பாட்டில் சென்று கொண்டு இருந்தார்.

வெகு தொலைவு சென்று அவர் மறைந்த பின்பும், அவர் போன திசையை இவர்கள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

அடுத்தநாள் கலியாண வீட்டுச் சாப்பாட்டிற்கு அழைப்பு வந்திருந்தது. வழமையாக வரும் பார்சலுக்குப் பதிலாக அது சற்று வித்தியாசமாய் இருந்தது. இருந்ததில் நல்ல உடுப்பை எடுத்துப் போட்டுக் கொண்டு எல்லோரும் சென்றனர். கலியாண வீட்டுச் சாப்பாடு பிரமாதமாய் இருந்தது. சாப்பிட்ட பின்பு வாய் நிறைய தாம்பூலம் அதக்கிக்கொண்டு வந்தவர்களை அமைப்பாளர் இடைமறித்தார். சிலருக்குச் சற்றுப் புரிந்தது போல் இருந்தது. ஆனால் அமைப்பாளர் சொன்னதைக் கேட்டபின்பு பலருக்கு மயக்கம் வந்தது.

'நீங்கள் இண்டைக்கு ஊருக்குப் போறத்துக்கு தயாராக இருங்கோ.'

அந்த வசனங்கள் இதயத்தை நிறுத்தி சுவாசத்தைத் தொலைத்திருந்தது.

'ஊருக்கா? எப்படி அங்கு இனி திரும்பிப் போவோம்?' எல்லோருக்கும் தலையில் இடிவிழுந்ததான உணர்வு.

நேற்று அமைப்பாளரிடம் அப்படி பேசியதற்காய் மனதிற்குள் எல்லோரும் அழத் தொடங்கி இருந்தனர். பின்பு எது வந்தாலும் சரி தயார் என மனதைத் தேற்றிக் கொண்டனர். தங்கள் தங்கள் துணிப்பையை எடுத்துக் கொண்டு அமைப்பாளருக்காகக் காத்து இருந்தார்கள்.

23

அன்று தேவன் வினோவோடும் சுபனோடும் சுவீடனுக்குப் புறப்பட்டிருந்தான். சுவீடனில் நோர்வேயை விட அநேகமான பொருள்களின் விலை குறைவு. இறைச்சி மற்றும் பொருள்கள் நோர்வேயோடு ஒப்பிடும்போது மேலும் மலிவாக

இருக்கும். மதுவும் புகைப்பதற்குப் பாவிக்கும் பொருள்களும் வாங்கினால் இன்னும் அதிக இலாபமாக இருக்கும். தேவன் புகைப்பது இல்லை. சிலவேளைகளில் ஒரு போத்தல் எடுத்துக் கொண்டு வருவான். அதிகமாக இறைச்சி, சீஸ், சிறியவர்கள் விரும்பிச் சாப்பிடும் சிக்கன் நக்கேற்ஸ், கோக் ரின் எனப் பலவகைப் பொருள்களை வாங்கி வருவது வழக்கம்.

சுவீடனில் இருந்து எவ்வளவு பொருள்க ளை வாங்கிக் கொண்டு நோர்வேக்குள் வரலாம் என்பதற்கும் ஒரு அளவு உண்டு. அதிக அளவு கொண்டு வந்து எல்லையில் பிடிபட்டால் நிச்சயம் தண்டம் கட்டவேண்டி வரும். பொதுவாக சுவீடன் – நோர்வே எல்லையில் மறிக்க மாட்டார்கள் என்கின்ற அதிர்ஷ்டத்தை நம்பியே இந்த வண்டிகள் ஓடும். சிலவேளையில் மறித்தாலும் குடும்பமாகப் போய்வந்தால் செக் பண்ணாது விட்டு விடுவார்கள். எல்லையில் மறிப்பது என்றால் தகவல் கிடைத்தே மறிப்பார்கள். அதுவும் போதைப் பொருள் கடத்துபவர்கள் மேலேதான் அவர்கள் குறி கடுமையாக இருக்கும். குடும்பமாய் போய் வருபவர்கள் அப்பாவிகளாய் இருப்பார்கள் என்பது சுங்க அதிகாரிகளின் கணிப்பு. சில்லறை விடயங்களுக்குப் பணம் செலவிட நோர்வே யிடமே பணம் இல்லை என்கிறார்கள்.

அன்று சுவீடன் போய்விட்டு வரும்போது எல்லோருக் கும் அலுப்பு. வினோவும் சுபனும் அயர்ந்து தூங்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த அமைதியில் தேவன் வாக னத்தைச் செலுத்திக் கொண்டு இருக்க, மனது அந்தக்கால நினைவுகளை அசை போட்டது.

அன்று சற்று நேரத்தில் மினிவான் ஒன்று திடீரென வேகமாக வந்து நின்றது. ஏன் எதற்கு என்று கேட்காமல் அனைவரும் அவசர அவசரமாக ஏறி அமர்ந்து கொண்டனர்.

அமைப்பாளர் அப்போது, 'எங்கே போறியள் எண்டு தெரியுமோ?' என நகைத்த வண்ணம் கேட்டார்.

'திரும்ப ஊருக்குத்தானே?'

'இல்லை இந்தியாவுக்கு. உங்கட கனவுப்படியே இந்தியா போறியள்,' என்றார்.

எல்லோரும் திக்குமுக்காடிப் போய்விட்டார்கள். அமைப் பாளரைக் கையெடுத்துக் கும்பிடாத குறையாகக் குழைந்து குழைந்து நன்றி கூறினார்கள். தாங்கள் ஊருக்குப் போகப் போவதாகக் கூறியதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

மினிவான் படுவேகமாய் போய்க்கொண்டிருந்தது. கண்ணாடிகள் எல்லாம் பாதுகாப்பிற்காய் மறைக்கப்பட்டிருந்தன. அந்த மினிவான் மாதகலுக்குப் போவதாய் றைவர் சொன் னார். தேவனுக்கு அந்த வழி பழக்கப்பட்டதாக இல்லை. எந்த இடங்களைத் தாண்டிப் போய்க்கொண்டு இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியாது இருந்தது. இந்தியா போகிறோம் என்கின்ற சந்தோஷத்தில் தேவன் தன்னை மறந்து இருந்தான். இறுதியாக மினிவான் ஒரு பனந்தோப்பினுள் நின்றது. மினிவானில் இருந்து இறங்கிய அவர்களுக்கு, தோழமைக்காக மேலும் நாலுபேர் அங்கு நின்றிருந்தனர் அவர் கள் மட்டக்களப்பில் இருந்து வந்திருந்தனர். அத்தோடு அமைப் பாளரோடு இன்னும் ஒரு புதியவரும் நின்றிருந்தார்.

பின்பு அப்பனந்தோப்பில் இருந்து வேறு ஒரு பனந் தோப்பிற்குச் செல்ல வேண்டி இருந்தது. இரண்டுக்கும் இடையில் ஒரு கிலோமீற்றர் தூரம் இருக்கும். இரண்டையும் நிர்வாணமான வயல்வெளி பிரித்து நின்றது. இந்த வயல்காட்டின் இதயத்தை ஊடறுத்து பிரதான வீதி போய்க் கொண்டு இருந்தது. பிரதான வீதி என்பது இவர்களுக்கு ஆபத்தான இடம். ஆமி அல்லது நேவியின் வாகனம் திடீரென வந்து மடக்கலாம். அதற்குத் தகுந்த முறையில் இவர்கள் செல்ல வேண்டி இருந்தது. திடீரென வாகனச் சத்தம் கேட்டது. எல்லோரும் திகைத்து விட்டார்கள். அமைப்பாளர் நிதானமாக வரம்பிற்குப் பின்னால் விழுந்து படுக்கும்படி சைகை காட்டினார். எல்லோரும் அப்படியே விழுந்து படுத்துக் கொண்டனர்.

இவர்கள் அப்படி விழுந்து படுத்தால் வீதியில் போவோ ருக்கு எதுவும் தெரியாது. அதை அமைப்பாளர் அநுபவத்தில் அறிந்து வைத்திருந்தது அன்று பாதுகாப்பளித்தது. அமைப்பாளர் எழுந்தார். அவரில் எந்தப் பதட்டமும் தெரியவில்லை. எல்லோ ரும் ஒருவாறு அடுத்த பனந்தோப்பைச் சென்று அடைந்தனர்.

அங்கு இவர்களை இருக்குமாறு பணித்துவிட்டு அமைப்பாளர் சென்றுவிட்டார். இவர்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாய் ஆளையாள் பார்த்து முழித்தனர். யாருடன் எதை எப்படிப் பேசுவது என்கின்ற திகைப்பில் இருந்தவர்களை அமைதி இறுக அணைத்திருந்தது.

சிறிது நேரத்தில் திரும்பி வந்த அமைப்பாளர் இவர்களைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். கடற்கரையில் இவர்களுக்காக ஒரு வள்ளம் காத்திருந்தது. எல்லோருக்கும் சிறுவராய் மாறித் துள்ளிக் குதிக்கும் ஆனந்தம் தட்டிற்று. ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே என்கின்ற பாட்டை தேவன் தன்னை அறியாது முணு முணுத்துக் கொண்டான்.

அவர்கள் வள்ளத்தில் ஏறி இருந்ததும், ஓட்டி வள்ளத்தைக் கொஞ்சம் ஆழமான இடத்திற்குத் தள்ளிவிட்டு, பின்பு அவரும் ஏறிக் கொண்டார். வள்ளத்தில் ஒரே ஒரு 303 மாத்திரம் இருந்தது. இதை வைத்து எதுவும் செய்ய முடியாது என்பது எல்லோருக்கும் புரிந்தது. அரச இராணுவத்தை எதிர்ப்பதற்கு இது போதாது. தற்பாதுகாப்பிற்கே இது உதவப் போவதில்லை. தூக்கி எறிந்துவிட்டுப் போனால் மீனவர் என்றாவது கூறித் தப்பிக்க முயற்சி செய்யலாம். நேவியைக் கண்டால் கடலில் குதிப்பதா? எண்ணிய தேவனுக்கு எதுவும் புரியவில்லை. குதித்தால் எவ்வளவு தூரம் நீந்த முடியும்? அவனுக்குத் திகைப் பாக இருந்தது.

சிறிது நேர அமைதிக்குப் பின்பு ஓட்டி பேசினார்: 'நாங்க இப்ப வெளிக்கிட்டம் எண்டா, சரியா மூன்றரை மணித்தியா லத்தில வேதாரண்யம் போய்ச் சேருவம். இடையில பயர் பண்ணினா நீங்க தலையைத் தாழ்த்திக் கொண்டு படுத்திருக் கேணும். நீங்கள் எதுக்கும் தலைய நிமிர்த்தக் கூடாது. அதே நேரம் நீங்கள் எதுக்கும் பயப்பிடவும் தேவையில்லை. மிச்சத்தை நான் பார்த்துக் கொள்ளுவன். சரியே.'

'ஓ...' எல்லோரும் சேர்ந்த ஒலியெழுப்பினர்.

ஓட்டி படகின் ஒரு இயந்திரத்தை இயக்கினார். படகு வேகம் பிடித்தது. சில நிமிடங்களின் பின்பு இரண்டாவது

இயந்திரமும் இயக்கப்பட்டது. அதன் பின்பு படகு மின்னல் வேகத்தில் பயணிக்கத் தொடங்கியது. எல்லோரும் பயப்பட்டது போல் அன்று நேவி அவர்களுக்கு எந்தத் தொந்தரவும் கொடுக்க வில்லை. அவர்கள் தப்பான இடத்தில் லைற்றை அணைத்துபேட்டுப் படுத்திருக்க வேண்டும். அன்றைய அதிர்ஷ்டம் ஓட்டியின் பக்கமே இருந்தது.

வள்ளம் வேகமாகச் சென்றுகொண்டு இருந்தது. மாதகல் விடைபெற்று காங்கேசந்துறை வெளிச்ச வீட்டின் மின்னும் வெளிச்சம் மெது மெதுவாக மறைந்து போயிற்று. சிறிது நேரம் எந்த ஒளியும் இல்லாத இருட்டில் குருட்டு மனிதர்களாய் கடலில் பயணம் செய்தார்கள்.

நடுக்கடலில் அலை கூடுதலாகவே இருந்தது. சில இடங் களில் வள்ளத்தை அலைகள் நாலு அல்லது ஐந்தடி உயரத்திற்கு தூக்கிப் போட்டதில் எல்லோரும் துவண்டு போயினர். உயிர் மீன்கள் பாய்ந்து சிலவேளைகளில் படகிற்குள் விழுந்தன. உயிர் மீன் பாய்ந்து விழுவது தேவனுக்கு புது அநுபவமாய் இருந்தது.

சிலர் அடிக்கடி வாந்தியும் எடுத்தனர். உடைகள் நனைந்து குளிரில் நடுக்கம் பிறந்தது. பலர் கூதலில் நடுங்கத் தொடங்கி இருந்தனர். அந்தச் சிறிது நேரப் பயணம் யுகங்களாகக் கழிந்தது. பின்பு இந்தியக் கரையின் வெளிச்சங்கள் தெரிந்தன. அதன் பின்பு ஓட்டி மௌனத்தைக் கலைத்தார்.

'இப்ப நாங்க இந்திய எல்லைக்குள்ள வந்திட்டம். இனி நாங்கள் சிலோன் நேவிக்குப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இனி அவை இந்திய எல்லைக்குள் நுழையவோ, அல்லது எங்களைத் துரத்தவோ முடியாது...'

அவரது முகத்தில் அமைதியும் சாந்தமும் மெதுவாகக் குடியேறின. அதை ரோச்லைற் வெளிச்சத்திலும் காண முடிந்த தாகத் தேவன் எண்ணிக் கொண்டான். படகு வேகமாக வேதாரண்யத்தை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது.

வேதாரண்யம் கரையில் இறங்கி, இந்திய மண்ணை மிதித்த போது தேவனுக்கு ஒருவித சந்தோஷம் பிறந்தது. ஒரு சிறிய காலத்திற்காவது எப்போது சுடப்படுவோம் என்கின்ற

அச்சத்தில் வாழும் அவலத்தில் இருந்து தப்பித்ததான உணர்வு மேலோங்கி நின்றது. இந்த சுயநல நிம்மதிக்கு அற்ப ஆயுள் என்பதை தேவன் நன்கு அறிந்து வைத்திருந்தான். மீண்டும் எம் தேசத்திற்கு விடுதலை வீரர்களாக விரைவில் செல்வோம் என எண்ணிக் கொண்டான்.

படகு நிறுத்திய கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் எல்லோரும் நடந்து சென்றனர். அங்கேதான் இயக்கத் திற்கான சிறிய அலுவலகம் ஒன்று இருந்தது. இரண்டு அறைகள் கொண்ட ஒரு வீட்டை இவர்கள் அலுவலகமாகவும் முகாமாக வும் பாவித்தார்கள். அது ஒரு இடைத்தங்கல் முகாம் எனக் கூறப்பட்டது.

அங்கு ஈர உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பிடத் தயாரானார்கள். அப்போது அங்கு ஒரு புதிய மனிதர் வந்தார். அவர் மிகவும் நிதானமாய் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார். எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டு. ஆர்ப் பாட்டமில்லாது 'நீங்கள் சாப்பிடுறதுக்கு முன்னால ஒரு வேலையைச் செய்யோணும். அதாவது நீங்கள் இனி சொந்தப் பெயரைப் பாவிக்கக்கூடாது. ஒவ்வொருவரும் ஒரு புனை பெயரை வைச்சுக் கொள்ளோணும். அதை நீங்கள் தெரிவு செய்யலாம்,' என்றார்.

'எப்பிடியான பெயரா இருக்கலாம்?' தேவன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

'எப்பிடியும் இருக்கலாம். உதாரணத்துக்கு இயக்கத்தில இருந்து வீரமரணம் அடைஞ்சவர் ஒருத்தற்ற பெயரா இருக்க லாம்,' என்றார்.

சிறிது நேரத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்கு விரும்பிய பெயரைக் கூற, அது பதிவில் எழுதப்பட்டது. பின்பு ஒவ்வொரு புனைபெயருக்கான எண்ணையும் கூறி, அதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். அப்பா அம்மா வைத்த தேவன் என்கின்ற பெயர் ஊமையாக 2423 ஸ்ரீபன் என்பது அவனது புதிய அடையாளமாயிற்று. ஸ்ரீபன் என்பது புலியில் இருந்து வீரமரணம் அடைந்த ஒரு போராளியின் பெயர் எனத் தேவன் கேள்விப்பட்டிருந்தான். அதன்பின்பு அவரும்

இவர்களோடு இருந்து சாப்பிட்டார். அடுத்த நாள் பஸ்ஸில் ஒரத்தநாடு போவதற்குத் தயாராக இருக்க வேண்டும் எனக் கூறிவிட்டு அவர் எங்கோ புறப்பட்டுச் சென்று விட்டார்.

இப்போது எல்லோர் மனதிலும் அமைதி குடிகொண்டிருந்தது. பயம் அகன்றோடி வெகுதூரம் சென்று இருந்தது. ஆமி ஆமி என்கின்ற உச்சாடனம் நீங்கிச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக் கூடியதாக இருந்தது. எல்லோரும் அன்று அமைதியாகத் தூங்கினார்கள்.

அடுத்தநாள் ஒரத்தநாடு செல்வதற்காக பஸ்ஸிற்கு இவர்கள் எல்லோரும் தரிப்பில் காத்திருந்தனர். பல வாகனங்கள் சென்று கொண்டு இருந்தன. திடீரென ஒரு இராணுவ றக் வண்டி வந்தது. சிலர் தரிப்பிற்குப் பின்னால் இருந்த புல் நிறைந்த பகுதியில் விழுந்து படுத்துக் கொண்டனர். தரிப்பில் நின்றவர்கள் இப்படிச் செய்வதைக் கண்டு திகைத்துப் போய் நின்றார்கள். அவர்களில் ஒருவன், 'என்னங்க சார், என்ன பண்ணுறாங்க உங்கட பையன்கள்?' என்றார்.

'இல்லேங்க. ஊரில இப்பிடித்தான் தங்களைப் பாது காத்துக் கொள்ளுவாங்கள். அதுதான் பழக்கதோஷம்...' என்றார்.

'இது தமிழ்நாடுங்க.... இங்க எல்லாம் பயப்பிடத் தேவையில்லங்க....'

'ம்.... அவங்க இனிப் புரிஞ்சுப்பாங்கள் சார்...'

பின்பு புல்லில் விழுந்து படுத்தவர்கள் இது இலங்கை இல்லை என்பதை உணர்ந்து ஒருவித சங்கடத்தோடு எழுந்து வந்தார்கள்.

பஸ் பல வழிகளினூடாக ஒரத்தநாடு அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்குதான் புளொட்டின் தலைமை அலுவலகம் இருந்தது.

ஒரத்தநாடு என்பது இராஜராஜ சோழன் காலத்து காதல் நகரமாய் இருந்ததாம். தஞ்சாவூரில் இருந்து இரகசியமாய் இங்கு வருவதற்காக சுரங்கப் பாதையும் அமைக்கப்பட்டிருந்ததாம். அந்த வழிகளால் வரும் மன்னனின் காம இச்சைகளை இந்த நகரத்துப் பேரழகிகள் தீர்த்து வைத்தனராம். அதனால் மன்னன்

மனமுவந்து வைத்த நிர்வாணப் பெயர் பின்பு திரிபடைந்து ஒரத்தநாடாய் மாறியது என பஸ்சில் வரும்போது இவர்களைக் கூட்டிவந்தவர் கூறியிருந்தார்.

மஞ்சள்நிறக் கட்டிடம் ஒன்று எண்ணை பூசாத்தேகம் போல், தனக்கும் சில தேவைகள் இருப்பதாய் சொல்லிக் கொண்டு இருந்தது. கட்டிடத்தின் ஒரு பக்கத்தில் கழிவு நீர் தேங்கி சேற்றுக் குளமாய் இருந்தது. அது அருவருப்பான மணமும் காட்சியுமாக, அதில் இரண்டு பன்றிகள் இரைதேடிக் கொண்டு இருந்தன. பன்றி இறைச்சியை எண்ணியபோது தேவனுக்கு இப்போது அருவருப்பாய் இருந்தது.

எல்லாம் புதிதாய் இருக்க, அறிமுகம் அற்ற மனிதர்கள் அவரவர் கடமையில் அங்கும் இங்கும் அலைந்தனர். தேவன் முகவரி அற்றவனாய்ச் செய்வதறியாது அங்கு நின்றான். சிறிது நேரம் இப்படியே அல்லாடிய பின்பு திடீரென ஒருவர், 'புதிசாய் வந்தவையெல்லாம் இஞ்சால வாங்கோ' என்றார்.

எல்லோரும் பயபக்தியோடு எழுந்து சென்று அவர் முன்பு நின்றனர். அவர் படிவத்தை பூர்த்தியாக்கத் தொடங்கினார்.

எல்லோரிடமும் அவர்களின் முழுப் பெயர், அப்பா பெயர், அம்மா பெயர், சகோதரங்களின் பெயர், அவர்களிடம் உள்ள சொத்துக்கள், வயது, பிறந்த திகதி, ஊரில் செய்த வேலை, அவர்களிடம் உள்ள விசேட அடையாளங்கள் எனப் பல விட யங்கள் சேகரிக்கப்பட்டன. பின்பு எல்லோரையும் புகைப் படமும் எடுத்துக் கொண்டனர்.

தேவனுக்கு இது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. சொத்தைப் பற்றி எல்லாம் ஏன் இவர்கள் கேட்க வேண்டும்? சொத்துக்கும் நாங்கள் வந்த போராட்டத்திற்கும் என்ன தொடர்பு? தேவனுக்கு அது விளங்கவில்லை. அந்த நடை முறை அறவே பிடிக்கவில்லை. எல்லாம் முடிந்தபின்பு வேதா ரண்யத்தில் கொடுத்த புனைப்பெயரும் எண்ணுமே இனி உங்கள் பெயரும் எண்ணும் எனவும், அதையே எங்கும் எப்போதும் பாவிக்க வேண்டும் என்பதையும் அழுத்தம் திருத்தமாக அவர் கூறிவிட்டு எழுந்து சென்றார்.

மதியம் திரும்பவும் வயிறு கடுமையாகப் புகையத் தொடங் கியது. அந்தப் புகைச்சலுக்கு எதுவும் சரிதான் எனத் தேவனுக்குத் தோன்றியது. சாப்பாடு சமைத்து முடிந்ததும், எல்லோரும் வரிசையில் நின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தட்டு இருக்கவில்லை. சமையல் பாத்திரத்தின் மூடிகளைத் தட் டாக்கி நாலு ஐந்து பேராகச் சென்று சாப்பாடு வேண்டினார்கள். தேவனும் அப்படி ஒரு குழுவில் சேர்ந்து கொண்டான். இவர் களுக்கு இறைச்சியுடன் சோறு பரிமாறப்பட்டது. தேவனுக்கு அசைவம் மிகவும் பிடிக்கும். அம்மா ஆடு மீன் சமைப்பது உண்டு. மாட்டிறைச்சி பற்றிய கதையே வீட்டில் எடுக்கப்படுவ தில்லை. மாட்டிறைச்சி சாப்பிட்டால் அவர்களை ஊரில் சாண்டாரென ஒதுக்கி வைத்து விடுவார்கள். கிறிஸ்தவர்கள் மாத்திரம் துணிவாக மாட்டிறைச்சி சமைத்துச் சாப்பிடுவார்கள்.

தேவனுக்கு இன்று சாப்பிடுவதா விடுவதா என்கின்ற போராட்டம் இருக்கவில்லை. எப்போது சாப்பாட்டில் கை வைப்பது எனக் காத்திருந்தான். உப்பு குறைவாக இருப்பதாய் ஒருவன் உப்புக் கரைத்து சாப்பாட்டிற்குத் தெளித்தான். இருந்த பசிக்கு உப்புநீரோடு பிசைந்து சாப்பிட அது தேவாமிர்தமாக இருந்தது. எல்லோரும் விறு விறு என சாப்பிட்டனர். சாப்பிட்டு முடியவும் எல்லோருக்கும் உண்ட மயக்கம் கண்ணைச் செம்மியது. நித்திரை கொண்டால் நல்லாக இருக்கும் என தேவன் எண்ணிக் கொண்டு இருந்தான். அவனின் அந்த மம்மலைக் கலைப்பதுபோல் லொறி ஒன்று வந்து சடுதியாக நின்றது. அதில் இருந்து பலர் இறங்கினார்கள்.

தேவன் அவர்களையே பார்த்துக்கொண்டு நின்றான். அவனுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்ததை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை. வந்தவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றவன் அவரைக் கண்டுகொண்டான். அவரும் இவனை அடையாளம் கண்டுகொண்டு அருகில் வந்து கதைக்கத் தொடங்கினார். அவர் முகத்தில் ஏதோ ஒருவித மர்மத்தின் இழை ஓட்டங்கள் மறைந்தும் மறையாததுமாய் ஒளிந்து விளையாடியது. இது ஏன் என்பது தேவனுக்குப் புரியவில்லை.

ஊர் விடயங்கள் எல்லாம் பேசி முடிந்தது. தேவனுக்கு அவரின் சோகத்தை அதன் மர்மத்தைப் பற்றிக் கேட்பதா விடுவதா என்கின்ற போராட்டம். அவரும் அப்படியான ஒரு

நிலையில் நின்று தத்தளிப்பதாய் தேவனுக்குத் தோன்றியது. தேவன் அமைதியாக நின்றான். அவர் நிதானமாய் யோசித்து முடிவெடுத்தவராய் இரகசியமான குரலில், 'நானும் உங்க ளோடதான் B காம்புக்கு வாறன். எனக்கு மஞ்சள் காமாலை நோய். அங்கதான் யோண்டிஸ் வருத்தமான வையைக் கொண்டு வந்து விடுவினம். நீர் இங்க எதுக்கும் எதிர்த்துக் கதையாமல் நல்லபடியாக றெயினிங்கை முடியும். யாரையும் எதிர்த்தோ குறையாகவோ, கதைக்காதையும். மற்றது எல்லாம் உமக்குப் போகப் போக விளங்கும்.'

அவர் கூறவந்த முழுவதையும் கூறி முடித்ததாக நம்ப வில்லை. ஏதோ பட்டும் படாமலும் சொல்லுகிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. மிகுதியைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நட என்பது அதில் மறைந்திருக்கலாம் என அவன் எண்ணிக் கொண்டான்.

'என்னண்ண பயமுறுத்திறியள்?' என்றான் தேவன் மெதுவாக.

'அப்பிடி இல்ல. தேவையில்லாத விசயத்தில் மூக்கை நுழைக்காமல் இருந்தால் சரி' என்றார் அவர்.

தேவன் குழம்பிப் போய் இருந்தான். என்ன நடக்கிறது இங்கே? வந்த இடம் சரிதானா? சக தோழர்களுடன் நாம் கதைப்பதற்குப் பயப்பட வேண்டிய ஒரு காரணமும் உண்டா? தேவனால் ஒன்றையும் நம்ப முடியவில்லை.

தேவன் எவ்வளவு நேரம் யோசித்துக்கொண்டு இருந் தானோ தெரியவில்லை. இருள் ஒளியை விழுங்க இரவு கருமையாகப் பிறந்தது. நேரம் ஏழு மணியாகி இருக்கும். இவர்களைக் கூட்டிக் கொண்டு போய் ஒரு சோடி ஜங்கிள் ஷூ, பாய், ஒரு அலுமினியம் பிளேற், ஒரு கப், ரன்னிங் சோட்ஸ், பெனியன் ஆகியவை கொடுக்கப்பட்டன.

பின்பு சிறிது நேரம் சென்றிருக்கும். 'புதுசாய் வந்த வர்களெல்லாம் அவை அவையின்ர சாமான்களை எடுத்துக் கொண்டு வந்து லொறியில ஏறுங்கோ,' எனப் பலமான குரலில் கட்டளை வந்தது.

எல்லோரும் பரபரப்போடு தங்களது பொருள்களை எடுத்துக்கொண்டு லொறியில் ஏறிக்கொண்டனர். லொறி மெது வாக நகரத் தொடங்கியது. தேவன் ஒவ்வொருவராய்ப் பார்த்தான். மாலையில் கதைத்த நண்பரைக் காணமுடியவில்லை. தன்னோடு வந்தவர்களையும் வண்டியில் வந்த கையோடே எதோ ஒரு முகாமிற்கு அனுப்பிவிட்டார்கள். வருவதாகக் கூறிய அவர் ஏன் வரவில்லை என்பது அவனுக்குப் புரியவில்லை. தேவனுக்கு இது மேலும் குழப்பமாக இருந்தது. ஏன் இவர்கள் இருட்டிய பின்பு முகாமிற்குக் கூட்டிக் கொண்டு போகிறார்கள்? பாதைகள் ஒன்றும் புரியவில்லையே? எதற்காக இந்த ஏற்பாடு? அவனுக்கு எல்லாமே மர்மமாகத் தோன்றியது.

லொறி இருட்டில் பல வழிகளைப் பின்தள்ளி சவுக்குக் காடு வழியாக B முகாமை அடைந்தது. அது திருமங்கலம் என்கின்ற கிராமத்தில் அமைந்திருப்பதை தேவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

திடீரென 'கொல்ட்' என பலமான குரல் ஒன்று அதிர எல்லோரும் என்ன என்பதாய் எட்டிப் பார்த்தார்கள். 'கொல்ட்' என்றவன் கையில் மரக்கட்டையுடனும் ரோச்லைற்றுடனும் சாரதியை நோக்கி வந்தான். பின்பு அவருடன் கதைத்துவிட்டுச் சென்றான். திரும்பிச் சென்று சென்றிப் பொயின்றில் நின்ற மற்றவனுடன் கதைத்தான். மீண்டும் லொறியை நோக்கி வந்தான். பின்னுக்கு எல்லோரையும் வந்து பார்த்து செக் பண்ணிவிட்டு அங்கே இருந்த தடுப்பைத் திறக்குமாறு மற்ற வனுக்குக் கட்டளை இட்டான்.

உள்ளே சென்ற லொறி கரியமிலவாயுவைக் கடைசியாக விட்டு அமைதியாகியது. எல்லோரும் பரபரப்போடு இறங்கி னார்கள். பின்பு பொருள்களை இறக்கி களஞ்சியத்தில் அடுக்கி னார்கள். லொறி சிறிது நேரத்தில் சென்று விட்டது. அதைத் தொடர்ந்து எல்லோரது பெயர்களும் எண்களும் முதலில் பதிவு செய்யப்பட்டன.

B முகாம் சவுக்குத் தோப்புகளுக்கு நடுவே துப்புரவு செய்யப்பட்ட ஒரு தோட்டத்தில் அமைந்திருந்தது. நடுவே வெளியாக விடப்பட்ட பகுதியின் மத்தியில் கொடிக்கம்பத் தோடு அழகுபடுத்தப்பட்ட பகுதி கருவறை போல இருந்தது.

அங்கே நட்சத்திரம் போன்ற வடிவத்திற்குள் சம்மட்டியால் உலகத்தைப் பிணைத்த பின்பு சங்கிலியை உடைப்பதான சித்திரம் சிறு கற்களால் செய்யப்பட்டிருந்தது. அதைத் தழுவிய வண்ணம் பூங்கன்றுகள் வைத்து அழகு படுத்தப்பட்டிருந்தது. இவற்றை உள்ளடக்கி வேலிபோடப்பட்ட மத்திய பகுதி அமைந்திருந்தது. அதற்குள் கொடியேற்றும் அல்லது இறக்கும் நேரத்தில் மட்டுமே போக முடியும். ஏனைய பகுதியும் துப்புர வாக, புல் பூண்டுகளைத் தியாகம் செய்து அகன்று விரிந்து கிடந்தது. கரையோரங்களில் போராளிகள் தங்குவதற்கான முகாம்கள் (பிளட்டூன்கள்) அமைந்திருந்தன. கொடிக்கம்பம் அமைந்துள்ள மத்திய பகுதிக்கும் பிளட்டூன்களுக்கும் இடையில் இருந்த பகுதி பனிஷ்மென்ற் பெறுபவர்களின் வேர்வையை உறிஞ்சும் பகுதியான பாலைவனமாய் நீண்டு கிடந்தது. அது வன்முறையில் வேடிக்கை காணும் மனிதனின் இருண்ட பக்கத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் மைதானமாகத் தேவனுக்குத் தோன்றியது.

முகாமின் தெற்குப் பகுதியில் களிமண்ணால் கட்டப்பட்ட சிறிய அறைகள் இருந்தன. அதன் உயரத்துக்கு மனிதர்கள் எழுந்தே நிற்க முடியாது எனத் தேவனுக்குத் தோன்றியது. ஏன் இப்படியான அறைகள் இங்கு இருக்கின்றன? மீண்டும் குழப்ப மாக, தேவன் அவற்றில் இருந்து பார்வையை வலுக்கட்டாயமாக நகர்த்தினான்.

முகாமின் வாயிலை ஒட்டி மிகவும் சிறிய பிளட்டூன் போன்ற ஒரு கொட்டில் இருந்தது. தென்கிழக்கு மூலையில் சமையல் செய்யும் கொட்டில் இருந்தது. அங்கே சமையல் வேலை நடந்து கொண்டு இருந்தது. என்ன சாப்பாடாக இருக்கும்? மனதில் எழுந்த கேள்விக்கு சற்றுப் பொறுத்திரு எனத் தானே பதில் சொல்லிக் கொண்டான்.

விசில் அடித்ததும் எல்லோரும் எழுந்து சாப்பாட்டிற்குச் சென்றனர். தேவனும் புதிதாகத் தந்திருந்த தட்டை எடுத்துக் கொண்டு சென்றான். புட்டு அவித்து இருந்தார்கள். புட்டுக்குப் பருப்பும் உருளைக் கிழங்கும் போட்டு சாம்பாராக ஒரு கறி வைத்திருந்தார்கள். சாப்பாட்டை வேண்டிக்கொண்டுபோய் ஒரு இடத்தில் இருந்து சாப்பிடத் தொடங்கினான். ஒரு வாய் வைத்ததும் அதைத் துப்புவதா விழுங்குவதா என்ற யோசனை

எழுந்தது. தேவன் பேசாது விழுங்கினான். சாப்பாடு கொட்டினால் பனிஷ்மென்ற் கிடைக்கும் என்பதை யாரோ இன்று கதைத்த போது கேட்டிருந்தான். பயத்தில் பேசாது அள்ளி அள்ளி அதை விழுங்கினான். சாப்பிட்டு முடிந்தபோது சாதுவாக வயிற்றைப் பிரட்டியது. ஓடிச் சென்று சவுக்குத் தோப்பில் வாந்தி எடுத்தான். அம்மாவின் முட்டைப் பொரியலும் உருளைக் கிழங்குப் பொரியலும் கண்முன் வந்து போயிற்று. இருட்டில் எதையும் பார்க்க முடியவில்லை. நீங்கள் புதியவர்கள் என்பதால் இன்று உங்களுக்கு டியூட்டி இல்லை எனப் பிளட்டூன் பொறுப் பாளர் கூறியிருந்தார். சத்தி எடுத்த களைப்பில் தேவன் வேக மாகத்தூங்கிப் போய்விட்டான்.

விடிந்தும் விடியாமலும் இருந்த வேளையில் விசில் சத்தம் கேட்டுத் தேவன் திடுக்கிட்டு எழும்பினான். காலைத் தேநீர் வழங்கப்பட்டுக் கொண்டு இருந்தது. வெறும் தேநீர் வெல்லக்கட்டியோடு வழங்கப்பட்டது. தேவன் வேண்டிப் பருகினான்.

பின்பு எல்லோரும் சுறுசுறுப்பாக காலைக்கடனைக் கழிப்பதற்காகச் சென்றுகொண்டு இருந்தனர். நிலவன் தேவனைப் பார்த்தவண்ணம் நின்றான். அதையுணர்ந்த தேவனும் பற்பொடியை சிறிதளவு கையில் கொட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டான். நிலவன் 'என்கின்ற தோழர் ஒரு மாதமாக B காம்பில் இருந்து வருகிறார். அவரைத்தான் இவர் களுக்கு உதவியாக இருக்கும்படி பிளட்டூன் பொறுப்பாளர் கூறியிருந்தார். நிலவனும் அதைச் சிரத்தையோடு செயற்படுத்தி னான். அவன் தேவன்மேல் அதிக நட்புப் பாராட்டினான்.

எல்லோரும் கதைத்துக் கதைத்து வயல்கள் ஊடாக சவுக்குத் தோப்பொன்றை நோக்கிச் சென்று கொண்டு இருந்தார் கள். அப்போது நிலவன் ஒரு அறையைக் காட்டி, 'இதுதான் மோட்டார் ரூம். உந்தப் பண்ணையார் பொல்லாத ஆள். அவர் ஒருநாள் வேலை செய்ய வந்த ஒரு குமர்ப்பெட்டையைத் தூக்கிக் கொண்டுபோய் அநியாயம் செய்து போட்டார். அவரை எதிர்த்து இங்க ஒருத்தரும் ஒண்டும் கதைக்கேலாது. அந்தப் பெட்டையை பிறகு வேலை செய்யிறவன் ஒருத்தனைக் கூப்பிட்டு கூட்டிக் கொண்டு போகச் சொல்லிப் போட்டார். அவனும் கூட்டிக் கொண்டு போயிட்டான். இல்லாட்டி என்ன நடக்கும் எண்டு

அவனுக்குத் தெரியும்தானே. பாவங்கள்... இப்பிடி எத்தின பெட்டையளை உந்தப் பண்ணையார் பதம் பார்த்திருப்பாரோ தெரியாது. ஒருத்தரும் அவரை ஒண்டும் செய்யேலாது. எல்லாரும் அவரின்ர காணியில வேலை செய்யிற கூலிக்காரர்கள்தானே?'

'ம்.... பாவங்கள்' என்றான் தேவன். அவனுக்கு அதை எண்ண மிகவும் வேதனையாக இருந்தது. இப்படியானவர் களின் தயவை எங்கள் போராட்டம் நாடுவதே அவனுக்கு அவமானமாய் இருந்தது. மனிதநேயமற்ற மனிதர்களின் நிழலே எங்கள் போராட்டத்தில் படுவது எமது இனத்திற்கும் அதன் போராட்டத்திற்கும் அபகீர்த்தியை உண்டுபண்ணும் என அவனுக்குத் தோன்றியது.

'திறந்த வெளி மலசலகூடமான சவுக்குத் தோப்பில், இயற்கையின் அவதியை அடக்கம் செய்துவிட்டு, ஒவ்வொரு வராக எழுந்துகொள்ள தேவனும் எழுந்துகொண்டான். கழுவுவதற் குச் சிறிது தூரம் நடந்து வாய்க் காலுக்குச் செல்ல வேண்டும். வாய்க்காலின் முதற்பகுதியில் அடிக் கழுவிவிட்டு பின்பு சிறிது முன்பாக நகர்ந்து முகம் கழுவத் தொடங்கினார்கள். தேவனுக்கு அருவருப்பாக இருந்தது.

'ஒரே வாய்க்காலிலேயா?' நம்பமுடியாது கேட்டான் தேவன்.

நிலவன் ஆறுதலாக, 'இது ஓடற தண்ணி. நாங்கள் முன்னுக்கு போய்த்தானே முகம் கழுவுறம். உதெல்லாம் ஒண்டும் இங்க பார்க்கேலாது, இதைவிட நிறைய விடயங்கள்ல விட்டுக் கொடுத்து நடக்க வேண்டி வரும்,' என அவன் விளக்கம் கொடுத்தான். தேவன் அதன் பின்பு எதுவும் கதையாது முகம் கழுவினான். அவனுக்கு அருவருப்பு மாத்திரம் மாறவில்லை.

காலை பரேட் கூடி இருந்தது. அப்போது நன்கு விடிந்திருந்ததில் முகாமை தேவனால் முழுமையாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. வடக்குப் பக்கத்தில் இருந்த களிமண் கட்ட டத்தைப் பார்த்தபோதெல்லாம் ஒருவித திகில் அவனைச் சூழ்ந்து கொள்வதாகத் தேவன் உணர்ந்தான். தெற்குப் பக்கமாக வயலை ஒட்டி இருந்த கொட்டிலில் மணியத்தை வைத்திருப்பதாக கேள்விப்பட்டிருந்தான். யார் இந்த மணியம்? எதற்காக இங்கே வைத்திருக்கிறார்கள்? நீதி வழங்கும் அந்தஸ்தை யார் இவர்களுக்கு

வழங்கியது? கேள்விகள் சிக்கலில் மாட்டும் என்று ஓரத்தநாட்டு அலுவலகத்தில் கேட்ட அறிவுரை மீண்டும் ஞாபகம் வந்தது. தேவன் பரேட்டில் கவனம் செலுத்தினான். எண்ணும் பெயரும் வாசித்து எல்லோரும் உள்ளார்கள் என்பது உறுதிப்படுத்தப் பட்டது. அதன் பின்பு பரேட் கலைக்கப்பட்டு, எல்லோரையும் கிரவுண்டிற்குப் போகுமாறு கட்டளை இட்டார்கள்.

நிலவன் தேவனோடு சமமாக ஓடிக்கொண்டு இருந்தான். திடீரென மெதுவான குரலில், 'ஸ்ரீபன் அங்க பார் அந்த சிவப்பா இருக்கிறதுதான் கந்தசாமி. பக்கத்தில வாறதுதான் மொக்கு முருகன். இந்தக் காம்பில நீ இருக்கிறவரைக்கும் சரியான கவனமா இருக்கோணும். எதும் இசகு பிசகாக மாட்டுப்பட்டா நேரடியாவே அவையிட்டப் போக வேண்டியதுதான். போனவை யாரும் திரும்பி வாறதா சரித்திரம் இல்லை,' கூறிவிட்டு நிலவன் அமைதியாகிவிட்டான். தேவனுக்கு எல்லாம் மர்மமாக இருந்தது. போராட்டத்தில் நடக்கக்கூடாத தவறுகள் சில இங்கு நடப்பதான உணர்வு அவனைப் பற்றிக்கொண்டது. தேவன் சொல்லிழந்தவனாய் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

நிலவன் பின்பு திடீரென மீண்டும் பேச ஆரம்பித்தான். 'காலையில வைக்கிற பரேட்தான் முக்கியமானது. சில வேளையில இரவில யாரும் தப்பி ஓடினா காலமையில வைக்கிற பரேட்டில எப்பிடியும் கண்டு பிடிச்சிடுவினம். பிறகு தேடல் விசாரணை கெடுபிடி எண்டு ஒரே அலங்கோலமாய் இருக்கும்.'

'அப்பிடி யாரும் ஓடி இருக்கினமே?'

'ஓ அது நெடுக நடக்கும். இந்தியா போய் வாறது எண்டா, ஏதோ அப்பிள் தோட்டத்துக்கு ரூர் போட்டு வாறமாதிரி சிலர் நினைச்சுக் கொண்டு வருகினம். ஆனா இஞ்ச சவுக்குக்காட்டுக்க வைச்சு வதக்கிற வதக்கில எங்க பிச்சுக் கொண்டு ஓடலாம் எண்டு பார்த்துக் கொண்டு இருப்பினம். சந்தர்ப்பம் கிடைச்சா ஆபத்தைப் பற்றின ஒழுங்கான கணிப்பு இல்லாமல் ஓடுவினம். இப்பிடியெல்லாம் நடக்குமெண்டு முகாம் நடத்துறவைக்குத் தெரியாதோ? அவையும் இரகசியமா உளவு எடுத்துக் கொண்டு திரிவினம். இப்ப வர்மனுக்குத் தெரியும் யார் யார் சந்தேகத்துக்கு இடமான ஆட்கள் எண்டு. அவையிலு எப்பவும் அவனுக்கு ஒரு கண் இருக்கும்.'

'அப்பிடி ஓடி யாரையும் பிடிச்சுக் கொண்டு வந்தவையே?'

'அநேகமாக எல்லாரையும் பிடிச்சுக் கொண்டு வந்திடுவாங்கள். வேறயொரு காம்பில ஒருக்கா மாத்திரம் ஓடினவன் பண்ணையார் ஒருத்தனிட்ட அடைக்கலம் புகுந்திட்டானாம். வாக்குவாதத்தில் இவங்கள் பண்ணையாரைச் சுட்டுப் போட்டாங்களாம். பிறகு எம்.ஜி.ஆர் ஊரில் உள்ளவையோட கதைச்சு ஒரு மாதிரி அதை அமுக்கிப் போட்டார் எண்டு ஒரு கதை சொல்லுவாங்கள். உண்மை பொய் ஒருத்தருக்கும் ஒழுங்காத் தெரியாது.'

'ஆள்களைப் பிடிச்சந்தா என்ன செய்வினம்?'

'கொஞ்சநாள் பொறும்... அந்தக் கண்றாவிய நீரே நேர பாப்பீர்.'

நிலவன் முகத்தை சோகத்தோடு மறுபக்கம் திருப்பிக் கொண்டான். தேவனும் தாங்கள் மைதானத்திற்கு வந்து சேர்ந்து விட்டதை உணர்ந்து கொண்டான்.

பயிற்சி கடுமையான வாட்டலாக இருந்தது. முதலில் ஓட்டம், அதன் பின்பு உடற்பயிற்சி என கசக்கிப் பிழிந்தார்கள். தேவனுக்கு எச்சில் காய்ந்து நாவும் இதழும் ஒட்டிக் கொண்டு பிரிய மறுத்தன. உடல் சக்தி இழந்து கோதாக தள்ளாடியது. நேற்று இரவு சாப்பிட்ட சாப்பாடும் வெளியே வந்தபின்பு வயிறு வெறுமையாகவே இருந்தது. காலை குடித்த பிளேன் ரீயில் ஒன்றும் இருக்கவில்லை. பசி குடலைக் காந்தத் தொடங்கி இருந்தது. அந்தக் கணத்திலும் மனம் சோராது தேவன் எல்லாப் பயிற்சிகளையும் ஒழுங்காகச் செய்தான். அரை குறையாகச் செய்து பிடிபட்டால் அதற்கு தண்டனையாக இன்னும் அதிகம் பயிற்சி செய்ய வேண்டும் என்பதை அவன் அன்றே கற்றுக் கொண்டான்.

பயிற்சிகள் முடிந்து முகாமிற்குத் திரும்பி வரவும் காலைச் சாப்பாடு வழங்கப்பட்டது. வழமையாக ஒரு பேணி அவித்த கொண்டைக் கடலையும், ஒரு கப் பாலும் கொடுக்கப்பட்டது. இன்று அதற்குப் பதிலாக இனிப்புப் பாணும் வாழைப்பழமும் கொடுக்கப் பட்டது. அத்துடன் அளவு பாலும் கொடுக்கப்பட்டது. தேவனுக்கு இருந்த பசிக்கு அவை தெவிட்டாத தேனமு

தாகியது. மேலும் நிறையச் சாப்பிட வேண்டும் போல் ஆசையாக இருந்தது. அதற்கு வழியில்லை என்பதைப் புரிந்து கொண்ட வனாய், பிளேற்றையும் பேணியையும் கழுவிவைத்துவிட்டுப் பிளட்டூனுக்குள் போய் அமர்ந்து கொண்டான். வெய்யில் சூடேற்றிய அனல்காற்று மெதுவாக மிதந்து பிளட்டூனுக்குள் தலை நீட்டிப் பார்த்தது. தேவனுக்கு அது ஒரு வித அவஸ் தையைத் தந்தது. ஊரில் என்னதான் வெயில் என்றாலும் அது அனல்காற்றாய் எரிப்பதில்லை. இங்கு அது சாதாரணம் என்பதைத் தேவன் விரைவாகப் புரிந்து கொண்டான்.

தேவன் களிமண் கட்டடத்தை ஒரு முறை பார்த்தான். உள்ளே எப்படி இருக்கும்? யார் அங்கே இருக்கிறார்கள்? என்பதை அறிய வேண்டும் என ஆவலாய் இருந்தது. தேவையில்லாத விடயத்தில் மூக்கை நுழைத்து, மாட்டிக் கொள்ளக்கூடாது என்கின்ற அடிமனதின் எச்சரிக்கையை ஏற்று பேசாது இருந்தான்.

பதினொரு மணிபோல் மீண்டும் விசில் அடிக்கப்பட்டது. எல்லோரும் பரேட்டில் அணிவகுத்து நின்றனர். தேவனும் அவர்களோடு நின்றான். இந்த வெயிலில் என்ன செய்ய முடியும்? எங்கு கூட்டிச் செல்லப் போகிறார்கள்? தேவன் பக்கத்தில் நின்ற நிலவனைப் பாத்து, 'இப்ப எதுக்கு இந்தப் பரேட்?' என்றான்.

'காலமையில உடற்பயிற்சி மட்டும்தானே செய்யிறம். இப்ப இராணுவப் பயிற்சிகள் தரப்படும். பிறகு வந்து குளிக்க லாம். அதுக்குப் பிறகு சாப்பாடு....'

'இந்த வெய்யில்ல றெயினிங்கா?'

'இராணுவத்தில் வெயிலும் மழையும் பாக்கிறேல்ல. இதைவிட கஷ்ரமாய் இருக்குமாம் கொமாண்டோ றெயினிங்.'

'ஓ!'

அனலாக எரிக்கும் வெயிலில் வைத்து இவர்களுக்கு சமர்சொட், கிறவலிங் எனப் பல பயிற்சிகள் அளித்தார்கள். தேவனின் சக்தியை ஆதவன் ஆக்ரோசமாய் உறிஞ்சியது போன்று இருந்தது. அந்த அவஸ்தையை எதிர்த்து விடாமுயற்சியோடு எல்லாப் பயிற்சிகளையும் செய்து முடித்தான்.

பயிற்சி முடிய எல்லோரும் குளிக்கச் சென்றார்கள். நிலவன் தேவனை சிறிது தூரத்தில் உள்ள வாய்க்காலுக்குக் கூட்டிச் சென்றான். அவ்வளவு தூரம் சென்று மற்றவர்கள் குளிக்காத தால் அங்கு துப்புரவாய் இருக்கும் எனவும் நிலவன் விளக்கம் கூறினான். அதற்கு முன்பு யாரும் குளித்துக்கொண்டு இருந்தால் இதுவும் எப்படித் துப்புரவாய் இருக்கும் எனத் தேவனுக்கு எண்ணத் தோன்றியது. தேவன் அதை நிலவனிடம் சொல்லாது விழுங்கிக் கொண்டான்.

குளித்துவிட்டு வந்த போது சுள்ளிடும் பசி தேவனின் வயிற்றைக் கூரிய நகம் கொண்டு பிறாண்டியது. அப்போது சாப் பாடு கொடுக்கத் தொடங்கி இருந்தமை. அவனுக்கு பெரு மகிழ்ச்சியைத் தந்தது. தட்டை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்றான். நிலவனும் தேவனோடு வந்தான். சோறும் எருமைமாட்டு இறைச்சியும் பீற்றூட் கறியும் தரப் பட்டது. தேவன் சாப்பாட்டை வேண்டிக் கொண்டு நிழல்பார்த்து அமர்ந்தான். பின்பு அதைச் சாப்பிடத் தொடங்கினான். எருமை மாட்டு இறைச்சி காரமாகவும் சுவை குறைவாகவும் இருந்தது. இருந்த பசியில் தேவன் அவசர அவசரமாக அதை அள்ளிச் சாப்பிட்டான். கை கழுவும்போது எருமைமாட்டின் கொழுப்பு நகரமறுத்து ஒட்டிக்கொண்டு இருந்தது. தேவன் எதுவும் செய்ய முடியாதவனாய் கையைத் தனது சாறத்தில் துடைத்துக் கொண்டான்.

அடுத்து வந்த சிலநாள்கள் இயந்திரமயமான பயிற்சிகளில் விரைவாகக் கரைந்து போயிற்று. ஒருநாள் இரவு தேவன் திடுக் கிட்டு எழுந்து கொண்டான். ஒருகணம் தான் எங்கே இருக்கி றான் என்பதை அவனால் நிதானிக்க முடியவில்லை. பின்பு சகதோழர்களைப் பார்த்தபின்பு நிலைமையைப் புரிந்து கொண்டான். அவசர அவசரமாக ரன்னிங் சோட்சை இழுத்துப் போட்டுக் கொண்டு மற்றைய தோழர்களின் பின்னால் ஓடினான்.

சவுக்குத் தோப்புகள் பனிப்புகாரோடு போராடிக் கொண்டி ருந்த நேரம் அது. மேனி சில்லிடும் பனியுண்ட காற்றின் முரட்டு உரசல் ஈவு இரக்கமின்றி அடித்து முறித்துக் கொண்டு சென்றது. நேரம் நாலுமணி இருக்குமா? தேவனிடம் மணி பார்ப்பதற்கு கடிகாரம் இருக்கவில்லை. அப்படித்தான் இருக்க வேண்டும் அல்லது சற்று முன் பின்னாக இருக்கலாம்.

இந்த நேரத்தில் எதற்கு விசில்? நித்திரை கொள்வதை ஏன் குழப்பினார்கள்? இப்படித்தானா இருக்கும் இந்தப் பயிற்சிக் காலம் முழுவதும்? குழம்பியவண்ணம் தேவன் பரேட்டில் நின்றான். நிலவனும் நித்திரையோடு போராடுபவனாய் பக்கத்தில் நின்றான். ஒவ்வொரு பிளட்டூனாக பெயர் வாசிக்கப்பட்டு எண்களைச் சரி பார்த்தார்கள். இரு எண்கள் தவறிற்று. மீண்டும் மீண்டும் எண்ணினார்கள். இரு எண்கள் நிரந்தரமாகத் தவறின. தவறிய எண் நிரந்தரமாகத் தவறியதில் அங்கே ஒருவித திகில் பரவத் தொடங்கி இருந்தது. பக்கத்தில் நின்ற நிலவன் மெல்லிய குரலில், 'இண்டைக்கு இனித் திருவிழாதான்' என்றான்.

'என்ன சொல்லறா?'

'அதுதான் இரண்டு மிஸ்பண்ணறதில இருந்தே அவங்கள் ஓடிப்போட்டாங்கள் எண்டு தெரியுது. ஆரும் ஓடினா எல்லோருக்கும்தானே பிரச்சனை. யாரையும் சந்தேகப்படலாம். யாருக்கும் அடிவிழலாம்.'

'உண்மையா?'

'அப்ப, முஸ்பாத்திக்கு சொல்லுறன் எண்டு நினைக்கிறியே?' என்றான் நிலவன் கிண்டலாக.

தேவனுக்கு தலைசுற்றியது. போராட்டம் என்கின்ற பெயரில் வன்முறையில் காதல் கொண்டு, சந்தேகத்திலே குடியிருக்கும், மனிதநேயம் அற்ற விலங்குகளிடம் அகப்பட்டதான அவஸ்தையில் நெளிந்தான். பின்பு தனது நெளியலே தன்னைச் சிக்கலில் மாட்டி விட்டுவிடும் என்கின்ற பயத்தில் சாதாரணமாக நிற்க முயற்சி செய்தான்.

முகாம் பொறுப்பாளருக்கும் உளவுப் படைக்கும் நம்பிக்கைக்கு உரியவர்கள் சிலரை எடுத்து, சிறு குழுக்களாகப் பிரித்து, தேடுவதற்கு அனுப்பி வைத்தனர். இனி இவர்கள் வரும் வரைக்கும் அசோகவனத்து சீதைகளாய் இராமனை அல்ல இராவணனை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவதியில் அநேகமான தோழர்கள் நெளிந்தனர்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்த முகாம் பொறுப்பாளர் ஓடியவர்களுக்கு மிகவும் நெருங்கிய இருவரைக் கூட்டிச்

சென்றார். அவர்கள் வேள்விக்கு வெட்டக் கொண்டு போகும் ஆட்களாய் மருட்சியோடு சென்றார்கள். நிலவன் அவர்களைப் பரிதாபமாய்ப் பார்த்தான். தேவனுக்கு தலை சுற்றியது.

ஒவ்வொரு அசைவிலும் அங்கு சந்தேகம் புரையோடிப் போய் இருந்தது. பரேட் கூட்டி ஒருமணி நேரம் இருக்கும். கால் கடுக்க நின்றவர்களிடம் களைப்பின் சாயல் கனதியாகியது. பிரச்சனை இப்போது தீராது என்பதாய் நிலவன் அலுத்துக் கொண்டான். அவன் நினைத்தது சரியாக இருந்தது. எல்லோ ரையும் அப்படியே நிலத்தில் இருக்கும்படி கட்டளை வந்தது. நேரம் பஞ்சி பிடித்ததாய் அசைய மறுத்தது. பயங்கர அமைதி நிலவைப் பேயாக உருமாற்றிக் காட்டியது. பனிப்புக்காரைக் கிழித்து விடியல் மெதுவாக முன்னே வந்தது. சூரியன் சுட்டெரித்ததில் பொய் மேகங்கள் கலைந்து ஓடிற்று. போனவர் கள் திரும்பி வராததால் எந்த முடிவுமற்றவராய், அவரவர் இடத்தில் அலுப்போடு எல்லோரும் காத்திருந்தனர்.

ஏழுமணி இருக்கும். கார் ஒன்று வந்து நிற்க அதில் இருந்து அந்த இருவரும் இறக்கப் பட்டனர். ஓடிய இருவரும் இலங்கையில் வடமராட்சியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள். சுழிபுரத்து மையப் புதல்வர்களுக்கு அது இன்னும் அதிக சந்தேக த்தை அள்ளி வழங்கியது. அவர்களிடம் ஏற்கனவே என்ன விச ாரணை நடத்தினார்கள் என்பது பற்றி பரேட்டில் நின்ற எவருக்கும் எதுவும் தெரியாது.

விசில் அடித்தார்கள். எல்லோரையும் கொடிக்கம்பம் அமைந்த மத்திய பகுதியைச் சுற்றி இடைவெளி விட்டு நிற்குமாறு பணித்தார்கள். எல்லோரும் அதற்கமைய நின்று கொண்டார்கள். அந்த இருவரையும் கொடிக்கம்பம் உள்ள மத்திய பகுதியைச் சுற்றி பாலைவனத்தில் ஓடவிட்டார்கள்.

தேவனுக்கு அவர்களைப் பார்த்த போது மயக்கம் வருவது போல இருந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டான். இப்படியா செய்வார்கள்? அந்தக் கேள்வி கொட்டவரும் குளவியாக அவன் காதிற்குள் ரீங்காரமிட்டது. அது கலைத்தாலும் போகாது தலையைச் சுற்றிச் சுற்றி வந்தது. அவர்களைப் பிடித்தது தொடக்கம் இடைவெளி இல்லாது தாக்கி இருக்கிறார்கள் என்பதை தேவன் ஊகித்துக் கொண்டான். உடம்பு அங்கங்கே

ஊதிப் பெருத்து வீங்கி இருந்தது. சில இடங்களில் தோல் வெடித்து, இரத்தம் கசிந்து கொண்டு இருந்தது. இருவருக்கும் காலில் பலமாக அடித்திருக்க வேண்டும். இழுத்து இழுத்து நடந்தார்கள். ஓடக்கூடாது என்பதற்காக கால்களை முறித்திருப்பார்கள் என தேவன் எண்ணிக் கொண்டான். அவர்கள் ஒருவரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை .அவமானத்தில் கூனிக் குறுகிப் போய் இருந் தார்கள். எல்லோரும் திகிலுடன் அவர்களைப் பார்த்துக்கொண்டு இருந்தனர். பலர் அவர்களுக்காய் அனுதாபப்பட்டாலும் சிலரின் பார்வையில் இருந்து உங்களுக்கு வேண்டும் என்கின்ற வன்மம் தெறித்தது. மனித எண்ணங்கள் திசையற்றது. சிரசில் தொங்கும் இரசாயனத்தில் பாயும் மின்சாரத்தில் உருவாகும் சிந்தனைகளைக் கொண்டது. அது எதை எண்ணும், எப்படி நடக்கும் என்பதை எவரும் உத்தேசித்து விடமுடியாது. அதை நினைக்க தேவனுக்கு வேதனையாக இருந்தது. எதுவுமே செய்ய முடியாதவனாய் அவன் உறைந்து போய் அங்கு நின்றான்.

அவர்களை ஓடுமாறு பயிற்சி கொடுப்பவர் அதட்டினார். வன்முறையின் பயங்கரத்தில் வறுத்தெடுக்கப்பட்ட மருட்சியில் காலை இழுத்து இழுத்து அவர்கள் ஓடத் தொடங்கினார்கள்.

அப்போது உளவுப்பிரிவும் அங்கே வந்து சேர்ந்தது. அது மேலும் தோழர்களுக்கு திகிலை அதிகரித்தது. அதில் மொக்கு முருகனும் இன்னும் ஒருவனும் கையில் கட்டைகளைக் கொண்டு வந்தார்கள். அது முகாமில் ஆயுதமாகப் பாசாங்கு செய்வதற்குப் பயன்படுத்தும் சவுக்குக் கட்டைகள். சிறிது நேரத்தில் கந்த சாமி அங்கு வந்து சேர்ந்தார். அவர் கையில் துப்பாக்கி இருந்தது. தேவன் அவரைப் பார்த்துவிட்டு நிலவனை கேள்விக்குறியோடு பார்த்தான்.

பக்கத்தில் நின்ற நிலவன், 'அவர்தான் உளவுத்துறைப் பொறுப்பாளர்,' என்றான்.

'தெரியும்...'

'ம்... சிக் காம்பில அரசியல் பிரச்சனைப் பட்டவைய பனிஷ் மென்டிற்காய் இஞ்ச கொண்டு வந்திருக்கினம். அதைக் கவனிக்கத்தான் அவர் இங்க நிற்கிறார்.'

'என்ன கவனிப்பு?' தேவன் அறியாது கேட்டான்.

நிலவன் நமட்டுச் சிரிப்பு சிரித்த வண்ணம், 'போகப் போக அதை நீயே அறிவாய்.'

இவர்களின் அந்தக் குசுகுசுப்பை, ஓடு ஓடு என்கின்ற பயிற்சி கொடுப்பவரின் கர்ஜிப்பு நிறுத்தியது. அவரின் கர்ஜிப்பில் மேலும் வெருட்சியுடன் அந்த இருவரும் இழுத்து இழுத்து ஓடினார்கள்.

'இன்னும் பாஸ்ரா ஓடுங்கடா.' மொக்கு முருகன் கத்தினான். அவர்கள் காயப்பட்ட பறவைகளாகக் கெந்தி அடித்தனர். தேவனுக்குப் பார்ப்பதற்கு பரிதாபமாய் இருந்தது. சிலர் அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். முகாமை விட்டு ஓடுவது தப்புத்தான். அதற்காக அவர்களை இப்படிச் சித்திரவதை செய்வது எந்த விதத்தில் நியாயமாகும்? அவர்கள் யாருக்காக வந்தார்கள்? எதற்காக வந்தார்கள்? இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள்? இப்படிச் செய்தால் இவர்களுக்கும் சிங்கள ஆமிக்கும் என்ன வித்தியாசம்? இதுதான் விடுதலைப் போராட்டமா? எதில் விடுதலை? எப்படி விடுதலை? தேவன் மனதில் முளைத்த கேள்விகளால் குழம்பிப் போயிருந்தான்.

மொக்கு முருகன் திடீரென கட்டையை ஒருவனின் காலை நோக்கி வீசினான். சிறிது நேரத்தில் மற்றையவன் அடுத்தவனின் காலை நோக்கி கட்டையை வீசினான். அவர்கள் ஐயோ அம்மா என்ற வண்ணம் கீழே விழுந்தனர். முருகன் பாய்ந்து சென்று காலால் உதைத்தான். அப்படியே அடுத்தவனையும் மாறி மாறி உதைத்தனர். அவர்கள் வேதனையால் முனகினர்.

கட்டையைக் கையில் எடுத்த முருகன் அவர்களை மீண்டும் மீண்டும் தாக்கியவண்ணம் ஓடுங்கடா ஓடுங்கடா என்று வெறி கொண்டு கத்தினான். பார்த்துக் கொண்டு நின்ற பலர் உறைந்து போய் இருந்தனர். அடிவேண்டியவர்கள் மீண்டும் தட்டுத்தடுமாறி எழுந்து ஓடத் தொடங்கினார்கள். மீண்டும் சிறிது நேரத்தில் அவர்களின் காலை நோக்கி கட்டை வீசப்பட்டது. நோவில் விழுந்து துடித்தவர்களை மிருகமாய் ஏறி மிதித்தனர். சூரியனுக்கும் சந்திரனுக்கும் கண்ணீர் இல்லையெனத் தேவனுக்குப் புலவனாகிற்று.

தேவனுக்கு மீண்டும் தலை சுற்றுவது போல இருந்தது. கொட்டாவி கொட்டாவியாக வந்தது. மயக்கம் வந்து விடுமோ

எனப் பயமாக இருந்தது. மயக்கம் வந்தால் அதற்கும் ஏதாவது தண்டிப்பார்களா என்பது பற்றி அவனுக்குப் பயமாக இருந்தது. அப்படியே நிலத்தில் இருந்தால் நல்லாய் இருக்கும் போல் இருந்தது. அப்படி இருந்தாலும் அதற்கும் பனிஷ்மென்ற் கிடைக்குமோ? மீண்டும் கேள்விக்குப் பதில் தெரியாது போக செய்வதறியாது நின்றான்.

இடைவிடாது அவர்களை அதேபாணியில் தாக்கினார்கள். கடைசியாக ஓடியவர்கள் உளவுப்படையின் தொடர் அடிகளால் மூச்சுப் பேச்சில்லாது அசையாது கிடந்தனர். கிடந்தவர்களை சிக் பிளட்டூனுக்கு இழுத்துக் கொண்டு போனார்கள். பின்பு எல்லோரையும் கிறவுண்டை நோக்கி ஓடுமாறு கட்டளை இட்டார்கள். தேவனும் கிறவுண்டை நோக்கி ஓடினான். மனம் எங்கோ ஓடிக் கொண்டு இருந்தது.

கிறவுண்டை நோக்கி ஓடிக்கொண்டு இருக்கும்போது நிலவன் திடீரெனத் தேவனைப் பார்த்து, 'ஏன் இப்பிடி எல்லாரையும் சுத்தி நிற்கவிட்டு பனிஷ்மென்ட் குடுக்கிறவங்கள் தெரியுமே?' என்று கேட்டான்.

'ம்... கற்காலப் பாணியிலான நடைமுறை. மற்றவர்களும் ஓடினா இதுதான் கிடைக்கும் என்கின்ற அபாய அறிவிப்பு, பயமுறுத்தல். மட்டமான உதாரணங்கள். மடத்தனமான தண்டனைகள்'.

'சூ..' என்றான் நிலவன். பின்பு அவன் வாயில் விரல் வைத்துக் காட்டினான். மீண்டும் மெல்லிய குரலில், 'என்னையும் மாட்டி விட்டிடாத ஸ்ரீபன்,' என்றான்.

தேவன் தனது தப்புக்கு வருந்தி, சொறி சொறி என்றான்.

பேச்சு சுதந்திரத்தையே பறித்துவிட்ட ஓட்டம் எந்த உரிமையை வென்றுதரும் என்கின்ற கேள்வியே அன்று தேவன் முன்பு பூதாகரமாய் எழுந்து நின்றது.

இந்த இயக்கங்கள் குற்றவாளிகள் பதுங்கிக் கொள்ளும் அரசியல் மறைவிடமாகப் போயிருப்பதை தேவன் மெதுவாக உணர்ந்து கொண்டான். ஆயிரம் வாதங்கள் பிரதிவாதங்கள் நடந்தாலும், இயக்கங்கள் அரசியல் தெளிவோடு, அரசியல் தெளிவு

உள்ளவர்களால் மட்டும் ஆரம்பிக்கப்பட்டது அல்ல. ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில் கொன்றால் கிடைக்கும் ஈழம் என்கின்ற எண்ணத்தில் பிறந்தவை. பிற்காலத்தில் குற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, விடுதலை என்கின்ற பெயரில், உள்ளே நுழைந்துவிட்ட குற்றவாளிகளால் நிரம்பி வழியும் அமைப்புகளாகி இருக்கின்றன. இதற்கு மாக்சீயம் என்கின்ற ஊர்போய்ச் சேராத வியாக்கியானத்தை முகமூடியாக்கி இருக்கிறார்கள்.

83 ஆம் ஆண்டுக் கலவரத்தோடு அப்பாவிகளான ஏராளமான தோழர்கள் அகப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். இங்கே அடைக்கலமான குற்றவாளிகள் எதிரியையும், சந்தேகத் துக்கு உரியவர்களையும் கொலை செய்வதிலேயே குறியாக இருப்பதாய்த் தோன்றியது. கொலையின் கருவிலே பிறந்த இயக்கங்கள் இவை. அதன் வளர்ச்சி மிகவும் கோரமாக இருக் கிறது. விடுதலைக்கும் இவர்கள் நடைமுறைக்கும் வெகுதூர இடைவெளி இருப்பதைக் கண்டு தேவன் சோர்ந்து போனான். விடிவு நோக்கிப் புறப்பட்ட இவர்களுக்கு மனித வாழ்வின் முடிவுகள் பாடங்கள் ஆக்கப்படுவதில் தேவன் அதிர்ந்து போய் இருந்தான்.

அடுத்தநாள் பயிற்சி முடிந்தபின்பு தேவன் தலையிடி காரணமாக வருத்தக்காரரை வைத்திருக்கும் கொட்டிலுக்குள் நுழைந்தான். அங்கேதான் மருந்து தரப்படும். உள்ளே சென்ற தேவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது, நேற்று அடிவேண்டியவர்கள் இருமடங்காக வீக்கத்தில் படுத்திருந்தனர். நல்ல வேளையாக அவர்கள் இறந்து விடவில்லை. மேனி முழுதும் வீங்கி பூரியாய் ஊதிப் போய் இருந்தது. வீக்கத்தை தணிப்பதற்கு ஏதோ பச்சை நிறமான எண்ணை பூசி இருந்தார்கள். வீங்கி பின்பு எண்ணையில் புரண்ட உடம்பு, தின்று கொழுத்த குத்துச் சண்டை வீரர்கள் விழுந்து படுக்கும் தோற்றத்தை அவர்களுக்குக் கொடுத்து இருந்தது. இன்னும் வேதனையோடு வரும் முனகல் தேவனின் நெஞ்சை உருக்கியது. ஓடுவது தப்பு என்றாலும் மிருகத்தனமான தண்டனையை மனிதனால் நியாயப்படுத்த முடியுமா? என்ன செய்ய முடியும்? சந்தேகத்திற்கு வாழ்க்கைப்பட்டவரிடம் இருந்து தப்பித்து ஓடுவதும், பூலோகத்தில் வாழும் எமன்களிடம் உயிர்ப்பிச்சை கேட்பதும் ஒன்றுதானே? பூலோகத்தில் வாழும்

எமன்களிடம் போராட்டம் போய்விட்டால் அது எப்படி இருக்கும்? இது வருங்காலத்தைப் பற்றிய ஒரு சிறிய சுவைப்பா?

தேவன் யோசனையோடு டொக்ரர் எனப்படும் நேர்சிங் படிப்பு முடித்தவர் முன்பு போய் நின்றான்.

'என்ன வேணும் ?' என்றார் அவர்.

'சரியாத் தலையிடிக்குது.'

'அது வெய்யிலுக்கு இடிக்கும்.'

'தாங்க முடியேல்ல.'

தேவனை ஒருமுறை அவர் ப்பார்த்துவிட்டு, இரண்டு பனடோல் எடுத்துக் கொடுத்தார்.

24

அன்று தேவன் 'தேவாண்' எனப்படும் சுரங்கப் புகையிரத திற்காய்க் காத்திருந்தான். வாட்டும் குளிரிலும் அன்றைய கடமையைச் செய்வதில் பின்னடிக்காத நோர்வே மக்கள் சுறுசுறுப் பாய் இயங்கிக் கொண்டு இருந்தனர். தேவனுக்கு தேவாணில் ஏறிய பின்புதான் குளிரிடம் இருந்து தப்பிய நிம்மதி கிடைத் தது. தேவாண் விரைவாக நாஸ்னால் தியேட்டரை அடைந்து விட்டது. தேவன் நாஸ்னால் தியேட்டரில் இறங்கி லீசாக்கர் போவதற்கு மற்றைய றெயின் பிடிக்க வேண்டி இருந்தது. தேவன் அவசரமாய் தேவாணில் இருந்து இறங்கி மறுபக்கம் போவதற்கு அமைக்கப்பட்டிருந்த படிகளில் ஏறினான். அவன் மிகவும் அவசர அவசரமாக மறு கரைக்குத் தாவித் தாவிச் சென்று கொண்டு இருந்தான்.

அந்தப் படிக்குக் கீழ் போதை வஸ்து துர்பிரயோகம் செய்பவர்கள் இரவில் தூங்குவது வழக்கம். அன்றும் இருவர் தூங்கிவிட்டு எழுந்து குந்திக் கொண்டு இருந்தார்கள். அப்படி இருந்தவர்களுக்கு இடையில் கடுமையான விவாதப் பிரதிவாதம்

நடைபெற்றுக் கொண்டு இருந்தது. மெல்லியவன் வைத்திருந்த மருந்தை குள்ளமாக இருந்தவன் பாவித்து விட்டான் என்பதாய்த் தர்க்கம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. மருந்து காலையில் போடாவிட்டால் தன்னால் நடக்க முடியாது, இருக்க முடியாது, சாப்பிட முடியாது, நடுக்கத்திலும் வலியிலும் செத்துப் போய்விடுவேன் என மெல்லியவன் மன்றாடினான். தனக்கு எப்படி என்றாலும் மருந்தைத் தரும்படி மெல்லியவன் மீண்டும் மீண்டும் கெஞ்சினான். அதற்குக் குள்ளமானவன் தன்னிடம் மருந்து இல்லையெனத் தயவு தாட்சண்யம் இன்றி மறுத்தான். மெல்லியவனாய் இருந்தவன் பொறுக்க முடியாதவனாய் குள்ளமானவனின் ஜாக்கெற்றைப் பிடித்து உலுக்கினான். குள்ளமானவன் தற்போது பொறுமையை இழந்து திடீரென மெல்லியவனின் மூக்கில் குத்தினான். மெல்லியவனின் மூக்கில் இருந்து இரத்தம் வழிந்தது. அதுகூட அவனுக்குப் பொருட்டாய் தெரியவில்லை. அவன் மீண்டும் மீண்டும் மருந்திற்காக மன்றாடினான்.

தேவனுக்கு இதயம் எல்லாம் புண்ணாய் வலித்தது. என்ன கொடுமை இது? எதற்காக இந்த வேதனையெல்லாம்? வாழ்வு என்பது மதில்மேல் நடையா? தவறினால் அதலபாதாளமா?

இதற்கிடையில் போலிஸ் அங்கு வந்துவிட்டது. தேவன் றெயினை தவற விட்டேனா என்கின்ற பதைபதைப்போடு பிளாட்போம்மை நோக்கி ஓடினான். றெயின் போகவில்லை. ஒருவாறு றெயினில் ஏறி ஒரு ஆசனத்தில் அமர்ந்த பின்பு அந்த இருவரையும் ஒருகணம் நினைத்தான். தேவனுக்கு திடீரென மணியத்தின் நினைவு வந்தது.

B முகாமில் இருந்த மணியத்தைச் சிலகாலம் அடிப்பார்கள். தங்களுக்குத் தெரிந்த சித்திரவதையை அவனில் பரீட்சார்த்தம் செய்து பார்ப்பார்கள். பின்பு அப்படியே அவனை மறந்து போய் விட்டுவிடுவார்கள். அவன் பைத்தியமா? அல்லது உளவாளியா? அல்லது ஒரு கொள்ளைக்காரனா? சாதாரணமாய் யாழ்ப்பாணத்தில் திரிந்த ஒரு சண்டியனா? இது புரியாத புதிரும், அறியாத பதிலுமாய் காலம் போயிற்று.

தேவனுக்கு அன்று இரவு டியூட்டி இருந்தது. அவனை மணியத்தின் கொட்டகை இருக்கும் பக்கத்து மூலையில்

டியூட்டிக்கு விட்டிருந்தனர். மணியத்தின் கொட்டகைக்கும் இவனுக்கும் இடையில் இன்னொரு பிளட்டூன் இடைமறித்துக் கொண்டு நின்றது.

நல்ல அமைதியான நடுநிசி. சவுக்கமரத்தோடு சவுக்கமரம் கதைப்பதாக தேவனுக்கு பிரமை உண்டாகியது. டியூட்டியில் நித்திரை கொண்டால் கிடைக்கும் தண்டனையை எண்ணி, கண்களை அகலவிரித்து அவன் மிகவும் உசாராக இருந்தான். யாரோ இருவர் கதைத்துக் கொண்டு மணியத்தின் கொட்ட கைக்குப் போவதாகத் தெரிந்தது. எதையோ பரீட்சித்துப் பார்க்கப் போகிறார்கள் எனத் தேவன் எண்ணிக்கொண்டான். வெளிப்பக்கத்தில் இருந்தே எப்போதும் முகாமிற்குத் தாக் குதல் வரும். அதில் தவறு விட்டால் அடுத்தநாள் முதுகு புண்ணாகும் என்பது தேவனுக்குத் தெரியும். தேவன் மீண்டும் தனது பார்வையைச் சவுக்குத் தோப்பை ஆராயத் திரும்பினான்.

மர்மமான அமைதி ஒன்று கனமாக சவுக்குத் தோப்பை அழுத்துவதாய் தேவன் உணர்ந்தான். அந்த அமைதி திடீரென வந்த மணியத்தின் அலறலில் ஆயிரம் துகள்களாக சிதறிப் போயிற்று. தேவனுக்கு பயத்தில் இரத்தம் உறைந்து போயிற்று. என்ன குரூரம் இது? ஏதோ சித்திரவதை செய்கிறார்கள். சிங்கள ஆமி செய்வதாகக் கூறிய அத்தனை சித்திரவதைகளும் இங்கே பரீட்சிக்கப்படும். இவர்களும் வன்முறைக்கு வாழ்க்கைப்பட்ட நாட்டின் தவப்புதல்வர்கள் என்பதை எப்போதும் ஞாபகப் படுத்திக் கொண்டு இருந்தார்கள். மணியத்துக்கு இன்று என்ன நடக்கிறது? ஒன்றும் தெரியவில்லை. தேவனுக்கு முள்ளின் மேல் நிற்பதான அவஸ்தை தொடர்ந்தது. கவலையெனச் சற்றும் சோர்ந்து போகவும் முடியாது. யாராவது வந்து தாக்கிவிட்டால் அதற்குத் தண்டனை வேறு கிடைக்கும்.

அன்று றவுண்டியூட்டியாக காந்தன் என்பவன் வந்தான். அவன் இலங்கையில் புங்குடுதீவைச் சேர்ந்தவன் என ஒருமுறை கூறியது தேவனுக்கு இப்போதும் ஞாபகம் இருக்கிறது. அதில் இருந்து அவன் தேவனோடு தீவார் என்கின்ற முறையில் ஒருவித நட்புப் பாராட்டினான். முகாம் பொறுப்பாளர் சுழிபுரத்தைச் சேர்ந்தவர். காரைநகர் பக்கத்து ஊர் என்பதில் ஒருவித அறிவிக்காத சலுகை அவர் மூலமும் கிடைத்தது. இதை ஒரு வகையில்

அநுபவிப்பதாக தேவன் சங்கடத்துடன் உணர்ந்து கொண்டான். இருந்தாலும் குற்றம் செய்தால் சலுகையெல்லாம் துச்சமாகும் என்பது தேவனுக்கு நன்கு புரியும்.

காந்தன் வழமைபோல ஒரு ரோச்லைற்றுடனும் தடியுடனும் வந்தான். தேவன் தடி மாத்திரமே வைத்திருந்தான். வழமையான இராணுவச் சம்பிரதாயங்கள் முடிய, காந்தன் மிகவும் அருகே வந்தான். தேவன் பொறுக்க முடியாதவனாய், 'மணியத்தின்ர சத்தம் பெரிசா கேட்டிச்சு... என்ன நடக்குது?' என்று கேட்டான்.

'சூ... ஏதோ நடக்குது. இண்டைக்கு ஆளுக்கு சரியான வாட்டு போல இருக்குது. நீ எதுக்கும் கவனமா டியூட்டியில நில். அற்றாக் பண்ண வந்தாலும் வருவாங்கள். சரியே?'

'சரி.'

காந்தன் சிறிதுநேரம் நின்று காரைநகருக்கும் வேலணைக்கும் இடையில் இருக்கும் பாதை, துறைமுகம் என்பன பற்றிய நினைவு மீட்பை நடத்தினான். கிட்டங்கியில் இருந்த சாப்பாட்டுக் கடையில் சாப்பிட்டது பற்றியும், சீநோருக்குப் பாடசாலையுடன் வந்ததைப் பற்றியும் புளகாங்கிதத்தோடு விவரித்தான். பின்பு மற்றவர்களையும் பார்க்கப் போக வேண்டும் என்று கூறிக் கொண்டு சென்று விட்டான்.

அதன்பின்பு தேவனுக்கு அந்த இரவு டியூட்டி நீண்ட டியூட்டியாகியது. இடையிடையே மணியத்தின் அலறல் சவுக்குக் காட்டு நிசப்தத்தை சாட்டையால் அடித்து விரட்டிக் கொண்டு இருந்தது. அந்த அவலத்தைக் கேட்கும் போதெல்லாம் தேவனின் ரோமத்தின் அடிவேர் ஈறாக சில்லிட்டு எழுந்து நின்றது. இனம் புரியாத ஒருவித நடுக்கமும் திகிலும் அவனை இறுகப் பற்றிக் கொண்டது.

தேவன் டியூட்டி முடிந்து போகும் போதும் மணியத்தின் அலறல் ஓயவில்லை. அது நெஞ்சை கூரிய முட்கம்பியாய் நெருடிக் கொண்டே இருந்தது. தேவன் போய் படுத்துக் கொண்டான். நித்திரை வர மறுத்தது. களிமண் கட்டடம் ஒரு பக்கம் மணியத்தின் கொட்டில் இன்னொரு பக்கம். துட்டகைமுனு போல் அவன் புரண்டு புரண்டு படுத்தான். சில மணித்தி

யாலம் சென்றிருக்கும். மணியத்தின் குரல் அடங்கியது போல இருந்தது. தேவன் அப்படியே தூங்கிப் போய்விட்டான்.

தேவனுக்கு யாரோ தன்மேல் ஏறி நின்று நெஞ்சை அழுத்துவது போல பாரமாக இருந்தது. பாம்பு ஒன்று அவனைக் கொத்த சீறிக் கொண்டு வந்தது. தப்பி ஓடுவதற்கு கையைக் காலை அசைக்கிறான். கை, கால் எல்லாமே அசைய மறுக்கிறது. உடல் தெப்பமாக வியர்த்தது. மூச்சுவிட முடியாது திணறல் ஏற்பட்டது. தேவன் மிகவும் போராடுகிறான். பாம்பு வேகமாக வருகிறது. ஐயோ ஐயோ எனச் சத்தமிடுகிறான். வாயில் இருந்து சத்தம் வரவில்லை. காற்று மாத்திரம் நாக்கு பறிபோன ஊமையாக வருகிறது. சர்ப்பம் மாத்திரம் இலக்கு தவறாது தேவனை நோக்கி வந்து கொண்டே இருக்கிறது. தேவன் இப்போது இன்னும் வேகமாக கைகாலை அசைக்க முனைகிறான். தேவனுக்கு பாம்பு கையில் தீண்டியது போன்ற வலி. தீண்டி விட்டதா? சர்ப்பம் தீண்டி விட்டதா? என் வாழ்வு முடிந்துவிட்டதா? அம்மாவை மீண்டும் பார்க்காது உயிர் போய்விட்டதா?

என்ன இது. திடீரென விழித்துக் கொண்ட தேவன் எழும்பி இருந்தான். அவனுக்குக் கை வலித்தது. கையில் பாம்புக் கடியைக் காணவில்லை. ஆனால் சற்று வீங்கியது போன்று இருந்தது. தேவனுக்கு ஒருவாறு நிலைமை புரிந்தது. மழைநீர் பிளட்டு னுக்குள் வராமல் வைத்திருக்கும் கல்லில் கையை அடித்துக் கொண்டது புரிந்தது.

என்ன கனவு இது? அவன் சலித்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். அநேகமானோர் தூக்கத்தில் இருந்தனர். சிலர் விழித்த வண்ணம் படுத்து இருந்தனர். ஒருவித அமைதியும் பயமும் அவர்கள் முகத்தில் அந்த இருட்டிலும் தெரிவதாக தேவனுக்குத் தோன்றியது. மணியத்தின் அவலக்குரல் முற்றுமாய் அடங்கி அந்த அமைதி இன்னும் அதீத பயத்தைத் தந்து கொண்டு இருந்தது.

தூரத்தில் இருந்த சவுக்குத் தோப்பில் ஏதோ எரிவதை தேவனால் பார்க்க முடிந்தது. அந்த அருவருப்பான கந்தக வாசம் நாசியை வலோக்காரமாக ஆக்கிரமிக்க தேவனுக்கு வயிற்றைப் பிரட்டியது. அவன் நகர்ந்து சென்று பிளட்டுனின் மற்றையபக்கம் படுத்துக் கொண்டான். நித்திரை வர மறுத்தது.

அன்று களிமண் வீட்டிற்கு அருகில் போகும் சந்தர்ப்பம் தேவனுக்குக் கிடைத்தது. தேவன் பயத்தோடு அருகே சென்று பார்த்தான். அது காலியாக இருந்தது. அவனுக்கு எதிர்பாராத ஏமாற்றத்தை அது தந்தது. அதன்பின்பு அந்தக் களிமண் வீட்டின் மேல் இருந்த ஆர்வம் சுருண்டு போயிற்று.

நிலவனுக்கு மஞ்சள்காமாலை வந்திருந்தது. அவன் மெலிந்து மஞ்சளாகி, பரிதாபத்திற்குரிய பார்வைப் பொருளானான். தேவனுக்கு அது தாங்க இயலாத வேதனையைத் தந்தது. அன்று அவனையும் இன்னும் சிலரையும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு லொறியில் அழைத்துச் சென்று இருந்தனர். வரும்போது பஸ்ஸில் வருவோம் என நிலவன் தேவனிடம் சொல்லிவிட்டுச் சென்றிருந்தான். திரும்பி வந்ததும் தேவன் நிலவனிடம் கதைகேட்பதற்காய் காத்திருந்தான். ஏனோ அவர்கள் வருவது இன்று சுணங்கியது.

இருள் சவுக்குத் தோப்புகளின் ஊடுகளையும் அடைத்துக் கொள்ள, இரவு பரேட் ஆரம்பமாகி இருந்தது. தேவனுக்கு நிலவன் இன்னும் வராதது பல ஐயங்களைக் கிளப்பி விட்டி ருந்தது. மனது ஒன்றாது பரேட்டில் நின்றான். அந்தக் கணம் ஒரு லொறி முகாமிற்குள் வந்தது. பரேட்டில் ஆள் கணக்கெடுப்பு தொடங்கியதால் தேவனால் அசைய முடியவில்லை. இது தேவனுக்கு மேலும் ஏமாற்றமாய் இருந்தது. பரேட் நடக்கும்போது லொறி வந்தால் எதையும் போய்ப் பார்க்க முடியாது. நிலவன் வந்தால் புதினம் அறிந்து கொள்ளலாமெனத் தன்னைச் சமாளித்தவண்ணம் அவன் பரேட்டில் நின்றான்.

பரேட் முடிந்தாலும் அன்று சமையல் முடியவில்லை. ரொட்டியின் வாசம் சவுக்குத் தோப்பு முழுவதும் தவழ்ந்து விளையாட, பசி வயிற்றை இரசாயனம் கொண்டு தாக்குதல் நடத்தியது. அம்மா ரொட்டி சுடச் சுட, அடுப்படியில் இருந்து அதை எடுத்துச் சுவைப்பதுபோல இங்கு செய்ய முடியாது. அதில் தேவனுக்கு சிறிய ஏமாற்றம். இங்கு விசில் அடித்தால்தான் கைககால்களை அசைக்க முடியும். எல்லாம் கட்டளையும் செயற்பாடும் என்கின்ற கட்டுப்பாட்டிற்குள் நடக்க வேண்டிய கட்டாயம்.

பரேட் முடியவும் எல்லோரும் கலைந்து செல்லத் தேவனும் தனது பிளட்டூனுக்குச் சென்றான். அவன் நினைத்தது சரியாக இருந்தது. நிலவன் நேரடியாக பிளட்டூனுக்கே வந்திருந்தான். தேவனுக்கு இன்று நடந்தவை எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டுமென்கின்ற அவதி. தேவன் அவனுக்குப் பக்கத்தில் போய்அமர்ந்தான்.

பின்பு நிலவனைப் பார்த்து, 'எப்பிடி இருந்திச்சு தஞ்சாவூர்ப் பயணம்?'

'ச்... அதுக்கென்ன?'

'இல்ல புதினங்களை நீயாச் சொல்லுவாய் எண்டு எதிர் பார்த்தன்.'

'சரியான இடத்தில சொல்லுறன்.' மெதுவான குரலில் காதுக்குள் குசுகுசுத்தான்.

பின்பு, 'டே தஞ்சாவூரில மத்தியானச் சாப்பாட்டிற்கு அந்த மாதிரி இட்லி வேண்டித் தந்தவை. நல்லா இருந்திச்சுது.' அவன் பேச்சின் முகவரியைத் திருத்தி எழுதினான்.

'ம்... இட்லி நல்ல சாப்பாடுதானே. அம்மா ஒருதரம் அவிச்ச ஞாபகம். இல்லாட்டி மாரியில பாலப்பம்தானே அதிகம் வேண்டிச் சாப்பிடுகிறது,' என்றான் தேவன்.

'இஞ்ச எங்கட சாப்பாடு மாதிரி இல்ல. கொஞ்சம் வித்தி யாசம் தான். அது வித்தியாசமான சுவையும்தான்.'

பின்பு நிலவன் கதைக்கவில்லை. சாய்ந்து படுத்துக் கொண்டான். சிறிது நேரத்தின் பின்பு விசில் அடிக்க எழுந்து சென்று இருவரும் ரொட்டி வேண்டிச் சாப்பிட்டனர். அவரவர் கைவண்ணத்திற்கு ஏற்ப, ரொட்டி பல வடிவத்தில் இருந்தது. பருப்புக்கறி தேவனுக்கு இப்போதுபழகிப் போயிற்று.

சாப்பிட்டு முடித்ததும் நிலவன் தான் வெளிக்குப் போகப் போவதாயும், தேவனைத் துணைக்கு வருமாறும் அழைத்தான். தேவனுக்கு நிலவனின் சூட்சுமம் புரிய அவனுடன் புறப்பட்டுச் சென்றான். நிலவனின் இன்றைய நடவடிக்கைகள் தேவனுக்கு சற்று அதிர்ச்சியைத் தந்திருந்தது. ஏன் இன்று நிலவன்

விநோதமாக நடக்கிறான் என்கின்ற சிந்தனையோடு அவனோடு நடந்து வந்தான்.

'சென்றி' கழித்து சிறிது தூரம் சென்றபின்பு, முன்னும் பின்னும் ஆட்கள் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு, 'என்ன நிலவன் ஏதோ மூடுமந்திரம் போடுறா இண்டைக்கு?' என்றான் தேவன்.

நிலவன் தானும் முன்னும் பின்னும் திரும்பிப்பார்த்து யாரும் வரவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு, மெதுவான குரலில்...

'டேய் இண்டைக்கு ரெண்டுபேரைக் கொண்டு வந்தவங்கள். அதுக்காகவே எங்களை எல்லாம் இண்டைக்கு றைவரோட இருக்க விட்டிட்டாங்கள். நாங்கள் நல்லா ஊர் பார்த்தாலும், மனசுக்க ஏதோ உறுத்திக்கொண்டே இருந்திச்சுது. யாரெண்டு தெரியேல்ல, ஆனா உந்த அரசியல் பிரச்சினைப் பட்டவங்களாகத்தான் இருக்க வேணும் எண்டு நினைக்கிறன். இனி உங்க உளவுப் படையிட்டையும் அந்தக் கூட்டத்திட்டையும் அடிவேண்டிச் சித்திரவதைப்பட்டுச் சாகிறது எண்டா எவ்வளவு கொடுமையா இருக்கும் தெரியுமே?'

'உனக்கு என்னெண்டு தெரியும்?'

'நான் லொறியில ஏற்கனவே கவனிச்சிட்டன். இஞ்ச வந்தோடனை எங்களை எல்லாம் கலைச்சுப் போட்டு, இண்டைக்கு அவைதான் சாமான் இறக்கினவ. எப்பிடி எண்டாலும் நாளைக்கு வந்தவை உலாவுவினம் தானே?'

'நான் நினைக்கேல்ல?'

'ஏன்?'

'இவை ஏதோ எக்கச்சக்கமாய் பிரச்சனைப்பட்டவை போல இருக்குது. உந்தக் களிமண் ஜெயில் உவைக்குதான் எண்டு நினைக்கிறன்.'

'அதுக்க மனிசர் இருக்க முடியுமே?'

'அதுதான் தண்டனை. இருக்கவும் முடியாமல் நிற்கவும் முடியாமல் இருட்டறைக்க வெக்கையில் புழுங்குறதுதான் முதல்தண்டனையாக இருக்கும்.'

'பிறகு?'

'உந்தக் கூட்டம் சும்மாவே இருக்கப்போகுது?'

மீண்டும் சவுக்குத் தோப்பை வெறித்துப் பார்த்தவண்ணம் நிலவன் அமைதியாக நடந்தான். தேவனுக்குப் புரிந்தது. புரிந்த போது விரக்தியாக இருந்தது. விடுதலை. இந்தச் சொல்லுக்கு என்ன அர்த்தம்? தேவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

சந்தோஷத்துடனும் தோழமையுடனும் கழிய வேண்டிய நாள்கள் அச்சத்தோடும் அமைதியற்றதாயும் புதைந்து கிடப்பதாக தேவனுக்குத் தோன்றியது. எதுவும் சொல்லிவிட முடியாது. எவரையும் நம்பிவிட முடியாது. உளவுப்படையின் காதுகளில் ஒரு சொல் விழுந்தாலும் ஆபத்தாகிவிடும்.

இரவின் மடியில் சரசம் பயிலும் அமைதி பீறிடும் அலறல் கண்டு, அக்கினி தின்னும் புடவையை உதறும் அலங்கோலத்தில் ஓடுவாள். அலறல் கேட்கும் அவலம் என்றும் தொடரும். அது தொடர்கதையாகி பின்பு பழங்கதை ஆகியதில் தூக்கத்திலே கூட தேவனுக்கு இப்போது வருவதுண்டு. திகிலாகத் தொடங்கிச் சோகமாகக் கரையும் நீண்ட நாள்கள். நாளையளவில் தூரத்தே கரைந்த அவலக் குரலோடு தொலைந்து போய்விட்ட மனித மனங்கள்.

விசில்களின் ஓசைகளில் பலருக்கும் மனிதம் மறந்து போய்விட்டது. பரிதாபம், கவலை என்பதை பலர் எங்கோ தூக்கி எறிந்து விட்டனர். வன்முறையை அன்றாட வாழ்வாக நினைத்து, மனிதத்தை பலரும் சோரம் போகவிட்டனர். இந்தத் தவிப்பும் வேதனையும் தேவனை அடிக்கடி வாட்டி எடுத்தது.

போராட்டம் என்கின்ற பெயரில் மனிநேயத்தை ஒட்டு மொத்தமாய் சவக்குழிக்குள் தள்ளுவது எந்தவகையில் நியாய மாகும்? மனிதனாய் இருக்கமுடியாதவன் தமிழனாய் இருந்து யாருக்கு என்ன இலாபம்? அழிவை நாடிச்சென்ற சர்வாதிகாரிகளின் ஆட்சியில் என்ன நடந்தது? இருவருமே இராவணனாய் இருந்தால் யார் தோற்பது? யார் வெல்வது? ஏன் எமது இனத்தினர் இப்படி ஆகினர்? கேடுகாலம் ஒன்று எம்மினத்தை விழுங்கப் போகிறதா? இவ்வாறு எண்ணித் தேவன் குழம்பினான்.

அன்று மாலை நான்கு மணி இருக்கும். ஆதவனின் சரிவில் அனல் சற்று அடங்கி இருந்தது. சவுக்குத் தோப்புகள் பொதுவாக அமைதி காக்கும். அது இன்றும் மௌனம் தன் மொழி என்பதாக தியானத்தில் இருந்தது. மாலைச் சாப்பாட்டிற்கு வழமை போலச் சிலர் புட்டு அவித்துக் கொண்டு இருந்தார்கள். இன்று விசேடமாக குளத்து மீன் வேண்டி வந்திருந்தார்கள். புட்டுக்கு கறியாக அதை ஆக்கப் போகிறார்கள்.

தேவனுக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மாவின் அரிசிமாப்புட்டுப் போல், வெங்காயம் சேர்த்துப் பொரித்த உருளைக் கிழங்குப் பொரியல் போல், ஊர் மாட்டின் புளித்த தயிர்போல், உறைப்பான செத்தல் மிளகாய்ச் சம்பல் போல் இந்த மீன்குழம்பு இருக்குமா என்பதில் அவனுக்கு சற்றுச் சந்தேகம். எப்படி என்றாலும் கிடைக்கும் மீன் குழம்போடு புட்டினை ஒரு பிடி பிடிக்க வேண்டும் என்கின்ற அவாவோடு தேவன் இருந்தான். அந்த எண்ணமே அவன் நாவை ஈரலிக்கச் செய்தது.

அமைதியின் கூடலை வல்லுறவு கொள்வதுபோல அதிர்ந்த வண்ணம் அந்த லொறி முகாமிற்குள் வந்து நின்றது. சோகத்தின் சாயலை வதனங்களில் ஏற்றிய கவலையின் வளைவுகளான கோடுகள் கடுமையாகப் பதிந்திருக்க, தோழர்கள் தங்களது உடமைகளைச் சரிபார்க்கத் தொடங்கி இருந்தார்கள். கைக் கெட்டிய மீன்குழம்பு வாய்க்கு எட்டாத சோகம் தேவனைக் கடுமையாக வாட்டியது. அம்மா என்றால் அடம்பிடித்திருக்கலாம். இங்கு கட்டளைக்குப் பணிவதில் மனிதன் இயந்திரமாகி விட வேண்டும். கேள்விகளையும் குழப்பங்களையும் சற்றுத் தள்ளி வைத்துவிட்ட தேவன் தனது உடமைகளைச் சரிபார்த்துக் கொண்டான். அந்தப் பரபரப்பில் நிலவன் பக்கத்தில் வந்து நிற்பதைத் தேவன் கவனிக்கவில்லை.

'என்ன ஸ்ரீபன் கவலையா இருக்கிறாய்?'

'ச்... நல்ல மீன் குழம்போட புட்டுச் சாப்பிடலாம் எண்டு இருந்தன்.'

'ஓ அதைவிடு.... ஒரு நேரச் சாப்பாடு.' பின்பு கிட்ட வந்த நிலவன் காதுக்குள், 'போலிஸ்காரனோட குடும்பம் நடத்திறதில இருந்து விடுதலை கிடைக்குதெண்டு சந்தோசப்படு,' என்றான்.

தேவனுக்கு நிலவன் சொல்லும் உண்மை உறைத்தது. இந்தக் கூட்டத்தின் சந்தேகக் கண்களில் இருந்து தப்பித்துக் கொள்வது பரமதிருப்தியைத் தரும் என்பதை உணர்ந்தான்.

முகாம்களில் மாற்றங்கள் எப்போதும் மாலையில்தான் நடைபெறும். இருட்டோடு இருட்டாக எவருக்கும் புரியாத அந்தி வேளையில்...

தேவன் அதற்கு விடை தேடுவதை விட்டுவிட்டான். ஆயிரம் காரணங்களும் அதற்கான விளக்கங்களும் தயாராக இருக்கும். சிலவேளை இந்த உலகில் விளங்குபவர்களுக்கு எல்லாமே விளங்குகிறது; விளங்காதவருக்கு எதுவுமே விளங்கு வதில்லையெனத் தேவன் எண்ணிக் கொள்வான். தனக்கே சில விடயங்கள் சிலவேளைகளில் சிக்கலாக, ஒருவித கையாலாகாத் தனத்தில் தவித்துப் போய்விடுவான். அப்போது ஆற்றாமை மாத்திரம் கசப்பாக மிஞ்சி நிற்கும். மூளை பற்றிய வியப்பு மலையாகச் சவால் விடும்.

ஏதோ ஒரு சோகத்தில் தோழர்கள் தவித்துக் கொண்டி ருக்க வண்டி புறப்பட்டது. அது ஒரத்தநாட்டில் இருந்து புதுக்கோட்டையை நோக்கிப் பயணித்தது. தமிழ்நாடு தேவனுக்கு இப்பொழுது சிறிது அறிமுகமாகி விட்டாலும், ஒவ்வொரு ஊருக்குமிடையில்தான் எத்தனை வித்தியாசங்கள் என்பதில் அவனுக்கு பிரமிப்பாக இருந்தது. ஊர்களை, அங்கு வாழும் தனித்துவமான மக்களை, அவர்களின் அழகிய கலாசாரங்களை, நடையுடை பாவனைகளை, வித்தியாசமான கட்டிடங்களை, நீண்டு கொண்டு போகும் நகரங்களைப் பார்ப்பதில் அவனுக்கு அடங்காத ஆர்வம். இருட்டு அவன் ஆர்வத்தை மெதுவாக அரித்தாலும் இயன்றமட்டும் தோழர்களின் நெரிசலையும் பொருட்படுத்தாது இரசிக்கலானான்.

K முகாம் ஒரு கைவிடப்பட்ட சுடலையோடு இருந்தது. சுடலையில் குடியிருப்பது பற்றி எவரும் அலட்டிக்கொள்ள வில்லை. சவுக்குத் தோப்புகளற்று, ஒரு பக்கத்திற்கு திறந்த வெளியான முகாம் சில நாள் அந்நியமாக இருந்தது. சிவந்த மண் அந்த நிலத்தின் செழிப்பைக் காட்டி நின்றது. அணைக்கட் டுகள் மன்னராட்சிக் காலத்தின் மகிமையை அழியாது சொல்லிக் கொண்டு இருந்தது. தூரத்தே தெரிந்த மலைகளின் கம்பீரம்

தன்னிடம் வருமாறு அழைப்பு விடுத்துக் கொண்டு இருந்தது. பக்கத்தில் இருந்த வாழைத் தோட்டமும் அதன் பசுமையும் மகிழ்ச்சி தந்தது. முகாமிற்குள் கிணறு இருப்பது மிகவும் வசதியாக அமைந்திருந்தது.

K முகாம் பொறுப்பாளராக கங்கா என்பவன் இருந்தான். அவனின் கெடுபிடிகள் சிறிது சிறிதாக K முகாமின் உண்மை முகத்தை வெளிக்காட்டத் தொடங்கியது. கடுமையான பயிற்சி களைச் செய்ய முடியாதபோது அவர்களுக்கு மனித நேயமற்ற தண்டனைகள் அவனால் கொடுக்கப்பட்டது. தேவன் பயிற்சி களை லாவகமாகச் செய்து வந்தான். இயலாதவர்களுக்கு தண்டனையோடு அடியும் கிடைப்பது அவனது மனதை அறுத்தது. B முகாமில் வதைத்தெடுத்தது போல இங்கு கொடுமைகள் இல்லாவிட்டாலும் தோழர் என்கின்ற சொல் கண்முன்னே கரைந்து செல்வதாக அவன் அவதிப்பட்டான்.

அன்று மாலை நிலவன் தேவனிடம் வந்து வெளியே போகப்போவதாகக் கூறினான். நிலவன் அழைத்தால் தேவன் மறுப்பது இல்லை. என்னவாக இருக்கும் என்பது அவனுக்குப் புரியவில்லை. முகாமிலிருந்து சிறிதுதூரம் சென்ற பின்பு தேவன் கதை கொடுத்தான்.

'என்ன நிலவன்? ஏதோ புதினமே?'

'உவங்கள் ஆரோ ஒரு உளவாளிய பிடிக்கப் போயிருக் கிறாங்கள்.'

'என்ன சொல்லுறா?'

'யாரோ தமிழ் பேசத் தெரியாதவன். முகாமை ஒளிஞ்சு பாத்துக் கொண்டு நிண்டவனாம். அப்ப ஆடுமேய்க்கிறவங்கள் கதை கொடுத்திருக்கிறாங்கள். அவன் விளங்காமல் நிண்டு முழிச்சிருக்கிறான். ஆடுமேய்க்கிறவை வஞ்சகம் இல்லாமல் வந்து காம்பில சொல்லிப் போட்டுப் போயிட்டாங்கள். எங்கட சனங்கள் சந்தேகத்தில அலையிற சனம் எல்லே. படையா போறாங்கள். என்ன நடக்குமோ தெரியாது. ஆப்பிட்டா ஆளின்ரபாடு அவ்வளவுதான்.'

'அநியாயமா யாரையும் வதைக்கக் கூடாது.'

'வதைச்சா என்ன நடக்கப் போகுது? எங்கட நாட்டின்ர கலா சாரமே அப்பிடிப் போய்க் கொண்டு இருக்குது. காந்தியின்ர தேசமும் அதுக்கு விதிவிலக்கு இல்லை. தங்களுடைய அரசியல் சதுரங்கத்திற்காக களவு செய்யக் காட்டிக் கொடுப்பதே இவர்கள்தான். காந்தி காந்தியெனச் சாத்வீகம் காட்டும் இந்தியா வின் மறுமுகம் மிகவும் கோரமானது. ஆயிரம் ஆயிரம் அப்பாவி களைக்கூட தனது நோக்கத்திற்காய் அது பலி கொடுக்கத் தயங் காது. எங்கள் பிரச்சினை இப்போது இவர்கள் கையில் பரீட்சிக் கப்படும் விளையாட்டுப் பொருளாக இருக்கிறது.

சிறிது நேரம் நிலவன் அமைதியாக நடந்தான். பின்பு ஏதோ நினைத்தவன் போல் மீண்டும் பேசத் தொடங்கினான்.

'இயக்கத்தில் கொலை செய்யிறது புதுமையில்ல. இங்கே நவீனமான மனிதச் சட்டங்கள் செல்லுபடியாகாது. கொல்லு அல்லது கொல்லப்படுவாய் என்பதுதான் இவர்களின் வாழ்க்கையாகிவிட்டது. பூந்தோட்டத்தில் தொடங்கிய எமது இயக்க உட்கொலைகள் மூப்பெய்தி ஓர் இனத்தையே அழித் தாலும் அதிசயப்படுவதற்கு இல்லை. இந்தக் கலாசாரத்திற்கு எதிர் கலாசாரத்தை ஜெஆர் வக்கிரமாய் ஆரம்பித்து வைத்தார். அதைச் சிங்களக் காடையருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தும் வைத்தார். அது இலங்கையில தொடர்கதையாகி விட்டது. கொல். யாரை வேண்டுமானாலும் கொல். கொண்டுவிட்டுச் சென்று கொண்டு இரு என்பதாகி விட்டது. யாரும் உன்னை எதுவும் கேட்க மாட்டார்கள் என்பது எழுதாத சட்டமாகிவிட்டது. இது இன்னும் மோசமாகவும் வரலாம். 'எங்கள் இனத்தை இனி கடவுள்தான் காக்கவேண்டும்' என்று தந்தை செல்வா குட்டையைக் குழப்பிய பின்பு கூறியது போல, நாங்களும் நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்' என்றான் நிலவன்.

'எனக்கு ஒண்டுமே விளங்கேல்ல. எங்கட நோக்கம் விடுதலை அல்லவா. அதுக்கான அத்திவாரமாகத் தானே இந்தப் பயிற்சி கள் எல்லாம் இருக்க வேண்டும்? இங்க என்ன நடக்குது? வந்த நோக்கத்தைக் குழிதோண்டிப் புதைச்சுப் போட்டு, குருடர் கூட்டம் ஒன்று, திக்குத் தெரியாத காட்டில் பயணம் தொடங்கிய மாதிரி இருக்குது.'

'நீ சொல்லுறது சரிதான். யாரோ தொடங்க ஜெஆரால் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட போராட்டம் இது. இதில் எங்கள் விடுதலையைவிட அந்நிய சக்திகளின் ஆதிக்கக் கனவுதான் உரமாக இருக்கிறது. நீ நான் என எல்லோரும் எந்த அரசியல் தெளிவும் இல்லாமல் உணர்ச்சியில அள்ளுப்பட்டு வந்த கூட்டமாக, அதுக்குள்ள குற்றவாளிகளும் சமூகவிரோதிகளும் போராளிகளாகப் பெயர் மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஊதிப் பெருப்புக்கள் ஒருநாள் வெடிக்கப் போகிறது. சிலவேளை இந்தப் போராட்டச் சலசலப்புகளே ஒன்றும் இல்லாமல் போய்விடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது.'

'நம்பிக்கையைக் கைவிட முடியாது. சிங்கள அரசு களின் அரசியல் கோணல் பார்வை மாறப்போவதில்லை. ஒரு அரை நூற்றாண்டுக்கு மேலாகவே தமிழர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு விட்டார்கள். தொடர்ந்தும் அவர்கள் பாதையில் மாற்றம் இருக்கப் போவதில்லை,' என்றான் தேவன்.

'போராடப் புறப்பட்டவர்களால் அதைச் சாதிக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகிவிட்டது. றோவின் விளையாட்டுப் பொம்மையாக ஈழப் போராட்டம் உருக்குலையாமல் வெற்றி பெற்றால் அது உலகமகா அதிசயமாக இருக்கும். சரி நாங்களும் கவனமாக இருக்க வேண்டும். அல்லது வாழைகளுக்கு உரமாக வேண்டிய அவலம் ஏற்படலாம்.'

'அதெண்டா உண்மை. மௌனம் கனகராசி எண்டுறாய்...'

தேவன் விரக்தியாகச் சிரித்தான். இருவரும் திரும்பி வரும்போது ஒரு மனிதனை அவர்கள் பிடித்து வருவதைக் கண்டு கொண்டார்கள். தேவனுக்கு மனது சுருங்கி அதிலே வேதனை ஊற்றெடுக்க, இதயம் மட்டும் மூர்க்கமாக வேலை செய்யத் தொடங்கியது. இருவரும் வேகமாக முகாமை நோக்கிச் சென்றனர். இவர்கள் முகாமுக்கு வரவும் விசில் அடிக்கவும் சரியாக இருந்தது. இவர்களும் பரேட்டில் போய் நின்றார்கள். சிறிது நேரத்தில் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வெளியே ஓடுவதற்கு ஒரு ஆசிரியர் புறப்பட்டார். தேவனுக்கு இந்த மேலதிக திடீர்ப் பயிற்சி எதற்கு என்பது புரிந்தும் புரியாமல் இருந்தது. நிலவன் எதுவும் அலட்டிக் கொள்ளாது ஓடிக் கொண்டு இருந்தான்.

தேவன் சிறிது தூரம் ஓடியபின்பு மெதுவாக நிலவனிடம், 'என்ன இந்த திடீர் ஓட்டம்?' என்று கேட்டான்.

'கொண்டு வந்தவனுக்கு ஏதோ முறையா செய்யப் போகினம் போல இருக்குது. அதுதான் தேவையில்லாமல் எல்லாரும் திருவிழாப் பார்க்காமல் இருக்கிறத்துக்கு ஒரு ஒழுங்குதான் இது. K காம்பில இப்பிடி எல்லாம் நடக்கி றேல்லையாம். இது ஒரு ஸ்பெசல் கேஸ். என்ன நடக்குமோ தெரியாது.'

எங்கெங்கோ ஓடிவிட்டு மீண்டும் முகாமிற்கு வந்தனர். தேவனுக்கு ஒரே அசதியாக இருந்தது. பரேட் முடியவும் சாப்பாடு வழங்கப்பட்டது. அது வயிற்றுக்கு ஒருவித ஆறுதலைத் தந்தது. புட்டும் பருப்பும் பசிக்களைக்குத் தேனாமிர்தமாக இருந்தது. சாப்பிட்டு முடிந்த பின்பு வாய் கொப்பளிப்பதற்காக தேவன் கிணற்றடிக்குச் சென்றான். அங்கு தேவன் கண்ட மனிதனைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போய்விட்டான்.

காந்தன் அங்கே டியூட்டியில் நின்றான். அந்தச் சிறிய மோட்டார் அறைக்குள் ஒரு மனிதனைக் கட்டிப் போட்டு இருந்தனர். அவன் வேதனையால் முனகிக் கொண்டு இருந்தான். உடல் எங்கும் வீங்கியிருந்தது. அங்கங்கே இரத்தம் கசிந்தது இப்போது காய்ந்து போய் இருந்தது. யாரிவன்? தமிழ் பேசத் தெரியாதவன். சிங்களவனா? மராட்டிக்காரனா? தெலுங்கனா? இல்லை மனிதன். என்னைப்போல உன்னைப் போல அவனும் ஒரு மனிதன். மனிதனை மனிதன் கொல்லும் உலகத்தை எண்ணத் தேவனுக்கு வேதனையாக இருந்தது.

தேவன் வாயைக் கொப்பளித்துவிட்டு அவசரமாக முகா முக்குத் திரும்ப முயன்றான். அவனைக் காந்தன் இடைமறித்தான்.

'ஸ்ரீபன் இஞ்ச வா? இவனைப் பாத்தியா?'

தேவனுக்கு அது தர்மசங்கடமாகப் போய்விட்டது. காந்தனிடம் மனிதாபிமானம் பற்றி கதைப்பது அவ்வளவாக எடுபடாது. நாங்கள் எதையும் செய்வோம் என்பதைக் காட்டு வதில் மாத்திரம் அவனுக்கு அடங்கா மோகம் உண்டு. தேவனுக்கு அவனிடம் இருந்து மெதுவாகத் தப்பித்துக் கொண்டால் போதும் என்பதாக இருந்தது.

'ஓ பார்த்தேன்.'

'இவனொரு உளவாளி.'

'எப்பிடி கண்டுபிடிச்சினம்?' தேவன் அப்பாவிபோல் கேட்டான்.

'காம்புக்குக் கிட்ட நிண்டு ஒட்டி ஒட்டிப் பாத்தவனாம். ஏன் இவன் வந்து எங்கட காம்பப் பாக்கோணும்?'

'நீ என்ன நினைக்கிறா?'

'சிங்கள உளவாளியாக இருக்கும். நான் கட்டையால அடிச்சுப் பார்த்தன். சிங்களத்தில கத்திறான் இல்ல. பேசக் கூடாது எண்டு பிடிவாதம் பிடிக்கிறான். இவன் உண்மையைச் சொல்லாட்டா அடிவேண்டி சாவான் பார்.'

'உண்மை சொன்னாலும் சாகத்தான் போகிறான்' எனத் தேவன் மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.

'சிலவேளை அவன் ஊமையோ என்னவோ?' எனத் தேவன் அறியாதவன் போலக் கேட்டான்.

'சீ இவன் உளவாளி. பார் இப்ப...' கூறிவிட்டு தனது கையில் இருந்த கட்டையால் ஓங்கி அவன் வயிற்றில் குத்தினான். அவன் ஏதோ ஒருவிதமான ஓசையெழுப்பி முனகினான். தேவன் சகிக்க முடியாதவனாய் மறுபுறம் திரும்பிக் கொண்டான்.

'ஸ்ரீபன் இந்தா நீயும் குத்து...' காந்தன் கட்டையைத் தேவனிடம் கொடுத்தான்.

'சீ வேண்டாம், எனக்கு அலுப்பா இருக்குது. நான் போய் படுக்கப் போறன்' என்று கூறிய தேவனை காந்தன் வினோதமாகப் பார்த்தான். தேவன் அந்தப் பார்வையில் இருந்து தப்பி முகாமை நோக்கி ஓடினான்.

தேவனைப் பார்த்த நிலவனுக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது. தேவனுக்கு முச்சிரைத்தது. அவன் வியர்வையிலேயே நனைந்த உடம்பில் மெல்லிய நடுக்கம் இருந்தது? ஏன் என்பது புரியாது சற்று தடுமாறிய நிலவன், பின்பு மெதுவாக தேவனைப் பார்த்து... 'என்ன ஸ்ரீபன் பேயைக்கண்டவன் மாதிரி நடுக்க மெடுத்து நிக்கிறா?'

'இல்ல ஒண்டும் இல்ல....' தேவன் அவசரமாக மறைக்கப் பார்த்தான்.

'சரி எனக்கு சொல்ல வேண்டாம் எண்டு நினைச்சா விடு.'

'அப்பிடி ஒண்டும் இல்ல நிலவன்...'

'அப்ப...?'

'இல்ல பிடிச்சந்தவனை காந்தன் அடிச்சுக் கொண்டு இருக்கிறான். என்னையும் அடிக்கச் சொன்னான்.... நான் ஓடியந்திட்டன்...'

'ஓ கே. பேசாமல் படு. அவன் சும்மா உன்னோட பகிடி விடுறவன்தானே... அதுதான் சொல்லி இருக்கிறான்.'

'யாரிட்டையும் நான் பயந்து ஓடினேன் எண்டு சொல்லமாட்டானே?'

'இதெல்லாம் அவன் சொல்லமாட்டான். நீ பேசாமல் படு.'

'என்னைக் கண்டா பகிடி பண்ணப் போறான்.'

'எப்பிடிச் சொல்லுறா?'

'இல்ல நாங்கள் பயிற்சி எடுக்கிறது என்னத்துக்கு? புத்த மதம் போதிக்கவே? எவ்வளவு நுணுக்கமா மனிதனை மனிதன் கொலை செய்யலாம் எண்டதைக் காட்டித்தாற கலாசாலை தானே இராணுவ முகாம்கள். இதைத்தானே உலகத்தில உள்ள ஆமியள் எல்லாம் கற்றுக் கொள்ளுகினம். விடுதலைப் போராளிகள் எண்டு நாங்களும் அதைத்தானே கற்றுக் கொள்ளுறம். அதுக்கு இது மாதிரியான சந்தர்ப்பங்கள் ஒரு முன்னோட்டம் மாதிரித் தானே? இதில மனிச நேயத்திற்கு என்ன வேலை? உதுக்கே நான் பயந்தடிச்சுக் கொண்டு ஓடியந்திட்டன் எண்டு நக்கல் அடிக்கப் போறான்.'

'அப்பிடி இல்ல. ஆமியைக் கொல்லுறது வேறு. அப்பாவியா பாவியா எண்டுறது தெரியமுதல் அடிச்சுச் சித்திரவதை செய்யிறது வேறு.'

'அப்ப நான் செய்தது சரியே?'

'ம்... நீ செய்தது முழுக்க முழுக்க சரி.'

'நீ சொல்லுறது ஒரு ஆறுதலா இருக்குது.'

'ஆறுதல் இல்ல உண்மையும் அதுதான்.'

'குட்நைட்.'

'குட்நைட்.'

தேவனுக்கு அன்று நித்திரை வரவில்லை. போராட்டம் என்பது கொலையும் இரத்தமும் மலிந்து போன, மனிதத்தை மனிதன் அழிக்கும் ஊழித்தாண்டவமா? கொலைகளற்ற போராட்டங்களை வரலாற்றில் தேடிப்பிடிக்க முடியுமா? மனிதநேயம் என்பதைக் காப்பாற்ற முடியாவிட்டால் அந்தப் போராட்டத்தால் வரும் பயன்தான் என்ன? மனிதநேயங்கள் மறுக்கப்படுவதாகப் போராடத் தொடங்கியவர்களே மனித நேயத்தை மறுக்கலாமா? தேவனுக்கு குழப்பமாக இருந்தது. நிலவன் அமைதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தான். தேவன் அதிகநேரம் குழம்பிய பின்பு அலுப்பில் தூங்கிப் போய்விட்டான்.

அடுத்தநாள் காலை வெளிக்குச் சென்று விட்டு, முகம்கழுவ கிணற்றடிக்குச் சென்ற தேவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மோட்டார் அறைக்குள் முனகியபடி கிடந்த அந்த மனிதனைக் காணவில்லை. என்ன நடந்திருக்கும்? தேவனால் எதுவும் அனுமானிக்க முடியவில்லை. டியூட்டியிலும் வேறு ஒருவன் நின்று கொண்டு இருந்தான். காலைப் பரேட்டிற்கு விசில் அடிக்கப் போகிறார்கள் என்கின்ற அவதியில் மேற்கொண்டு சிந்திக்க முடியாதவனாய் தேவன் முகத்தைக் கழுவிவிட்டு முகாமை நோக்கி ஓடினான்.

பரேட்டில் நிற்கும் போது பக்கத்தில் காந்தன் நிற்பதைத் தேவன் அவதானித்துக் கொண்டான். ஒன்றில் அவனாக எதற்காக அப்படி ஓடினாய் என்று கேட்பான். அல்லது அந்த மனிதன் எங்கே என்றுதான் கேட்க வேண்டும் என்பதை தேவன் புரிந்து கொண்டான். இதில் எது நடக்கும்? முதலாவது நடந்தால் தேவனுக்குச் சங்கடம். இரண்டாவது நடந்தால் தேவனுக்குச் சங்கதி. தேவன் சங்கடத்தைவிடச் சங்கதியை விரும்பியவனாய் முந்திக் கொள்ள வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

எல்லோரும் ஓடத் தொடங்கினார்கள். தேவனும் ஓடினான். காந்தனுக்கு அருகாக ஓடினான். காந்தனும் புரிந்ததுபோல தேவனோடு ஓடிவந்தான். தேவன் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, 'ஏன் காந்தன்... அந்த உளவாளியக் கிணத்தடியில காணேல்ல...?'

அவன் உளவாளியில்லையெனத் தேவனது மனது அடித்துக் கொண்டாலும், மற்றவர்களிடம் இருந்து அந்நியப் படுவதைத் தவிர்க்க, அவனை உளவாளியென அழைத்து, நானும் உங்கள் கூட்டமே என அடையாளப்படுத்திக் கொண்டான். அது அவமான அடையாளமாக அவன் அடிமனதில் கசந்தது. பின் மெதுவாக காந்தனிடம் விடயத்தைக் கறக்கத் தொடங்கினான்.

'ஓ அவனே?' என்றான் காந்தன்.

'ம்.. எங்கயவன்?'

'எல்லோரும் அவனில அடிபழகினம்தானே? அவன் பொசுக்கெண்டு போயிட்டான்.'

'என்ன?'

'அவன் செத்துப் போட்டான்.'

'எப்ப?'

'காலம நாலுமணிபோல இருக்கும். றவுண்டியூட்டியா இருந்த தினேஸ் சொன்னான்.'

'பிறகு...'

'பிறகென்ன கோடுவைச்சு வழக்கே போடமுடியும். அங்கால இருக்கிற முள்ளுப் பத்தேக்க புதைச்சாச்சுது.'

ஜனநாயகத்தின் ஓட்டைகளைச் சீர்செய்ய வந்த தங்களது குரூரத்தை எண்ணி தேவனின் மனது இரத்தக் கண்ணீர் சிந்தியது. தேவன் மௌனமாக ஓடினான். அவனுக்கு பொழுது சாயும் வரையும் ஓட வேண்டும் போல் இருந்தது. ஓடியோடி மயங்கி விழவேண்டும் என்று ஆசையாக, கோபமாக இருந்தது. தேவன் ஓடினான். அன்று அவன் தணியாத மோகத்தோடு ஓடினான்.

தேவன் பயிற்சி முடிந்தபோது மிகவும் களைத்துப் போய் இருந்தான். மனது இலகுவானது போல ஒருவித உணர்வு. காலைச் சாப்பாடு முடிந்தபின்பு துப்புரவு வேலை செய்ய வேண்டி இருந்தது. தேவனுக்கு அலுப்பாய் இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாது துப்பரவு வேலையில் ஒன்றினான். பின்பு குளிப்பதற்குச் சென்றான். இங்கே பெரிய கிணறுகள் உண்டு. உள்ளூர் மக்கள் அதைக் கேணி என்பார்கள். தேவனுக்கு கேணியென்றால் பெரிதாக நீள்சதுரமாக இறங்கி ஏறுவதற்கு ஏற்ப படிகளோடு, பிள்ளையார் கோவில் கேணிபோல இருக்க வேண்டும். இந்தக் கேணிகள் அப்படி இருப்பதில்லை. அதை தேவன் ஊரில் பாவித்த கிணறாகவே எண்ணிக் கொள்வான். இந்தக் கிணறுகள் ஊர்கிணற்றைவிட இருமடங்கு பெரிதாக இருப்பதோடு, இதற்குள் இறங்கி குளிப்பதற்கும் ஊரார் அனுமதி தந்திருந்தனர். மோட்டார் உள்ள கிணறு என்றால் இறங்கிக் குளிக்க வேண்டிய அவசியம் இல்லை. மோட்டார் இல்லாத கிணறுகளில் தேவனுக்கு இறங்குவது என்றால் சங்கடம். இந்தக் கிணறுகளுக்குள் நீர்ப் பாம்புகள் அங்கும் இங்கும் ஓடும். அதைக் கண்டால் கிலியில் தேவன் கட்டிலேயே நிற்பது உண்டு.

அன்று நல்ல வேளையாக மோட்டார் கிணறு காலியாக இருந்தது. அங்கு சென்று குளித்துவிட்டு வரும்போது சாப்பாடு தயாராகி விட்டதை முகாமில் இருந்து வந்த வாசம் சொல்லாமல் சொல்லிற்று. அதை அறிந்த வயிறு செல்லமாக கிள்ளாமல் கிள்ளத் தொடங்கியது.

இந்த முகாமின் பொறுப்பாளர் கங்காவே தோழர்களுக்கும் அடிக்கலாம் என்பதைக் காட்டிக் கொடுத்தவன் எனச் சிலர் கதைப்பதும் உண்டு. தேவன் அவன் அடித்ததை நேரே அதிகம் காணாவிட்டாலும் கடுமையான தண்டனைக்கு மேல் தண்டனை கொடுப்பதை பார்த்திருக்கிறான். அதன் உக்கிரத்தைப் பார்த்து யாரும் இயலாது எனப் பாசாங்கு செய்வதற்கு கனவிலும் நினைக்க மாட்டார்கள்.

அன்று நிலவன், தேவன், காந்தன் ஆகியோர் ஒன்றாய் இருந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர். காந்தன் இடையில் நிலவனையும் தேவனையும் பார்த்துவிட்டு, 'இண்டைக்குத் தொடக்கம் கங்காவின்ர ஆக்கினையில இருந்து சுதந்திரம்?' என்றான்.

'என்ன சொல்லுறா?' என்றான் தேவன் அவசரமாக.

'இண்டைக்கு பின்னேரம் நாங்கள் வேற முகாம் மாறப் போறோம்.'

'உனக்கு என்னெண்டு தெரியும்?'

'கனவில கடவுள் வந்து சொன்னவர்.'

'பகிடிய விட்டிட்டு சொல்லும்.'

'சீலன் மாஸ்ரர் சொன்னார்.'

'எத்தின மணிக்கு லொறி வரும்?'

தேவன் கேட்டான். நேரத்தை வைத்தே பயணத்தின் அநுபவம் அமையும் என்பது அவனது அநுபவம்.

'நாலுமணிபோல வரும் எண்டு சொன்னவர்.'

'அப்ப ஓரளவுக்கு எண்டாலும் ஊர் பாக்கலாம்,' என்றான் தேவன் சிறிய திருப்தியோடு.

முகாம் வாழ்க்கை குறுகிய காலத்தில் முடிந்துவிட்டது. பயிற்சிகள் கடுமையாக இருந்தாலும் அதிர்ச்சி அடையுமளவுக்கு அங்கு வேறு எதுவும் புதுமையாக நடக்கவில்லை.

சிலகாலத்தில் தேவன் கொமாண்டோ பயிற்சிக்குச் சென்றிருந்தான்.

25

அன்று தேவன் வேலையால் திரும்பி வரும்போது வழமை போல் தேவாணில் வந்துகொண்டு இருந்தான். அவன் இருந்த பெட்டிக்குள்ளே ஸ்ரூட்டிங்கடியில் ஒருவன் வந்து ஏறியமர்ந்து கொண்டான். அவன் ஒரு நுர்மன். சற்று அலங்கோலமாய் இருந்தான். தலை மயிர் பறந்த வண்ணம் இருந்தது. ஜாக்கெற்றில் மிகவும் அழுக்கேறி இருந்தது. கால்சட்டை இத்துப்போய்க் கிழிந்து

தொங்கியது. தாடியும் மீசையும் அவனது அரைவாசி முகத்தை ஆக்கிரமித்து இருந்தது. உடம்பை நீர் தழுவி வெகுகாலமாய் இருக்க வேண்டும். எதிலுமே அக்கறை இல்லாத நிலையில் அவன் வாழ்வதாய் அவன் தோற்றம் காட்டிற்று. ஒரு துர் நெடி அவனோடு சேர்ந்து எங்கும் பயணம் செய்தது . தேவன் ஒருமுறை அவனைப் பார்த்துவிட்டு, தான் வாசித்த புத்தகத்தை தொடர்ந்தும் வாசித்தான். தேவாண் தொய்யனை அடையும்போது திடீரென ரிக்கெற் பரிசோதிப்பவர்கள் வந்து தேவனின் பெட்டிக்குள் ஏறிக் கொண்டார்கள். இதைப் பார்த்த தேவன் தனது ரிக்கெற்றை எடுத்து தயாராக வைத்துக் கொண்டான்.

ரிக்கற் பரிசோதிப்பவர்களில் பாகிஸ்தானியரும் நூர்மன்னும் இருந்தனர். தேவனின் ரிக்கெற்றை ஒரு நூர்மன் வேண்டிப் பார்த்துவிட்டு திருப்பிக் கொடுத்துவிட்டார். தேவன் மீண்டும் புத்தகத்தை எடுத்தபோது ஒரு பாகிஸ்தானியப் பரிசோதகருக்கும் அலங்கோலமாய் இருந்த நூர்மனுக்கும் இடையில் தகராறு வந்துவிட்டது. அவனிடம் ரிக்கெற் இருக்கவில்லை. ரிக்கெற் இல்லாவிட்டால் அவர்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தண்டப்பணத்துக்கான துண்டை அனுப்பி வைக்க முடியும். அந்த அலங்கோலமானவன் தன்னைப் பற்றிய விபரங்களைக் கொடுக்க மறுத்தான்.

இதைப் பார்த்த மற்றைய பரிசோதகர்களும் அவனை வந்து சூழ்ந்து கொண்டார்கள். அவன் தொடர்ந்தும் தனது தகவலைக் கொடுக்க மறுத்த வண்ணம் இருக்க, பரிசோதகர்கள் செக்குறுற்றி தாசிற்கு அறிவித்து விட்டு, அவன் தப்பிப் போகாத வண்ணம் அவனைச் சுற்றி நின்றார்கள்.

தேவாண் என்சோவில் நின்றது. பரிசோதகர்கள் எதிர்பாராத நேரத்தில், அலங்கோலமானவன் அவர்களின் வட்டத்தைப் பிய்த்துக் கொண்டு ஓடினான். பரிசோதகர்களும் அவனை விட்டுக் கலைத்துக் கொண்டு ஓடினார்கள். எதிரே இரு இராணுவ வீரர்கள் பச்சையும் பழுப்புமான கமர்பிளாஸ் உடுப்பில் வந்துகொண்டு இருந்தார்கள். அவர்கள் இதை அவதானித்து விட்டார்கள். பொதுவாக இப்படியான விடயங்களில் இராணுவம் தலையிடுவதில்லை. இவர்கள் அதற்குப் புற

நடையாக அந்த அலங்கோலமானவனை மடக்கிப் பிடித்தார்கள். பின்பு அவனை அங்கு வந்த செக்குறுற்றி தாசிடம் கொடுத்து விட்டு தேவாணில் ஏறிக்கொண்டார்கள். தேவாண் மேற் கொண்டு பயணித்தது. தேவனின் மனது புதுக்கோட்டை யில் போய் நின்றது.

கொமாண்டோ பயிற்சியைப் பற்றிய நடுக்கம் யாரையும் விட்டு வைத்ததில்லை. தேவனுக்கும் அந்த நடுக்கம் இருக்கத்தான் செய்தது. கொமாண்டோ முகாம் புதுக்கோட்டையில் இருந்தது. அந்த முகாமை ஒட்டி ஹைகொமாண்டோ முகாமும் இருந்தது. அதை ஜெயராம் என்பவர் நடத்தினார். சிறிது காலத்தில் மாணிக்கதாசன் அங்கு பனிஷ்மென்ற்றில் வந்திருந்தார். அவர் தோழர்களோடு ஒரு லொறியை அதிக வேகத்தில் செலுத்தி வயலுக்குள் புரட்டியதிற்காய் பனிஷ்மென்ற் கொடுக்கப்பட்டி ருந்தது. மாணிக்கதாசனும் அங்கு இருந்தவர்களுக்கு பயிற்சி கொடுத்தார். அவரது பயிற்சி என்றால் குலை நடுக்கம் எடுக்கும் என்பார்கள். அவரின் பயிற்சியில் நிஜமான தோட்டாக்கள், கிறனைட்டுகள் பாவிக்கப்படும் என்பார்கள். தேவனுக்கு உண்மை பொய் தெரியாது. அந்த முகாமிற்குள் போவதற்கு கொமாண்டோ முகாமில் இருப்பவர்களுக்கு அனுமதி கிடைப்பது இல்லை. பயிற்சிகள் நடப்பதைக் கண்டிருக்கிறான். அருகில் சென்று பார்க்க முடியாத ஏக்கம் அவனை வாட்டி இருக்கிறது.

திடீரென அவர்கள் வந்து கொமாண்டோ முகாமைத் தாக்கு வார்கள். தாக்குதலில் கொமாண்டோ முகாமில் உள்ளவர்கள் தோற்றால் அவர்களுக்கு தண்டனை கடுமையாக இருக்கும். மொத்தமாக முகாமில் உள்ள எல்லோருக்கும் கூட்டுத் தண்ட்னை கிடைக்கும்.

பயிற்சிகள் தொடங்கவும் அதன் கடுமை தேவனை வாட்டத் தொடங்கியது. ஆனந்தபாபு என்கின்ற பயிற்றுனரைப் பற்றி அரைகுறையாகக் கேட்ட தகவல்கள், உண்மை என்பது மெதுமெதுவாகப் புரியத் தொடங்கியது. கொமாண்டோ பயிற்சி கடுமையாக இருக்க அதைச் சமாளிக்க முடியாது பின்னிழுப்பவர்களுக்கு அடியும் விழுந்தது. இதை நேரடியாகக் கண்டபோது தேவன் சோர்ந்து போய்விட்டான். அவனுக்கு அதைக் காணும்போதெல்லாம் உள்ளம் குமுறும். சொல்ல

முடியாத மனக்குமுறலில் தத்தளிப்பான். எதிர்த்துக் கதைப்பது எந்தவித நன்மையும் தராது. இதை நன்கு புரிந்த தேவன் மௌனம் காத்தான். சிலர் அனைத்து முகாம் பொறுப்பாளரிடம் முறையிட வேண்டும் எனக் கதைத்துக் கொண்டனர். அந்த முறைப்பாட்டை அவர்கள் நிஜம் என நம்பி நடவடிக்கை எடுப்பார்கள் என்பது தேவனுக்குப் புரியவில்லை. ஏதாவது நடவடிக்கை எடுத்தால் அது மிகவும் நன்மை பயக்கும். அப்படி நடக்காது விட்டால் அதன் எதிர்மறை இன்னும் பயங்கரமாக இருக்கு மென அவன் எண்ணிக் கொண்டான்.

அன்று மாலை மூன்று மணியிருக்கும். கொமாண்டோ முகாமில் கயிற்றில் (மங்கி றோப்) ஏறுவதற்காக எல்லோரும் வரிசையில் நின்று இருந்தனர். இதுவும் இந்த முகாமில் பயிலும் முக்கியமான பயிற்சிகளில் ஒன்று. இன்னும் நிறையப் பயிற்சிகள் உண்டு. ஆனந்தபாவுடன் நாற்பது நிமிடங்கள் என்பது எல்லோருக்கும் அடிவயிற்றைக் கலக்குகின்ற தீக்குளிக் கும் நேரமாக இருந்தது.

'என்ன தேவன் கனவே காணுறா?'

வரிசையில் பின்னுக்கு நின்ற நிலவன் கேட்டான்.

அதைக் கேட்ட தேவன் சிரித்தவண்ணம் முன்னே நகர்ந்தான்.

அந்த இரு பனைகளுக்கும் இடையில் அறுபது மீற்றர் தூரம் இருக்கும். அந்தப் பனைகளின் நடுவே உள்ள நிலத்தில் காய்ந்த முள்செடிகள், முட்கம்பிகள் ஆகியன பயமுறுத்தும் வண்ணம் பரப்பி வைக்கப்பட்டு இருந்தன. கயிற்றில் தாண்டிப் போகும்போது விழுந்தால், எந்த வைத்தியசாலையில், எத்தனை நாள் படுத்திருக்க வேண்டும் என்பது யாருக்கும் தெரியாது. இந்த முள்கள் மனத்தைரியத்தைத் தருமா அல்லது அதை ஈவிரக்க மின்றி விழுங்கிவிடுமா? விளைவுகள் தெரியாத செய்கைகள் எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

அன்று எல்லோரும் பார்த்துக்கொண்டு இருக்க முதலில் ஆனந்தபாபு ஏறிக்காட்டினான். குரங்கு மாதிரித் தாவியேறி கண்ணிமைக்க முதல் மறுபக்கம் வந்து இறங்கினான். அவனால்

அதை இலகுவாகச் செய்ய முடிந்தது. அவன் ஊரிலேயே கராத்தேயில் பிளாக் பெல்ற் எடுத்தவன் என்பதை தேவன் கேள்விப்பட்டிருந்தான். இங்கும் தேனியில் ஓய்வு பெற்ற இந்திய இராணுவத்திடம் கடுமையான பயிற்சி பெற்றிருக் கிறான். இவனைப் போன்று சிலர் பலஸ்தீனம், டெல்லி என்றெல்லாம் சென்று பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மாணிக்க தாசன் பலஸ்தீனத்தில் பயிற்சி எடுத்ததாகப் பேசிக் கொள் வதை தேவன் கேட்டிருக்கிறான். மாணிக்கதாசன் பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நாட்டுத் தாங்கியைக் குறிபார்த்து RGP ஆல் தாக்கி அழித்ததாக வேறு ஒரு கதை உலாவியது. அதன் உண்மை பொய் பற்றி எவருக்கும் சரியாகத் தெரியாது. டெல்லி சென்று பயிற்சி எடுத்தவர்கள் குளிரின் கொடுமை பற்றி விதம் விதமாய் கதை விடத் தேவன் கேட்டிருக்கிறான். பெரியவரும் பலஸ்தீனத்தில் பயிற்சி பெற்றவர் என்பதைத் தேவன் அறிந்திருந்தான்.

ஆனந்தபாபு இங்கு வந்தபின்பும் நீண்டகாலப் பயிற்சி யில் தனது உடலை முறுக்கேற்றி வைத்திருந்தான். அவனுக்கு ஏறி இறங்குவதில் எந்தவித சங்கடமும் இருக்கவில்லை. பின்பு முதலில் நின்றவனை ஏறச் சொல்ல அவன் ஏறினான். ஏறி முடிப்பானா அல்லது விழுந்து விடுவானா? எல்லோருக்கும் திகிலாக இருக்க மேல்கயிற்றைப் பிடித்து கை கால் இரண்டின் உதவியோடும் மறுகரைக்குச் சென்றுகொண்டு இருந்தான். அவனின் துணிச்சல் மற்றவர்களுக்குச் சற்று ஆறுதலைத் தந்தது. அவன் மறுகரையை அடைந்து கீழே இறங்க ஆரம்பித் தான்.

அந்தநேரத்தில் திடீரென பரபரப்பு ஏற்பட்டது. பெரியவர் பெரியவர் என்கின்ற குசுகுசுப்பு கேட்டது. தேவன் ஒரு ஜீப் வந்து நிற்பதையும், அதில் இருந்து பெரியவர் என்னும் முகுந்தன் (உமாமகேஸ்வரன்) இறங்கி வருவதையும் கண்டு கொண்டான்.

பெரியவர் ஓரளவு சாதாரண வளர்ச்சிக்கும் குள்ளத்துக் கும் இடையில் தத்தளிக்கும் உயரத்தில் இருந்தார். ஜீன்சும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தார். உயரம் இல்லா விட்டாலும் நல்ல நிறமான, கம்பீரமான தோற்றம். பரந்த உறுப்பான பெண்கள் விரும்பும் முகம். அவரது அடர்த்தியான

சுருளான கருமயிரை பக்கவாட்டில் வாரி இருந்தார். அவரது மீசை அழகாக வெட்டப்பட்டு இருந்தது. புதிதாக சவரம் எடுத்த முகம் வெய்யிலில் மினுமினுத்தது. கண்களில் கூர்மையோடு கூடிய கண்ணியமான தோற்றம். அவரைப் பார்த்தவுடன் மகுடியின் ஆட்டத்தைப் பார்த்து நிற்கும் சர்ப்பங்களாக எல்லோரது அசைவிலும் ஓர் அடக்கம் குடியேறியது.

பெரியவர் பயிற்சி செய்யும் இடத்திற்கு விரைவாக வந்தார். இந்தத் திடீர் வருகைக்கு என்ன அர்த்தம்? ஒருவருக்கும் ஒண்டும் புரியவில்லை. ஆனந்தபாபுவைப்பற்றி, அவனின் அட்டகாசம் பற்றி அறிந்திருப்பாரோ? அவன் தப்பித்துக் கொள்வான். இன்று பயிற்சி தொடங்கும்போது வந்ததால் அவன் நல்ல பிள்ளையென அத்தாட்சி பெறுவான் எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

எல்லோரையும் விறைப்பாக நிற்குமாறு ஆனந்தபாபு கத்தினான். எல்லோரும் பெரியவருக்கு மரியாதையாக அப் படியே நின்றார்கள். அடுத்தகணம் சலூட் அடித்தார்கள். பின் பெரியவரே அந்த நிலையில் இருந்து மாறுமாறு கூற எல்லோரும் சாதாரண நிலைக்கு வந்தார்கள்.

'சரி ஏறுங்க பார்ப்பம்,' என்றார் பெரியவர். அவர் வதனத்தில் புன்னகை தவழ்ந்தது.

அது சத்தியனின் முறை. அவன் இயல்பிலேயே எல்லா வற்றிற்கும் பயந்தவன். பெரியவரும் நிற்கிறார் என்பதை கண்டுகொண்டவனுக்கு கால்கள் தன்பாட்டிற்கு நடுக்க மெடுக்கத் தொடங்கி இருந்தன. அவன் நகர மறுத்தான். ஆனந்த பாபுவுக்கு அது அவமானமாய்ப் போய்விட்டது. பெரியவர் இல்லாவிட்டால் அந்த இடத்திலேயே சத்தியன் நல்ல அடி வேண்டி இருப்பான். பெரியவரின் புண்ணியத்தில் இன்று சத்தியன் தப்பிக் கொண்டாலும், பெரியவரின் கோபத்திற்கு ஆளாவதை சத்தியன் கவனிக்க மறந்து போய்விட்டான்.

பெரியவர் அவனிடம் ஒன்றும் பேசவில்லை. அவர் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு, 'என்ன பயம்? பார் நான் செய்து காட்டுறன்,' என்ற வண்ணம் முழுக்கைச் சட்டையை இழுத்து மடித்துவிட்டு கயிற்றில் தொங்கி ஏறி கடுகதியாக மறு பக்கம் இறங்க எல்லோரும் விறைத்துப் போய்விட்டார்கள்.

பெரியவரால் இப்படியும் செய்யமுடியுமா என்கின்ற வியப்பில் பலரும் தங்களை மறந்து போய் நின்றனர்.

இறங்கிவந்த பெரியவர் பின்பு எல்லோர் முன்னாலும் வந்து, 'பயிற்சிய விரும்பிச் செய்யோணும். அப்பதான் போராட்டத்தையே விரும்பிச் செய்யலாம். நாங்கள் ஆயுதம்மேல் காதல் கொண்டு இங்கு வந்தவர்கள் அல்ல. ஆனா செய்யிற காரியத்தில எப்போதும் குறிதவறாத காதல் இருக்க வேண்டும். ஒழுங்காப் பயிற்சி செய்யுங்கோ. அப்பதான் உங்களையும் காப்பாற்றி உங்களை நம்பி இருக்கிற மக்களையும் காப்பாற்றலாம். உண்மையான தேச விடுதலையை எண்ணி எப்போதும் ஓர்மமாகப் பயிற்சி செய்ய வேண்டும்,' என்று கூறினார்.

பெரியவர் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. அவரது வண்டி உறுமிக் கொண்டு முகாமைவிட்டுச் சென்ற போது, முகாமிற்குள் ஆனந்தபாபு உறுமத் தொடங்கி இருந்தான். எல்லோரும் பதறியடித்து ஏறியிறங்கினர். ஆனந்தபாபு சத்தியனைப் பிடித்து ஒரு கரையில் நிறுத்தி வைத்திருந்தான். அவனுக்கு இன்று முறையான வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுக்கப்படும் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டனர்.

தேவனின் முறை வந்தது. ஒருவாறு ஏறி இறங்கினான். கடைசியாக நிலத்தைத் தொட ஒரு மீற்றர் இருந்திருக்கும். அவனது கையே அவனைக் கைவிட்டுவிட, வழுக்கிக் கொண்டு வந்து நிலத்தில் நின்றான். அதை யாரும் பிழை என்று கூறாவிட்டாலும், கையும் மனதும் ஏனோ எரிந்தது. சத்தியனுக்கு என்ன நடக்கப் போகிறது? இந்தக் கேள்வி தேவனின் மூளையைக் குடைந்து கொண்டு இருந்தது. அநேகமானவர்கள் ஒருவாறு ஏறி இறங்கித் தங்களது இந்தப் பயிற்சியை முடித்து இருந்தனர். பின்பு எல்லோரையும் அழைத்துக் கொண்டு ஒரு பயிற்றுனர் வெளியே ஓட்டத்திற்குப் புறப்பட்டார். இது தேவனுக்கு ஏகப்பட்ட ஏமாற்றத்தைத் தந்தது.

ஓட்டம் முடிந்து திரும்பி முகாமிற்கு வந்தபின்பு சத்தியனைக் காணவில்லை. ஏதோ ஒருவித அந்நியத்தன்மை முகாமெங்கும் பரவியிருந்தது. யாரிடமும் சத்தியன் எங்கே என்று கேட்க முடியாத சங்கடத்தை சமாளித்த வண்ணம், தனது அலுவல்களில் தேவன் மும்முரமாக இருந்தான்.

அடுத்த நாள் காலை, நிலவனோடு காலைக்கடனைக் கழிப்பதற்கு தேவன் சென்றிருந்தான். நிலவன் தானாகவே அதைச் சொல்லத் தொடங்கினான்.

'சத்தியனுக்கு என்ன நடந்தது தெரியுமே?' என முதலில் கேட்டான்.

'தெரியவேணும் எண்டுதான் ஆசை. பயத்தில ஒருத் தரிட்டையும் கேட்கேல்ல.'

'நீ என்ன அரசியல்வாதியாகப் போறமாதிரிக் கதைக்கிறா?'

'சும்மா இரும் நிலவன். இப்ப விசயத்த சொல்லும்.'

'ஆனந்தபாபு எல்லாரையும் ஓட்டத்திற்கு கலைச்சுப் போட்டு அவனுக்கு அடிபோட்டு கயித்தில ஏத்தி இருக்கிறான். அவனும் பயத்தில ஏறிப்போட்டு, நடுவில இயலாமல் போக கைய விட்டிட்டான். அதில இருந்து விழுந்தா எலும்புதானே பொறுக்கேலும். பத்தாது எண்டு முள்ளுக்கம்பியும் பீங்கானும்... ஏதோ காசுக்கு மாரடிக்க வந்த கூலிப்படை எண்டு நினைப்பு அவனுக்கு.'

'உண்மைதான் நிலவன். தானும் எங்கள மாதிரி ஒரு தோழன் எண்ட நினைப்பு அவருக்கு இல்ல. மாஸ்ரர் எண்டோண்ண ஏதோ வானத்தில இருந்து குதிச்சதா நினைப்பு. உந்த நினைப்புதான் பிழைப்பை கெடுக்கப் போகுது. இருந்து பார், எப்பவோ ஒரு நாளைக்கு மாட்டுப்படுவார்.'

'சரியாச் சொன்னாய். ஆனா நாங்கள் இப்பிடிக் கதைக் கிறதை ஆராவது உளவுப்படை கேட்டா, எங்கட பிழைப்பு நாறிப்போயிடும் எண்டதையும் ஞாபகம் வைச்சிருக்கோணும்.'

'பிறகு என்ன நடந்தது?'

'புதுக்கோட்டை ஆஸ்பத்திரியில கொண்டேய் போட்டு இருக்கிறாங்களாம். இனி எப்ப வருவான் எண்டு தெரியாது. அதுக்கிடையில நாங்கள் முகாம் மாறிப் போயிடுவோம்.'

'நாங்கள் விடுதலைக்குப் புறப்பட்டு சுதந்திரத்தைத் தொலைத்தவர்கள்.'

'கவிதை சொல்லுறா போல இருக்குது?'

'இல்லை நிலவன் யதார்த்தம்... அதைச் சொல்லுறன்.'

'இப்படிப்பட்ட நிலைமையை நாங்கள் மட்டுமில்ல, எங்கட இனமே அநுபவிக்கப் போகுது. இன்னும் கொஞ்ச நாளில மெது மெதுவாக அது நடக்கும். அப்ப எல்லாரும் புலிவ்வாலைப் பிடிச்சமாதிரி நிண்டு `முழிக்கப் போகினம். இப்பவே ஊரில சில இடங்களில் சில இயக்கங்கள் அப்பிடித்தான் அட்டகாசம் செய்யிறாங்களாம்.'

'புதையல் எடுக்கப் போய் பூதம் கிளம்பின கதையாத்தான் எங்கட போராட்டம் முடியப் போகுது என்றா சொல்லுறாய்?' என்றான் தேவன்.

'ம்... அதுதான் நடக்கும்.'

'பெரிசு எல்லாரையும் சேர்த்துத்தானே போராடோணும் எண்டுறார்.'

'ஓ, அவரின்ர பார்வை தூரப்பார்வையா இருக்கலாம். அந்தப் பார்வை துலைஞ்சு போகாமல் உருப்படியா ஏதாவது வருமோ எண்டு தெரியாது. அதுக்கிடையில எத்தின குள்ளப் பார்வைகள், நல்ல பார்வைகளா மாறும் எண்டு இருந்தது பார். எங்கட சனங்கள் தத்துவங்கள் அலசிறதில நாட்டம் கொள்ள மாட்டினம். அதுக்கான சந்தர்ப்பத்தையும் போராடுகிற இயக்கங்கள் கொடுக்க மாட்டினம். சனங்கள் எப்போதும் சாகசங்களைப் பார்க்கத்தான் துடிப்பினம். இதை யார் புரிஞ்சு கொள்ளுகினமோ, அவையின்ர பக்கம்தான் காற்றடிக்கும்.'

'சூ...' என்று கூறிவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தான் நிலவன். பின்பு குரலைவெகுவாகத்தணித்துக்கொண்டு, 'சந்ததியார் தனக்குத்தான் எல்லாம் தெரியும் எண்ட நினைப்பில வங்கம் தந்த பாடம் எண்ட புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அது நல்லதொரு பாடத்தைச் சொல்லும் புத்தகந்தான். ஆனா அவர் வெளியிட்ட காலமும் இடமும் பிழையானது. றோவுக்கு அதை யாரோ காட்டிக் கொடுத்திட்டாங்கள். அதில இருந்து இந்திய மத்திய அரசுக்கு இவையில வெறுப்பு. இவையும் நக்சலைட் போன்றவர்கள் என எண்ணத் தொடங்கீட்டாங்கள். அதுக்கிடையில சந்ததியாரும் அவரோட சேர்ந்த பெடியளும் அரசியல் பிரச்சனை செய்கிறார்கள் என ஓரம்கட்டித் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லது

பெரிசின்ர சூழ்ச்சியில் கொல்லப்பட்டார்கள் என்கினம். மிகுதியா இருந்தவங்களை B முகாமில கொண்டு வந்து வைச்சிருக்கினம். சந்ததியும் இன்னும் சிலரும் என்ன ஆனார்கள் எண்டு வெளிப் படையா யாருக்கும் தெரியாது.'

'என்ன ஆகியிருப்பினம்?'

'ஈழப் போராட்டத்தின் வரலாறு பற்றி வருங்காலத்தில எந்த அரசியல் காழ்ப்புணர்வும் இல்லாமல் ஆராய்பவர்களின் கோப்புக்களில் இவர்கள் நிச்சயமாக இடம்பிடிப்பார்கள். அவர்களால் சேர்க்கப்படும் ஆதாரங்களில் சிலவேளை இவர்களின் எச்சங்களும் இருக்கலாம்.'

'என்ன போராட்டமிது?' என்றான் தேவன் வெறுப்பு மேலிட.

'இது ஒற்றைவழிப் பாதை. திரும்பியெல்லாம் போக முடியாது. ஓடுவம்.'

'ஓடிக்கொண்டே இருப்பம். ஒரு இடத்தில் சிறு வழி திறவாமலா போய்விடும்?'

'அப்பிடி இல்ல நிலவன்... எல்லோரும் ஒற்றுமையா சேர்ந்து எங்களுக்கு எண்டு ஒரு நாட்டை உருவாக்கி...'

'நீர் நல்லா பகிடி விடுறீர்... முழிச்சுக் கொண்டே கனவு காணுறீர்.'

'ஏன் அப்பிடிச் சொல்லுறா?'

'பிறகு? தமிழன் ஒண்டாச் சேர்ந்து போராடுறதே? உதெல்லாம் நடக்கிற காரியமே? பெரியவரும் தம்பியுமே ஒண்டா இருக்க முடியேல்லையாம். இனி கணக்கில்லாமல் இயக்கம் எண்டு வந்தாப்பிறகு ஒற்றுமையாவாங்களே? நாங்கள் கனவு காணுவம். கண்ண முழிச்சுக் கொண்டு சுகமான கனவு காணுவம். காலம் தன்பாட்டிற்கு ஓடிக் கொண்டு இருக்கும்.'

'அப்ப நீ ஏன் வந்தனீர்? அதைச் சொல்லும் நிலவன்.'

'ஆமி அடிச்ச கையோட ஆத்திரத்தில இயக்கத்துக்கு வந்திட்டன். பிறகு எல்லாத்தையும் ஆறுதலா யோசிக்க, விசயம் ஓடி வெளிக்குது. இயக்கத்தின்ர உண்மையான முகத்தைப்

பார்த்த பிறகு எல்லாம் வெறுக்குது. ஒற்றை வழிப்பாதையில் நடக்கும் எனக்குக்கூட ஒரு நாள் விடிவு வரும் என்கின்ற நம்பிக்கையில் நகரும் நாள்கள் இவை.'

'ம்....' தேவன் பெருமூச்சு விட்டான். ஒரு இலட்சியத்திற் காக உயிரையே தியாகம் செய்வதற்காய் வந்து, பின்பு அந்த இலட்சியம் சிறிது சிறிதாய் செல்லரித்துப் போவதை எண்ண, துக்கம் அவன் நெஞ்சைப் பிழிந்து எடுத்தது. அன்னையும் வேண்டாம், அப்பனும் வேண்டாம், நண்பனும் வேண்டாம், ஊரும் வேண்டாம் என எல்லாவற்றையும் துறந்து வந்தோமே? கடைசியில் அத்தனை தியாகமும் பார்சல் என்கின்ற அவப்பெயரோடு அடங்கிவிடுமா? இந்த அந்தரிப்பில் தேவன் சிறிது நேரம் பேசாது நடந்தான். உலகமே சத்தமில்லாத ஊமைப்படமாய் அசைவதுபோல இருந்தது அவனுக்கு.

அன்று திடீரென வாகனத்தில் ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டன. அதற்காக ஒரு ரென்ற் அடித்து, அதற்குள் அவை வைக்கப்பட்டிருந்தன. இதுவரை காலமும் மரத்தடியை ஆயுத மாய்ப் பாவித்துப் பயிற்சி செய்து வந்தவர்களுக்கு அன்று உண்மையான ஆயுதங்களைக் கழற்றிப் பூட்டும் பயிற்சி நடக்கவிருந்தது. புதுப்பெண்ணைத் தொடப்போகும் சந்தோஷத் தையும் எதிர்பார்ப்பையும் அது எல்லோருக்கும் தந்திருந்தது.

முதலில் எல்லோருக்கும் ஆயுதங்களைப் பற்றி வகுப்பு எடுக்கப்பட்டது. அதில் ஆயுத வகைகள், அதன் சுடுதிறன், அதன் பாகங்கள் எனப் பலவிதமான நுணுக்கமான உண்மைகள் சொல்லித் தரப்பட்டன. எல்லோரும் மிகவும் அக்கறையோடு அதைக் கேட்டுக் கிரகித்துக் கொண்டனர். தேவனுக்கு ஒருகணம் இது ஆயுத மோகத்தின் வெளிப்பாடா என எண்ணத் தோன்றியது. பின்பு அந்தச் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு பாடத்தில் ஒன்றலானான்.

மதியச் சாப்பாடு வரையும் வகுப்புகள் நடைபெற்றன. சிலர் அதிலும் நித்திரை கொண்டு பிடிபட்டார்கள். பின்பு அந்த வெய்யிலில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. தேவனுக்கு அவர்களைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது.

மதியச் சாப்பாட்டின் பின்பு சிறிது இடைவேளை விடப் பட்டு இருந்தது. மீண்டும் ஒருமணிபோல் பயிற்சி தொடங்கியது.

அப்போது ஆயுதங்களைக் கழற்றிப் பூட்டுவது எப்படி என்பதைக் காட்டிக் கொடுத்தார்கள். எல்லோரும் மிகவும் ஆவலோடு இதைத்தான் எதிர்பார்த்து இருந்தார்கள். தேவன் உள்ளே சென்றான். கழற்றிப் பூட்டுவதற்கு AK47 (Avtomat Kalashnikova 47) வைக்கப்பட்டிருந்தது. அதைவிட 303 ஒன்றும் SMG (Submachine gun) ஒன்றும், LMG (Light machine gun) ஒன்றும் இருந்தன.

தேவனுக்கு இது புதுமையாகத்தான் இருந்தது. ஊரிலே நேவிக்காரர் மட்டுந்தான் கொண்டு திரிவார்கள். அதைத் தூரத்தில் இருந்து பார்த்தே வியப்படைந்தது உண்டு. அதன் முன்பகுதியெல்லாம் ஓட்டை ஓட்டையாக இருக்க அதனால் எல்லாம் குண்டுகள் வரும் என அப்பொழுது அவன் எண்ணி வியந்தது உண்டு. தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துத்தான் சுடு வார்களா என்கின்ற குருட்டுக் கற்பனையில் இறங்கியது உண்டு. அந்த எண்ணம் தவறு என்பதை இன்று அறிந்து கொண்டான். அது காற்று புகுந்து வெப்பத்தைக் குறைப்பதற்கு ஏற்படுத்தப் பட்டவை என்பதை அவன் புரிந்து கொண்டான். ஆயுதத்தை ஒவ்வொரு பாகமாய்ப் பிரித்துவிட்டு பின்பு அதை எப்படிப் பூட்டுவது எனக் காட்டிக் கொடுக்கப்பட்டது. பின்பு அப்படியே ஒவ்வொருவரும் அதைக் கழற்றிப் பூட்டத் தொடங்கினர். தேவன் அதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருந்தான். அவனது முறை வந்தபோது அதை எந்தச் சிரமமும் இல்லாது கழற்றிப் பூட்டி முடித்தான். மிகவும் திறமையானவர்கள் கண்ணைக் கட்டிக்கொண்டே கழற்றிப் பூட்டுவார்கள் என்றும் கூறினார்கள்.

பின்பு அங்கு LMGயைப் பற்றி விரிவாக விளங்கப்படுத்தப் பட்டது. அதன் மகசீன் வட்ட வடிவத்தில் இருந்தது. ஒவ்வொரு வராக அதைப்பிடித்து இலக்குப் பார்த்தார்கள்.

சிலநாட்களில்ஆனந்தபாபுடன்நாற்பதுநிமிடங்கள்நடந்தது. பலர் பரிதாபமாய் அடிவேண்டினார்கள். தேவன் பெரியதாக அலுத்துக் கொள்ளாது அதைச் செய்து முடித்தான். ஆனந்தபாபு என்ன அட்டகாசம் செய்தாலும், அந்த விடயங்கள் வெளியே போய்விட முடியாதவாறு கடிதங்களும் பிரித்து வாசித்த பின்பே அனுப்பப்படுவதாய் கதை அடிபட்டது. அவர்கள் அதைச் செய்ய மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இருக்கவில்லை. தேவனுக்கு அதை நம்பவேண்டியதாகவே இருந்தது.

கொமாண்டோ பயிற்சி முடியும் நாள்கள் நெருங்கிக் கொண்டு இருந்தன. ஒருநாள் மாலை திடீரென அனைத்து முகாம் பொறுப்பாளர் ஜீப்பில் வந்து ஆனந்தபாபுவைக் கூட்டிச் சென்றார். அன்று எல்லோருக்கும் ஒருவித ஆறுதல் ஏற்பட்டது. அவனது அட்டகாசம் எப்படியோ.மேலிடத்திற்குத் தெரிய வந்து விட்டது என்பதில் அமைதி பிறந்தது. அவனுக்கு இனி நல்ல தண்டனை கிடைக்கும் என்பதில் பலருக்கு ஒருவித வக்கிர ஆறுதல் கிடைத்தது. தேவனுக்குப் பயிற்சி என்ற பெயரில் நடந்தேறிய அநாகரிகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதில் ஒருவித நிம்மதி வந்தது.

இம்முறை கொமாண்டோமுகாமில்பயிற்சிஎடுத்தவர்களை, ஆனந்தபாபு நடத்திய விதம் பற்றிய விசாரணை அடுத்து வந்த நாள்களில் நடைபெற்றது. அதன் பின்பு எல்லோரும் அதை மறந்து போய்விட்டார்கள்.

ஒருநாள் பிற்பகல் பயிற்சி முடிந்தவர்களை ஏற்றிக்கொண்டு போவதற்கு லொறி வந்திருந்தது. தேவன் தனது பொருள்களை எடுத்துக் கொண்டு இருந்தான். அப்போது நிலவன் தனது பொருள்களுடன் அங்கு வந்து சேர்ந்தான்.

'என்ன இன்னும் அடுக்கி முடிக்கேல்லயே?'

'இல்ல அடுக்கிறன்.'

'இது முடிஞ்சது மனுசருக்கு நல்ல நிம்மதி,' என்றான் நிலவன்.

'எங்க போனாலும் காலமை பயிற்சி இருக்கத்தானே செய்யும்?'

'ஓ அதில மாற்றம் இருக்காது. ஆனா இப்படிக் கஷ்டப் படத் தேவை இல்லைத்தானே?'

'அதெண்டா உண்மைதான்.'

'நாங்கள் எந்தக் காம்புக்குப் போறம் எண்டு தெரியுமே?' என்றான் நிலவன் .

'தெரியாது. உனக்குத் தெரியுமே?' என்றான் தேவன்.

'உண்மையோ தெரியாது. ஆனால் தேனிக்கு போறம் எண்டு ஒரு கதை அடிபடுகுது.'

' உண்மையா?'

'அதுதான் தெரியாது எண்டு சொன்னனே?'

'ம்... உண்மையா இருக்கும்.' கூறிவிட்டு தேவன் பொருள்களை அடுக்கினான்.

26

தேவன் அன்று நடந்து ஒஸ்த்மார்க்காவுக்குச் சென்றிருந் தான். ஊசியிலை மரங்கள் ஒன்றோடு ஒன்று உரசிக் கொண்டு நிற்கும் அடர்ந்த வனமாக ஒஸ்த்மார்க்கா இருந்தது. இயற்கையை அழிவில் இருந்து பாதுகாப்பதில் இவர்களுக்கு ஏக அக்கறை உண்டு. பாவனைக்கு மிஞ்சிய வளம் கொழிக்கும் நாடாக நோர்வே இருக்கிறது. வளத்திற்கும் சனத்திற்குமான விகிதா சாரத்தின் ஏற்ற இறக்கத்தில், இருப்பும் இல்லாமையும் தங்கி இருக்கிறது. இங்கு வளம் நிறைந்திருக்க வறுமை எங்கோ ஓடி ஒளிந்து விட்டது.

மலையில் இருந்த வெண்பனித் துகள்கள் கரைந்து, தண் புனலாகி, தன்னைக் காதலனுடன் சேரவிடு என்பதுபோல, கட்டுக்கடங்காது ஏரியை நோக்கி ஓடிக் கொண்டு இருந்தது. தேவன் நடப்பதை நிறுத்தினான். கொட்டும் அருவியின் அழகை, கொஞ்சும் ஊசிமரத்தின் உரசலை, தழுவிச் செல்லும் வெண்முகில்களை, இயற்கையின் இன்பத் திருவிளையாடலாய்ப் பார்த்து மயங்கி நின்றான். பலர் அந்த நீர்வீழ்ச்சியின் அழகை தமது கமராவில் பிடித்து, தங்களுக்கும் சொந்தமாக்கிக் கொள்ள அவதிப்பட்டார்கள். சிறிது நேரத்தின் பின்பு நினைவு வந்தவனாக தேவன் மீண்டும் நடக்கத் தொடங்கினான். அவன் எண்ணங்கள் தேனி முகாமின் வாழ்க்கை பற்றிய மீளாய்வில் ஈடுபட்டது.

தேனி முகாம் சுருளி வீழ்ச்சிக்கு அருகே ஒரு மலையை அண்டி இருந்தது. அது அமைந்திருந்த இடம் ஒரு தீவுபோல இருக்க அதைச் சுற்றி சுருளி ஆறு ஓடிக் கொண்டு இருந்தது. மா, பாலா, வாழை, பப்பாளி என ஒரு பழச்சோலை நடுவே குடியிருப்பது தேவனுக்குப் புதுமையாக இருந்தது. காலையில் பனிபடர்ந்த மலைச்சாரலைத் தழுவிவரும் குளிர் காற்று, உடலை உரசி ரோமத்தைத் தட்டி எழுப்பிவிட்டுச் செல்லும். தேவனுக்கு அந்தச் சுகத்தைக் கலைப்பதற்கு அன்று மனது இல்லை என்றாலும், முகாமிற்கு என்றிருக்கும் ஒழுங்கிற்குக் கட்டுப்பட வேண்டிய கட்டாயத்தில் ஒருவாறு எழுந்தான். பின்பு அலுப் போடு காலைப் பயிற்சிக்குச் சென்றான்.

கொமாண்டோ முகாமில் கஷ்டப்பட்டவர்கள் என்பதற் காக காலைப் பயிற்சியைத்தவிர வேறு நேரங்களில் அதிகமாக எந்தப் பயிற்சியும் இருக்கவில்லை. காலைப் பயிற்சியை பெருமாள் என்கின்ற ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரி அளித்து வந்தார். அவர் ஆனந்தபாபுவைப் போல் அல்லாது மனிதாபிமானத்தோடு நடத்தியது தேவனுக்குப் மிகவும் பிடித்துக் கொண்டது.

பயிற்சி முடிந்தபோது பெருமாள் மாஸ்ரர் அனுமதியில் லாமல் பிரதான சாலைப்பக்கமாகப் போகக்கூடாதென எச்ச ரித்தார்.

தேவனுக்குக் குழப்பமாக இருந்தது. ஏன் போகக்கூடாது? இங்கும் மர்மங்களா? புரியவில்லை. நிலவனுக்கு ஏதாவது தெரிந்திருக்கும். அவனைக் கேட்க வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

காலைச் சாப்பாடு முடிகையில் நிலவன் ஏதோ ஒரு பத்திரிகை வாசித்துக்கொண்டு இருந்தான். தேவனும் சிலவேளை களில் சிவப்பு புத்தகங்களை எடுத்து வாசிப்பது உண்டு. தேவனுக்கு அந்தப் பருப்பொருள் சிலவேளை அலுப்படிப்பதாய் தோன்றும். தத்துவங்கள் எல்லாம் நடைமுறை ஆகிவிடுமா? ஸ்டாலினைப் பற்றி புகழும் இவர்கள் அவனுடைய மறு பக்கம் பற்றிப் பேசுவார்களா? தனிமனித தத்துவங்களால் அழிந்துபோன ஆயிரமாயிரம் உயிர்களை இவர்கள் மீட்டுத் தருவார்களா? அதையே வேதமாக எடுத்துக் கொண்டு இரத்தம்

சிந்தும் வறிய நாடுகளைக் காப்பாற்றுவார்களா? மாஸேயும் லெனினும் தங்களுக்காக வரைந்துகொண்ட கோடுகள் எல்லோருக்கும் பொருந்துமா? எங்கோ தொலைதூரத்தில் வரையப்பட்ட கோடுகளைப் பார்த்துப் பயணம் செய்வதை விட்டுவிட்டு, எங்களுக்கான சொந்தக் கோடுகளை நாங்களே இட்டுக் கொண்டு, அதற்கேற்ப நடக்கக் கூடாதா? ஹிட்லர், ஸ்டாலின், மாஸே, போல்பொட் போன்றோரின் இரும்புத் திரைக்குப் பின்னால் பலியான மனிதர்களுக்கு யாராலும் நீதி தர முடியுமா என அவனுக்குள் ஆயிரம் கேள்விகள் நித்தமும் பிறப்பதுண்டு.

இப்போது நிலவனைக் குழப்புவதா அல்லது விடுவதா என்கின்ற குழப்பத்தில் தேவன் இருந்தான். பின்பு அந்த விவாதத்தைத் தள்ளி வைத்துவிட்டு அவனிடம் சென்றான்.

'என்ன நிலவன் குழப்புறனே உன்ன?'

பத்திரிகையில் இருந்து பார்வையை உயர்த்தியவன், 'குழப்பிப் போட்டு, பிறகென்ன கேள்வி இது?' என்றான்.

'சரி அப்ப நான் போட்டு பிறகு வாறன்.'

'அட நான் சும்மா சொன்னன், நீ இஞ்ச வா.'

தேவன் போய் அவனோடு அமர்ந்தான். பின்பு மெதுவான குரலில், 'மெயின் ரோட்பக்கம் போகக்கூடாது எண்டு பெருமாள் மாஸ்ரர் சொன்னாரே, என்ன அர்த்தம் அதுக்கு?' எனக் கேட்டான்.

'போகக் கூடாது எண்டு அர்த்தம். நீயென்ன பனிஷ் மென்ற்றில போறது எண்டு முடிவு பண்ணீட்டியே? தேவையில்லாத கதையெல்லாம் கேட்டுக் கொண்டு திரியிறாய்! ம்... என்ன ஐடியா?' என்றான் நிலவன்.

'சரி அப்ப விடு அதை,' என்றான் தேவன்.

'கோவிக்காத ஸ்ரீபன். சொல்லுறன் பொறுமையா இரு. நாங்கள் எப்பவும் கவனமா இருக்கோணும். தேவையில்லாமல் தலையை நீட்டிப் போட்டு கஷ்டப்படக்கூடாது. முதல்ல இந்தப் பேப்பரைப் பார்,' என்றான்.

'நீ சொல்லுறது உண்மைதான். அதேநேரம் கிணற்றுத் தவளையா இருக்கிறதும் தப்புத்தானே?' கூறியவண்ணம் பத்திரிகையைப் பார்த்தான் தேவன்.

'நாங்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் இல்லை. சாதுக்களாக ஞானம் பெறத் தேனிக்கு வந்து இருக்கிறம்,' எனக் கூறிய வண்ணம் நிலவன் பத்திரிகையைக் காட்டினான்.

பத்திரிகையில் தற்போதைய வெளிநாட்டு அமைச்சர் தமிழகத்தில் விடுதலைப் புலிகள் பயிற்சி எடுக்கிறார்கள் என்பதைத் திட்டவட்டமாக மறுத்து இருந்தார். தேவனுக்குச் சிரிப்பாக இருந்தது. காந்தி தேசத்தின் அரசியல்வாதிகளுக்கும் காந்தியின் தத்துவத்திற்கும் எவ்வளவு வித்தியாசங்கள்? இவர்களால் காந்தியின் பெயர் உச்சரிக்கப்படும் ஒவ்வொருதரமும் அவரது கனவில் கரும் புள்ளிகள் விழுந்து கொண்டு இருக்கிறது. மனிதனை மனிதன் ஏமாற்றும் கலைக்கு அரசியல் என பெயர் வைத்ததில்தான் எவ்வளவு சாதுரியம்? நாங்கள் சிலவேளை அரசனை நம்பி புருசனைக் கைவிட்டவர்களாக வருங்காலத்தில் அவதிப் படுவோமா என்கின்ற அச்சம் அவன் மனதை நெருடியது.

'நாங்கள் புலிவாலைப் பிடிச்சிருக்கிறம் நிலவன்.'

'உண்மைதான். ஆதாரம் இருக்கவே பிழைவிடுகிற இனம் நாங்களாகத்தான் இருப்பம்.'

'அது சரி, பெருமாள் மாஸ்ரர் சொன்னது' என்றான் தேவன்.

நிலவன் தனது குரலைத் தணித்துக் கொண்டு, 'அன்னை திரேசாக்கள் ஒரு நாளும் அரசியலுக்கு வருவதில்லை. ஏதோ ஒரு சுயநலத்தைப் பதுக்கி வைத்துக்கொண்டு, அல்லது தான் சார்ந்த சமூகத்தின் சுயநலத்தைக் காப்பாற்றிக்கொள்ள, பலர் அரசியலுக்கு வருகிறார்கள். தமிழ்க் கட்சிகள் இதற்கான உயிர் ஆதாரம்.'

ஒருசிலர் இலங்கை இராணுவத்திற்கு எதிராக இன்னொரு இராணுவத்தை அமைப்பதால் ஈழம் கண்டுவிடுவோம் எனப் புறப்பட்டவர்கள். பெரியவர் அரசியலில் சுகத்தின் காற்றே படாமல் இதற்குள் இணைந்தவரல்ல. அவர் தன் சுயநலத்தை

முன்னிறுத்தவில்லை என்றால், தமிழருக்கு உரிமையைப் பெற்றுக் கொடுக்கலாம் என வலுவாக எண்ணி இருக்கலாம். அதைவிட எங்கள் போராட்டத்தில் என்ன நடக்கிறது என்பது தெரியாது, ஏதோ ஒரு கல்லையாவது சிங்களவனுக்கு எதிராகத் தூக்கி எறிந்தால் அதுதான் விடுதலைப் போராட்டம் என நினைத்துக் கொண்டு, எங்களைப் போன்ற ஆயிரமாயிரம் இளைஞர்கள் வந்திருக்கிறார்கள். இதைவிட கிறிமினல் வேலையைச் செய்துவிட்டு, சட்டம் அவர்களைக் கலைக்க, அடைக்கலமாக, பாதுகாப்பாக இந்த இயக்கங்களுக்குள் வந்து பலர் புகுந்துகொண்டு இருக்கிறார்கள். இப்படியாக எல்லோரும் சேர்ந்த இந்தக் கலவை எப்பிடி இருக்கும் எண்டு நினைக்கிறாய்?'

'இது ஏற்கனவே தெரிஞ்ச விசயம்தானே?'

'ம்...'

நிலவன் தனது குரலை மிகவும் தணித்து, இரகசியம் சொல்வது போல், 'மக்களைப் பற்றியே இவையெல்லாம் சிந்திக்கினம்? அப்பிடி ஒரு முலாம் பூசிக் கொண்டு, தனக்கு தனக்கென சொந்த இயக்கம் தொடங்கி இருக்கிறாங்கள். தாங்கள் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால் எண்டுற கொள்கை விளக்கம் வேற. எல்லாத்துக்கும் நல்ல வடிவாக தமிழீழப் போராட்டம் எண்ட முலாமை மீண்டும் மீண்டும் தடிப்பா பூசி வைச்சிருக்கினம். ஒரு நாளைக்கு இந்த முலாம் எல்லாம் கொட்டிண்டு போயிடும். அப்ப எல்லா வெளி வேஷமும் தெரியவரும் அண்டைக்குத் தமிழருக்கு இப்ப இருக்கிற உரிமையும் இல்லாமல் போயிருக்கும். இந்தப் பொம்மலாட்டம் முடிந்த பின்பு என்ன மீதமாய் மிச்சமாக இருக்கிறது என்பதை எங்கள் இனத்தின் சோக வரலாறு சொல்லும்.'

'அதுசரி, அதுக்கும் இதுக்கும் என்ன தொடர்பு நிலவன்?'

'பொறு சொல்லுறன். ஊரில் படுமோசமான சகோதரக் கொலைகளை அரங்கேற்றினார்கள். அவர்களால் இங்கு வந்த பின்பும் சும்மா இருக்க முடியவில்லை. பாண்டி பஜாரில் சுடுபட்டது ஒரு தொடக்கம்தான். அது பப்ளிக் பிளேசில் நடந்த சம்பவம். வெளியுலகிற்குத் தெரியவந்த ஒரு உதாரணம். ஆனா வெளியால வராமல் எத்தனையோ இயக்கக் கொலைகள் இங்கு நடைபெறுகிறது.'

நிவலன் சற்று அமைதியாக இருந்தான். பின்பு, 'எங்கட பெடியளைப் புலியள் பிடிச்சுக்கொண்டு போனவங்களாம். அவங்கள் இன்னும் உயிரோட வரேல்ல. அதுதான் பெருமாள் மாஸ்ரர் அப்பிடிச் சொன்னவராம். எங்கட இயக்கமும் ஒண்டும் சாதுக்களின் சங்கமம் இல்ல. அச்சுவேலிப் பெடியள் தொடக்கம் புலியெண்ட சந்தேகத்தோட அகப்பட்டவர்களின்ர கதை கந்தல் கந்தலாத்தான் போயிருக்குது. அதுதான் வெளியால போறது எண்டா குழுவா மாத்திரம்தான் போகலாமென அறிவுறுத்தி இருக்கிறார்கள். தெரியாமல் போய் அகப்பட்டால் அவ்வளவுதான். இந்தக் காம்பில இருந்து இரண்டு பேர் அப்பிடி முகவரி இல்லாமல் போயிருக்கினமாம். அந்த நிலைமை எங்களுக்கும் வரக்கூடாது எண்ட அக்கறையிலதான் இந்த அறிவிப்பு. மனிதத் தோலோடு அலையும் மிருகங்கள் நாங்கள். மிருகங்கள் உணவிற்காக மட்டுமே கொல்லும். நாங்கள்....' நிலவன் வெறுப்பில் தலையை ஆட்டினான்.

'உயிரைக் கொடுத்து நாட்டுக்காகப் போராட வந்தவர்கள் நாங்கள்,' என்றான் தேவனும் வெறுப்போடு.

'எரியும் அனலான விடுதலை வேள்வியை இவர்கள் துர்ப்பிரயோகம் செய்யப் போகிறார்கள். இருந்து பார், வரலாறு நிச்சயமாக இதை பதிவு செய்து கொள்ளும். எதிரி எங்களை அழிப்பதைவிட எங்களை நாங்களே அழிக்கப் போகிறோம்,' என்றான் நிலவன்.

'அதில சந்தேகம் இல்ல. அத நாங்கள் இப்பவே பாத்திட்டம் தானே?'

'ம்...'

நிலவன் ஏதோ சிந்தனையில் ஆழ, தேவன் ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

அன்று வழமைபோல பலர் சேர்ந்து சுருளி வீழ்ச்சிக்கு குளிக்கச் சென்று இருந்தார்கள். இந்த நீர்வீழ்ச்சி உற்பத்தியாகும் மலையைத் தாண்டிவிட்டால் கேரள மாநிலத்திற்குள் புகுந்து விடலாம். முகாமில் இருந்து புறப்படும்போது நல்ல வெய்யில் எரித்துக் கொண்டு இருந்தது. வீழ்ச்சியை நோக்கிப் போகப் போக சோலை சூரியனுக்கு விடை கொடுத்துக்கொண்டு இருந்தது.

மெல்லிய குளிர்காற்று வியர்வையைத் துடைத்துச் சென்றது. பலர் வீழ்ச்சிக்கு வந்து இருந்தார்கள். அவர்கள் அந்தச் சந்தன நீரில் குளித்தார்கள். வீழ்ச்சியின் அழகை அதிசயத்தோடு அலுப்பில்லாது விழுங்கினார்கள்.

தேவனுக்கோ அருவியின் அருகே செல்லச் செல்ல குளிரத் தொடங்கியது. குளிரைப் பொருட்படுத்தாது அனைவரும் அருகே சென்றனர். இந்த வீழ்ச்சியின் நீருக்கே சந்தன வாசம் இருப்பதாக தேவன் கேள்விப்பட்டது உண்டு. வீழ்ச்சி உற்பத்தியாகும் மலைகளில் சந்தன மரங்கள் உண்டு. சிலவேளைகளில் முகாமில் இருந்து அங்கு வேட்டையாடச் சென்றிருக்கிறார்கள். தேவன் வந்த பின்பு யாரும் இன்னும் மலைக்குச் செல்லவில்லை. சென்றால் தானும் எப்படியாவது அவர்களோடு செல்ல வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

பளிங்கான நீர் பவளமாகக் கொட்டிக்கொண்டு இருந்தது. குழந்தைகள் பெண்கள் ஆண்கள் என எல்லோரும் குளித்தனர். பின்பு குளிரில் நடுங்கி நடுங்கித் துடைத்தனர். அந்த மலையடிவாரம் ஒருபக்கம் மட்டும் உள்ள இரண்டு தட்டு பிரமிட்டைப் போன்றது. அந்த அருவி குன்றின் மேல் தட்டில் விழுந்து குடை போல விரிந்து, பின்பு கீழே வழிந்தோடியது.

முகாமில் இருந்து சென்றவர்கள் கீழே நின்று குளித்தார்கள். இவர்கள் குளித்துக் கொண்டு இருக்கும் போதே சில பிறமாநில இளைஞர்கள் ஒரு காரில் வந்து இறங்கினார்கள். பின்பு உடைகளை மாற்றிக் கொண்டு குன்றின் மேல்தட்டிற்கு ஏறிச் சென்றனர். மேலே ஏறி ஒரு கரையை அடைந்த அவர்கள் அத்துடன் நின்று கொள்ளாமல் அடுத்த கரைக்கு மாறும் முயற்சியில் இறங்கினர். கொட்டும் நீருக்கும் குன்றிற்கும் இடையில் குடையாக விரிந்த இடைவெளி. தண்ணீரோடு போராடிப் போக வேண்டிய அவசியம் இந்த இடைவெளி ஊடாகச் சென்றால் இருப்பதில்லை.

அவர்களில் சிவப்பாக நெடியவனாக இருந்த ஒரு இளைஞன் அதைக் கடக்கத் தொடங்கினான். நடுவே சென்று விட்டான். எல்லோரும் அவனைப் பார்த்துக்கொண்டு இருந்தனர். அவன் நடுவில் வந்தபோது அவனது சமநிலையில் சற்று தடுமாற்றம் ஏற்பட்டது. கண்ணிமைக்கும் நேரத்தில் அவன்

கால்கள் வழுக்கிவிட நீர் தன் ஓட்டத்தோடு இழுத்துக் கொண்டு வர, குன்றில் இருந்து கல்லைப் போன்று வந்து கீழே விழுந்தான்.

கீழே விழுந்தவனில் இருந்து இரத்தம் ஓடிக்கொண்டு இருந்தது. எல்லோரும் அதிர்ச்சியில் சில கணங்கள் என்ன செய்வது என்பது புரியாது திகைத்துப் போய் நின்றனர்.

பின்பு அவனோடு வந்த வயதான உறவினர் குரலெடுத்து அழ, மற்றவர்களும் நிலைமையை உணர்ந்து, அவனைத் தூக்கி ஒரு காரில் ஏற்றினர். வண்டி வேகமாக அந்த இடத்தைவிட்டு உறுமிக் கொண்டு சென்றது.

தேவனுக்கு அன்று நிம்மதி இருக்கவில்லை. வாழ்வுக்கும் சாவுக்குமான இடைவெளி பற்றிய எண்ணத்தில் அவன் மனது மீண்டும் மீண்டும் உழன்று கொண்டு இருந்தது. அன்று குன்றில் இருந்து விழுந்தவன் இன்று கட்டாயம் தான் விழுந்து விடுவேன் என்பது தெரிந்து இருந்தால் நிச்சயமாகக் குன்றின் மேல் ஏறியிருக்க மாட்டான். அதில் இருந்து சறுக்கி விழுந்து இருக்க மாட்டான். கணிப்பீட்டின்படி விழுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும் உண்மையை பல மனிதர்கள் புறக்கணித்து விடுகின்றனர். இவனும் அதில் ஒருவன். ஓர் உணர்ச்சியின் வேகம். கண்கள் அப்போது சரியாகத் தெரிவதில்லை. நாங்கள் இயக்கத்துக்கு வந்த கதைபோல.

நாளை வாழ்வு எப்படி இருக்கும் என்பது தெரியாமல் இருப்பதே இன்றைய வாழ்வின் இந்தக் கணங்களை இரசிக்க வைக்கிறது. நாளை நீ செத்துவிடுவாய் என்பது தெரிந்தால் நீ எதற்குச் செல்வாய்? என்ன செய்வாய்? சாகப்போகிறேன் என்கின்ற கவலையில் உன் வாழ்வையும் பாழாக்கி, உன்னைச் சுற்றி இருப்பவர்களின் வாழ்வையும் பாழாக்கி விடமாட்டாயா? நாளை பற்றித் தெரிந்தால் இந்த உலகமே சோகமயமாகத்தான் இருந்திருக்கும். அது எவருக்கும் தெரியாது. எங்கே வாழ்வுக்கும் சாவுக்குமான கோடு கீறப்பட்டு இருக்கிறது என்பது புரியாது. வாழும்போது வாழ், சாவு வரும்போது ஏற்றுக் கொள் என்பது எவ்வளவு வசதியாக இருக்கிறது எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

'என்ன ஸ்ரீபன் கடுமையா யோசிக்கிறா?' கேட்ட வண்ணம் நிலவன் வந்து பக்கத்தில் அமர்ந்தான்.

'ஒண்டும் இல்ல, அந்த மலையில இருந்து விழுந்தவனை நினைச்சுக் கொண்டு இருந்தன்.'

'அதுதான் விதி எண்டுறது ஸ்ரீபன். அதில ஏறி மேலே போனால் தங்களுக்கு ஆபத்து வரும் என்பது தெரியும். தெரிஞ்சும் ஏறினாங்களே, அதை என்ன எண்டு சொல்லுறது? அதை விதி எண்டுதான் சொல்லலாம்.'

'நிச்சயமாக விழுவம் எண்டு தெரிஞ்சா போயிருப்பானா?'

'ம்... நிச்சயமா விழுவம் எண்டு தெரிஞ்சா போயிருப் பானோ தெரியாது. ஆனா எல்லாரும் தாங்கள் விழமாட்டம் எண்ட அதீத நம்பிக்கையோடதான் செயற்படுவினம். ஒரு விளையாட்டு மாதிரி. ஒருவித விறுவிறுப்பை எதிர்பார்த்து. இது மனிதர்களுக்கே உரிய இயல்பு. ஆபத்து எண்டு தெரிஞ்சும் முயற்சி செய்யும் மூர்க்கத்தனம். இன்று இருப்பார் நாளை இல்லை. இதுதான் இந்த உலக வாழ்வின் சுவாரசியமே.'

சாப்பாடு வழங்கத் தொடங்கி இருந்ததால், அந்தக் கதையை அத்துடன் விட்டுவிட்டு இருவரும் சாப்பாடு வேண்டச் சென்றனர்.

தேனி வாழ்க்கை சிலகாலத்தில் முடிந்தபோது தேவன் மீண்டும் புதுக்கோட்டைக்குத் திரும்ப வேண்டி இருந்தது. திரும்பி வந்த தேவன் கூலாங்குளம் என்னும் முகாமில் சிறிது காலம் தங்கி இருந்தான். இந்த முகாமில் இருந்தபோது வேட்டையாடிக் கொண்டு வந்த இறைச்சி சாப்பிடும் அநுபவம் வாய்த்தது. அத்தோடு முகாமிலேயே பாண் கேக் பண்ணுவதற்கு போறணை கட்டி வைத்திருந்தனர். முதன் முதல் தமிழ்நாட்டில் சுடச்சுடப் பாண் சாப்பிட்டது இந்த முகாமில்தான். பின்பு இங்கு நடந்த ஒரு பரீட்சையில் தேவன் சித்தி எய்தி மற்றாஸ் சென்றான். மற்றாஸ் வரும் சந்தர்ப்பம் கிடைக்கும் எனத் தேவன் எதிர்பார்த்திருக்க வில்லை. தேவனுக்கு அது மிகவும் பிடித்திருந்தது. வித்தியாசமான சூழ்நிலையில், பயிற்சிகளுக்கும் ஓய்வு கொடுத்துவிட்டு, படிப்பது மிகவும் பிடித்திருந்தது. அரசியல் கற்றுத் தருவதற்காக

இந்தியாவில் இருந்த தோழர்களும் இங்கிலாந்தில் இருந்து வந்த ஒரு தோழரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

மாக்சிசம், மாஸேயிசம் என்கின்ற இறக்குமதித் தத்துவங் களும், சாதியமைப்பு என்கின்ற உள்நாட்டுச் சரக்கும், இன்னும் பல பருப்பொருகளைப் பற்றியும் விரிவாகச் சொல்லித்தரப் பட்டது. தேவனுக்கு அப்போது அதைக் கற்றுக் கொள்வதில் மிகவும் சந்தோஷம் ஏற்பட்டது.

மற்றாசில் இருந்தபோது அதிகமானவர்கள் ஒரே கழி வறையைப் பாவிக்க வேண்டி இருந்தது. கழிவுநீர் ஒழுங்காக வடியாத கால்வாய்களில் இருந்து கிளம்பும் நோய்கள் சில விரைவில் பலருக்குத் தொற்றிக் கொண்டது. தேவனுக்கும் அங்கு இருந்த மற்றவர்களுக்கும் சாதுவான கடிசொறி பிடித்துக் கொண்டு விட்டது. அதற்கு எதிராக ஒரு பவுடரைப் போட்டு ஒவ்வொரு நாளும் புரட்டி உருட்டிக் கொள்வார்கள்.

அந்த சமயத்தில்தான் திரும்பப் பேச்சுவார்த்தை நடை பெற்றது. அதன் தோல்வி பற்றி வாசுதேவா வந்து விபரித்தார். ஐயுறவோடே இலங்கையில் இரு இனங்கள் வாழ்ந்து வந்தன. வாழ்கின்றன. வாழப் போகின்றன. இந்த இணைய முடியாத இலங்கையின் இரு அரசியல்மயப்பட்ட இனங்களால் அமைந்த துருவங்களை இணைக்கும் இந்தியாவின் முயற்சி வருங்காலத் திலும் தோல்வியில் முடியும் என்பதற்கு அப்போதே கட்டியம் கூறப்பட்டிருந்தது. கடும் போக்காளரின் கண்மூடித்தனமான வரட்டுப் பிடிவாதம் தொடர்ந்தது.

மற்றாஸ் தமிழ்ச் சினிமாவின் கனவுலகமாக அப்போதும் விளங்கியது. கே.கே. நகரில் நடிகைகள் பலர் குடியிருந்தனர். எல்லாம் துறந்த விசுவாமித்திரரே ஆட்டம் கண்டார் என்றால் அத்தனை கனவுகளையும் அடிமனதில் வைத்திருந்தவர்கள் பாடு எப்படி இருந்திருக்கும்? பலர் நடிகைகளைப் பார்த்துவிட வேண்டும் என்று களவு களவாகத் திரிந்தார்கள்.

அரசியல் வகுப்பு முடித்து பின்பு தேவன் மாங்குளம் என்னும் முகாமில் சிலகாலம் அரசியல் படிப்பித்தான். அப்போது முகாமிற்கு வரும் சாப்பாட்டின் அளவில் அதிகமான கெடு பிடிகள் கொண்டு வரப்பட்டிருந்தது.

பணத்தின் வரவில் பஞ்சமா? அல்லது வந்த பணம் பாதை மாறிப் போய்விட்டதா? பண மரங்கள் கம்பி எண்ணுகிறார்களா? என்பது எவருக்கும் தெரியாது. முகாமில் இருப்பவர்களுக்கே உணவு வழங்க முடியாவிட்டால் எப்படி இயக்கம் நடத்த முடியும்? இது ஒரு நாள் வெடிக்கும் என்பது எல்லோருக்கும் புரியத் தொடங்கியது. எப்போது என்பது மாத்திரம் எவருக்கும் புரியாது இருந்தது.

அந்த நாள் விரைவாக வந்தது. அந்த முகாமில் இருந்த வர்கள் முகாமிற்குத் தரப்பட்ட சீனியில் மிச்சம் பிடித்து அலுவல கத்திற்குள் வைத்திருந்தார்கள். இது ஒரு பிரச்சினையாக வரும் என்பதை அப்போது அவர்கள் அறிந்திருக்கவில்லை. அன்று மாலை றேஷன் வண்டி வந்தது. அதில் இருந்து மணியம் என்பவர் இறங்கி வந்து அலுவலகத்திற்குள் சென்றார். அலுவல கத்தில் என்ன வைத்திருக்கிறீர்கள் என்று ஆராய்வது அவர் வழக்கம் இல்லை. வழமையாக முகாமிற்குக் கொடுக்க வேண்டியதை இறக்கி விட்டுச் சென்று விடுவார்கள். இம்முறை பொருள்கள் இறக்கும் முன்பு ஏதும் மிச்சம் வைத்திருக்கிறீர்களா என்கின்ற மணியத்தின் ஆராய்ச்சியில் சீனி தட்டுப்பட்டு விட்டது. மணியம் சீனியின் அளவைக் குறைத்தே தருவேன் எனக்கூற, அங்கு நின்றவர்கள் அதை விட்டுவிட்டு, தங்களுக்குக் கொண்டு வந்ததைத் தர வேண்டும் என அடம் பிடிக்க, அங்கே தகராறு ஒன்று மெல்ல உருவாகியது.

அதை அங்கு நின்ற சில தோழர்கள் தங்களுக்கு நெருங்கிய பிரச்சனையாக எடுத்துக்கொள்ள, மணியத்திற்கும் தோழர்களுக்குமிடையில் கடும் இழுபறியாக அது விஸ்வரூபம் எடுத்தது. அதில் யாரோ மணியத்தை கெட்ட வார்த்தையிலும் திட்டி இருக்க வேண்டும். மணியம் இந்தப் பிரச்சினையால் பொருள்களை இறக்காமலே கோபமாக வண்டியைத் திருப்பிக் கொண்டு சென்று விட்டார்.

அதன்பின்பு முகாமில் மயான அமைதி நிலவியது. சுழல் காற்றின் முதற்பகுதி அடித்து ஓய, அதன் ஆபத்தான மையப் பகுதிக்குள் ஆறுதல் அடைவதாக இருந்தது. என்ன நடக்கப் போகிறது என்கின்ற அச்சத்தில் எல்லோரும் உறைந்து போய் இருந்தனர். முதலில் நடந்த அரசியல் பிரச்சனையும், அதற்கான

தண்டனைகளும், சில கொலைகளும் இன்னும் அநேகரது நினைவில் பசுமையாக இருந்தன. எல்லோரும் புயலின் மறுபகுதியின் தாக்குதலுக்காகக் காத்திருந்தார்கள்.

எமன் எருமை மாட்டிலும் வரலாம், மனிதர்களால் செய்யப்பட்ட நவீன ஜீப் வண்டிகளிலும் வரலாம் என்பது போல அந்த ஜீப் உறுமிக்கொண்டு முகாமிற்குள் வந்தது. அது இன்று யார் அனுமதியும் இன்றி உள்ளே புகுந்தது. எல்லோரது கண்களிலும் பட்டுத் தெறிக்கும் பயத்தைப் பார்த்த தேவனையும் அதிர்ச்சி தாக்கியது. ஒரு சிறிய பிரச்சினையாக ஒருவருக்குத் தோன்றுவது மற்றையவருக்கு எவ்வளவு பூதாகரமாகத் தோன்றலாம் என்பதை தேவன் புரிந்து கொண்டான். இவர்களின் சாப்பாட்டுப் பிரச்சனை இன்று பூதாகரமாய் வளர்ந்து பெரியவர் வடிவில் முகாமில் வந்து நின்றது. இந்தப் பிரச்சனையின் சூத்திரதாரராய் அரசியல் படிப்பிப்பவர்கள் அடையாளம் காணப் படலாம். அப்படி அடையாளம் காணப்பட்டால், எங்கோ ஒரு காட்டிற்குள் முகவரி இல்லாத புதைகுழியில் இந்த உலகத்தில் எங்கும் பதியப்படாத இறப்புகளில் ஒன்றாகப் போக வேண்டி வரலாம் என்பது மெல்லப் புலனாகிற்று. தேவனுக்கு இப்போது சாதுவாக கைகால் நடுங்குவதான உணர்வு உண்டாயிற்று.

அலுவலகத்தினுள் அதிகாரமான பலத்த கர்ஜனை கேட்டது. யாருக்கு என்பது புரியவில்லை. சிறிது நேரத்தில் விசில் அடித்து பரேட் கூட்டப்பட்டது. எல்லோரும் நடுக்க மெடுத்த நோய்க் கோழிகளைப் போலப் போய் நின்றார்கள்.

பெரியவர் மிகவும் கோபமாக இருந்தார். சடைத்த முடியும் அடர்ந்த மீசையும் பளபளக்கும் கண்ணும் இன்று வேள்விக்குத் தயாரான ஐயனாரைப் போன்று பயத்தைத் தந்தது. அவர் முகத்தில் இருந்த சாந்தம் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டது. பெரியவர் நவீன கட்டபொம்மனாக, அனல் பறக்க, அப்பாவி களின் தலையைக் கொய்வதற்குத் தயாராக நின்றார்.

அவரது கூரிய பார்வையைத் தாங்க முடியாதவர்களாய் பலர் தலைகுனிந்து நின்றனர். பெரியவர் நிறையக் கோபமாகப் பேசினார். அவர் பேசியது நியாயமாகக்கூட இருக்கலாம். தேவனால் அதைப் பெரிதாகக் கிரகிக்க முடியவில்லை. பெரியவரின் கோபம் உச்சகட்டத்தை அடைந்தபோது அந்த

வசனங்கள் எல்லோரது காதிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்பாய்ப் பாய்ந்தது. விலைமதிக்க முடியாத வாழ்க்கைகூட சில வேளைகளில் விட்டில் பூச்சிகளின் வாழ்க்கையாகிவிடும் என்பதை அந்தச் சொற்கள் சுட்டிக் காட்டின.

எல்லோரும் விறைத்துப்போய் நின்றார்கள். பெரியவர் மணியத்தோடு பிரச்சனைப் பட்ட எல்லோருக்கும் கடுமையான தண்டனையும், மற்றவர்கள் எல்லோருக்கும் தண்டனையும் கொடுக்குமாறு கூறிவிட்டு, கோபமாக ஜீப்பில் ஏறிச் சென்று விட்டார்.

பெரியவர் போனபின்பும் தேவனுக்கு அவரின் அந்த வார்த்தைகள் இன்னும் காதில் ஒலித்துக் கொண்டு இருந்தன. அதைச் சொல்லும்போது அவ்வளவு பயத்தையும் மீறி யாரோ சிரித்தது பெரியவருக்கு இன்னும் ஆத்திரத்தை உண்டு பண்ணியதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதைச் சாதாரண மிரட்டலாக எடுத்துக்கொள்ள முடியாது. வன்முறைமீது நாங்கள் காதல் கொண்டவர்கள் அல்ல என்று வாய் பாடினாலும், புலிவாலைப் பிடித்ததுபோல, ஆயுதத்தைப் பிடித்தவர்கள் அதைக் கைவிடுவதாக வரலாறுகள் இல்லை. அதை யாருக்கு எதிராக நீட்டுவதற்கும் அவர்கள் தயங்குவதில்லை.

சுட்டு புதைக்கப்பட்டால் இந்த பிணங்களையோ, அதன் உண்மைகளையோ யாரும் கிளறப்போவதில்லை. வாழ்வின் நாகரிகமும் அரசியல் நாகரிகமும் வன்முறையோடு பிரியாத உறவு கொண்ட நாட்டையும், கலாசாரங்களையும் பெருமை பேசிக்கொள்ளும் எங்கள் இனத்திற்கு, கொலைகள் ஒன்றும் நடக்கக்கூடாத மாபெரும் குற்றங்கள் இல்லை.

தேவன் அன்று அனைவருடனும் தானும் தண்டனையை ஏற்றுக் கொண்டான். தேவனுக்கு பெரியவரின் கோபத்தை நினைத்து கவலையாக இருந்தது. இது இத்தோடு முடிந்து விடவேண்டும் என அவன் வேண்டிக் கொண்டான்.

பெரியவர் கோபத்தில் 'ஊராய் இருந்தால் உங்களை எல்லாம் சுத்து சுத்து தள்ளி இருப்பன்' என்று கொன்னையாகக் கூறியதில் இருந்த வெறுப்பு ஆக்கபூர்வமானதாக இல்லை என்பது எல்லோருக்கும் கொலை நடுக்கம் தந்திருந்தது. இயக்கம்

ஈடாடிப் போய் இருக்கும் இன்றைய நிலையில் பெரிதாக ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்கின்ற ஒருவித நம்பிக்கை மாத்திரம் தேவனுக்கு சிறிது தெம்பைத் தந்தது. அஸ்திவாரமே ஈடாடிப் போயிருக்கும் இயக்கம் இனியும் கொலை செய்யப் படுவதால் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்காது என்பது எல்லோ ருக்கும் ஒரு ஆறுதலைத் தற்காலிகமாகத் தந்திருந்தது.

அந்த நிகழ்ச்சிக்குப் பின்பு முகாம்களில் சாப்பாட்டுப் பொருள்களைச் சேர்த்து வைப்பது இல்லை. அந்த வாரத்திற்கு தரப்படுவதை அந்த வாரத்திலேயே உபயோகித்து முடித்துவிடுவது உண்டு. சாப்பாட்டுப் பொருள்களும் முன்பு போல் இப்போது வருவதில்லை. எல்லாமே ஒருவித தளர்வை நோக்கிச் சென்று கொண்டு இருந்தன.

தேவனுக்கும் இந்தியாவில் இருப்பது பிரயோசனமற்றதான ஒரு செயலாகப்பட்டது. இங்கிருந்து திரும்பி நாட்டுக்குச் சென்றுவிட்டால் நல்லது எனத் தோன்றியது. அதற்குத் தகுந்த காரணம் வேண்டும். குழப்பங்கள் இருந்தாலும் இயக்கத்தின் பிடி இன்னும் தளர்ந்ததாக இல்லை.

அன்று அரசியல் பொறுப்பாளராக இருந்த கண்ணன் முகாமிற்கு வந்தார். தேவன் அவருடன் கதைப்பதற்கு ஏற்கனவே அனுமதி பெற்று வைத்திருந்தான். கண்ணனுடன் கதைக்கும்போது தான் ஊருக்குச் சென்று அமைப்பு வேலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினான். அவனது ஒரே நோக்கம் ஊருக்குப் போவதுதான். அம்மாவைப் பார்க்க வேண்டும் என்கின்ற ஆசை இப்போது மனதில் கொழுந்துவிட்டு எரிந்தது. அதை அடக்க முடியாதவனாய் அவஸ்தைப்பட்டவனுக்கு அந்த அவஸ்தையில் இருந்து விடுபடுவதற்கு ஒரு வழி வேண்டும் என்பதாய்த் தோன்றியது. அதற்காகவே கண்ணனைத் தேவன் இறுகப் பற்றிக் கொண்டான்.

கண்ணன் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு விரைவில் பதில் வரும் என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். நாள்கள் கடந்தன. தேவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது. பின்பு திடீரென ஒரு மாலை ஒரத்தநாடு அலுவலகத்திற்கு தேவனை வருமாறு அழைத்திருந்தனர். தேவன் ஊருக்குப் போகிறோம் என்கின்ற

சந்தோஷத்தோடு அலுவலகத்திற்குச் சென்று இருந்தான். அவனுக்கு அங்கு எதிர்பாராத அதிர்ச்சி காத்திருந்தது.

தேவனை கண்ணந்தங்குடியில் இருந்த சீக் முகாமிற்குப் பொறுப்பாளராகப் போகுமாறு பணித்திருந்தனர். அங்கு இருந்த பொறுப்பாளர் ஏதோ அலுவலாகச் சென்றுவிட உதவிப் பொறுப்பாளரே அந்த முகாமை நடத்தி வருகிறார் எனத் தெரிவித்தனர். சீக் முகாம் நடத்துவது ஒன்றும் பெரிய அலுவலாக இருக்காவிட்டாலும் முகாம் நடத்துவது அல்ல தேவனின் முதல் விருப்பம். அவனுக்கு பழைய முகாமை விட்டு வரும் போது இருந்து சுவாரசியம் தொலைந்து போயிற்று. தேவனுக்கு இது பெரும் அதிர்ச்சியையும் சங்கடத்தையும் கொடுத்தாலும், எதிர்த்துக் கதைப்பதற்கு அஞ்சிப் புதிய முகாமிற்குப் புறப்பட்டான். கண்ணந்தங்குடி சீக் முகாம் அலுவலகத்தில் இருந்து கிட்டத்தட்ட எட்டு கிலோமீற்றர் தூரத்திலேயே இருந்தது. அதற்கு சைக்கிளிலேயே போய்விடலாம். தேவன் கடிதத்தை மனசில்லாது வேண்டிக் கொண்டு, அந்த முகாமிற்குச் செல்லத் தயாராக இருந்த தோழர் ஒருவரையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டான். அந்தத் தோழர் தஞ்சாவூர் மெடிக்கல் கல்லூரிக்குப் போய்விட்டு வருகிறார் என்பதை அவர் கூறித் தெரிந்து கொண்டான்.

27

அன்று வேலையால் வரும்போது வினோ வாசலில் வைத்துத் தேவனை வழிமறித்தாள்.

'அப்பா ஷூவைக் கழட்டாதேங்கோ. இப்பிடியே லேகவத்துக்குப் போகோணும்' என்றாள்.

'என்ன நடந்தது?'

'சுபன் வரேக்க வழுக்கி விழுந்து இருக்கிறான். அப்ப கைய ஊன்றிப் போட்டான் போல இருக்குது. அவனுக்கு சாதுவாகக்

கை வீங்கிக் கிடக்குது.' வினோ அதைச் சொல்லும் போதே அழத்தொடங்கி விட்டாள். தேவனுக்கு அது பிடிக்காவிட் டாலும் அதைக் காட்டிக் கொள்ளாது மறைத்தான். பின்பு சுபனைக் கூட்டிவருமாறு சொல்லிவிட்டு காரை ஸ்ராட் செய்தான்.

லேகவக்தில் காத்திருக்க வேண்டி வந்தது. பசி வயிற்றைக் கிள்ள, பொல்சரும் கோலாவும் வேண்டி வந்தான். சுபனும் தேவனும் சாப்பிட்டார்கள். வினோவைக் கேட்க எதுவும் வேண்டாம் எனப் பதில் வந்தது. அதீத தாய்ப்பாசம் எனத் தேவன் நினைத்துக் கொண்டான். சுபனின் முறை வரும் வரைக்கும் எல்லோரும் காத்திருக்க வேண்டியதாயிற்று. வினோ கவலையில் தொடர்ந்தும் பேசாது இருந்தாள். தேவனுக்கு வருத்தமானவர்களைப் பார்க்க சீக்முகாமின் ஞாபகம் மீண்டும் வந்தது.

அன்று முகாமிற்குச் சென்றபோது ஏழுமணியாகிவிட்டது. இருள் ஒளியை மெல்ல விழுங்க, நிசப்தம் எங்கும் பரவ லாயிற்று. தேவன் கொண்டு சென்ற கடிதத்தை உதவிப் பொறுப் பாளரிடம் கொடுத்தான். அவர் வேண்டிப் பார்த்துவிட்டு, 'வாங்க பொறுப்பாளர்..' என்றார்.

உதவிப் பொறுப்பாளர் சிவலையாக மெல்லிய உடம் போடும் சுறுசுறுப்பானவராகவும் இருந்தார். தேவனுக்கு அவரது கதைகளில் சிறிது அதிர்ச்சி இருந்தது. அதை அவன் அவரிடம் காட்டிக் கொள்ளவில்லை.

அந்த முகாம் தென்னஞ்சோலையை இருப்பிடமாய்க் கொண்டு இருந்தது. அந்தத் தோட்டத்தைச் சுற்றி குடிமனைகள் வளைத்துக்கொண்டு இருந்தன. முகாமிற்கு முன்பு இருந்த வீட்டில் ஒரு தாயும் வயதுக்கு வந்த மகளும் இருந்தனர். தென்னஞ் சோலைக்குள் இருந்த பிரதான முகாமில் சில பிளட்டூன்கள் இருந்தன. மற்றைய தோட்டத்திற்குள் கிணறும் தென்னைமரங் களும் ஒரு பிளட்டூனும் இருந்தது. அந்தப் பிளட்டூன் அம்மை வருத்தம் வந்தவர்களைத் தங்க வைப்பதற்காக விசேடமாக அமைக்கப் பட்டிருந்தது. அது வழமையான பிளட்டூனைவிடப் பெரிதாக இருந்தது.

முகாமில் மருத்துவ வகுப்புகள் முடித்த இருவர், மருத்துவர்கள் என்னும் கௌரவத்துடன் வலம் வந்தனர். மருந்து வகைகளும் ஓரளவிற்கு தாராளமாய் இருந்தன. சீக் முகாமின் பொறுப்பாளர் என்றபோதே தேவனுக்கு மருந்தையும் அதன் பாவனையையும் பற்றிய கவலை தன்னிச்சையாக வந்திருந்தது. அதுவும் நித்திரைக் குளிசை மற்றும் வலியைத் தடுக்கும் மருந்துகளைத் துர்ப்பிரயோகம் செய்யாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது பெரிய பொறுப்பாகி இருந்தது. தேவன் அதை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

அம்மை வருத்தம் வந்து படுத்திருந்தவர்களை அடுத்தநாள் தேவன் போய்ப் பார்த்தான். அவர்களைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. தேவன் அங்கு சற்று அதிக நேரம் செலவு செய்தான். மதியச் சாப்பாடாக மச்சம் சாப்பிட விரும்பியவர்களுக்கு மச்சமும், அதை விரும்பாதவர்களுக்கு பழமும் தயிரும் கொடுக்கப்பட்டது.

அன்று இரவு தேவனுக்கு நித்திரை வரவில்லை. குளிரும் காய்ச்சலுமாய் இருந்தது. படுக்க முடியாது அவஸ்தைப் படுவதைப் பார்த்த பூர்த்திபன் நித்திரை குளிசை எடுத்து வந்து அலுவலகத்தில் தந்திருந்தான். அதை விழுங்குவதா விடுவதா என எண்ணிய தேவன், முடிவில் விழுங்கிவிட்டுப் படுத்துக் கொண்டான்.

அடுத்தநாள் அங்கும் இங்குமாகக் கொப்பளம் போட்டிருந்தது. நித்திரைக் குளிசையின் தாக்கம் இன்னும் அவனது உடம்பில் இருப்பதை நடக்கும்போது உணர்ந்து கொண்டான். அந்தரத்தில் பறப்பதான இந்தப் போதைக்கு அடிமையாகியே பலர் இதைத் துர்ப்பிரயோகம் செய்கிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் அந்த உண்மையை இன்று அநுபவபூர்வமாக அறிந்து கொண்டான்.

தேவனுக்கு அம்மை அதிகம் போடவில்லை. ஒரு கிழமையில் அது மாறிப் போயிற்று. அதன் பின்பு அயலவர்கள், மற்றும் கண்ணந்தங்குடி, மேலையூர் என்பனவற்றைப் போய்ப் பார்த்து வந்தான்.

இங்கு அயலவர்கள் நல்ல ஒத்தாசையாக இருப்பதாக தேவனுக்குத் தோன்றியது. தேவனுக்குப் பக்கத்து வீட்டில் இருந்த

பாரதியை நன்கு பிடித்திருந்தது. அவன் மிகவும் ஒல்லியாக சிவப்பாக இருப்பான். நல்ல சுருள் முடியைக் கட்டையாக வெட்டி இருந்தான். அவனது அப்பாவியான கிராமத்துப் பழக்கவழக்கம் இவன் மனதைக் கவர்ந்திருந்தது. எதையுமே எதிர்பாராது உதவி செய்யும் அந்தப் பண்பாட்டை தேவனுக்குப் போற்ற வேண்டும் போல் இருந்தது. தேவனுக்கு முன்வீட்டைப் பற்றிய கவலை மனதைச் சிராம்பியது. அது எப்போதும் அடிமனதை விடாது அரித்துக் கொண்டு இருந்தது. என்ன செய்வது என்பது மட்டும் புரியவில்லை. உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

சீக் முகாம் வாழ்க்கையில் தேவன் ஒன்றியிருந்தபோது ஒரு நாள் அலுவலகத்தில் இருந்து ஒரு இரகசியக் கடிதம் வந்தி ருந்தது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இரவுபகலாக டியூட் டியைபலப்படுத்தவேண்டும்எனஅதில்அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும் றோவின் கட்டளைப்படி இந்திய இராணு வம் தாக்கினால் ஊருக்குள் சென்று பொதுமக்களுடன் சேர்ந்து கொள்ளுமாறும் கேட்கப் பட்டிருந்தது.

தேவன் நீண்ட நேரமாக அதிர்ச்சியில் இருந்தான். பின்பு தன் நிலையை மெதுவாக உணர்ந்து கொண்டான். முகாமைச் சுற்றி டியூட்டிகள் நிறையப் போட்டான். தோழர்களின் கேள்வி களுக்கு முழுமையாகப் பதிலளிக்க முடியாது திண்டாடினான். கண்ணந்தங்குடிச் சந்தியில் இருந்த ஒரு வீட்டில் கதைத்து, அங்கே இருவரை டியூட்டியாக நிறுத்தி வைத்திருந்தான். அத்தோடு மேலையூர் பக்கமாக வயலில் இருவரை டியூட்டியாக நிறுத்தி வைத்தான்.

ஒரு கிழமை நத்தையாக ஊர்ந்து சென்றது. எந்தவித அசம்பாவிதமும் நடக்கவில்லை. தேவனுக்கு நிம்மதியாக இருந்தது. இப்படி எல்லாம் எதற்கு நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாது இருந்தது. வங்கம் தந்த பாடம் என்கின்ற புத்தகத்தை எழுதியதில் இருந்தே இந்தியாவுக்கு எங்கள் இயக்கத்தைப் பிடிப்பதில்லை என்பது எல்லோருக்கும் புரியும். அதே பாடம் எங்களுக்கும் புகட்டப்பட்டுவிடுமோ என்கின்ற பயம் யாரையும் தூங்க விடுவது இல்லை. எங்கள் உதவி வேண்டப்படாத ஒரு காலத்தில் அது மீண்டும் நிச்சயம்

எங்களுக்கே கற்பிக்கப்படலாம். வருங்கால வரலாறு அதை நிச்சயம் சொல்லும். அந்த அழிவில் இருந்து தப்பித்துக் கொள்வதும் போராட்டத்தின் முன்னெடுப்புக்கு முக்கியமான தொன்றாகும். றோவின் விளையாட்டுப் பொம்மையான இந்தப் போராட்டத்தின் முடிவும் றோவின் திட்டப்படியே நசுக்கப்படலாம். மாற்றி அமைக்கப்படலாம். ஒன்றும் இல்லாது போகலாம். . பாவித்து முடித்தபின்பு இயக்கங்கள் தூக்கி எறியப்படலாம். என்ன புதிய பாடம் இலங்கைத் தமிழருக்கு புகட்டப்படுகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

முகாம் பயத்தில் இருந்து விடுபட்டு மீண்டும் பழைய நிலைக்கு வந்திருந்தது. சாப்பாட்டுப் பொருள்கள் முன்பு போல அவ்வளவாக இங்கும் வருவதில்லை. சீக்முகாம் என்பதால் ஓரளவுக்கென்றாலும் முன்பு வந்துகொண்டு இருந்தது. சாப்பாட்டிற்கு கணக்குப் பார்க்குமளவிற்கு தனது இயக்கத்திற்கு என்ன நடந்தது என்பதை தேவனால் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை. அதேவேளை இயக்கத்தின் மகாநாடு திருவாரூரில் நடைபெற இருந்தது. அதற்குத் தேவனுக்கும் அழைப்பு வந்திருந்தது. முகாம் பொறுப்பாளர் என்ற வகையில் அந்த சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

உதவிப் பொறுப்பாளரின் நடவடிக்கைகள் தேவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவர் பொறுப்பாளராக வருவதற்கு அவதிப்படுவதாய் தோன்றியது. தேவன் உதவிப் பொறுப்பாளரை முகமை விட்டு அனுப்புவதற்குப் பதிலாக தான் முகாமை விட்டு வெளியேற வேண்டும் என முடிவு செய்து கொண்டான். பதவியில் இருப்பது கத்தியில் நடப்பதாய் அவனைச் சங்கடப் படுத்தியது. கத்தி நடனத்தை விரும்பும் மனநிலை இப்போது அவனிடம் இருக்கவில்லை.

அலுவலகத்திற்கு ஒருநாள் போயிருந்தான். அப்போது நடுத்தர வயதுடைய ஒருவர் அனைத்து முகாம் பொறுப்பாளராக இருந்தார். தேவன் அவருடன் கதைக்க வேண்டும் எனக் கூறி அனுமதி பெற்றுக் கொண்டு அவர் இருந்த அறைக்குள்ளே சென்றான்.

தேவனைப் பார்த்த அவர், 'என்ன விசயம்? சீக் காம்ப் எப்பிடி இருக்குது?' என்றார்.

'காம்ப் நல்லா இருக்குது.'

'வேற என்ன கதைக்கோணும் என்னோட?'

'நான் ஊருக்குப் போகோணும்.'

'எல்லோரும் ஒரே நேரத்தில எப்பிடிப் போகேலும். உங்கட முறை வரேக்க உங்கள அனுப்பி வைப்பம்.'

'அதுக்காக எவ்வளவு காலம் வெயிற் பண்ணுறது?'

'போராட்டம் எண்டு வந்தபிறகு உந்தக் கதையள் எல்லாம் அழகா இருக்காது.'

'சரி ஊருக்கு போற கதைய விடுவம். எனக்கு இந்தப் பொறுப்பாளர் பதவி வேண்டாம்,' என்றான் தேவன்.

'ஏன்?'

'எனக்குப் பிடிக்கேல்ல.'

'இங்க பிடிச்சது பிடிக்காதது எண்டில்ல. ஓடர் போட்டா ஒபே பண்ணோணும். விளங்குதே? அதுதான் இராணுவம் எண்டிறது.'

'நான் திரும்பி முகாமுக்குப் போகமாட்டன்.'

'நீ கட்டாயம் போகோணும். நாங்களா மாத்தி அனுப்புற வரைக்கும் நீதான் சீக் காம்பிற்கு பொறுப்பாளர். போய் முகாமை ஒழுங்கா நடத்தும்.'

இம்முறை குரல் கடுமையாக வந்தது. தேவன் சற்று அதிர்ந்து போய்விட்டான். என்றாலும் மீண்டும் துணிவை வரவழைத்துக் கொண்டு, 'நீங்க வெருட்டி வேலை செய்விக்கப் பாக்கிறியள்,' என்றான்.

அது அவருக்கு இன்னும் அதிக கோபத்தை உண்டு பண்ணியதை தேவன் உணர்ந்து கொண்டான். இனிப் பேசிப் பிரயோசனம் இல்லையென எழ நினைத்தபோது, 'உமக்கு எங்கட இயக்கத்தில நடந்த அரசியல் பிரச்சனை தெரியும்தானே? அதே மாதிரிப் பிரச்சனை செய்யிறதோ, எதிர்த்து வாதாடுறதோ ஒருக்காலும் அழகா இருக்காது. இதை நான் மேலிடத்துக்குத்

தெரிவிச்சா அதின்ர விளைவு எப்பிடி இருக்கும் எண்டு உமக்குத் தெரியுமே?'

அந்த வார்த்தைகள் தேவனுக்கு அதிர்ச்சியையும் அச் சத்தையும் தந்தது. தேவன் அங்கு நிற்காது வெளியேறினான். தேவனுக்கு மனது குமைந்தது. இன்னும் வெருட்டுகிறார்கள். அவமானமான ஒரு செயலைச் .செய்தது மட்டுமல்லாது, அதைக் காட்டி இன்னும் வெருட்டுகிறார்கள். செய்யிறதைச் செய்யட்டும் என்று போய்க் கொண்டு இருக்க வேண்டும். ஆனால் வந்த ஆயுதம் றோவிடம் மற்றாசில் பிடிபட்டுப்போக இன்னும் சில முக்கிய ஆயுதங்கள் இருக்கின்றன. அதன் ஆட்டமும் முடிய வேண்டும். அநியாயமாக எதற்கும் பிரயோச னம் இல்லாது எனது உயிர் போகக்கூடாது. அதுவரை காத்திருக்க வேண்டியது கட்டாயம் என மனதில் குமுறிய தேவன் முகாமிற்கு சோகத்தோடு அன்று திரும்பி வந்தான். அதன்பின்பு அவன் நீண்ட காலமாக ஒரத்தநாட்டிற்குச் செல்லவில்லை.

அன்று நான்கு மணிக்குப் பின்புதான் வெயில் தாழத் தொடங்கி இருந்தது. சைக்கிள் ஒன்றை எடுப்பதற்கு, கண்ணந்தங்குடி சந்தியில் இருந்த கடைக்குத் தேவன் சென்றான். கடைக்காரர் கலர் குடிக்குமாறு கேட்டார். தேவன் அதை அன்பாக மறுத்து விட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு ஒரத்தநாட்டிற்குச் சென்றான். அலுவலகத்தில் இருந்து சில மருந்துகள் அவசரமாக எடுத்து வரவேண்டி இருந்தது. அனைத்து முகாம் பொறுப்பாளர் நின்றால் மீண்டும் கதைக்க வேண்டும் எனவும் எண்ணிக் கொண்டான். ஊர் போக வேண்டும் என்கின்ற ஆசை அவனை விட்டுவைப்பதாக இல்லை.

வயல்கள் பசுமையாக இருந்தாலும் வெப்பம் அதையும்மீறி அனல்காற்றாய் உருப்பெற்றிருந்தது. இது தெரிந்தே தேவன் பொழுது சாயப் புறப்பட்டான். அப்படி இருந்தும் வெக்கை தணியாத அனல்காற்று உடலை உரசிச் செல்வது அரிகண்டமாய் இருந்தது. வியர்வை அங்கங்கு முத்தாகப் பொங்கி எழுந்தது. பின்பு அது மெதுவாக உடலெங்கும் வழிந்து ஓடியது.

தேவன் அலுவலகத்தைச் சென்றடைந்தபோது தெப்பமாக நனைந்து போய் இருந்தான். அன்று அலுவலகத்திற்கு முன்பு இருந்த வீட்டில் பெண்களும் நின்று இருந்தனர். அவர்கள்

திருமணமாகிய தோழர்களின் மனைவியராக இருக்க வேண்டும் எனத் தேவன் எண்ணிக் கொண்டான். அங்கு பல தோழர்களும் அவர்களோடு கதைத்துக் கொண்டு நின்றனர். அவர்கள் ஏதோ ஒரு பரபரப்பில் இருந்தனர். இதைப் பார்த்த தேவன் சிறிது நேரம் அங்கு நின்று கதைத்துவிட்டு, அலுவலகத்திற்குப் பேகலாம் என எண்ணினான்.

அவர்களோடு கதைக்கும்போது பெரியவர் அலுவலகத்தில் இருப்பதை அறிந்து கொண்டான். என்ன நடக்கிறது? எதற்காக இந்த திடீர் வரவு என்பது தேவனுக்கு முதலில் புரியவில்லை. அவர்களோடு மீண்டும் கதைக்கும்போது, இயக்கத்தில் பிரிவை ஏற்படுத்திய ஒருவருக்கும் பெரியவருக்கும் பிரச்சனை என்றும், பிரிந்து போனவர் ஒரு பகுதி தோழர்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு இயக்கத்தை விட்டுப் பிரிந்து போகிறார் என்றும் கதைத்தார்கள். தேவனால் தன்னையே நம்பமுடியாத தவிப்பு. தேவனுக்கு தலை சுற்றுவது போல இருந்தது. தேவனை அந்த வீட்டில் நின்ற சில தோழர்கள் அலுவலகத்திற்கு தற்போது போக வேண்டாம் எனத் தடுத்தார்கள். இந்தப் பிரச்சனை சிலவேளை ஆயுதப் பிரயோகத்தில் முடியலாம் என்றும் எச்சரித்தார்கள்.

அவர்கள் சொன்னதில் உண்மை இருந்தது. இரண்டு ஜீப்பில் ஆயுதங்களுடன் பிரிந்தவரும் அவரது ஆட்களும் வந்து நின்றனர். அலுவலகத்தில் பெரியவரும் அவரது ஆதரவாளர்களும் தயா ராக இருந்திருப்பார்கள். தேவனுக்கு தான் காலநேரம் தெரியாது வந்து இடையில் மாட்டிக் கொண்டதாகப் புலப்பட்டது. யாருமே முழுமையாக தெருவுக்குப் போகாது, தூரே நின்று எட்டி எட்டி வெளியே பார்த்தார்கள். எல்லோரும் வேட்டுச் சத்தத்திற்குக் காத்திருப்பதான கணங்கள். அமைதி அங்கு தன்விருப்பில் இறங்கி கனமாக அழுத்திக் கொண்டு இருந்தது.

இருபகுதியும் தயாராக இருக்கும்போது இவர்களுக்கு இடையில் சமாதானம் ஏற்படுத்தும் முயற்சி தொடங்கியது. ஒரத்த நாட்டைச் சார்ந்தவர்கள் அங்கு வந்து ஜீப்பில் நின்றவர்களோடு வாதாடினர். ஜீப்பில் நின்றவர்கள் அசைவதாக இல்லை. பின்பு சிறிது நேரத்தில் போலிஸ் ஜீப்பும் வந்தது. அவர்களும் இறங்கிக் கதைத்தார்கள்.

போலிஸார் கடுமையாக ஏதோ எச்சரித்திருக்க வேண்டும். அதன் பின்பு ஜீப்பில் வந்தவர்கள் பின்வாங்கினார்கள். எல்லோரும் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்கள்.

தேவனுக்கு நாடுகாக்க வந்தவர்களின் நடத்தை கண்டு மனம் கூசலாயிற்று. எவரின் தாளத்திற்கோ ஆடும் எமது போராளிகள். எங்கள் இனத்திற்கு இப்படி ஒரு சாபம் வந்திருக்கக்கூடாது எனத் தேவன் நொந்து கொண்டான்.

அங்கிருந்த தோழர்கள் தேநீர் தயாரித்தார்கள். எல்லோர் முகத்திலும் இனம் புரியாத கவலையும் திகிலும் அப்பிக் கொண்டு இருந்தது. தேவன் யோசனையோடு தேநீரை வேண்டி அருந்தினான். அருந்தி முடித்தபின்பு அலுவலகத்திற்குள் போவதா வேண்டாமா என ஒரு கணம் நினைத்தவன், பின்பும் மருந்து வேண்டும் என்கின்ற உந்தலில், எல்லாப் பயத்தையும் பின்தள்ளி துணிவுடன் உள்ளே சென்றான்.

அங்கே மருந்து இருக்கவில்லை. அதை வேண்டி வைக்கும் நேரமும் பொறுமையும் அவர்களிடம் இருக்கவில்லை. அனைத்து முகாம் பொறுப்பாளர் அவசர அவசரமாய் தேவனுக்கு பணத்தைத் தந்து மருந்தை வேண்டிக் கொடுக்குமாறு கூறினார். பின்பு 'விரைவாக இங்கிருந்து போய்விடுவது உனக்கு நல்லது' எனப் புத்திமதியும் கூறி வைத்தார். தேவனுக்கும் அன்று அவர் கூறியது மிகச் சரியாகவே இருந்தது. பணத்தை வேண்டிக் கொண்டு தேவன் வெளியே விரைந்தான்.

தேவனுக்கு அன்று நடந்த நிகழ்ச்சி பெரும் அதிர்ச்சியைத் தந்திருந்தது. அதன் பின்பு இயக்கத்தில் இருந்த நம்பிக்கை தவிடுபொடியாகச் சிதறிப் போய்விட்டது. நீண்ட நேரமாக தலை கனத்துக் கொண்டு இருந்தது. முகாமிற்குச் செல்லாது எங்காவது சென்று விடுவோமா என ஒரு கணம் அவனுக்கு எண்ணத் தோன்றியது. தன்னை நம்பி இருக்கும் தோழர்களை இடையில் விட்டுவிட்டுப் போவது அவனுக்கு முறையாகப் படவில்லை. ஆபத்தான நேரத்தில் சுயநலத்தோடு ஓடியதாய் அது முடியக்கூடாது என எண்ணியவனாய், மருந்துக் கடைக்குச் சென்றான்.

மருந்துக் கடைக்காரருக்கு தேவன் இப்போது நன்கு பழக்கமாகி இருந்தான். தேவன் யார் என்பதும் அவருக்கு நன்கு

தெரியும். தேவன் கேட்ட மருந்துகளை அவர் பை ஒன்றில் போட்டுக் கொடுத்தார். தேவன் பணத்தைக் கொடுத்து வெளி யேறும்போது அருகில் இருந்த தேநீர் கடைக்காரர் அழைத்தார். 'உள்ள வாங்கசார். ஏன் கூச்சப்படுறீங்க... ரீ சாப்பிடுங்க சார்,' என்றார் கடைக்காரர்.

'இல்லேங்க நான் அவசரமா முகாமுக்குப் போகோணும். அப்புறமா வந்தா பேசிக்கலாம்.'

தேவனுக்கு அவர் எதற்கு கூப்பிட்டார் என்பது புரிந்தது. சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்றான். தேவன் கண்ணந்தங்குடிக்குத் திரும்பி வரும்போது இருட்டாகிவிட்டது. தேவன் ஊர் கடைக்காரரிடம் சைக்கிளைக் கொடுத்துவிட்டு, நடந்து முகாமை நோக்கி வந்துகொண்டு இருந்தான். இருட்டாகி விட்டதால் தெருவில் சன நடமாட்டம் குறைந்து இருந்தது. பெண்களை அறவே காணமுடியவில்லை. இந்தச் செக்கல் மக்கலான நேரத்தில் ஒருசிலர் முன் வீட்டிற்கு வந்து போவதை தேவன் அவதானித்து இருக்கிறான். முகாமிற்கு முன்னால் இப்படி ஒரு வீடு இருப்பது மனதில் உறுத்திக் கொண்டு இருந்தது. எதுவுமே அதற்கு எதிராய்ச் செய்ய முடியாது என்பது அவனுக்குப் புரியும். ஊரில் பல ஆண்களின் வடிகா லான இடம் அது. குற்றம் சொல்லப் போனால் அதைத் திருப்பிப் போட்டு எங்களிலேயே குறை காண முயற்சி செய்யலாம். அப்படி ஒரு வீடு இருப்பதே தனக்குத் தெரியாது என்பது போலத் தேவன் பாசாங்கு செய்து வந்தான்.

தேவன் சிறிது வேகமாக நடந்து வந்தான். அருகில் ஒருவர் தேவனோடு நடந்து வந்தார். அவர் சிறிது குடித்திருக்க வேண்டும். தேவனோடு வலுவில் கதைக்கத் தொடங்கினார்.

'விடுதலைப் புலிங்களா சார்.' தெரிந்துகொண்டே சும்மா கேட்டு வைக்கிறார் என்பது தேவனுக்குத் தெரியும்.

'ஆமா விடுதலைப்புலிதான் சார்,' என்றான் தேவன்.

'எங்க அந்தி சாஞ்சு போயிட்டு வாறீங்க?'

'ஒரத்தநாட்டில இருந்து மருந்து வாங்கீட்டு வாறன் சார்.'

'நீங்கதான் இந்த முகாமுக்கு பெர்றுப்பா இருக்கிறீங்களா?'

'ஆமா சார்.'

'உங்க பையனில ஒருத்தன் சரியில்லைங்க சார்.'

'என்ன சொல்லுறீங்க சார்?'

'ஆமாங்க. உங்க பையனில ஒருத்தன் சரியில்லேங்க. முன்வீட்டுக்கெல்லாம் போவானாக்கும். அப்பிடி ஊரில பேசிக் கிறாங்க.'

இவர் ஊரில் கதைப்பதைத்தான் கூறுகிறாரா அல்லது தனது கருத்தைக் கூறுகிறாரா? எது எப்படி இருந்தாலும் தேவனுக் குக் கட்டியிருந்த சாறம் கழன்று விழுந்த பதைபதைப்பு. இப்படியும் நடக்கிறதா? தனது கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தகாத வேலைகள் செய்கிறார்களா? தேவன் கோபத்தில் பல்லை நறுமிக் கொண்டான்.

அவர் தொடர்ந்தும் பேசினார். 'உங்களக் குறை சொல் லோணும் எண்டு சொல்லேல்லங்க. நீங்க விடுதலை வீரரில் லையா? இப்பிடியான வீடுகளுக்குப் போறதை ஊருக்க அறிஞ்சா, உங்களுக்கு இருக்கிற மதிப்பு போயிடுமேங்க.'

'தெரியும்.'

'எதுங்க?'

'மானம் போயிடும் எண்டு.'

'யாருக்குத்தான் அது விருப்பமுங்க. எதுக்கும் அவனைப் பிடிச்சு வேறு இடத்துக்கு அனுப்பி விடுங்க.'

'ம்.'

அவர் போகும் ஒழுங்கை வந்து விட்டது.

'அப்ப நான் வறேங்க.'

'சரி வாங்க.'

தேவன் கோபத்தோடு முகாமை நோக்கி வேகமாகச் சென்றான். கோபத்தில் காலைக் குத்திக் குத்தி நடந்து போனதில் தூசுபறந்தது. அதை அவன் அப்போது கண்டு கொள்ளவில்லை.

முகாமிற்குச் சென்றவுடன் உதவிப் பொறுப்பாளரை அழைத்தான். அவர் உடனே வந்தார். தேவன் கோபத்தோடு அவரை நோக்கி, 'என்ன நடக்குது இங்க?' என்று கேட்டான்.

'எதைக் கேட்கிறியள்?'

'எது உங்களுக்குத் தெரியும்!'

'பல விசயம் தெரியும். ஆனா ஆதாரமில்லாமல் உங்களுக்கு வந்து சொல்லுறது அழகில்லை எண்டதால சொல்லேல்ல.'

'என்ன அது?'

'பக்கத்து வீட்டுக்காரற்ற மகளை எங்கட முகாமில இருக்கிற ஒருவன் காதலிக்கிறானோ எண்டு ஒரு சந்தேகம்.'

'யாரது?'

'சிவன்.'

'இது ஊர்சனம் யாருக்கும் தெரியிற அளவுக்கு வந்திட்டுதே?'

'தெரியாது எண்டு நினைக்கிறன்.'

'உந்த வேலையள் செய்தா என்ன பனிஷ்மென்ற் கிடைக்கும் எண்டு விளங்கப்படுத்தாதையுமென்.'

'இவங்களுக்கு எல்லாம் என்ன விளக்கிக்கொண்டு இருக்கமுடியும். வருத்தமெண்டு வாறாங்கள். பிறகு ஊருக்க பொறுக்கித் திரிஞ்சா வருத்தம் முடிஞ்சுதெண்டுதானே அர்த்தம். அப்ப பிடிச்சு திருப்பி அனுப்ப வேண்டியதுதானே?' என்றார் உதவிப் பொறுப்பாளர்.

'ம். நீர் சொல்லுறதும் சரிதான். நாளைக்கு காலமை அவனைக் கூட்டிக் கொண்டே ஒபிசில விட்டிட்டு வாரும். வேற ஏதாவது முகாமிற்கு அனுப்பட்டும். இப்ப ஒண்டும் அவனுக்கு சொல்லத் தேவையில்லை. நாளைக்குப் போகேக்க சொல்லலாம்.'

'ம்... நீங்கள் சொல்லுறது சரிதான்,' என்று கூறிவிட்டு உதவிப் பொறுப்பாளர் எழுந்து கொள்ளத் தயாராகினார்.

'இன்னுமொரு விஷயம் இருக்குது' என்றான் தேவன்.

'என்னது?'

'இல்ல, யாரோ முன்வீட்டுக்கு போறதாகக் கேள்வி.'

'என்னையும் நேற்று ஒருத்தன் கேட்டான். நானும் அதைச் சொல்ல வேணும் எண்டுதான் நினைச்சனான். ஆனா ஆதார மில்லாமல் கதைக்கமுடியாதுதானே?'

'அதென்ன ஆதாரம் வேண்டிக்கிடக்குது? இஞ்ச என்ன கோடே நடக்குது? தெரியிற விசயத்தை வந்து சொல்லுங்க. இதுக்கு ஆதாரம் எல்லாம் பார்த்துக் கொண்டு இருக்கத் தேவை யில்ல.'

தேவனின் வார்த்தைகளில் சற்று எரிச்சல் இருந்தது.

'அவனைக் கையும் களவுமாகப் பிடிக்கோணும்,' என்றான் தேவன்.

'அதை என்னிட்ட விடுங்க. நான் செய்யிறன்,' என்றார் உதவிப் பொறுப்பாளர்.

'ம். அவனைக் கெதியாப் பிடியுங்க.'

'அப்ப நான் நாளைக்கு ஏழுமணிக்கு சிவனைக் கூட்டிக் கொண்டு போய் விட்டிட்டு வாறன்.'

'ம்...'

'சைக்கிள் வாடகைக்கு எடுக்க காசு வேணும்.'

தேவன் ஐந்துரூபாய்த் தாளைக் கொடுத்தான். உதவி முகாம் பொறுப்பாளர் அதை வேண்டி புரட்டிப் பார்த்துவிட்டுப் பொக்கெற்றுக்குள் வைத்துக்கொண்டு வெளியே சென்றார். தேவன் சட்டையைக் கழற்றிவிட்டு புத்தகம் ஒன்றை எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

தேவனுக்குப் புத்தகத்தை வாசிக்க முடியவில்லை. நாளைக்கு உதவிப் பொறுப்பாளர் தன்னைப்பற்றி தப்பாகச் சொல்லலாம். உதவிப் பொறுப்பாளருக்கு தன்மீது சாதுவான எரிச்சல் உண்டு என்பது தேவனுக்குத் தெரியும். தனக்கு பொறுப்பாளர் பதவி கிடைத்திருக்கவேண்டும் என்கின்ற எண்ணம் அவர் மனதில் இருந்தது. அந்த எண்ணத்திற்கு இது நல்ல சந்தர்ப்பம்தானே. சரி, பயன் படுத்திக் கொள்ளட்டும். நானே வேண்டாம் என்றுதானே போய் சண்டை பிடித்துக் கொண்டு வந்திருந்தேன். என்னால் இயன்ற அளவில் முகாமை நடத்திச் செல்ல வேண்டியது. அது பிழை என்று வந்தால் சந்தோசமாக யாரிடமாவது கொடுத்து விடுவது. அது உண்மையிலேயே தனக்கு விடுதலை தரும் எனவும் தேவன் எண்ணிக் கொண்டான்.

தேவன் விழித்தபோது விடிந்து போயிருந்தது. உதவிப் பொறுப்பாளர் வந்திருந்தார். தேவனுக்கு எதுவும் புரியவில்லை. என்ன என்பதுபோல பார்த்தான்.

'நான் பெடியள இரவு விசாரிச்சுப் பார்த்தன். சிவனுக்கும் அவளுக்கும் காதல் எண்ட அளவுக்கு ஒண்டும் பெரிசாய் இல்லையாம். ஆனா ஆளையாள் பார்த்து சிரிச்சுக் கொண்டு போறவையாம். அதை வைச்சு இவங்கள் காதல் எண்ட முடிவெடுத்து என்னிட்ட வந்து சொல்லி இருக்கிறாங்கள்.'

' என்ன செய்றதா உத்தேசம்?'

'அவசரப்பட வேண்டாம் எண்டு நினைக்கிறன்.'

'ம்...'

'என்ன யோசிக்கிறியள்?'

'அப்ப முன்வீட்டு விசயத்தைப் பற்றி கொஞ்சம் விசாரிச்சுப் பாருங்கோ.'

'ஓ நான் விசாரிக்கிறன். அதோட மூண்டாவது பிளட்டூன் ஒழுகுது. நான் கிடுகுக்கு மே லையூரில சொல்லி வைச்சிருக் கிறன். ஐஞ்சாறு பெடியளைக் கூட்டிக் கொண்டுபோய் அதைக் காவிக் கொண்டு வரோணும்.'

'சரி காலமைச் சாப்பாடு முடிஞ்சபிறகு பெடியளைக் கூட்டிக் கொண்டு போங்க.'

'சரி...'

சில நாள்களில் தேவனுக்கு முன்வீட்டிற்குப் போவது யார் என்பது தெரியவந்திருந்தது. கையும் களவுமாய்ப் பிடிக்க வேண்டும் என்பதற்காய் எல்லோரும் காத்திருந்தனர்.

28

நேற்று கிறீஸ்திலிபோல்கை கட்சியின் மகாநாடு நடந்து முடிந்திருந்தது. மதத்தின் பெயர்களில் இயங்கும் கட்சிகளைக் கண்டால் தேவனுக்குப் பிடிப்பது இல்லை. இந்தியாவில் சிவ

சேனைமாதிரி மதவெறி கொண்டு இவர்கள் அலையாவிட்டாலும், மதத்தை வைத்துப் பிழைப்பு நடத்தும் மனிதர்கள் தங்களையும் ஏமாற்றி, மற்றவர்களையும் ஏமாற்றுகிறார்கள் என்பதே தேவனின் அபிப்பிராயம். அரசியல் நடத்துவதற்கு எத்தனையோ நல்ல விடயங்கள் எல்லாம் இருக்கும்போது, மற்றைய மனிதர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் விதமாக இனவெறியை, மதவெறியைப் பயன்படுத்தி, அரசியல் நடத்துபவர்கள் அருவருப்பானவர்களாய்த் தேவனுக்குத் தோன்றினார்கள்.

கிறீஸ்திலிபோல்கை கட்சியின் கருத்துக்களில் நிறைய நல்ல விடயங்கள் இருந்தாலும், நவீன காலத்துக்கும், மக்களின் தேவைகளுக்கும் இசைந்து கொடுக்காத கடும் போக்காளரைக் கொண்ட கட்சியாக, இஸ்ரேல் போன்ற நாடுகள் என்ன அநியாயம் செய்தாலும், எல்லா மனிதாபிமானத்தையும் கழற்றி வைத்து விட்டு, அதற்கு ஒத்தாசை பண்ணுவது தேவனுக்குப் பிடிப்ப தில்லை. இது அவர்களுக்கு ஒருபோதும் அநியாயமாகத் தெரிவ தில்லை. ஒரு பக்கம் அநியாயத்தை ஆதரிப்பதும், மறுபக்கம் ஏழைகளுக்கு இரங்குவதுமாக இரட்டை வேடம் போடுவதான உணர்வே இல்லாது அவர்கள் உலாவுவதும் தேவனுக்கு விசித்திரமாய் இருந்தது. மனிதர்கள் உண்மையான மனிதத் திற்கு மதிப்புக் கொடுக்காத மகாநாடுகள் நடத்துவதில் ஏதாவது நன்மை உண்டாகுமா எனத் தேவன் மனதிற்குள் கேட்டுக் கொண்டான்.

கண்ணந்தங்குடியில் இருக்கும்போதே மகாநாட்டிற்கான நாள்கள் நெருங்கிவிட, தேவன் உதவிப் பொறுப்பாளரிடம் முகாமைக் கவனிக்கும் பொறுப்பைக் கையளித்துவிட்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டான். அங்கிருந்து சிறிய பஸ் ஒன்றில் திருவாரூருக்குப் போவதாக இருந்தது. ஒரு மதியம் போல் புறப்பட்டு திருவாரூருக்குச் சென்றார்கள். அங்கு போய்ச் சேர்ந்ததும் ஆண்கள் மட்டும் மடம் போன்று இருந்த ஒரு மண்டபத்தில் தங்கிக் கொண்டனர். பெண்கள் அங்கு இருந்த இந்தியக் குடும்பங்களுடன் தங்க வைக்கப் பட்டனர். இரவிலே படுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மண்டபத்தில்தான் பகலிலே மகாநாடு நடந்தது.

புதிதாக இயக்கத்தில் இருந்து விலகியவரும் அவருடைய ஆட்களும் மகாநாட்டிற்கு வரவில்லை. அவர்களை இவர்கள் அழைத்தும் இருக்க மாட்டார்கள். அந்தப் பண்பின்

முதிர்ச்சி அற்றது எங்கள் இனம் என்பதில் தேவனுக்கு ஐயம் இல்லை. பெரியவர், வாசுதேவா, செந்தில், கண்ணன், சுபாஸ் என்பவர்களோடு இன்னும் பல முக்கிய புள்ளிகளும் மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அதிகாரபூர்வமற்ற கதாநாயகன் கந்தசாமியும் அங்கு பிரசன்னமாகி இருந்தார். இந்த மகா நாட்டின் சுவாரசியமே அவர்தான் என்பது பலருக்கும் புரிந்தது. இறுதியில் ஏதாவது முடிவை எட்டுவோம் என்பதில் பலருக்கும் பெரிய எதிர்பார்ப்புகள் இருந்தன.

காலைச் சாப்பாட்டிற்குப் பின்பு மகாநாடு தொடங்கியது. ஒவ்வொருவருக்கும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டது. தேவன் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தான். பெரியவர் என்ன பேசப் போகிறார் என்பதுதான் அவன் எதிர்பார்ப்பாய் இருந்தது. அதுதான் இந்த இயக்கத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கப் போகிறது என்பது அவனுக்குத் தெரியும். அதற்கு முதல் பேசியவர்கள் உட்கட்சி கொலை களைப் பற்றி சாதுவாகக் கதைத்தார்களே தவிர ஆழமாகச் சொல்லவில்லை. அது அவர்களுக்கு நடுக்கத்தைத் தந்திருக்க வேண்டும்.

பெரியவர் பேசும் முறை வந்தது. ஒருமுறை மதுரையில் பெரியவர் மணிக்கணக்காகப் பேசியதாகப் பெருமைப் பட்டுக் கொள்வார்கள். அப்படி எந்த இயக்கத் தலைவரும் பேசமாட்டார்கள் என்கிற கருத்து தேவனின் இயக்கத்தில் இருந்தது. கூட்டணியின் இளைஞர் அமைப்பில் இருந்த மையும், அக்கடமிக் தகைமை இருந்தமையும் அவரது பேச்சிற்கு உரம் சேர்த்து இருந்திருக்கலாம். 'வன்முறை மீது காதல் கொண்டவர்கள் அல்ல நாங்கள்' என்கின்ற வசனத்தை அவரிடம் இருந்து பலமுறை கேட்டதாக தேவனுக்கு ஞாபகம்.

பெரியவர் பேசத் தொடங்கினார்.

எல்லோருக்கும் நிறைய எதிர்பார்ப்புகள் இருந்திருக்கும். மனிதன் என்பவன் தவறுவிடுபவன். அதுவும் நாலாயிரம் தோழர்களை இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான தோழர்களை இலங்கையிலும் கட்டுக்குள் வைத்து இயக்கம் நடத்துவது ஒன்றும் சாதாரண காரியம் இல்லை., ஒரு முகாமையே தன்னால்

புரிந்துகொள்ள முடியாது இருக்கும்போது, மாபெரும் இயக்கத்தைப் புரிந்து, அதைக் கொண்டு நடத்துவது ஒன்றும் இலகுவான விடயம் இல்லை. எளிதாகத் தப்புகள் நடந்துவிடும். தப்புகள் செய்யாத மனிதர்கள் இல்லை. தப்பு செய்வது வழமை. அந்த தப்பில் இருந்து எதைக் கற்றுக் கொள்கிறோம் என்பது தான் அறிவிலும் பண்பிலும் முதுமையை ஏற்படுத்தும்.

இந்த மகாநாடு தப்புகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு, ஒரு புதிய இயக்கமாய் இயங்குவதற்கான ஆரம்பமே என எல்லோரும் எதிர்பார்ப்போடு வந்து இருந்தார்கள். அது தலைவரின் உரையில் இருந்து பரிபூரணமாக வரவேண்டும். அவ்வளவு நம்பிக்கையை அவரது பேச்சு ஒவ்வொரு தோழர் மனதிலும் விதைக்க வேண்டும். அதைப் பெரியவர் செய்வார் என்கிற நம்பிக்கையோடு தேவன் இருந்தான்.

பெரியவர் பேசினார். சுற்றி வளைத்து முற்றும் துறந்த முனிவர் என்கிற பாவனையில் பேசுவதாய் பேசிக்கொண்டு இருந்தார். தேவனுக்கு பொறுமை கரைந்து கொண்டு இருந்தது. நடந்து முடிந்த பழைய வரலாறைக் கேட்பதற்கு தாங்கள் இங்கு வரவில்லை என்பதாய் தேவனுக்குத் தோன்றியது. தற்போது நடந்த தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டோமா என்பதைப் பார்ப்பதற்கு நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். பெரியவர் தற்போது தவறே நடக்கவில்லை எனப் பேசிக் கொண்டு இருந்தது தேவனின் பொறுமையை உறிஞ்சி அதில் கொழுத்து மெது மெதுவாக சினத்தைப் பிரசவித்துக் கொண்டு இருந்தது. அவனுக்கு இந்த இயக்கமே இனி உருப்படாது எனக் கத்த வேண்டும் போல் இருந்தது. கத்தினால் அங்கிருந்து நிச்சயம் கலைத்து விடுவார்கள்.

தேவன் சிறிது அமைதியானான். பின்பு மௌனம் ஆனான். இந்த இயக்கத்தை இனி யாரும் காப்பாற்ற முடியாது என்பதைப் புரிந்து கொண்டான். பெரியவருக்கே இந்த இயக்கத்தைக் காப்பாற்றுவதில் விருப்பம் இல்லையெனத் தேவன் முடிவு செய்து கொண்டான். அவருக்கு விடுதலையை முன்னெடுப் பதில் உண்மையான அக்கறை இருப்பதாய் அவனுக்குப் புரிய வில்லை. சிலவேளை அது சாத்தியம் இல்லை என்பதை பெரியவர்

புரிந்து கொண்டதால் வந்த புறக்கணிப்பா என்பதும் தேவனுக்கு விளங்கவில்லை. அரசியல் ஏமாற்றை வாழ்க்கையாக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவருக்குக் கட்டாயம் இல்லை. உண்மையான விடுதலை கிடைக்கும் என்றால் போராடலாம். தடுமாறி விடுதலைப் போராட்டம் வியாபாரப் போராட்டமாகும் சாத்தியக்கூறுகள் இருந்தால், இதில் இருந்து விலகிக் கொள்வதே மக்களுக்குச் செய்யும் சேவையாகும். அழிவுகளை மட்டுமே மக்களுக்குக் கொடுப்பதல்ல போராட்டம். அந்தத் திசையில் போராட்டம் சென்றால் அதில் இருந்து பின்வாங்கிக் கொள்வது மக்களுக்குச் செய்யும் பெரும் தியாகம். பெரியவர் எதைப் புரிந்துகொண்டார்? எதைச் செய்யப்போகின்றார்? தேவனுக்குப் புரியவில்லை. அவனுக்கு ஒரு விடயம் மட்டும் புரிந்தது. பெரியவருக்கு இந்த இயக்க பலூனை வெடிக்காது கட்டிக் காக்கும் நோக்கம் இருக்கவில்லை. செய்தவை செய்தவையாக இருக்கட்டும். அதற்காக மன்னிப்புக் கேட்கவோ மண்டியிடவோ அவர் தயாராக இருக்கவில்லை. பெரியவரிடம் தவறான வழியில் இயக்கத்திற்குப் பணம் சேர்த்தபோதும், சந்ததியை மாட்டிவிடும் போதும் இல்லாத நேர்மை இப்போது வந்துவிடுமா எனவும் தேவன் எண்ணிக் கொண்டான்.

பெரியவர் பேசி முடித்தபோது இயக்க வாழ்க்கை விரைவில் முற்றுப்பெறும் என்பது மாத்திரம் தேவனுக்குத் தெளிவாகிற்று. சங்கிலியன் எனப்படும் கந்தசாமி எல்லோர் பேசுவதையும் சிரித்தவண்ணம் கேட்டுக்கொண்டு இருந்தார். அவர் கையில் ஆதாரங்கள் நிறைந்த கோப்பு இருந்தது. கந்தர் கடிதங்களோடு வந்திருக்கிறார் என மகாநாடு தொடங்கும் முதலே கதை அடிபட்டது. உங்கே யாரும் கந்தர் தன் விருப்பத்திற்கு கொலைகளைச் செய்துவிட்டார் எனப் புலுடா விடமுடியாது எனக் கதைத்துக் கொண்டு இருந்தது சரியாகப் போய்விட்டது.

எல்லோரும் எங்களுக்கு ஏன் வில்லங்கம் என அந்த விடயத்தை தீண்டப்படாத ஒன்றாக நிரந்தரமாக ஒதுக்கியே வைத்து விட்டார்கள். சபையில் இருந்து கேள்வி எழும்போது மாத்திரம் மழுப்பி சமாளித்துக் கொண்டார்கள்.

அதன் பின்பு பலர் பேசினர். கந்தரின் பேச்சைப் பின்போட்டிருக்க வேண்டும். கந்தர் பேசும் சந்தர்ப்பம் வந்தபோது மிகவும்

தெளிவாக அடித்துக் கூறினார். தன்னிடம், செய்யப்பட்ட ஒவ்வொரு கொலைக்கும் ஆதாரம் இருப்பதாகவும், தான் எந்தக் கொலையையும் சுயாதீனமாகச் செய்யவில்லை எனவும் தெள்ளத் தெளிவாகக் கூறினார். மேலும் சந்தேகமாய் இருந்தால் அதற்கான ஆதாரங்களை தான் சமர்ப்பிப்பதற்குத் தயாரெனவும் கூறினார்.

சபையில் இருந்தோ அல்லது மேடையில் இருந்தோ நீண்ட விவாதத்திற்கு உரிய ஆக்கபூர்வமான கேள்விகள் அதிகமாக எழவில்லை. தேவனுக்கு அது மிகவும் கவலையாக இருந்தது. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நடந்ததில் இருந்து கற்றுக் கொண்டு இனியாவது நடப்பதைப் பற்றிக் கதைக்கலாம் என்கின்ற எண்ணமற்றபோது ஏன் இந்த மகாநாடு என்பதாய் தேவன் சலித்துக் கொண்டான்.

அன்று மதியச் சாப்பாட்டிற்கு பெரிய ஒரு மீனை வேண்டி வந்து கம்பியில் குற்றி இறைச்சி வாட்டுவதுபோல் வாட்டத் தொடங்கினார்கள். அது கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து கொட்டத் தொடங்கியது. தேவனுக்குச் சிரிப்பாக இருந்தது. எதையும் ஆழச் சிந்தியாது தொடங்கினால் கைக்கு எட்டினா லும், வாய்க்கு எட்டாது போயிடும் என்பது புரிந்தது.

மகாநாடு தோல்வியாக முடிந்தது தேவனுக்கு வருத்தத்தைத் தந்தது. தோல்வியாக முடியும் என்கின்ற ஐயம் அடிமனதில் இருந்தாலும் அப்படியே முடிவானது பெரும் கவலையைத் தந்தது. இனி எப்படி இயக்கத்தில் இருந்து வெளியேறுவது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதுதான் பாக்கியென அவன் எண்ணிக் கொண்டான்.

தேவன் ஒரத்தநாட்டிற்குச் சென்றவுடன் முகாமிற்குச் சென்றான். சிறிது நேரத்தில் உதவிப் பொறுப்பாளர் வந்தார்.

'எப்பிடி இருந்திச்சு மகாநாடு?'

'முடிஞ்சுது. ஒரு பிரயோசனமும் இல்லாமல் முடிஞ்சு போச்சுது. இனி அவை அவையின்ர வேலையைப் பார்க்க வேண்டியதுதான்.'

'என்ன நீங்களே ஒரு பொறுப்பாளராய் இருந்துகொண்டு பொறுப்பில்லாமல் பேசுறியள்? மகாநாடு தோல்வியில முடிஞ்சா

என்ன, இயக்கமே முடிஞ்சு போச்சுதே? நாங்கள் இதையெல்லாம் தோழருக்குச் சொல்லக்கூடாது.'

'உது ஒண்டும் பொத்தி வைக்கிற விஷயம் இல்ல. நான் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. கொஞ்சக் காலத்தில அவங்களாகவே அறிஞ்சிடுவாங்கள்' என்றான் தேவன்.

'இப்ப முகாமில ஒரு பிரச்சனை.'

'என்ன விசயம்?'

'ரேஷன் குறைவாத்தான் இருக்குது.'

'ம்...'

'என்ன செய்யிறது?'

'நீர் போய் ஒபீசில கதைச்சுப் போட்டு வாரும். நான் இப்பதான் அலுத்துப் போய் வந்திருக்கிறன். என்னால திரும்பவும் இப்ப அங்க போகேலாது' என்றான் தேவன்.

'சரி நான் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய் கதைச்சுப் போட்டு வாறன். அதைவிட நான் அந்த முன்வீட்டுக்கு றெஜி போனதை நேரடியாகப் பிடிச்சுப் போட்டன்.'

'பிறகு?'

'உடனடியாகவே ஒபீசில கொண்டுபோய் விட்டிட்டன்.'

'ம்... நல்லது.'

சிறிது நேரத்தில் உதவிப் பொறுப்பாளர் புறப்பட்டுச் சென்றார். தேவனுக்கு யோசனையாக இருந்தது. இனிச் சாப்பாடு வருமா என்பதில் சந்தேகம் எழுந்தது. இந்தமுறை ரேஷன் வரா விட்டால் என்ன செய்வது என்பது புரியாது ஒரு கணம் தேவன் திகைத்தான். சிறிது நேரம் யோசித்துக் கொண்டு இருந்தவனை பதறியபடி ஓடி வந்த கண்ணன் உலுப்பினான்.

'என்ன கண்ணன் ஏன் இப்பிடி ஓடியாறாய்?'

'பொறுப்பாளர்... மணியும் வண்ணனும் மேலக்குடி ரோட்டுக்குப் போறாங்கள். அங்க வாற லொறியில ஏறி மண்டபத்துக்கு போகப் போறம் எண்டு கதைச்சவங்களாம். அவங்களப் போய் பிடிச்ச ரோணும் பொறுப்பாளர்.'

தேவன் மனதிற்குள் சிரித்தான். இருப்பவர்களுக்கே உணவு இல்லை. இதில் ஓடுபவர்களைப் பிடித்துவந்து என்ன செய்யப் போகிறோம்? பேசாமல் படுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

தேவன் நினைத்ததை வெளியில் சொல்லவில்லை. சொன்னால் கலவரமாய்ப் போய்விடும். அவரவர் பாட்டிற்கு ஒரே நேரத்திலேயே ஊருக்குப் புறப்பட்டு விடுவார்கள். எல்லோரும் போகப் போகிறார்கள். அதை யாரும் தடுக்கப் போவதில்லை. ஆனால் சிறிது சிறிதாக நடக்கட்டும் எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

'என்ன பொறுப்பாளர் பேசாமல் நிக்கிறியள்?'

'எனக்கு நம்ப முடியாமல் இருக்குது.' தேவன் மனதறியப் பொய் சொன்னான்.

'உடனடியாகப் போகோணும். அப்பதான் அவங்களைப் பிடிக்கலாம். எத்தின பேரைக் கூட்டிக்கொண்டு வாறது?' என்றான் கண்ணன்.

'கனபேர் வேண்டாம். இன்னும் ஒருத்தனைக் கூட்டிக் கொண்டுவா. அது போதும் எண்டு நினைக்கிறன்.'

'அது போதுமே பொறுப்பாளர்?' சந்தேகத்தோடு கேட்டான் கண்ணன்.

'அவங்களப் பேசிக் கதைச்சுத்தான் கூட்டிய ரோணும். முந்தின காலத்தில செய்த மாதிரி இப்ப செய்யேலாது. முகாமில இருக்கிற சக தோழர்களும் ஊர் சனங்களும் பிறகு சண்டைக்கு வந்திடுவாங்கள். ஊரை இப்ப பகைக்கக்கூடாது. அது எங்களுக்கு அவ்வளவு நல்லது இல்லை எண்டு நினைக்கிறேன். உனக்கு விளங்குதே?' என்றான் தேவன்.

அவனுக்கு ஊரைப்பற்றி ஒரே கவலை இருந்தது சாப்பாடு வராது நின்றால் ஒருவேளை அவர்களின் உதவி தேவைப்படும். இந்த எண்ணம் அவன் அடிமனதில் எப்போதும் இருந்து கொண்டே இருந்தது.

கண்ணன் தேவனைக் குழப்பத்தோடு பார்த்துவிட்டு, ' அப்ப அவங்கள எல்லாம் ஓட விடலாமே பொறுப்பாளர்?' என்றான்.

'இல்ல. ஓடுறவங்கள பிடிச்சரேலாது. அவங்களுக்கு அடிக்கேலாது. அல்லது B காம்பில அந்தக் காலத்தில கந்தர் செய்தமாதிரி இப்ப இங்க லேசாச் செய்யேலாது. புரியுதே? காலம் மாறிட்டுது. அதை நாங்களும் விளங்கிக்கோணும். ஊர்க்காரங்களா சேர்ந்து எங்கள அடிச்சுக் கலைக்கிற வேலை செய்யிறது ஒருத்தருக்கும் உதவாது. என்ன . நான் சொல்லுறது உனக்கு விளங்குதே?'

(...) கோபமாகச் சொல்ல அவன் சற்று மிரண்டு போயவ(...)ன. தேவன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, 'போய் யாராவது ஒரு நல்ல ஆளா கூட்டிக் கொண்டுஓடியா' என்றான்.

அவன் அம்பாய்ப் பாய்ந்தான். போகும்போது அவர்கள் லொறியில் ஏறி இருக்கவேண்டும் என்பது தேவனின் வேண்டு தலாக இருந்தது. அந்த லொறியில் ஏறியாவது எங்காவது செல்லட்டும். ஏதாவது ஒரு வழியைக் கண்டு பிடிக்கட்டும்.

கண்ணன் இன்னொருவனோடு வந்தான். (...)ாகப் புறப்பட்டு மேலைக்குடி றோட்டை நோக்கி நட(...) கள். போகும் வழியில் பக்கத்து வீட்டைக் கடந்தே செல்ல வேண்டும். படலையில் அவள் நின்றிருந்தாள். தேவன் ஒரு கணம் அவளைப் பார்த்தான். இதைப் புரிந்துகொண்ட அவள் தலையைக் குனிந்து கொண்டாள். கறுப்பாக இருந்தாலும் நல்ல முகவெட்டும் உடல்வாகும் கொண்டவளாய் இருந்தாள். பட்டினி கிடந்தவனுக்கு பாயாசம் கொடுத்தது போலத்தான் இருக்கிறது. அழிந்து போகும் ஒரு இயக்கத்தில் இருக்கிறான் என்பதைத் தவிர இதில் எந்தத் தப்பும் கிடையாது எனத் தேவன் நினைத்துக் கொண்டான்.

தேவன் அவர்களோடு அவசர அவசரமாய் நடந்து சென்றான். மனசு மாத்திரம் பின்னே கொழுவி இழுத்துக் கொண்டு இருந்தது. முகாமை விட்டுவிட்டுச் செல்பவர்களிடம் தர்க்கப்படுவதற்கே தேவனுக்கு இப்போது விருப்பம் இல்லாது இருந்தது.

தேவனும் அவனோடு சென்றவர்களும் மண்றோட்டைக் கடந்து தார்றோட்டை அடந்தனர். கண்ணன் அவசரமாய் தார் றோட்டில் ஏறி நின்று பார்த்தான். தேவனும் இப்போது பக்கத்தில்

நின்று பார்த்தான். வெய்யில் இன்னும் வாட்டிக் கொண்டு இருந்ததில் கருந் தார் பொட்டுப் பொட்டாக உருகிப் பளபளத்தது. அதில் கால்படாது கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் பார்த்தான். எந்த வாகனத்தையோ மனிதர்களையோ காண வில்லை. தேவனுக்கு நிம்மதியாக இருந்தது. தேவன் பின்பு கவலை தோய்ந்த முகத்தோடு கண்ணனையும் மற்றவனையும் பார்த்து, 'சரி அவங்களைக் காணேல்ல. நாங்கள் இதில வெய்யில்ல நிண்டு ஒண்டும் செய்யேலாது. திரும்பி முகாமுக்குப் போவம்... வாங்கோ,' என்றான்.

'இப்படி றெயினிங்கெல்லாம் கொடுத்திட்டு ஓடவிடக் கூடாது' எனக் கண்ணன் அபிப்பிராயப் பட்டான்.

'ஓடிட்டாங்கள். எங்க போய்த் தேடுறது? முகாமில ஒரு சைக்கிள் இருக்குதே? நாங்கள் ஏலுமானதைத்தான் செய்யலாம். வாங்க நான் போய் ஒபீசுக்கு அறிவிக்கோணும்.'

ஒபீசுக்குத் தற்போதைய நிலைமையில் அறிவிக்கத் தேவையில்லை. அறிவித்தும் அவர்கள் எதுவும் செய்யப் போவதில்லை. றேஷன் பிரச்சனைக்கே அவர்கள் தீர்வு காணமுடியாமல் போராடுகிறார்கள். இதில் ஓடுகிறவர்கள் பற்றி எல்லாம் சிந்திக்க நேரம் இருக்கப் போவதில்லை. முகாமைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கு இன்னும் இயக்கம் ஒழுங்காக இயங்குவதாக தோழர்களுக்கு காட்டிக்கொள்ள வேண்டி இருந்தது.

முகாமை அடைந்ததும் கண்ணனை முகாமைக் கவனிக்கு மாறு கூறிவிட்டு, தேவன் சந்திக் கடைக்குச் சென்றான். அங்கு தான் அந்த ஊரிலேயே தொலைபேசி இருக்கிறது. அவரிடம் சென்றால் பணம் கொடுத்து தொலைபேசியில் கதைக்கலாம்.

தேவன் கடையை அடைந்தான். கடைக்காரர் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். அவர்களுக்குத்தான் எங்கள்மேல் எவ்வளவு மதிப்பு எனத் தேவன் எண்ணிக் கொண்டான். உயிரைத் துச்சமாக மதித்து, இனத்தின் விடுதலைக்காக வந்தவர்கள் என்கின்ற பிரமிப்பு. இப்போதும் அந்த மதிப்பின் கனம் குறையாத வரவேற்பு. அவர்கள் முன்னே தொலைபேசியை எடுத்து முகாமில் இருந்து இருவர் ஓடிவிட்டார்கள் என்று சொல்லுவதா? ஊரில் அதன் பின்பு எங்களை எப்படி எடை

போடுவார்கள்? என எண்ணிய தேவன் சற்றுக் குழம்பிப் போய் விட்டான். ஏதும் பேசாது திரும்பி முகாமிற்குச் செல் வோமா? என எண்ணியவனுக்கு அதுவும் அவ்வளவு உசிதமாகப் படவில்லை.

'என்ன வேணும் சார். ரீ சாப்பிடுங்க சார்.' வழமையாகக் கேட்பதுபோல் இன்றும் அவர் கேட்டார்.

'இல்ல அது ஒண்டும் வேண்டாம். நான் அவசரமாக ஒரத்தநாடு போகோணும். சைக்கிள் ஒண்டு எடுத்துக்கிறன்.'

'எடுத்துக்குங்க சார். உங்களுக்குப் பிடிச்ச ஒண்ட எடுத் திட்டுப் போய்ட்டு வாங்க சார்.'

தேவன் சைக்கிளில் வேகமாகச் சென்றான். ஊர் தாண்டி வயலை அடையவும் உதவி முகாம் பொறுப்பாளர் எதிரே காற்றோடு கடும் போராட்டம் நடத்திய. வண்ணம் வந்து கொண்டு இருக்கவும் சரியாக இருந்தது. உதவி முகாம் பொறுப் பாளரின் முகத்தில் ஆயிரம் கேள்விகள்.

'என்ன நீங்கள் வெளிக்கிட்டு வாறியள்?'

'காம்பில இருந்து ரெண்டுபேர் எஸ்கேப்பாயிட்டாங்கள்.'

'என்ன?'

'நாங்கள் ரோட்டுக்குப் போய் பார்த்திட்டு வந்தம். அவங்களைக் காணேல்ல. இப்ப ஒபீசுக்கு அறிவிக்கோணும்.'

'சைக்கிளை எடுத்துக் கொண்டு போய் தேடிப் பாப்பமே?'

'அதில பிரயோசனம் இல்ல. அவங்கள் லொறியில ஏறினா இப்ப அரைவாசி தூரம் போய்ச் சேர்ந்திருப்பாங்கள். நாங்கள் எங்க போய்த் தேடுறது? சைக்கிளில எவ்வளவு தூரம் போறது? ஒபீசுக்கு அறிவிப்பம். அவை செய்யிறத செய்யட்டும். எப்பிடியோ அவங்களும் மண்டபம்தானே போய்ச் சேரப் போறாங்கள்.'

'அது உண்மைதான். ஆனா அவையப் பார்த்து மற்றவை யும் வெளிக்கிடப்போகினம்.'

'அதைப் பிறகு பாப்பம். உங்களால திரும்பிப் போக முடியுமோ இல்லாட்டி நான் போயிட்டு வரட்டோ?'

'இல்ல இல்ல நான் போயிட்டு வாறன். எல்லாம் பிழையாகப் போய்க்கொண்டு இருக்குது. எங்க போய் முடியப் போகுதோ தெரியாது.'

'என்ன சொல்ல வாறியள்?'

'எல்லா இடத்திலும் குழப்பம். உங்களுக்கு விளங்கும் தானே?'

'ம்...'

தேவன் தலையை ஆட்டினான். பின்பு, 'றேஷன் விசயம் என்னவாப் போச்சுது?' என்று கேட்டான்.

'நாளைக்கு வராது. இருக்கிறதை வைச்சுத்தான் நாளைக்கு சமாளிக்கோணும். நாளைண்டைக்கு கொஞ்சம் வருமாம்.'

'ம்... இது இன்னும் சிக்கலாத்தான் வரும்' என்றான் தேவன். 'நாங்கள் என்ன செய்ய முடியும்? உள்ளதை வைச்சு ஏலுமானவரைக்கும் இழுப்பம்.'

உதவிப் பொறுப்பாளரின் சைக்கிள் எதிர்த்திசையில் வேகமெடுத்தது. தேவன் அவர் போவதை சிறிதுநேரம் அப்படியே நின்று பார்த்துக்கொண்டு நின்றான். பின்பு நிலைமையை உணர்ந்தவனாக தனது சைக்கிளை எதிர்த்திசையில் திருப்பினான். இருட்டு ஒளியை அழித்துக் கறுப்பு பூசியது.

சில நாள்கள் கழிந்திருக்கும். அன்று முகாமில் ஒரு பருக்கைகூட இல்லை. தேவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஒபீசுக்கு போன் செய்தால் சாப்பாட்டுப் பொருள்கள் வரும் என்றார்களே தவிர எப்போது வரும் எனக் கூறவில்லை. உதவிப் பொறுப்பாளரும் வந்து சிந்தனையோடு ஒபீசில் இருந்தார். எல்லாச் சாக்குகளும் வெறுமையாக மடித்து வைக்கப்பட்டு இருந்தன. பணமும் இல்லை. விற்றுப் பணம் எடுப்பதற்கு எந்தப் பொருளும் இருக்கவில்லை. இருவரும் ஆளையாள் பார்த்தவண்ணம் சிறிது நேரம் இருந்தார்கள். பின்பு உதவிப் பொறுப்பாளர் பொறுக்க முடியாதவராய், 'என்ன செய்யிறது?' எனக் கேட்டார்.

'ஏதாவது செய்யோணும்.'

'றேஷன் வராமல் என்ன செய்யிறது? இஞ்ச வேட்டைக் குக்கூடப் போகேலாது.'

'தெரியும். பேசாமல் இருந்தா எதுவும் வராது. நான் போய்ப் பக்கத்து வீட்டில அரிசி கடனா வேண்டலாமே எண்டு பார்த்துக் கொண்டு வாறன். ஏதாவது தந்தாங்கள் எண்டா இண்டைக்குக் கஞ்சி காய்ச்சலாம். இல்லாட்டி பச்சத் தண்ணிதான் சாப்பாடு. ம்... சாப்பாடு அனுப்பேலாட்டி ஏலாது எண்டாவது ஏதாவது ஒரு துண்டை அனுப்பலாம்தானே? இது கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை எண்ட கதை.'

தேவன் அலுத்துக் கொண்டு புறப்பட்டான்.

பாரதி தேவனை இன்முகத்தோடு வரவேற்றான்.

'என்ன சாப்பிடுறீங்க சார்.'

'ஒண்டும் வேண்டாம்.'

'இல்ல நீங்க ஏதாவது சாப்பிடோணும். மோர் சாப்பிடுறீங் களா சார்?'

'சரி.'

மைனா வந்து தேவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் பாரதியின் தங்கை. நல்ல நிறமாக ஒல்லியாக இருப்பாள். தேவனுக்கு அவளைப் பார்ப்பதில் பிரியம். அவளின் துடிதுடிக் கும் கண்களையும் குறும்புப் பார்வையையும் பார்த்து இரசிப்பான். பாரதி மோர் கொண்டு வந்து கொடுக்க தேவன் வேண்டிக் குடித் தான். பசி சற்று அடங்கியது போல இருந்தது. பின்பு தேவன் எப்படி அதைக் கேட்பது என்பது புரியாமல் தவித்துக் கொண்டு இருந்தான். இதைப் பார்த்த பாரதி, 'என்ன சேர் பேசாமல் இருக்கிறியள்? ஏதும் உதவி வேணுமா?'

'ஆமா எங்களுக்கு கொஞ்சம் அரிசி வேணும்.'

'எவ்வளவு வேணும் சார்?'

'உங்களால ஏலுமானதை தாங்க.'

பாரதி அரைசாக்கு அரிசி கொண்டு வந்து தந்தான். தேவனுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே புரியவில்லை.

அதைவிட ஒரு பத்து ரூபாய் தேவனுக்குத் தேவைப்பட்டது. தேவன் தான் இயக்கத்தில் இருந்து புறப்படுவதற்கு ஊருக்கு தந்தி கொடுக்க எண்ணி இருந்தான். அதற்கு இப்போது முகாமில் பணம் இல்லை. அதற்கும் பாரதியிடமே கடன் வேண்ட வேண்டி இருப்பது சங்கடமாய் இருந்தது. இருந்தாலும் அதைச் செய்தாக வேண்டிய கட்டாயம் அவனைப் பிடித்துத் தள்ளியது. இங்கு எங்கும் போய் பிழைக்க முடியாது. அப்படி அலைவதற்கு தேவன் தயாராகவும் இல்லை.

'வேற ஏதாவது வேணுமா சார்? யோசிச்சுக்கொண்டே இருக்கிறீங்கள். சொல்லுங்க சேர் என்ன வேணும்?'

'ஒரு பத்துரூபா வேணும்.'

'அதுக்கென்ன சார். அண்ணாவிட்ட வேண்டித்தாறன்.'

பாரதி சிறிது நேரத்தில் பத்துரூபாய்த் தாளுடன் வந்தான். தேவனுக்கு கண்கள் கலங்கிவிட்டன. இந்தப் பத்து ரூபாய்க்கு நல்லொரு வாழ்வை அமைப்பதற்கும், தெருத்தெருவாய் பிச்சை எடுக்கவைப்பதற்குமான சக்தி இருக்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

தேவன் தழுதழுத்த வண்ணம், 'ரொம்ப நன்றிங்க. நான் வரட்டுமா?' என்றான்.

'போயிட்டு வாங்க சார்.'

தேவன் பத்துரூபாயைப் பத்திரமாக வைத்துக்கொண்டு, அரிசியைத் தூக்கியபடி முகாமிற்குச் சென்றான்.

உதவிப் பொறுப்பாளர் வந்து அரிசியை வேண்டிக் கொண்டுபோய் அலுவலகத்தில் வைத்துவிட்டு வந்தார்.

'நான் ஒரத்தநாடு வரைக்கும் போய் கதைச்சுப்போட்டு வாறன். நீங்கள் முகாமைப் பாருங்கோ.'

கூறிய தேவன் அவரின் பதிலுக்குக் காத்திராமல் புறப்பட்டுச் சென்றான். ஒரத்தநாடு தபால் நிலையத்திற்குச் சென்று முதலில் ஊருக்கு ஒரு தந்தி அனுப்பி வைத்தான். பின்பு அலுவலகத் திற்குச் சென்றான். அங்கு புதிய அனைத்துமுகாம் பொறுப்பாளர்

இருந்தார். அவரை தேவனுக்கு முதலிலேயே தெரியும். நல்ல பண்பாகப் பழகுவார்.

தான் எப்படியாவது மறுநாள் பொருள்களை அனுப்பி வைப்பேன் என உறுதியளித்தார். பின்பு தேவன் ஒன்றும் செய்ய முடியாது முகாமிற்கு மீண்டும் திரும்பி வந்தான். அன்று பட்டினியில் இருந்து தப்பித்துக் கொண்ட சந்தோசத்தில் எல்லோரும் இருந்தனர். அடுத்தநாள் அரிசியும் பொருள்களும் வந்தன. அது முடிந்த போது மீண்டும் றேஷன் வரவில்லை. இம்முறை தேவன் பக்கத்து வீட்டிற்குச் செல்ல விருப்பம் அற்றவனாய் அலுவலகத்தில் படுத்து இருந்தான். உதவி முகாம் பொறுப்பாளர் தனது கையில் முகாம் பொறுப்பை எடுத்தது போன்று தானே சென்று அரிசி வேண்டி வந்தார்.

அன்று பிற்பகல் ஐந்து மணி இருக்கும். நான்கு தோழர்கள் தேவனோடு தனிமையில் கதைக்க வேண்டும் என்றார்கள். தேவன் அவர்களை தோட்டத்துக் கிணற்றடிக்குக் கூட்டிச் சென்றான்.

விமலன் திருகோணமலையைச் சார்ந்தவன். அவன்தான் அவர்களுக்கு தலைமையாகக் கதைக்க வந்திருந்தான்.

'என்ன விசயம்?'

தேவன் நேரடியாகவே கேட்டான். இண்டைக்கும் சாப் பாடில்ல. நாங்கள் எவ்வளவு காலம் பட்டினி இருக்கேலும்? எங்கட இயக்கம் இயங்கேலாமல் உடைஞ்சு போறமாதிரி தெரியுது. எங்களை இனியும் வைச்சிருந்து என்ன செய்யப் போறியள்?'

'சாப்பாடுதான் பிரச்சனையெண்டா நாளைக்கு வந்திடும். உங்களுக்கு மேற்கொண்டு இயக்கத்தில இருக்கப் பிடிக் கேல்லை எண்டா அதுக்கு என்னால பதில் சொல்லேலாது. பதில் சொல்லுற அதிகாரமும் எனக்குக் கிடையாது.'

'உதெல்லாம் இனிச் சரிவராது. சாப்பாடே கிடைக்குமோ கிடையாதோ எண்டு தெரியாமல் நாங்கள் இருக்கிறம். இண்டைக்கு றேஷன் வராட்டி நாங்கள் ஊருக்கு வெளிக்

கிட்டுப் போகப் போறம். வெளிக்கிட்டுப் போனா நீங்கள் இப்ப தடுப்பியளா எண்டதுதான் எங்கட கேள்வி?'

'நான் உப்பிடியான கேள்விகளுக்கு எந்தப் பதிலும் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. உங்களுக்கு எது சரி எது பிழை எண்டு தெரியும். அதன்படி நடக்கோணும்.'

'நீங்கள் ஒண்டுமே சொல்லாமல் நழுவுறியள்.'

'அப்ப என்ன செய்யலாம் எண்டுறியள்?'

'எங்களுக்குத் தெரியாது. நாங்கள் நாளைக்குப் போவம். நீங்கள் தேடிவந்து பிரச்சனைப் படக்கூடாது.'

'எது எப்பிடியோ, போகேக்க வந்து என்னிட்ட சொல்லிப் போட்டுப் போங்க.'

அடுத்தநாள் றேஷன் வரவில்லை. உதவிப் பொறுப்பாளர் ஒரத்தநாடு போயிருந்தார். அந்த நான்கு பேரும் ஒருமணி போல வந்து நின்றார்கள். மற்றவர்கள் எல்லோரும் பசியில் பிளட்டூனில் படுத்து இருந்தார்கள்.

'நாங்கள் போட்டுவாறம் பொறுப்பாளர்.'

'சரி வாங்க. நானும் ரோட்டுவரை வாறன்.'

'வேண்டாம் பொறுப்பாளர். உங்களுக்கு தேவையில்லாத பிரச்சனை வரும்.'

'வந்தா வரட்டும் நீங்க வாங்க.'

தேவன் சற்று குழம்பிப் போயிருந்தான். இனி யாரையும் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியாது. அதேவேளை ஓர் இயக்கத்தை உடைப்பதுபோல தனது செயல் முடியுமா என்பதும் அவனுக்குப் புரியவில்லை. அதை எண்ணியபோது சற்றுத் தடுமாற்றம் ஏற்பட்டது. எதற்கும் இவர்கள் முதலில் உயிரோடு இருக்க வேண்டும். சுவர்இருந்தால்தானேசித்திரம்வரைய முடியும். அதுதான் முக்கியம். அதைச் செய்வதில் தப்புக் கிடையாது எனப் பின்பு முடிவு செய்து கொண்டவனாய் அவர்களோடு சென்றான்.

மெயின்ரோட்டில் ஒருவாறு லொறியொன்றை மறித்து அவர்களை ஏற்றிவிட்டான். பின்பு எதுவும் செய்யத் தோன்றாத

வனாய் சிறிதுநேரம் அங்கேயே நின்றான். வெகு நேரமாக என்ன செய்வது என்பது புரியவில்லை. ஊருக்கு அனுப்பிய தந்திக்கு ஏன் இன்னும் பதில் வரவில்லை என்பதும் அவனுக்குப் புரியவில்லை. தேவன் அந்த நிலையில் இருந்து விடுபட்டு திரும்பி முகாமை நோக்கி வந்தான். சோளக்காட்டில் பலர் அறுவடை செய்துகொண்டு இருந்தார்கள். தேவன் அவர்களை நோக்கிச் சென்றான். அவர்கள் தேவன் வருவதைக் கண்டு கொண்டு புன்னகைத்தார்கள்.

'என்ன சார் இந்தப் பக்கம்?'

'இல்ல நம்ம பையன்கள் மண்டபம் போறாங்கள். அவங்கள அனுப்பீட்டு வாறன்.'

'ஊருக்கு புறப்படத் தொடங்கியாச்சா சார்?' என்றார் ஒருவர்.

'ஆமா சார்.'

'சோளம் வேணுமா சார்?'

'தாங்க சார். பையன்கள் விரும்பிச் சாப்பிடுவாங்கள்.'

தேவன் சோளம் பொத்தி அவித்து எல்லோருக்கும் கொடுத்து, தானும் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போது, உதவிப் பொறுப்பாளர் களைத்துப்போய் ஒரத்தநாட்டில் இருந்து வந்திருந்தார். அவித்த சோளத்தைக் கொடுக்க எதுவும் பேசாது அதை முதலில் அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடித்தார். தேவனுக்கு அவரைப் பார்க்கவே கவலையாக இருந்தது.

பின்பு உதவிப் பொறுப்பாளர் நினைவு வந்தவராக, 'உங்களை அனைத்து முகாம் பொறுப்பாளர் சாமான்களையும் எடுத்துக் கொண்டு ஒபீசுக்கு வரட்டாம். றேஷன் இண்டைக்கும் வராதுபோல இருக்குது. இந்தச் சோளத்தோட இண்டையப் பொழுதை சமாளிக்க வேண்டியதுதான்.'

தேவன் மேற்கொண்டு பேசாது தனது உடுப்புகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். எல்லோரும் வந்து வழியனுப்பி வைத்தனர். தேவனுக்குக் கவலையாக இருந்தது. பொறுத்த நேரத்தில் இடையில் விட்டுவிட்டுப் போவதாக மனச் சாட்சி உறுத்தியது. ஏதோ ஒரு கைகால் ஆகாத உணர்வு அவனை

ஏறிமிதிப்பதை உணர்ந்தான். பின்பும் பஸ்சைத் தவறவிடக் கூடாது என்கின்ற அவசரத்தில் வெளியேறினான். கண்கள் திரையிட்டுக் கொண்டன. ஒரு இலட்சியக் கோட்டை இடிந்து போக அதன் எச்சங்களூடே நடந்து கொண்டு இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. கால்கள் அடிக்கடி பின்னிக் கொண்டன. அவன் தன்னையறியாமலே விசும்பத் தொடங்கி இருந்தான்.

அனைத்து முகாம் பொறுப்பாளர் தேவனை ஒபீசுக்குள் கூட்டிச் சென்றார்.

'உமக்கு இண்டையோட நல்ல காலம். போய்ப் புது வாழ்க்கை தொடங்கும். எங்களுக்கும் ஏதும் உதவி செய்யேலும் எண்டா உதவி செய்யும்,' எனக் கூறியவர் தேவனின் உறவுக் காரர்கொடுத்த பணத்தைக் கொடுத்து தேவனை வழி அனுப்பி வைத்தார்.

எப்படி இடிந்து போய்விட்டது இயக்கம்? ஒரு வருடத்திற்கு முன்பு இதைக் கற்பனைகூடச் செய்திருக்க முடியாது. தன்னையே நம்பமுடியாதவனாய் தேவன் தஞ்சாவூர் பஸ்சைப் பிடிப்பதற்காய் ஒரத்தநாடு ரவுனுக்குச் சென்றான். ஒரு வாழ்வின் முடிவில் இன்னொரு வாழ்வு மலரப்போவது அவனுக்கு ஒரு வித மகிழ்வைத் தந்தது. அடிமனதில் மறுக்கப்பட்ட வாழ்வு திருப்பித் தரப்பட்ட சந்தோஷம் நிறைந்திருந்தது. ஒரு இலட்சியப் பயணத்தின் இடை நடுவில் பாதை தொலைந்து பயணம் முடிந்தது இதயத்தைக் கருக்கால் அறுத்தது.

இலட்சியக் கனவுகள் கலைந்தபின்பு மற்றாஸ் வாழ்வில் தேவன் ஒன்றிப் போயிருந்தான். இயக்க வாசமே இனிப் பட்டு விடக்கூடாது என்பதாய் எல்லாத் தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டு அன்றாட வாழ்வில் கலந்து கரைந்தான்.

கீழே ஹோலில் இருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலே சுவாரஸ்யத்துடன் ஈடுபட்டிருந்தபொழுது 'அப்பா, அப்பா' என்கிற சுபனின் அலறல் கேட்டு மேலே ஓடினான்.

சுபன் தன்னுடைய படுக்கையிலிருந்து எழுந்து, பயத்துடன் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான்.

உள்ளே சென்ற தேவன் 'என்னப்பன்' என்று கேட்டான்.

‘ஏதோ கனவு அப்பா. என்னைத் துரத்திக்கொண்டு வாறாங்கள் அப்பா. நான் பயந்து போய் காட்டுக்குள்ள ஓடிக் கொண்டிருக்கிறன். என்னைத் துரத்திக்கொண்டு அவங்கள் துவக்கால சுட்டுக் கொண்டு வாறாங்கள் அப்பா.’

‘ஓ, அப்படியா? இப்ப சாமம்தானே. அப்பாச்சி சொல்லுவா, விடியப்புறம் காணுற கனவுதான் பலிக்குமாம். அத்தோட கெட்ட கனவு கண்டா நல்லது நடக்குமாம்.’

‘ஏன் அப்பா?’

‘எல்லாம் ஒரு நம்பிக்கைதான். உந்த ரி.வி.யையும் கொம்ப்யூட்டரையும் வைத்துக்கொண்டு தவம் கிடந்தா, இப்படித்தான் நடக்கும். பார்க்கிற நிகழ்ச்சிகள் அபூர்வ கற்பனைகளுடன் கலந்து விசித்திரக் கனவுகளாக வரும்.’

‘அப்ப எனக்கு நல்லது நடக்கும் இல்லையா அப்பா?’

‘ம்... நிச்சயமாக.’

சுபன் மீண்டும் படுக்கையிலே படுத்தான். அவனுக்கு மெதுவாக முத்தம் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

‘எங்கள் தாயகம் பற்றிய கனவுகள்...’ என்று அவன் மனசு வேறு ஒரு பாதையிலே அங்கலாய்த்தது.

அன்று புரசைவாக்கம் போய் பின்பு பெரம்பூருக்குப் போக அவன் புறப்பட்டு இருந்தான். அங்குதான் ஒரத்தநாடு சங்கர லிங்கம் குடியிருந்தார். ஒரத்தநாடு சங்கரலிங்கத்தோடு பெரிய வருக்குத் தொடர்பு இருந்தது. அதைவிட ஒரத்தநாடு சங்கரலிங்கம் ஒரு தமிழ்ப்பற்றாளனும் கவிஞனும் ஆவார். அவர் பாரதியின் சொந்தக்காரர். அவரது உறவில் தேவனுக்கும் நிகரற்ற சந்தோஷம். அவன் அதை எப்போதும் வளர்த்துக் கொள்ள விரும்பியவனாக இன்றும் அங்கு செல்வதற்குத் தயாரானான். அதற்காக புரசை வாக்கம் செல்லும் பஸ்சில் ஏறிக் கொண்டான்.

றவுண்டானா கழிந்தபோது திடுக்கிட்டுப் போய்விட்டான். பழைய அனைத்து முகாம் பொறுப்பாளர் பக்கத்தில் நின்று

அவனைப் பார்த்துச் சிரிப்பதை அப்பொழுதுதான் அவதானித் தான். தேவன் கண்டுகொள்ளாதவன் போல் பேசாது திரும்பி விடுவோமா என ஒருகணம் எண்ணினான். ஏன் கோழைமாதிரி அப்படிச் செய்ய வேண்டும் என அதற்கு எதிராய் எண்ணியவனாய் பேசாது நின்றான்.

'எப்பிடி இருக்கிறீர்?' என அவர் கேட்டார்.

'நல்லா இருக்கிறன்,' என இவன் பதிலளித்தான்.

'இயக்குத்துக்கு உங்களைப் போன்றவை எல்லாம் திரும்பி வரோணும். இப்ப ஆள் தேவைப்படுகுது. ஊருக்கும் அநேகமானவைய அனுப்பிக் கொண்டு இருக்கிறம். நீங்களும் வரோணும் எண்டதுதான் பெரியவற்ற விருப்பம். (மாலை தீவுக்கு அனுப்புவதற்காய் இருக்க வேண்டும் எனத் தேவன் இப்போது எண்ணிக் கொண்டான்.)

'யோசிப்பம்.'

'யோசியுங்க. நாங்கள் நாட்டுக்குச் செய்ய நினைச்சதை இடையில் விட்டிட்டுப் போறது அவ்வளவு நல்லாயில்லை.'

'ம். சரி எனக்கு இங்க இறங்கோணும்.'

பதிலுக்குக் காத்திராது தேவன் அபிராமி தியேட்டரடியில் இறங்கிக் கொண்டான். அன்று சங்கரலிங்கத்திடம் தேவன் செல்ல வில்லை. அன்னை அபிராமிக்குச் சென்று படம் பார்த்தான். அவனது உள்ளம் போராடியது. இனி இயக்கத்திற்குப் போவதா? நம்பி இருக்கும் சனத்தை நடுக்கடலில் விடுவதா? ஒரு இயக்கமே நடத்தத் தெரியாதவர்களால் நாடுபிடிக்க முடியுமா? பிடித்தாலும் ஆட்சி செய்ய முடியுமா? இவர்களின் போராட்டம் சிறுபான்மையாக இருக்கும் தமிழரை சிதறல்கள் ஆக்கி அழிந்து விடாது காத்துக் கொள்ளுமா? இது இவர்களின் போராட்டமா? வேற்று நாட்டு உளவுப்படையால் நடத்தப்படும் விஷப் பரீட்சையா? எல்லா உண்மையையும் வரலாறுதான் சொல்ல வேண்டும். புறப்பட்டு வந்தபின்பு இனி திரும்பப் போவதற்கு வழியில்லை. இது ஒற்றைவழிப் பயணம். முன்னோக்கி மாத் திரமே செல்ல முடியும் எனத் தேவன் முடிவு செய்து கொண்டான்.

சில மாதங்களுக்குப் பின்பு தேவன் சங்கரலிங்கத்திடம் சென்றான். சங்கரலிங்கத்தோடு அதிக நேரம் பேசிக் கொண்டு இருந்தான். அப்போது பெரியவர் ஒரு நாள் வந்து இருந்த தாகவும், அவர் இயக்கத் தோழர்களை நாட்டில் இறக்கிப் புலிகள் செய்வதுபோல் செய்ய விரும்பவில்லையெனவும், ஆயுத வளர்ச்சியில் அரசு மிகவும் பலம் பெற்று விட்டதாகவும், தனித் தமிழீழம் என்பதை இந்திய மத்திய அரசு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதாயும், எப்போதோ ஒரு நாளைக்கு மாநில சுயாட்சி போன்ற அல்லது அதைவிடச் சற்றுக் குறைந்த ஒரு தீர்வே அதனால் வழங்கப்படும் என்பதாலும், பெருமளவில் போராளிகளைக் கொண்டு, பாரிய தாக்குதல்களைச் செய்து, பாரிய அழிவை இருபக்கமும் ஏற்படுத்தி, இரு இனங் களையும் பகையின் துருவங்களுக்கு இழுத்துச் செல்வது எமது இனத்திற்குச் செய்யும் துரோகம் எனவும், விலைமதிப்பில்லாத உயிர்களை குறுகிய நோக்கங்களுக்குத் தான் துர்ப்பிரயோகம் செய்ய விரும்பவில்லையெனவும், அநியாயமாக யாரோ பெற்ற பிள்ளைகளைக் கொலை செய்யத் தன்னால் முடியாது என்பதா லும், தன் தோழர்களை தன் இயக்கத்தில் இருந்து விலகிச் செல்லுவதற்கு அனுமதித்து இருப்பதாகவும் பெரியவர் கூறிய தாகச் சங்கரலிங்கம் தேவனிடம் கூறினார்.

இது உண்மையாக இருந்தால் பெரியவர் மிகவும் தாமத மாகச் சிந்தித்திருக்கிறார் எனத் தேவன் எண்ணிக்கொண்டான். தேவனுக்கு ஏதோ ஒருவகையில் அவர் அந்த வகையிலாவது சிந்தித்தது, அவனுக்கு உயிர்ப்பிச்சை அளித்ததாகவே இருந்தது. எத்தனையோ கொலைகளுக்குக் காரணமாய் இருந்தவர்கள் பலரது வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ளவும் இடமளித்தார்கள் என்பது தேவனுக்கு விசித்திர வரலாறாய் காட்சியளித்தது. அல்லது நாட்டில் இறக்கி இலட்சியம் என்பதே இல்லாத போராட்டத்தில், இலட்சியம் இருப்பதான ஒரு மாயையில் மாவீரர் பட்டம் தந்து, சுயநலம் பிடித்தவர்களின் கைதட்டலை வேண்டிக் கொண்டு, சுடுகாட்டில் அடங்கி, பின்பு எல்லோராலும் மறந்து, கல்லறை களும் காலப்போக்கில் அழிந்து அல்லது அகற்றப்பட்டு, மனங் களில் வாழ்கிறீர்கள் என்னும் புலம்பெயர்ந்த தமிழரின் புலுடாக் களில் மட்டும் வலம் வந்திருக்கலாம்.

இ. தியாகலிங்கம்

வாழ்விற்கும் சாவிற்கும் அதிக இடைவெளி இல்லாத இந்த மானிட வாழ்வில், வாழ்வின் பெறுமதி பற்றி உண்மை யிலேயே பெரியவர் நன்கு சிந்தித்து இருந்தால், பெரியவர் எப்போதும் உயர்ந்தவராய் மிளிர்வார் என்பதை மறுக்க முடியாது எனத் தேவன் எண்ணிக் கொண்டான்.

சென்னை அண்ணா நகர் 15 ஆவது பிரதான வீதியில் அமைந்திருந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒன்று, ஆறாவது மாடியில் இருந்த ஒரு பிளாற். வீட்டுக்காரரும் நண்பர்களும் எங்கோ போய்விட்டார்கள். தனிமை. இது சிலருக்கு இனிமை யானது. தேவன் அதை இனிமை என்று வரையறை செய்யா விட்டாலும் ஆத்ம திருப்திக்கான அறிவைப் பெறும் கணங்கள் என எண்ணிக் கொண்டான். நடைபாதையில் அரை விலைக்கு வேண்டி வந்த லட்சுமியின் கதைப்புத்தகம் ஒன்று அவன் கையில் இருந்தது. தேவன் அதை ஆவலோடு வாசித்துக் கொண்டு இருந்தான். அவனது ஆத்ம திருப்தியைப் பிடுங்கி எறிவதுபோல அழைப்புமணி பிளிறியது. இன்று யார் எவரென எட்டிப் பார்க்காமலே கதவைத் திறந்தான்.

அங்கே நின்றவர்களைப் பார்த்து அதிர்ந்து போய் விட்டான். மூன்றுபேர் AK 47 உடன் நின்றிருந்தார்கள். தேவன் கதவைத் திறக்கவும் அவனைத் தள்ளியபடி உள்ளே வந்து கதவைச் சாத்தி னார்கள். பின்பு ஹோலில் இருந்த ஆசனத்தில் தேவனை அமரு மாறு சைகை செய்துவிட்டு தாங்களும் அமர்ந்து கொண்டார்கள்.

பழைய அனைத்து முகாம் பொறுப்பாளர் கதைக்கத் தொடங்கினார்.

'நாங்கள் நிறையப் பெடியளை இப்ப ஊருக்கு அனுப்புறம். வவுனியாவில போய் வேலை செய்ய நீங்கள் எங்களோட கட்டாயம் இப்ப வரோணும். உன்னைக் கூட்டிக்கொண்டு போகத்தான் வந்திருக்கிறம்.'

'அது நடக்காது. நான் இயக்கத்தை விட்டு விலகியாச்சு. இனிக் கனவிலும் வருவேன் எண்டு நீங்கள் எதிர்பார்க்க முடியாது.'

'நீ இயக்கத்தை விட்டு விலகிவிட்டாயா?' கேட்ட அனைத்து முகாம் பொறுப்பாளர் பெரிதாக வாய்விட்டுச் சிரித்தார். எப்போது நீ இயக்கத்தை விட்டு விலகினாய்? யார் உன்னை இயக்கத்தை விட்டு விலத்தினார்கள்? உன்னால் முடியுமானால் நீ இயக்கத்தை விட்டு சட்டப்படி விலகியதற்கான ஆவணத்தை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முத்திரையுடனும் கையெழுத்துடனும் காட்டு பார்க்கலாம்.'

'யாரிட்ட அது இருக்குது? யாருக்கு அதை நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள்?'

'அது இல்லாதவர்களை எப்படிச் சொல்லுவது தெரியுமா?'

'இயக்கத்தை விட்டு ஓடியவர்கள் என்றா?'

'ம்... நீயும் இயக்கத்தை விட்டு ஓடியவர்களில் ஒருவன். இயக்கத்தை விட்டு ஓடியவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?'

'தெரியும். B முகாமில் பார்த்து இருக்கிறேன்.'

'இன்று எங்களுடன் பிரச்சனைப் படாது வந்தால் சில வேளை அந்தத் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.'

'நான் உயிர்போனாலும் உங்களோடு வரமாட்டேன்.'

'உயிரோடோ அல்லது பிணமாகவோ பிடித்து வரும்படி தான் எங்களுக்கு கட்டளை. உன் வசதி எப்படி?'

'மிரட்டுகிறீர்களா? என்னை உயிருடன் மீண்டும் இயக்கத் திற்குக் கொண்டு செல்ல முடியாது. நான் ஒற்றை வழிப்பாதையில் எல்லாம் திரும்பிப் போவது கிடையாது.'

'ஓ அப்படியா? உன் தத்துவம் அப்படித்தான் செல்லுமா? நாட்டுக்காக உயிரை விடத்தானே வந்தாய்? அதைச் செய்து விட்டு உன் தத்துவத்தைக் கதைத்துக் கொண்டு இரு.'

அவர் இயந்திரத் துப்பாக்கியை autoஇல் விட்டார். தேவனுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆறாவது மாடியில் இருந்து எப்படித் தப்பி ஓடுவது என்று புரியவில்லை. மற்றவர் களும் எழுந்தார்கள். இயந்திரத் துப்பாக்கியை autoஇல் விட்டார்கள். பம்பாய்க்குப் போனபடியே நின்று இருக்கலாம். திரும்பி வந்தது மகா தப்பாய்ப் போய்விட்டது. இனி என் எச்சங்கள் கூட முகவரியற்றுப் போகப் போகிறது.

தப்பி ஓட முடியுமா? ஆறாவது மாடியில் இருந்து மூன்று இயந்திரத் துப்பாக்கிகளின் வீச்சில் இருந்து தப்பிக்க முடியுமா? அப்படித் தப்பிப் போக சினிமாப் படமா இது? அவர்கள் இயந்திரத் துப்பாக்கியை இயக்கினார்கள்.

அம்மா.... அம்மா.... தேவன் கத்தினான்.

வினோ படுத்திருந்தபடி தேவனைப் பரிதாபமாய்ப் பார்த்தாள். தேவன் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

'கெட்ட கனவு' என்றான்.

அப்பொழுது அம்மா இளவயசிலே கூறிய சொற்கள் தேவனின் செவிகளிலே ஒலித்தன. 'கல்யாணக் கனவு கண்டா சாவீடு நடக்கும்.... விடியற் சாமம் காணுற கனவுதானெணை பலிக்கும்.'

அவனை அறியாமலே தேவன் கடிகாரத்தைப் பார்த்தான்.

ஃ ஃ ஃ